


கல்கி
தீபாவளி
மலர்
1961


எந்நேரத்திலும்.... எவ்விடத்திலும்.... எச்சந்தர்ப்பத்திலும்
YOU LOOK YOUR BEST IN
Khatau
VOILES


எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்
STANDARD
STANDARD herald
ஸ்டாண்டார்ட் ஹெரால்ட்
உறுதியான, எழில்மிகுந்த கார்
விநியோகஸ்தர்கள்:
யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை - உதகை

காரணம்

எதுவாகிலும்

உங்களுக்குப்

பிரியமான

துணிகள்

கிடைக்குமிடம்




தீபாவளி



பொங்கல்



திருமணம்



பிறந்த நாள்



பள்ளி திறக்கும் நாள்

வேங்கடேஷ் வஸ்திராலயா

மைசூர் பாங்க் கட்டிடத்தில் (மதராஸ் ஹைகோர்ட்டுக்கு எதிரில்)


ஷோரூம் நெ. 1 இங்கு பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் வகைகள் கிடைக்கும்.

ஷோரூம் நெ. 2 இங்கு பக்கிங்காம் & கர்னாடிக் மில் துணிகள் விற்கப்படும்.

மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில்

ஷோரூம் நெ. 3 இங்கு பின்னி மில் வகைகளும் மற்ற மில் துணிகளும் கிடைக்கும்.

IWT/VV-1156


அவள் மிகவும் விரும்பும்
ஓர் பரிசு
தீப அலங்காரங்கள்....அன்பு, பிரியம்....மற்றும் பரிசுகள்...இவை யாவும் ஒன்றாக இணைந்ததுதான் தீபாவளி! இந்தத் தீபாவளிக்கு, அவள் கண்கள் புன்னகை ஒளியுடன் பிரகாசிக்க, அவளுக்கு மிகப் பிடித்தமான ஒரு ''ஸன்'' அல்லது ''எவரெஸ்ட்'' வாக்குவம் பிளாஸ்க்கைப் பரிசாக அளியுங்கள்.
திறமையாக, நீடித்து உழைக்கக்கூடிய ''ஸன்'' அல்லது ''எவரெஸ்ட்'' வாக்குவம் பிளாஸ்க் பானங்களை நமக்கு வேண்டிய சரியான சீதோஷ்ண நிலையில் பாதுகாக்கிறது. வீட்டிலும்...நெடுந்தூரம் அல்லது உல்லாசப் பிரயாணங்களுக்கும் உங்களுக்கு உற்ற தோழனாகப் பல்லாண்டுகள் பணிபுரியும்.
VICTORY FLASK CO.
PRIVATE LTD.,
208, Lady Jamshedji Road. Bombay 16.


நவம்பர்'ல வெளியீடு..
உமா பிக்சர்ஸ்
சித்தூர்
ராணி பத்மினி
டைரக்ஷன்
CH. நாராயண மூர்த்தி B.A.
திரைக்கதை, வசனம்
ஸ்ரீதர்


எமது புதிய டிரேட் மார்க்
கோயமுத்தூர் காட்டன்
சிங்காநல்லூர்
தந்தி: RUKMANI
போன்: 2265



தொல்லைகளைத் துரிதமாகவும்
திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்குப் போஷாக்குத் தருவதால் உங்கள் கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும் பளபளப்பான கருமை நிறத்துடனும் காணப்படும். இதிலுள்ள மருந்துச்சத்துக்கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி, பொடுகைப்போக்கி, நரைக்காமல் பாதுகாக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத் தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது நல்லெண்ணெயில் கலந்து எப்போதும் உபயோகியுங்கள். காரிருள் போன்ற கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள் பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

ரீடா கம்பெனி, சென்னை-1.

R.6 TM

மக்காச் சோளத்துக்கோர் வக்காலத்து



பாவம் சோளக்கொண்டை! யாரும் அதற்காகப் பரிந்துபேச முன்வரக்காணேம். இளப்பத்திற்கு ஆளான ஒரு தானியம்—போகிறபோக்கிலே வெறும் வாய்க்கு இரையாக மதிக்கப்பட்ட அது—பார்க்கப்போனால் 'பத்தும் செய்யவல்ல' பண்டமாகும் என்பதே கூகம் உண்மை.


அவநம்பிக்கையோடு முணுமுணுக்கிறீர்களோ?...தக்க சான்றுகளைத் தருகின்றேம். நீங்கள் அணியும் கஞ்சிபோட்ட வெண்ணிற ஆடை...சமைக்கும் சோடா...துலக்கும் பற்பசை...இனிப்புப் பண்டங்கள்...ஏன், மருந்துகளுங்கூட (டெக்ஸ்ட்ரோஸ், சேர்க்கை ரக விடமின் ஸி, ஆன்டிபயோடிக்) எல்லாமே ஏதேனுமொரு வகையில் சோளம் அடங்கியவைதாம்.


மன்னிக்கவும், கைதட்டவேண்டாம்! விஷயம் இதோடு முடியவில்லை. சோளத்திலிருந்து புதிது புதிதாக, மேலான பண்டங்களை மேன்மேலும் தயாரிப்பதிலே எங்கெங்கும் மருந்து ஆராய்ச்சியாளர்கள் ஓயாமல் முனைந்துள்ளனர். உங்கள் சாதகமான தீர்ப்புக்குப் பாத்திரமாக முற்றிலும் தகுதி வாய்ந்த, பத்தும் செய்ய வல்ல தானியம் சோளம் என்பதைத் தடை இன்றி நீங்களே ஒப்புக்கொள்ளுவீர்கள்.

Maize Products—

இந்தியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை.


மெய்ஸ் ப்ராடக்ட்ஸ்
கத்வாடா, அஹமதாபாத்.






ஜாலிபோர்டு

சுலபமாக உபயோகிக்கக்கூடிய
குறைவான விலையுள்ள
ஓர் நவீன மரப்பலகை






கே: ஜாலிபோர்டு என்பது என்ன?

ப: இது பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷ ப்ரகாரம் தயாரிக்கப்படும் மர-பைபர் போர்டு ஆயில் ட்ரீட்டட் ஸ்டாண்டர்ட் போர்டுகள் உள்ளன. தண்ணீர் உறிஞ்சாத மற்றும் வலுவான வேலைகளுக்காக ஆயில் டெம்பர்டு போர்டுகளும் தயாரிக்கப்படுகின்றன

வீட்டில் ஜாலிபோர்டின் உபயோகங்கள்-ஜாலி போர்டு இன்றைய நவீன இல்லங்களில் வெகுவா உபயோகப்படுகின்றன. ஜாலிபோர்டை இப்பொழுது எங்குமே காணலாம்! ஜாலிபோர்டு மறைப்புகள் அறைகள், கதவுகள் முதலானவைகளை தயாரிக்க உதவுகிறது. ரம்மியமான ஜாலிபோர்டு மேலமைக போர்டிலுல் மேஜைக்கு மேற்பலகை, சமையல் அறையில் கவுண்டர்கள், ஸ்நான அறை மரச்சாமான்கள் மற்றும் இதர அழகிய சாமான்களை செய்யலாம்.

ஜாலிபோர்டின் உபயோகங்கள் கடைகள், தொழிற்சாலைகள் மற்றும் ஆபீஸ்களில் அறைகள் தடுப்பதற்கும், உட்புறத்தில் மேலே அடைப்பதற்கும், அலமாரிகள் செய்வதற்கும் ஜாலிபோர்டு உபயோகப் படுகிறது. கப்பல் கட்டுதல், பஸ் கட்டுதல் மற்றும் பாக்கிங் வேலைகளுக்கும் உபயோகப்படுகிறது. ரேடியோக்களின் காபினெட்டுகள் மற்றும் இதர சாமான்கள் தயார் செய்வதற்கும் இது உபயோகப்படுகிறது. சினிமாவில் உட்காரும் ஆசனங்களின் பின்புறம் மற்றும் மரச்சாமான்கள் செய்யவும் உபயோகப்படுகிறது



ஜாலிபோர்டு உபயோகப்படும் இதர வேலைகள் ஜாலிபோர்டு எண்ணற்ற வகையில் உபயோகப்படுகிறது. எந்த வேலைக்கும் உபயோகப்படுத்தலாம்! இது இலேசானது, வலுவானது மற்றும் நாள்பட உழைக்கக்கூடியது. பிளக்காது, உடையாது மற்றும் வெடிப்பு ஏற்படாது. இதில் முடிச்சுகள் கிடையாது: உபயோகமில்லாமல் வீண் போகாது. சேர்த்தியான வேலைப்பாடுக்கு மிகவும் ஏற்றது... கவர்ச்சியான மேற்பரப்புகளுடன் கிடைக்கின்றது. ஒலி சம்பந்தமான வேலைகளுக்கு துளையிட்ட போர்டுகளும் கிடைக்கின்றன. பெயிண்ட் மற்றும் வார்னிஷ் செய்ய உண்டாகும் செலவு மற்றும் உழைப்பில் பாதிக்கு மேல் ஜாலிபோர்டு மிச்சமாக்குகிறது.


எங்கும் கிடைக்கும்

ஜாலிபோர்டு

ஓர் நவீன மரப்பலகை

JOLLY BOARD

அனில் ஹார்ட்போர்ட்ஸ் லிமிடெட், லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், ஸர் பிரோஸ்ஷா மேதா ரோட், பம்பாய் 1.


அய்யனர்
காபி பில்லை
அய்யனர் காபி & டீ கோ.,
தூத்துக்குடி

கண்ணைப் பறிக்கும் வண்ண ஜாலம்


வண்ணங்களை குழைத்து வடித்து எடுக்கப்பட்ட விந்தைகளோ என எண்ணும்படி சிறு சிறு மீன்கள் கண்ணாடித் தொட்டியில் சுழன்று சுழன்று வருகின்றன. ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு புதிய வர்ணம் பளீரென வீசுகிறது. கண்ணைப் பறிக்கிறது. இயற்கையின் வண்ண ஜாலங்களுக்கு எல்லையே இல்லை போலும்!

ஆனால் இயற்கையையும் வெல்லும் அளவுக்கு இன்று பெயிண்ட் தொழில் முன்னேறியுள்ளது. பாதுகாப்பையும் அழகையும் ஒருங்கே அளிக்கும் பற்பல பெயிண்ட் திணுசுகளை அடிஸன் பெயிண்ட் அண்டு கெமிகல்ஸ் ஸ்தாபனத்தார் தயாரித்து வருகின்றனர். உலகப் பிரசித்திபெற்ற "ஸ்பார்ட்டன்" சின்னத்தின் கீழ் உருவாகும் அடிஸன் பெயிண்டுகளால் வீடுகளும், ஆபீஸ்களும், தொழிற்சாலைகளும் அழகுக் கலை பெறுவதை இன்று நாடெங்கும் பார்க்கலாம்.





APC 62-B

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட்
செம்பியம், சென்னை-11.
அங்கத்தினர்: இந்தியன் பெயிண்ட் பெடரேஷன்


THE BALARAMA VARMA TEXTILES LTD
Hearty Greetings
****
SPINDLES ... 18000
Manufacturing : 20s to 80s cotton yarn
THE BALARAMA VARMA TEXTILES LTD.
SHENCOTTAH.
GRAMS: 'BALTEX' Shencottah.
'BALTEX' Coimbatore.
PHONE: Shencottah. 36.
Coimbatore. 4114.
- SEKHAR


எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
டெக்ஸ்டூல்
தயாரிப்புகள்: நவீன நூற்பாலை இயந்திரங்கள் ★ டீசல் இன்ஜின்கள்
மெஷின் டூல்கள் ★ ரெயில்வே சிக்னல் இயந்திரங்கள்
★ ஸ்பெஷல் ஸ்டீல்கள்
டெக்ஸ்டூல் கம்பெனி லிட்.. கோயமுத்தூர்-6




ரூ. 5/-
சிறந்த சேமிப்பின்
மூலம்
சுபிட்சப் பாதைக்கு
வழி காட்டுகிறது
3%
வட்டி விதம்
மெர்கண்டைல்
பாங்க் லிமிடெட்,
16, முதல் லைன் பீச், சென்னை-1
மற்றும்
198, கோவிந்தப்ப நாயக்கன் தெரு
EP



எங்கள்
மனமார்ந்த தீபாவளி
வாழ்த்துக்கள்
டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப்
இந்தியா, சென்னை
ஹெர்குலிஸ், பிலிப்ஸ் ஸைக்கிள்கள்,
ப்ராம்டன் உறுப்புகள் தயாரிப்பாளர்கள்

JWT/TIC-1577

We wish all our Patrons Well wishers and Friends

A happy DEEPAVALI

HOTEL BROADWAY



City's high class vegetarian Boarding & Lodging with all the modern amenities

9, KEMPEGOWDA ROAD

BANGALORE-9

Restaurant section open to public between 7 a.m. to 9-30 a.m. and 4 p.m. to 6 p.m.

Meals section open to public between 10 a.m. to 2.30 p.m. and 7 to 10 pm.

CHIDAMBARAM BROTHERS

PROPRIETORS

Grams: "HOTELBROAD" - Phone: PBX 22321 (5 Lines)

ELECTROLUX

REFRIGERATORS

FOR BETTER LIVING THE WORLD OVER



Operated by

KEROSENE - Flame that Freezes
ELECTRICITY - AC or AC/DC

NO MOVING PARTS

GUARANTEED FOR 5 YEARS

Model: LT. 230 ... 2.4 Cu. Ft.
Model: LA. 50 ... 5 Cu. Ft.

Distributors for Mysore State & Andhra Pradesh

PROSPECT HOUSE

6, BRIGADE ROAD, BANGALORE-1

Phone: 4255

Branch:


PROSPECT HOUSE (HYD.) AGENCIES


62/A-6, ST. MARY'S STREET, SECUNDERABAD - Phone: 73767


டாடா-மெர்ஸிடஸ்-பென்ஸ்



தகப்பனார்: அடியே! உன் சின்ன மாப்பிள்ளை தீபாவளிக்கு
கல்கத்தா வருகிறாராம்...கோமள விலாஸிலேதான்
தங்கப் போறேன்னு கடுதாசு போட்டிருக்கார்!
தாயார்: அவர் எழுதியிருக்கிறது ரொம்ப சரி; பெரிய
உத்தியோகஸ்தர்; அவர் அந்தஸ்துக்கு அது
தானே சரியான இடம்; ரொம்ப சௌகரியமுங்கூட.
கோமள விலாஸ்
ராஷ்பிகாரி அவன்யூ கல்கத்தா
போன் 46-1960
46-3510
தந்தி SOUTHTEL


THE STAR THAT
HAULS A FORTUNE
TATA-
MERCEDES-
BENZ
Diesel Trucks & Buses
ideal for
a happy load
of children
or heavy load
of machinery
V. S. T. MOTORS PRIVATE LTD.
MADRAS • SALEM • VELLORE • TRICHY
VST-606


சமுதாயத்திற்கு எங்கள் பணி
தண்ணீர் பஞ்சம் தீர...
நாங்கள் தயாரிக்கும் ராதா கோர் டிரில்லிங் மிஷின்களால் கடினமான பாறைகளுக்குக் கீழிருந்தும் தண்ணீர் கொண்டுவர முடியும். கோபிசெட்டிப்பாளையம் சமுதாய நலத் திட்டத்தைச் சேர்ந்த சிறுவலூர் பஞ்சாயத்திலும் எங்கள் சாதனையிலொன்று. குந்தா மூன்றுவது மின்சார நிலையத்திலும் எங்கள் யந்திரங்கள் பணியாற்றுகின்றன.
ராதா இண்டஸ்ட்ரீஸ்
100' அடி ரோடு, டாடாபாட், கோயமுத்தூர்-12
தந்தி
கோர்பேரல்
போன்
பேக்டரி- 2067
இருப்பிடம்-4756

When in Mysore...

Stay in

HOTEL METROPOLE, MYSORE
OR
HOTEL KRISHNARAJASAGAR

The latest of "THE RITZ GROUP OF HOTELS"

Set against a sylvian backdrop - surrounded by beautiful gardens - Spacious Lawns - Swimming Pool. An ideal spot for holidaying. All rooms tastefully decorated - baths attached. Continental and Indian Cuisine. Courteous and prompt Service

UNDER THE EXPERT MANAGEMENT OF "THE RITZ"

ASSOCIATE HOTELS

RITZ, Bombay, Hyderabad and Coonoor - AIRLINES HOTEL, Bombay

For bookings contact : Hotel Metropole, Mysore Tel. 712 - Hotel Krishnarajasagar Tel: Belgola 22

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும் பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

உமேஷ் யோக தர்ஷன் (முதல் பாகம்)

நான்கு மொழிகளில்: ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி

ஆசிரியர்: ஸ்ரீ யோகிராஜ் உமேஷ் சந்திரஜி

ஸ்ரீ யோகிராஜ் உமேஷ் சந்திரஜி அவர்களால் எழுதப்பட்ட அற்புதமான படிக்கத் தகுந்த புத்தகம். யோகக் கலையின் சிறப்பைப் பிரமாதமாக வெளிப்படுத்தும் நூல்களில் ஒன்றாகும். வஸ்திப் பஸ்திக், கட்டுப்பாடு ஆகிய முறைகளைப்பற்றிய அரிய வழி காட்டி. இந்தப் புத்தகம் 108 விரிவான புகைப்படங்களுடன் பலவித ஆசனங்களையும் மற்றும் ஷட் கர்மாவையும் தேசம், நேரம், காலம் வயதுக்கேற்றபடி விவரிக்கிறது.

விலை: ரூ. 15/– தபால் செலவு பிரத்தியேகம் ரூ. 2/–

வி.பி.பி. மூலம் அனுப்ப இயலாது

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM
DADAR BOMBAY-14

மதராஸ் டிப்போ: 25, நைனியப்ப நாயக்கன் தெரு - - - மதராஸ்-3



சிகரெட்டின் விலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு தரமும் உயர்வு என்ற கருத்து பற்பலரிடம் உண்டு. இது எப்போதுமேயோ, எல்லா விஷயங்களிலுமேயோ உண்மையாகிவிடுவதில்லை. ஏனென்றால், அத்தகைய விலையில் மிகப் பெரும் பங்கு பற்பலவான வரிகளுக்கே போய்ச் சேருகின்றன.

ரூபாய்க்கு ரூபாய் தேறுமா ?



ப்னமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GTC GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD
பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப பெரியது.

GT 710 A.TM

Greens' Advtg.

பொருளடக்கம்

கல்கி தீபாவளி மலர்

ஒரு நாள் மத்தியானம்.

''ரங்கநாயகி! உன் மாப்பிள்ளை பள்ளித் தெருவில் குடியானப் பசங்களோடு உட்கார்ந்து கொண்டு சிகரெட்டுப் பிடிக்கிறானமே. உங்களாத்துக்காரருக்குத் தெரியுமா?'' என்றாள் சீதாலக்ஷ்மியம்மாள், ரங்கநாயகியம்மை வீட்டுக்கு வந்து.

''எங்கள் மாப்பிள்ளை எப்படிப் போனால் என்ன? என்ன செய்தால் உனக்கென்ன? உன் மகன் ஆண்டிக் குப்பத்துப் பறத் தெருவில் கள்ளு குடிக்கிறானமே, அது உனக்குத் தெரியாதா?'' என்றாள் ரங்கநாயகி.

''ரங்கநாயகி! நான் ஒன்றும் தெரியாதவள், அப்பாவி. ஏதோ ஊரார் சொல்லுவதை உன்னிடம் நல்லதுக்குச் சொன்னேன். நீ கோபித்துக் கொண்டு என் பையன் மேல் இல்லாத பொய்யைச் சொல்லி அவமானப்படுத்துகிறாய். நான் போய் வருகிறேன், தாயே!'' என்றாள் சீதாலக்ஷ்மியம்மாள், நொந்து கொண்டு.

''படித்த பையன் எனக்கு மாப்பிள்ளையாகக் கிடைத்து விட்டான் என்றுதானே இப்படி அசூயையால் பேசுகிறாய்? அவரவர்கள் அதிர்ஷ்டம் அவரவர்களுக்கு. பொறாமைப் பட்டால் என்ன பிரயோசனம்?'' என்றாள் ரங்கநாயகியம்மாள்.

''எங்களுக்கும் எங்கள் அந்தஸ்துக்குத் தகுந்தபடி மூன்று மாப்பிள்ளைகள் கிடைத்திருக்கிறார்கள். உன் மேல் பொறாமைக்கு ஒரு காரணமுமில்லை. உங்கள் பெரியவர்கள் ரொம்ப நல்லவர்கள், பிரசித்தமான பரமேகாந்திகள், ஊருக்கே ஸ்ரேயஸ் கொண்டு வந்தவர்கள். இப்போதும் ரகுநாதஸ்வாமி பிருந்தாவனத்துக்கு எத்தனை பேர் வந்து சேவித்துப் போகிறார்கள்! அதற்காகச் சொன்னேன். ஊரெல்லாம் பேசுவதைச் சொன்னேன். நான் கற்பனை பண்ணிச் சொல்லவில்லை. மன்னிக்க வேண்டுமம்மா'' என்றாள் சீதாலக்ஷ்மி.



''இந்தக் காலத்துப் பசங்கள் சிகரெட்டுப் பிடிக்கிறதில் என்ன ஆச்சரியம்? அதை ஒரு பிரமாதமாக எடுத்துச் சொன்னாயே, அதற்காகக் கோபம் வந்தது. உட்காரு, போகாதே'' என்றாள் ரங்கநாயகியம்மாள், சமாதானமாக.

பிறகு சகஜமாக ஏதேதோ பேசிவிட்டுப் பிரிந்தார்கள்.

ஃ ஃ ஃ

சாந்தப்பட்டி சின்ன கிராமம். ஓர் அக்கிரகாரம். அந்த ஊரில் நிலவியிருந்த அமைதி அபூர்வம். வடகலை தென்கலையாரும் கூட ஒரு சண்டையுமில்லாமல் சந்தோஷமாகப் பரஸ்பரம் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டு வாழ்ந்தார்கள். சந்நிதித் தெருவில் இருபது வைஷ்ணவப் பிராமணர்கள் வீடுகளும் பள்ளித் தெருவில் நாற்பது குடியானவர்களின் குடும்பங்களும் சேரியில் பதினைந்து வீட்டாரும் ஊரின் பெயருக்கு ஒத்தபடி மிக்க சாந்தமான வைதீக வாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

பிராமணர்கள் நித்திய கர்மானுஷ்டானங்கள், திவ்ய பிரபந்தம் சேவித்தல், வேதாத்யயனம் பண்ணுதல் எல்லாம் நல்ல முறையில் நடத்தி வந்தார்கள். குடியானவர்களும் மிக சாதுக்கள். நிலங்களை அழகாகப் பார்த்துக் கொண்டு வெள்ளாமை எடுத்து ஒரு பங்கு அக்கிரகாரப் பங்குதாரர்களுக்குக் கொடுத்து விட்டு மிகுதியை வைத்துக்கொண்டு பசுமாடுகளை நன்றாகப் பாதுகாத்துத் தாங்களும் சுகமாக வாழ்ந்தார்கள். நிலங்கள் பழைய விஜயநகரத்து ராஜாக்கள் பிராமணர்களுக்குக் கொடுத்த மானியம். நல்ல சத்துள்ள பூமி. உழைப்புக்குப் பின் வாங்காத குடியானவர்கள். மழையும் தவறாமல் பெய்யும். இப்படி எல்லாரும் சுகமாக இருந்துகொண்டு மூன்று தலைமுறைகள் கழிந்தன.


ஃ ஃ ஃ

பிறகு வைதீகம் குன்றிப் போய்க் குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்று, ஆங்கிலக் கல்வியடைந்து உத்தியோகங்கள் தேடியடைந்து வந்தார்கள். பழைய படிப்பும் நித்யானுஸந்தானம் ஸ்நானாதிகள் எல்லாம் மறைந்து போய் விட்டன. சில கிழவர்களும் கிழவிகளுமே ஊரில் இருந்தார்கள். அவர்களுக்கும்கூடப் பக்தி குறைந்து போய் விட்டது. மற்றவர்கள் எல்லாரும் ஊரை விட்டு வெளியேறி விட்டனர். குடியானவர்கள் மட்டும் விவசாயத்தில ஈடுபட்டிருந்தார்கள். ஹரிஜனங்கள் அநேகமாகப் பக்கத்தில் பங்காரப் பேட்டையில் கூலி செய்யப் போய் விட்டார்கள். வேதமும் திவ்யப் பிரபந்தமும் சாந்தப்பட்டியில் மருந்துக்குக் கூட இல்லை.

ஃ ஃ ஃ

சில ஆண்டுகள் கழிந்து நம்முடைய ரங்கநாயகியம்மாளின் வீடு நிலமட்டமாகி விட்டது. சில குட்டிச் சுவர்கள்தான் அடையாளத்துக்கு நின்றன. குடித்தனமில்லாத மண் வீடுகளின் கதி இதுதான். காட்டு மரத் தூலங்களும் உத்தரங்களும் வாசக்

ஸ்ரீமுகம்



மக்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் அன்புடன் இருக்கட்டும். மாக்களாயுள்ளவர்கள் மக்களாக உயர்ந்தால் எல்லாருக்கும் ஒரு தாயுண்டு என்ற உணர்வு உண்டாகும். எல்லாரும் ஒரு தாயின் குழந்தைகளாகும் போது உலகத்தில் அன்பும் களிப்புமே பொங்கும். அப் பேரன்பிற்கும் ஆனந்தக் களிப்பிற்கும் அறிகுறியாகத் தீபாவளியை அனுஷ்டிப்போம்.

தாயே தெய்வம்...
தெய்வமே தாய்.

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
காஞ்சி காமகோடி பீடம்

ஆஸ்திகத்தில் பல விதமுண்டு

காலும் மூங்கில்களும் ஏழைக் குடியானவர்கள் அவ்வப்போது எடுத்துக் கொண்டு போய் வீடு கட்டவோ விறகுக்கோ [உபயோகித்துக் கொண்டார்கள்.

ரங்கநாயகி அம்மாள் மாப்பிள்ளைதான் அந்தக் குடும்பத்துக்கு வாரிசாக அமைந்தான். அவன் அந்த மனைக் கட்டை ஒரு குடியானவனுக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு விற்று விட்டான்.

முடிவில் அந்தக் குடியானவன் ஐயங்கார் வீட்டு மனையில் புகையிலை விதைத்து வெள்ளாமை கொஞ்ச நாட்கள் எடுத்துப் பயன் படுத்தி வந்தான்.

இவ்வாறே வேறு பல வீடுகளும் அந்தக் கிராமத்தில் பாழாய்ப் போய்க் குட்டிச்சுவர்களாக நின்றன. அந்தக் கிராமத்தில் யாருமே குடியில்லை.

ரங்கநாயகி யம்மாளின் சாபம் பலித்து விட்டது போலவே சீதாலக்ஷ்மியம்மாள் மகன் மதுபானப் பழக்கம் செய்து கொண்டான். சொத்து, வீடு எல்லாம் போய் அந்தக் குடும்பம் நசித்து விட்டது.

ஃ ஃ ஃ

இப்போது — அதாவது ரகுநாத சுவாமி சந்நியாசம் பூண்ட நூறு ஆண்டுகளுக்குப் பின் — செட்டியார் ஒருவர் சென்னையிலிருந்து வந்து ஊரில் குடியேறி விவசாயம் பார்த்து வருகிறார். ஊர்க் கோயிலைக் கொஞ்சம் மராமத்து செய்து வைத்து ஒரு சின்னப் பள்ளிக்கூடமும் நடத்தி வருகிறார். அதில் குடியானவர்களின் குழந்தைகள் படித்து வருகிறார்கள். ஊரில் ஒரு வதந்தி, செட்டியார் வீடு கட்டிய மனையில் அஸ்திவாரத்துக்குத் தோண்டியபோது ஒரு பொன் புதையல் சிக்கியதாக. பொய்யோ உண்மையோ அது தெய்வத்துக்குத்தான் தெரியும். செட்டியார் சென்னையில் இன்ஸால்வெண்டுக் கொடுத்துக் கடன்காரர்களுக்கெல்லாம் சுன்னம் போட்டு விட்டு இந்தக் கிராமத்துக்கு வந்தார். இங்கே அவர் பணம் செலவு செய்வதைக் கண்டு ஜனங்கள் இம்மாதிரி ஊகித்து வந்தார்கள்.

வருஷம் தவறாமல் கோயிலில் உற்சவமும் ரகுநாத சுவாமி பிருந்தாவனத்தில் அந்தச் சுவாமிகளின் ஆராதனைத் திருவிழாவும் நடத்தி வந்தார்.

ஃ ஃ ஃ

செட்டியார் முன்பு சென்னையில் நாஸ்திகக் கோஷ்டியைச் சேர்ந்தவர். சென்னை வீட்டில் தம் நாஸ்திகக் குருவின் திருப்படம் பெரிய தொன்று இருந்து வந்தது. இப்போது சாந்தப்பட்டியில் அவருடைய வீட்டில் வேங்கடேசப் பெருமாள்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



வாதாபி விஷ்ணு

தீபாவளி நன்னாள்! மலரைப் புரட்டுவதற்காக விடியுமுன்பே வாசகர்கள் விழித்தெழுந்தாயிற்று. அவர்களுக்கு அருள் புரிய வேண்டுமென்றே அரவணை துயில் வரதனும் 'செங்கண் சிறுச்சிறிதே விழித்து அங்கண் இரண்டும் கொண்டு' நம்மையெல்லாம் குளிரக் குளிரப் பார்க்கிறான் இம்மலரின் அட்டைப் படத்தில்.

ஆகா, அந்தக் கோலத்தில்தான் என்ன ராஜ கம்பீரம் பாருங்கள். விஷ்ணுவின் அம்சம் பெற்றவர்களே அரசர்கள் என்னும்போது அந்த விஷ்ணுவின் கம்பீரத்துக்குச் சொல்லவா வேண்டும்? ஸிம்ஹாஸனத்தில் ஜோருசாக வீற்றிருக்கிறான் லலிதையின் சோதரன். சக்ரவர்த்தியின் கையில் பிரயோகத்துக்குத் தயாராக இருக்கிறது சக்கரம். ஞாலமெல்லாம் நடுங்க முரலும் பாஞ்ச ஜன்யம் வேறு. இந்த ஞானப் பழத்தின் வேறொரு கையில் பீஜாபூரக் கனி. பஞ்ச பூதங்களையும் கட்டிப் பிடித்தாளும் வைகுண்டநாதன் இவனே! 'நீள்கடலுள் துயிலும்'பான சேஷனேதான் இவனுக்கு 'இருந்தால் சிம்மாதனம்'! இந்த ராஜராஜனைக் காணும்போது,

'.........பூவைப் பூவண்ணா! உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருள்.........'

என்று இறைஞ்சத் தோன்றுகிறதல்லவா? 'உலகெலாம் இன்புற்று வாழ வேண்டும்; சாந்தி தழைக்க வேண்டும்' என்பது தான் 'யாம் வந்த காரியம்' என்று இவனுக்குச் சொல்ல வேண்டுமா என்ன? 'சொன்னாலும் செவி சாய்ப்பேன்; தீயோராய் வந்தோரைத் தூயோராக்குவேன்' என்பதற்கடையாளமாகத்தான் ஓர் அசுரனையே செவியில் குண்டலமாகத் தரித்திருக்கிறான்! அரசானவந்தாலும் அருளாளன் என்பதேயல்லவா அவனுடைய தனிப் பெருமை?

கருடாழ்வாரின் குறிப்பறியும் நோக்கும், பெருமாளின் அந்தக் கமல நயனங்களும், குறைவு படாமல் பெருகும் கருணையும் நம்மைப் பரவசமுறச் செய்கின்றன. பல காலமாகப் பாதாமி விஷ்ணு குகாலயச் சிற்பத்துக்குள் ஒளிந்து கொண்டிருந்த அக்கருணை, ஓவியர் மணியத்தின் சித்திர வாயிலாக வெளியாகும் போது முன்னிலும் பெருகி யிருக்கிறது!

படம் விளங்குகிறது. இதை யெல்லாம் பார்த்துத் தான் சிலர் புதையல் விஷயம் பேசி வந்தார்கள். ஆனால் சர்க்கார் அதிகாரிகளுக்கு ஒரு துப்பும் சிக்கவில்லை.

ஃ ஃ ஃ

ரகுநாத சுவாமியின் பரம்பரைச் சந்ததியார் இருந்த வீட்டு மனையில்தான் செட்டியார் தம் வீடு கட்டிக் குடியிருந்தார். ஒரு நாள் அவருடைய குடும்ப ஜோதிஷர் வந்து செட்டியாரைப் பார்த்து: "தங்கள் ஜாதகத்தை மறுபடியும் சோதித்துப் பார்த்ததில் பெருத்த சொத்து இந்த வருஷத்தில் தங்களுக்குக் கிடைக்கும் போல் தெரிய வருகிறது" என்றார்.

"அப்படி யெல்லாம் பேசாதீர்கள். இப்போதே சர்க்கார் என் மேல் அபாண்டமான சந்தேகம் காட்டி வருகிறார்கள். புதையலாவது, சிக்கலாவது, ஒன்றுமில்லை" என்றார் செட்டியார்.

"செட்டியார்வாள்! அதுவல்ல, இப்போது விஷயம். இந்த ஆண்டில் பெருஞ் சொத்து உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. அது கோயில் சொத்துப் போலவும் காணப்படுகிறது" என்றார் ஜோஸ்யர்.

"சுவாமி! எனக்குச் சொத்து ஒன்றும் வேண்டாம். நான் பெரிய சம்பத்து அனுபவித்து ஆயிற்று. அதில் நான் சுகமாவது சந்தோஷமாவது காணவில்லை. போய் வாருங்கள்" என்று சொல்லி ஒரு தட்டில் வெற்றிலை பாக்கும் பதினைந்து ரூபாயும் வைத்துக் கொடுத்து ஜோதிஷரை அனுப்பி விட்டார்.

ஃ ஃ ஃ

அடுத்த வருஷம் செட்டியார், சாத்தப்பட்டி ஸ்ரீனிவாஸர் கோயில் 'ரிப்பேர்' வேலையை மும்முரமாக ஆரம்பித்தார்.

குறிப்பாக, சில வேலைக்காரர்களை வைத்துக் கொண்டு இரவும் பகலும் தம் நேர் பார்வையில் எல்லாம் நடத்தினார்.

ஒரு நாள் இரவில் துவஜஸ்தம்பத்தை இறக்கி அஸ்திவாரத்தைப் புதுப்பிக்கும் வேலை நடந்தது. ஏதோ 'குசுகுசு' என்று பேச்சு நடந்தது. செட்டியார் அடுத்த நாள் ஒரு விரதம் இருந்தார். அதன்பிறகு மராமத்து வேலை வெகு வேகமாக நடத்தத் தீர்மானித்து அதிகக் கூலி ஆட்களைப் பிடித்து நடத்தினார்.

ஜோதிஷர் மறுபடியும் வந்தார். "செட்டியார் நான் சொன்னது பொய்யாயிற்றா?" என்று கேட்டார்.


செட்டியார் வழக்கம் போல் வெற்றிலை பாக்கும் தக்ஷிணையும் வைத்து அனுப்பினார். இந்தத் தடவை தட்டில் முப்பது ரூபாய் வைத்துக் கொடுத்தார்.

ஃ ஃ ஃ

செட்டியார் அடுத்த சித்திரையில் மராமத்து முடித்து விட்டுப் பெரிய திருவிழா விமரிசையாக நடத்தினார்.

இப்போது செட்டியார் சென்னையில் புதுக்கடை ஆரம்பித்துத் தம் குமாரனை அந்தக் கடையைப் பார்த்துக் கொள்ள அமைத்திருக்கிறார். ஜவுளி வியாபாரத்து லாபத்தில் ரூபாய்க்கு ஓர் அணாவாகக் கணக்கிட்டுத் திருப்பதி வேங்கடேசப் பெருமானுக்கு வருஷம் ஒருமுறை உண்டியில் போட்டு வருகிறார்.

செட்டியார் கடை இப்போதும் நடந்து வருகிறது. விலாசம் சொல்லுவதற்கில்லை.



அலைக்குரல்

ஞானம்

நீல நெடுங் கண்ணி வீசும் இருட் கிழம்
நேற்றிரவு கண்ட மீனையெலாம்
காலத்தின் சந்தைக் கடையினிலே விற்கக்
காற்றினில் ஏறி மறைந்ததடா !

வானக் கடலை வளைத்தது காலையின்
வண்ணவலை அதன் வீச்சினிலே
மீனொரு கோடி மிரண்டு புரண்டொளி
மின்னித் துடித்தன கீழ்த்திசையில்

கண்ணை விழித்தே பார்த்திடடா மணற்
காட்டில் உலரும் வலை எடடா
பண் பகர்ந்தே விம்மி ஆடும் கருங்கடற்
பாவைக்கோர் முத்தம் பதித்திடடா

கட்டு மரத்தினை விட்டலைமேல் சுற்றும்
காற்றுடன் ஓடிக் களித்திடுவோம்
எட்டுமட்டும் திசை ஏறுமட்டும் கடல்
ஏழின் வரம்பையும் தொட்டிடுவோம்

மண்ணின் பகைமை இனிக்குதடா புன்னை
மாமலர்ச் சோலை மயக்குதடா
கன்னியிலே கயல் கட்டும் நம்மையொரு
கண்கயல் கட்டி இறுக்குதடா

என்னினும் நீலி கடற்குரலில் அவள்
எம்மை அழைக்கும் ஒலிக் கரத்தில்
மின்னித் துவண்டெழும் மீன்திரளில் எல்லை
மீறுமோர் இன்பத்திற் கீடாமோ ?

கொட்டி முழக்கும் புயல் நடுவே நீர்க்
கோழி பளிச்சிடும் வான்பரப்பும்,
வெட்டி மின்னல் துள்ளத் துள்ளி நடம்பயில்
வீரி அலைமகள் வெண்சிரிப்பும்

எட்டி அழைத்திடக் கட்டு மரத்தினில்
ஏறித் திரைவழி கிழிதிடுவோம்;
எட்டு மட்டும் திசைமுட்டி நுரைக்கடல்
ஏழின் வரம்பையும் தொட்டிடுவோம்.



கல்லில் பிறந்த கனவுகள்


பனிப் போர்வை தரித்து வெண்மைக் கொலு வீற்றிருக்கும் இமயக் கொடுமுடிகளிலிருந்து நீலத் திரைக் கடல் அருகே கன்னித்தவம் புரியும் தமிழ்க் குமரி கோயில் வரை விரிந்து கிடக்கும் இந்தப் பழமை வாய்ந்த பாரத நாட்டில் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அழியாத உண்மைகளாக இருப்பவை எவை? மேற்படி கேள்விக்கு விடை மைசூர் மாராஜ்யத்தில் உள்ள பீஜாப்பூர் ஜில்லாவில் பாதாமி தாலூகாவில் இருக்கும் பாதாமி என்னும் இடத்தில் உள்ள சிற்பங்கள் தாம் என்று துணிந்து கூறலாம்.

அரச மரபினரான சாளுக்கியர்களுடைய காலத்தில் வாழ்ந்த சிற்பிகளின் மனத்திலிருந்த மகோந்நதமான கலைக் கனவுகள் எல்லாம் பாதாமியின் கற்களில் பிறந்து ஜீவ களையோடு இன்றும் வாழ்வதனால் கல்லில் பிறந்த கனவுகளாக அவை நமக்குக் காட்சியளிக்கின்றன. இறுகி, முரடு தட்டிப்போன பாதாமியின் கற்களைச் சிறிது சிறிதாகக் கனியும்படி செய்த சிற்பிகளின் திறமை வாய்ந்த கைகளை எண்ணும்போது அவை கல்லில் பிறந்த கனிவுகளாகவும் தோற்றுகின்றன. எப்படியானாலும் என்ன? கல்லில் கனவுகளைப் பிறப்பித்தவர்களும் சிற்பிகள்தாம். கனிவுகளைப் பிறப்பித்தவர்களும் சிற்பிகள்தாம். அப் பெருங் கலைஞர்களுக்கு நமது அஞ்சலி உரியதாகுக.

கி. பி. 540-ல் இருந்து கி. பி. 757 வரை பாதாமியை ஆண்ட சாளுக்கிய மன்னர்கள் காலத்தில் பாதாமிக் குன்றுகளின் கல்லில் பிறந்த இந்தக் கனவுகளைக் கண் குளிரக் காணும் நனவுலகக் காட்சிகளாக இந்த மலரில் அட்டையிலும், உள்ளே சித்திர மடலாக வேறொரு பக்கத்திலும் வரைந்து அளித்திருக்கிறார் ஓவியர் மணியாகிய திரு மணியம் அவர்கள்.

முன்பு சாளுக்கியர்கள் பாதுகாவல் புரிந்த பாதாமியை, இப்போது பழம் பொருள் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஓவர்சியர் ஒருவரும் மூன்று சேவகர்களும் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு தாலூகாவின் தலைநகரமான இந்த ஊரைக் கலைத் தலைநகர் என்றும் சேர்த்துப் புகழலாம். தொடர்ச்சியான குன்றுகளின் அடிவாரத்தில் பாதாமி அமைந்திருக்கிறது. எதிரிகளின் தாக்குதலுக்கு இந்த மலைத் தொடர்களை இயற்கையரணாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவே அந்தக் காலத்தில் மேலைச்சாளுக்கிய மன்னர்கள் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தார்களாம்.

டாலமி என்னும் யாத்திரிகர் கி. பி. 150-ல் தாம் செய்த யாத்திரைக் குறிப்புக்களடங்கிய வரலாற்றில் பாதாமியைப் 'பதமாய்' என்று குறித்திருக்கிறார். இதற்கே 'பதவி' என்னும் தொன்மையான பெயர் ஒன்று உண்டு. பிற்காலத்தே சிற்பக் கலையுலகத்தில் அது தலைமையான பதவி வகிக்கப் போவதை நினைத்துத்தான் அன்றே இப்படியும் ஒரு பெயர் வைத்தார்கள் போலிருக்கிறது. 'பதவி' என்ற இந்தப்பெயரே வடமொழியில் 'வாதாபி' என ஆயிற்று. வாதாபியில் உள்ள வடமொழிக் கல்வெட்டு ஒன்றிலிருந்து சாளுக்கிய மன்னர்கள் ஆண்ட மண்டலத்துக்கு வாதாபி ராஜதானி என்பது பெயரென்றும், சாளுக்கிய அரசனான வல்லபேசுவரனால் நிர்மாணிக்கப்பட்ட உயர்தரமான கோட்டை, மேலிருந்தும் கீழிருந்தும் தாக்க முடியாத வலிமையுடையதென்றும், மேற்குறித்த அரசன் பல சிறந்த வேள்விகளைச் செய்தான் என்றும் அறிய முடிகிறது. பதின்மூன்றாவது நூற்றாண்டைச் சார்ந்த கன்னட கவியாகிய மல்லிகார்ஜுனன் பாதாமியைப் 'பதவி' என்ற பெயரால்தான் குறிப்பிடுகிறான். பாதாமிக்கு அண்மையில் உள்ள ஊர்களாகிய ஐஹொளே, பட்டடகல் முதலியவற்றில் காணப்படும் கல்வெட்டுக்களைக் கொண்டு பதவி எனப்படும் சொல்லே நீண்ட காலமாக இவ்வூருக்குப் பெயராக அமைந்திருக்கக் கூடும் எனத் தெரிகிறது.





பாதாமியின் கலைச் செல்வங்களை, வரலாறு, கல்வெட்டுக்கள், கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் என ஐந்து வகையாகப் பிரிக்கலாம். மேற்குச் சாளுக்கிய வம்சத்தினர் இங்கு இருநூறு வருஷ காலம் அரசாண்ட பெருமையையும், செழிப்பையும், இன்று இங்கே தோன்றும் சின்னங்கள் நினைவூட்டுகின்றன. இவர்களுக்கு முன்னே கதம்ப மன்னர்களும், பின்னே ராஷ்டிரகூடர்களும் இங்கே அரசாண்டனர். இந்த மரபைச் சேர்ந்த மன்னர்களுக்கும் பாதாமிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

பாதாமியில் இன்று காணப்படும் முக்கியமான பாறைக் கோவில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை உருவாக்க உதவியவர்கள் வல்லபேசுவரன் எனப் பெயர் பூண்ட முதல் புலிகேசியும் முதல் கீர்த்தி வர்மனும், மங்களேசனும், இரண்டாம் புலிகேசியும், இரண்டாம் விக்ரமாதித்தனும் ஆவார்கள். இந்த மன்னர்கள் கதம்பர், பல்லவர், காங்கர் முதலியோரின் நாடுகளையும் கொஞ்ச காலம் கைப்பற்றி ஆண்டார்கள். இவர்கள் வைஷ்ணவ பாகவத முறைகளைக் கடைப்பிடித்துத் திருமாலை வழிபட்டார்கள். இருந்த போதிலும் மற்ற சமயங்களைப் பேணி வளர்க்கவும் உதவுகிற பரந்த மனப்பான்மை பெற்றிருந்தனர்.

இவர்களுடைய இந்தப் பரந்த மனப்பான்மையைப் பாதாமியின் மலைச்சாரலில் உள்ள குகைக் கோவிலின் சிற்பங்களிலும் காண முடிகிறது. ஒரே பாறையில் சிற்பங்களைச் செதுக்கியும், ஓவியங்களைத் தீட்டியும் மனத்தின் கனவுகளையும் கற்பனைகளையும் கல்லில் உருப்பெறும்படி கனிவித்த பொற்காலத்தின் வரலாறு பாதாமியில் தெரிகிறது.

ஓவியர் மணியம் அவர்களுடைய விரல்களைப் 'பேசும் விரல்கள்' என்று புகழ்ந்தால் அது மிகவும் பொருந்தும். சைத்திரிகனுக்கு விரல்களே பேச வேண்டும் என்று சொல்வார்கள். அது மட்டும் அல்லாமல் தன்னுடைய பேசும் விரல்களைக் கொண்டு பேச்சில்லாத உருவங்களையும் பேசவைக்க வேண்டுமென்று சிறந்த ஓவியனுக்கு இலட்சணம் சொல்லுகிறார்களே அந்த இலட்சணம் மணியம் அவர்களிடம் பரிபூரணமாக அமையப் பெற்றிருக்கிறது.


பல்லவ நரசிம்மவர்மன் தன் சேனைத் தலைவனை பரஞ்சோதியைத் துணைக் கொண்டு பாதாமியாகிய வாதாபியைப் புலிகேசியிடமிருந்து கைப்பற்றி வென்று 'வாதாபி கொண்டான்' — என்று புகழ்ப் பெயர் பெற்றதை யெல்லாம் தமிழ் மக்கள் பள்ளிக்கூடச் சரித்திரப் புத்தகத்தில் படிக்கிறார்களோ, இல்லையோ பேராசிரியர் கல்கியவர்களின் மாபெரும் படைப்பாகிய 'சிவகாமியின் சபத'த்திலிருந்து படித்து அறிந்து கொண்டிருப்பார்கள். தன் தமையனான கீர்த்தி வர்மனின் ஆட்சியில் பன்னிரண்டாவது வருடம் மங்களேசன் இங்குள்ள மூன்றாவது குகையைக் குடைந்து அதற்கு விஷ்ணு கிரகம் என்ற பெயரும் சூட்டினான் எனத் தெரிகிறது. பாதாமியிலேயே இந்த ஒரு குகையில்தான் அஜந்தா ஓவியத்திற்குச் சமமான ஓவியங்களைச் செய்வித்திருக்கிறான் மேலே குறிக்கப்பட்ட அரசன். இங்கு அமைந்திருக்கும் ஓவியங்கள் திருமால், சிவன் முதலியோரின் லீலைகளை ஒட்டியவை. முதன் முதலாகக் கன்னட மொழியிலே வெட்டப்பட்ட கல்வெட்டுக்களும் இங்கே உள்ளன. பாதாமி மலைத் தொடரில் பல குகைக் கோவில்கள் இருந்தும் அவைகளில் மிக முக்கியமானவை நான்கே ஆகும்.

முதல் குகை சைவ சமயத்தைச் சார்ந்தது. அங்குள்ள சிற்பங்களில் நடம் புரியும் பசுபதியும் மஹிஷாசுரமர்த்தனியும் அர்த்தநாரீசுவரனும் ஹரிஹரனும் முக்கியத்துவம் பெறுகிறார்கள். இங்குள்ள இரண்டாவது குகைக் கோயில் வைணவ சமயத்தைச் சார்ந்தது. இங்கு வராகர், திரிவிக்ரமன், வாமனன் முதலிய விஷ்ணு அவதார சிற்பங்களைக் காணலாம். கருடன் மேல் அமர்ந்த திருமாலும், ஆதிசேடன் மேலே பள்ளி கொண்ட அனந்தசயனரும், லீலைகள் புரியும் மாயக் கண்ணனும், காதல் நிலைச் சிற்பங்கள் பலவும் இருக்கின்றன. இங்கேயுள்ள மூன்றாவது குகையும் வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்ததே. இதைத்தான் சக 500—ல் மங்களேசன் உருவாக்கினான். நான்காவது குகை ஜைன சமயத்தைச் சார்ந்தது. அதிலுள்ள ஏழு, எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களைக் கொண்டு அவை ஜைன தீர்த்தங்கரர்களுக்காகச் செதுக்கப்பட்டவை எனவும் அறியலாம். மூன்றாவது குகைச் சிற்பங்களே இம்மலரில் ஓரளவு மிகுதியாக வரைந்தளிக்கப்பட்டுள்ளன.

நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் பாதாமி மலைத் தொடரின் கல்லில் தங்கள் கனவுகளைப் படைத்த சிற்பிகளின் விரல்களையும், அதே கனவுகளை இன்று இந்த மலரில் நமக்கு அளித்த பேசும் விரல்களையும் சேர்த்துப் பாராட்டி மகிழ்வோம்; வாழ்த்துவோம்.



பொய்க்கால் குதிரையாட்டம்



குரு சொன்னபடி கடைக்குச் சென்று நான்கணாவுக்கு நெய் வாங்கினான் தர்க்கசாஸ்திர மாணவன் பரமானந்தன். குளிர்ந்த காலைவேளை. நெய் தோய்ந்திருந்தது. தொன்னைக்கு நெய் ஆதாரமா, அல்லது நெய்க்குத் தொன்னை ஆதாரமா என்று சீடனுக்குச் சந்தேகம் பிறந்தது. தொன்னையைத் தலைகீழாகத் திருப்பினாலும் நெய் தொன்னையில் நின்றதைக் கண்டான் சீடன். நெய்க்குத் தொன்னை ஆதாரமில்லை என்று முடிவு செய்தான். ஆசிரமம் கொஞ்சம் தொலை. நடந்து செல்ல இரண்டு நாழிகையாயிற்று. அதற்குள் வெய்யில் ஏறிற்று. சீடன் மனத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டே தொன்னையைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு நடந்து சென்றான். குருவிடம் மிக உற்சாகமாகப் போனான்.

குரு கேட்டார் நெய் எங்கே என்று. நெய் எல்லாம் உருகிக் கீழே கொட்டிப் போனதைக் கண்டான் சீடன். அப்போதுதான் நெய்க்குத் தொன்னை ஆதாரம் என்று தெரிந்தது சீடனுக்கு.

கடவுளும் சமயமும் வேண்டாம். சீலம் மட்டும் போதும் என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் நினைப்பது இந்தப் பரமானந்த சீடன் நெய் வாங்கிய கதைதான். சீலம் கொஞ்சம் நின்றிருப்பதைக் கண்டு சீலத்தைத் தாங்கும் கடவுள் பக்தியைப் புறக்கணித்தால் இந்தப் பரமானந்தன் வாங்கி வந்த நெய்யின் கதிதான் சீலத்துக்கு. தொன்னைதான் சமயங்களும் ஆஸ்திகமும். நெய்யாகிய சீலம் ஆஸ்திகத்தில் தங்கி நிற்கும். கடவுளை விட்டு விட்டால் சீடன் வாங்கிய நெய்யைப்போல் மக்களின் சீலத்துக்கு நாசம் ஏற்படும்.

நாகரிகத்துக்கு ஆதாரம் சீலம்; சீலத்துக்கு ஆதாரம் ஆஸ்திகம்; பரமானந்த சீடனுடைய ஆராய்ச்சியைப் போல் நம் தலைவர்கள் செய்தால் நாடு நாசமடையும்.

கிராம விழாக்களில் காட்டும் பொய்க்கால் குதிரையாட்டத்தை அனைவரும் அறிவோம். குதிரைமேல் உட்கார்ந்து குதிரையைக் கூத்தாடச் செய்வதாக ஆட்டக்காரன் காட்சி தருகிறான். கூத்தாட்டமெல்லாம் அவனுடைய வேலை. குதிரைபோல் காட்சி தருவது வெறுங் கூடைதான். ஆட்டங் காட்டுகிறவன் குதிரையைத் தாங்குகிறானேயன்றிக் குதிரை அவனைத் தாங்கவில்லை. அதைப்போலவே பக்தியும், சீலமும். தெய்வ பக்தி உள்ளத்தில் இருப்பதால் சீலத்தைக் காண்கிறோம். சீலத்துக்குத் தனி உயிர் வேகம் கிடையாது. அதைத் தாங்கி நிற்பது தெய்வபக்தியே. அறியாக் குழந்தைகள், ஆட்டத்தில் காணும் குதிரையைக் குதிரையாகவே எண்ணுவது போல் நாமும் அறியாமையால் தெய்வ பக்தி அடிப்படையில்லாத சீலம் உயிர்கொண்டு வேலை செய்யும் என்று எண்ணலாம். அது அறியாமையாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் காத்து வந்த ஆஸ்திகத்தைப் புறக்கணித்தோமானால் சீலமானது பொய்க்கால் குதிரைக் கூத்தில் ஆடுகிறவனில்லாத கூடைக் குதிரை போலாகும்.

கடவுள் இல்லாத சீலம் வெறும் பிராந்தி. நாஸ்திகத்தை வைத்துக் கொண்டு நடத்தப்படும் ஆட்சியும் தெய்வமில்லாத நன்னெறிப் படிப்பும் பயனற்ற முயற்சிகளாகும்.



காலத்தை வென்ற காமகோடி

என். ராமேசன், ஐ.ஏ.எஸ்
ஆந்திரப் பிரதேச தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா டைரக்டர்



கருணை, ஞானம், சீலம் ஆகியவற்றுக்கு உறைவிடமாக இலங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் காலத்தை வென்று பெரும் புகழ் பெற்று வந்திருக்கிறது. ஸ்ரீமூக பஞ்சசதி, 'ஆதிம பரபீடம்' என்று ஸ்ரீ காமகோடி பீடத்தின் பழமையைப் பாடுகிறது. ஸ்ரீஹர்ஷரும் தமது 'நைஷத' காவியத்தில் காமகோடி பீடத்தில் வதியும் யோகசந்திரமௌலீசனின் பண்டைப் பெருமைக்குச் சான்று கூறுகிறார். சுயம்வரத்துக்கு வந்துள்ள தொண்டை மண்டலாதிபனைத் தமயந்திக்கு அறிமுகம் செய்யும் வாணி, அவனது தலைநகரில் ஆராதிக்கப்படும் யோகேச்வரருக்குத் திருமுழுக்காட்டும்போது அப்பனிக்குத் திருவுருவம் தெள்ளிய நீரில் மறைந்தே போய் விடுகிறது என்று கூறுவதாக நைஷதம் சொல்கிறது. ஸ்ரீ காமகோடி பீடத்திலுள்ள பத்துச் செப்பேடுகளும் அதன் புராதனச் சிறப்பைச் சொல்லுவதை இந்த ஆராய்ச்சிக் கட்டுரை சான்றுகளுடன் விளக்குகிறது; இதுவரை கால நிர்ணயமாகாத பழையதொரு செப்பேட்டின் காலத்தையும் ரஸமான முறையில் நிலைநாட்டுகிறது. — ஆசிரியர்

இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் தேச சரித்திரத்தை நிர்ணயிப்பதற்கு ஆதார பூர்வமான அரசாங்கப் பத்திரங்கள் எதுவும் கிடையாது. கலிங்கத்துப் பரணி போன்ற ஒரு சில நூல்களிலிருந்து கிடைக்கும் வரலாற்று உண்மைகளும் மிகவும் சொற்பமே. எனவே அந்தப் பழங்காலச் சரித்திரத்தை நிர்ணயிப்பதற்குக் கல்வெட்டுக்களும், செப்புப் பட்டயங்களுமே பெரும்பாலும் உதவுகின்றன.

இவற்றில் செப்பேடுகள் என்பவை அரசர்கள் செய்த தானங்களைப் பற்றிய விவரங்கள் பொறித்தவையாகும். கிரகணம், அர்த்தோதயம், மகோதயம், ஸங்க்ராந்தி முதலிய புண்ணிய காலங்களில் அரசர்கள் தம் சந்ததியின் மேன்மையை முன்னிட்டு அந்தணர்களுக்கும், ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் நிலமாகவோ, மனையாகவோ, கிராமமாகவோ தானங்கள் வழங்குவதுண்டு. இந்தத் தானச் சொத்துக்களின்மீது அரசாங்க சேவகர்கள் தவறுதலாக வரிகள் விதித்து விடாமலிருப்பதற்காக, அவ்வரசர்கள் தானம் வழங்கிய விவரங்களைச் செப்பேடுகளில் எழுதச் செய்து அவற்றைத் தமது முத்திரையுடன் தானம் பெற்றவர்களிடம் கொடுப்பார்கள். இந்தச் சாஸனங்களின் முதற்பகுதியில் தானம் தந்த அரசரைப் பற்றிய விவரங்களும், அவர் பெற்ற வெற்றிகளும், அவரது வம்சாவளியும் கூறப்பட்டிருக்கும். இது பிரசஸ்தி எனப்படும். பிற்பகுதியில் தானம் பெற்றவரைப் பற்றியும் தானம் அளிக்கப்பட்டது எதற்காக என்பது பற்றியும், அளித்த நாளும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தச் செப்பேடுகள் தானம் பெற்றவர்களின் தலைமுறையினரால் காக்கப்பட்டுப் பின்னர் அஜாக்கிரதையினாலோ அல்லது அத்தலைமுறை நசித்தவுடனோ, அல்லது தானம் அளித்த அரச வம்சம் முடிந்த பின்போ காணாமற் போய்விடுகின்றன. காலப் போக்கில் தற்செயலாக இவை வெளிப்படும்போது பழைய அரசர்களைப் பற்றியும், அவர்கள் காலத்தைப் பற்றியும் பல விஷயங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. நம் சரித்திரத்தைப் புனர்நிர்மாணம் செய்யவும் இவை உதவுகின்றன.

அரசாட்சி புரியும் ராஜ வம்சத்தைப் பற்றி மட்டும் அல்லாமல், பல நூறு ஆண்டுகளாகத் தண்டம் தாங்கி ஞான ஆட்சி புரிந்து வரும் ஞான வம்சத்தைப் பற்றிச் செப்பேடுகள் சொல்லும் சுவையானதொரு சரித்திரத்தை இங்கு காண்போம்.

காலம் காலமாகத் தமிழ் நாட்டில் தருமம் தழைக்கச் செய்து வரும் **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்கும்**, அதன் பீடாதிபதிகளுக்கும் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்து பல மன்னர்கள் கிராமங்களாகவும், தோட்டங்களாகவும், அணிபணிகளாகவும் காணிக்கைகள் சமர்ப்பித்திருக்கின்றனர். இந்தக் காணிக்கைகள்

பற்றிய விவரங்களைச் செப்பேட்டில் பொறித்து அந்தச் சாஸனங்களையும் ஸ்ரீமடத்தில் சமர்ப்பித்திருக்கின்றனர். இவை இன்னும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் நூல் நிலையத்தில் வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவற்றைப் பரிசீலிக்கும் வாய்ப்பை எனக்கருளிய இன்றைய பீடாதிபதிகளான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு என் இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்தி, இந்தச் செப்பேடுகள் கூறும் விவரங்களைச் சொல்லத் தொடங்குகிறேன்.

இந்தச் செப்பேடுகள்தாம் எவ்வளவு அதிசயமான விவரங்களைச் சொல்லுகின்றன? குதுப்ஷாஹி வம்சத்தைச் சேர்ந்த கோல்கொண்டா சுல்தானும் முகம்மதிய மன்னருக்குட்பட்ட இரு அமைச்சர்களும் கூட அல்லவா காமகோடி பீடாதிபதிகளுக்குக் காணிக்கைகள் செலுத்தியிருக்கிறார்கள்! அப்படியானால் இப் பீடத்தின் பெருமை நம் தமிழ் நாட்டு எல்லையையும், ஏன் இந்து மதத்தின் எல்லையையும் கூடக் கடந்து பரவியிருக்கிறது என்று தெரிகிறதல்லவா? ஆம், அருளுக்கு எல்லை ஏது?

ஸ்ரீ காமகோடி பீடத்துக்குத் தான சாஸனம் அளிக்கப்பட்டுள்ளவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்த ஒரு செப்பேட்டை இப்போது அறுதியிட்டு உறுதியாகக் கால நிர்ணயம் செய்யலாம்.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காமகோடி பீட நூல் நிலையத்தில் காணப்பட்ட செப்பேடுகளில் ஒன்று ஒரு வாக்கியத்தின் நடுவிலிருந்து தொடங்குவதால், அதற்கு முற்பகுதி ஒன்று உண்டு என்பது நிச்சயமாயிற்று. ஆனால் அந்த முந்தைய ஏடு, எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. கிடைத்த ஏட்டின் கடைசியில் '**ஸ்ரீ விஜய கண்ட கோபால தேவன்**' என்று தெள்ளத் தெளிய தமிழில் கையொப்பம் இருந்தது. இவன்தான் காணிக்கை செலுத்திய கோமகன். ஸ்ரீ ஹஸ்திசைலநாதஸ்வாமியின் கோயிலுக்கு மேற்கேயுள்ள ஸ்ரீ சங்கரமடத்திலிருக்கும் **ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு** இக் காணிக்கை அர்ப்பணிக்கப்பட்டதாக வடமொழியில் தெளிவாகக் கூறுகிறது செப்பேடு. ஆம், கையொப்பம் தவிர மீதி வாசகம் முழுதும் வடமொழியில்தான் அமைந்திருக்கிறது. இவை ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முந்தைய கிரந்த லிபியில் பொறிக்கப்பட்டு சுலோகங்களாக அமைந்தவை. அளித்தவன் யார், யாருக்கு அளித்தான் என்பவை மட்டுமின்றி அளிக்கப்பட்ட பொருளைப் பற்றியும் இந்தச் செப்பேடு தெரிவிக்கிறது. **அம்பிகா** என்ற ஒரு கிராமம் முழுவதுமே இந்தக் காணிக்கைப் பொருள். ஸ்ரீ விஜயகண்ட கோபாலனின் காணிக்கையான அது வேகவதியாற்றுக்கு வட கரையிலுள்ள வளமிக்க பகுதி. அதன் வளத்தைப் பற்றிய சுலோகங்களிலும் வளம் இருக்கிறது.

தினம் நாற்றியெட்டு அந்தணர்களுக்கு உணவு அளிப்பதற்காக இந்தக் கிராமம் ஸ்ரீ காமகோடி பீடத்துக்கு அளிக்கப்பட்டது என்கிறது சாஸனம்.

சரித்திரத்தை நிறுவிக் காட்டுவதற்கு மிகவும் வசதியாக, தானம் வழங்கப்பட்ட தேதியையும் இச் செப்பேடு கூறுகிறது. **கர வருடம்** ஒன்றில், சூரியன் கர்காடக ராசியில் இருக்கும் போது—அதாவது **ஆடி மாதத்தில்—சுக்லபட்ச நசமியன்று**, இந்து வாரமென்ற **திங்கள் திருநாளில், அநூராத நட்சத்திரம்** கூடிய சுபதினத்தில் காணிக்கை செலுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வளவு விரிவாக தானம் பற்றியும், தானம் அளித்தவர் - அளிக்கப் பெற்றவர் குறித்தும், தானம் வழங்கப்பட்ட தேதி குறித்தும் இந்தச் சாஸனம் சொல்லியும்கூட சரித்திரபூர்வமாக அதனைப் பற்றிய உண்மை இதுவரையிலும் சரிவர அறியப்படவில்லை. காரணம் முதல் செப்பேடு இவ்வளவு காலமாக வெளிப்படாததுதான்.

கி. பி. 1250-ம் ஆண்டு பட்டத்துக்கு வந்த விஜய கண்ட கோபாலன் என்ற ஒரு தெலுங்குப் பல்லவ மன்னனைச் சரித்திரம் அறியும். எனவே, முன்பு இந்தச் சாஸனத்தைப் பரிசீலனை செய்திருந்த ஸ்ரீ டி. ஏ. கோபிநாதராவ், பேராசிரியர் ஸ்ரீ என். வி. வெங்கடேசுவரா, ஸ்ரீ எச். கிருஷ்ண சாஸ்திரி, திவான்பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை முதலிய அறிஞர்கள் இது அந்தத் தெலுங்குப் பல்லவ மன்னனின் காணிக்கை என்றே கருதினர். கி. பி. 1291-ம் ஆண்டு கரவருஷமாதலால் இந்தக் காணிக்கை விஜயகண்ட கோபாலனின் ஆட்சிக் காலத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டில் அளிக்கப்பட்டது என்று அவர்கள் அநுமானம் செய்தார்கள். என்றாலும், கி. பி. 1291-ம் ஆண்டின் ஆடி மாத சுக்லபட்ச தசமி ஒரு சனிக்கிழமையாக இருக்கிறது; செப்பேடு சொல்வதுபோல் திங்கள் அல்ல. அன்றைய நட்சத்திரம் விசாகம்; அநுராதா அல்ல. செப்பேடுகளில் தேதி விவரம் தப்புவது மிகவும் அரிது. எனவே இம்முரண்பாடுகளைக் கவனித்த இந்த அறிஞர்கள், நிர்மானமாகக் கால நிர்ணயம் செய்ய இயலவில்லை என்று தயங்கிப் பிறகு விஷயத்தையே விட்டுவிட்டார்கள். (இந்த இரண்டாவது ஏட்டைப் பற்றிய தகவல்கள் 1915-ம் வருஷத்திய 'எபிக்ராபிகா இண்டிகா'வின் பதின்மூன்றாவது புத்தகத்தில் பேராசிரியர் வெங்கடேசுவரா அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.)

முதல் ஏடு நெடுங்காலமாகத் தேடப்பட்டு வந்தது. ஒருவேளை 'இரண்டாம் ஏட்டில் காணக் கிடைக்காத தகவல்களை அது தெரிவிக்கக் கூடும்; இதுவரை நிச்சயப்படுத்திக் கூறமுடியாத கால விவரத்தை அது தெளிவாக்கக் கூடும்' என்று நான் நம்பினேன். என்னுடைய அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்; சில மாதங்களுக்கு முன்பு இந்த முதல் ஏடும் ஸ்ரீ காமகோடி பீடத்திலிருந்து கிடைத்து விட்டது. அதோடு, ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் அதனை எனக்கு அனுப்பி வைத்ததும், நான் எதிர்பார்த்தது போலவே அது சந்தேகங்களைத் தீர்த்து வைத்ததும், நம்முடைய நல்வினைப் பயனேயாகும். இது சின்னஞ்சிறிய செப்பேடுதான். ஆனாலும் இத்தனை ஆண்டுகளாக ஆழப் புதைந்து கிடந்த விவரத்தையல்லவா வெள்ளிடைமலையாக எடுத்துக் கூறிவிட்டது!

இவ்விரு செப்பேடுகளின் புகைப்படங்களையும், கிரந்த அட்சரங்களில் உள்ள இம்மூலத்தின் தேவநாகரிப் பெயர்ப்பையும் 28-29 பக்கங்களில் காணலாம்.

இந்தப் புராதன கிரந்த லிபியை உள்ளபடி புரிந்து கொள்வது மிகவும் சிரமசாத்தியமான காரியமாகும். சாஸன சாஸ்திர விதிகளை மனத்தில் கொண்டு நீண்ட காலம் நுணுகி ஆராய்ந்த பின்னரே அதனைப் புரிந்து கொண்டு தேவநாகரியில் பெயர்த்துத் தர இயன்றது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த லிபியிலும், அதனை எழுதும் முறையிலும் மத்தியம சரித்திரக் காலத்துக்கே உரிய விசேஷ அம்சங்கள் காணப்படுகின்றன. அநேகமாக எல்லாச் செப்புப் பட்டயங்களிலும் போல், இதிலும் குறில், நெடில் இவற்றைப் பாகுபடுத்துவதில் அதிக அக்கறை காட்டப்படவில்லை. எனவே உள்ளபடி இதனைக் கொடுத்தால் இதிலுள்ள சிக்கல்களை 'நிபுணர்கள்'தான் அவிழ்த்துக் கொள்ள முடியும். ஆகையால் நாகரப் பெயர்ப்பில் உசிதமானவரை மூலத்தைச் செப்பம் செய்து தந்திருக்கிறேன்.

முதல் செப்பேட்டில் ஆரம்பத்திலிருந்து ஏறக்குறைய எட்டாவது சுலோகம் வரை காணப்படுகிறது. இருபதாவது சுலோகத்துடன் இரு சாஸனங்களும் பூர்த்தியாகின்றன. அரசனின் பிரசஸ்தியைக் குறிக்கும் சுலோகங்களில் முதல் மூன்று சார்த்தூல விக்ரீடித விருத்தத்திலும், நான்காவது மந்தாக்ராந்தா விருத்தத்திலும், மீதமுள்ள பதினாறு சுலோகங்கள் அநுஷ்டுப் சந்தத்திலும் உள்ளன.

முதல் ஏட்டின் ஏழாவது சுலோகத்தில்தான் ஆராய்ச்சியைத் தூண்டிய முக்கியமான ஒரு விஷயம் கண்டிருந்தது. அதாவது இந்தக் காணிக்கையானது விஜயகண்ட கோபாலன் பட்டத்துக்கு வந்த பதினைந்தாம் ஆண்டு (பட்டாபிஷேகஞ்சு வர்த்தமான வர்ஷே ஸப்த தசே) அர்ப்பிக்கப்பட்டதாக அதில் கண்டிருக்கிறது. இதன் படி, மேலே சொன்ன விஜயகண்ட கோபாலன் என்ற ஆந்திரப் பல்லவனே தானமளித்தவன் என்றால் 1266-ம் ஆண்டு தானம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இது க்ஷய அல்லது பிரபவ ஆண்டாகவே இருக்கும்; சாஸனத்திலுள்ளது போல் கர அல்ல. எனவே இந்தத் தானமானது இது வரை ஆராய்ச்சியாளர்கள் எண்ணிய அரசனுடையதாக இருக்க முடியாது என்று திண்ணமாகத் தெரிந்து கொண்டேன். எனவே, புதிதாகவே கால நிர்ணயம் செய்யத் தொடங்கினேன். அதாவது, எந்தக் கர வருட ஆடி மாத சுக்லபக்ஷ தசமியன்று திங்கட்கிழமையும், அநுராத நக்ஷத்திரமும் கூடியிருந்தன என்பதைக் கணக்குப் போட்டுப் பார்ப்பதெனத் தீர்மானித்தேன்.

ஆனால் எங்கே ஆரம்பிப்பது, எங்கே முடிப்பது என்ற வரையறையில்லாமல் காலக் கடலில் எப்படி இறங்குவது? இந்த வரையறையையும் எனக்கு அமைத்துக் கொடுத்து விட்டது புதிதாகக் கிடைத்த இந்தச் செப்பேடு.

இந்த ஏட்டின் மூன்றாவது சுலோகத்தில் கண்டுள்ள சோள நரேச்வரோ விஜயதே ஸ்ரீ கண்ட கோபாலக: என்ற வாசகமும், ஐந்தாவது சுலோகத்தில் சோள பார்த்திவ என்று காணும் பதமும் இந்தத் தான சாஸனத்துக்குரிய மன்னன் சோழ வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதையும், இது வரை எண்ணியதுபோல் தெலுங்குப் பல்லவன் அல்லன் என்பதையும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியப்படுத்தின. இந்தச் சோழ மன்னன் ஸ்ரீ கரிராஜ சைலம் என்ற ஸ்ரீ ஹஸ்திகிரி க்ஷேத்திரமாகிய காஞ்சிபுரத்திலுள்ள விஷ்ணு ஆலயத்துக்கு—இதுவே இன்றைய அருளாளப் பெருமான் கோயில் என்று நிச்சயமாகியுள்ளது—பிராகாரம், மண்டபம், கோபுரம் எல்லாம் கட்டி, புதுப் புது விழாக்களையும் எடுப்பித்ததாக எடுத்த எடுப்பிலேயே தாமிர சாஸனம் கூறுகிறது. இதைக் கொண்டு இவனது ஆளை எல்லையை ஊகிக்க முடிந்தது. இதிலிருந்து அவன் விஜயாலய சோழ வம்சத்துக்கு உட்பட்டு, விக்கிரமசிம்மபுரம் என்ற நெல்லூரிலிருந்தும், தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சியம்பதியிலிருந்தும் சாமந்த மன்னர்களாக ஆட்சி புரிந்த தெலுங்கு சோழ வம்சத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று எண்ணினேன். என் எண்ணத்துக்கு உரமிட்டது செப்பேடு சொன்ன இன்னொரு விஷயம், அதாவது இந்த அரசனின் இயற்பெயர் ஸ்ரீகண்ட கோபாலன் என்பதுதான்; இவனது திக்விஜயங்களாலேயே இவன் விஜயகண்ட கோபாலன் ஆனான்—ராகவன் விஜயராகவனானது போல, என்ற சமாசாரம். [யன்னாம்னா அவநீம் விஜித்ய விஜய ஸ்ரீகண்ட கோபால இத்யாக்யாவான் (சுலோகம் 2) விஜயதே ஸ்ரீகண்ட கோபாலக: (சுலோகம் 3)] இந்தப் பெயர் அறிஞர்கள் நிர்ணயித்தது போல் அவன் தெலுங்குப் பல்லவனான விஜய கண்ட கோபாலனல்லன், ஆனால் தெலுங்குச் சோழ வம்சத்தைச் சேர்ந்த வெறும் ஸ்ரீகண்ட கோபாலனாக இருக்க வேண்டுமென்பதைக் காட்டிற்று. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மனுமசித்தியின் காலத்திலிருந்துதான் இந்த ஆந்திர சோழப் பரம்பரையைப் பற்றித் தெரிய வருகிறது. எனவே ஒரு மதிப்பாக அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து—அதாவது கி. பி. பத்தாவது நூற்றாண்டிலிருந்து—பதினைந்தாம் நூற்றாண்டு வரை வருகிற கர வருடங்கள் எத்தனையோ அத்தனையிலும் உள்ள ஆடி மாதங்களில் சுக்லபக்ஷ தசமி திதியில் என்ன கிழமை, என்ன நக்ஷத்திரம் என்று அறுபது அறுபது ஆண்டுகளாகக் கணித்துக் கீழே தந்திருக்கிறேன்.


கர வருடத்துக்குச் சமமான ஆங்கில ஆண்டு	இவ்வாண்டின் ஆடிமாத சுக்லபக்ஷ தசமிக்குச் சரியான ஆங்கில மாதமும், தேதியும்	அன்றைய கிழமை	அன்றைய நக்ஷத்திரம்
கி.பி. 931	ஜூன் 27	திங்கள்	விசாகம்
,, 991	ஜூலை 24	வெள்ளி	ஜேஷ்டம்
,, 1051	,, 21	ஞாயிறு	,,
,, 1111	,, 17	திங்கள்	அநுராதா
,, 1171	,, 14	புதன்	,,
,, 1231	,, 10	வியாழன்	,,
,, 1291	,, 7	சனி	விசாகம்
,, 1351	,, 4	திங்கள்	,,
,, 1411	,, 1	புதன்	,,
,, 1471	,, 26	வெள்ளி	அநுராதா

முடித்த முடிபாகத் தானம் தரப்பட்ட தேதியைக் கண்டு கொண்டேன். கி. பி. 1111-ம் ஆண்டு ஜூலை 17-ந் தேதிக்குச் சரியான கர வருட ஆடி, சுக்லபக்ஷ தசமி தினம், செப்பேட்டில் காண்பது போல் ஓர் அநுராத நக்ஷத்திரம் கூடிய திங்கட்கிழமையாகவே அமைந்திருக்கிறது அல்லவா? அன்றுதான் ஸ்ரீகண்ட கோபாலன் காஞ்சீபுரம் மடாதிபதிகளாயிருந்த ஒரு சங்கராசாரிய சுவாமிகளுக்குக் காணிக்கை செலுத்தி, அதைச் செப்பேட்டிலும் பொறித்து, ஸ்ரீ மடத்தில் ஒப்புவித்திருக்கிறான். இதைப் பற்றி எள்ளளவும் ஐயமில்லை. தானமளித்த அரசனைப் பற்றிய விவரங்களை இனி ஆதாரபூர்வமாக ஆராயலாம்.

செப்பேடு கூறும் கரிராஜ சைல விஷ்ணு ஆலயமென்பது காஞ்சீபுரம் அருளாளப் பெருமான் கோயில் என்று கூறுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. எனவே இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களைப் பற்றி ஆராயலானேன். 1902-ம் ஆண்டு 'எபிகிராபிகா இண்டிகா'வின் ஏழாவது புத்தகத்தில் இக்கோயிலிலுள்ள ஒரு சிலாசாஸனத்தை டாக்டர் ஹுல்ட்ஸ் என்ற ஹாலந்து அறிஞர் பிரகடித்திருப்பது இதற்குப் பேருதவி புரிந்தது. இந்தச் சாஸனத்தில், சக வருஷம் 1127-ல் தம்முசித்தி என்ற தெலுங்கு சோழ அரசன் நெல்லூரில் பட்டாபிஷேகம் செய்து கொண்ட பின், (நெல்லூர் நகரே க்ருதாபிஷேக:) ஸ்ரீ ஹஸ்தி சைலஸ்வாமிக்கு 'முட்டியம்பாக்கா' என்ற கிராமத்தை அர்ப்பணித்திருப்பதாகக் கூறியிருக்கிறது. வடமொழிப் பாக்களால் ஆன கல்வெட்டு இது. இதில் தம்முசித்தியின் தகப்பனார் ஸ்ரீகண்டகோபாலர் என்றும், தாயார் ஸ்ரீதேவி என்றும், தமையன் மனுமசித்தி என்றும் கூறப்பட்டுள்ளது:

ஸ்ரீ கண்டகோபால ஸ்ரீ தேவி வீராத்ம: மனுமசித்த மஹாராஜ அநுஜன்மா, தம்முசித்த மஹீபால:

தம்முசித்திக்கும் அவன் தந்தைக்கும் இடையே அவனது சகோதரனான மனுமசித்தி, இரண்டாவது பெட்டா ஆகியோர் அரசு புரிந்ததாக ஏனைய சான்றுகளிலிருந்து தெரிகிறது. தம்முசித்தியின் கல்வெட்டு சக வருஷம் 1127-ல், அதாவது கி. பி. 1205-ல் பொறிக்கப்பட்டது. விஜயகண்ட கோபாலனின் சாஸன காலம் கி. பி. 1111-ஆக இருக்கலாமென முன்பு முடிவு செய்தோம். இந்த விஜயகண்டகோபாலனே தம்முசித்தியின் தந்தையான ஸ்ரீ கண்டகோபாலனென்றால் (இவனது இயற்பெயர் இதுதான் என்பதை முன்பு கண்டோமே) இருவர் ஆட்சிக்குமிடையே தொண்ணூற்று நான்கு ஆண்டுகள் இடைவெளி இருப்பது



ஸ்ரீகண்ட கோபாலனது க்ரந்த செப்பேட்டின் நாகரப் பெயர்ப்பு
முதல் ஏடு: இரண்டாம் பக்கம்

स्वस्ति श्रीकरिराजशैल शिखरालंकार चिन्तामणेः वि
ष्णोरुन्नत गोपुर प्रवितत प्राकार सन्मण्टपैः । नाना न
व्य महोत्सवादिकरणैः श्री गण्डगोपाल भूसुत्रामा क
ळयन्मुदं विजयते प्रत्यर्थिविद्रावणः ॥ १ ॥ यत्कीर्तिस्तुहिनां
शु शेखरमणेः आवास भूमीधरो यस्योग्रतरः प्रताप
वलयो मेरुस्सुरावासभूः । यस्सर्वामवनी विजित्य विजय
श्रीगण्डगोपाल इत्याख्यावान् भुवने धनञ्जय इव प्र
ख्यात शौर्यो नृपः ॥ २ ॥ यः कन्या पृथिवीधनाचलमहा
दानांबुधारा परीवाहैः पूरितमातनोति जल
धि नित्यं विशुद्धात्मनां । यः कन्यामणिमेव देव कृप
या पुत्रं कुलांकूरकं लेभे चोळनरेश्वरो
विजयते श्रीगण्डगोपालकः ॥ ३ ॥ यस्योद्यप्रभजा वि
लसितः फल्गुनस्येव तादृक् तेजोराशेः पवनत
नयः पावनी यस्य कीर्तिः । धर्मेणास्यास्सुचिरभवनेः
पालनादस्य लोके विख्यातासीद्विजयपदवन्
गण्डगोपालसंज्ञा ॥ ४ ॥ स्वस्ति श्रीमान्स्त्रिभुवन + क
+ चक्रवर्ती महाबलः*
ल्यकश्चोळपार्थिव आर्थिनामाश्रितानाञ्च विदुषां कल्प
पादपः ॥ ५ ॥ अशेषशास्त्रजलधि पारगैः परिवा
रितः शास्त्रेषु कुशलश्शूरः क्षमामूर्तः परन्तपः ॥ ६ ॥
सोयं श्रीगण्डगोपाल चोळ क्ष्मापति
रात्मनः पट्टाभिषेचनादूर्ध्वं वर्षे च सति षो
डशे ॥ ७ ॥ तपोधनाय मुनये शिवध्यान र
तात्मने । स्वात्मारामाय विदुषे पोषि

தெரியும். நான்கு மன்னர்களின் ஆட்சிக் காலம் தொண்ணூற்று நான்கு ஆண்டுகளில் பரவியிருப்பதென்பது நம் சரித்திரத்தில் சர்வ சகஜமே. ஆகவே விஜய கண்டகோபாலனைக் குறித்த நம் அநுமானம் ஊர்ஜிதமாகிறது. அவனது காலம் முதலாவது குலோத்துங்க சோழனின் காலவரைக்குட்படும்.

காணிக்கை அளிக்கப்பட்ட ஆசாரிய புருஷர் யார் என்று தெரிந்துகொள்ளலாமா? ஹஸ்தி சைல நாதராலயத்துக்கு மேற்கேயுள்ள மடத்தில் வசிக்கும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு—[ஸ்ரீ ஹஸ்தி சைலநாதஸ்ய நிலயாத் பச்சிமே மடே...ஸ்ரீ சங்கரார்ய ஸூரயே] காணிக்கை செலுத்துவதாகக் கூறும் சாஸனம், அந்த ஆசாரியர்களை ஆத்மாநந்தத்தில் திளைக்கும் ஞானி, 'பொப்பிள்ளி' என்று பிரசித்தி பெற்றவர் (ஸ்வாத்மா ராமாய விதுஷே, பொப்பிள்ளி ப்ரத்நாம்நே) என்று புகழ் பாடுகிறது. பொப்பிள்ளி என்பது கேரளம் அல்லது ஆந்திர தேசத்தின் ஓர் இல்லப் பெயர். (இன்றைக்கும் மலையாளத்தில் ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதர்களைக் குறிப்பிடும் போது கைப்பிள்ளி என்னும் அவரது இல்லப் பெயரையும் சேர்த்துச் சொல்லுகிறார்கள்.) காமகோடி பீடத்தின் குரு பரம்பரையைப் பார்த்தால் கி. பி. 1111-ம் ஆண்டு அதில் ஆரோஹணித்திருந்தவர் இப்பீடத்தின் நாற்பத்தி ஏழாவது அதிபதிகளாகிய மூன்றாவது சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்று தெரிகிறது. கி. பி. 1098 லிருந்து 1160 வரை இவரது அருளாட்சி நடைபெற்றது. அதோடு, இவரது பூர்வாசிரமப் பெயர் ஸ்ரீகண்டர் என்றும் இவர் ஆந்திர தேசவாசி என்றும் குரு பரம்பரை பகர்கிறது. ஆகவே பொப்பிள்ளி என்பது ஆந்திர நாட்டில் 'இண்டி பேரு' எனப்படும் இவரது இல்லப் பெயரே எனக் கொள்ளலாம். இத்துறவி மன்னர் ஸ்ரீகண்டருக்குத்தான் முடிமன்னன் ஸ்ரீகண்டன் அம்பிகாபுரத்தை அர்ப்பணித்திருக்கிறான்.

அர்ப்பணப் பொருள் அம்பிகாபுரம் என்ற கிராமமெனக் கண்டோம். இது வைர கோஷ்டியத்தைச் சேர்ந்தது என்று சாஸனம் சொல்லுகிறது. இதுவே தமிழில் வயிர் கோட்டம் எனப்படுவது. இது தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 'எயிர்' என்ற கிராமத்திலிருந்து வந்த பெயராகும். க்ருத்ரபுரத்துக்குக் கிழக்கில் அம்பிகாபுரம் இருப்பதாகக் காண்கிறது. இந்த க்ருத்ரபுரமே ஜடாயு தீர்த்தம் எனப்படும் திருப்புட்குழி. காஞ்சிபுரத்துக்கு மேற்கில் இந்த அம்பிகாபுரம் அமைந்திருப்பதாகவும், இதற்கு முறையே வடக்கிலும் தெற்கிலும் சிறு நன்னியும், கைதடிப்பூரும் உள்ளதாகவும் செப்பேடு சொல்கிறது. சிறு நன்னியே இன்றைய சிறுணை என்றும் கைதடுப்பூரே இன்றுள்ள கதிர்பூர் என்றும் உறுதி கொள்ளலாம். இதில் மிகவும் முக்கியமான விஷயம், இந்த இடங்களால் சூழப்பட்ட அன்றைய அம்பிகா கிராமம் இன்றும் அம்பி என்றே அழைக்கப்படுவதுதான்.

இந்தச் சாஸனத்தில் ஸ்ரீ சங்கரமடம் ஹஸ்தி சைலம், அதாவது திரு அத்தியூர் என்ற விஷ்ணு காஞ்சியிலுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. 'மடாம்ஙயத்'திலும் மடத்துக்குப் பக்கத்திலுள்ள ஸ்தலம் சத்தியவிரத க்ஷேத்திரம் என்று காணப்படுகிறது. இது திரு அத்தியூருக்கே வேறு பெயராகும். இன்றும் விஷ்ணு காஞ்சி ஆலயத்தருகே ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சொந்தமான ஒரு மண்டபம் இருப்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே முதலில் விஷ்ணு காஞ்சியிலிருந்த ஸ்ரீமடம் பின்பு சிவகாஞ்சிக்கு மாற்றப்பட்டது என ஊகிக்கலாம். கர்நாடகப் போர்களின் போது அதுவே கும்பகோணத்துக்கு இடம் பெயர்ந்து கும்பகோணம் மடம் என்று அழைக்கப்படலாயிற்று. ஆக, கி. பி. 1111-லேயே நமது பக்திக்குகந்த

---

* இது வரிகளுக்கிடையே துண்டாகக் காணப்படும் இவ்விரு பதங்கள் முந்தைய வரியில் + குறியிட்டுக் காட்டியுள்ள இடத்தில் சேர வேண்டும்.

பரமபாவனமாகிய ஸ்ரீ காமகோடிபீடம் அரசர்களா லும் ஆராதிக்கப்பட்டு வந்தது என்பது சந்தேகத்துக் கிடமின்றித் தெரிய வருகிறது.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்களின் ஜீவிய காலம் கி. பி. 788–820 என்ற சரித்திர நிபுணர்கள் கூற்றை ஏற்றுக் கொண்டால், அவரது காலத்துக்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இந்தக் காணிக்கை செலுத் தப்பட்டது என்று ஏற்படுகிறது. ஸ்ரீ காமகோடி பீடத் துக்கு அப்போதே இத்தகைய செல்வாக்கு இருந்த தென்றால், அதற்குக் காரணம் அதனை ஸ்ரீ பகவத்பாதர் களே அலங்கரித்ததுதான் என்று திடமாகச் சொல்ல லாம். ஆதி ஆசாரியரவர்கள் கி. மு. முதல் அல்லது ஆறும் நூற்றாண்டில் இம்மண்ணுலகில் வாழ்ந்து அதனை வாழ வைத்தார் என்று கொண்டால், பொப்பிள்ளி என்ற மூன்றாவது சந்திரசேகரேந்திர ஸ்வாமிகள் முதல் பீடாதிபதிகளுக்கும், இன்றைய பீடாதிபதிகளுக்கும் மத்தியில் வாழ்ந்தவரென ஏற்படுகிறது. அதாவது தலைமுறை தலைமுறையாக, வாழையடி வாழையாக அடிபணிந்தவர்களுக்கு அருள் புரிந்து வந்திருக்கிறது நமது காமகோடி பீடம்.

ஃ ஃ ஃ


இனி, ஸ்ரீ காமகோடி மடத்துக்குக் காணிக்கை செலுத்தி உய்யும் பேறு பெற்ற மற்றவர்களைப் பார்ப் போம். பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டிய தங் களது இச்செயலைச் செப்பேடுகளில் எழுதி வைத்துச் சென்ற அவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்வோம்.

ஃ ஃ ஃ

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராய ருடைய தமையனான **ஸ்ரீ வீர நரசிம்ம தேவ மகாராஜா** சக வருடம் 1429-ல் (கி. பி. 1507), தமது காணிக் கையை ஸ்ரீ காமகோடி பீடாதீசுவரருக்கு அளித்திருக் கிறான். மாசிமகத் திருநாளன்று, பாவனமான துங்கபத் திரைத் தடத்தில், விருபாட்ச ஸ்வாமியின் திருச் சந் நிதியில் அர்ப்பணம் செய்து புண்ணியத்தைப் பெரும் புண்ணியமாக்கிக் கொண்டிருக்கிறான் இவன். **ஜய** சோழ மண்டலத்தின் பிரிவான, செங்காட்டுக் கோட் டத்துக்குட்பட்ட சங்கிலிப்பாட்டுச் சீமையிலுள்ள **எலிச்சூர், வேண்பாக்கம்** என்ற இரண்டு கிராமங்களைக் காமகோடிபீடம் ஆசாரிய ஸ்வாமிகளுக்கு அளித் திருக்கிறான் இவன். (சோழர் காலத்திலிருந்த மண்ட லம், கோட்டம், சீமை என்னும் பகுதிப் பிரிவுகளை மாறுதலடையாமல் விஜயநகர மன்னர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டன.) இதில் விசேஷம், இவ்விரு கிராமங் களும் இன்றும் அதே பெயரில் இருப்பதுதான். எலிச்சூர் கிராமம் ஸ்ரீ பெரும்பூதூர் தாலுகாவிலும், வெண்பாக் கம் காஞ்சீபுரம் தாலுகாவிலும் உள்ளன. கி. பி 1507ல் பீடாதிபதிகளாக இருந்தவர் ஐம்பத்து நான்கா வது பீடாதிபதிகளான **ஸ்ரீ வியாஸாசல மகாதேவ ஸ்வாமிகள்**. இவரது பெயரும் இவரது குரு ஸ்ரீ பூர்ணாநந்த சதாசிவ ஸ்வாமிகளின் பெயரும் குரு பரம்பரையில் கண்டுள்ள படியே தாமிர சாஸனத்திலும் இருக்கின்றன.

வீரநரசிம்ம தேவன் அதே ஆசாரியர்களுக்கு வேறொரு தானமும் வழங்கியிருக்கிறான். ஜயசோழ மண்டலத்தின் பிறிதொரு பகுதியான படவீடு ராஜ் யத்துக்கு உட்பட்ட வலகூறு சீமையிலுள்ள **குடியாந்த மண்டலம்** என்ற கிராமத்தை அவன் அர்ப்பணம் செய்த தாக வேறொரு செப்பேடு இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் **குண்டியாந்த மண்டலம்** என்ற பெய ரில் இன்றைக்கும் உள்ளது அந்தக் கிராமம். இன்றும் அங்கு ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன.

தமையன் வழி சென்றான் தம்பி. அந்தத் தம்பி யின் வழியைத்தான் எந்த மன்னனும் பின்பற்ற வேண்



இரண்டாவது ஏடு: முதல் பக்கம்

ह्नि प्रथितात्मने ॥ ८ ॥ श्रीहस्तिशैलनाथस्य निलयात्
पश्चिमे मठे । निगमान्तरहस्यार्थं शिष्येभ्यस्सुविवृण्व
ते ॥ ९ ॥ नित्यान्नदानविधिसन्तर्पितात्मद्विजन्मने श्रीशंक
रार्य गुरवे वत्सरे खर संज्ञिते ॥ १० ॥ प्राप्ते कर्क
टकं पुण्यराशिं कमलबान्धवे मित्रदैवत न
क्षत्र युक्तायां शुक्लपक्षके ॥ ११ ॥ इन्दोर्वारेण यु
क्तायां दशम्यां सुमुहूर्तके । पृथग्विध रसोपे
तैरन्नैरमृतसंमितैः ॥ १२ ॥ नित्यमष्टशतानाञ्च
तोषणाय द्विजन्मनां । प्राञ्चं गृध्रपुरात् काञ्चीपुरात्
प्रत्यञ्चमुत्तरं ॥ १३ ॥ कैरड्डुप्पूरुतो ग्रामात् शिरुनन्ने
श्च दक्षिणं । वेगवत्युत्तरतटी सीमारामैकमण्डन
म् ॥ १४ ॥ नालिकेराम्रपनसतालहिन्ताल शोभितम् । ना
ना भूरुहवाटिनां पुष्पसौरभवासितं ॥ १५ ॥ वैरकोटिय
मजस्नेन्दुमौलिकारुण्यरक्षितं । अंबिकापुरनामानं
ग्रामचिन्तामणीन् ददौ ॥१६॥ भूमेरस्याः प्रदानेन यावचन्द्रार्के
योर्गतिः । श्रीहस्तिशैलनिलयः प्रीयतां परमेश्वरः ॥१७॥ इत्य
मुत्तश्रया भक्त्या निधाय मनसीश्वरे । देवश्रीगण्डगो
पाल चोलशंकरयोगिने ॥ १८ ॥ भूदानशासनं स्वस्य हस्त
संलिखिताक्षरम् । अदादुन्नतधर्मस्य लाभाय शुभचेतसा ॥१९॥
दानपालनयोर्मध्ये दानात् श्रेयोनुपा
लनम् । दानात् स्वर्गमवाप्नोति पालनादच्युतं प
दम् ॥ २० ॥

ஸ்ரீ விஜயகண்ட கோபால தேவன்

டும் என இன்று நாம் கூறுகிறோம். ஆம், **ஸ்ரீ கிருஷ்ண தேவராயரை** அசோகன், ஹர்ஷன், ராஜராஜசோழன் முதலிய ஆதிய மன்னர்களுடன் வைத்தல்லவா போற்றுகிறோம்? அந்தக் கிருஷ்ண தேவராயரும் போற்றி வழிபட்டது ஸ்ரீ காமகோடி பீடம். அதனைப் பெருமையோடு பகரும் பட்டயங்களையும்தான் அவர் விட்டுச் சென்றிருக்கிறாரே!

சகவருடம் 1444 (கி. பி. 1522)-ல்—அது ஒரு சுபானு ஆண்டு—மார்கழித் திங்கள் சுக்லபட்ச த்வாதசி திதியன்று கிருஷ்ணவேணி (கிருஷ்ணா) நதிக் கரையில் அவரது காணிக்கை அளிக்கப்பட்டது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டபதி, ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சிஷ்யர் **ஸ்ரீ சந்திரசூட சரஸ்வதி சுவாமிகளுக்கு** அதை அளித்ததாகச் செப்பேட்டில் பொறித்திருக்கிறது. சந்திரகிரி ராஜ்யத்தில், செங்காட்டுக் கோட்டத்திலுள்ள **பொட்டூர், கட்டுப்பட்டி** என்ற கிராமங்களே காணிக்கைப் பொருள்கள். பொட்டூருக்குக் கிருஷ்ணராயபுரம் என்று பெயரிட்டு ஆத்மார்ப்பணம் செய்வது போன்ற சுவாநுபூதியோடு கிருஷ்ண தேவராயர் ஆசாரியர்களுக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார். ஆனால் இன்றும் அந்தக் கிராமம் பொட்டலூர் என்ற பழைய பெயரிலேயே காஞ்சிபுரம் தாலுகாவில் இருக்கிறது. கட்டுப் பட்டியானது ஸ்ரீ பெரும்பூதூர் தாலுகாவில் காட்டேரிப்பட்டி என்ற பெயருடன் உள்ளது. ஸ்ரீ காமகோடிபீட குரு பரம்பரையிலிருந்து, செப்பேடு கூறும் ஆசாரியர் ஐம்பத்தைந்தாவது பீடாதிபதிகளான இரண்டாவது சந்திரசூடர் என்று ஊர்ஜிதமாகிறது. கிருஷ்ணதேவராயரின் தமையன் வெகுமானம் செய்த ஸ்ரீ மகாதேவேந்திர இவரது குரு ஆவார்.

தமையனைப் போலவே இவரும் இரண்டாம் முறையாக ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சம்பாவனை செய்திருக்கிறார். சக 1450-ம் ஆண்டு (கி. பி. 1528) விரோதி வருடம், வைகாசி விசாகப் பூர்ணிமையன்று ஸ்ரீ சந்திரசூட சரஸ்வதியை அடுத்துப் பீடாரோஹணம் செய்த **ஸ்ரீ சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு**, அதே துங்கபத்திரை தடத்திலுள்ள விருபாட்சர் சந்நிதியில் காணிக்கை செலுத்தியிருக்கிறார், பேரரசர் கிருஷ்ண தேவராயர். க்ஷீரா நதிக் கரையிலுள்ள, சங்கிலிப்பட்டுச் சீமையைச் சேர்ந்த **உதயம்பாக்கம்** என்ற கிராமத்தைக் கொடுத்ததாகச் செப்பேட்டில் கண்டிருக்கிறது. க்ஷீரா நதிதான் பாலாறு என்பது வெளிப்படை. செங்கல்பட்டுத் தாலுகாவில் உதயம்பாக்கம் கிராமம் அந்தப் பழைய பெயர் மறையாமலே இன்றும் உள்ளது. சர்வக்ஞ சதாசிவ போதர் என்ற புகழ் வாய்ந்த மகான் ஸ்ரீ சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள். இவர் இப்பீடத்தின் ஐம்பத்தாறாவது அதிபதி. கி. பி. 1524லிருந்து 1539 வரை ஞான ஆட்சி செலுத்தியவர்.

கிருஷ்ண தேவராயர் சாம்ராஜ்ய சாமந்த மன்னரல்லர். சக்கரவர்த்தி என்ற விருது பெற்றவர். இவர் திருப்பணிகள் செய்திருப்பது பிரசித்தி பெற்ற புராணப்பதிகளான திருப்பதி, ஸ்ரீ சைலம், சிம்மாசலம் போன்ற தலங்கள்தாம். இவர் அக்கறையுடன் காமகோடிபீடத்தை அலங்கரித்த இரண்டு ஆசாரிய புருஷர்களுக்கும் தாமே காணிக்கை செலுத்தினார் என்பதிலிருந்து நமது ஸ்ரீ மடத்துக்கு எவ்வளவு பெருமையான இடம் அளித்து வழிபட்டார் என்பதும், ஆசாரிய சுவாமிகளின் ஆசியைப் பெற வேண்டுமென்பதில் எவ்வளவு நாட்டம் கொண்டிருந்தார் என்பதும் தெரிகின்றன. அந்நாள் பொதுமக்களும் ஸ்ரீ காமகோடி பீடத்தை மகாக்ஷேத்திரங்களுக்கு சமமாகப் பாவித்தனர் என்பதும் இதிலிருந்து வெளியாகிறது.

விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆண்ட வம்சங்களில் கடைசியான ஆரவீடு வம்சத்தைச் சேர்ந்த ஒரு செப்பேடு ஸ்ரீ காமகோடிபீட நூல் நிலயத்திலுள்ளது. இந்த சாஸனத்திலும் முதல் ஏடு மாத்திரம்தான் இருக்கிறது. இதில் இந்தக் குடியைச் சேர்ந்த அரசர்களின் வம்சாவளி மட்டுமே இருக்கிறது. மற்ற ஏடுகள் இல்லாததால் எந்தக் காணிக்கையை ஒட்டி இந்த சாஸனம் அளிக்கப்பட்டது என்பதை அறிய இயலவில்லை.

கோல்கொண்டா நவாபின் முக்கியமான இரு மந்திரிகள் ஸ்ரீ காமகோடி பீடத்துக்குக் காணிக்கை அளித்துள்ளனர் என்ற விஷயம் வேறொரு செப்பேட்டின் வாயிலாக அறியப்படுகிறது. **அக்கன்னா, மாடன்னா** என்ற சகோதரர்களே அந்த மந்திரிகள். இவர்கள் இராமபிரானின் பேரருளுக்குப் பாத்திரமான பக்த ராமதாஸரை இவ்வுலகுக்கு அளித்த புண்ணியவதியின் சகோதரர்களே.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சாரதா பீடாதிபரும், ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதியின் சிஷ்யருமான **ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்** ஹொய்சால கர்நாடகத்தைச் சேர்ந்த ராமசாஸ்திரி என்ற வேதியருக்கு சம்பாவனை செய்த விவரத்தைக் கூறுகிறது, ஒரு செப்பேடு. அதில்தான் இவ்விரு மந்திரிமாரும் சக வருஷம் 1608 (கி. பி. 1686)-ம் ஆண்டு, வைகாசி மாதப் பௌர்ணமி தினத்தில் நிகழ்ந்த சந்திர கிரகண புண்ணிய காலத்தில் **பேலுபாக** என்ற கிராமத்தைக் காமகோடி பீடத்துக்கு அளித்த விவரம் தரப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பூமியில் சிறிதளவும், மடத்திலிருந்து வருடத்துக்கு இரண்டு வராகனும், வீடு கட்டிக் கொள்ள மனையும் மேலே கண்ட ராம சாஸ்திரிகளுக்குக் காமகோடி பீடாதிபரால் அளிக்கப்பட்டதாகச் செப்பேடு சொல்கிறது.


புதுக் கோட்டை மன்னர்களும் ஸ்ரீ காமகோடி பீடத்துக்குப் பொருள் உருவில் மரியாதை செலுத்தியுள்ளனர். அதன் அரசர்களில் ஒருவரான **விஜய ரகுநாதத் தொண்டைமான்** கொள்ளிடத்துக்கு வடகரையிலுள்ள **அம்பில்** கிராமத்தில் காணிக்கையளிக்க முன்வந்ததாக ஒரு சாஸனம் இருக்கிறது. சக 1613 (கி. பி. 1691)-ல் காணிக்கை சமர்ப்பணமாகியிருக்கிறது.

ஸ்ரீ காமகோடி பீடத்தின் பிரதிநிதியாக வெங்கட கிருஷ்ணய்யன் என்பவர் கீழ்க்கண்ட காணிக்கைகளைச் செப்பேட்டில் எழுதி வாங்கியிருக்கிறார்:

(1) தொண்டைமானின் சேவகத்திலுள்ள ஒவ்வொருவரும் ஸ்ரீ மடத்துக்கு மாதம் ஒரு குறுணி நெல் வீதம் அளிக்க வேண்டும். (2) அதோடு அவர்கள் பத்து பத்து பேர்களாகச் சேர்ந்து ஒருவருடைய சம்பளத்தை 'உம்பலமாக'ச் செலுத்த வேண்டும். (3) மேலும் ஆண்டொன்றுக்கு எட்டு மரக்கால் நெல் அளிக்க வேண்டும். (4) பள்ளியைச் சொத்துக் கட்டளை என்ற பெயரில் அவர்கள் நாள்தோறும் மூன்று படி அரிசி வழங்க வேண்டும். (5) வருடத்துக்கு ஒரு முறை ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டு உடைகள் கொடுக்க வேண்டும்.

மதுரை மன்னர்கள் மட்டும் இந்த மடத்துக்குக் கைங்கரியம் செய்யத் தவறி விடுவார்களா என்ன? பதினெட்டாம் நூற்றாண்டில் மதுரையை ஆண்டு வந்த **ஸ்ரீ விஜயரங்க சொக்கநாதன்** அளித்த ஒரு காணிக்கையைக் கூறும் செப்பேடு மடத்தில் உள்ளது. சக வருடம் 1630 (கி. பி. 1708), விக்ருதி ஆண்டு, கார்த்திகை மாதம் சுக்லபட்சப் பிரதமையில்—அது ரோஹிணி நட்சத்திரம் கூடிய ஒரு திங்கட்கிழமை—அந்த அரசன், கஜாரண்ய க்ஷேத்திரம் பொன்வாசிகொண்டான் வீதியிலுள்ள ஸ்ரீ காமகோடிபீடத்துக்குச் சொந்தமான மடத்தில் தினந்தோறும் வேதியர்களுக்குப் போஜனம் செய்விப்பதற்காக இந்தக் காணிக்கையைக் கொடுத்திருக்கிறான். லோக குரு ஸ்ரீமத் சங்கராசாரியரின் ஆக்ஞையின் மீது இதனை அளித்ததாகச் சாஸனத்தில் இருக்கிறது. தொட்டியம் சீமையிலுள்ள **மகேந்திரமங்கலம், கிருஷ்ணபுரம், காரக்காடு, கோண்டையம்பேட்டை,** திருச்செந்துறை சீமையிலுள்ள **மங்கம்மாபுரம்,** இன்னம்

தீபாவளி வாழ்த்துக்கள்



எமது ஆதரவாளர்கள் அன்பர்கள் அனைவருக்கும்
மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

காஸ் ஜனதா


காஸ் ஜனதா கிரோஸின் அடுப்புகள் வீடுகளுக்கு இன்றியமையாதவை என்று உலகப் பிரசித்திபெற்று விளங்குகின்றன; இயக்குவது சுலபம்; உறுதியான அமைப்பு; சிறப்பான சேவை; இந்த கிரோஸின் திரிவகை ஸ்டவ்கள் உங்கள் நேரத்தையும் எரிபொருள் செலவையும் மிச்சமாக்குகின்றன.



தீப்டி பிராண்ட் எனுமல் பாத்திரங்கள்



எமது எனுமல் தயாரிப்பு துவங்கி சொற்பகாலமே ஆகியும் மக்களுக்கு பிடித்தமானதாக விளங்குகின்றன.



தீப்டி லாந்தர்கள்



தீப்டி லாந்தர்கள் உங்களுக்கு புதிதல்ல இதன் அலாதியான கியாதி, இவற்றின் தரமேன்மைக்கும், தொந்தரவற்ற சேவைக்கும், கிரோஸின் செலவு குறைவுக்கும் அத்தாட்சியாக இருக்கிறது.

தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

77, பௌபஜார் தெரு. கல்கத்தா-12.

சீமையைச் சேர்ந்த **அரியூர்**, கோனட்டுக்கு உட்பட்ட **அரியமங்கலம்** முதலிய இடங்களிலிருந்து பூதானம் செய்திருக்கிறன் விஜயரங்க சொக்கநாதன். கஜாரண்யம் என்பது திருவானைக்கா என்ற திருப்பதியாகும். திருஞான சம்பந்த சுவாமிகளுடன் தொடர்புடையது பொன்வாசிக் கொண்டான் தெருவு. இச் செப்பேடு வழங்கப்பட்ட காலத்தில் பீடாதிபதிகளாக இருந்தவர் அறுபத்தோராவது ஜகத்குருவான **மூன்றும் மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** (1704–46) ஆவார். இதே செப்பேட்டில் இன்னும் சில நான விவரங்களும் தரப்பட்டிருக்கின்றன.

காவேரி கொள்ளிடத்தில் பரிசல் ஓட்டுவதற்காக அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து, அடியாரை அஞ்ஞானக் கடலிலிருந்து கடத்துவிக்கும் இப்பீடத்துக்குத் தினந்தோறும் ஒரு வராகன் கொடுக்கவும் மதுரை மன்னன் வழி செய்திருக்கிறன். காவேரியின் இரு கரையிலுமுள்ள வயல்களிலிருந்து ஒரு 'சேய்' வயலுக்கு ஒரு 'தூம்'நெல் வீதம் மடத்துக்குக்கிடைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறன். மேலும் ஜம்புகேசுவர ஸ்வாமியையே காமகோடி பீடத்துக்குக் காணிக்கை அளிக்கச் செய்திருக்கிறன் அவன். ஜம்புகேசுவரர் ஆலயத்திலிருந்து ஜகத்குரு மடத்துக்குப் பிரதி தினமும் நான்கு படி அரிசி, இரண்டு வேளைச் சாப்பாடு, இரண்டு தோசை, இரண்டு அதிரசம், ஒரு கறியன் ஆகியவையும் (என்ன கச்சிதமான கணக்கு பாருங்கள்!) விளக்குக்கு எண்ணெய்க்காக (தீபம் ஸமரு) நாள்தோறும் முக்கால் படி எண்ணெயும் கொடுக்க வகை செய்திருக்கிறன் விஜயரங்க சொக்கநாதன்.

மகாமதி என்று போற்றப்படும் பேரறிவாளரான ஆசாரியரின் இப்பீடத்துக்கு மகம்மதிய மன்னன் ஒருவனும் காணிக்கை அளித்திருக்கிறன் என்பது குறிப்பிட வேண்டிய விஷயம் அல்லவா? காஞ்சிக்கு எத்தனையோ தொலைவிலுள்ள கோல்கொண்டாவிலிருந்து ஆட்சி புரிந்த குதுப்ஷா வம்சத்தைச் சேர்ந்த **நானுஷா** என்பவன் இந்தக் காணிக்கையைச் செலுத்தி யிருக்கிறன். ஹிஜிரி 1088-ம் ஆண்டு ஷெவல் மாதம் முதல் தேதியன்று இந்த முஸ்லிம் மன்னன் சாரதா மடம் எனப்படும் காமகோடி பீடத்தின் ஆசாரியர்களுக்குக் காணிக்கை செலுத்தியிருக்கிறன்.* அன்றோடு முடிந்து விட்ட விஷயமல்ல அது. ஆண்டொன்றுக்கு நூற்றுப் பதினைந்து வராகன்கள் சமர்ப்பிப்பதாகச் செப்பேட்டில் கூறியிருக்கிறது. அந்தணர்களுக்கு உணவளிப்பதற்காக இது பயன்படும் என்று செப்பேடு தெரிவிக்கிறது.

இச்செப்பேட்டில் பல விசேஷங்கள். விஷயத்தின் விசேஷம் தவிர வாசகம், லிபி எல்லாவற்றிலும் பல புது அம்சங்கள் அமைந்திருக்கின்றன. தெலுங்கு எழுத்திலுள்ளது செப்பேடு. ஆனால் மொழியோ பாதி வடமொழியும் பாதி பாரசீகமுமாக உள்ளது. முகலாய மன்னரை ஜில்லு-இல்-உலா (ஆண்டவனின் பிரதிநிதி), இலாவி ஹுமாயும் (ஏக சக்ராதிபதி), கெலாபத் மசஹுறா ('காலிப்' போன்ற கௌரவம் உடையவர்), பர்மான் பறாது ஜஹாமதா (மற்ற அரசர்களால் பணியப்பட்டவர்) என்றெல்லாம் பாரசீக மொழியில் வர்ணித்திருக்கிறது. காஞ்சியையும் காமகோடி ஜகத்குருவையும், அதிதேவதையான சந்திரமௌளீசுவரரையும்

> ஸ்வஸ்தி ஸ்ரீமத் அகில பூமண்டலாகார, த்ரியக் த்ரிம்சத் கோடி தேவதா லேவித, ஸ்ரீ காமாக்ஷீதேவி ஸநாத, ஸ்ரீமத் ஏகாம்ரநாத ஸாக்ஷாத்கார, பரமாதிஷ்டான, க்ருதாதி சதுர்யுக, ஸகல தர்மிக, ராஜுபரிபாலித, ஸகல வேத சாஸ்த்ர மூல பூத, ஸத்ய வ்ரத நாமாங்கித காஞ்சீ திவ்ய க்ஷேத்ரே, சாரதா மட ஸம்ஸ்தித ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சங்கராசார்ய பூஜித, ஸ்ரீ சந்திர மௌளீச்வர ஸ்வாமி

என்று பரவசமாக வடமொழியில் வர்ணிக்கிறது சாஸனம்.

உருவ வழிபாட்டையே நம்பாத பிற மதத்தைச் சேர்ந்த ஓர் அரசன், இவ்வளவு பாராட்டிப் போற்றிப் புகழ்ந்து நம் பீடத்தின் அதிபர் ஒருவருக்குக் காணிக்கை அர்ப்பணம் செய்தான் என்பதிலிருந்து ஸ்ரீ காமகோடி பீடத்தின் அருள் எல்லை எவ்வளவுக்குப் பரவி யிருந்திருக்கிறது என்பதும் அதன் ஆசாரிய புருஷர்கள் எத்தகைய விசால மனத்தினராக இருந்திருக்க வேண்டும் என்பதும் வெள்ளிடைமலையாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காமகோடி பீடத்தின் இந்தப் பழம் பெருமையை யெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது நம் உள்ளம் பேருவகை அடைகிறது. ஆனால் நாம் செப்பேட்டில் பொறித்துள்ள வாசகங்களை நினைத்துப் பெருமைப்படுவதோடு நின்றுவிடக்கூடாது. பீடத்தின் ஆதி அதிபதிகளான ஸ்ரீ பகவத்பாதர்களின் மறு உருவாக விளங்கி இன்று அறம் வளர்த்து வரும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அருளுரைகளை நம் இதய ஏட்டில் பொறித்துக் கடைப்பிடிக்க வேண்டியதே அதைவிட முக்கியம்.

முற்றும் துறந்த முனிபுங்கவரான அந்த மகான் உலகுக்கு வழிகாட்டுவதொன்றுக்காகவே பலவித தர்மங்களையும் ஆசாரங்களையும் வழுவறக் கடைப்பிடிப்பதைத் தம் ஸ்வதர்மமாகக் கருதி வாழ்கிறார்கள். இதில் அவர்கள் காட்டும் அதே திடபுத்தியுடனும், கட்டுப்பாட்டுடனும் நாம் அவரது உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும். அதனால் பயன்பெற வேண்டும். இந்த மன உறுதியையும், சிரத்தையையும் நாம் அவரிடமிருந்தே பிரார்த்தித்துப் பெறலாம். இதற்காக நாம் அவருக்குத் தரவேண்டியது நம் இதயபூர்வமான பக்தியைத்தான். கள்ளம் நிறைந்த நம் உள்ளத்தை அவருக்குச் சமர்ப்பித்தே விலைமதிப்பற்ற அருளைப் பெற்று விடலாம். பின் வரும் சுலோக அஞ்சலி புஷ்பத்தால் காலத்தை வென்ற அந்தக் கருணை மூர்த்தியை அர்ச்சித்து, அவரது தண்ணருளைத் தந்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

गण्येऽहं दीनदीनः त्वमिह शिवतनुः गण्यसे दीनबन्धुः
चिच्छक्त्याः कामकोट्याः हितमथ भगवत्पादसंस्थापितार्घ्यम् ।
पीठं विश्वप्रशस्तं कलयसि महसा सद्गुरो ज्ञानमूर्ते
त्वत्पादांभोजयुग्मार्पितजनिमव मामाखिलं पापपङ्कैः ॥

சத்குருவே! சித்சக்தியான ஸ்ரீ காமகோடியன்னைக்கு மிகவும் உகந்த பீடத்தை—பகவத்பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, உலகெங்கும் புகழ் பரப்பும் பீடத்தை—தம் மகிமையால் அலங்கரிக்கும் ஞான மூர்த்தியே! மங்கள உருவினரான ஈசனின் மாற்று வடிவமான தங்களைத் தீனபந்து என்று உலகம் போற்றுகிறது. நானே தீனர்களிலும் பரமதீனன். எனினும் பாபச் சேற்றினுல் மாசுற்ற என் பிறவியைத் தங்கள் அடியிணைத் தாமரைகளில் அர்ப்பணம் செய்து விட்டதால் என்னையும் கடைத்தேற்றியருள இறைஞ்சுகிறேன்.


---

* இதுவரை இந்த மன்னன் முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப் என்று கருதப்பட்டு வந்தது. இக்கருத்தை வெளியிட்ட ஸ்ரீ கோவிந்தராவ் முதலிய அறிஞர்கள் ஹிஜிரி 1088 என்பது கிறிஸ்துவ சகாப்தத்தில் 1710-ம் ஆண்டு என்று கணக்கிட்டதாலேயே இவ்வாறு எண்ணினர். ஆனால் முஸ்லிம் வருஷங்களின் சாந்திரமான மாத எண்ணிக்கைப்படி கணக்கிட வேண்டுமாதலால் ஹிஜிரி 1088 என்பது கி. பி. 1677 என்று தான் கொள்ளவேண்டும். இக் கருத்துக்கிசைவாகவே பேராசிரியர் டாக்டர் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் ஹைதராபாத்திலிருந்து ஆசிரியர் உள்ள பாரசீக பர்மான்களைப் பரிசீலித்து இந்த முகம்மதிய மன்னர் பேர் தானுஷா என்று முடிவு செய்திருக்கிறார்.



தீபாவளி
வாழ்த்துக்கள்!
ராதா ஸில்க்ஸ்
''தன் பில்டிங்'', மவுண்ட் ரோடு, சென்னை-2.
ராதா ஸில்க் எம்போரியம்
14, சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-4.


In your hopes and joys
lies our greatest inspiration. In sharing your faith and dreams, our greatest satisfaction!
Inspired by your courage, we at Pfizer-Dumex are constantly striving to produce more effective and purer drugs to help you on your way to recovery....to give you new hope....to bring health and happiness into your life again ....to make your world a better place to live in. Towards this we shall continue to work with dedication and perseverance!
Pfizer Science for the world's well-being
PFIZER PRIVATE LIMITED


இவ்வருட அன்பளிப்பு
ஒரு நீடித்திருக்கும் அன்பளிப்பு
இப்பொழுதெல்லாம் விசேஷ நாட்களில் அன்பளிப்பாக ஏன் தையல் மிஷினையே கொடுக்கிறார்கள்? உங்கள் குடும்பத்தினர் தையல் மிஷினை விரும்பிப் போற்றுவார்களென்று! உங்களன்புக்குப் பாத்திரமானவர்கள் அத் தையல் மிஷினை மிகவும் மதித்து, புகழ்ந்து, எக்காலும் அதனை உபயோகிப்பார்களென்று! ஆம், அதுதான் உண்மை. மேலும், தையல் மிஷின் மங்களகரமான, உயர்ந்ததோர் வாழ்க்கையின் சின்னம். உங்கள் குடும்பத்திற்கேற்ற, விசேஷ தினத்திற்குகந்த ஒரு உயரிய அன்பளிப்பு.
"உஷா ஸ்ட்ரீம்லயன்ட் மாடலை" அளித்து இவ்வருடம் உங்கள் குடும்பத்தினரை வியப்படையச் செய்யுங்கள். மிக நேர்த்தியான தோற்றத்திற்கும், உன்னத உழைப்பிற்கும், 40க்கும் மேலான அயல் நாடுகளில் புகழ்படும் இந்த "உஷா ஸ்ட்ரீம் லயன்ட் மாடல்" இந்தியாவில் இப்பொழுதே முதல் தடவையாக விற்கப்படுகிறது.
உஷா
தையல் மிஷின்
ஜே இஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31



கோதாவரிக் குண்டு

பழைய பேப்பர்க்காரன் தராசு தெய்வீகக் கோல்லன் கைவேலே. ஆனையை வைத்தால் ஆறு பலம் காட்டும். ஆறு மாசத் தினசரிக் காகிதம் எந்த மூலை? கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டு இப்பால் அப்பால் திரும்பாமல் தவம் புரிந்து முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அம்மா இருக்காளோ?'' என்று அந்தச் சமயம் பார்த்துக் குரல் கேட்டது. நிமிர்ந்தேன். காதுக்குக் காது புன்னகை நீள அந்த அம்மாள் நின்று கொண்டிருந்தாள். பேர் கங்காவோ, கோதாவரியோ — சரியாக ஞாபகம் இல்லை. ஏதோ நதியின் பேர்தான். இடுப்பில் எதையோ இடுக்கி, அதை முந்தானையால் மறைத்துக் கொண்டிருந்தாள்.

''உள்ளே இருக்கா — போங்கோ'' என்றேன். கச்சம் ஆட, கூடத்தைக் கடந்து உள்ளே போனாள் அம்மாள்.

தராசு முள்ளைப் பார்த்தேன். தெய்வீக முள்ளாயிற்றே அது! அறுபது காகிதமானால் என்ன? அரைக் காகிதமானால் என்ன? நடுநிலை பிசகுமோ!... ஹூம் நமக்கென்று சொந்தமாகத் தராசு வைத்துக் கொள்ள எப்போது காலம் வரப்போகிறதோ, கைவரப் போகிறதோ, ஈசுவரா!

கடைசி வாக்கியத்தை வாயை விட்டே சொல்லி விட்டேன். இப்படி ஏமாறுவதை எந்தப் புழுதான் சகிக்கும்?

''சாமி! இந்தத் தராசைப் பார்த்து இப்படிச் சொல்றீங்களே. எழுதின கார்டுக்கும் எழுதாத கார்டுக்கும் வித்தியாசம் காட்டும் சாமி. உங்களுக்குச் சந்தேகமாய் இருந்தால் கடையிலே போய் ஒரு தராசை வாங்கிட்டு வாங்க... என்னுத்துக்குப் பொல்லாப்பு?''

கடைக்குப் போக ஏது நேரம்? அதுவும் காலையில் ஒன்பதரை மணிக்கு வியாபாரத்தைக் கவனிப்பானா, தராசைக் கடன் கொடுப்பானா கடைக்காரன்? இன்னும் அரை மணிகூட இல்லை, ஆபீசுக்குக் கிளம்ப. குளித்துச் சாப்பிட்டாகவேண்டும்! ஏதாவது காசைக் கண்ணால் பார்த்தால் போதும் போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஞாயிற்றுக்கிழமையை விட்டு 'விடு போ போ, ஆபீஸ் வா வா' என்கிற வியாழக்கிழமையாகப் பார்த்துப் பழைய காகிதம் விற்க உட்காருவானேன்! இருள் இரண்டு மூன்று உருவத்தில் பயமுறுத்துகிறது. மின்சார பில் கட்டும் கடைசித் தேதி கடந்து இரண்டு மாதங்களாகி விட்டன. இன்று கட்டாவிட்டால் இருள் கவிந்து விடும். 'தக் தக் தக்' கென்று குதித்து, ஏற்றின ஒரு நிமிஷத்தில் அணைந்து விடுகிற அரிக்கேன் விளக்கோடு போராட முடியாது. பெண் முகத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே உட்கார்ந்திருக்கிறாள். பள்ளிக்கூடம் போக மாட்டாளாம். ஏதோ சாமியாருக்கு எட்டணாக் கொடுக்க வேண்டுமாம். இது வாரப் பிடுங்கல். கொடுக்கிற சம்பளம் பற்றாதென்று. போன மகான்களின் பேரை யெல்லாம் சொல்லிச் சொல்லி வரி வைக்கிற கான்வெண்ட் பள்ளிக்கூடத்துப் பிடுங்கல். எட்டணா இல்லாமல் இன்று அவள் அமைதியைக் காண முடியாது.

ஆறு மாசத் தினசரித் தாள்கள், வாரப் பத்திரிகைகள் எல்லாமாகப் போட்டு ஆறரை ரூபாய் வந்தது.

''எத்தனை கொடுத்தான்?'' என்று பேப்பர்க்காரன் போன கையோடு வந்தாள் கௌரி.

''ஆறரை ரூபாய்!''

''ஆறு மாசப் பேப்பருக்கா?''

''இப்ப ஏன் பதர்றே! அவன் இருக்கிறபோதுன்னா பதறி யிருக்கணும்.''

''நான் உள்ளே பேசிண்டிருந்தேன்!''

''அப்ப இங்கே வந்து பேசாதே.''

''பேசலே. எனக்கு இரண்டு ரூபாய் வேணும்.''

''இரண்டு ரூபாயா! என்னத்துக்கு?''

''வேணும்.''

''எலெக்ட்ரிக் பில் மூணே கால் ரூபாய்; உன் பெண்ணுக்கு எட்டணா. உனக்கு இரண்டு ரூவா. மீதி முக்கால் ரூபாயை வச்சிண்டு நான் என்ன பண்ணுவேன்! டிபன் வெத்திலே சீவல், பஸ்ஸு!''

''டிபன்கட்டி வைச்சிருக்கேன்—மிளகு அவல் பண்ணி.''

''காப்பி?''

''தர்மாஸ் பிளாஸ்கிலே போட்டு வைச்சிருக்கேன்.''

''வெத்திலே பாக்கு?''

''அதுவும் மடிச்சு வைச்சிருக்கேன்.''

''சரி, வியாழன், வெள்ளி, சனி, மூன்று நாட்கள் பஸ்ஸுக்கு ஆச்சு. திங்கட் கிழமை என்ன பண்றது?''

''அதுக்கு இப்ப என்ன? அப்புறம் பார்த்துக்கலாம்.''


''எப்படிப் பாத்துக்கிறது?''

''பாட்டுக்கார சுப்பிரமண்யய்யரைப் போய்க் கேட்கிறது.''

ஸப்த நாடியும் ஒடுங்கி விட்டது எனக்கு. என் வாயை மூடி முத்திரையிடப் பாட்டுக்கார சுப்பிரமண்யய்யரின் பெயரைக் கௌரி உபயோகிக்கிற வழக்கம் இரண்டு வருஷங்களாக வலுத்து வருகிறது. பாட்டுக்கார சுப்பிரமண்யய்யர் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறும் வருஷம் பத்து ரூபாய் நாளைக்குக் கொடுப்பதாக வாங்கிப் போனார். நாளைக்கு என்று என் மனக்கவரில் செதுக்கி விட்டுப் போய் விட்டார். கடன் கேட்காது போச்சு என்பார்களே என்று தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் வருஷத்தி லிருந்து அவரைக் கேட்கத் தொடங்கினேன். ஓடி ஒளிந்தார், குழைந்தார், கெஞ்சினார், காசை மட்டும் இளக்கின பாடில்லை.

கடைசியில் ஒருநாள் வந்தார். ''தலைவாசல்' ஆபீசில் மானேஜர் உங்களுக்கு வேண்டியவாளாமே. என் பையன் படிப்பை முடிச்சுட்டான். ஒரு வருஷமாச்சு. நூறு மனுப் போட்டாச்சு. வேலை கிடைக்கலே... நீங்க அவாளைப் பார்த்து...'' என்று கெஞ்சினார். 'சரி' என்றேன். இப்போது நான் அவரைக் கண்டு ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறேன்.

''அந்தத் தலைவாசல் மானேஜரை...'' என்று என் தலையைக் கண்டதுமே ஆரம்பித்து விடுகிறார். அவருடைய குடுமியையும், பச்சை சைக்கிளையும் ஒரு மைலுக்கு அப்பாலே அடையாளம் கண்டு என் கால் மிக அருகேயுள்ள சந்தில் பதுங்கி விடுகிறது. ''அந்த...



தி. ஜானகிராமன்

தலைவாசல் மானேஜரை....'' என்று மனசில் குரல் எழுந்து விரட்டுகிறது.

''எதுக்கு இரண்டு ரூபாய் உனக்கு?''

''கங்கா பாய் கேட்கிறு.... இப்படி வாங்கோ'' என்று குரலை உயர்த் தினுள் கௌரி.

கங்காபாய் வந்தாள். இரட்டை நாடி சரீரம். தலையில் பாதி நரை. இடையில் கச்சம் போட்ட புடவை. கழுத்தில் கருகமணி. தலையை வாரிப் பின்னிப் பின்னுல் சக்கரக் கட்டுக் கட்டியிருந்தது. வயது ஐம்பது இருக்கும். முந்தானையி லிருந்து ஒரு வெண்கலப் பானையை எடுத்து முன்னல் வைத்தாள்.

''இந்தக் கோதாவரிக் குண்டை வச்சிண்டு இரண்டு ரூபாய் கொடுக்கச் சொல்ரு'' என்ருள் கௌரி.

கோதாவரிக் குண்டு பெரிய குண்டு. பட்டணம் படியால் இரண்டு படி அரிசி வடிக்கலாம். புளி போட்டுத் தேய்த்துப் பளபளத்தது.

''நீங்கதானே இரண்டுமாசம் முன்னுல் ஒரு ரூபாய் வாங்கிண்டு போனது ஒரு வெங்கலப் பானையை வச்சு?''

''ஆமா. அது நாச்சார் கோயில் போணி. ஒரு படி பானே.''

''அதையே இன்னும் மீட்டுக்கலையே!''

''ஒரு மாசத்திலே இது. அது இரண் டையும் மீட்டுக்கறேன். இப்ப எனக்கு ரொம்ப முடை.''

நான் அரை மணி முன்னுல்தான் அந்த நாச்சியார் கோயில் பானையைப் பார்த் தேன். சமையல் உள் அலமாரிக்கு மேல் மாம்பலகைப் பரண் மீது அது கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. இரண்டு மாச மாகத் தினமும் அதைப் பார்த்து வரு கிறேன். பிள்ளையார் சதுர்த்தி என்று இரண்டு மூன்று விருந்தினர்கள் வந்த போது கௌரி அதை எடுத்து உலை வைத்த ஞாபகம் கூட வருகிறது.

''இரண்டு மாசமாச்சு. ஒரு ரூபாயைக் கொடுத்துச் சின்னப் பானையை மீட்க முடியலே. இது வேறேயா?''

''நீங்க ஒன்றும் வித்தியாசமாக நெனைக்கப்படாது. இன்னும் பதினஞ்சு நாளிலே நான் வந்து இரண்டையும் மீட்டுண்டு போகலேன்னு, என்று கேளுங்கோ.''

''வாண்டாம்மா...நீங்க பேசாமல் எடுத்துண்டு போங்கோ... இங்கேயே முடை கழுத்தைப் பிடிக்கிறது. ஒன் ணும் சொல்லப்படாது.''

''நீங்க அப்படிச் சொல்லப்படாது.''

''சொல்லப்படாதுன்னு! நீங்களே தானே பார்த்துண்டிருந்தேள். பேப்பர் காரன்கிட்டே போட்டுட்டு வாங்கி னதை...'' என்று குளிப்பதற்காகக் கொல்லைப் பக்கம் நடையைக் கட்டி விட்டேன். ஒரு நிமிஷத்துக்குள் அங்கே வந்து சேர்ந்து விட்டாள் கௌரி.

''இரண்டு ரூபாய் இல்லேன்னு ஒரு ரூபாயாவது கொடுங்கோங்களு.....'' என்று இழுத்தாள்.

''ரூபாயும் கிடையாது; பிப்பாயும் கிடையாது.''

''ரொம்பக் கெஞ்சருன்னு.''

''நான் யார்கிட்டே கெஞ்சறதுன் னேன்....!'' என்று கருட்டி விழித்தேன். ''நாலு மணிக்கு ஒரு டீ சாப்பிடுவோம்னு வெறும் வயிலே கையை விட்டு ஆட்ட வேண்டியிருக்கு. ஒரு ரூபாய் கடன் கொடுக்கிறுளாம். இப்ப ஒண்ணும் கேட் காதே. நாழியாச்சு. குளிக்கணும்.''

குளித்து விட்டு வந்த பிறகும் கங்கா பாய் கூடத்திலேயே நின்று கொண்டிருந் ததைப் பார்த்தேன்.

முகத்தைச் சிணுங்கிக் கொண்டே, அடுக்களைக்குள் திரும்பி விட்டேன்.

''என்ன?''

''ஏன் இப்படி எரிஞ்சு விழுணும்? இல் லாமதானே வந்து கேக்கரு.''

''இங்கேயே இல்லே.''

''ம்க்கும். இல்லே. அவ என்ன வெறுமே கேட்கிறுளா? அடு வச்சுத் தானே கேக்கரு. இன்னிக்குக் கடைத் தெருவுக்கு எடுத்திண்டு போய்க் கேட் டால் முப்பது ரூபா விலை சொல்லுவான் அந்தக் கோதாவரிக் குண்டுக்கு. அதை வச்சு ஒரு ரூபா கேக்கருன்னு ஒருத்திக் குத் தலை போற முடையாகத்தானே இருக்கும்.''

''ஆமாமா.''

''உங்களுக்கு இரக்கமே கிடை யாதுன்னு. பாட்டுக்கார சுப்ரமண்யய் யன் பத்தும் இருபதுமாகத் தூக்கிக் கொடுத்துட்டு அலையலாம். தேமேன்னு பாவம், ஏழை மூணுனிசை வெங்கலத்தை வச்சு ஒருரூபாய் கேக்கறது...அதுக்கு இவ் வளவு மாயாக பண்ணத் தெரியறது.''

பளிச்சென்று முடிவுக்கு வந்து விட் டேன். ''இத பாரு. வேணும்னு ஒரு ரூவா வாங்கிண்டு போகச் சொல்லு. அதையும் பத்து நாளிலே திருப்பிக் கொடுத்துடணும்'' என்று ரூபாயைக் கொடுத்தேன்.

கூடத்துக்குப் போனவள் இரண்டு நிமிஷங்கள் கழித்துத் திரும்பி வந்தாள். கையில் பளபளவென்று கோதாவரிக் குண்டு மினுத்தது.

''செட்டுக் கடையிலே வச்சா பத்து ரூபா கொடுப்பான் இதுக்கு. தெரியு மோல்லியோ?'' என்று அதைக் கீழே வைத்துத் தூக்கியும் சுற்றியும் குழந்தை யைக் கொஞ்சுகிறுப்போல் பார்த்தாள் கௌரி.





''ம்...ம். பத்து ரூபா கொடுப்பாள். வட்டியும் பதினைஞ்சுரூபாவாங்குவாள்.''

''பாவம். என்ன கஷ்டமோ தெரியலே இதை வச்சு ஒரு ரூபாய் வாங்கிண்டு போறதே. அகமுடையான் வழியா விருந்தான்னு இப்படிக் கஷ்டப்படுமோ பாவம்...!''

''தத்தோஜி ராவ் அப்படி ஒன்றும் வழியில்லாத ஆளில்லே. அவரும் ஏதோ சம்பாதிக்கத்தானே செய்யறார்.''

''இதென்ன சம்பாத்தியம் சாதகபட்சி மாதிரி! போய், ஓடியாடி முண்டியடிச்சுச் சம்பாதிக்கணும். இவாளுக்குத் துவரம் பருப்பே ஒரு மூட்டை வேணுமே மூணு மாசத்துக்கு.''

''அவர் புத்தி, படிப்புக்கு அவ்வளவு தான் முடியும்.''

எனக்குப் பரிமாறும்போது கோதாவரிக் குண்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் கௌரி. நவராத்திரி வருகிறது. ஒன்பதுநாட்களில் ஒரு நாளாவது அதை அடுப்பில் வைக்கா விட்டால் அவளுக்கு அமைதி வராது.

ஆபீஸ் போகும்போது கொங்கணேசுவரன் கோவில் வாசலைப் பார்த்துக் கொண்டே போனேன். வழக்கம்போல் தத்து அங்கே உட்கார்ந் திருந்தார். முகத்தில் என்றும் மாறாத புன்சிரிப்பு. தத்துவைப் படத்தில் எழுதிப் பார்க்க வேண்டும். முகமும் உடலும் அவ்வளவு அமைப்பு. இரண்டு பகுதியாக விரிந்து தெரியும் மார்பு. குழைந்த வயிறு. அகன்ற தோள்; நடுத்தர உயரம். முகத்திலும் பழைய பீஷ்வாக்களைப் போல ராஜ களை. தொங்கு மீசை. ஐம்பத்தைந்து வயதிருக்கும். ஆனால் நாற்பது வயதுதான் மதிக்கலாம். ஒரு நரை காண முடியாது. கங்காவுக்கு ஐம்பது வயது என்பது பார்த்த மாத்திரத்தில் தெரியும். அவள் கணவர் என்ற உறவினால்தான் அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் என்று ஊகம் செய்ய முடிகிறது. இல்லா விட்டால் நாற்பதுதான் மதிப்பு.

கொங்கணேசுவரர் கோவில் திண்ணையை விட்டு அசைய மாட்டார் தத்து. அங்கே வந்துதான் அவரை அழைத்துப் போவார்கள், அவர் இனத்தைச் சேர்ந்த புரோகிதர் யாராவது. புரோகிதத் தொழிலுக்கெனப் படிப்போ, நெட்டுருவோ தத்துவுக்குத் தெரியாது.. சும்மா எடுப்பாளாகத்தான் போவார். ஓர் அணா இரண்டு அணா தட்சிணைக்குக் கை நீட்டுவார். சாப்பிடச் சொன்னால் சாப்பிடுவார். கோயில் திண்ணைக்கு வந்து கால்மேல் கால் போட்டுத் தொங்கு மீசையைப் பாம்பு விரலால் கோதிக் கொண்டே உட்கார்ந்து விடுவார். இரவு வேளைகளில் எங்காவது மடத்தில் பஜனை நடந்தால் ஒரு மிருதங்கத்தை வலது கையால் அணைத்துக் கொண்டு போவார். 'திம் திம் தரு திம் திம் தரு' என்று ஒரு சொல்லை வைத்துக் கொண்டே எல்லாத் தாளங்களுக்கும் வாசித்து விடுவார்.. அதைத் தவிர 'தகஜுணு தொம்' என்று மூன்றுமுறை திருப்பி மோரா வைப்பார். மற்றபடி தாளத்தைப் பற்றி ஒரு பாவமும் தெரியாது. ஆனால் நாதத்தில் மட்டும் ஒரு சுகம் இருக்கும். – அவருடைய புன்சிரிப்பைப் போல.

மனுஷனுக்குக் கோபமே வராது. திட்டினாலும் புன்சிரிப்புத்தான். வேகமாக நடக்க மாட்டார். வியக்க மாட்டார். அதிர்ந்து பேச மாட்டார்.


கோவிலுக்குப் பத்து வீடு தாண்டி அவர் வீடு. சொந்த வீடுதான். வாடகை கொடுத்து எப்படிக்கட்டுபடியாகும் அவருக்கு? தலைமுறை தலைமுறையாக வந்த வீடு. ஆனால் வீடு என்று கண்டுபிடிக்க ஓர் அளவாவது ஆராய்ச்சி ஞானம் வேண்டும். தெருவை விட நாலு அடி உயர்ந்திருந்த ஒரு பெரிய மேடை. பெரிய வீட்டின் அடித்தளமாக ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும் அது. அந்த மேடையின் பின் கோடியில் கறுப்பும் நரையும் ஓடிய ஒரு சுவர் தெரியும். வீடு இருந்ததன் கடைசிச் சின்னமும் அத்தாட்சியுமாக இருந்த ஒரே அறையின் சுவர் அது. அதில்தான் கங்காபாய் சமையல், தூக்கம் முதலிய காரியங்களைச் செய்து கொண்டு மற்றப் பொழுதுகளில் அந்தப் பெரிய மேடையைக் கடந்து வந்து தெருவில் இறங்கும் படியில் உட்கார்ந்திருப்பாள். நான் அந்த வீட்டைக் கடக்கும் பொழுது அவள் கையில் ஏதோ பொட்டணத்துடன் அறைக் கதவைத் திறந்து கொண்டிருந்தாள்.. நாம் கொடுத்த ஒரு ரூபாய் வீண் போகவில்லை. ஏன் இவ்வளவு அற்பத்தனமாக மல்லுக்கு நின்றோம், கேவலம் இந்த ஒரு ரூபாயைக் கொடுக்க! எனக்கே ஏன் என்று புரியவில்லை. மனிதனுக்கு அற்பத்தனம் வர நேரம் போது ஏது?

கங்கா பாயின் புடவையில் கண்ணுக்குத் தெரிந்து பதினைந்து ஒட்டுக்களாவது இருக்கும். தத்தோஜியின் பஞ்சகச்சத்தில் அதற்குக்கூடுதலாக நாலு இருக்குமே தவிரக் குறைவாக இராது. நல்ல வேளையாகத் தத்து சாப்பாடே வேலையாக இருக்கிற ஒரு தொழிலைச் செய்ய ஆரம்பித்தாரே - அதுவரையில் அதிர்ஷ்டம். அந்த வேலைக்குக்கூலிகூட உண்டு. ஆனால் அதுகூட இப்போது நலிந்து விட்டது. புரோகிதர்களுக்கு முன்மாதிரி யெல்லாம் சாப்பாடு யார் போடுகிறார்கள்? ஒரு சடங்கு என்றால் வேட்டி துண்டு வாங்குவதும் மலையேறிப் போய்விட்டது. இல்லா விட்டால் தத்துவின் வேட்டி வேட்டியா யில்லாமல் சல்லடையாக இருப்பானேன்? மந்திரம் தந்திரம் தெரிந்த புரோகிதராக இருந்தாலாவது ஏதோ காலத்தை ஓட்டலாம் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கும். வெற்று ஆளுக்கு என்ன பயன்?

படைத்தவன் வயிற்றுக்குப் படைக்காமலா இருப்பான் என்று ஏன் வேதாந்தம் பேசுகிறார்களோ, தெரியவில்லை. வயிற்றுக்குப் படைக்கிற வெண்கலப் பானையே அடகுக்குப் பெயர்ந்து விட்டது.

ஒரு ரூபாய் கொடுக்க ஏன் இவ்வளவு தகராறு செய்தோம்? கோதாவரிக் குண்டே இல்லாமல், ஒரு ரூபாய் ஏன் கொடுத்திருக்கக் கூடாது?....எப்பொழுதும் போல் என் பின்புத்தி இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே யிருந்தது.

கங்காபாயைப் பார்த்த இடங்களெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. எங்கே கலியாணம், எங்கே அன்ன தானம், எங்கே சமாராதனை என்று போய் விடுவாள். சின்னதோ பெரியதோ எந்தக் கலியாணமா யிருந்தாலும், சம்பந்திகள், பிரமுகர்கள், நண்பர்கள் இந்தக் கூட்டமெல்லாம் சாப்பிடட்டும் என்று அடிவண்டல் பந்திக்காகத் திண்ணையில் காத்துக் கொண்டிருக்கிற கும்பலில் கங்காபாய் ஒரு பூஜை டம்ளரோடு உட்கார்ந்திருப்பாள். கோவிலில் நவராத்திரி





சமாராதனையென்றும் அங்கே அவனோடன் பந்தியில் பார்க்கலாம். ஒன்றும் கிடைக்காவிட்டால் ஏதோ அவலோ, பொரியோ இடித்துக் கறுப்புத் தரை டப்பாவில் போட்டு விற்க வந்து விடுவான். இன்று அதற்குக்கூட வழியில்லை போலிருக்கிறது.

தத்துவின் முப்பாட்டன்மார்கள் அரண்மனையில் புரோகிதம் செய்தவர்களாம். இந்த நாச்சியார் கோவில், கோதாவரிக் குண்டுகளெல்லாம் அந்தக் காலத்தில் சேர்த்த சொத்தாகத் தானிருக்க வேண்டும். தத்துவின் படிப்புக்கு இருப்புச் சட்டி கூட தானம் கொடுக்க மாட்டார்கள். அவ்வளவு மட்டமாகக் கொடுக்கவும் தோன்றுது. அவரைப் பார்த்தால், ஆன்தான் மீசையும் பளபளப்புமாக ராஜகம்பீரமாக இருக்கிறாரே. அப்பனே! ஏழையாகத் தான் படைத்தாயே! கச்சலாக, கருவலாக, நாய் பிடுங்கினாற் போல் படைக்கப் படாதோ! இப்படியா வாட்ட சாட்டமாக, மீசையும், வடிவுமாகப் படைக்க வேண்டும்! தானம் கொடுக்கிறவனுக்குக் கொஞ்சமாவது இரக்கம், அனுதாபம் வர வேண்டாம்! அச்சாரம் கொடுத்துப் பண்ணினாற் போலப் படைத்து விட்டு, அதிர்ஷ்டத்தையும் புத்தியையும் கழித்து விட்டு... சை! கடவுள் இவ்வளவு சராசரிக்குக் குறைவான படைப்பாளியா!

''என்னப்பா ! பிரமாத யோசனையா இருக்கு இன்னிக்கு! என்னமோ சுவரைப் பார்க்கிறீர்! தரையைப் பார்க்கிறீர்! கொஞ்சம் எழுதறீம்! நிற்கிறீம்!'' என்று கத்தினான் சிரஸ்தார் பக்கிரிசாமி.

''ஒன்றுமில்லே. நீ உன்னுடைய வேலையைப் பாரு!''

''என்ன, சொல்லேன்! நானும் தெரிஞ்சுக்கறேன்!''

''தெரிஞ்சு என்ன பண்ணப் போறே? இந்தாடாப்பா கஷ்டப் படாதேன்னு பத்து ரூபாயைத் தூக்கிக் கொடுத்திடப் போறியா?''

''ஓகோ - அப்படியா சமாசாரம்! என்ன இப்படி? தேதி பத்துதானே ஆச்சு! அதுக்குள்ளேயும் அள ஆரம்பிச்சிட்டியே. ஏனப்பா! எனக்கும் பத்தும் அஞ்சும் கொடுக்க இயலாது! இரண்டு நாள் பொறுத்துக்க! நானும் அப்ப உன்னோட சேர்ந்து அழுவறேன்!''

''ஏன்! நீ நியூஸ் பேப்பர் எல்லாம் மாசா மாசம் போட்டுடறியோ!''

''ஓகோ! அதுவும் ஆயிடுச்சா? பலே ஆளுடாப்பா !''

மத்தியானம் மிஞ்சு அவல் சாப்பிட்டிருந்தாற் போல் கூட இல்லே.

வழக்கம் போல் ஆபீஸ் கடையைக் கட்ட ஆறு மணி யாயிற்று. மத்தியான டிபன் ஜாடராக்கினி துரும்பை எரிக்கிறாற் போல் எரித்து விட்டு வயிற்றில் குமைந்தது. மணிக்கூண்டு ஹோட்டலை நினைத்துக் கொண்டே நடந்து வந்தேன். ஹோட்டலுக்குள் நுழையப் போகிற சமயம், ஹோட்டல் வாசலிலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்கு முன்னால் நின்று மேல் நோக்கி மணிக் கூண்டின் முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தார் தத்தோஜி—மீசையும் ஒட்டுப் போட்ட பஞ்சகச்சமுமாக. காரும் பஸ்ஸும் நடையுமாக உலகம் தெற்கேயும் வடக்கேயும் விரைந்து கொண்டிருந்தது. தத்து சாவகாசமாக நின்று மணி பார்த்துக் கொண்டிருக்கிறார். மணி பார்க்கும்படியாக என்ன அவசரம் அவருக்கு? இல்லை மணிக்கூண்டு என்ற அதிசயத்தைத்தான் வியந்து கொண்டிருக்கிறாரா!

''என்ன ராயர்வாள்!'' என்று கூப்பிட்டேன். ஏதோ சிறு கருணை வெள்ளம் என் மனத்தில் ஊற்றெடுத்த சமயம் அது.

தத்து திரும்பினார். என்னைப் பார்த்தார். புன்சிரிப்பைப் பெரிது பண்ணினார். ''கோடி வீட்டு சாரா! நமஸ்காரம் சார். பேட்டியே கிடைக்க மாட்டேங்கிறதே'' என்று அருகே வந்தார்.

''எங்கே இவ்வளவு தூரம்! மணி வேறு பார்க்கிறீர்! என்ன சேதி?''

''சும்மாத்தான் வந்தேன். வீட்டிலே வரச் சொன்னாள்.''

''யாரு!''

''என் சம்சாரம். பயாஸ்கோப்புக்குப் போயிருக்கா-மூணு மணி ஆட்டத்துக்கு. ஆறே கால் மணிக்கு வருவாளாம். முடிஞ்சா வந்து அழைச்சிண்டு போங்கோன்னாள். அதுதான் இப்படி வந்தேன்.''

''ஸினிமாவுக்கா போயிருக்கா?''

''ஆமா - இந்தக் கொட்டகையிலே தான்....''

''நீங்க போகலியா?''

''ஒரு டிக்கட்டுக்குத்தான் காசு இருந்தது. அதுவே சான்ஸாகத்தான் அவளுக்குக் கிடைச்சதாம்.''

''அதுக்காக, நீர் கூடப் போக வேண்டாமோ...?''

''இல்லே சார். சொல்றேன், கேளுங்கோ. காலமே ரெட்டிப் பாளையத்திலேந்து மல்லிகைப்பூ கொண்டுவந்தா ஒரு பொம்பிளே. பெரட்டாசி மாசம் மல்லிப்பூ வர்றது ரொம்ப அபூர்வம் இல்லியா? என் சம்சாரம் சடக்குனு ஒரு சேர் வாங்கிப்பிட்டா. தலைப்பிலே பூவைக் கொட்டிக்கிட்டு உள்ளே போய்ப் பாத்திருக்கா. சில்லறை இல்லே. காலமே பூவை வாங்கிப்பிட்டுத் திருப்பிக்கொடுப்பாங்களோ? பக்கத்து வீடுங்களை கேட்டிருக்கா. கிடைக்கலே. அப்புறம் ஏதோ பாத்திரத்தை எடுத்துக்கிட்டு ஒரு வேண்டியவா வீட்டிலே வச்சு, ஒருரூபா வாங்கிண்டுவந்தா. மல்லிப்பூ பத்தணாத்தான். மீதி ஆறணா இருந்தது. என்ன செய்யலாம்னு கேட்டா. புதுப்படம் இன்னிக்கு வருதாமே, பார்த்திட்டு வாயேன்னேன். சரின்னு புறப்பட்டு வந்தா. அழைச்சிண்டு போகணும்!''

'அட துடாளிகளா!' என்று கத்த வாயெடுத்தேன்.


'வாயை மூடு - அரளிக் குடுக்கை' என்று யாரோ பல்லைக் கடிக்கும் குரல் கேட்டது. யார் என்று திரும்பிப் பார்க்கவில்லை. குரல் என் உள்ளுக்குள்ளே யிருந்து கேட்ட குரல்தான்.

'புத்தி புத்தி' என்று மனசு கன்னத்தில் போட்டுக் கொண்டது.

''காப்பி சாப்பிடலாம், வரீரா?'' என்றேன். தத்தோஜி மறுக்காமல் வந்தார்.

வீட்டுக்குப் போன போது, கௌரியின் தலையில் மல்லிகைச் சரம் மோகனமோடு கட்டியிருந்தது. 'உங்களுக்குன்னு கொண்டு வந்தேன் மாமி' என்று கங்கா பாய் கொடுத்து விட்டுப் போனாளாம்.

ரெட்டிப்பாளையம் மல்லிகைப் பூவின் வாசனை உலகத்தில் வேறு எந்த மல்லிகைக்கும் கிடையாதே. அப்பா ! என்ன மணம்!


மதுரைமாநகர்சிற்பம்
மணியம்
கல்கி தீபாவளிமலர்-1961


மணியம்


மதுரைமாநகர்சிற்பம்
மணியம்
கல்கி தீபாவளிமலர்·1961


மதுரை மாநகர் சிற்பம்
மணியம்
கல்கி தீபாவளி மலர்


யாராக இருந்தாலும் சரி......
உங்களுக்குப் பூரண திருப்தி அளிப்பது
மர்பி
ரேடியோ
மாடல் 0724
6 வால்வ் - ஆல்-வேவ் - 8 பாண்ட் முழு பாண்ட்ஸ்பிரெட், AC அல்லது AC/DC (இரு மாடல்கள்) மற்றும் மாடல் 0737 (டிரை பாட்டரி) 7 வால்வ்.
மாடல் 0726
7 வால்வ் - ஆல்-வேவ் - 8 பாண்ட் முழு பாண்ட்ஸ்பிரெட், AC அல்லது AC/DC (இரு மாடல்கள்)
மாடல் 0752
5 வால்வ் - ஆல்-வேவ் - 3 பாண்ட் AC அல்லது AC/DC (இரு மாடல்கள்) மற்றும் மாடல் 0751 (டிரை பாட்டரி) 5 வால்வ்
மாடல் 0322
6 வால்வ் - ஆல்-வேவ் - 3 பாண்ட் AC அல்லது AC/DC (இரு மாடல்கள்)
மாடல் 266
7 வால்வ் - ஆல்-வேவ் - 5 பாண்ட் பியானோ - கீ - ஸ்விட்ச் AC
மாடல் 0374
6 வால்வ் - ஆல்-வேவ் - 4 பாண்ட் பியானோ - கீ - ஸ்விட்ச், AC அல்லது AC/DC (இரு மாடல்கள்)
மாடல் 0352
5 வால்வ் - ஆல்-வேவ் - 3 பாண்ட் AC அல்லது AC/DC (இரு மாடல்கள்)
மாடல் 0298
5 வால்வ் - ஆல்-வேவ் - 3 பாண்ட் AC/DC மற்றும் மாடல் 0299 (டிரை பாட்டரி) 4 வால்வ்
murphy radio
delights the home!

சாலியர் தெரு ஆண்ட சின்னம்மா

முகவுரை :

[இது நெல்லை சாலியர் தெருவில் 'ஆப்பத் திருப்பி' யால் அரசாண்ட பெண்ணரசி சின்னம்மா பரம்பரையின் வீர வரலாறு. சின்னம்மாவின் காலம் சி. பி. 50. (சி. பி. என்றால் சின்னம்மா பிறப்பு எனக் கொள்க) இடிந்து கிடந்த சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்த 'ஒழிக' கோஷ சாஸனங்களிலிருந்தும், தெருப் பெண்களின் தோள் பட்டை இடிப் பேச்சுக்களிலிருந்தும் கண்டறிந்து தொகுக்கப்பட்ட வரலாற்றுச் சுருக்கமே இது]

ஆட்சிக் காலம்

திருநெல்வேலி சாலியர் தெருவில் சின்னம்மாவின் ஆட்சி நிறுவப்பட்ட காலம் கற்காலம். அதாவது தெருவில் கல் தோன்றி ரோடு தோன்றுக் காலத்தில் ரோடு போடும் தொழிலாளர்களுக்காகத் தன் ஆப்பக்கடையைத் தெருவில் நிறுவினாள் சின்னம்மா. முதலில் வியாபார நோக்கத்துடன் தெருவுக்குள் நுழைந்தவள் நாளடைவில் அத் தெருப் பெண்களிடையே தன் ஏகாதிபத்தியத்தைப் பரப்பிச் சர்வாதிகாரியாகி விட்டாள் எனத் தெரிய வருகிறது.

முடியரசர்களையும் முடியரசிகளையும் ஒழிப்பதில் முழுமூச்சுடன் இறங்கியிருந்த பட்டேலும் சரி, இந்திய அரசாங்கமும் சரி சின்னம்மாவின் ஆட்சியில், தலையிடாமைக்குக் காரணம், சின்னம்மாவின் தலையில் காய்ந்த புல் போன்று அடர்ந்திருந்த ஒரு விசித்திர ரக வஸ்துவை முடி என்று அவர்கள் ஒப்புக் கொள்ளாததுதான் என்றுகூறப்படுகிறது. ஆனால் அந்த முடியாராய்ச்சியில் யாரும் எவ்வித திட்டவட்டமான முடிவுக்கும் வரவில்லையாதலால் அது விஷயத்தில் மேலும் தெளிவு படுத்துவதற்கில்லை. நிற்க, வரலாற்றைத் தொடர்வோம்.

நிர்வாக அமைப்பும் ஆட்சித் திறனும்

சின்னம்மாவின் அதிகாரக் கேந்திர ஸ்தானங்கள் இரண்டு. ஒன்று அவளுடைய ஆப்பக் கடை. மற்றது குழாயடி. இரண்டு இடங்களிலிருந்தும் இரண்டு விதமான ஆட்சி அமுலாகும்.

ஆப்பக்கடை வருமான வசூல் நியாயம். வருமானம் என்றால் ஆப்ப விற்பனையல்ல. சின்னம்மா ஆப்பம் சுட்டுப் போட்டுச் சாலியர் தெருவாசிகள் சாப்பிட்டதாகச் சற்றேறக்குறைய ஒரு மாமாங்கமாகச் சான்று கிடையாது. டாக்டர் ஒருவர் தம் வருமானத்தைப் பெருக்கச் சின்னம்மாவுக்குக் கைக்கூலி கொடுத்து ஆப்பக் கடை வைக்க ஏற்பாடு செய்ததாகத் தெருவாசிகளிடையே பலத்த வதந்தி.

சின்னம்மாவின் ஆப்பக்கடை வருமானம் வேறு வழியில். அடுப்பைப் பற்ற வைத்துக்கொண்டு மாவுச் சட்டி சகிதம் அவள் உட்கார்ந்திருப்பாள். (மாவுச் சட்டியில் மாவு இருந்ததே நிஜம் என்று கூறுவதற்கு ஆதாரமில்லை.) சாலை வழியாக லாரியோ சைக்கிளோ வந்தால் போதும்; தான் தயாராக வைத்திருக்கும் கோழியையோ அல்லது இன்ன பிற பிராணியையோ மாவுச் சட்டியை உருட்ட ஏவி விட்டு விட்டு வாகன நாயகனைப் போய் மறிப்பாள். அந்த வாகனம் 'கண் மண்' தெரியாமல் வந்ததாகவும் அதைக் கண்டு பயந்து பக்கத்தில் நின்ற பிராணி மாவுச் சட்டியில் விழுந்து விட்டதாகவும் அதனால் ஏற்பட்ட வியாபார நஷ்டத்தை வாகனக்காரன்தான் கொடுக்கவேண்டும் என்றும் வாதாடுவாள். அப்பாவியாக இருந்தால் ஏதாவது 'அழுதுவிட்டு'ப் போவான். கொஞ்சம் தைரியசாலி என்றால் சற்று முரண்டுவான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சின்னம்மா தெருவைக் கூட்டி விடுவாள். தெருவாசிகள் அவள் பக்கம்தான் பேசுவார்கள். (அப்படிச் சார்ந்து பேசாதவர்கள் வீட்டு வாசலில் நின்று தினம் ஒரு மணி நேரம் தனக்கே உரித்தான பாணியில் வசவு புராணம் நடத்தி விடுவாள் என்பது தெருப் பிரசித்தம்.) கடைசியில் அந்த அமர்க்களத்தில் ஒரு சமரச ஏற்பாடாவது நடந்து சின்னம்மாவுக்கு வருமானம் தேறி விடும்.

ஒரு நாள் இந்தக் கலாட்டா விவகாரம் போலீஸ் வரைக்கும் போய் விட்டது. விசாரணைக்கு வந்த போலீஸ்காரரைச் சின்னம்மா மடக்கிய சாமர்த்தியத்தை இன்றைக்கும் நாளைக்கும் பேசிப் பேசி ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள் சாலியர் தெருவாசிகள்.

போலீஸ்காரர் தம் விசாரணையை ஆரம்பிக்குமுன், அவரிடம் தயவாகப் பேசித் தன்னுடைய ஆப்பத்தைத் தின்ன வைத்து விட்டாளாம் சின்னம்மா. ஆப்பத்தில் ஒரே ஒரு விள்ளல்தான் போலீஸ்காரர் வாயில் போட்டுப் பார்த்தாராம்.



தாமரைமணாளன்

மறுகணம் தம் விசாரணைக் குறிப்புப் புத்தகத்தை அந்த ஸ்தலத்திலேயே போட்டு விட்டு ஓட்டம் எடுத்தவர் நாளதுவரையில் அந்தப் பக்கம் தலை காட்டவில்லையாம்.

சின்னம்மாவின் குழாயடி தர்பார்தான் ரொம்ப விசேஷமாக இருக்கும். துஷ்டநிக்ரக இஷ்ட பரிபாலனம் அங்கேதான் பூரணத்துவம் பெறும்.

சின்னம்மாவுக்குத்தான் முதல் தீர்த்த உரிமை என்பது குழாய் போட்ட நாள் முதலாகத் தீர்ந்து போன பிரச்னை. ஆனால் அடுத்தடுத்து யார் யார் தண்ணீர் பிடிக்க வேண்டும் என்பதைத் திட்டம் செய்யும் அதிகாரத்தையும் சின்னம்மா பலவந்தமாகச் சுவீகரித்துக் கொள்ளும்போதுதான் சில பெண்கள் அவளுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்துவார்கள். சின்னம்மாவும் உடனடியாக யுத்த சன்னத்துக்களுடன் தயாராகி விடுவாள்.

மோதல் ஆரம்பித்த மறுநிமிடமே, சின்னம்மா சரித்திர ஆராய்ச்சி நிபுணியாக மாறி விடும் திறமை அபூர்வமானது. ஏழு தலைமுறைகளுக்கு முன், எதிராளிப் பெண்ணின் வம்சத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி அடுத்த வீட்டுக்காரியின் சுண்ணும்பு டப்பியை முன்றானைக்குள் மறைத்துக் கொண்டு போனது முதல், அன்று காலையில் எதிராளிப் பெண் எதிர் வீட்டுக்காரியின் துடைப்பக் கட்டில், யாருக்கும் தெரியாமல் இரண்டு ஈர்க்குச்சிகளை உருவிக் கொண்ட நிகழ்ச்சி வரை துளாம்பரமாக எடுத்து விளக்க ஆரம்பித்து விடுவாள்.

பத்து நிமிடங்கள் அதிகம். சின்னம்மாவின் வாய் வேகத்துக்கும் கைகளின் சுழற்சிக்கும் பத்து நிமிடங்கள்கூடத் தாக்குப் பிடிக்க முடியாமல் எதிராளி சரணாகதி அடைந்து விடுவாள்.

சின்னம்மாவை முழுக்க முழுக்கச் சண்டைக்காரி என்று கூறி விட முடியாது. அவளுக்குக் குஷி பிறந்து விட்டால் சக மாதர்களுக்குக் குடித்தனப் – பாங்கைப்பற்றி டியூஷன் ஆரம்பித்து விடுவாள். புருஷன் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டுவது, அவன் சம்பாத்தியத்தைச் சூறையாடுவது போன்ற வித்தைகளையெல்லாம் அபூர்வ நுணுக்கத்துடன் விளக்குவாள்.

சொல்லொன்று செயலொன்று என்ற பேதம் சின்னம்மாவிடம் கிடையாது. புருஷன் பேரில் ஆட்சி செலுத்துவதைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லும் உபதேசத்தை இம்மியும் பிசகாமல் அவளே கடைப் பிடித்து வந்தாள்.

அவள் கல்யாணம் செய்து கொண்டதே காரணார்த்தமாகத்தான். (ஆனால் அவள் புருஷன் அதைக் காதல் கலியாணம் என்று சொல்லிக் கொண்டிருந்ததை ஏற்றுக் கொள்ளுவது பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.)

அந்தக் காலத்தில், அதாவது சின்னம்மா 'சின்னியாக' இருந்த காலத்திலும் அப்ப வியாபாரம்தான் நடத்திக் கொண்டிருந்தாள். பிற்காலத்தில் தெருவோரத்துக்கு வந்த அந்த வியாபாரம், அப்போது வீட்டுக்குள்ளேயே நடந்தது. சம்பிரதாயப்படி அவள் வெளியே போகக்கூடாதல்லவா?

அப்போதெல்லாம் அவள் பிரமாதமான அழகியாக இருந்தாள். அதனால் அவள் கடைக்குச் சரியான கூட்டம். அப்பம் தின்கிற சாக்கில் போய்ப் பல்லைக் காட்டுகிற இளவட்டங்கள் அதிகம். அவர்களில் அதிகமாகப் பல்லைக் காட்டுவது முத்தையன்தான். முத்தையனைச் சின்னிக்கும் பிடித்து விட்டது. காரணம், அவனுடைய பல்லின் விசேஷம் ஒன்றுமில்லை; அவன் 'பல்லைக் காட்டிய'நேரம் போக மற்ற நேரங்களில் எங்கேயாவது போய் விறகு வெட்டிப் போடுவது, சொந்தச் செலவில் கடைச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பது போன்ற கதாநாயகக் குணசித்திர வேலைகளில் உற்சாகமாக ஈடுபட்டிருந்ததுதான்.

கடைசியில் 'கை வேலைக்காவது இருக்கட்டும்' என்று முத்தையனைக் கட்டிப் போட்டுக் கொண்டாள் சின்னம்மா. அதனால் வேலு என்ற பயலும் பிறந்து விட்டான். இது பழங் கதை.

கடமை தவறுபவர்களைக் கண்டால் சின்னம்மாவுக்கு அறவே பிடிக்காது: யாராக இருந்தாலும் சரி. சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியே அதற்குச் சாட்சி. ஒருநாள் அவளுடைய புருஷன் முத்தையன் அப்பத்துக்கு மாவு அரைத்து வைக்கத் தவறி விட்டான். சின்னம்மா உடனடியாக அவன்மீது நடவடிக்கை எடுத்து அவனை 'சஸ்பெண்ட்' பண்ணி விட்டாள். வயதான கோளாறும் அநேகமாக எல்லாப் பல்லும் விழுந்து விட்டதால், முத்தையனுக்கு முன்னைப்போல் பல்லைக் காட்டவும் வழியில்லாமல் போய் விட்டது. முடிவில் முத்தையன் வீடு துறந்து அடுத்த தெருவுக்குப் போய் விட்டான். எவ்வளவோ கெஞ்சியும் சிபாரிசு வைத்துப் பார்த்தும், சின்னம்மா அவன் விஷயத்தை மறு பரிசீலனை செய்ய மறுத்துவிட்டாள். அவள் மகன் வேலு கொஞ்சம் புத்திசாலி; தாயுடன் ஒட்டிக் கொண்டான்.

தன் குழாயடி ராஜ்யபாரத்துக்கு அடுத்தபடியாகச் சின்னம்மாவுக்குச் சுவாரசியமான விஷயம் வேலுவின் கலியாணம்தான். அதற்குக் காரணம் மகனை மணக்கோலத்தில் காண வேண்டும் என்ற சுயநலமல்ல; முற்றிலும் பொதுநலம். தனக்கு வாரிசாகச் சாலியர் தெருப் பெண்களுக்கு ஒரு ராணியைக் கொடுக்க வழியில்லையே என்று சின்னம்மாவுக்கு எப்போதுமே ஒரு தாபம். அவளுக்கோ பெண் பிறக்கவில்லை. எனவே வேலுவுக்கு வரப் போகிறவளுக்கு அந்தப் பட்டத்தைக் கட்ட வேண்டும் என்று உத்தேசித்துத் தகுதியான பெண்ணுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.



போரும் விளைவுகளும்

ஆனால் அன்றொரு நாள் சின்னம்மாவின் எண்ணத்தைச் சிதைப்பது போல் ஒரு திட்டத்தை அவளிடம் சமர்ப்பித்து நின்றான் அவள் மகன் வேலு. அவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறானாம். அப்பெண்ணையே மணக்க அனுமதி வேண்டுமெனக் கோரினான்.

அவனுடைய கோரிக்கையை நிர்தாட்சிண்யமாக நிராகரித்து விட்டாள் சின்னம்மா. வேலுவின் கலியாணம் முற்றிலும் தன் ராஜ்ய விவகாரம் என்றும், அந்த விஷயத்தில் அவனுடைய காதல்பிரச்னை தலையிடுவது அதிகப் பிரசங்கித்தனம் என்றும் அறிவித்தாள்.

வேலு விடவில்லை. அவன் ஒரு வீரத் தமிழனாதலால் நிறையத்

தமிழ் சினிமாப் படங்கள் பார்த்திருந்தான். எனவே காதலின் ஆழத்தைப் பற்றியும் உறுதியைப் பற்றியும் வசன மாரி பொழிந்து இறுதியாகத் தன் காதலைக் கத்தி முனையில்கூட நிறுத்தி வெற்றி காணத் தயார் என்று சவால் விட்டான்.

சின்னம்மாவோ மகனின் வீரச் சபதத்தைத் தன் ஆப்பத் திருப்பியினால் சின்னா பின்னமாக்கினாள். ''இந்தா, பயலே, கண்ட கழுதைங்களெல்லாம் இந்தச் சின்னம்மா ஊட்டுக்குள்ளே மருமவளா வர முடியாது. எனக்குப் புடிச்சவ எவளையாவது கட்டிக்கச் சொல்லுவேன். நீ முரண்டு பண்ணினால், உன்னைத் தண்ணி தெளிச்சு உட்டுட்டு, ஆப்பத்தைக் குடுத்தாச்சும் ஒரு பயலை விலைக்கு வாங்கி மவளுக்கு அவளைக் கட்டிக்கச் சொல்லிக் கொளுத்துடுவேன். ஜாக்கிரதே! இந்தச் சின்னம்மாவை உனக்குத்தெரியுமில்லே'' என்று வார்த்தைகளை விசிறியடித்துவிட்டு ஆப்பக் கடையை நோக்கி நடந்தாள் சின்னம்மா.

பெரும் புரட்சியை அடக்கிய இறுமாப்புடன்தான் ஆப்பக் கடையில் அமர்ந்தாள் சின்னம்மா. ஆனால் வெகு நேரத்துக்குப் பின்னர்தான் வேலுவின் காதல் விவகாரத்தில் ஒரு மகத்தான எல்லைப்புற ஊடுருவல் நிகழ்ந்திருப்பதை உணர்ந்தாள். அவளுக்குச் சொந்தமான தெருவிலுள்ள, அவளுக்குச் சொந்தமான வீட்டிலிருக்கும் அவளுக்கே சொந்தமான மகனை அவளிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் ஒருத்தி காதலிப்பதாவது!

அவள் நெஞ்சம் கொதித்தது. உடனடியாக அந்த ஆக்கிரமிப்புக்காரியை எதிர்த்துப் போராட வேண்டுமென்று பொங்கியெழுந்தாள். முன்பின் தெரியாத அந்த எதிரியிடம் போராட்டத்தைத் தொடங்குவதற்குமுன், முன்பின் தெரிந்த நாலு பெண்களை அதிகாரம் பண்ணி ஒத்திகை பார்த்துக் கொள்ளுவது உசிதமானது எனத் தோன்றியதால் குழாயடியை நோக்கிச் சென்றாள்.

குழாயடியில் சளசளவென்று பேசிக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர் பெண்கள். 'ஹெர் மெஜஸ்டி' சின்னம்மா வருவதைக் கவனித்து அவர்கள் மரியாதை செலுத்திப் பேச்சைக் குறைத்துக் கொள்ளாதது பெரும் அவமதிப்பாயிருந்தது சின்னம்மாவுக்கு.

'' இந்தாம்மா, எல்லாரும் நகருங்க'' என்று வீர கர்ஜனையுடன் குழாயடிக்களத்தில் இறங்கினாள் சின்னம்மா.

என்ன ஆச்சரியம்! குழாயடித் தர்பாரிலும் புரட்சியா? ஒரு பெண்கூட நகரவில்லை. ஆத்திரத்துடன் அவர்களை உறுத்துப் பார்த்தாள் சின்னம்மா. அந்தப் பெண்கள் அனைவரும் வரிசையில் முதலாவதாக நின்று கொண்டிருந்த ஓர் இளம் பெண்ணைக் கட்டுப்பாட்டுடன் நோக்கினர். அப்போதுதான் சின்னம்மாவின் கவனமும் அந்தப் பெண்ணின் மீது விழுந்தது. அவளை அதற்குமுன்னும் பார்த்ததாக நினைவில்லை.

''யார் இவள்?'' என்று அதிகாரத்துடன் விசாரித்தாள்.

''கண்ணம்மா என்று பெயர், பக்கத்துத் தெருவாம்'' என்று புதியவளைப் பற்றித் தகவல் தந்தாள் ஒருத்தி.

உடனே சீறியெழுந்தாள் சின்னம்மா. ''ஆ! அந்நியளா நீ! அத்துமீறி என் ஆளுகைக்குட்பட்ட குழாயடிக்குள் நுழைய என்ன துணிச்சல்? வெளியேறு'' என்று அந்தப் பெண் கண்ணம்மாவுக்கு எச்சரிக்கை விடுத்தாள்.

''போம்மா, நீ யார் கேட்பதற்கு? இந்த டவுனுக்குள்ளே எந்தக் குழாயிலும் தண்ணி புடிக்க எனக்கு அதிகாரம் இருக்கு!'' என்று சர்வ அலட்சியமாகக் கூறினாள் புதியவள்.

''அது என்னடி அதிகாரம்? இது என் குழாயடி. இன்னிக்கா, நேத்தா, குழாய் போட்ட நாளிலிருந்து எனக்குச் சொந்தம். இந்தக் குழாயைப் போடணும்னு முனிசிபாலிடிக்கு எழுதின பெட்டிசனைத் தபாலாபீஸிலே கொண்டுபோய்ப் போட்டது என் வீட்டுக்காரர். குழாய் போடச் சித்தாள் வேலை பார்த்தது நான். குழாயைத் திறந்து வைக்க வந்த தலைவருக்குச் சோடா வாங்கக் கடைக்குப் போனது என் மகன். அதனாலே இந்தக் குழாய் எனக்குத்தான்டி சொந்தம். என் உத்தரவில்லாமல் நுழைஞ்சதுக்கு உன்னை என்ன செய்யறேன் பாரு!'' என்று தன் அம்மிக் குழவிக் கரங்களை ஓங்கினாள் சின்னம்மா.

''அட, கம்மாவிரம்மா! இந்தக் குழாய்க்கு நீ குட்டி ராணின்னு இந்த டவுனிலிருக்கிற எல்லாக் குழாய்களுக்கும் மகாராணி நான், ஏன்னு, எங்க அண்ணன்தான் எல்லாக் குழாய்க்கும் தண்ணி விடற இஞ்சினியர் ஆபீஸ் பியூன்!'' என்று மின்னல்போல் வெண்டைக்காய் விரல்களை அலட்சியமாக வீசிக் காட்டினாள் அந்தப் புதுப்பெண்ணான கண்ணம்மா.

கொல்லென்று எல்லாரும் சிரித்துவிட்டனர். சின்னம்மாவுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தாள். அவள் கடித்த வேகத்தில் வெகுநாட்களாக விடுதலை வேட்கை கொண்டிருந்த அவளுடைய கடைசிப் பற்கள் இரண்டும் 'டொக்' கென்று உடைந்து விழுந்தன.

''ஹா! சண்டாளி! உன்னால் என் பல் போச்சே!'' என்று கத்தினாள் சின்னம்மா.

''உன் வாய்த் திமிருக்கு நானே உன் பல்லைப் பிடுங்கணும்னு இருந்தேன். ஆனால் என்னைப் பார்த்ததும் அது தானாகவே விழுந்திடிச்சு. எனக்கு வேலை மிச்சம்'' என்றாள் கண்ணம்மா.

''ஆ! பாவி....'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள் சின்னம்மா. ஆனால் பல் விழுந்த வேதனை அதிகமாகவே, பேச முடியாமல் வாயைப் பொத்திக் கொண்டாள்.

அவ்வளவுதான்; அங்கிருந்த பெண்கள் கும்மாளமிட்டனர். 'வெற்றி! நம் மதிப்புக்குரிய கண்ணம்மாவின் மாபெரும் வெற்றி! பழம் பெருச்சாளி சின்னம்மாவே அவள் முன் வாய் புதைத்துப் பணிந்து விட்டாள்' என்று ஏகோபித்துக் கூச்சலிட்டனர்.

அச்சமயம், ''யார் இது? சின்னம்மாவா? களத்துத் தெருவில் இருக்கிறரே அந்த முத்தையன் வீட்டுக்கார அம்மாவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் கண்ணம்மா.

''ஆமாம், அந்த அம்மாளே தான். இத்தனை நாட்களும் இந்தத் தெருவில் அவுங்களுடைய அதிகாரம்தான். நீதான் இப்போது மடக்கி விருக்கிறாய்!'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் ஒருத்தி.

உடனே, ''அத்தே!'' என்று அழகாக அழைத்தாள் கண்ணம்மா.

''அத்தையா?''என்று திகைத்தாள் சின்னம்மா.

''ஆமாம். நான்தான் உங்க மருமக. உங்க மகனைத்தான் சித்த முன்னாலே ரிஜிஸ்தர் ஆபீஸிலே போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்'' என்று குழைந்தாள் கண்ணம்மா.

''என் மகன் வேலுவையா?''

''ஆமாம். மாமாதான் நடத்தி வைத்தார்.''


''மாமாவா? யார் அது?''

''உங்க வீட்டுக்காரர்தான்.''

''எல்லாம் அந்த மனுஷன் வேலையா?'' என்று குமுறினாள் சின்னம்மா.

கண்ணம்மா சாவதானமாக அந்த விருத்தாந்தத்தை எடுத்தியம்பினாள்.





''ஆமா. மாமாவுக்காகத்தான் உங்க மகள் மேலே பிரியம் வைச்சுக் கட்டிக்கிட்டேன். அவருக்கும் எங்கப்பாவுக்கும் சிநேகிதம். மாமா என்னிடம் வந்து, 'நீ என் மகளைக் கட்டிக்கிட்டு மருமகனா வந்து, உன் மாமியாரை அடக்கணும்'னு ரொம்பக் கேட்டுக்கிட்டார். 'இதென்ன, பிரமாதம். சரிதான்'னு ஒத்துக்கிட்டேன். இன்னிக்குக் காலையிலே உங்க மகள் வந்து நீங்க கல்யாணத்துக்குச் சம்மதிக்கலேன்னு சொன்னாள். நான்தான் ரிஜிஸ்தர் ஆபீஸிலே மாலை மாத்திக்கலாம்னு சொன்னேன். அப்படியே ஆச்சு. ஆபீசை விட்டு வெளியே வந்ததும், 'உன் தைரியத்திலேதான் நாங்க வீட்டுக்குப் போறோம். உன் அத்தைகிட்டே விஷயத்தைச் சொல்லி விட்டு வா'ன்னு என்கிட்டே கேட்டுக்கிட்டாரு. அவங்க நம்ப வீட்டுக்குப் போறாங்க. 'குழாய்ப் பக்கத்திலே காளி மாதிரி சண்டை போட்டுக்கிட்டிருப்பா அவ'ன்னு அவங்க சொன்ன அடையாளத்தை வெச்சிக்கிட்டு உங்களைத் தான் தேடிக்கிட்டிருந்தேன்.''



''என்னைக் காளின்னு அந்த மனுஷன் சொன்னாரு?'' என்று சீறினாள் சின்னம்மா.

''பாவம், அவங்க பயத்திலே அப்படிச் சொல்லியிருக்காங்க. உங்களைப் பார்த்த பிறகுதானே அவங்க பயந்தது தப்புன்னு தெரியுது. அவங்க பயப்படுகிற மாதிரி நீங்க இல்லையே! ரொம்ப அப்பாவியாகத் தோணுதே'' என்று தன் வியப்பை வெளிப்படுத்தினாள் கண்ணம்மா.

அங்கிருந்த பெண்கள் எல்லாரும் கதி கலங்கிப் போனார்கள். சின்னம்மாளையே அப்பாவி ரகத்தில் ஒதுக்கும் இந்தப் பெண் எப்படிப் பட்டவளோ!

''மாமியாரை வென்ற மருமகள் திலகம் வாழ்க!'' என்று அவளுடைய நன்மதிப்பைப் பெற முந்திக் கொண்டு சிலர் கோஷமிட்டனர்.



சின்னம்மா ஒரு கணம் யோசித்தாள். மறுகணம் கண்ணம்மாவைச் சுற்றிக் கொண்டிருந்த பெண்கள் கூட்டத்தை விலக்கி விட்டு அவளிடம் போய் நின்று, ''இந்தாம்மா, எல்லாரும் புகழ்ந்து பேசி என் மருமகளைக் கைக்குள் போடப் பார்க்கிறீங்களா? அதுதான் நடக்காது. என் வீர மருமகள்தான் இனி என்னுடைய வாரிசு; உங்களுக்கெல்லாம் அவள்தான் இனி ராணி. இதுவரை என்னிடமிருந்ததுபோல் அவளுக்கும் பயந்து மரியாதையாய் நடக்கணும்!'' என்றாள் கம்பீரமான குரலில்.

''நம் புது ராணி கண்ணம்மாவுக்கு ஜே!'' என்று வாழ்த்தொலி முழங்கியது. புதிய ராணி மிகுந்த பெருமிதத்துடன் சாலியர் தெருப் பிரஜைகளைப் பார்த்தாள்.

குழாயடி, இடிந்தசுவர், வரிசையாக வைக்கப்பட்டிருந்த குடங்கள், சாலியர் தெருவின் வழக்கமான வம்புகள், எல்லாம் புதிய ராணியின் முதற்பார்வையிலேயே அடங்கி விட்டுக் கொடுத்துப் பணிந்து போனாற் போலத் தோன்றின. புதிய ராணியை வரவேற்க அதிர்வேட்டுப் போட்டாற் போலக் குடங்கள் மோதின. குழாயில் தண்ணீர் சீறிக் கொண்டு பாய்ந்தது. 'ஆகா! இந்தப் புதிய ராணி பதவிக்கு வந்ததுமே முன்பு மூன்று மாதத்துக்கு ஒரு மா(தி)ரியாகப் பெய்து கொண்டிருந்த நமது சாலியர் தெருக்குழாய் மூன்று விநாடிகளிலேயே பிரளயமாகிக் குடத்தை நிரப்புகின்றனவே'' என்று குழாயடிப் பிரஜைகள் ஒரேயடியாக அவளைப் புகழ்ந்தார்கள். புதிய ராணிக்குப் புஷ்பமாரி பொழிவது போலக் குழாயடி மரம் பழுத்த சருகுகளை உதிர்த்தது. இவ்வாறாக, சாலியர் தெருவில் சின்னம்மா பரம்பரையின் இரண்டாவது ராணியான கண்ணம்மாவின் பட்டமேற்பு விழா வெகு கோலாகலமாக, சிறப்பாக நடந்தேறியது.

முடிவுரை :

நாளது வரை மறைந்திருந்த சின்னம்மா பரம்பரையின் வீர வரலாற்றை அரும் பாடுபட்டு ஆராய்ந்து உலகுக்கு அளித்ததற்குக் காரணம் வரலாற்றுயியர் நோபல் பரிசின் மீது கண் வைத்திருப்பதுதான் என்று நேயர்கள் கருதும் பட்சத்தில், அந்த விஷயத்தில் கடுமையாகப் போராடி, எப்படியாவது பரிசை வாங்கிக் கொடுப்பது அவர்கள் கடமை.



அன்பும், ஆதரவும் அளிக்க **மாடெல்லா** நிட் வேயர் ஒன்றை அளியுங்கள்

modella
KNITTING WOOL



தாய்மார்கள் பகட்டை விரும்புவார்கள். பகட்டை அளிக்கும் அநேக சாதனங்களில் மாடெல்லா நிட் மேலங்கியும் ஒன்று. மாடெல்லா உடை உங்கள் குழந்தையை மிகச் சிறந்ததாகத் தோற்றமளிக்கச் செய்யும். உங்களுக்கும் கூடத்தான்!

100% பரிசுத்தமான ஆஸ்ட்ரேலியன் வுல் - சாயம் போகாத கலர் - சுருங்காது . 16 விதங்கள் 40 கலர்கள்

மாடெல்லா பிரைவேட் லிட்., பம்பாய்

MDL-614 TAM EVEREST

இசை மணிகள்

ஆதியில் சொல்தான் இருந்தது என்கிறது விவிலியநூல். அந்தச் சொல்லோடு ஒலியையும் கூட்டி, ஏழிசையாகவும் இசைப்பயனாகவும் இறைவனைக் கண்டவர்கள் நாம்; நாதப்பிரம்மம் என்று கடவுளைப் போற்றுபவர்கள் நாம். மனிதக் குரலின் ரீங்காரமும் வண்டுகளின் ஜங்காரமும் இன்னும் உலகிலுள்ள எல்லா ஒலிகளும் ஓங்காரம் என்ற பிரணவ சப்தத்தில் அடக்கமே என்பது நம் கருத்து. அதோடு மட்டுமின்றி, பண்பாடியே அமர நிலை எய்தும் பண்பாட்டையும் கண்டறிந்தவர்கள் நாம். "பல பிறவிகள் எடுத்த பின்னரே ஞானி விடுதலை பெறுவான்; ஆனால் ராக ஞானத்தோடு பக்தி செய்பவனோ இன்றே, இங்கேயே முக்தி நிலையில் நிற்கிறான்'' என்று பாடுகிறார் ஸ்ரீ தியாகையரவர்கள்.

அரிய பாடலா் ஆடலா் அன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெல்லாம்
அரியர்

என்ற நாவுக்கரசரின் நாவுக்கினிய பா, இசை மூலம் இறைவனை அடைவதுபோல் வேறெந்தச் சாதனத்தாலும் முடியாது என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறது.

காட்டு மிராண்டியின் இதயத்தையும் இசை இதமாக்கும்; கல்லைக் கனிவிக்கும்; வைரம் பாய்ந்த சிந்தூரத் தருவையும் வணங்கச் செய்யும் என்றெல்லாம் ஓர் ஆங்கிலக் கவி பாடினான். இசை அதிர்வுகளால் விவசாய உற்பத்தியைக்கூடப் பெருக்கலாம் என்று பறைசாற்றுகிறது நவீன விஞ்ஞானம். நமது பாரத தேசத்தில் இந்த இசையானது என்னவெல்லாம் அற்புதம் நிகழ்த்தியிருக்கிறது என்பதை அடுத்துவரும் பக்கங்களில் சித்திரங்களாகக் காண்கிறோம். ஏழிசையே உயிராக வாழ்ந்த ஏழு நாதோபாசகர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து கோத்த இசை மணி மாலை இது. வானவில்லின் ஏழு வண்ணங்களிலும் ஒளி மகிமையை ஒளியாக்கி அளித்திருப்பவர் ஓவியர் திரு ராஜம் அவர்கள்.

1. கான சுதந்திரம்

தான்ஸேனின் கானத்தை விடத் தனது சாம்ராஜ்யத்தில் சிறந்த பொருள் எதுவும் கிடையாது என்பது அக்பர் பாதுஷாவின் திட நம்பிக்கை. ஆனால் தான்ஸேனோ தன் குருநாதனாகிய ஹரிதாசரின் கானமே சிறந்தது என்கிறான். 'அந்த குருநாதன் மனிதர்களுக்காகப் பாடுபவர் அல்ல; மாமன்னரும் அவரைப் பொறுத்த மட்டில் வெறும் மனிதர்தான்' என்றும் அவன் கூறுகிறான். அவ்வளவுதான்! பாதுஷா, தான்ஸேனின் 'சிஷ்ப் பிள்ளை'யாகிறான். இருவரும் ஹரிதாஸரை அடைகிறார்கள். தம்மை அண்டி இசையமுதைப் பருக வருபவர்களுக்குத் தமது ஆன்மாவைத் திறந்து நாத வெள்ளம் பாய்ச்சுகிறார் ஹரிதாஸர். சுற்றுப்புறத்திலுள்ள மான் கணங்களெல்லாம் அங்கு வந்து இசை மேயத் தொடங்குகின்றன. என்னவோ தோன்றுகிறது மன்னனுக்கு; தன் கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்து ஒரு மானுக்கு அணிவிக்கிறான். இசை ஓய்ந்து விடுகிறது; மான்களும் ஓடி விடுகின்றன. பிறகு தான்ஸேனின் கானம் நடக்கிறது. ஆனால் சென்ற மான்களைக் கவர்ந்திழுக்கும் வசியம் அதில் இல்லை. வேண்டுமென்றே அவன் ஒரு தவறு செய்கிறான். அவனைத் திருத்துவதற்காக ஹரிதாஸர் தம் இனிய குரலைச் சுருதியில் கூட்டுகிறார். மறுகணமே மான்கள் மீளவும் அங்கு திரும்புகின்றன; மணி மாலையிட்டு மன்னன் அடையாளம் செய்த அந்த மானும் அந்த வித்துவத்துக்குச் சான்று பகர வருகிறது.

என்னதான் ஆஸ்தான வித்வானானாலும் தான்ஸேனால் ஹரிதாஸரைப் போல மனோதர்மப்படி உள்ளம் திறந்து பாட முடியாது என்பதை உணர்கிறான் பாதுஷா. இப்போது பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்றெல்லாம் சொல்கிறோமே! இதே போல் பாட்டுச் சுதந்திரமும் உண்டு தான்!

2. கானத்தால் சுதந்திரம்

ராவணன் தன் உயிரை வைத்திருந்தது மண்ணிடமோ, பெண்ணிடமோ அல்ல; பண்ணிடம் தான். அவனது இசைப் புலமையை இறைவனே உலகறியச் செய்கிறார்.

தனது உடல் வலிமையால் கைலாசத்தையே பெயர்த்தெடுத்து விடுகிறான் இலங்கேசன்—தான் வழிபடும் சிவபெருமானைக் 'கூண்டோடு கைலாசமாக'த் தன் தலைநகருக்கு எடுத்துச் செல்லத்தான். தேவி நடுங்கி விடுகிறாள். உடனே இறைவன்

தன் கால் கண்டு விரலால் ஓர் அழுத்து அழுத்த பெயர்ந்த மலை பதிகின்றது-அந்த அரக்கன் தலை மீதே. கதறுகிறான் ராவணன். கதறியதாலேயே ராவணன் என்ற பெயரையும் பெறுகிறான். சரீரத் திறத்தால் மலையை எடுத்தவனுக்கு அழுவும் திறனின்றிப் போகிறது. உடனே சாரீரத் திறத்தைக்காட்ட ஆரம்பிக்கிறான். யாழோடு சாமகானத்தை இழைத்து இழைத்து, தன் பக்தியையும் அதில் குழைத்துப் பாடுகிறான். அசுர சாதகமாகத்தான் இருந்திருக்க வேண்டும்! சுருதிகள் காண முடியாத சிவபிரான் சுருதியோடு பொருந்திய அந்த இசையில் கட்டுப்பட்டுக் கால் விரலை விலக்குகிறார். ராவணேசுவரன் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுகிறான். அம்மையப்பனிடமிருந்து வரங்களும் பெறுகிறான்.

3. கல்லும் கனியும் கீதம்

ராவணனின் செருக்குத் தீர்ந்ததுகானக்கலையால். ஆனால் இந்தக் கலையில் இருந்த திறமையாலேயே ஒருசமயம் செருக்குக் கொண்டார் நாரத பகவான். அப்போதுதான் அடக்கத்தின் பெட்டகமான ஆஞ்சநேய சுவாமியைச் சந்திக்கிறார். அவரைத் தம்முடன் இசைப்போட்டிக்கு அழைக்கிறார். நாரதரது மகதி என்ற வீணையைப் பாறைமீது வைத்து மீட்டியபடி பாடுகிறார் அனுமப்பிரான். அவருடைய கானத்தின் சக்தியில் கல்லும் இளகுகிறது; கானம் முடிந்தபின் மீண்டும் இறுகுகிறது. மகதி அந்தப் பாறையிலேயே சிறைப்படுகிறது. இப்போது நாரதர் பாடுகிறார். 'நாரத கானம்' 'நாரத கானம்' என்று நாம் சொல்லும் அந்த சங்கீதத்தாலும் கல்லைக் கரைக்க முடியவில்லை. வீணை இல்லாத நாரதர் வீணையல்லவா? எனவே அனுமனே மீண்டும் கல் உருகப் பாடி அதனை மீட்டுத் தருகிறார்.

'சுத்தமான மனத்தோடு உன்னைப் பாடும் பக்தர்களைப் பாலிப்பவனாயிற்றே நீ' என்று தியாகப் பிரம்மம் ராமனைத் துதித்தார். உள்ளத் தூய்மை குறைந்தால் அங்கு இசையும் நிறைவு பெறாது.

4. 'தீ'ஞ்சுவைக் கானம்

இசையே வசையானால் அதன் வலிமை எவ்வளவு என்பதை ஒரு நிகழ்ச்சி விளக்குகிறது:

சங்கீத திரிமூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் ஆதியப்பர் என்பவருடன் ஒரு முறை கடை வீதியில் சென்றுகொண்டிருந்தார். அப்போது, அவரது பெருமையை அறிந்திராத ஒரு வாணக் கடைக்காரன் 'வெறும் அர்ச்சகராகிய இவருக்கு ஏன் இப்படி நாடெல்லாம் மரியாதை செய்கிறது?' என்று ஏளனமாகப் பேசினான். உடனே அவனுக்கே 'அர்ச்சனை' ஆரம்பமாகி விட்டது. அதுவும் நல்ல சங்கீதத்தோடு. சியாமா சாஸ்திரிகள் இசையால் வசை பாட அந்தக் கடை அப்படியே தீப்பற்றி எரியலாயிற்று.

5. விண்ணளாவிய பண்

கனலை உண்டாக்கும் கானம் புனலையும் தோற்றுவிக்காதா என்ன?

அந்த நம்பிக்கை ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதருக்கு இருக்கத்தான் செய்தது. அந்த மகான் எட்டையபுரம் சம்ஸ்தானத்தில் கட்டை வண்டிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு ஒரே வறட்சி மயமாகக் காட்சி தந்தது. அதைக் கண்ட தீட்சிதர் இதயத்தில் ஈரம் சுரந்தது. அமிருத வர்ஷிணி ராகத்தில் பாடத் தொடங்கினார். அவ்வளவு தான்! ராகம் பொழிந்தது போலவே மேகமும் பொழிய ஆரம்பித்தது. வாடி நின்றவர்களுக்கு அமிருதமாகவே இருந்தது அந்த மழை நீர். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பார்களே! அதே போல் இவருடைய கானத்துடன் வானமும் ஓரேயடியாகக் கொட்டத் தொடங்கவே, அதுவரை 'வர்ஷய' 'வர்ஷய' (பொழி பொழி) என்று பாடிய ஸ்ரீ தீட்சிதர் 'ஸ்தம்பய' 'ஸ்தம்பய' என்று பாடி மழையை நிறுத்தினார். ஐம் பூதங்களும் இசைக்கு வசமாவதை அனுமனும், சியாமா சாஸ்திரிகளும், தீட்சிதரும் நிரூபித்து விட்டார்கள்.

6. இசையால் இறைக்காட்சி

யாவற்றையும் விடப் பெரிய பூதம் அஞ்ஞானம் தான். மாயை பின்னிய இந்த அஞ்ஞானத் திரை நீங்குவதற்காக இறைவனிடம் இசையால் வரம் கேட்ட ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அதே சமயத்தில் நூலால் பின்னிய திரைச் சேலையை விலக்கியது ஓர் அதிசய நிகழ்ச்சி. கடவுளைக் காணவொண்ணாது மறைக்கும் தடைகளையும் தகர்ப்பது சங்கீதக் கலை.

ஏழுமலையானைக் கண் குளிரக் காணச் சென்றார் ஸ்ரீ தியாகையர். பெருமானின் திரு முன்னர் திரை விட்டிருந்தது. தாயைப் பிரிந்த கன்று போல் ஐயனைக் காணத் துடித்த அடியார் 'தெர தீயக ராதா?' (திரையை விலக்கலாகாதா?) என்று கௌளி பந்து ராகத்தில் பாட, தீனபந்துவை மறைத்த திரையும் விலகியது.

7. யாழைப் பழித்த மழலை

இசையினால் இவ்வளவு அதிசயங்களைச் சாதிக்க முடிகிறது என்று கண்டோம். ஆனால் யாழ்க் கருவியில் அபாரத் தேர்ச்சி பெற்ற அந்தத் தருமபுரத்துப்பாணனோ தன் இசையினால் என்னதான் செய்ய இயலாது என்று பிரகடனம் செய்து விட்டான். திருஞான சம்பந்த மூர்த்திகள் தருமபுரத்துக்கு விஜயம் செய்தார். அப்போது அவரை ஒரு பதிகம் அருளுமாறு அவன் கேட்டுக் கொண்டான். அதற்கிணங்கிப் பாலறுவாயரும் அமுத மொழிகளை அள்ளி வீசினார். 'மாதர் மடப் பிடியும்' என்று தொடங்கும் அந்த யாழ் மூரிப் பதிகத்தை யாழில் அமைத்து வாசிப்பது பாணனுக்கு இயலாமற் போயிற்று. அதனால் தனது வித்தையிலே மனம் கசந்து போய் யாழைத் தூக்கி எறிந்து உடைக்க முற்பட்டான் பாணன். அப்போது ஆளுடைப் பிள்ளைகள் அவனைத் தடுத்து நிறுத்தி அம்மையப்பனின் பெருமையை யெல்லாம் யாழில் அடக்கித் தரமுடியாததில் தோல்வி மனப்பான்மை கொள்ள ஏதுமில்லை என்று விளக்கினார்.

எந்தக் குழந்தையின் மழலையுமே யாழைவிட இனியது என்கிறது பொய்யா மொழி. அப்படியானால் உலக அன்னையே ஞானப் பாலூட்டிய தெய்வக் குழந்தையின் மழலையை யாழில் அளிப்பது எப்படி?

ஃ ஃ ஃ

இசையின் இந்த அற்புத சக்திகளை இங்கு சித்திரமாகக் காணும் போது,

ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!

என்று படைப்புக் கடவுளை நோக்கிப் பாரதியாருடன் நாமும் பாடத் தோன்றுகிறதல்லவா?


இசை மணிகள்.1


இசை மணிகள்.2
S.Rajam
கல்கி தீபாவளி மலர்-1961


இசை மணிகள் 3


இசை மணிகள் 4
இசை மணிகள் 5


இசைமணிகள்-6


இசைமணிகள்-7



செவ்வாய்

-சில குறிப்புக்கள்-

அமைதி நிறைந்த இரவு. முழுமதி பால்போல் காய்கிறது. பம்பாய் நகரம் உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. மேல் மாடியில் நின்று கொண்டு இயற்கையின் மோன நிலையில் ஈடுபட்டிருக்கிறேன். நூற்றுக்கணக்கான விமானங்கள் தொலைவிலிருந்து வருவது போன்ற இலேசான ஒலி கேட்கிறது. அது மெல்ல வலிவடைகிறது. களங்கமற்ற வானில் ஈசல் போல் தெரியும் பல உருவங்கள் தென்படுகின்றன. நொடிப் பொழுதில் அவை நகரை அடைந்து கீழே இறங்குகின்றன. அவற்றின் பயங்கர ஒலி இப்பொழுது என்னைக் குலை நடுங்க வைக்கிறது. அவை பெரும் கூண்டுகள் போல் தெரிகின்றன. வீட்டுக்கு அருகேயுள்ள விமான நிலையத்தில் அவை இறங்குகின்றன. விந்தை வடிவான அவ்வூர்திகளிலிருந்து கோர உருக் கொண்ட மனிதர்கள் வெளிவருகிறார்கள். புராணங்களில் கூடப் படித்தறியாத அவ்வரக்க வடிவங்களைக் கண்டு எனக்கு நிலைமை ஒருவாறு விளங்குகிறது. வான வெளியில் எங்கோ வாழும் அரக்கர்கள் புவியை அடிமை கொள்வதற்காகப் படையெடுத்து வந்து விட்டார்கள். என் பலம் கொண்ட மட்டும் கத்துகிறேன்.


''நன்றாக இருக்கிறது. இது என்ன, குழந்தை போல் பிதற்றிக் கூக்குரல் இடுகிறீர்களே? அண்டை அயலார்கள் கூட விழித்துக் கொண்டு விடுவார்கள்'' என்று என் மனைவி என்னை எழுப்புகிறாள். என்ன பயங்கரமான கனவு! இரவு நண்பர் வீட்டில் விருந்துச் சாப்பாட்டைச் சற்று மிதமின்றி ஒரு கை பார்த்து விட்டேன். சாப்பாட்டின்போது மற்றக் கோள்களில் உயிர் வாழ்க்கை இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிப் பலத்த விவாதம். அதன் விளைவு என் உள்ளத்தின் ஆழத்தில் தங்கியிருந்து அளவுக்கு மீறிய உணவின் விளைவாக வேலை நிறுத்தம் செய்த என் வயிற்றின் ஆர்ப்பாட்டத்துடன் கூடி இக்கனவாகப் பரிணமித்திருக்க வேண்டும்! செவ்வாய்க் கிரகவாசிகளின் படையெடுப்பு ஆங்கிலத் திரைப் படத் தயாரிப்பாளருக்கு மிகவும் பிடித்தமான பொருள். அந்தப் படங்களை நான் விரும்பிப் பார்த்த காலமும் உண்டு. அந்தப் படங்களின் நினைவும் மனத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்பட்டு, கனவிலே நான் கண்ட காட்சியைத் திரையிட்டிருக்கலாம்.

கனவு வெறும் கனவுதான். செவ்வாய்க் கிரகத்து அரக்கர்கள் வந்து மனித குலத்தைப் பூண்டோடு அழித்து விடுவார்கள் என நாம் அஞ்ச வேண்டாம். ஹைடிரஜன் குண்டைப் பயன்படுத்தி மனித சமூகம் தற்கொலை செய்து கொள்ளாமல் இருந்தால் சரி!

சூரியனைச் சுற்றும் கோள்களில் புவிக்கு அடுத்தாற் போல் உள்ள கிரகம் செவ்வாய். அது நமக்கு மிக அருகில் வரும்போது சுமார் மூன்றரைக் கோடி மைல் தொலைவில் இருக்கும். வானவியலில் இது மிகக் குறைவானது. ஆகையால் செந்நிறமான இக் கோளைப் பழங் காலத்திலிருந்து வான நூலோர் கண்டு இதன் இயக்கத்தை ஆராய்ந்திருக்கிறார்கள். சுமாரான தொலை நோக்கியில் கூட இதைச் சந்திரனைப் போல் பெரிதாகவும், தெளிவாகவும் காணலாம். இதனால் மற்றக் கோள்களை விட இது பற்றிய தகவல்கள் அதிகமாகத் தெரிந்திருக்கின்றன. ஆனால் கோளின் தன்மை விளங்கி விட்டதா என்றால் அதுதான் இல்லை. சூரிய குடும்பத்திலேயே மிகச் சிக்கலான புதிர் செவ்வாய். ஆனால் இப்புதிருக்கு விடை கண்டால் வான நூலில் பலரது சிந்தனைக்கு இடைவிடாது உள்ளாகியிருக்கும் கேள்வி ஒன்றுக்கு விடை காண முடியும். மற்றக் கோள்களில் உயிர் வாழ்க்கை உள்ளதா என்பதே இக் கேள்வி.

இது பற்றிய விவாதம் ஒரு நூற்றாண்டுகாலமாகவே நடந்து கொண்டு வருகிறது. லோ

நா.கி.நாகராசன்



வாலி ஷியபெரில்லி என்னும் இத்தாலிய வான வியலறிஞர் இந்த விவாதத்துக்கு அடிகோலினார். பல ஆண்டுகள் அவர் செவ்வாய்க் கிரகத்தைத் தொலை நோக்கி கொண்டு ஆராய்ந்தார். அதன் மேற்பரப்பில் குறுக்கும் நெடுக்குமாக நூற்றுக்கணக்கான வரைகள் சீரான வடிவில் காணப்படுகின்றன என்றும், அவை பருவத்தையும், காலத்தையும் ஒட்டி மாறுவதில்லை எனவும் அவர் கூறினார். அவர் இவ்வரைகளைத் தம் மொழியில் 'கால்வாய்கள்' என்று பொருள்படும் சொல்லால் குறிப்பிட்டு விட்டார். இதனால் வந்தது ஆபத்து! வானவியலார்க்கும், மற்றோர்க்கும் கற்பனைக் குதிரை கடிவாளமின்றிப் பறக்கத் தொடங்கியது. செவ்வாய்க் கிரகவாசிகள் வெட்டியிருப்பவை இக் கால்வாய்கள் என்றும், கோள் முழுதும் இத்தகைய பெரும் கால்வாய்களை அமைத்த அவர்கள் எத்தகைய மேதைகளாக இருக்க வேண்டும் என்றும் பலர் அவர்களைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதினார்கள். இதனால் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி வலிவடைந்தது. பெர்சிவல் லவல் என்னும் அமெரிக்கர் தமது பெருஞ் செல்வம் அனைத்தையும் இதில் ஈடுபடுத்தி, சிறந்ததொரு வானவியல் நிலையமொன்றை இந்த ஆராய்ச்சிக்கெனவே நிறுவினார். அவரும் பல ஆண்டுகள் இந்த ஆராய்ச்சியைச் செய்து ஷியபெரில்லி கூறியது அனைத்தும் உண்மை என்று முடிவு கட்டி இக் கருத்தை ஆணித்தரமாக வெளியிட்டார். செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் மிக அருமையான பொருள் என்றும், துருவப் பகுதிகளில் பனிக்கட்டியாக உறைந்து கிடக்கும் நீர், கோடையில் உருகும்போது அது சற்றும் வீணாகாமல் அக் கிரகத்தில் வசிப்போர் எங்கெங்கும் கால்வாய் வழியே கொண்டு சென்று சிக்கனமாகப் பயன்படுத்துகிறார்கள் என்றும் அவர் கூறினார். இத்தகைய மாபெரும் பாசனத் திட்டத்தை அமைக்க வல்லவர்கள் நம்மை விட அறிவிற் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வெறும் வாயை மெல்லும் கதாசிரியர்களுக்கு இத்தகைய தூண்டுகோல் கிடைத்தால் பிறகு கேட்கவா வேண்டும்? செவ்வாய்க் கிரகவாசிகளது வாழ்க்கையையும், அவர்களது நாகரிகத்தையும், இன்ப துன்பங்களையும் நிலைக்களனாகக்கொண்டு கற்பனை வளமிக்க நூல்கள் வெளியாயின. செவ்வாய்க் கிரகவாசிகளின் மேதைமையைப் பொது மக்கள் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டார்கள். அவர்களோடு தொடர்பு கொள்ளப் பல திறப்பட்ட யோசனைகள் வெளி வந்தன.


ஆனால் லவல் வெளியிட்ட கருத்துக்கள் வான நூலோரிடையே பெரியதொரு புயலைக் கிளப்பிவிட்டன. ''லவல் ஆராய்ச்சி முடிவெனக் கூறும் கொள்கைகள் அனைத்தும் வெறும் புரட்டு. செவ்வாய்க் கோளின் பரப்பில் எவ்விதமான வரையும் தெரிவதில்லை'' என்று பல விஞ்ஞானிகள் மறுத்தனர். விஞ்ஞானத்தின் இன்றியமையாத பண்பான ஆராய்ச்சி நோக்கை உதறித் தள்ளி விட்டு விவாதம், கேலி, வசவு ஆகிய கீழ் எல்லை வரையிலும் சென்று காரசாரமாக நடந்தது. விஞ்ஞான ஆராய்ச்சியாளரிடையே நடந்த இத்தகைய பூசலைப் போல் இலக்கியத்திலும், அரசியலிலும் கூடக் காண்பது அரிது.

இந்த விவாதத்தின் தீவிரம் இப்போது தணிந்து விட்டது என்றாலும், அவ்வப்போது இதன் எதிரொலியைக் கேட்கலாம். செவ்வாய்க் கோளின் மேற்பரப்பில் சற்றுக் கருமையான கோலம் போன்ற களங்கம் இருப்பதை இப்போது பெரும்பாலான வான நூலோர் ஏற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய கோடு சுமார் நாற்பது வரை கோள் முழுதும் பரவியுள்ளன. ஒரு கோடு சில சமயத்தில் மறைந்தாலும் அதே இடத்தில் மீண்டும் தோன்றுகிறது. ஆகையால் அவை அப்பரப்பில் நிலையாக உள்ளதோர் அம்சம் என்றே கூற வேண்டும். சூரிய குடும்பத்தில் வேறு எக்கோளிலும் இத்தகைய வரைகளைக் காண முடியாது. இந்த வரைகளின் தன்மை என்ன? இவை எவ்வாறு தோன்றின என்பதுதான் பிரச்னை.

இன்னொரு வகையிலும் செவ்வாயின் மேற்பரப்பு புதிராக இருக்கிறது. அதில் சில பகுதிகள் மற்றப் பகுதிகளை விடக்

கருமையாகக் காணப்படுகின்றன. நீலப் பச்சை நிற மான இப் பகுதிகளின் அளவும் தன்மையும், பருவத்தை ஒட்டிப் பழுப்பாக மாறிப் பிறகு சாம்பல் நிறமாகின்றன. இவற்றைச் செவ்வாயில் உள்ள பெருங் கடல்கள் என்று முதலில் கருதினார்கள். ஆனால் அவ்வாறு இருக்க முடியாது என்பதற்கு இப்போது போதிய ஆதார மிருக்கிறது. பெருங் கடல்கள் பரவி யிருக்கும் அளவுக்கு அந்தக் கோளில் தண்ணீர் இருக்க முடியாது. செவ்வாயைச் சுற்றிலும் புவியில் உள்ளது போலவே காற்று மண்டலம் உள்ளது. அதில் அநேகமாக நீராவியே தென்படுவதில்லை. துருவப் பகுதி களில் பனிக்கட்டிப் படலங்கள் இல்லை. ஆகையால் செவ்வாயில் நம் புவியில் உள்ளன போன்ற சமுத்திரங் களைப் பார்க்க முடியாது.

கிரகத்தில் நிறம் மாறித் தெரிபவை தாவரங்கள் என்றும், பருவத்தை யொட்டி இவை வளர்ந்தும் உலர்ந்தும் போகின்றன என்றும் ஒரு சிலர் கூறுகின் றனர். இவ்வாறாயின் செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வாழ்க்கை உள்ளது என்பதற்கு வேறு ஆதாரமே தேவை யில்லை. ஆனால் இக் கொள்கையிலும் சில சங்கடங்கள் உள்ளன. புவிக்குக் காற்று மண்டலம் ஒரு போர்வை போல் அமைந்து பகலில் சூரியனது கொடுமையைப் பெரிதும் தணிக்கிறது. இரவிலோ புவியின் வெப்பம் விரைவில் வெளிப்பட்டு அது ஒரேயடியாகக் குளிர்ந்து போகாமல் தடை செய்கிறது. இதற்குக் காற்றில் உள்ள நீராவி துணை செய்கிறது.





ஆனால் செவ்வாயில் உள்ள காற்று மண்டலத்தின் அளவு மிகக் குறைவு. அதில் நீராவியும் இல்லை. அதனால் பகலில் சூடேறும் நிலம் இரவில் அமிதமாகக் குளிர்ந்து விடும். இவ்வளவு தீவிரமான வெப்ப மாறுதல்கள் உள்ள உலகில் தாவரங்கள் வாழ்வது எளிதல்ல. தாவரங்கள் வாழத் தேவையான நீர் இரவில் பனிக் கட்டியாக உறைந்து போகும். இதில் சிறிது பகலில் உருகினால் ஈரமற்ற காற்றில் உடனடியாக அது ஆவி யாகி மறைந்து விடும். அது தாவரத்துக்குப் பயன் படுவ தெங்ஙனம்? இத்தகையதொரு சூழ்நிலையில் பிழைக்க வல்ல தாவரம் காற்றிலே மறைந்திருக்கும் அற்ப ஈரத்தையும் ஏற்று வளரவல்ல விசேஷ வகை உயிராக இருக்க வேண்டும். இத்தகைய பண்புகள் கொண்ட எளிய வடிவான தாவரங்கள் செவ்வாயில் இருக்கக் கூடும் என்றே இக்காலத்தில் கருதுகிறார்கள்.

இது உண்மையாயின் வேறொரு முக்கியமான பிரச்னை எழுகிறது. செவ்வாய்க் கோளில் வசதியற்ற சூழ்நிலைக்கேற்றவாறு தம்மை மாற்றி யமைத்துக் கொண்ட உயிர் வகைகள் அங்கு எவ்வாறு தோன் றின? நம் புவியில் மிகவும் எளிய உயிர் வகைகள் ஆதியில் தோன்றிப் பரிணாமப் பாதையில் படிப்படி யாக முன்னேறி இப்போது உள்ள ஆயிரக்கணக்கான விலங்குகளாகவும், தாவரங்களாகவும் ஆயின. இவை ஒவ்வொன்றும் தத்தம் சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றன. ஆதியில் உயிர் வாழ்க்கை தோன்ற மிகவும் ஏற்ற சூழ்நிலை புவியில் இருந்ததால் தான் முதல் உயிர் தோன்ற வகை ஏற்பட்டது. ஆனால் செவ்வாயில் தற்போ துள்ள நிலையில் எளிய உயிர் முதலில் தோன்றச் சூழ் நிலைக்கேற்பத் தன்னை மாற்றி யமைத்துக் கொள்வது என்பது இயலாததொன்று. ஆகையால் இப்போது அங்கே இருப்பதாக விஞ்ஞானிகள் கருதும் உயிர் அங்கே எவ்வாறு தோன்றியது?

இந்தச் சிக்கலுக்கு விடை காண ஒரே வழிதான் உண்டு. இப்போது செவ்வாயில் உள்ள சூனியமும், வறட்சியும் மிகுந்த நிலை எப்போதும் இருக்கவில்லை என்று முடிவு செய்ய வேண்டும். ஒரு காலத்தில் அது காற்று வளமும் நீர் வளமும் நிறைந்த உலகமாக இருந்திருக்க வேண்டும். அப்போது அங்கே பல திறப்பட்ட உயிர்கள் தோன்றிக் கோடிக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து பரிணாம வழியில் முன்னேறி யிருக்கலாம். பிறகு காலப் போக்கில் சூரிய சக்தியின் ஏற்றத் தாழ்வினாலோ வேறு காரணங்களினாலோ அதன் சூழ்நிலை மாறத் தொடங்கி யிருக்கும். அதனால் கோளைச் சூழ்ந்திருந்த காற்று அதிலிருந்து சிறுகச் சிறுக வெளியேறி வானவெளியில் மறைந்து விட்டது. நீர் ஆவியாகிக் காற்றுடன் கலந்து வெளியேறத் தொடங்கியது. இதனால் அதில் வாழ்ந்த உயிர்கள் மடிந்து மறைந்தன. பல்வகை உயிர்களின் இடுகாடு போன்ற அவ்வுலகில் எளிய தாவர வகைகள் சில மட்டும் இன்னும் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு கொள்வதில் ஒரு நன்மை உள்ளது. செவ்வாய் கடந்த காலப் பெருமையை எண்ணிப் பெருமூச்சு விடும் கிழட்டு உலகம் என்றால் அதன் பரப் பில் காணப்படும் வரைகளை விளக்குவது எளிது. லவல் கருதியது போல் அவை மனிதரது வேலையாகவே இருக் கலாம். அதன் வளமிக்க நாட்களில் அங்கே மனிதர்கள் தோன்றி, அறிவு வளர்ச்சியில் மேம்பாடு அடைந்து, விஞ்ஞானப் பெரு வாழ்வு கண்டு பயன் அடைந் தார்கள். கோளில் உள்ள நீர் குறைவது கண்டு அவர்கள் தமது திறமையையெல்லாம் பயன்படுத்தி, கோள் முழுதும் கால்வாய் வெட்டி இருந்த நீரைப் பயன்படுத்திக் கொண்டு உயிர் பிழைக்க முயன்றிருக் கலாம். அதுவும் பயன்படாமற் போகவே அவர்கள் மடிந்து போயிருக்கலாம்.






செவ்வாயின் துருவப் பகுதிகளில் பனிக்கட்டி உருகுதல்

ஆனால் அவர்கள் மடிந்து விட்டார்கள் என்று எவ்வாறு நிச்சயமாகக் கூறமுடியும்? அவர்களில் ஒரு சிலர் அங்கே இன்னும் கடின வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கலாம். புவியை விட்டு நீங்கி, வாணத்தின் உதவி கொண்டு வான வெளியைக் கடந்து மனிதன் செவ்வாயை அடையும் நாள் தொலைவில் இல்லை. அவ்வாறு முதன் முதல் அங்கு செல்லும் மனிதனே இக் கேள்விக்கு ஐயமற விடையளிக்க முடியும். மேம்பாடுடன் வாழ்ந்த செவ்வாய் மனிதரது பெரு நகரங்களையோ, சூனியத்திலும் வாழக் கற்ற ஒரு சில உயிர்களையோ அவன் காணக் கூடும்.

ரஷ்ய விஞ்ஞானியொருவர் அண்மையில் வெளியிட்ட கொள்கையொன்று உண்மையாயின், செவ்வாயில் அறிவுத் திறன் மிகுந்த மானிடர்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதி. செவ்வாய்க் கோளை இரு சந்திரன்கள் சுற்றுகின்றன. அவற்றின் இயல்புகளில் சில விசேஷமாக உள்ளன. செவ்வாயின் சந்திரன்கள் சூரிய குடும்பத்திலேயே மிகவும் சிறியவை. அவற்றுள் ஒன்று ஐந்து மைல் அளவும், மற்றது பத்து மைல் அளவும் கொண்டவை. அவை கோளுக்கு மிக அருகில் சுற்றுகின்றன. அவற்றுள் ஒன்று கிரகத்தைப் போல் மும்மடங்கு வேகத்தில் சுழலுகிறது. அதனால் அது கிரகத்தில் மேற்கே உதித்துக் கிழக்கே அத்தமிக்கும்! இதனால் இவை இயற்கைச் சந்திரன்கள் அல்ல என்றும், அக் கிரகவாசிகள் எப்போதோ அனுப்பிய செயற்கைச் சந்திரன்கள் இவை என்றும் அந்த ரஷ்ய வானவியலறிஞர் கூறுகின்றார்.

சந்திரனை ஆக்கும் திறன் படைத்த அம்மனிதர்கள் கிரகத்தில் வசதி குறைவது கண்டு வேறு கோள்களை ஏன் நாடிச் செல்லவில்லை? அவர்கள் அவ்வாறு செய்திருக்கவும் கூடும். ஏன், லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவர்கள் நமது புவியை நோக்கிப் படையெடுத்து வந்து பல காலம் வாழ்ந்திருந்து விட்டு மறைந்திருக்கலாம். நமக்கு முன் எப்போதோ வாழ்ந்த அம்மனிதரைப்பற்றி நமக்கு இதுவரை தெரியாமல் இருக்கக்கூடும் அல்லவா?


அது எவ்வாறாயினும் செவ்வாய்க் கோளையடைய வல்லவர்கள் செய்யும் முயற்சியை நாம் வரவேற்க வேண்டும். அங்கே அடையும் மனிதன், தனக்கு முன்னரே அங்கே சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்களது அடையாளங்களைக் கண்டால் அவனது செருக்கு மறைந்து அவன் பணிவு உணர்ச்சியைப் பெற முடியும். அறிவு வளர்ச்சி எவ்வளவு முன்னேறினாலும் கடைசியில் இயற்கைச் சக்திகளுக்கு மனிதன் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும் என்ற உண்மையையும் செவ்வாய்க் கோள் ஆராய்ச்சி அவனுக்கு நினைவூட்டும். நமது புவியும் அதன் கதியை ஒரு நாள் அடையப் போகிறது என்ற உண்மையை அது அறிவுறுத்தினால் சண்டையையும், போராட்டத்தையும் ஒழித்து ஒன்றுபட்டு வாழ்ந்தால் நாம் மேலும் பல காலம் இங்கே பிழைத்திருக்க முடியும் என்ற உணர்வு நமக்கு ஏற்படும்.










செவ்வாய்க் கோளில் பருவங்களை யொட்டி நிகழும் மாறுதல்கள்











வஞ்சப் புகழ்ச்சியணி

ஸ்ரீஹரி

''வணக்கங்கள் பல அண்ணலே! பண்டொருகாலேற்பட்ட நிகழ்ச்சிகளின் விளைவாக யான் சொல்லொணு இன்னல்களுக்குள்ளாகியுள்ளேன். யாரிடஞ் சொல்லி என் மனச் சுமையைக் குறைத்துக் கொள்ளலாமென்று சிந்தித்தக்கால் தாங்கள் என் சிந்தையிற்றோற்றம் பெற்றீர்கள். ஈண்டு விரைந்து வந்துள்ளேன். கனிகூர்ந்து செவிமடுத்திட வேண்டுவன்.''

கண்ணெனத் தகுமாய எண்ணையும் எழுத்தையும் கசடறக் கற்ற, பண்டைய பண்புகளுக்கு உறைவிடமாய பண்டிதன் ஒருவன். பெயர் ஏனான். ஔவையின் பொன்மொழிகளில் 'கொடிது கொடிது' என்று விளக்கப்பட்ட அவ்வற் கடல்கள் அனைத்திலும் முழுகி எழுந்து 'முற்றும் நினைந்தார்க்குத் துளிர்கிலே' என்ற நிலையை அடைந்தவன். 'வறுமையிற் செம்மை' என்னும் நற்பண்பின் களஞ்சியம். அவன் தென்னகத்தைச் சார்ந்த ஒரு குறுநில மன்னனிடம் ஒருகால் மேற்கண்டவாறு சொன்னன்.


இதைச் செவிமடுத்த மன்னன், ''ஐயா! பண்டிதரே! கொஞ்சம் விளக்கமாகத் தெரிவிப்பீர்களா? உங்கள் குறை என்னவென்பதே புரியாத புதிராக இருக்கிறதே!'' என்ருன்.

பண்டிதன் பதில் பகர்ந்தான். ''மன்ன, கேண்மின்! ஆதி பகவன் படைப்பினுள் நிலவும் அரியதொரு சக்தி அவன் விலாசம். அண்டங்கள் பதினான்கிலும் அதற்கப்பாலும் உள்ள பொருள்கள், தோற்றம் பெற்றவை பெருதவை யாவும் இச்சக்தியின் அருட்பரப்புக்குட்படாமலிருத்தல் இயலாது. மானிடப் பிறவியெடுத்தும் இச்சக்தியின் அருள் நிலத்திருக்கிறது. மனிதன் பல துறைகளில் செயல்படுமாறு ஊக்குவித்தற்குக் காரணமாயிருப்பது இச்சக்தியின் அருள் விலாசமேயாகும். தான் வாழ வேண்டும், தன் வாழ்க்கை ஒப்பற்ற சிறப்பெய்தியதாயிருத்தல் வேண்டும், அதைப் பெறுவதற்குத் தன்னுல் ஆவனவெல்லாம் செய்திட வேண்டும், முயற்சி பெரு முயற்சி என்னும் வகையில் செயல் புரிதல் வேண்டும் என அம்மனிதனுக்கோர் ஆற்றலைக் கரந்ததும் இச்சக்தியேதான்.

''ஆனல், நன்னெறியைத் தனது நல்லாசானருளால் ஐயந்திரிபறக் கசடறக் கற்றுத் தெளிந்தவன், அந்நன்னெறிக்கு உடன் மறையான நல்வழிக்குத் தக்க முறையில் நிற்பதையே தனது நோன்பாக ஏற்றுச் சிறந்து வருவான்.

''தன்நலத்தை மட்டும் குறிக்கோளாய் ஏற்றுப் பிறிதொருவனுக்குச் சொல்லொணு இன்னல்களையும் படவொணுக் கொடுந்துயரையும் விளைவிப்பதாயின்..''

அரசன் இடைமறித்து, ''அவ்விதம் செயல் புரிய முனைந்தோனே அறிவிலிகளின் அரசன் என்றே ஏற்க வேண்டும். அவன் அற்பர்களில் அற்பன். மூர்க்கர்களில் மூர்க்கன். நன்னெறி மறந்து நல்வழி துறந்து கொடுவினை புரியுமவனைத் தக்கபடி தண்டித்தல் கொற்றவனின் கடமையாகும். அத்தகைய கயவன் யார்?'' என்ருன்.



பண்டிதன் பகர்ந்தான்: ''அரசே! 'ஆறுவது சினம்!' இதை முதலில் நினைவூட்ட அனுமதியுங்கள். பிறகு 'அறஞ்செய விரும்பு'வோம். தாங்கள் யாரென்றறிய விரும்பும் தூர்த்தன் அர்ச்சுன னென்பான். அச்சுதனைத் துணைவனுய்ப் பெற்றவன். கண்ணன் காண்டீபனுக்கோர் கவசமெனக் கனிந்துதவி பாரதப் போரில் வெற்றியைத் தந்தான். இன்று ஈண்டு இலன். தங்களால் அவனைத் தண்டிக்க இயலாது. அன்று அவன் செயலால்—இல்லை, இல்லை. வில் செயலால், அவன் பெற்ற குறிக்கோள் அவனுக்குப் பயனற்றதாயிற்று. அச்செயலால் இன்னலுற்றவர்களுள் யானுமொருவன்.''

இதைச் செவியுற்ற செம்மல் வியப்புற்ருன். பண்டிதனைப் பார்த்து, ''விடுகதை போலவே மறுபடியும் விளம்புகிறீர்களே!'' என்ருன்.


''மன்னவ! பாரத யுத்தத்தில் தான் வெற்றி பெற்றிடற்கின்றியமையாததெனப் பாசுபதம் பெற்றிட விரும்பினன் பார்த்திபன். இதைத் தன் குறிக்கோளாக்கிப் பரமசிவனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான் குந்தி பெற்ற குணச் செல்வன். அன்பருக்கன்பன் என்றும் அண்டினோர்க்கடிமையென்றும் நான்மறைகளும் ஒருமுகமாய்த் தெளிவிக்கும் பரமன் உளங்கனிந்து பார்த்திபனுக்குப் பாசுபதத்தை ஈந்தருளினன். தனது பெருமுயற்சியாற்றன் குறிக்கோளைச் சாதித்தான் தனஞ்சயன். ஆனல் அப்பாசுபதத்தைப் பாரதப் போரிலோ அதன் பின்னரோ பயன்படுத்த வாய்ப்பில்லாமற் போயிற்று.''

மன்னனின் வியப்புப் புன்முறுவலாய் மிளிர்ந்தது. ''அது சரி. இன்னலுக்கிலக்கானவர் பலர் என்றுரைத்தீர். அவர் யாவர்? எவ்வகை இன்னலுக்கிலக்கானீர்? குறிப்பாகத் தங்களுக்குற்ற இன்னல் யாது?'' என்ருன்.

''ஐய! விளக்கமிதுதான். கடலையில் நின்று பேய்க் கூத்தாடும் பித்தன் பிறைசூடிய எம்பெருமான் கருணைக் கடல் அன்றோ! அர்ச்சுனனின் தவத்துக்கிரங்கி அவனுக்கருள் புரிந்திட முனைந்தான். அப்பித்தனின் சித்தப் போக்கு தனிப்பட்டதாய்த் துலங்கிற்று. நமது மனம் சொல், செயல்களை அளந்திடும் அளவு மானிடர்களாலப்பித்தனவனின் சித்தப் போக்கை அளந்திடல் முறையாகுமா? அர்ச்சுனனுக்கருள் புரிய அவன் முனைந்த முறை முற்றும் விசித்திரமானது. அத்தனும் அம்மையும் வேட தம்பதிகளாய் வேடம் பூண்டு விஜயன் முன் தோன்றி அவனை வம்புக்கு இழுத்தனர். வெகுண்டெழுந்த விஜயன் விடையேறும் பிரானுடன் சமர் தொடுக்கத் துணிந்தான். தம் மகவு, அதன் பட்டுப் பாதங்களால் தமது மார்பினுதைப்பதைப் பெற்றோர் விரும்பி ஏற்பது போல் காண்டீபன் எய்த கணைகளையெல்லாம் தன்னைத் துதித்தேற்றுங்கால் தூவிய மலர்களெனவே உவந்தேற்ருன் உமையொரு பாகத்தான். இக்களிப் போரில் காண்டீபனும் சளைக்கவில்லை. இக்களிக்கூத்தினிடையில் காண்டீபத்தின் நாணையறுத்தான் முக்கண்ணன். இதனுல் காண்டீபன் கடுஞ் சினமுற்ருன். தான் செய்வது யாதெனத் தெளிந்திடாத நிலையில் விற்கட்டையால் ஈசனின் சடைமுடி மேல்.......ஐயோ எப்படிச் சொல்வேன் அரசே!'' என்ருன்.

அரசனின் கண்களில் பரவிய நீர்த்துளி பார்வையை மங்கச் செய்தது. ''ஓங்கி அடித்தான்; உம்! பிறகென்ன நேர்ந்தது?'' என்று பண்டிதனை நோக்கிக் கேட்டான்.

''பிட்டுக்கு மண் சுமந்த வரலாற்றையருளிய பரஞ்சோதி முனிவர் பரமனின்



முதுகிற் பிரம்படி பட்டதும் என்ன நேரிட்டதென்பதைப் 'பாண்டியன் முதுகிற்] பட்டது...' என்று தொடங்கும் பாக்கள் வாயிலாக விளக்கியுள்ளதை நினைவுபடுத்துகிறேன், அரசே!''

என்று சொல்லிய பண்டிதன் மேலும் தொடர்ந்துரைத்தான்:

''அண்ட சராசரங்கள் யாவும் கிடுகிடுத்தன. செஞ்சடையைச் சேர்த்துக் கட்டியிருந்த நாகம் அவ்வடியின் அதிர்ச்சியில் சுடுபட்டு வஞ்சகர் மனத்தினுள் தஞ்சம் புகுந்தது. இளம்பிறையோ அருக்காற்றுக் குணத்தோரின் மனத்திற் புகுந்து நிரப்பி அவரைச் சித்தஞ் சிதைவுறச் செய்தது. தெறித்து வீழ்ந்த கங்கையோ ..... சிந்தையை அடக்கிச் சிந்தையை யடக்கிச் சிவன்பாற் செலுத்துவோரின் அருள் வாக்கின் வழி பெருக்கெடுக்க முனைந்தது. பரமனின் கையிலிருந்த பிச்சை யெடுக்கும் பிரம்ம கபாலமோ தெறித்து விடுபட்டு விண்ணிற் பறந்தது. எங்கு போயிற்றோ—எத்தனை தூரம்தான் சென்றதோ! சில நாட்கள் முன் வரையில் அப்பிச்சையோட்டின் வரலாறு யாரு மறியாததாயிருந்தது........''

அரசனின் வியப்பு களிப்பாய் மாறிற்று. பண்டிதனின் கற்பனையை மிகவும் சுவைத்தவனும் ''பிறகு?'' என்று வினவினான்.

''சில ஆண்டுகளுக்கு முன்னும் யான் சிவாலயத்தில் நின்று இறைவனின் அருளுக்காக விரித்த கரங்களுடன் வேண்டி நின்றக்கால் அன்று விண்ணகத்து வீசப்பட்ட ஓடு எனது அங்கையில் வந்து வீழ்ந்தது அரசே....!''

பண்டிதன் கதையை முடிக்க வில்லை. அதற்குள் அரசனின் களிப்பு, ஆனந்த நிலையை அடைந்தது. ''ஆஹா! நன்று! நன்று'' என்று அவன் ஆர்ப்பரித்து ஆனந்தக் கூத்தாட்டத்துடன், ''பண்டிதரே! மெச்சினேம் உமது கற்பனையை! இதற்கிணையாக என்ன பரிசு கொடுத்தாலும் மிகையாகாது. போதும்! போதும்! எமது செவிகளையும் உமது கற்பனைக் கங்கையால் நிரப்பி எம்மை ஆனந்தக் கடலில் ஆழ்த்தி விட்டீர்கள். அப்பிச்சையோட்டைக் கையிலேந்திய பரமன் மக்களின் பக்தியைப் பிச்சை கேட்டுத் திரிகிறான். தங்களிடம் வந்துற்ற அப்பாத்திரத்தில் யாது வழங்கிட வேணுமென்பதை யாம் அறிவோம். எமது அன்பளிப்பைக் கனிவுடன் ஏற்க வேண்டுவன். நன்னெறி நல்வழிகளைக் கற்பிக்கச் சிறப்புடன் கல்லார்க்கும் கற்றவர்க்கும் எந்நாளும் தாங்கள் கற்பித்து வரவும். நம் நாட்டு வருங்காலச் செல்வர்கள் பண்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்த வற்றாத ஊற்றென விளங்குவார்களாக!'' என்றான்.


"தீபாவளிக்கு உங்க ஆபீஸ்லே எத்தனை மாச சம்பளம் போனஸா தர்றாங்க?........."
'போனஸா, எங்க ஆபீஸ்லேதானே?...'தீபாவளி மாசம் ஒண்ணுக்குத் தானே சம்பளமே தர்றாங்க!........."
"ஏண்டி வீணாக் கோவிச்சுக்கிறே? அடுத்த தீபாவளிக்காவது நல்ல ஜரிகை போட்ட புடவையா வாங்கித்தர்றேன்! பேசாமேஇரு!"
"இந்தத் தீபாவளிக்கு ஸ்பெஷல் ஸ்வீட்டுகள் போட்டிருக்கோம்..!"
"அட! போன தீபாவளிக்குப் போட்டது அதற்குள் ஆகிவிட்டதா?"
ஹாஸ்ய வெடிகள்
"மாப்பிள்ளே! தீபாவளிக்குக் கைக்கடிகாரம் கேட்டேளா?... அது எதுக்கு இத்தனூண்டு.... நல்லதா பெரிசா ஒரு அலாரம் கடிகாரமே வாங்கிட்டேன்! சரிதானே?................"
தீபாவளியை முன்னிட்டு நமது அலுவலகத்திற்கு விடுமுறையாதலால், நாளைய தினம் நமது பத்திரிகை வெளிவராது!
— அதற்கப்புறமும் கூட!
'புஸ்வாணம்' நிர்வாகி—
"எல்லாம் நல்லா வெடிக்கும் தம்பி! கவனுமன்னு ஒண்ணு வெடிச்சுக் காட்டட்டுமா?....."
"ஒண்ணே மட்டும் வெடிச்சுக்காட்டி ஏமாத்திடலாமுன்னு பார்க்கிறியா? எல்லாத்தையும் வெடி!......"



கவிதைத் தெய்வம்

மங்கியதோர் மாலையிலே,
தனிவழியிற் சென்றேன்;
வையமெலாம் பேரழகின்
வடிவமெனக் கண்டேன்!
அங்கதனைப் போற்றுதற்கு
வார்த்தையொன்று மின்றி,
ஆனந்தம் கரைபுரள
வாய்குழறி நின்றேன்!


பொங்கியதென் நெஞ்சினிலோர்
புத்துணர்வுக் கடல்தான்!
பொலபொலெனக் கலகலெனப்
பூந்தமிழ்த்தேன் சிந்தித்
தங்கமணித் தாமரைபோல்
பூத்தாள்ஆங் கோர்பெண்!
தமியனை ஆட் கொண்டாள்; ஆம்
கவிக்கன்னி அவளே!

அன்றுமுதல் இன்றுவரை
பேதையன்என் அகத்தே
ஆடுகின்றாள்; எனைக்கவியாய்
ஆட்டியும்வைக் கின்றாள்!
குன்றனைய தாயன்பைக்
கொட்டுகின்றாள்; சிலகால்,
கொடியவர்போல் வாடவிட்டுக்
குளிர்நகைசெய் கின்றாள்!

தொண்டுமிகு பணிப்பெண்போல்
தோன்றிவினை புரிவாள்;
துடுக்கொடுதான் தலைவியெனும்
செருக்குடனும் திரிவாள்!
என்றாலும், இவளன்பிற்
கிணையே(து)? இங் கிவளே,
என்வாழ்வை மலர்த்தவந்த
எழிற்காதல் தெய்வம்!

ஆடிவரும் மழலையென
நாடியென்முன் நிற்பாள்;
அழகொழுகக் கலகலென
அமுதநகை சொரிவாள்!
'வாடி'யெனக் கைபிடிக்க
நாடுமெனைக் கண்டால்,
மணப்பெண்போல் நாணியுடன்
மறைந்தொளிந்து கொள்வாள்!

கூடிமகிழ்ந் திடத்துடியாய்த்
துடிக்குமெனை நோக்கி
குறும்புநகை செய்துவிழிக்
கோணத்தாற் கொல்வாள்!
மோடிபல செயினும்உடன்
தோடிவந்தோர் தருணம்,
முற்றுமெனைப் பற்றியின்ப
முழுமையிலாழ்த் திடுவாள்!





உனக்கும் எனக்கும்...

திருச்சிற்றம்பலக் கவிராயர்

உனக்கும் எனக்கும் இது தெரியும்—இதை
உணரா தார்க்கு எது புரியும்?

ஒளியைத் தேடும் விழிபோலே—எழில்
உணர்வைத் தேடும் கவிபோலே
துளியைத் தேடும் பயிர்போலே—உயிர்த்
துணையைத் தேடி நாமிருந்தோம் (உனக்கும்)

வார்த்தையின் துணையை நாடவில்லை—நாம்
வாய்திறந் தொருசொல் பேசவில்லை
பார்த்தோம், பார்த்த பரவசத்தில்...நம்
பரம்பரை உறவைப் புரிந்துகொண்டோம் (உனக்கும்)

கண்ணும் கண்ணும் கலந்திருந்தோம்—அந்தக்
காணாப் பொருளைக் கண்டிருந்தோம்
எண்ணம் பாலும் தேனாகி—நாம்
இதயம் மாறிப் புகுந்திருந்தோம் (உனக்கும்)

கடலிற் கலந்த நதிபோலே—இசை
காற்றிற் கலந்த சுகம்போலே
உடலிற் கலந்த உயிர்போலே—நாம்
ஒருவரி லொருவர் உறைந்திருந்தோம் (உனக்கும்)

தன்னை இழந்தோம்; தாமானோம்—வையத்
தத்துவப் பொருளே நாமானோம்
முன்னை மறியாப் புதுமையிலே—ஜீவன்
முக்தி நிலையில் முகிழ்த்திருந்தோம். (உனக்கும்)



காதற் சுரங்கம்

திருச்சி வாசுதேவன்

அவளுள்ளம் என்காதற் சுரங்கம்—உணர்ச்சி
ஆனந்தப் பண்பாடும் அரங்கம்—என்றும்
அவளுள்ளம் என் காதற் சுரங்கம்!

புவனத்திற் காணாத புதுமை—ஒளிர்
பொன்னாலே செய்தவுயிர்ப் பதுமை!
கவனத்தில் நிலைநின்று வாழும்—அன்பின்
கனியுண்டு மகிழ்பிறவி ஏழும்
அவளுள்ளம் என் காதற் சுரங்கம்!

கனவெல்லாம் இணைவிழியில் நீந்தும்—என்றும்
கருத்தெல்லாம் செவ்வதரம் ஏந்தும்!
நனவெல்லாம் பூரிப்பில் தூங்கும்—அழகு
நலமெல்லாம் நாணத்தில் தேங்கும்
அவளுள்ளம் என்காதற் சுரங்கம்!

முகிலிட்ட விண்காணும் மயிலும்—ஆட
முயலாமல் அவள்சாயல் பயிலும்!
துகிலிட்ட கலசம்போல் வருவாள்—என்றன்
துயர்நீக்கிச் சுகமெல்லாம் தருவாள்
அவளுள்ளம் என்காதற் சுரங்கம்!







சுடர் காட்டும் திசை

இமயத் தமிழன்

தென்றல் குழைத்தசெஞ் சாந்தினைக் கொட்டிச்
சிவந்த கலிங்கம் எடுத்துடுத்தி - நதி
முன்றிலிற் பூம்புனற் கம்பளம் போட்டுவெண்
முத்தும் பனித்துளிக் கச்சணிந்து - மலைக்
குன்றில் விளைந்தசெந் தேன்கொணர்ந்து இதழ்க்
கொவ்வையிற் கொட்டிக் குளுகுளென - அங்கு
நின்று குழைகிறள் தாமரைப் பெண்கரம்
நீட்டி எழுகிறான் செங்கதிரோன்!

வானும் கடலும் புதியஒளி! பாடும்
வாவியும் காடும் புதியஒளி! - பொழில்
கானும் மரங்கள் மலர்களெல்லாம் வயற்
கானிகள்தோறும் புதியஒளி! - மனக்
கானகம் மட்டும் ஒளிரவில்லை; இந்தக்
கண்களுக் கொன்றும் புலரவில்லை! - எந்த
மோனத் தவமும் புரியவில்லை இருள்
மூலையில் வாழத் தெரியவில்லை!

தென்னரு தமிழாய்த் திகழ்பவனே! எந்தன்
சித்தம் மலரக் கமழ்பவனே! - குறக்
கன்னி கரம் தொட்ட வேலவனே! கதிர்
காமம் குடிகொண்ட காவலனே! - ஓடும்
பள்ளத்து நீரெனத் தாவிவந்தேன் உந்தன்
பாதம் சரண்புக ஆவிவந்தேன் - என்
உள்ளக் கனகல் உடைவதெப்போ? இருள்
ஓடிஎன் நெஞ்சம் தெளிவதெப்போ?

கண்கள் திறந்திட நான் எழுந்தேன் - சுடர்
காட்டும் திசையிலே நான் நடந்தேன் - அங்கோர்
வண்ணச் சிலைவிளக் கேந்திவந்தாள் என்னுள்
வாலைக் குமரியாய் நீந்தி வந்தாள் - அன்னி
உன்னைத் தன்பாடும் ஆசைவெறி! என்றாள்
ஊத்தைப் புலைக்குலம் தந்தநெறி - அவள்
கண்ணைத் திருப்பி நகைத்துவிட்டாள் என்
கைகளைப் பற்றி எழுப்பிவிட்டாள்!

"இந்த விளக்கு அணைந்துவிட்டால், உன்னை
இன்ப விளக்கே இருக்கு"தென்றாள் - அவள்
விந்தை மொழியோ புரியவில்லை - முக
வெண்ணிலாக் கூடத் தெரியவில்லை - அவள்
"கந்தன் எனக்குனைக் காட்டிவைத்தான்" எனக்
கைத்தலம் பற்றி ஒளிக்கரைந்தாள்! - அவன்
சொந்தமா யின்னும் சுழலுகிறேன் - கவிச்
சோலையில் இன்பம் நுகருகிறேன்.



சொற்கடந்த சௌந்தரியம்...!

'மணிவண்ணன்'

மண்பார்த்து வியக்கின்ற பேரழகு நாயகியாள்
எண்பார்த்து எழில்பார்த்தும் பண்பார்த்த பண்மொழியாள்
பெண்பார்த்தும் பித்தடையும் புதியகலைப் புன்னகையாள்
பின்பார்த்து முன்பார்த்தும் பூதலத்தில் சரிபார்த்து
இன்றில்லை நேற்றில்லை இனியில்லை என்றுறுதி

தன்காப்பிற் படைத்தளித்த தங்கநிறச் செங்கமலம்
மென்காற்றுச் சிலம்பசையத் தென்காற்றுக் குழலசைய
நன்காற்றப் பிறந்ததனிப் புண்ணியமே பெண்ணுருவிற்
பெருகிவரும் காலமெனும் வெள்ளத்திற் கலப்பதற்காய்
இளகிவரும் தேன்கலையாய் எழுந்துவரும் பொன்னுருக்காய்

நான்முகக் கடவுள்தனை தேட்டுவிழி கெட்டுவிழக்
காலைபகல் மாலையிருள் கற்பமெனும் மானிடவர்
காலநிலை மறந்திருந்து தெரிந்தழுந்திச் சிறந்துவரக்
கோலமிகுங் கோகனைக் குத்துவிளக் கொத்ததனிச்
சித்திரமே புத்தழகே கத்தூரி மணக்கின்ற

கற்பகமே அற்புதமே பற்பலவாம் சிற்பங்கள்
ஒத்திடவே தினந்தோறும் கணந்தோறும் நினைந்தார
நினைப்பினிலே பிறந்திருந்து நினைப்பினுளே உறைந்திருந்தாய்
எத்தனைபல் யுகங்களெனும் நித்தியமாய் நின்றிருந்தாய்
இத்தனையும் சொன்னதற்குப் பொருளில்லை ; சொற்கடந்தாய்.

நின்று விட்டேன்!

சாலை இளந்திரையன்

பூமழை சிந்திடும் காவும்—அது
போலே விரிந்திடும் பாவும்
மாமழை பொங்கிடும் வானும்—அதை
வாங்கி வளர்புவி தானும்
உள்ளம் கவர்ந்தன, -நின்றேன்;—உயிர்
ஓங்கி வளர்ந்தது ;—சென்றேன்...

*


கிழைத் திசை இருள் தன்னை—ஒளிக்
கின்னை பிறுக்கிரை யாக்கி
வாழ வருங்கதிர் கண்டே—பல
வண்ணந் திறந்திடும் ஞாலம்
உள்ளம் கவர்ந்தது, - நின்றேன்;—உயிர்
ஓங்கி வளர்ந்தது ;—சென்றேன்...

★


பொய்கை சிரித்தது போலே—நகை
பொங்கிய அல்லியின் பூவும்
வையை மணலினைப் போலே—ஒளி
வாரி இறைக்கும் நிலாவும்
உள்ளம் கவர்ந்தன, -நின்றேன்;—உயிர்
ஓங்கி வளர்ந்தது ;—சென்றேன்...

★

என்றுயி ரில்குடி யேறி—மன
மெங்கும் ஒளிநகை தூவி
இன்னியல் காவியம் போலே—எனக்
கின்பம் குவிப்பவள் நெஞ்சம்
உள்ளம் கவர்ந்தது, - நின்றேன்;—உயிர்
ஓங்கி வளர்ந்தது ;—சென்றேன்.



PRECISION LATHES



200 C
Medium Duty
Gap Bed Lathe

Approved Suppliers of:

THE NATIONAL SMALL INDUSTRIES CORPORATION LIMITED, NEW DELHI

Different Types & Sizes to Suit Your Needs

Manufactured By:

MADRAS MACHINETOOL MANUFACTURERS LIMITED

(Formerly Known as Abboi Machine Tools Private Ltd.)

SINGANALLUR P. O. - Phone: 3388 & 3389 - COIMBATORE - 5; S. India

CSR

கேரளா சோப் இன்ஸ்டிடியூட்

கள்ளிக்கோட்டை

(கேரள சர்க்கார் ஸ்தாபனம்)

நம் நாட்டு மக்களின் தேவைகளுக்காக கீழ்க்காணும் சோப்புகளைத் தயாரிக்கிறார்கள்

★ உயர்ரக ஸ்நான சோப்புகள்

கேரளா சந்தன சோப்
ரோஜா சோப்
வெப் சோப்
கோல்டார் ஸ்நான சோப்

★ சலவை சோப்புகள்
★ மருத்துவ முறை சோப்புகள்
★ ஷேவிங் சோப்புகள் முதலியன.

அன்றாடத் தேவைகளுக்குக்
கேரளா சோப்புகளையே தேர்ந்தெடுங்கள்

இந்தியாவில் எங்கும் கிடைக்கும்

கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜனேஷன் பாக்டரி

கள்ளிக்கோட்டை

(கேரள சர்க்கார் ஸ்தாபனம்)

அதிக போஷாக்கு சத்துக்களுடன் கூடியதும் சமையலுக்குச் சிறந்ததுமான

"விமலா" மார்க்

சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்

"சுதா" வனஸ்பதி

ஆகியவற்றைத் தயாரிக்கிறார்கள்


பொதுத்துறையிலுள்ள வனஸ்பதி தொழிற்சாலை இது ஒன்றே


விபரங்களுக்கு எழுதவும்

ஜெனரல் மானேஜர்:

கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜனேஷன் பாக்டரி

கள்ளிக்கோட்டை - 5


ஒவ்வொரு பண்டிகையும்
பிரகாசமாகவும் மேலும்
உல்லாசகரமாக இருக்கவும்
உதவுகிறது ... பிலிப்ஸ்
PHILIPS
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
JWTP 5275


Kirloskar
எமது ஆதரவாளர்கள்
அனைவருக்கும் மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள் !
மைசூர் கிர்லோஸ்கர் லிமிடெட்
பந்த்ரபூர் P. O. (மைசூர் ராஜ்யம்)



வீட்டுக்கு வீடு...!

தீபாவளிப் பண்டிகை எல்லோருக்கும் ஒன்று தான். உலகங்கள் ஏழினையும் கிடு கிடுக்க வைத்த நரகாசுரனும் ஒருவன்தான். அவனைத் தேய்த்துக் கொல்லும் நாளும் ஒன்றுதான். ஆனால் வீட்டுக்கு வீடு பண்டிகை யைக் கொண்டாடும் விதத்திலேதான் எவ்வளவு அழகான வித்தியாசங்கள்!

வக்கீல் வீட்டில்: அவரும் அவர் மனைவியும்:–

''சும்மா, உட்கார்ந்திருக்கிற நாளிலே, குழந்தைக்கு ரெண்டு மத்தாப்புக் கொளுத்தி வேடிக்கை காட்டக் கூடாது? எழுந்திருங்கோன்னு!''

''சரி, அப்படியே ஆகட்டும். அந்தப் புது வேஷ்டி சட்டையை யெல்லாம், நீ பீரோவி லேயாவது எடுத்து வை. இழே போட்டிருக்கு. எலி கடிக்கப் போகிறது!''

''எலி கடிக்கத்தான் ஏகமாகப் பட்சணம் பண்ணியிருக்கிறேனே!''

''அதனால்தான் சொல்கிறேன். போன வருஷம் நீ பண்ணின தீபாவளிப் பட்சணங்களை ருசி பார்த்த எலிகளுக்கு உன் பட்சணத்தை விடப் புதுத் துணியே மேல் என்று ஞானம் வந்திருக்கும்.''

(வக்கீல் மனைவி அவருக்குப் பதில் சூடு கொடுக்க வாயைத் திறக்கும்போது அவர் பையன் கேப் வெடிப்பதற்காகச் சுத்தியைத் தரையில் தட்டுகிறான்.)

''சரி. எதிர்வாதம் பண்ணாதே. நம் ஜட்ஜ் 'ஆர்டர் மெயின்டயின்' பண்ணுறார். பட்சணத்தை யெல்லாம் பட்டாசுச் செலவோட தள்ளுபடி பண்ண வேண்டியதுதான். எனக்கு உடம்பு வேறே சரியாயில்லே.''

''உடம்பு சரியில்லாத போது, தலைக்குத் தண்ணீரைக் கொட்டிக்காமல் ஸ்நானம் பண்ணி யிருக்கலாமோ இல்லேயோ!''

''செய்திருக்கலாம். ஸ்நானத்தை 'அட்ஜர்ன்' கூடப் பண்ணியிருக்கலாம்.''

''உண்மையில் உங்கள் உடம்புக்கு ஒண்ணு மில்லே யென்று எங்க அப்பா சொன்னார்.''

''அப்பா சொல்லி விட்டாரோ இல்லேயோ, அதுக்கு மேலே 'அப்பீலே' கிடையாது!''

''அதோ, குழந்தை ஏதோ கேட்கிறான் சமர்த்து! என்னன்னு கேளுங்கோ!''

''நரகாசுரன் என்ன குற்றம் பண்ணி னான்னு கேட்கிறான் உன் அழகான பிள்ளை!''

''அவன் தெரியாமல் கேட்டால் நீங்கள் தான் சொல்லுங்களேன்.''

''நரகாசுரன் தானே? பண்ணின குற்றம் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த 'இந்தியன் பீனல் கோ'டிலுள்ள எல்லா செக்ஷன் குற்றங் களையும் பண்ணினதாலே மரண தண்டனை பெற்றான்!''

ஃ ஃ ஃ

டாக்டர் வீட்டில்: அவரும் அவர் அருமை மனைவியும்.

''தீபாவளிக்குச் செய்த காரா பூந்தியா இது?''

''பின்னே என்ன?''

''இவ்வளவு சின்ன மாத்திரையா யார் உருட்டுனுங்க. ?''

''மாத்திரையானாலும் நல்லதுதான். சீசாவிலே போட்டு வைக்கிறேன்....!''

''கோபம் கூடாது இன்னேக்கு. ஓமப் பொடிகூட பி. ஸி.ஜி. ஊசி மாதிரி இருக்கே! நல்லது. அந்த மாத்திரையிலே ஆறு கொடு. வாயில் போட்டுக் கொண்டு காப்பியை ஒரு அவுன்ஸ் ஊத்திக்கிறேன்.''

''இந்தாங்க....''

''அட கஷ்டமே! காப்பியிலே டெம்ப ரேச்சர், கொஞ்சங்கூட இல்லே. ரொம்ப நார்மலாகத்தானிருக்கு!''

''காப்பிக்கு டெம்பரேச்சர் இருக்கோ இல்லேயோ, என் தம்பிக்கு நல்ல டெம்பரேச்சர். பட்டாசு மேலே கட்டு, அந்த அதிர்ச்சியிலே படுத் திருக்கான். அவனைப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன். பெரிசா ஒண்ணுமில்லே. லேசா உடம்பு சுடுது. அவ்வளவுதான்!''

''என்ன செய்யலாம் அதுக்கு? மருந்து ஏதாவது....?''

''ஒண்ணும் வேண்டாம். சும்மா பூந்தி மாத்திரை யைக் கொஞ்சம் வாயில் போட்டு மேலே நாலு அவுன்ஸ் காப்பியை ஊத்திவிடு. எல்லாம் சரியாகப் போயிடும்.''

ஃ ஃ ஃ

அரசியல்வாதியின் வீட்டில்: அவரும் அவர் மக்களும்.

''அடே பசங்களா! நீங்க போட்டுக்கிற சண் டையை விலக்குறதே எனக்குப் பெரிய பிரச்னையா யிட்டுது! ஏன்டா இப்படிக் கேவலம் ஒரு பட்டாசுக்காக அண்ணன் தம்பிகளுக்குள்ளே கட்டிப் புரளுறீங்க...? வீடே சிரிக்குதுடா, நாடே நகைக்குதுடா. எளியார் கையிலே இருக்கிறதை வலியார் பறிப்பது என்ன நீதி யடா? ஒரு வீட்டுக்குள்ளே, என் கண்ணுக்கு முன்னு லேயே உங்களால் ஒற்றுமையாக வாழ முடியவில்லையே. சமுதாயத்திலே, நாட்டிலே எப்படியடா வாழப் போறீங்க, நாளைக்கு? வருங்காலத்திலே பட்டாசுக்குப் பஞ்சமிராது. ஒற்றுமைக்குப் பஞ்சம் வந்தால்... நினைக் கவே என் மனம் படபடக்குதடா!''

''ஓம் மனசு என்ன 'ரோலிங் கேப்' வெடியா, படபடக்க? போப்பா. அண்ணனைக் கண்டிக்க மாட்டேங்கறே.''

''அடேடே! என்னையே எதிர்க்கிறியா? இந்தா இந்தப் பத்து நயா பைசாவை எடுத்துக் கிட்டுப்போய் ஆளுக்கொரு மத்தாப்பு வாங்கிக் கொளுத்துங்க. கடைத் தெருவிலே போய் ஒரேயடியா கூட்டம் கூடிக் குழப்பம், கலாட்டா எதுவும் பண்ணிக் கொண்டு இங்கே சச்சரவோட வந்து சேராதீங்க. பிரச்னையைத் தீர்க்க என்னாலே முடி யாது!''

கொக்கி



பாடகர் வீட்டில்: மனைவியுடன்.

''அதென்ன தீபாவளியாச்சேன்னு நான் பாட ஆரம்பிக்கிற போதெல்லாம், அப்படிச் சொல்றே?''

''என்ன சொல்லிப்பிட்டேன் அப்படி....!''

''தீபாவளியும் அதுவுமா அழப்படாதுன்னு சொன்னால், அது யாருக்குன்னு அர்த்தம்?''

''குழந்தைக்குச் சொன்னால் நீங்கள் ஏன் சண்டைக்கு வரணும்?''

''நன்றாய் அழட்டும். எனக்கென்ன?''

''குழந்தை! வாம்மா. இப்படி அப்பாகிட்ட உட்காரு. சேர்ந்து பாடலாம்.''

''சேர்ந்து பாடுங்கோ. வேண்டாங்கல்லே. நானும் இழவையுமா அழற சத்தம் மட்டும் கேட்கக் கூடாது!''

ஃ ஃ ஃ

பல் கண்டக்டர் வீட்டில்: அவரும், குடும்பத்தினரும்.

''அடே தம்பி! அந்த மல் பீசு வாங்கினேமே, அதையும் கத்திரிக்கோலையும் எடுத்துக்கிட்டு வா.''

''கத்திரிக்கோல் இல்லேங்களே!''

''சரி. என் கோட்டுப் பையிலே பார். அந்த 'பிகில்' இருக்கிற பையிலே ஒரு பிளேடு இருக்கும். அதையாவது கொண்டா!''

''வேண்டாம். இதோ கத்திரிக்கோலே அகப்பட்டு விட்டது.''

''சரி, நான் இந்தப் பக்கம் பிடிச்சுக்கிறேன். நீ கத்திரிச்சிட்டே வா. நான் நிறுத்தச்சொன்னால் ஹோல்டான் பண்ணிடு. ரைட் கொடுத்தா மேலே போ.''

''சரி....நல்லா துணியைப் புடிச்சுக்கிடுங்க.''

''ஹோல்டான். ஹோல்டான். ரொம்பப் போய்ட்டியே. டக் என்று கத்திரியை நிறுத்தக்கூடாது? சரி, ரைட்....மேலே போ.''

''ஹோல்டான்....அந்தக் கட்டம் தான் ஸ்டாப்பிங் பிளேஸ். அதோடே ஹோல்டான் பண்ணிக்கோ. இப்போ, ரைட். ...சரி...ஹோல்டான்...!''

''துணி கிழிச்சாயிட்டதா? உன்னே பூஜைக்கு எல்லாரும் வந்து நிக்கிறாங்க. வாங்க. போகலாம்.....''

''ஆமாம்பா! சீக்கிரம் போகலாம். எழுந்திரு!''

''என்ன இப்படி எல்லாரும் கும்பலா நின்னால் எப்படி? 'க்யூ' வரிசையிலே நில்லுங்க. அய்யா பெரிய அய்யா நீங்க உட்காருங்க. பாட்டி நீயும் உட்காரு. ஓகோ...பாட்டிதானே ... நெருக்கித்தானே ஒக்காரு. அப்பா! மற்றவங்களெல்லாம் இன்னும் கொஞ்சம் முன்னாலே நகருங்க. தம்பி! கொஞ்சம் முன்னாலே போ. நகருங்க...முன்னாலே...ஹோல்டான்! அதோ! பெரியப்பா வருகிறார். கொஞ்சம் பூஜையை ஹோல்டான் பண்ணிக்க....ரைட்....பூஜை ஆரம்பிக்கலாம்...ரைட்...''

ஃ ஃ ஃ

ஹோட்டல்காரருடைய வீட்டில்: அவருடைய மகனுடன்.

''டேலே! ஜோராக ஜரிகை வேஷ்டியை நன்னாக் கட்டிண்டிருக்கியே. பாட்டி கட்டி விட்டாளா? என்னென்ன பட்சணம் சாப்பிட்டே?''

''என்ன, சாப்பிட்டேன்னு வரிசையாகச் சொல்லட்டுமா? ஒரு ஜிலேபி...''

''சரி. ஊம்....''

''ஒரு பிளேட் மிக்சர்.''

''ஊம்.''

''ஒரு ஹல்வா!''

''அப்புறம்?''

''ஒரு இட்லி. அப்புறம் காப்பி. அவ்வளவுதான்!''

''அட. பயலே! அவ்வளவுதான்னு இலேசாகச் சொல்றியே. பில் போட்டா பதினைஞ்சரையணாவுக்கு மேலேயே ஓடிட்டுதேடா!''

ஃ ஃ ஃ

எழுத்தாளர்: மனைவியிடம்.

''அப்பப்பா! அக்கம் பக்கத்திலே போடற வெடி, அப்படியே என் சிந்தனை ஓட்டத்தைத் தடுத்துத் தூள் தூளாக்கி விட்டது. இடீரென்று வானம் இருண்டு கரு மேகங்கள் கால வெள்ளத்தில் கர்ஜித்து, பெரும் புயலோடு கனத்த மழை தாரை தாரையாகக் கொட்டி இந்த அக்கம்பக்கத்துப் பட்டாசு வெடிகளையெல்லாம் நனைத்தால் என்ன!''

''சிறுவர்கள் மழையைத் திட்டிக் கொட்டி விட்டு அழுவார்கள்.''

''அந்த உத்திதான் எனக்கு வேண்டும்.'' எங்கிருந்தோ ஒரு சிறுமியின் குக்குரல் கேட்கிறது... ''மழையா பிருக்கலாமோ — ஜன்னல் பக்கம் எட்டிப் பார். இருக்கலாம். தீபாவளிக்கு மழையும்தான் வேண்டாமா? உலகத்தையே கங்கா ஸ்நானம் செய்விக்க..!''

ஃ ஃ ஃ

போலீஸ் பிராசிக்யூட்டர் வீட்டில்: குழந்தைகளுடன்.

''இங்கே பாரப்பா — என் பட்டுப் பாவாடையிலே, பஜ்ஜி தின்னுட்டு எண்ணெய்க் கையைத் துடைச்சுட்டான் ரகு.''

''ஏண்டா ரகு, அப்படிச் செய்தியா?''

''சுத்தப் பொய். ரமா சொல்றதை நம்பாதே! நான் பஜ்ஜியே இன்னும் தின்கல்லே!''

''பின்னே என்ன தின்னே?''

''தேன்குழல்தான் தின்னேன். அதுலே எப்படி எண்ணெய் இருக்கும்...?''

''சரி, எந்தக் கையாலே சாப்பிட்டே?''

''வலது கையாலேதான்.''

''இடது கையிலே என்ன வைத்திருந்தே?''

''ஞாபகமில்லே....''

''நீ, தேன்குழல் தின்னும்போது யார் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள்?''

''யாருமில்லே.''

''அப்போ திருட்டுத்தனமாக எடுத்துத் தின்னியா?''

''இல்லே, ரமாதான் எடுத்துக் கொடுத்தான்!''

''இது ஒண்ணே போதும், நீ சொல்றதெல்லாம் பொய்யின்னு நிரூபிக்க. ரமா பக்கத்திலே நீ இருந்ததற்குத் துப்புக் கிடைச்சுப் போச்சு.

''உனக்கு முழுத் தண்டனையும் கொடுக்க வேண்டியதுதான். ஆகையினாலே, உன்னை வீட்டிலேயே விட்டு விட்டு நாங்கள் சினிமாவுக்கு, தீபாவளி ஸ்பெஷல் ஷோவுக்குப் போகப் போகிறோம், போ!''



போர்ஹான்ஸ் பற்பசையைப் பற்றி ஆச்சரியகரமான செய்திகள்

இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் தாமாகவே பலர் அனுப்பியுள்ள நற்சாட்சிக் கடிதங்கள் போர்ஹான்ஸ் பற்பசையின் இணையற்ற சிறப்பை எடுத்துச் சொல்லுகின்றன.

சமீபத்தில் நடந்த போர்ஹான்ஸ் பளிச்சிடும் புன்னகைப் போட்டியின்போது பல பேர்கள் தாங்களாகவே பல கடிதங்கள் எழுதி அனுப்பி இருந்தார்கள். போர்ஹான்ஸ் பற்பசையின் சிறப்பை அவை அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சிலர் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ளும் விபரங்களைப் படியுங்கள்:-

"என்னுடைய வயது இப்போது 65. ஒரு பல்லாவது சொத்தை இல்லை. பொய்ப் பல்லுமில்லை. எனக்கு ஈறு கோளாறுகள் எதுவுமில்லை. பற்கள் உறுதியுடனிருக்கின்றன ... இவை யனைத்திற்கும் காரணம் நான் தவறாது போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிப்பதுதான்"

"பல்வலி என்றோ ஈறுக் கோளாறு என்றோ என்னிடம் வரும் நோயாளிகளுக்கு எல்லாம் நான் எப்போதும் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிக்கும்படி சிபார்சு செய்து வருகிறேன். இதற்காக அவர்கள் எல்லோரும் எனக்கு மிக்க நன்றி தெரிவிக்கிறார்கள்."

"1935-ம் ஆண்டு நான் முதன் முதலாக போர்ஹான்ஸ் பற்பசை உபயோகிக்க ஆரம்பித்தேன். அதற்கு முன்பெல்லாம் என்னுடைய ஈறுகளிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டே இருக்கும். இப்போது என்னுடைய பல்வரிசை மற்ற இளைஞர்களின் பல்வரிசைகளைக் காட்டிலும் மிகவும் உறுதியுடன் இருப்பதுமன்றி எனக்கு ஈறுகளின் கோளாறுகளே கிடையாது. இதைப்பற்றி மிகப் பெருமையுடன் கூறிக்கொள்ளுகிறேன்."

போர்ஹான்ஸ் பற்பசை டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் என்னும் அமெரிக்க பல் டாக்டரால் கண்டுபிடிக்கப்பட்டது. போர்ஹான்ஸ் பற்பசை ஒன்றில்தான் ஈறுகளுக்கு உறுதியளிக்கும் டாக்டர் போர்ஹானின் தனித் துவர்ப்புப் பொருள் கலந்திருக்கிறது.




போர்ஹான்ஸ்

பளபளக்கும் முத்துப்பல் வரிசைக்கும், ஆரோக்கியமான ஈறுகளுக்கும் போர்ஹான்ஸ் பற்பசை இன்றியமையாதது


S. 23

GEOFFREY MANNERS & COMPANY LIMITED


லாவோஜி
தேயிலைத்
தூள்
சிறப்பின் சிகரம்
சிக்கனத்தின் சின்னம்
LIPTON'S LADJEE
THE DUST TEA
LADJEE
FOR THE HOTEL
LLC-4-TM


பிரகாசமான தீபாவளிக்கு
தீப்
Sâlmen ek-din âti Diwali,
Godrej Dip râktâ gharko roj ujiâli
சிரமமின்றியும், அடித்துத் துவைக்காமலும், நான் என்னுடைய எல்லாத் துணிமணிகளையும்—உல்லன், சில்க் ரேயான் மற்றும் பருத்தி—நுண்மையான சீனு பாண்டங்கள் சுகாதார நிமித்தம் உபயோகிக்கப்படும் பீங்கான் வீட்டுத்தளங்கள் ... இந்தப் புதிய சிக்கனமான சிறந்த முறையில் சுத்தம் செய்கிறேன்.
நன்றாக சுத்தம் செய்யும் இரகசியம் தீப்பில்தான் இருக்கிறது என்று நான் அறிவேன். தீப்பினால் வெண்மையாக்குங்கள்! தீப்பினால் பிரகாசிக்கச் செய்யுங்கள்!
'ஆப்டிகல்' ரசாயனம்
சுத்தமான பவுடர் சோப்
சோடா கிடையாது
பல நிறங்களிலுள்ள அழகிய ஸ்பூன்கள் தீப்புடன் இலவசம்.
Dip
கோத்ரெஜ்
தீப்
.45, 1.35 கிலோ கிராம் கார்ட்டன்கள்
100% சுதேசி
Godrej
கோத்ரெஜ்
சோப்புகளில் புகழ்பெற்ற பெயர்


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
உத்திரவாதமுள்ளவை
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122 கன்ஸரா சாஸ் பம்பாய்.2



ஒளிபுரியும் களிநடனம்

போட்டோ: சந்த்ரசமிவான்


It depends on the inks
when rigid forms have to print on soft or hard, rough or smooth stocks, with no sacrifice in quality,
choose:
GANGES PRINTING INKS
CALCUTTA
BOMBAY
MADRAS
DELHI

எங்கும் உளன் சிங்கப்பிரான்

கம்பன் எழுதிய ராமாவதாரம் என்னும் பாரகாவியத்திலே, காவியத்தோடு அவ்வளவு சம்பந்தமில்லாத கதை ஒன்றைச் சேர்த்திருக்கிறான். அதைச் சிறப்பாகவும் பாடிவைத்திருக்கிறான். அப்படி அவன் பாடிய பகுதிதான் இரணியன் வதைப்படலம். ராமன் சீதையை மீட்கப் போருக்குப் புறப்பட்டு விட்டான் என்பதை அறிந்த இராவணன் தன் மந்திரக் கிழவர்களுடன் இருந்து ஆலோசனை நடத்துகிறான். அந்த மந்திராலோசனை சபையில் விபீஷணன் இரணியனது கதையைச் சொல்வதாக வருகிறது. அவன் சொல்லும் கதை ரஸமானது. அதைவிட ரஸமானது அவன் சொல்லும் முறை. இரணியன் என்ற அசுர குலத் தலைவன் கல்வி கேள்விகளில் வல்லவனாக இருக்கிறான். வீரத்திலும் தீரத்திலும் அவனை மிஞ்சுவார் இல்லை. அத்துடன் செல்வந்தனாகவும் இருக்கிறான். உலகத்திலுள்ள பொன் எல்லாம் அவனிடமே வந்து குவிந்திருக்கிறது. அதனாலேயே ஹிரண்யன் (ஹிரண்யம் என்றால் பொன் என்று பொருள்) என்று அழைக்கப்படுகிறான். அவன் தன்னிடம் சேர்ந்திருந்த பொன்னையெல்லாம் நாட்டை வளப்படுத்தும் நல்ல காரியங்களுக்கே செலவழிக்கிறான். இது காரணமாக எல்லோரும் அவனைக் கடவுள் என்றே உபசாரமாகச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். உடனே மண்டைக் கனம் ஏறி விடுகிறது அவனுக்கு. அவனும் தன் சக்தியில் நம்பிக்கை வைத்துத் தானே கடவுள் என்று எண்ணும் அளவுக்கு வளர்ந்து விடுகிறான்.

இந்த இரணியனுக்கு ஒரு பிள்ளை பிறக்கிறது. பிள்ளைக்குப் பிரகலாதன் என்று பெயரிடுகிறான். பிரகலாதனோ பிறவி ஞானி. அவன் அறிகிறான்: 'எல்லா நிகழ்ச்சிகளும் அநாதியான ஒரு நியதியின்படியே நிகழ்கின்றன. அந்த நியதி தத்துவமே எங்கும் நிறைந்து என்றென்றும் ஆனந்தமயமாக நிலைத்து நிற்கின்றது. அந்த நியதி தத்துவமே கடவுள்' என்று உணர்கிறான். எல்லோரும் 'தந்தையே கடவுள்' என்று கொண்டாடும்போது பிள்ளை மட்டும், தான் உணர்ந்த உணர்வைப் பிறருக்குச் சொல்லிக் கொண்டும், அவற்றை உணர்த்தும் பாடல்களைப் பாடிக் கொண்டும் இருக்கிறான். இது தந்தையாகிய இரணியனுக்கு அவமானமாய்ப் படுகிறது. பையனை அழைத்து, ''என்னை விடச் சக்தி வாய்ந்தவர் யாரையாவது கண்டிருக்கிறாயா?'' என்கிறான். ''ஆம், கண்டிருக்கிறேன். அவனே எங்குமாய் எல்லா வஸ்துவுமாய் இருக்கும் கடவுள்'' என்கிறான் பிரகலாதன். தந்தையும் மிக்க ஏளனமாக 'அவன் எங்கே யிருக்கிறான்? காட்டேன் பார்க்கலாம்' என்கிறான். உடனே பாடுகிறான் பிரகலாதன்:

சாணினும் உளன், ஓர்தன்மை
அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன், மாமேருக்
குன்றினும் உளன், இந்நின்ற
தூணினும் உளன், நீசொன்ன
சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவில் என்றான்.

எங்கெல்லாம் கடவுள் இருக்கிறான் என்பதை விட அவன் இல்லாத இடம் இல்லை என்று சொல்வது எளிதுதான். அதிலும் மிக்க ரஸமாக ''நீ 'கடவுள் என்று ஒருவன் இல்லை; நானே கடவுள்' என்று சொல்கிறாயே, அதுகூட அந்தக் கடவுள் சொல்கிற வார்த்தைதான்'' என்று சொல்வது ஒரு பெரிய புதிராகவே இருக்கிறது இரணியனுக்கு. ஆம், கடவுள் தத்துவமே பெரும் புதிர்தானே? அந்தப் புதிரை விடுவித்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அதை விடுவிக்கப் போய் இன்னும் பெரிய சிக்கலில் சிக்கி உழல்கிறவர்களைத் தவிர வேறு யாரைக் காண்கிறோம்? பரம் பொருளின் பெருமை புரியாத அவன் உள்ளத்தில் 'இந்நின்ற தூணினும் உளன்' என்று மகன் சொன்னது மாத்திரமே தங்குகிறது. அவனுக்கு உடனே ஆத்திரமும் கோபமும் பொங்கிக்கொண்டு வருகின்றன. அந்த வேகத்திலே இரணியன் அந்தக் கம்பத்தை ஆக்ரோசத்தோடு உதைத்து, 'நீ சொல்கிற கடவுள் இந்தத் தூணிலே இருக்கிறானா, பார்ப்போம்' என்று எக்காளமிட்டுக் கர்ச்சிக்கிறான். அவ்வளவுதான்; அந்தத் தூண் பிளக்கிறது. திசைகள் எல்லாம் அகன்று இடம் கொடுக்க, வான்முகடே பிளந்தது என்று சொல்லும்படியாக, சிவந்த கண்களோடு கூடிய நரசிங்கன் சிரித்துக்கொண்டு வெளிப்படுகிறான். இதைப் பார்த்த பிரகலாதன் பாடுகிறான்:

'இறைவனே! பல்லாயிரங் கோடி அண்டங்கள் உன்னிடமிருந்தே தோன்றுகின்றன. ஏதோ கடலில் தோன்றும் குமிழிகள்போலத் தோன்றி நின்று மறைகின்றன. ஆதலால் அண்டங்களில் உள்ள எல்லாப் பொருளும் உன் உருவமாகவே இருக்கின்றன. அப்படி நிற்கும் நீ இப்படி நரசிம்மம் என்ற உருவத்தோடு

யோகாநரசிம்மர், நாச்சியார்கோவில்



தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்



நாமக்கல் உக்ரநரசிம்மர்

வெளிப்பட்டதால், வரம்பு இல்லாத அகண்ட காரணமான உனக்கு வரம்பு என்று ஒன்று உண்டாகி விட்டதே. அது உன் புகழுக்கே ஒரு குறைவல்லவா?' என்றே பிரகலாதன் பிரலாபிக்கிறான். பிரகலாதன் இப்படியெல்லாம் நினைத்ததாகக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் நினைக்கிறான்; அவ்வளவுதான்; ஓர் அற்புதமான உணர்ச்சிமிக்க பாடலே பிறந்து விடுகிறது.

பல்ஆயிரம் கோடி
அண்டம், பனிக் கடலுள்
நில்லாத மொக்குள் எனத்
தோன்றுமால், நின் உமையே
எல்லா உருவுமுமாய்
நின்றாய்க்கு, இவ்வுருவம்
வல்லே படைத்தால்
வரம்பு உண்மை ஆகாதோ

என்பது பாட்டு. இந்தப் பாட்டைப் படித்த நான், உண்மையிலேயே நரசிம்மன் ஒரு வரம்பை ஏற்படுத்திக் கொண்டா இந்த உருவத்தில் தன்னைச் சிருஷ்டி செய்து கொள்கிறான் என்று எண்ணினேன். கலை உலகில் எண்ணற்ற வடிவங்களில் இந்த நரசிம்மனே நமக்குக் காட்சி தருகிறானே. அது எல்லாம், வடிவத்தோடு ஒரு வரம்பு ஏற்படுத்திக் கொள்வதாகுமா என்றும் சிந்தித்தேன். இந்த நரசிம்மன் எந்தெந்த வடிவத்தில் எங்கெங்கெல்லாம் இருந்து கலை உலகில் காட்சி தருகிறான் என்பதையே நான் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.

அழகர்கோயில் நரசிம்மர்



★

மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களில் ராமாவதாரத்துக்கும் கிருஷ்ணாவதாரத்துக்கும் அடுத்தபடியாக மக்களால் போற்றப்படுவது இந்த நரசிம்மாவதாரமே. ஜீவராசிகளின் தோற்றமும் வளர்ச்சியுமே அவதார ரகசியம் என்று கொண்டால், தண்ணீரிலே வாழும் மீனாகவும், நீரிலும் நிலத்திலும் வாழும் கூர்மமாகவும், பின்னர் நிலத்திலேயே வாழ்ந்து அதனை உழுத் தெரிந்த வராகமாகவும் அவதரித்த பின்னரே பரந்தாமன் பாதி மனித வடிவிலும் பாதி மிருகேந்திர வடிவிலும் அவதரித்திருக்கிறான் என்பதை உணர்வோம். இரணியனது கர்வத்தை அடக்கவும், பிரகலாதனுக்குப் பிரத்தியக்ஷமாவதற்கும் இந்த வடிவம் எடுத்தான் என்பதையும் அறிவோம். அத்துடன் இரணியனது உடலைக் கிழித்து உயிர் குடித்து உலகத்தையே உய்வித்தான் என்பதும் தெரிந்தவர்கள்தாம் நாம். இந்த நரசிம்மனை நாம் பல தலங்களில் பல வடிவங்களில் காண்கிறோம். எல்லா இடங்களுக்கும் உங்களை இழுத்து அடிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. ஒரு சில சிற்ப வடிவங்களின் முன் உங்களை நிறுத்தி அவைகளின் அருமையை நீங்கள் தெரிந்து கொள்ளச் செய்வதே என் முக்கிய நோக்கம்.

நரசிம்மர் என்று நினைத்தாலே உக்கிர நரசிம்மர் தான் முதலில் நம் கண்முன் வருவார். நரசிம்மர் உவந்து கோவில் கொண்டிருக்கும் தலங்களை வரிசைப் படுத்தினால் ஆந்திரத்தில் விசாகப்பட்டினம் ஜில்லாவிலுள்ள சிம்மாசலமும், கர்நூல் ஜில்லாவிலுள்ள அஹோபிலமும், தமிழ்நாட்டில் சேலம் ஜில்லாவிலுள்ள நாமக்கல்லுந்தான் ஞாபகத்துக்கு வரும். ஆகவே நாமும் முதல் முதலில் நாமக்கல்லுக்குச் செல்வோம். அங்குள்ள நரசிம்மரையே தரிசிப்போம்.

நாமக்கல் சேலத்துக்கு நேர் தெற்கே முப்பது மைல் தூரத்திலுள்ள ஊர். ஊருக்குள் வருவதற்கு முன்னரே நாமகிரி என்னும் மலையும் அம்மலைமேல் கட்டியிருக்கும் கோட்டையும் நமக்குத் தெரியும். இந்த மலையின் மேற்புறத்திலுள்ள குடைவரையில்தான் நரசிம்மர் சந்நிதி இருக்கிறது. கொஞ்சம் படிகள் ஏறிக் கடந்துதான் சந்நிதிக்கு வந்து சேர வேணும். இங்கு மூலவர் நரசிம்மரே. சூரிய நகங்களோடு கூடிய கைகளுடனே ஆசனத்தில் எழுந்தருளியிருக்கிற தோற்றம். சிங்க முகம் என்றாலும் கருணை ததும்பும் கண்கள். ஆடை அணிகளெல்லாம் அணிந்தவராகவே இருப்பவர். இவர் சிலை வடிவினர். இவருக்கு முன்பு எழுந்தருளியிருக்கும் உத்சவரைப் பார்த்தால் போதும், மூலவரைப் பார்க்க வேண்டியதில்லை. சங்கு சக்ரதாரியாய் அபய கரத்துடன், ஞான முத்திரை தாங்கியவராய் இருக்கும் இவரது கோலம் கண்டு களிகூரத் தக்கது. இவ்வளவு சாந்தமாக உட்கார்ந்திருக்கும் இவரா இரணியன் உடலைக் கிழித்தார் என்று எண்ணுவோம். அந்தச் சமயத்தில் கருவறையில் உள்ள சுவரைப் பார்த்தால் அங்கு அர்த்த சித்திரமாக உக்ர நரசிம்மரே காட்சி கொடுப்பார். உக்ர நரசிம்மருக்கு எட்டுத் திருக்கரங்கள்; சங்கு சக்கரம் தாங்கிய கைகள் இரண்டு. மழுவும் வில்லும் தாங்கிய கைகள் இரண்டு. இன்னும் இரண்டு கைகளால் இரணியனைத் தன்

மடி மீது அழுத்தி வைத்துக் கொண்டு, இரண்டு கைகளால் வயிற்றைக் கிழிக்கின்ற நிலை. இவரை உருவாக்கியவன் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் என்று சரித்திரம் கூறுகிறது. இந்த உக்ர நரசிம்மர், பாஞ்சராத்திர ஆகமத்திலும் மாயா மதம் என்னும் சிற்ப நூலிலும் வர்ணித்திருக்கிறபடியே அமைந்திருப்பதைக் காணலாம். உத்சவராம் சாந்த நரசிம்மரையும், அர்த்தசித்திரமாகச் சிலை வடிவில் உள்ள உக்ர நரசிம்மரையும் இங்குள்ள படங்களில் பார்க்கிறீர்கள். இதே உக்ர நரசிம்மரை இன்னும் பல தலங்களில் சிற்ப வடிவங்களில் அமைத்த தூண்களில் காணலாம். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடியில், மணவாள மாமுனிகளின் சந்நிதி மண்டபத்திலுள்ள இரண்டு தூண்களில் இரண்டு வடிவங்கள். கீழ்ப்புறத்துத் தூணில் இரணியனை எடுத்து மடி மீது கிடத்தும் தோற்றமும், மேல்புறத்துத் தூணில் இரணியன் உடல் கிழிக்கும் தோற்றமும் செதுக்கப்பட்டிருக்கின்றன. விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டிய பெருமாள் கோவில் மண்டபங்களில் எல்லாம், கம்பத்து உதித்த கடவுளாம் நரசிம்மனைக் கம்பத்திலேயே நிறுத்த அவர்கள் தவறியதில்லை. அவைகளில் சிறப்பான ஒன்று மதுரையை அடுத்த கள்ளழகர் கோவில் முன்மண்டபத்தில் இருக்கிறது. நிரம்பவும் கம்பீரமான வடிவம். 'பிறை எயிற்று அனல் விழிப் பேழ்வாய்த் தெள்ளிய சிங்கம்' என்று திருமங்கை மன்னன் பாடுகின்றானே, அந்த வடிவம் இதுதானோ என்று எண்ணத் தோன்றும். உக்ரநரசிம்மரைச் செப்புச் சிலை வடிவில் சாதாரணமாகக் காண்பது இயலாது. காண வேண்டும் என்று துடிப்பவர்கள் சிரமம் கருதாது கடற்கரைப் பட்டினமான நாகப்பட்டினத்துக்குச் சென்று அங்குள்ள சௌந்தரராஜப் பெருமானைத் தரிசிக்க முனைந்தால் அந்தக் கோவிலில் உக்ரநரசிம்மரைச் செப்புச் சிலை வடிவிலும் காணலாம். ஒன்றரை அடி உயரமே உள்ள சிறிய வடிவந்தான் என்றாலும் எட்டுத் திருக்கரங்களோடு கூடிய அந்த நரசிம்மர், இரணியன் உடல் கிழிக்கும் தோற்றத்திலேயே உருவாக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சிற்ப வடிவத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால் மற்ற இடங்களில் நாம் காணாத பிரகலாதன் இங்கு நரசிம்மரது திருக்கரத்தால் அருள் பெறுகின்ற நிலையையும் சிற்பி உருவாக்கி யிருப்பதுதான்.

பல்லவர்களும் நாயக்க மன்னர்களும் மாத்திரம் நரசிம்மரைக் கல்லில் வடித்துப் பார்த்தார்கள் இல்லை; சிவநேயச் செல்வர்களாக வாழ்ந்த சோழ மன்னர்களும் செப்புச் சிலை வடிவில் அவரை வடிக்க மறக்கவில்லை என்று அறிகிறபோது நாட்டில் அன்று வளர்ந்த சமய சமரசம் எவ்வளவினது என்று தெரிந்து கொள்ளலாம்.

நரசிம்மரை அநேகர் உபாசனாமூர்த்தியாகக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் அந்த உபாசனையினால் அதிக நன்மைகள் எல்லாம் பெறுகிறார்களே, அது இந்த உக்ர நரசிம்மரை வணங்குவதால்தானா என்று கேட்கலாம். இரணியன் உடல் கிழிக்க அவர் உக்ரமான கோபம் கொண்டது வாஸ்தவந்தான். ஆனால் அவர் தாமே பிரகலாதனுக்கு அருள் செய்பவராகவும் அமர்ந்திருக்கிறார்! அப்படிச் சேவை சாதிக்கிற போது அவர் லக்ஷ்மி நரசிம்மனாகவும் காட்சி கொடுத்திருப்பார் போலும்! லக்ஷ்மிநரசிம்மனது வடிவம் பல தலங்களில் மூல விக்கிரகமாகவே இருக்கிறது. செப்புச் சிலை வடிவில் சிறப்பான வடிவம் ஒன்று ஸ்ரீவைகுண்டம் கள்ளப்பிரான் கோவிலில் உண்டு.

சாந்த நரசிம்மன், உக்ர நரசிம்மன், லக்ஷ்மி நரசிம்மன் என்பதைப்போல் யோக நரசிம்மன் என்று இன்னும் ஒரு வடிவம் உண்டு. எல்லாம் வல்ல பரந்தாமன் எடுக்கும் வடிவங்களுள் யோக நிலையிலிருந்து தபோபலம் பெற்று அதன் மூலமாக மக்களுக்கு அருளுவதும் ஒரு நிலைதானே! இந்த வடிவம் சிறப்பாக இருப்பது சோளிங்கர் என்னும் சோழ சிங்கபுரத்திலே. வட ஆர்க்காடு மாவட்டத்திலே ஆர்க்காட்டுக்கு வடக்கே இருக்கும் இத்தலத்திலே யோக நரசிம்மரும் யோக ஆஞ்சநேயரும் ஆளுக்கு ஒரு மலை மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். யோகம் செய்வதற்கு நல்லதொரு இடம்தான் அவர்கள் இருக்கும் மலைகள். அந்த யோக நரசிம்மரின் சிறந்ததொரு செப்புச் சிலை வடிவம் நாச்சியார் கோவில் என்னும் தலத்திலே இருக்கிறது. அது புகழ் பெற்ற சோழர் காலத்துச் செப்புச்சிலையாக இருத்தல் வேண்டும். யோகியாக இருப்பதால் எட்டுத் திருக்கரங்கள் இல்லை. தெய்வத் தன்மையை விளக்க நான்கே திருக்கரங்கள். 'சிங்கமுகம் என்றாலும் யோகக் கோலத்திற்கேற்றபடி தவநிலை, சாந்தம் ஆகியவை முகத்தில் பளிச்சிடுகின்றன. யோகப் பட்டத்துடன் வீற்றிருக்கின்ற சீர்த்தியோ சொல்லத் தரமன்று. நம்மாழ்வாரே பாடுகிறார்.




நாமக்கல் சாந்த நரசிம்மர்



நாகப்பட்டினம் நரசிம்மர்

எங்கும் உளன் கண்ணன்
என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண் புடைப்ப
அங்கு அப்பொழுது அவன்
வீயத் தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தோ?

என்பது தானே அவரது திருவாய்மொழி!



'திசை திறந்து அண்டம் கீறிச் சிரித்தது செங்கண் சீயம்' என்று சிங்கப் பெருமான் சிரிக்காமற் சிரித்துக் கொண்டே இரணியனைக் கிழிப்பதற்காக எதிர்த்து வந்து சுற்றிச் சூழும் பகுதியை நாடக அழகுகள் தோன்ற வர்ணித்துள்ளான் கம்பன். 'இத்தன்மை காணுதி விரைவில்' — என்று பிரகலாதன் தன் தந்தைக்குச் சொன்னதாக முன்பு பாடிய பாட்டின் ஞாபகம் தொடர்ந்து வர இங்கே அக்காட்சியையே காட்டுகிறான் கம்பன். சொற்களால் 'கம்ப சித்திர'மாகவே வரைந்து காட்டுகிறான்.


நகைசெயா வாயும் கையும் வாளொடு
  நடந்த தாளும்
புகைசெயா நெடுந்தீப் பொங்க உருத்தெதிர்
  பொருந்தப் புக்கான்
தொகைசெயற்கு அரிய தோளால் தாள்களால்
  சுற்றிச் சூழ்ந்தான்
மிகைசெய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும்
  வினையம் வல்லான்

உக்கிர நரசிங்கத்தின் சின நெருப்பைப் 'புகை செயா நெடுந் தீ' — என்று கம்பன் கூறுகிற அழகே அழகு. போரிட்டுக் கிழிக்கிற ஆவேச வேகத்தில் எத்தனை தோள்கள், எத்தனை தாள்கள் என்று அவற்றின் தொகைகளைக் கணக்கிட முடியவில்லையாம். வேகத்திலும் சுழற்சியிலும் ஒரு பொருளே பலவாகத் தெரியும் தன்மை உண்டு அல்லவா? கடைசி அடிதான் அற்புதம். நரசிங்க அவதாரத்தின் தத்துவமே இந்தக் கடைசி அடியில்தான் இருக்கிறது. 'மிகை செய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும் வினையம் வல்லான்' என்று தெய்விக விநயத்தைத் தன் கவித்திறன் விநயத்தால் கம்பன் அழகு செய்கிறான். வினையம் தெரிந்தவனாக இருப்பது வேறு. வினையம் வல்லவனாக இருப்பது வேறு. கம்பன் சிங்கப்பிரானை வினையம் தெரிந்தவனாக மட்டும் சொல்லவில்லை - வினையம் வல்லவனாகவே சொல்லுகிறான்.

படைத்தற் கடவுளான பிரமனே இந்த அற்புத வடிவினைக் கண்டு அதிசயித்து நிற்கிறான். 'மழை பெய்யும் போது தண்ணீர் வானத்திலிருந்து கீழே விழுகிறது. அந்தத் தண்ணீருக்கு வானத்தில் இருக்கும்போது மேகம் என்று பெயர். தாரை தாரையாகக் கீழே விழுந்து கொண்டிருக்கும்போது மழை என்று பெயர். பூமியில் விழுந்து ஓடும்போது நீர் என்று பெயர். மூன்றும் ஒரே வஸ்து தான். அதே போல் பல உருவங்களை நீ எடுத்து அது அதற்குரிய பெயர்களோடு நின்றாலும் நீ ஒரே வஸ்து தான். உன்னைத் தவிர வேறு ஒரு வஸ்துவும் இந்தப் பேரண்டத்தில் இல்லை. இப்படி இருக்கும்போது நீ யாரைப் படைக்கிறாய், யாரைக் காக்கிறாய், யாரைத் துடைக்கிறாய் என்பதெல்லாம் உண்டா? இது எல்லாம் எனக்கு விளங்க மாட்டேன் என்கிறதே' என்று ஏங்குகிறான் பிரமன். அப்படி ஏங்கித் துதிப்பதாகப் பாடுகிறான் கவிச் சக்கரவர்த்தி கம்பன்.

பேரை ஒரு பொருட்கே
  பல்வகையால் பேர்த்து எண்ணும்
தாரை நிலையை
  தமியை; பிறர் இல்லை;
ஆரைப் படைக்கின்றது?
  ஆரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது?
  ஐயா! அறியோமால்.

என்பது தான் பிரமனது ஆதங்கம். எவ்வளவுதான் விளக்கங்கள் பெற்றாலும், அவனது வடிவங்களைக் கண்டாலும் நமது ஆதங்கமும் பிரமனுடையது போலத்தானே?


தீபாவளி
வாழ்த்துக்கள்
Brooke Bond
SUPREME
Darjeeling Tea


லிப்கோ
வெளியீடுகள்
தசா புக்திகளும்
ராமாயண
பாராயணமும்
[ஸ்தோத்திர மாலை*யுடன்]
1 2 3 4 5 6 7 8 9
சூரிய தசை
சந்திர தசை
குஜ தசை
ராகு தசை
குரு தசை
சனி தசை
புத தசை
கேது தசை
சுக்கிர தசை
ஆகியவற்றிற்கான 9 புத்தகங்கள்
விலை ஒவ்வொன்றும் ரூ. 2
ஒவ்வொருவரும் அவரவர் தசைக்கேற்ற ஒரு புத்தகம் வாங்கினால் போதுமானது.
ஸகல காரிய ஸித்தியும் [ஸ்தோத்திர மாலை*யுடன்]
ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்
விலை ரூ. 3
உபந்யாஸ சக்கரவர்த்தி சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்
அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வழங்கிய ஆசியுரை :
"......வெகு அழகான முறையில் சிறு குழந்தைகள், ஸ்திரீகள், பெரியவர்கள் யாவரும் நித்யம் பாராயணம் செய்யும்படி வெளியிட்டுள்ளனர்.. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரக்ஷையாக இருக்கும்.."
*ஸ்தோத்திர மாலை மட்டும் ரூ. 1.30
எல்லாவற்றிற்கும் தபால் கூலி வேறு
LIFCO
லிப்கோவின் மலிவுப் பதிப்பு மலர்கள்
1. ஸ்ரீ மஹா பக்த விஜயம் ... ரூ. 2.25
2. விநோத ரச மஞ்சரி ... ரூ. 2.25
3. பத்மாவதி சரித்திரம் ... ரூ. 1.80
பிரதிகள் கிடைக்கும் இடங்கள்:
லிப்கோ நடமாடும் புத்தக ''வான்''களிலும் கிடைக்கும்.

NALIN

சேதாரம்

வே.கோவிந்தராசன்

அரசகுப்பம் கிராமத்திலிருந்து தினமும் நான்கு மைல் நடந்துசென்று 'ஹைஸ்கூல்' படிப்புப் படிக்கிறானே, பழமலை, அவனுக்கு ஒரு பட்டப் பெயர் உண்டு. பட்டம் என்றால் கரடு முரடான புரியாத வார்த்தையோ அல்லது அலங்காரமான விளம்பரப் பெயரோ என்று எண்ணி விடாதீர்கள். இந்தப் பழமலையான் அவ்வளவுக்கும் பெரிய மனிதன் அல்ல. அவனுடைய பட்டப்பெயர் 'மாங்காய் திருடி' என்பதே!

இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால், வழக்கத்துக்கும், பொதுவான நியதிக்கும் மாறான பட்டப் பெயருக்குரிய தகுதியும் அவனுக்கு இருந்ததுதான்! அவனுடைய பள்ளிக்கு அருகிலேயே ஒரு மாந்தோப்பு உண்டு. அதிலே சாம்பல் பூத்த பச்சைநிறக் காய்கள் குண்டுகுண்டாகக் கொத்துக் கொத்தாகத் தொங்கும். பழமலைக்கு மாங்காய் அடிப்பதில் குறி தப்புவதில்லை. தோட்டக்காரனுக்குத் தெரியாமல் கல்லை வீசி, 'தும்' என்று கீழே விழுந்து உருளும் காயையும், சிதறிச் சிந்தும் பிஞ்சுகளையும் அவசரமாக எடுத்துப் பையில் நிரப்பிக் கொண்டு ஓட்டமாக ஓடிவந்து சாலையின் இலுப்பை மர வேரில் அமர்ந்து, ஒவ்வொன்றாக எடுத்துக் கடித்துச் சுவைத்துத் தின்னும் இன்பம் அவனுக்கே சொந்தம்.

இரு முறைகள் வசமாக அகப்பட்டுக்கொண்டு, அவனது மாங்காய்த் திருட்டு கொஞ்சம் பிரபலமாகிப் போனதால்தான் அவனுக்கு அந்தப் பெயர் கிடைத்தது. பட்டப் பெயர் கிடைத்து விட்ட பெருமையில் அவன் மாங்காய்த் திருட்டை மறந்து விடவில்லை. கூடுமானவரை அதை நடத்திக் கொண்டுதான் இருந்தான். அவனுடைய சகாக்களுக்கும் அவ்வப்போது மாங்காய்கள் கிடைப்பதுண்டு.

அவன் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கிராமத்திலிருந்து ஒரு மைல்தூரம் வயல்வரப்பில் நடந்து, பிறகு மூன்று மைல் தூரம் 'டிரங்க் ரோடு' வழியாகப் போய் விருத்தாசலம் 'டவுனை' அடைய வேண்டும். 'டவு'னில்தானே உயர்நிலைப் பள்ளிகள் இருக்கும்? 'ஏழாங் கிளாஸ்' படித்து விட்டு இனி எட்டாவது படிக்கப் போகும் பழமலை இந்த நான்கு மைல் தூர நடையைப் பாராட்டினால் முடியுமா? அவன் பாராட்டுவதில்லை. நடந்து நடந்து அவனுடைய முதிராத கால்கள் கூட உரமடைந்து போயின. அப்படி நடையாய் நடந்து படிப்பதில் அவனுக்குப் பெருமை; அரசகுப்பம் கிராமத்துக்கே பெருமை!

அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அவன் படிப்பிலே சறுக்கல் நேர்ந்துவிடலாமா? ஏனோ அவன் மூளையில் கணக்குப் பாடம் ஒன்று மட்டும் ஏறமற்போகவே சென்ற ஆண்டு ஏழாவதிலிருந்து எட்டாம் வகுப்புக்கு அவன் தேறவில்லை. அந்த அவமானத்தைத் தாளமுடியாமல் பாழும் கிணற்றையும், ரயில் தண்டவாளத்தையும் அவன் மனம் நாடியதுண்டு. ஆயினும் அவன் மனத்தைத் தேற்றிக்கொண்டு இந்த ஆண்டு மிகவும் பிரயாசைப்பட்டுப் படித்தான். எப்படியோ அந்தக் கணக்குப் பாடமும் அவனுக்குப் பிடிபட்டு, பரீட்சையில் பத்துக்கு ஐந்து கணக்குகள் சரியாகப் போட்டு விட்டான். மற்றப் பாடங்களைப் பற்றித்தான் அவனுக்குக் கவலை இல்லையே!

அவனுடைய கிழத் தாய்க்கு இந்தப் பள்ளிக்கூட விவகாரமெல்லாம் அவ்வளவாகப் புரிவதில்லை. அவன் பரீட்சை எழுதி முடித்த அன்றே அவள் கேட்டாள்:

''ஏண்டா, இந்த வருசம் பாசாயிட்டியா?''

''ஓ! பாசாயிட்டேம்மா!''

''இன்னும் எத்தனை வருசம் படிக்கணும், தம்பி?''

''இன்னும் நாலு வருசம்!''









அதற்கு மேல் அவன் ஒன்றும் கேட்கவில்லை. எத்தனையோ ஆண்டுகளாகத் தனக்குத் தெரிந்த மிகச் சிறிய உலகத்திலேயே சலிப்பின்றி உழைத்துச் சிறுகச் சிறுகப் பொருள் சேர்த்துப் பையனை வளர்த்த அவனுக்கு இந்த நான்கு ஆண்டுகள் ஒரு சுமையாகத் தோன்றவில்லை. அவன் படிப்பை முடித்ததும் அவனுக்காக, அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு மகோன்னதமான கற்பனை வாழ்க்கையை எண்ணியோ என்னவோ அவன் முகம் பெருமையாலும் நிம்மதியாலும் நிறைவுற்றது.

பரீட்சை முடிந்தபின் பள்ளி விடுமுறையில் மாமன் வீட்டுக்குச் சென்றிருந்த பழமலை அன்றுதான் திரும்பி வந்திருந்தான். அன்று பள்ளிக்கூடம் திறக்கிறார்கள். அதாவது அன்று அவன் ஏழாவதிலிருந்து எட்டாவதுவகுப்புக்குச்சென்று விடுவான். அந்த மகிழ்வின் பளு மனத்தில் கனக்க, பையின் சுமை முதுகில் கனக்க அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டு வேகமாக நடந்தான்.

கிராமத்து எல்லையைத் தாண்டி வயல் வரப்பில் அவன் நடக்க ஆரம்பித்தபோது கிராமத்துக் கணக்கப் பிள்ளை எதிர்ப்பட்டார்.

''என்னடா, பழமலை! பாசாயிட்டியா, இல்லாட்டி இந்த வருஷமும்...''

இடித்தாற் போன்ற கேள்வியில் முழுக்க முழுக்க அவநம்பிக்கை இழைந்தது. அந்தக் கிழட்டு மனிதருக்கு எவ்வளவு இளக்காரம்! ஒரு முறை தவறிப் போனதால் அவன் எப்போதும் தேற மாட்டானா, என்ன?

''எல்லாம் பாசாயிட்டேன்!''

''ரெண்டாவது வருசம் பாஸ் செய்யறது ஒரு பெரிய காரியமில்லேடா! இனிமேல்தான் கவனிச்சுப் படிக்கணும். மாங்காய் திருடிப் பையை நிரப்பிக்கிட்டிருந்தால் பரீட்சையில் சங்கு ஊதிடும்.''

அவன் முதுகில் இருந்த பையை நோட்டம் விட்டவாறே அவர் கூறினார். பழமலை பதில் ஏதும் கூறாமல் நடையை எட்டிப்போட்டான். சிறிது நேரத்தில் அவன் எதிர்பார்க்கும் அந்த மகத்தான நிகழ்ச்சி நடந்து விடும். தேறியவர்கள் பெயரை ஆசிரியர் படித்து முடித்ததும் வரிசையாக நடந்து புது வகுப்புக்குச் செல்ல வேண்டும். புதிய அறையில் நுழைந்ததும் முட்டி மோதிக் கொண்டு நல்ல இடத்தைப் பிடித்து உட்காருவதில்தான் எவ்வளவு மகிழ்ச்சி! புதிய ஆசிரியர்கள், புத்தம்புதுப் புத்தகங்கள், முதல் பாடம் நடக்கையிலேயே முப்பதாவது பாடத்தைப் படித்துப் பார்க்கும் ஆர்வம்....

எழும்பிக் குதித்துத் தத்தித் தவ்வி, வயல்வெளியைக் கடந்து நெடுஞ்சாலையின் இலுப்பை மர நிழலில் வேகமாக ஓடினான் பழமலை. மேல் வகுப்புக்குச் செல்லப் போகும் பெருமிதத்தில் அவனுக்குப் பையின் சுமையும் காலின் வலியும் தோன்றவே இல்லை. எட்டாவது என்றால் சாமான்யமா? எல்லா விளையாட்டுக்களையும் ஒதுக்கி வைத்து விட்டு இரவு பகலாகப் படிக்க வேண்டுமே! ஏழாவதில்தான் இரண்டு வருடங்கள் படித்தாயிற்று. எட்டாம் வகுப்பிலும் அப்படி ஆகலாமா?

பள்ளி நெருங்கியதும் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டு அவன் மெள்ள நடந்தான். செக்கச் சிவந்த சீமை ஓடுகளைச் சூடிக்கொண்டு பரந்தவெளியில் நிமிர்ந்து நின்ற அந்தப் பள்ளிக்கூடம்தான் எவ்வளவு இனிமையானது! கொத்துக் கொத்தாகப் பூத்துச் சிரிக்கும் பூச்செடிகளும், பச்சைப் பசேலென்று செழித்து நிற்கும் ஒதிய மர வரிசையும், மஞ்சள் நிறப் பழங்கள் குலுங்கும் வேப்ப மரக் கூட்டமும், விளையாட்டு வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மணிகளை இறைத்து வைத்தாற்போல் ஓரிரு மாணவர்கள் உட்கார்ந்திருக்கும்ஒய்யாரமும்...

''டேய், பழமலை! பாசாயிட்டியா?''

பழமலை நின்று திரும்பினான். பேசியவன் அவனுடைய பழைய நண்பன்; பழைய மாணவன்; படிப்பு வராமல் பள்ளியை விட்டவன்!

''பாசாயிட்டேன்! ஏழாவதிலிருந்து எட்டாவது!''

பழமலையின் பேச்சிலே எதற்குமே பிடிபடாத பெருமிதம்.

''பரவாயில்லே, உன் மூளையிலாவது கொஞ்சம் படிப்பு ஏறுது. நல்லாப் படிச்சிக்க. அது சரி, ஒரு மாங்காய் கொடுத்திட்டுப் போ!''

''மாங்காய் இல்லேடா!''







"டேய்! என்கிட்டேயே மறைக்கிறியே... எங்கே பையைக் காட்டு....."

பழமலை பையைத் தொட விடவில்லை. "போடா!" என்று சொல்லி விட்டு ஓட்டமெடுத்தான்.

புதுப் பையன்களைப் பள்ளியில் சேர்க்கும் தந்தைமார் கூட்டம் அன்று அதிகமாக இருந்தது. ஒவ்வொருவருக்கும் தத்தம் மக்களைப் பற்றி என்னென்ன கனவுகளோ! தனக்கு உரிமையான இடத்தில் வந்து நிற்கும் அன்னியர்களைப் போல் அவர்களை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே படியேறினான் பழமலை. பள்ளிச் சுவரில் பெயர்ப் பட்டியல்கள் வரிசை வரிசையாகத் தொங்கின. அவற்றைக் கண்டதுமே அவ்வளவு நேரம் இல்லாத பரபரப்பு அவனுக்கு ஏற்பட்





டது. அவன் பரீட்சையில் தேறாவிட்டால் வேறு யார்தான் தேற முடியும்? நிச்சயமாகத் தேறியிருப்போம் என்ற நம்பிக்கை இருந்தாலும் பதற்றமும் தவிப்பும் அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டன. தவிர்க்க முடியாத நடுக்கத்துடன் அவன் ஒவ்வொரு பட்டியலாகப் பார்த்துக் கொண்டே வந்தான்.

இதோ அவன் வகுப்புப் பட்டியல்! அதில் அவனுக்குத் தெரிந்த பெயர்கள், அவை ஒவ்வொன்றாக அவனுடைய துடிக்கும் கண்ணில் பட்டுப் பட்டு மறைகின்றன. படிக்கட்டில் வேகமாக இறங்கி ஓடி வருதல் போல் பார்வை பெயர் விட்டுப் பெயராகக் கீழே இறங்கிக் கொண்டே வருகிறது. இதோ கடைசிப் பெயர்.... அதற்கும் கீழே அந்த வெண்மைத் தாளின் வெற்றிடம்.....

அவனுக்குச் 'சொரே'லென்றது. அவன் பெயர் இல்லையே!

அப்படி அவன் நினைத்துப் பார்க்கவே இல்லை. அந்தக் கோணத்தில் அவன் கற்பனை சென்றதேயில்லை. பரீட்சை எழுதி முடித்தவுடனேயே தான் தேறி விட்டதாக அவன் தீர்மானித்திருந்தான். அவ்வாறே எல்லாரிடமும் தயங்காமல் சொல்லிக் கொண்டும் இருந்தான். அவன் எப்படித் தேறாமல் இருக்க முடியும்? ஐந்து கணக்குகளைச் சரியாகப் போட்டு விட்டானே, அவன் 'பெயி'லாக வழியே இல்லையே! அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் பல முறை அந்தப் பட்டியலில் தேடித் தேடிப் பார்த்தான். எத்தனை முறை பார்த்தும் அவன் பெயர் அந்தப் பட்டியலில் தோன்றவே இல்லை.

'சட்'டென்று அவனுக்கு மற்றொரு நினைவு வந்தது. ஒருவேளை அவன் பெயர் தவறாக விட்டுப் போயிருக்கலாமல்லவா? ஆனால் அடுத்தகணமே அந்தச் சந்தேகமும் தீர்ந்து விட்டது. தேறியவர்களின் பெயர்ப் பட்டியலுக்குப் பக்கத்திலேயே தேறாதவர்களின் பெயர்ப் பட்டியலும் இருந்தது. மூன்று பேர்கள் அவன் வகுப்பில் தேறவில்லை. அவனுடைய பெயர் தான் அதில் முதலாவதாக இருந்தது.

'*கண கண*' வென்று மணியடித்தது. வெளியிலிருந்த பையன்கள் எல்லாரும் வகுப்பில் நுழைந்து கொண்டார்கள். பெற்றோர்கள் சிலர் தலைமை ஆசிரியரின் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். காற்று வேகமாக வீச ஆரம்பித்திருந்தது. ஒரு பெரிய போராட்டம் மௌனமாக நிகழ்வது போல் தூரத்திலிருந்த மரங்களெல்லாம் வேகமாக அசைந்து கொண்டிருந்தன.

ஓரிரு நிமிடங்கள் பழமலை ஸ்தம்பித்துப் போய் நின்றான். வலுவான அடியின் வலி தாளாது அவன் உள்ளம் செயலற்றுப் போயிற்று. வெள்ளைத் தாளும் அதில் முத்து முத்தாக 'டைப்' செய்திருந்த பெயர்களும் பொருளற்று அவன் கண்ணெதிரே சிதறிச் சிதைந்தன.

பக்கத்தில் இருந்த வகுப்பு அறையில் என்ன கலையான நிகழ்ச்சியோ! அங்கிருந்து 'கொல்'லென்று சிரிப்பொலி எழுந்தது. எல்லாரும் அவனைப் பார்த்துத்தான் சிரித்தார்களோ! தலைமை ஆசிரியரும், மற்ற ஆசிரியர்களும், பரீட்சையில் தேறி விட்ட மற்ற எல்லா மாணவர்களும் சுற்றி நின்று அவனைப் பார்த்து நகைத்தார்களோ! அந்தப் பழைய



மாணவனும், கணக்குப் பிள்ளையும் அவன் கண்முன் தோன்றி அவனைப் பார்த்து எள்ளி நகைத்தார்களோ!

பழமலைக்குத் தலை சுற்றியது. கண் மங்கியது. பக்கத்திலிருந்த இரட்டைத் தூணைப் பற்றி, சாய்ந்து நின்றான்.

'இந்த வருடமும் அதே அறை, அதே ஏழாம் வகுப்பு, அதே புத்தகங்கள்.....'

'ஒரே வகுப்பில் மூன்று வருடங்கள் படிப்பதா?'

'எவ்வளவு பெரிய அவமானம்! ஊரில் எப்படித் தலைகாட்டுவது?'

அவன் பையை மீண்டும் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

'ஊராவது, வீடாவது, பள்ளியாவது, படிப்பாவது? அதெல்லாம் யாருக்கு வேண்டும்?'







அவன் வேகமாக நடந்தான்.

''டேய், பழமலை!''

அவன் 'சட்'டென்று திரும்பிப் பார்த்தான். தலைமை ஆசிரியர், அறைக்கு வெளியே வந்து நின்று கொண்டிருந்தார்.

''எங்கேடா, போறே? ஓடு வகுப்புக்கு!'' பெரும் போக்கும் அதற்குச் சமமான கண்டிப்பும் கலந்த அதிகார வார்த்தைகளைக் கூறினார்.

''சார்....!''

''வகுப்புக்குப் போறியா, இல்லையா? வாலுக் கழுதை! போடா!''

ஏனோ தலைமை ஆசிரியரைக் கண்டால் அவனுக்கு ஒருவகைத் திகில் ஏற்பட்டு விடும். இப்போது அவரே எதிரில் நின்று அவனோடு பேசவே, அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஒருகணம் குழப்பத்துடன் நின்றான். பிறகு தளர்ச்சியுடன் பையைத் தொங்க விட்டபடி திரும்பி வந்தான்.

''டேய்!''

அவன் நின்று திரும்பினான்.

''பெயிலாயிட்டியா?''

அவன் கண்கள் தாழ்ந்து நிலத்தை நோக்கின.

''பெயிலானா என்ன, பாசானால் என்ன ஒழுங்குன்னா ஒழுங்குதான். வகுப்பு நேரத்தில் வகுப்பில்தான் இருக்க வேண்டும். பெயிலானதுக்கு இரண்டு நாள் மட்டம் போட்டுப் பிரயோசனம் என்ன? இந்த வருஷமாவது கவனிக்கப் படி! படிச்சா ஏன் பெயிலாகும்?''

அவர் குரலின் பரிவில் பரீட்சையில் தோற்ற கவலைகூட அவனை விட்டு விலகி நின்றது. தலைமை ஆசிரியரே பொறுமையாக நின்று அவனிடம் அவ்வளவு பரிவுடன் பேசினாரே! வகுப்புக்குச் செல்ல வேண்டியதுதான் மிக மிக நியாயமாக அவனுக்குப் பட்டது. அவன் வகுப்பு அறையை நோக்கி நடந்தான்.

வகுப்பில் ஆசிரியர் இல்லை. ஒரே இரைச்சல். பழமலை தன் இடத்தில் அமர்ந்து கொண்டான். பையன்கள் அனைவரும் மேல் வகுப்புக்குப் போகும் மகிழ்ச்சியில் இருந்தார்கள். அவன் தேறவில்லை என்பதை அறிந்திருந்த பையன்கள் அவனை விசித்திரமாகப் பார்த்தார்கள். ஒருவரோடு ஒருவர் ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். அவற்றையெல்லாம் கவனியாதவன்போல் பழமலை 'உம்'மென்று உட்கார்ந்திருந்தான். யாரிடமும் பேச்சுக் கொடுத்து அவர்களுடைய அனுதாப வார்த்தைகளைக் கேட்க அவன் விரும்பவில்லை.

சிறிது நேரத்துக்கெல்லாம் வகுப்பில் நுழைந்த ஓர் ஆசிரியர் பிரம்பால் மேஜையைத் தட்டி 'சைலன்ஸ், சைலன்ஸ்' என்று கூவினார். பிறகு தேறியவர்களின் பெயர்களை வாசித்து விட்டு அவர்களையெல்லாம் தம் பின்னால் வரச் சொல்லி அழைத்துச் சென்றார்.

அவ்வளவு நேரம் கலகலப்பாக இருந்த அறை இப்போது வெறிச்சென்று இருந்தது. அவனோடு படித்தவர்கள் எல்லாரும் அவன் கண்ணெதிரிலேயே மேல் வகுப்புக்குச் சென்று விட்டார்கள். துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது. அவன்மட்டும் தனியாக அந்த அறையில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் அவன் கண்ணிலிருந்து மறைந்து போனது ஒரு விதத்தில் அவனுக்கு நிம்மதியையும் தந்தது. வரிசையாகப் போட்டிருந்த 'டெஸ்க்கு'களும் அகலமான சன்னல்களும், சுவரில் பதித்த கரும் பலகையும் மட்டுமே அவனைச் சுற்றிலும் இருந்தன. அவையனைத்தும் அவனுக்குப் பழகியவை. இரண்டு ஆண்டுகளாகப் பழகியவை. இப்போது மூன்றாவது ஆண்டும்......

அவன் சன்னல் வழியாக வெளியே நோக்கினான். விடுமுறையில் புழக்கம் அற்றுப் போனதால் பசுமை அரும்பி விட்ட விளையாட்டு வெளியும், அதற்கப்பால் அடர்ந்து படர்ந்து தோன்றும் மாந்தோப்பும், அதன் பின்னணியாகிய நீல வானவெளியும், அதில் அவ்வப்போது கறுப்புப் புள்ளிகளாக மிதந்து மறையும் பறவைகளும் அனைத்துமே ஒரு விதமான பிரமையில் வாயடைத்துப் போய் மௌனமாக இருந்தன.

அவன் ஏழாவது வகுப்புக்கு வந்த புதிதில் அவன் நண்பன் சன்னல் கதவில் வரைந்த தாமரைப் பூவின் படம் இப்போதும் மங்கலாகத் தெரிந்தது. அந்த நண்பன் இப்போது ஒன்பதாவது வகுப்புக்குப் போயிருப்பான். பழமலையும் இப்போது ஒன்பதாவது படிக்க வேண்டியவனாயிற்றே! இன்னும் ஏழாவதை விட்டே நகர்ந்தபாடில்லை. அவனுக்குப் படிப்பு வராதோ? மற்றப் பையன்களை விட அவனுக்கு மந்தமான மூளையோ? அவன் பெரிய படிப்புப் படிக்கவேண்டும் என்று அவனும் அவன் தாயும் விரும்புவதெல்லாம் வீண்தானோ?

'திபுதிபு' வென்று சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து புத்தம் புது மலர்களைப் போன்று மலர்ந்த பையன்கள் அந்த அறைக்குள் அவசரம் அவசரமாக நுழைந்து அவரவர்களுக்குக் கிடைத்த இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். தாவணியணிந்த நாலைந்து சிறுமிகள் அவர்களைத் தொடர்ந்து வந்து தனியான ஒரு 'டெஸ்க்'கில் அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் பேசியது, பயங்கொண்ட பறவைகள் 'கிரீச்' சிடுவதைப் போலிருந்தது. அடிக்கொரு தரம் 'உ....உ....' என்னும் சத்தம் மட்டும் அவர்கள் பேச்சில் ஒலித்தது.

பழமலைக்குப் பக்கத்தில் மிகவும் சிறியவனாகக் காணப்பட்ட ஒரு பையன் வந்தமர்ந்தான். அவனைக் கவனியாதவன் போல் சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் பழமலை. அவனுக்கு ஒரே அவமானமாக இருந்தது.

தன் உற்சாகத்தை அடக்கிக்கொண்டு சற்று நேரம் உட்கார்ந்திருந்த அந்தப் பையன், பிறகு மெள்ளக் கேட்டான்:

''நீ பெயிலாயிட்டியா?''

பழமலை அலட்சியமாக அவனைத் திரும்பிப் பார்த்தான். ''ஆமாம்!'' என்றான்.

''ஏன்? சரியாப் படிக்கலையா?''

''எல்லாம் சரியாத்தான் படிச்சேன். என்னமோ பெயிலாய்ப் போச்சு!''

''பையிலே என்ன மாங்காயா?''

பழமலைக்குத் 'திக்' கென்றது. தன்னைப் பற்றி அந்தப் பையனுக்குக் கூடத் தெரிந்திருக்கிறதே என்று எண்ணிக் கொண்டான். பிறகு பையைக் கையால் அணைத்துக் கொண்டு, ''பையில் புஸ்தகம்தான் இருக்கு!'' என்று சொல்லி விட்டு, சன்னலுக்கு வெளியே பார்வையை ஓட்டினான்.


''பாடமெல்லாம் ரொம்பக் கஷ்டமாக இருக்குமோ?''

''ஆமாம்! கஷ்டமாகத்தான் இருக்கும். ராப் பகலாப் படிக்கணும்!''

''அம்மாடி, பயமா யிருக்கு!''

''பயப்படாதே! எல்லாரும் படிக்கலையா? பாசாகலையா?''

பழமலைக்குச் சிறிது மனத் தெளிவு ஏற்பட்டாற் போலிருந்தது. அந்தச் சிறுவன்மேல் அவனுக்கு அன்பு எழுந்தது.



"உனக்குப் பாடமெல்லாம் நான் சொல்லித் தர்றேன். எல்லாப் பாடமும் எனக்குத் தண்ணீர் பட்டபாடு!"

"எனக்குக் கணக்குச் சரியாக வராது."

"எனக்கும்தான். ஆனால் இப்போ நல்லாக் கத்துக்கிட்டேன். போன முழுப் பரீட்சையிலே பத்துக்கு அஞ்சு கணக்கு 'ரைட்டு'. அப்படியும் பெயிலாயிடுச்சு!"

அவன் மறைத்து மூடி வைத்த மனத்தின் ஆதங்கம் அவன் பேச்சில் மெல்ல இழைந்தது. மேலும் ஏதோ பேச ஆரம்பித்தான். ஆனால் முத்துவாத்தியார் வகுப்பு அறையில் நுழையவே, அவன் பேசுவதை நிறுத்திக் கொண்டான்.

முத்து வாத்தியார் மேஜையைத் தட்டி விட்டு, "என்னடா, பசங்களா? எல்லாரும் ஆறாம் கிளாசிலிருந்து ஏழாம் கிளாசுக்கு வந்திட்டீங்களா?" என்றார்.

முன் வரிசையிலிருந்த ஒரு பையன், "ஆமாம்!" என்றான்.

"பெயிலாய்ப் போன பையன்கள் யாராவது இருக்கீங்களா?"

பழமலை மட்டும் எழுந்து தலை குனிந்து கொண்டு நின்றான்.

"சரி, உட்கார்! பெயிலாய் போனதாலே ஒண்ணும் அவமானமோ, கேவலமோ இல்லே. இது சகஜந்தான். இதுக்காக மனம் உடைஞ்சு போய் எங்கேயாவது ஓடிப் போவதும், தண்டவாளத்தில் தலையைத் தருவதும், இப்படியெல்லாம் ஏன் செய்யணும்? அதிலே என்ன பிரயோசனம்? பெயிலாய் போனால் திரும்பவும் படிக்கணும், பாஸ் செய்யணும். அதுதான் புத்திசாலித்தனம்."

வகுப்பு அமைதியாக இருந்தது.

"என்னடா, பழமலை! இந்த வருசம் எல்லாப் பாடத்திலேயும் 'பஸ்ட்' மார்க் வாங்கணும். என்ன?"

அவன் தலையை அசைத்தான். முத்து வாத்தியார் பெருமூச்சுவிட்டார். அவர் முகம் வாட்டமடைந்தது.

"இந்தக் காலத்திலே என்ன பாடம் சொல்லித் தாராங்க? பையன்களுக்குப் பாடம் புரியணும், அதிலே, தேர்ச்சி அடையணும்னு அக்கறை ஏது? இதிலே டியூஷன் வேறே..."

அவர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டுக் கண்களை இரண்டு விரல்களால் சிறிது நேரம் கசக்கிவிட்டார்.

"இந்த டியூஷன் சொல்லித் தர்றது இருக்கே இது மகாபாவம்! காசு தர்றான்னு ஒரு பையனுக்கு அதிக நேரம் பாடம் சொல்றதும் பெரிய அதர்மம். எல்லாப் பையன்களுக்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டாமோ? இதை யார் நினைச்சுப் பார்க்கிறாங்க? படிப்பையும் பிஸினஸ் ஆக்கிட்டாங்க. அஞ்சு, பத்து தர்றான்னு ஒரு பையனுக்குத் தனியா வித்தை கத்துத் தர்றது கேவலமில்லையா? எல்லாம் கெட்டுப் போன மாதிரி இந்த ஆசிரியத் தொழிலும் போச்சுடா! என்னை மாதிரி வாத்தியங்க கூடக் காசுக்குத்தாண்டா, பையா, அடிமையாய் இருக்கிறாங்க!"

பழமலை டியூஷன் வைத்துக்கொள்ள இயலாத தன் நிலையை எண்ணிக் கொண்டான். முத்து வாத்தியாரின் பேச்சு அவனுக்குப் புரியாததோர் ஆறுதலைத் தந்தது. அவன் மனத்தில் உழன்று கொண்டிருந்த குழப்பங்கள் அவனைவிட்டு விலகி எட்டி நிற்பது போல் தோன்றியது.

"இதுக்கு என்ன செய்யணும், தெரியுமா? ஒரு பையன் பெயிலானால் அதற்குப் பொறுப்பான வாத்தியாருக்கு அடுத்த வருசம் சம்பளத்திலே ஒரு ரூபாய் குறைக்கணும். பத்து பேர் பெயிலானால் பத்து ரூபாய் 'கட்'! ஆமாம், அந்த வருஷம் முழுதும் பத்து ரூபாய் குறைந்த சம்பளம் வரணும். அப்போ அவருக்கு அக்கறை இருக்கும். அடுத்த வருஷம் ஒவ்வொரு பையனையும் நல்லாக் கவனிச்சு எப்பாடு பட்டாவது எல்லாப் பையன்களையும் தேத்தி விடுவார்."

அவர் போக்குப் பையன்களுக்குப் புரியவில்லை. சக ஆசிரியர்களுக்குப் பிடிப்பது இல்லை. ஆனால் பழமலைக்கு மட்டும் ஒன்று புரிந்தது. அவன் தேறுதற்கு அவனுடைய மந்த மூளை மட்டும் காரணமில்லை என்பதுதான் அது. அவ்வளவு நேரம் இருண்டிருந்த அவன் மனக் குகையில் ஒளிப் பிரவாகம் பொங்கிப் பாய்ந்தது. தன்னைப் பற்றிய அவநம்பிக்கை பொடிப் பொடியாகத் தூளாகி மறைந்தது. முயன்று மேலும் படிப்பதில் தாழ்வில்லை என்ற திடமான தீர்மானம் உருவாகி அவன் துவண்ட உள்ளத்துக்கு வலுவைத் தந்தது.

மணி அடித்தது. அந்த முதியவர் மெல்ல எழுந்து நிதானமாக நடந்து வெளியேறினார். சிறிது நேரத்துக்கெல்லாம் சமூக ஆசிரியர் உள்ளே நுழைந்தார்.

சமூக ஆசிரியருக்குப் பழமலையை எப்போதுமே பிடிக்காது. அவனுடைய மக்குத்தனத்துக்காக அவனிடம் அடிக்கடி எரிந்து விழுவார். காரணமின்றியே சில சமயங்களில் அவனைத் திட்டுவார், அடிப்பார், கேலி செய்வார். அவன் மேல் அவருக்கு அப்படி ஒரு வெறுப்பு. இத்தனைக்கும் அவன் சமூகப் பாடத்தில் ஓரளவுக்கு நல்ல மார்க்குகள் வாங்குவான். ஏனோ சிலர் தோற்றம் சிலர் மனத்தில் ஒரு வித அருவருப்பை உண்டாக்கி விடுகிறது. என்ன செய்வது?

அன்று அவர் கேட்ட பல கேள்விகளுக்கு, பழமலைக்குப் பதில்கள் தெரிந்திருந்தன. ஆயினும் ஒவ்வொரு முறையும் எழுந்து பதில் சொல்லாமல் தயங்கியவாறே உட்கார்ந்திருந்தான்.

"எல்லாரும் மக்குப் பையன்கள். ஒருத்தனுக்கும் 'ஜெனரல் நாலட்ஜ்' இல்லையே! சரி, இப்ப நான் ஒவ்வொரு பெயராகச் சொல்வேன். குறிப்புச் சொல்லுங்க, பார்க்கலாம்—!"

"சாக்கரின்"

பையன்கள் மௌனமாக இருந்தனர்.

"சாக்கரின்—ஒருத்தனுக்கும் தெரியவில்லையா?"

பழமலையின் மனம் அடித்தது. அவனுக்கு விடை தெரியும். அத்தனை பேருக்கும் தெரியாத விடை அவனுக்கு மட்டும் தெரியும். எழுந்து சொன்னால் என்ன? சமூக ஆசிரியருக்கும் அவன் மேல் நல்லெண்ணம் உண்டாகலாம். இந்த ஆண்டு எல்லாவற்றிலும் தனித் திறமை காண்பிக்க வேண்டும். எதிலும் முதல் மாணவனாக விளங்க வேண்டும்.

பழமலை எழுந்தான். நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது.

"வான வெளியில் ராக்கெட்டில் பறந்து முதன் முதலில் உலகைச் சுற்றியவர் சாக்கரின். இவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்!"

'கொல்'லென்ற நகைப்பொலி வகுப்பில் எழுந்தது. ஏனெனில் பையன்களுக்கு சாக்கரினைப் பற்றித் தெரிந்திரா விட்டாலும் காகரினைப் பற்றித் தெரிந்திருந்தது.

பழமலை குன்றிப் போய் அமர்ந்தான்.

"டேய், எழுந்திருடா!"

சமூக ஆசிரியரின் முகத்தில் வெறுப்பும் சினமும் பொங்கின. அவனுக்குக் கவலை இல்லை. ஆனால் அவனைவிட வயதில் குறைந்த புதுப் பையன்கள் அனைவரும் அவனைப் பார்த்துச் சிரிக்கிறார்களே!

"ஏண்டா, உனக்கு வெட்கமாயில்லே? பரீட்சையும் இந்த மாதிரிதான் எழுதியிருப்பாய். மூன்றாவது வருஷமும் இதே ஏழாங்கிளாஸ் படிக்கப் போறே. இந்தச் சின்ன விஷயம்கூட உனக்குத் தெரியலே. சர்க்கரையிலே கலக்கிற சாக்கரினுக்கும், வானவெளியிலே பறந்த காகரினுக்கும் என்ன சம்பந்தம்? நீ எல்லாம் ஏண்டா, படிக்க வந்து என் உயிரை எடுக்கணும்? எங்கேயாவது மாடு மேய்க்கப் போ, அல்லது மூட்டை தூக்கப் போ!"

பழமலை பேசாமல் நின்றான். அவனுக்கு ஆசிரியர் மேல் கோபம் வரவில்லை. தன் மீதே ஆத்திரமாக வந்தது. தன் மூளையில் எதுவுமே ஏறாது என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. தான் மேலும் படிப்பது வீண் முயற்சிதான் என்ற மெல்லிய ஏக்கம் இழைந்து அவனுக்குச்



சற்று நேரத்துக்கு முன்பு ஏற்பட்டிருந்த நம்பிக்கையைக் குலைத்து விழுத்தியது. பள்ளியிலும் அவமானம், ஊரிலும் அவமானம். அந்தக் கிழக் கணக்கப் பிள்ளை... அவர் முகத்தில் எப்படி விழிப்பது?

"சரி, சரி, உட்கார்ந்து தொலை!" என்று கூறிய ஆசிரியர், பிறகு, "உன் சமூக நூல் எங்கே, எடு!" என்றார்.

தன்னுடைய தடித்த பையை எடுத்த பழமலை, 'சட்'டென அதைத் திரும்பவும் வைத்து விட்டு, "புத்தகம் கொண்டு வரலே, சார்!" என்றான்.

"பையிலே என்னடா, பிள்ளே?"

"..........."

"ஓஹோ! மாங்காயா?"

"........"

"இந்தத் திருட்டுப் புத்தி இருக்கிற வரைக்கும் நீ எங்கே உருப்படறது?"

"நான் எதையும் திருடலே, சார்!"

அவன் குரலில் மற்றப் பையன்கள் முன்னால் தான் அவமானப்படுவதால் கிளர்ந்தெழும் சினத் தீ: ஆசிரியரை எடுத்தெறியும் வேகம்.

"துரைக்குக் கோபம் வருதே! அந்தப் பையை இங்கே கொண்டா..உம்..இங்கே எடுத்துக்கிட்டு வா!"

அவன் அசையாமல் நின்றான்.

"இப்ப வர்றியா, என்னடா?" வரிந்து கட்டிக் கொண்டு மல்லாடப் புறப்பட்டது போல் ஆசிரியர் சினந்து கூறினார்.

பையன்கள் அனைவரும் அவனையும் அவன் பையையும்தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் பையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு ஒரு கையால் கண்ணைக் கசக்கியவாறு தன் இடத்தை விட்டு ஆசிரியரின் மேஜையை நோக்கி நடந்தான். நடந்து அடுத்த வரிசையைச் சுற்றிக் கொண்டு அறையின் வெளிக் கதவை நோக்கிப் போனான்.

"எங்கேடா, போறே?"

அவன் பதில் கூறவில்லை. நிற்கவும் இல்லை. சாவதானமாக வகுப்பை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான். தான் வாழ்வதே அர்த்தமற்ற செயல் என்று மனத்தில் உதித்து விட்ட நினைவு. எதையும் லட்சியம் செய்யும் நிலையைத்தாண்டி நின்று பெற்ற வெற்றுத் தோற்றம்.

"டேய், நில்லு! இந்த முறைப்பெல்லாம் வச்சுக்கிட்டே உன்னைத் தொலைச்சிப்புடுவேன். 'சஸ்பெண்டு' செய்திடுவேன்...."

அவன் போயேவிட்டான்.

"கழுதை! இம்பர்டினெட் ராஸ்கல்! ஐ வில் சஸ்பெண்ட் ஹிம்!"'

ஆசிரியருக்கு அவமதிப்பால் எழுந்த கொதிப்பு. மேலும் ஏதேதோ கூறி அவனைத் திட்டித் தன் ஆத்திரத்தைத் தீர்க்கப் பார்த்தார். அவனுடைய பைக்குள் இருந்தது மாங்காய்தான் எனபதில் அவருக்குத் துளியும் ஐயமில்லை.

செக்கச் சிவந்த சிமை ஓட்டைக் குடிக் கொண்டு, பசும் புல்வெளியும், அடர்ந்த மரங்களும் சூழ இனிய சோலை போல் காட்சி தந்த அந்தப் பள்ளியில் அமைதி குடிகொண்டிருந்தது. மகத்தானதொரு லட்சியக் கோயிலை நிர்மாணிக்கும் பணி அங்கே மௌனமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. அதில்தான் தோன்றித் தோன்றி, தோன்றிய கணமே மறைந்து அழிந்து போகும் எத்தனை எத்தனை உணர்ச்சிக் குமிழ்கள்!

சற்று நேரத்துக்கு முன்னர் வீசிய காற்றும் நின்று போனதால் தவிர்க்க முடியாத யாரையோ அச்சத்துடன் எதிர் கொள்வதைப் போன்ற தயக்கம் எங்கும் குடிகொண்டது. ஏழாம் வகுப்பிலே சமூக ஆசிரியர் மணியடிப்பதை எதிர் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார்.

திடீரென்று வெளியே பலர் பரபரப்புடன் ஓடுவது தெரிந்தது. மற்ற வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் விளையாட்டு வெளியைக் கடந்து விரைவாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு பையன் 'குடு, குடு' வென்று ஓடி வந்து அந்த வகுப்பில் நுழைந்து, "சார்! பழமலை ரெட்டைக் கிணற்றிலே விழுந்துட்டானாம்!" என்று சொல்லி விட்டுத் திரும்பவும் 'குடுகுடு' வென்று ஓடிப் போனான். மாதுளை 'பட்'டென வெடித்து எண்ணற்ற மணிகள் சிதறி ஓடுவதுபோல் பையன்கள் அனைவரும் பள்ளியிலிருந்து கிணற்றை நோக்கி ஓடினார்கள்.

சமூக ஆசிரியர் நிலைகுலைந்து போனார். தம்முடைய கடுமையான பேச்சுத்தான் அவனை அந்தச் செயலுக்குத் தூண்டி விட்டதோ என்ற அச்சம் அவரை நடுங்க வைத்தது. 'ஏன் அப்படிப் பேசித் தொலைத்தோம்' என்று அவர் தம்மையே கடிந்து கொண்டார். சற்றுத் தம்மைத் தாமே நிதானப்படுத்திக் கொண்டு மெள்ள எழுந்து கிணற்றை நோக்கி நடந்தார்.

பள்ளிக்கூடத்துக்குச் சற்றுத் தூரத்தில் வயல்வெளியை ஒட்டினாற் போல் இருந்தது அந்தக் கிணறு. அதை இரட்டைக் கிணறு என்று சொல்லுவார்கள். ஆழமும் அதிகம். மாணவர்களும், ஆசிரியர்களும் அங்கே பதற்றத்துடன் கூடி நின்றார்கள்.

அந்தப் பெருங்கிணற்றில் துணிவுடன் இறங்கக் கூடிய ஆள் 'சட்'டெனக் கிடைக்க வில்லை. சிறிது நேரத்துக்குப் பின் ஓர் ஆள் விருப்பமின்றியே கயிற்றின் உதவியுடன் இறங்கி மிகவும் பிரயாசைப் பட்டுப் பழமலையை மீட்டு வந்தான். உடனே முதற் சிகிச்சை அளித்தார்கள். ஆனால் முடிந்து போன கதையை முதற் சிகிச்சை என்ன செய்ய முடியும்?

பழமலையின் கதை முடிந்தே போய் விட்டது. தான் தேறியதாக நம்பியுள்ள தாயிடமும், கணக்கப்பிள்ளையிடமும் தான் இரண்டாவது வருடமும் தேற வில்லை என்பதைக் கூறிக் குன்றிப் போய் நிற்கத் துணிவின்றி அவர்கள் கண்களுக்கெல்லாம் துலங்காத பெருவெளியில் அவன் புதைந்து மறைந்தே போனான்.

ஆளுக்கொன்றாகப் பேசிப் பேசி அங்கலாய்த்தார்கள். அனைவரின் கண்களும் கலங்கின. பள்ளிக்கூடங்களைப் பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும் அங்கே விதம் விதமான அபிப்பிராயங்கள் உதிர்ந்தன. "அவனுடைய தாய்க்காரிக்கு ஆள் அனுப்புங்கடா!" என்று சொல்லி விட்டு, துண்டால் வாயைப் பொத்திக் கொண்டார் முத்து வாத்தியார். தங்கத்தில் நகை செய்யும் போது சில சிறு தங்கத் துகள்கள் சேதாரமாகிச் சிதறி விடுவது போல் பழமலையும் ஆகி விட்டானே என்று அவர் இதயம் அழுதது.

சமூக ஆசிரியர் சற்று நேரத்துக்கு முன்பு அவனை 'சஸ்பெண்ட்' செய்யப் போவதாகத் தாம் கூச்சலிட்டதை நினைத்துக் கொண்டார். இனி அவனை எப்படி, எதிலிருந்து 'சஸ்பெண்டு' செய்வது?

'அவனுடைய நன்மைக்காகத்தானே அவனைக் கடிந்து கொண்டோம்...'

முடிந்த வரை மனக் குமைச்சலைக் குறைத்துக் கொள்ள முயன்றார் அவர்.

'மாங்காயைத் திருடிப் பையை நிறைத்துக் கொண்டிருந்தால் திட்டாமல் என்ன செய்வது?'

மாங்காய்களின் நினைவு வந்ததும் அவர் கண்கள் பையைத் தேடின. அது கிணற்றின் ஓரமாக உப்பிக் கொண்டு கிடந்தது. அதை எடுத்துப் பார்க்கும் ஆவல் அவர் மனத்தில் கிளர்ந்து எழுந்தது. அவர் பையைத் தூக்கி, உள்ளிருந்தவற்றை வெளியே எடுத்துப் பார்த்தார்.

ஒரு கட்டுப் புத்தகங்கள்; ஓர் உணவுப் பொட்டலம்; அவ்வளவுதான்! அவர் எதிர்பார்த்த மாங்காய்கள் அதில் இல்லை.


'அவன் ஏன் சமூக நூலை எடுக்க மறுத்தான்?' என்று எண்ணியவாறே புத்தகங்களைப் புரட்டியவர் திடுக்கிட்டுப் போனார். அவர் நெஞ்சம் பதறியது. அந்தச் சிறுவனின் ஆசைகளை, உணர்ச்சிகளைக் கவனிக்கத் தெரியாத தன் மடமையை எண்ணி அவர் உடல் குன்றியது. கண்கள் கலங்கின. மெய் சோர்ந்து அவர் சிலையாக நின்றார்.

அவர் எதிர்பார்த்ததற்கு நேர் எதிராக மாங்காய்களுக்குப் பதில் பையில் புத்தகங்கள் இருந்தன. அவையனைத்தும் மேல் வகுப்புப் புத்தகங்கள். நிச்சயமாகத் தேறிவிடுவோம் என்ற நம்பிக்கையில் பரீட்சை எழுதிய உடனேயே தன் நண்பனிடமிருந்து அவன் வாங்கிவைத்துக்கொண்ட எட்டாம் வகுப்புப் புத்தகங்கள். ஆசையோடும் ஆர்வத்தோடும் அவன் வளர்த்துக் கொண்ட நம்பிக்கையின் ஆழமான சின்னங்கள்.


தான் தேறாததை அறிந்த பிறகு, அந்த மேல் வகுப்புப் புத்தகங்களைச் சுமந்த ஒவ்வொரு கணமும் எப்படி வெட்கிக் கூசிப் போயிருப்பான். அதை மற்றவர்கள் முன் வெளிப்படுத்தியிருந்தால் அவனுக்கு எவ்வளவு அவமானமாக இருந்திருக்கும்?

அவர் விரல்கள் நடுங்கின. அழகிய மணிப் புறா துடிப்பதைப் போன்று அந்த எட்டாம் வகுப்புப் புத்தகங்கள் நழுவிப் படபடத்துக் கீழே விழுந்தன.




Ladies Nylon Strap — Model No: 164 — Price: Rs. 5.25
Ladies gold plated Bracelet — Model No: 156 — Price: Rs. 12.00
THERE IS ALWAYS A
"Bentex"
STRAP OR BRACELET
TO SUIT YOUR REQUIREMENT
Gents Nylon Strap — Model No: 171 — Price: Rs. 3.50
Gents Leather Strap — Model No: 130 — Price: Rs. 3.50
SOLE AGENTS:
"Bentex" SALES CORPORATION, BENTEX BLDG., BOMBAY 7.
MANUFACTURERS: COLLINS & CO., BOMBAY 7.
AVAILABLE AT ALL WATCH DEALERS
BSC-R/21A

ALWAYS AT THE TOP!
Prabhat Stoves, Lamps were companions of the conquerors of Annapurna III



INDIAN ANNAPURNA III EXPEDITION 1961
Under the auspices of
THE INDIAN MOUNTAINEERING FOUNDATION

Base Camp
April 5, 1961

Dear Sir,

We thank you for the products so kindly donated by you.

We find them extremely useful and send you our best compliments.

Yours faithfully,
Sd/-Lt.M.S.Kohli.

Then on Neelkantan....
Now on Nanda Devi!

PRABHAT STOVES AND LAMPS in CAPT. N. KUMAR'S team when Shri O. P. SHARMA planted Bharat's flag on NEELKANTAN peak....and now in H.K. DANG'S team on NANDA DEVI!

Formerly, the first on EVEREST in Col. GYAN SINGH'S team, and on ANNAPURNA in Lt. M. S. KOHLI'S!


Everywhere, PRABHAT STOVES AND LAMPS to give Dependable satisfactory, TOP service!

Prabhat

PRABHAT (STOVE & LAMP) PRODUCTS CO., PRIVATE LTD
NOBLE CHAMBERS PARSEE BAZAR STREET FORT, BOMBAY 1

K.S.K.



பிள்ளைத்தமிழ் அமுதம்-


பிள்ளைத் தமிழ்
அமுதம் - 2
கல்கி
தீபாவளி மலர் 1961


பிள்ளைத்தமிழ் அமுதம்-3
கல்கி தீபாவளி மலர் 1961



பிள்ளைத் தமிழ் அமுதம் - 4
கல்கி தீபாவளி
மலர் 1961


பிள்ளைத் தமிழ் அமுதம் - 6
7


பிள்ளைத் தமிழ் அமுதம் - 8
கல்கி தீபாவளி மலர்
1961


பிள்ளைத் தமிழ் அமுதம் .9
கல்கி தீபாவளி


பிள்ளைத் தமிழ் அமுதம் - 10
கல்கி தீபாவளி மலர் 1961



திட்டத்தை நிறைவேற்ற முன்னணியில்...

ஐந்தாண்டு திட்டங்களின் பிரமாத சாதனைகளை உருவாக்கி, நம் நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்கு அடிகோலுவதில் **ஏஸிஸி** மற்றும் **சங்கர்** பிராண்டு ஸிமெண்டுகள் ஆற்றிவரும் பணி கொஞ்ச நஞ்சமல்ல—அணைகள், ஹைடெல் தேக்கங்கள், தொழிற்சாலைகள், குடியிருப்புக் காலனிகள், சமூக நலத் திட்டங்கள், சாலைகள், பாலங்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் இவற்றை அமைப்பதில் இந்த ஸிமெண்டுகள் பெருமளவில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன...

...ஏஸிஸி மற்றும் சங்கர் பிராண்டு ஸிமெண்டுகள்

ACC

தி ஸிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.
தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிட். தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்.

JWT/CHI-3839



ஹ்யூன்

இந்தியாவில் அசோக சக்கரவர்த்தி ஆண்டு வந்த காலத்திலேயே (கி.மு. 273-232) புத்த மதம் சீனாவில் பிரவேசித்த தென்றாலும், அது கி. பி. முதல் நூற்றாண்டில்தான் ஒழுங்கான ரீதியில் அங்கு பரவத் தொடங்கியது. பிறகு ஒவ்வொரு நூற்றாண்டாக அதன் செல்வாக்கு வளர்ந்து வந்து ஏறக்குறைய ஏழாவது நூற்றாண்டில் உச்ச நிலையை யடைந்தது. இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்திய இரண்டு மூன்று நூற்றாண்டுகளிலும் இந்தியாவிலிருந்து அநேக அறிஞர்கள் சீனாவுக்குச் சென்று அங்கு புத்த மதம் ஆழமாக வேரூன்றிக் கொள்வதற்குத் துணை புரிந்தார்கள்.

இவ்வணமே மேற்படி நூற்றாண்டுகளில் சீனாவிலிருந்து இந்தியாவுக்கு அநேக அறிஞர்கள் வந்து போனார்கள். இவர்களில் பெரும்பாலோர் பௌத்த சந்நியாசிகள். இவர்கள் இந்தியாவுக்கு வந்து போவதை ஒரு புனித யாத்திரையாகக் கருதினார்கள். புத்தர்பிரான் அவதரித்தருளிய புண்ணிய பூமியல்லவா?

வந்தவருள் சிலர், இந்தியாவிலேயே சில ஆண்டுகள் தங்கி, புத்த மதத்தின் பல்வேறு கோட்பாடுகளைப் பற்றித் தக்கவர் வாயிலாக அறிந்து தெளிவு பெற்றுத் திரும்பிச் சென்றார்கள். திரும்பியவருள் சிலர் தாங்கள் தெரிந்துகொண்டதைச் சீனர்களுக்குச் சீன மொழியில் தெரிவித்தார்கள். இவர்களில் ஒரு சிலருக்குத்தான் - ஆம்; விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலருக்குத்தான் - சரித்திர ஏடுகள் இடம் தந்திருக்கின்றன. ஏனென்றால், இவர்கள் அறிந்து கொள்வதற்கும், அறிவிப்பதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சிகள், அநுபவித்த துன்பங்கள் முதலியவற்றைக் கால தேவதையினால் மறக்க முடியாது; மறைக்கவும் முடியாது. உண்மையைக் காண உறுதியுடன் நிற்கிறவர்களுக்குச் சரித்திரஏடுகள் இடங் கொடுக்கவில்லையானால் அந்தச் சரித்திர ஏடுகள் கரையான்களுக்கு இரையாக வேண்டியதுதான்.

இந்தியாவின் சரித்திர ஏடுகளிலும் சீனாவின் சரித்திர ஏடுகளிலும் ஒருங்கே இடம் பெற்று நிற்கின்ற ஒரு சிலருள் ஒருவன் ஹ்யூன் த்ஸாங் என்பவன். இவனை யுவான் சுவாங் என்று வேறுவிதமாகவும் அழைப்பர்.

இவன் இந்தியாவில் யாத்திரை செய்து விட்டுச் சீனா திரும்பிச் சென்று, இந்தியாவில் தான் கண்டதையும் கேட்டதையும் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறானென்ற அளவுக்குத்தான் பொதுவாக எல்லோருக்கும் - சிறப்பாகப் பள்ளிக்கூட மாணாக்கர்களுக்கு - அறிமுகமாயிருக்கிறான். ஆனால் இவனைப் பூரணமாக அறிந்துகொள்ள இந்த அறிமுகம் போதாது. இவன், இந்திய யாத்திரைக்காகச் செய்த முயற்சிகள், அப்பொழுது சந்தித்த இடையூறுகள், யாத்திரையின் போது அடைந்த அநுபவங்கள், சீனா திரும்பியபிறகு ஆற்றிய இலக்கியப் பணிகள் ஆகியவற்றை ஒருவாறாகவேனும் தெரிந்து கொண்டால்தான் இவனைப் பூரணமாக அறிந்து கொண்டதாகும்.

ஹ்யூன் த்ஸாங்கின் மூதாதையர்கள் சீனாவின் மத்தியிலுள்ள ஹோனான் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மாகாணத்திலுள்ள லோயாங், கி. பி. ஏழாவது நூற்றாண்டில் சீன ஏகாதிபத்தியத்தின் தலைநகரமா யிருந்தது. அங்கு இவர்கள் அரசாங்க உயர்தர உத்தியோகங்கள் வகித்து வந்தார்கள். அத்துடன் நல்ல கல்விமான்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

ஹ்யூன் த்ஸாங்கின் தந்தை ஹுயி என்பவன், சீன இலக்கியங்களை முறையாகப் பயின்ற ஒரு பண்டிதன். வலிய வந்த அரசாங்க உத்தியோகங்களை மறுத்து விட்டு, இலக்கிய ஆராய்ச்சியில் இன்பம் நுகர்ந்து வந்தான். இவனுக்கு நான்கு பிள்ளைகள். கடைசி மகன்தான் ஹ்யூன் த்ஸாங். இவன் பிறந்தது கி. பி. 600-ஆம் வருஷம். சிறு வயதில் தந்தையிடமே கல்வி பயின்று வந்தான். ஒரு நாள் கன்பூஷியஸின் கிரந்தங்களில் பாடம் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது தந்தை, ''கன்பூஷியஸின் மாணாக்க னொருவன், ஆசிரியன் முன்னிலையில் உட்காராமல் நின்று கொண்டே பாடம் கேட்பது வழக்கம்'' என்று சொன்னான். இதைக் குறிப்பாக



த்ஸாங்

உணர்ந்த இவன் - ஹ்யூன் த்ஸாங் - எழுந்து நின்று கொண்டான். ''ஏன்?'' என்று தந்தை கேட்க, ''கன்பூஷியஸின் மாணுக்கனே நின்று கொண்டு பாடம் கேட்க, என் ஆசிரியரும் தந்தையுமாகிய தங்கள் முன் னிலையில் நான் உட்கார்ந்து கொண்டு பாடம் கேட்கலாமா?'' என்று இவன் பதில் கூறினுன். இதைக் கேட்டுப் புளகாங்கித மடைந்தான் தந்தை. இவன் எதிர்காலத்தைப் பற்றி ஒரு நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

ஹ்யூன் த்ஸாங், பிள்ளைப் பருவத்தில் கூட, வீண் விளையாட்டுக்களில் பொழுது போக்க மாட்டான். ஏடும் கையுமாக எப்பொழுதும் வீட்டிலேயே கிடப்பான். தெருவில் அவ்வப்பொழுது எழும் சந்தடிகள்மீது கவனத்தைச் செலுத்த மாட்டான். பெற்ருேர்களிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்து கொள்வதில் திருப்தி கண்டான். தவிர, இவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருந்தது. ஒரு முறை ஒரு நூலைப் படித்து விட்டால் போதும். உடனே அதனை முழுதும் அப்படியே ஒப்புவிப்பான்.


ஹ்யூன் த்ஸாங்கின் நேர் மூத்தவன், ஒரு பௌத்த பிட்சுவாகி, லோயாங்கி லுள்ள ஒரு மடாலயத்தில் வசித்துக் கொண்டிருந்தான். அவனைப் போல் தானும் ஒரு பிட்சுவாக வேண்டுமென்ற எண்ணம் இவனுக்கு உண்டாயிற்று. அப்படியே பெற்ருேர்களின் சம்மதத்தின் பேரில் பதின்மூன்ருவது வயதில் பிட்சுவாகி விட்டான். பிட்சுவானதும், புத்த மதத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினுன். இவைகளைக் கேட்ட மூதறிஞர்கள் இவனை வியந்து பாராட்டினுர்கள்.

ஆனல் ஹ்யூன் த்ஸாங்கோ, புத்த மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதென்று உணர்ந்தான். இதற்காகப் பல அறிஞர்களையும் நாடிச் சென்ருன். அவர்களிடமிருந்து அரிய விஷயங்களைத் தெரிந்து கொண்டான். ஆயினும் இவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. புத்தர் பிரான் அவதரித்தருளிய இந்தியாவுக்குச் சென்று, அங்குள்ள அறிஞர்களின் உதவி கொண்டு, புத்த மதத்தைப் பற்றிய தன் அறிவை அதிகரித்துக் கொள்ளத் தீர்மானித்தான். தன் தீர்மானத்தைச் சில நண்பர்களுக்குத் தெரிவித்தான். அவர்களும் இவனேடு புறப்படுவதாகச் சொன்னுர்கள்.

அப்பொழுதெல்லாம் சீனவிலிருந்து வெளி நாடுகளுக்குச் செல்கிறவர்கள், சக்கரவர்த்தியின் முன் அனுமதி பெற வேண்டுமென்று ஒரு விதி இருந்தது. இதை அனுசரித்து, ஹ்யூன் த்ஸாங், சக்கரவர்த்தியின் அனுமதி கோரினுன். அப்பொழுது, சக்கரவர்த்தியாகப் பட்டமேற்றிருந்தவன் தாங் வமிசத்தைச் சேர்ந்த தைத்ஸாங் என்பவன். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 627-650. மன்னன், இவனுக்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டான். இது தெரிந்து, இவனேடு புறப்படுவதாகச் சொன்ன நபர்கள் பின் வாங்கிக் கொண்டு விட்டார்கள். இவன் மட்டும் எப்படியாவது இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதென்று உறுதி கொண்டான்.

தனியொருவனுக்குத் தொலை தூரம் செல்வதென்ருல் இலேசான காரியமா? அதுவும் ஒழுங்கான வழி கிடையாது. போகும் போது, சில சந்தர்ப்பங்களில் பட்டினி கிடக்க வேண்டி யிருக்கும். கள்ளர் பயம் இருத்தல் கூடும். இவைகளுக்கெல்லாம் ஈடு கொடுக்க வேண்டுமென்பதற்காக, ஹ்யூன் த்ஸாங், தன் தேகத்தை முன் கூட்டியே பலவித பரிசோதனைகளுக்குட்படுத்திப் பார்த்துக்கொண்டான். ஒருவாறு, உள்ளத்தையும் உடலையும் பக்குவப்படுத்திக் கொண்டான்.

பிறகு இந்தியா நோக்கிப் புறப்பட்டான் ஹ்யூன் த்ஸாங். அப்பொழுது இவனுக்கு ஏறக்குறைய இருபத்தாறு வயது. வழியில் இவன் ஆங்காங்கு தங்கி, புத்த மதத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்து கொண்டு போனுன். இவனுடைய பிரசங்கங்களைக் கேட்டவர்கள் இவனுக்குக் காணிக்கையாக அநேகம் பொருள்களைக் கொடுத்தார்கள். இவன்



வெ.சாமிநாத சர்மா

அவைகளை முதலில் மரியாதைக்காகப் பெற்றுக் கொண்டு பிறகு, கொடுத்தவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டான். சவாரிக்கு ஒரு குதிரையை மட்டும் ஏற்றுக் கொண்டான். இவனிடம் ஈடுபாடு கொண்ட இருவர், இவனுக்குத் துணை வருவதாகச் சொல்லி, இவனோடு புறப்பட்டனர். ஆனால் சில நாட்கள் பிரயாணத்துக்குப் பிறகு களைத்துப்போய்ப் பின் தங்கிக்கொண்டுவிட்டார்கள். இவன் ஏறி வந்த குதிரையும் வழியில் இறந்து விட்டது. அப்பொழுது இவன் வடமேற்கில் உள்ள கான்ஸு மாகாணத்தின் மேற்கு எல்லையை நோக்கி வந்து கொண்டிருந்தான். அந்த மாகாணத்து அதிகாரி, அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி யாரும் வெளிநாடுகளுக்குச் செல்லக் கூடாதென்ற உத்தரவைக் கண்டிப்பாக அமுல் நடத்துகிறவன். ஹ்யூன் த்ஸாங் பிரயாணஞ் செய்வது தெரிந்ததும், மேற்கொண்டு செல்லக் கூடாதென்று தடை உத்தரவு விதித்தான். எனவே, இவன்—ஹ்யூன் த்ஸாங்—பகலிலே ஓரிடத்தில் ரகசியமாகத் தங்கி யிருந்தும், இரவில் நடந்து சென்றும் அந்த மாகாண எல்லையைக் கடக்க வேண்டியதாயிற்று.


இவன் இங்ஙனம் அரசாங்க உத்தரவை மீறி மேற்குப் பக்கமாகச் சென்று கொண்டிருப்பது தெரிந்த அரசாங்கம், இவனைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு எல்லா ஊர் அதிகாரிகளுக்கும் ஆணை பிறப்பித்தது. இவன் ஓர் ஊரில் தங்கியிருக்கையில், அந்த ஊர் அதிகாரி, இவன் பேரில் சந்தேகம் கொண்டு இவனை அணுகி விசாரித்தான். இவன், தன் நோக்கத்தைத் தெரிவித்ததும், அந்த அதிகாரி, இவன் உறுதியையும் தன் பெருக்கத்தையும் பாராட்டி விட்டுத் தனக்குக் கிடைத்த அரசாங்க உத்தரவை இவன் கண் முன்னேயே கிழித்துப் போட்டு விட்டான். உடனே மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடங்குமாறு கூறினான்.

அப்படியே பல ஊர்களையும் அதிகாரிகளுக்குத் தெரியாமல் கடந்து சென்று கடைசியில் ஒரு பாலைவனத்தையடைந்தான். இந்தப் பாலைவனம் சுமார் முந்நூறு மைல் நீளம். இதனைக் கடந்து போயாக வேண்டும். துணிந்து இறங்கி விட்டான் இதில். வழியில் ஈ, காக்கை கூட இல்லை. பார்க்குமிட மெங்கும் புல்லோ தண்ணீரோ கிடையாது. வழித் துணைக்கோ? இவனுடைய நிழல்தான் இவனோடு வந்து கொண்டிருந்தது. இவன் தோளிலே, நீர் நிரம்பிய ஒரு தோற் பை கனத்துக் கொண்டிருந்தது. பாலைவனத்தில் சுமார் முப்பது மைல் தூரம் சென்றான். பிறகு திக்குத் திசை தெரியவில்லை. எந்தப் பக்கம் காலடி எடுத்து வைப்பது என்று தெரியாமல் தயங்கி நின்றான். அப்பொழுது தாக சாந்தி செய்து கொள்ளத் தண்ணீர்ப் பையை எடுத்தான். அது கைதவறிக் கீழே விழுந்து விட்டது. அதிலிருந்த நீரும் மணலிலே சென்று மறைந்து விட்டது. ஆயினும் இவன் தளர்ச்சி யடையவில்லை. நெஞ்சிலே உறுதியை நிரப்பிக்கொண்டு மேற்குப் பக்கமாக வழி நடந்தான். சிறிது தூரம் சென்றதும், களைத்துப் போய்க் கீழே விழுந்து விட்டான். பிரக்ஞையற்ற நிலையில் நான்கு பகல்களும் ஐந்து இரவுகளும் மணலிலே கிடந்தான். அந்த நிலையிலும், மரணம், இவனை எட்டிப் பார்க்க அஞ்சியது. ஏனென்றால், இவன் உள்ளம், புத்தர்பிரானின் திருவருளை நாடி நின்றது. ''அருளாளா! உலக இன்பங்களை அடைய வேண்டியோ, புகழ் பெற விரும்பியோ, நீ அவதரித்த புண்ணிய பூமியை நாடி வருகின்றேனில்லை; நீ அருளிய தர்மோபதேசங்களைத் தெளிவாக அறிந்து எல்லோருக்கும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்ற ஆவலினாலேயே வருகிறேன். அடியேனுக்குத் தண்ணருள் சுரப்பாய்'' என்று அந்த உள்ளம் பிரார்த்தனை ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது.

இப்படி யிருக்க, ஐந்தாவது நாள் நடுநிசியில் எங்கிருந்தோ ஒரு குளிர்ந்த காற்று வந்து இவன் தேகத்தின் மீது பட்டது. உடனே பிரக்ஞை தெளிந்தான். தண்ணீரில் குளித்த மாதிரி உணர்ந்தான். எழுந்து மேலே நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்றதும் ஒரு புல் தரையைக் கண்டான். அதன் நடுவில் ஒரு குளம் இருந்தது. அதனை ஆவலோடு அடைந்து, வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தான்; தன் தோற் பையிலும் நிரப்பிக் கொண்டான். மேலே நடக்க ஆரம்பித்து இரண்டு நாட்கள் பயணத்துக்குப் பிறகு பாலைவனத்தைக் கடந்தான்.

அதைக் கடந்து காவோசாங் என்ற பிரதேசத்தை யடைந்தான் ஹ்யூன் த்ஸாங். அந்தப் பிரதேசத்து அரசன், இவனை மிகவும் உபசரித்து, தன்னுடனேயே நிரந்தரமாக இருந்துவிடும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு இவன், தான் இந்தியா செல்லவிருக்கும் உத்தேசத்தைத் தெரிவித்து, தன் பயணத்தைத் தடை செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொண்டான். அந்த மன்னனோ, இவன் மீது வைத்த அபார பக்தியினால், தன்னுடனேயே இருந்து விடும்படி திரும்பத் திரும்ப வற்புறுத்தினான்.

மன்னனுடைய இந்தப் பிடிவாதத்தைக் கண்டு ஹ்யூன் த்ஸாங் சிறிது வருத்தமே யடைந்தான். தன்னை மேற்கொண்டு போக விடுமாறும், அப்படிப் போக விடா விட்டால், தான் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தெரிவித்தான். அப்படியும் மன்னனின்



மாப்பிள்ளை: சாப்பாடு ரொம்ப ஜாஸ்தியாப்போச்சு, வயிறு வெடிச்சிடும்போலிருக்கு!
மாமனார்: (ஏதோ ஞாபகமாக) கொடுத்த காசுக்கு வெடிச்சா சரிதான்!

திருடன்: இந்தா புள்ளே! உனக்கு என்ன புடவை ஒணும்! குழந்தைங்களுக்கெல்லாம் என்னென்ன துணி மணி ஒணும்! அல்லாம் சொல்லிப்புடு! ராத்திரி கடை மூடினப்புறம் போய் எடுத்தாந்துடறேன்!

மனம் மாற்ற மடையாதது கண்டு, ஒரு பொட்டுத் தண்ணீர் கூட உட்கொள்ளாமல் மூன்று நாட்கள் இருந்தான். நான்காவது நாள் இவன் உடல் மிகவும் மெலிந்து விட்டது. மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அரசன் பயந்து விட்டான். உடனே ஆகாரம் எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டான். மேலே பயணத்தைத் தொடங்குவதற்கான சௌகரியங்களையும் செய்து கொடுத்தான். சில துணைவர்களையும் கூட்டி யனுப்பினான்.

துணைவர்களோடு புறப்பட்ட ஹ்யூன் த்ஸாங் மத்திய ஆசியா வழியாகத் தற்போதைய ருஷ்யாவின் எல்லைக்குட்பட்டிருக்கும் உஸ்பெக்கிஸ்தான், காட்திரிஸ்தான் முதலிய பிரதேசங்களைக் கடந்து ஆப்கானிஸ்தானம் போந்து, கடைசியில் காஷ்மீரம் வந்து சேர்ந்தான். இதற்குச் சுமார் இரண்டு வருஷங்களாயின. நூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து வர வேண்டுமல்லவா?


காஷ்மீரம் வந்து சேர்ந்தானென்று ஒரு வாக்கியத்தில் சொல்லி விட்டோமாயினும், வழியில், இவன் அனுபவித்த துன்பங்கள் எத்தனை, எத்தனை! இரண்டு மூன்று இடங்களில் கொள்ளைக் கூட்டத்தினர் இவனைச் சூழ்ந்து கொண்டனர். ஆயினும் இவனுக்கு எவ்வித ஊறும் விளைவிக்கத் துணியவில்லை. இவனுடைய அன்பு மொழிகளும் கடவுள் நம்பிக்கையும் அவர்களுடைய கடினச் சித்தத்தைக் கனியச் செய்தன. அவர்களில் சிலர், இவனுடைய சீடர்களாயினர். ஓரிடத்தில், மணல்காற்றெடுத்துவிட்டது. இரண்டு மூன்று நாட்கள் வரை ஓய்வே இல்லை. இவனே திக்கு முக்காடிப் போனான். வழி தெரியாது திகைத்தான். ஆனால் புத்தர் பிரானின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டேயிருந்தான். காற்றும் ஓய்ந்தது; வழியும் அவனுக்குத் தெரிந்தது.


தவிர, இவன் கடந்து வந்த பிரதேசங்களில் ஆங்காங்கே தங்கி, அறிஞர்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்டான்; புத்தர் பிரானின் ஞாபகச் சின்னங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் தரிசித்து வந்தான்.

காஷ்மீரத்துக்கு வந்த ஹ்யூன் த்ஸாங் சிறிது காலம் அங்கு தங்கி, தக்கவர் வாயிலாகத் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டு, பிறகு புறப்பட்டு, அநேக ஊர்களின் வழியாக அயோத்தியை வந்து சேர்ந்தான். அங்கு சிறிது காலம் தங்கிப் பௌத்த விஹாரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு, பிரயாகைக்குப் புறப்பட்டான். இதற்கு, கங்கை நதியின் வழியே வர வேண்டியிருந்தது. சுமார் எண்பது பேர்கள் நிறைந்த ஒரு படகில் வந்துகொண்டிருந்தான். வழியில், ஒரு கொள்ளைக் கூட்டத்தார் பத்துப் படகுகளில் வந்து, இவன் ஏறி வந்த படகை மறித்துக் கொண்டனர். அதனைப் பலவந்தமாகக் கரைக்கு இழுத்துக் கொண்டு போயினர். கொள்ளைக் கூட்டத்தினரைப் பார்த்ததும், இவன் படகிலிருந்த பலரும் பயந்து போய் ஆற்றிலே முழுகிப் போயினர். ஹ்யூன் த்ஸாங்கை மட்டும் கொள்ளைக் கூட்டத்தினர் கரைக்கு அழைத்துப் போயினர். இவர்கள் துர்க்கையை வழிபடுகிறவர்கள். அந்தத் துர்க்கைக்கு வருஷந்தோறும் நரபலி கொடுப்பது இவர்கள் வழக்கம்.

ஹ்யூன் த்ஸாங்கைப் பார்த்ததும், நரபலிக்குத் தகுதியுடைய கம்பீரமான தோற்றமுடையவனாயிருக்கிறானென்று தீர்மானித்து, தங்களுடைய தீர்மானத்தை இவனிடம் தெரிவித்தார்கள். இவன் அதற்கு, சிறிது நேரம் பிரார்த்தனை செய்ய அவகாசம் கேட்டான். அப்படியே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கையில், ஒரு பெரிய புயற் காற்றெடுத்தது. கங்கையின் அலைகள் சீறி யெழுந்தன. கொள்ளைக்காரர்கள் பயந்து போனார்கள். இவனிடம் மன்னிப்புக் கோரினார்கள். இவனும் அவர்களுக்கு







நற்புத்தி புகட்டி விட்டு, மேலே பயணத்தைத் தொடங்கினான்.

தொடங்கி, கபிலவாஸ்து, காசி, வைசாலி, பாடலிபுத்திரம் முதலிய திருத் தலங்களில் சிறிது சிறிது காலம் தங்கி விட்டு, நாளந்தை வந்து சேர்ந்தான். இந்த நாளந்தை யென்பது, தற்போது பீஹார் மாகாணத்தில் ராஜ்கிர் என்னும் நகருக்குச் சமீபத்தில் ஒரு சிற்றூராக ஒளி மங்கிக் கிடக்கிறது. ஹ்யூன் த்ஸாங் காலத்தில், உலகப் புகழ் பெற்ற ஒரு சர்வகலாசாலை இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெளிநாடுகளிலிருந்து மாணாக்கர்கள் பலர் இங்கு வந்து பயிற்சி பெற்றுப் பிரசித்தி யடைந்தார்கள்.

ஹ்யூன் த்ஸாங் போந்த சமயம், இந்தச் சர்வ கலாசாலையில், 8,500 மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு 1,510 ஆசிரியர்கள் போதனை செய்து வந்தார்கள். ஹ்யூன் த்ஸாங் இந்தச் சர்வகலாசாலையில் சில ஆண்டுகள் தங்கி, வடமொழியில் நல்ல புலமை பெற்றதோடு, அநேக சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றான். இதன் தலைவனாயிருந்த சீலபத்திரன் என்னும் அதிமேதையிடம் யோக சாஸ்திரத்தையும் பயின்றான்; தன் யாத்திரைக் குறிப்புகளில், இந்தச் சர்வகலாசாலையின் நடைமுறைகளைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறான்.

பயிற்சியை முடித்துக்கொண்டு நாளந்தையிலிருந்து புறப்பட்ட இவன், கலிங்க நாட்டை அடைந்து அங்குள்ள பௌத்த தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தற்போதைய விஜயவாடா, நெல்லூர், வழியாகக் காஞ்சீபுரம் வந்து சேர்ந்தான். அப்பொழுது இங்கு பல்லவர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த ஆட்சியைப் பற்றியும் இந்த நகரத்தைப் பற்றியும், இவன் தன் யாத்திரை நூலில் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறான்.

காஞ்சீபுரத்தில் தங்கியிருந்த சிறிது காலத்தில் இவன், இலங்கையிலிருந்து வந்த சில பிட்சுக்களின் மூலம் தென் பாண்டி நாட்டைப் பற்றியும், இலங்கையைப் பற்றியும் விவரமாகத் தெரிந்து கொண்டான்.

பின்னர் இவன் காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு, கொங்கணம், மகாராஷ்டிரம், கூர்ஜரம் இப்படிப் பல பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு, மீண்டுமொரு முறை நாளந்தைக்கு வந்து சொற்ப காலம் இருந்துவிட்டு, கன்னோஜி (கானௌஜ்) ராஜ்யத்துக்குச் சென்றான். இந்தக் கன்னோஜி ராஜ்ய மென்பது தற்போதைய அலிகார் நகருக்குச் சமீபத்தில் இருந்தது. இந்த ராஜ்யத்தின் அரசனாயிருந்த ஹர்ஷனுடைய (கி.பி. 606-647) அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சிறிது காலம் தங்கி யிருந்தான் ஹ்யூன் த்ஸாங். ஹர்ஷனும், இவனுடைய பல துறைப் புலமையையும் பேச்சாற்றலையும் கண்டு வியப்புற்று, இவனுக்குப் பல வகைச் சன்மானங்கள் வழங்கினான்.

இனி தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டுமென்ற விருப்பம் உண்டாகி விட்டது ஹ்யூன் த்ஸாங்குக்கு. ஹர்ஷனிடம் விடைபெற்றுக் கொண்டு கி. பி. 643-ம் வருஷம் சீனாவுக்குப் புறப்பட்டான். இவனுக்குச் சன்மானமாகக் கிடைத்த பொருள்களும், இவன் சேகரித்த புத்த மத கிரந்தங்களும் இவனுடன் ஜாக்கிரதையாகச் செல்ல வேண்டுமென்பதற்காக, ஹர்ஷனும், வேறு சில மன்னர்களும், இவனுக்கு வாகன வசதிகளைச் செய்து கொடுத்தார்கள். வழித் துணைக்குச் சில போர்வீரர்களையும் அனுப்பி வைத்தார்கள்.

இவை சகிதம் ஹ்யூன் த்ஸாங் இந்தியாவை விட்டுப் புறப்பட்டு, ஏறக்குறைய வந்த வழியை யொட்டித் திரும்பிச் சென்று கி. பி. 645-ம் வருஷம் லோயாங் நகரத்தை அடைந்தான். உடனே சக்கரவர்த்தியையும் போய்ச் சந்தித்தான். சக்கரவர்த்தியா

யாருக்கு வேணும்...?



யிருந்தவன் ஏற்கெனவே சொல்லப்பெற்ற தைத்ஸாங் தான். அவன் இவனை நன்கு வரவேற்று உபசரித்தான். இவன் கொண்டு வந்திருந்த தங்கத்தினாலும், வெள்ளியினாலும், ஸ்படிகத்தினாலும், சந்தன மரத்தினாலும் தயாரிக்கப்பட்ட புத்த விக்கிரகங்கள், அநேக நூதனப் பொருள்கள், புத்தர் பிரானுடைய அடையாளங்கள், இவை யனைத்துக்கும் மேலாக 657 புத்த மத கிரந்தங்கள் ஆகிய பலவற்றையும் கண்டு அரசன் அதிசயித்தான். அரண்மனையில் இவனுக்கு விருந்துபசாரங்கள் பல நடைபெற்றன.

தைத்ஸாங் மன்னன் ஒரு நாள் இவனை அரசவைக்கு அழைத்து, உயர்ந்ததோர் ஆசனத்தில் அமரச் செய்து, ''அறிஞரே, எனக்குத் தெரிவிக்காமல் ஏன் இந்தியாவுக்குச் சென்றீர்கள்?'' என்று கேட்டான். அதற்கு இவன், ''இந்தியாவுக்குச் செல்ல அனுமதி வேண்டிப் பலதடவை சக்கரவர்த்தி யவர்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டேன். ஆனால் தாங்களோ, என் பிரயாணத் திட்டம் அவ்வளவு முக்கியத்துவமுடையதல்லவென்று கருதி அனுமதியளிக்க மறுத்து விட்டீர்கள். எனக்கோ, பௌத்த தருமத்தை நன்றாக அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் மிகுந்திருந்தது. அதனாலேயே, தங்கள் அனுமதி பெறாமல் பயணமானேன். இதற்காகச் சக்கரவர்த்தியவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று பணிவாகப் பதில் கூறினான். இந்தப் பணிவான வார்த்தைகள், அரசனுடைய மனத்தை உருக்கின. இவனுக்குப் பலவித மரியாதைகள் செய்தான். கூடவே, துறவறத்தை விடுத்து, லௌகிக வாழ்க்கையை மேற்கொள்ளுமாறும், அரசாங்கத்தில் ஓர் உயர்தர உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் தனக்கு உதவியாயிருக்குமாறும் கேட்டுக் கொண்டான். அதற்கு இவன், ''அரசே! சிறு வயதிலேயே நான் துறவறத்தை மேற் கொண்டவன். ஏன்? புத்த மதத்தைப் பற்றி நன்றாக அறிந்து கொள்வதற்கேயாம். ஆனால் நான் அறிந்து கொள்ள வேண்டியவை இன்னும் அதிகமாக இருக்கின்றன. இப்பொழுது நான் லௌகிக வாழ்க்கையை மேற் கொள்வேனாகில், தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த படகை, தரைக்கு இழுத்து வைத்தமாதிரியாகி விடுவேன். அந்தப் படகு சிறிது காலத்துக்குள் நசித்துக் கூடப்போய்விடும். என் நாட்டின் நலனுக்காகச் சமயப் பணி புரியவே நான் விரும்புகிறேன். அதுவே என் நற்பெரும் பேறாகும்'' என்று சாந்தமாக விடையிறுத்தான்.

இதற்குப் பின் இவனை அரசன் வற்புறுத்த விரும்பவில்லை. இந்தியாவிலிருந்து கொண்டுவந்த கிரந்தங்களைச் சீன மொழியில் மொழிபெயர்க்க, இவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தான். பண்டிதர்கள், சொன்னதை எழுதுகிறவர்கள், கூட இருந்து உபசரணை செய்கிறவர்கள், இப்படிப் பலரை இவனுக்கு உதவியாக நியமித்துக் கொடுத்தான். இதற்குப் பிறகு இவன், சுமார் இருபது வருஷ காலம், இந்த மொழிபெயர்க்கும் பணியை இடைவிடாமல் செய்து வந்தான். ஓயாத உழைப்பின் காரணமாக, கி. பி. 664-ம் வருஷம் இவனுக்கு உடல் நலிவு ஏற்பட்டது. தனது அந்திம காலம் நெருங்கி விட்டதென்று உணர்ந்தான். ஒரு நாள், தன்னோடு பணியாற்றி வந்தவர்களை அழைத்து அருகில் இருத்திக் கொண்டு, ''என் மொழிபெயர்ப்புப் பணி ஒருவாறு முடிந்தது; அதோடு என் ஆயுசும் முடியுந் தறுவாயில் இருக்கிறது. நான் இறந்த பிறகு என் சவத்தை மிகவும் எளிய முறையில் அடக்கம் செய்ய வேண்டும். ஒரு மூங்கிற் பாயில் என் சவத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டு போய்த் தொலைவிலுள்ள ஒரு மலையின் மூலையில் அடக்கம் செய்து விடுங்கள்! அதனை அரண்மனைக்கருகிலோ, விஹாரத்தின் அருகிலோ வைக்காதீர்கள்! இந்த அசுத்தமான உடலைத் தொலைவிலேதான் வைக்க வேண்டும்'' என்று நிதானமாகக் கூறினான். அருகிலிருந்தவர்கள் இதைக் கேட்டுக் கண்ணீர் வடித்தார்கள். ''தங்கள் உடல்நிலை நன்றாகத் தானே இருக்கிறது? ஏன் இப்படி யெல்லாம் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள். இதற்கு, ''என் முடிவு எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியாது'' என்று சாவதானமாகப் பதில் கூறினான் ஹியூன் த்ஸாங்.

இது நடந்த சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு, ஹியூன் த்ஸாங், தன் இருப்பிடத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு பள்ளத்தைத் தாண்டிச் சென்றான். அப்பொழுது கால் சறுக்கிக் கீழே விழுந்து விட்டான். அதுவே இவன் மரணத்துக்கு மூல காரணமாயமைந்தது. சுமார் பன்னிரண்டு நாட்களுக்கு மேல், நடக்க முடியாமல் படுக்கையில் கிடந்தான். மரணத்துக்கு முந்தின நாள், தன்னோடிருந்த அனைவரையும் அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டு, தான் அணிந்து வந்த ஆடைகள், உபயோகித்து வந்த பொருள்கள் அனைத்தையும், புத்தர் பிரானின் சேவைக்குப் பயன்படுத்தும்படி அர்ப்பணம் செய்துவிட்டான். பிறகு ''இந்தப் பூதவுடல் அருவருக்கத்தக்க நிலைக்கு வந்து விட்டது. நான் மேற்கொண்ட காரியம் ஒருவாறு முடிந்து விட்டது. இனி நான் உயிர் வாழ்தல் அவசியமன்று. நான் ஏதேனும் நல்ல காரியங்கள் செய்திருந்தால், அவற்றின் பயனை எல்லா ஜீவராசிகளுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட ஆசைப்படுகிறேன்'' என்று கூறினான். இவனுடைய பற்றற்ற தன்மையைக் கண்டு, அருகிருந்தவர் அனைவரும் மனமுருகிப் போயினர். இப்படிச் சொன்ன சொற்ப நேரத்துக்குள் இவன் மூச்சு நின்றது. அப்பொழுது இவனுக்கு அறுபத்து நான்கு வயது.

ஹியூன் த்ஸாங், ஏறக்குறைய ஏழடி உயரம். மலர்ந்த கண்கள். கனிந்த பார்வை. நிமிர்ந்த நடை. எப்பொழுதும் புன்சிரிப்பு. இனிமையான குரல். எவ்வளவு நேரம் பேசினாலும் இன்னும் பேசமாட்டானா என்று தோன்றும். எவ்வளவு நேரமானாலும், அங்கங்களைச் சிறிதுகூட அசைத்துக் கொடாமல் ஒரு நிலையில் உட்கார்ந்திருப்பான். அன்றாட வாழ்க்கையில் ஒரு துறவிக்குரிய நியமங்களைக் கண்டிப்பாக அனுஷ்டித்து வந்தான். உணவு, உடை ஆகிய எல்லாவற்றிலும் எளிமையை மேற்கொண்டான். தனிமையாக இருப்பதையே விரும்பினான்; அதில் தான் இன்பம் நுகர்ந்தான். இவனுடைய தூய வாழ்க்கை, பரந்த புலமை, நாவன்மை, புத்தமதப் பற்று, இவைகளைச் சீனர்கள் என்றென்றும் போற்றிக் கொண்டிருப்பார்கள்.

ஹியூன் த்ஸாங் பிறந்தது கி.பி.600-ம் வருஷம். இந்தியாவுக்கு யாத்திரையாக வந்து போக நான்கு வருஷ காலம் பிடித்தது. இந்தியாவில் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் யாத்திரை செய்தான். தன்னுடைய யாத்திரை நூலில் நூற்று முப்பத்தெட்டு ராஜ்யங்களைப் பற்றி விவரித்திருக்கிறான். இந்தியாவிலிருந்து இவன் கொண்டு சென்ற கிரந்தங்களின் எண்ணிக்கை 657. இவற்றுள் 75 நூல்களை இவனே மொழிபெயர்த்தான். இவை 1,335 தொகுதிகளாக வெளியாயின. கடைசியாக இவன் இறந்தது கி. பி. 664-ஆம் வருஷம்.

சீனாவின் பல இடங்களிலும் இவனுக்கு ஞாபகச் சின்னங்கள் ஏற்பட்டு, இவனுடைய புனிதமான சேவையை மௌனமாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன.

ரயில் தண்டவாளத்தில் ஓடும்

சுந்தர ராமசாமி

முப்பது வருடங்களாகப் பார்த்து வரும் இந்த வேலையிலிருந்து ஓய்வுபெற, இன்னும் இருப்பதெல்லாம் இரண்டே இரண்டு மாதங்கள்தாம். ஓர் இரயில்வே டிரைவராக இத்தனை வருடங்கள் உழைத்ததை இன்றுகூட என்னால் நம்ப முடியவில்லை. சிறு பிராயத்தில் எந்த வேலைக்கும் என் மனசு வளைந்து கொடுக்கவில்லை. மேடையில் தோன்றி நடிக்க வேண்டும் என்று ஓர் ஆசை இருந்தது. அப்பா 'அது ஆகவே ஆகாது' என்று குறுக்கே நின்று விட்டார். உதவாக்கரை என்று ஊரில் பெயர் எடுத்து விட்டேன். ஊரார் பார்வையைத் தாங்க முடியாமல் கசப்புணர்ச்சியில் சாமியார் ஆகிவிடும் உத்தேசத்துடன் வீட்டைத் துறந்து ஓடினேன். தகப்பனார், அடுத்த ரயிலில் புறப்பட்டு வந்தவர், என்னைக் கையோடு இழுத்துச் சென்று இந்த வேலையில் மாட்டிவிட்ட பின்புதான் கண்ணை மூடினார். நீல நிறச் சட்டையும் நிஜாரும் அன்று மாட்டிக் கொண்டது; இனிமேல் தான் கழற்றி யெறிய வேண்டும். கரிப்பொடியும் அழுக்கும் அடையாளம் அப்பிவிட்டன.

ஒரே பாதையில் வருடக்கணக்காகச் சென்று அலுத்துப் போய் விட்டது எனக்கு. இரவு கண்ணை மூடினாலும் அன்றாடம் செல்கிற திருவனந்தபுரத்துக்கும் கொல்லத்துக்குமான இடைவெளி தூரம் தான், ஒரு குடிசை விடாமல், ஒரு பாலம் விடாமல், ஒரு குளம் விடாமல், ஒரு தென்னை மரம் விடாமல் மனத்திலே ஓடி வரும். சுருள் விரிந்து கொண்டே செல்லும் காட்சிக்கு இப்போது கண் கூட வேண்டியதில்லை; மனசே போதும். இது வரையிலும் கோடிக் கணக்கான பிரயாணிகளை அவரவர்களுடைய லட்சிய ஊர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறேன். 'நான்





தான் இதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். பிரயாணிகளில் ரொம்பப் பேர்கள் என் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்திருக்க மாட்டார்கள். குறித்த நேரத்துக்கே கொண்டு போய்ச் சேர்த்தாலும் பாராட்டு என்னவோ ரயிலுக்குத்தான். 'ரயில் இன்று ரொம்பக் கரெக்டாக வந்துவிட்டது ஸார்.' ரயிலுக்குத் தானே சக்கரங்கள் உண்டு? எனக்கு உண்டா? என்னையும் ரயில்தானே சுமக்கிறது? நான் என்ன வெளியே நின்று கயிற்றால் இழுக்கிறேனா?

என் வேலையே விசித்திரமானது. மனித வெள்ளத்தின் மத்தியில் ஒளிந்து கொண்டிருக்கும் வேலை. எல்லோருக்கும் முன்னால் எல்லோருடைய பயணத்தையும் இயக்க வைப்போனாக இருந்தும் ஒருவருக்காவது என் ஞாபகம் இலேசில் வந்து விடுவதில்லை. பஸ் டிரைவர் வேலை, டாக்ஸி டிரைவர் வேலை மாதிரி இல்லை இது. ஓர் உறவு, ஒட்டு, மனுஷத்தன்மை, ஒரு பசை, பாராட்டு ஒன்றும் இராது. பிரயாணிகள்தான் என்ன செய்வார்கள்? அவசரம் அவர்களை முந்திக் கொண்டு ரயிலடிக்கு வந்து விடுகிறது. மேலும் ரயில் ரொம்பப் பெரிசு, உலகம் மாதிரி. அகப்பட்ட பெட்டிக்குள் முண்டியடித்து நுழைந்து இடத்தைப் பிடிக்கும் ஆத்திரத்தில் முன்னும் பின்னும் பார்க்க நேரம் ஏது? என் நினைவு எங்கே வரும்?

தண்டவாளத்தில் ரயில் ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கும் வரையிலும் என் நினைவு எழ வேண்டிய அவசியமும் அவ்வளவாக இல்லை தான்.

இன்று வரையிலும் என் வாழ்வில் பளிச் பளிச்சென்று எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. சிலர் வாழ்க்கையில்தான் ஏணிப்படிகள் வந்து கொண்டே யிருக்கும். படிகள் அத்தனையும் ஏறிய பின்பும் அவர்கள் கண்களுக்கு மட்டும் மேலேயும் ஓர் ஏணிப்படி புலப்படும். எனக்கு அந்த அதிருஷ்டம் எல்லாம் கிடையாது.

இந்த முப்பது வருஷ சர்வீஸில் என் மனசைத் தொட்ட சில அனுபவங்களை நான் சபையோருக்குச் சொல்ல வேண்டுமாம். எனக்கு மேடையேறிப் பேசிப் பழக்கமா என்ன? வேண்டாம் என்றாலும் விடமாட்டேன் என்கிறார்கள். கூட்டம் கூட்டிப் பிரியுபசாரம் பண்ணப் போகிறார்களாம். உடன் வேலை செய்யும் நண்பர்களின் உற்சாகத்துக்கு நான் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தக் காலத்து இளைஞர்களுக்கெல்லாம் நன்றாகப் பேச வருகிறது. என்னாலெல்லாம் அப்படிப்பேசமுடியாது. வந்திருக்கிறவர்கள் அத்தனை பேரையும் சொந்த மச்சான்களாகப் பாவித்துச் சல்லாபம் செய்து பார்க்க வேண்டியது தான். பொழுது விடிந்து அஸ்தமிப்பது வரையிலும் புத்திசாலித்தனமான பேச்சையே 'கேட்டுக் கேட்டு அலுத்து' போயிருக்கும்

ஜனங்கள் ஒரு கால் மணி நேர உளறலைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்களா என்ன? எதற்கும் மனசுக்குள் ஒரு தடவை சொல்லிப் பார்த்து விடுவது நல்லது.....

.....மனசைத் தொட்ட அனுபவம் என்று நான் எதைச் சொல்லுவது? வேலையில் அமர்ந்த சில நாட்களுக்கெல்லாம் ஓர் எருமை மீது ரயில் ஓடி விட்டது. பிராணாவஸ்தையில் எழுந்த அதி பயங்கரமான அலறல், என்னை அப்படியே ஒரு முழம் மேலே தூக்கிப் போட்டுக் கீழே தள்ளியபோதும் நிலைகுலைந்து போய் விடாமல், மனசை இரு கைகளாலும் ஏந்திச் கருட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணை விழித்துப் பார்த்தேன். ரயில் தண்டவாளத்தில் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. அப்பா! அந்த நிமிஷத்தில் ஏற்பட்ட நிம்மதி இருக்கிறதே, அது விவரிக்க முடியாதது.



இந்த வேலையைப் பொறுத்த வரையில் மலையே புரண்டு வந்தாலும் முதல் விசாரம் அதுதான். ரயில் தண்டவாளத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதா என்பதுதான். என்னதான் கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு கட்டிக் காத்தாலும் ஏதாவது ஒரு விக்கினம் வரத்தான் செய்யும். அதை அலட்சியப் படுத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ரயில் தண்டவாளத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதே, அதுதான் முக்கியம்; எல்லாவற்றையும் விட.

நான் ரொம்பப் படித்தவன் இல்லை. ஏதோ அனுபவம். குறைப் புத்தியை அனுபவம் சாணை பிடித்துத் தந்திருக்கிறது. அதை நம்பித்தான் பேசுகிறேன். சொல்ல வந்த விஷயத்தை விட்டு வேறு எங்கோ சென்று விட்டேன். தண்டவாளம் இல்லாத ரயில் மாதிரி அல்லவா இந்த மனசும் ஓடுகிறது.

என் வாழ்வில் மனசைத் தொட்ட அனுபவம் ஒன்றே ஒன்றுதான். அதை எந்த நாளும் என்னால் மறக்க முடியாது. என் நினைவில் அடிக்கடி எழுந்து இன்பவேதனையைத் தந்து கொண்டிருக்கிற அனுபவம் அது. எஞ்சின் கரி படிந்த நீல நிறச் சட்டையோடும், எண்ணெய்ப் பிசிறும் தூசியும் ஏறிப் போயிருந்த நீல நிற நிஜாரோடும், ஒரு நாள் ஓடுகிற ரயிலில் கண்ணீர் விட்டு அழுதேன். பசுமையற்ற என் வாழ்விலும் கண்ணீர் சிந்த ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே! தெய்வம் என்னை மறந்து விடவில்லை. என்னையும் அழ வைத்து விட்டது அது. அந்த அனுபவத்தையும் என் வாழ்வையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறபோதெல்லாம் கடைக்காலூர் ஸ்டேஷன் பக்கம் நூற்றுக் கணக்கான பூவரச மரங்களுக்கிடையே ஒரு தென்னை மரம் தலையைத் தூக்கி நிற்கும் காட்சிதான் என் நினைவில் எழும்;

பிரமாத விஷயம் ஒன்றும் அல்ல. முன்பின் பார்த்திராத பழக்கமில்லாத ஒரு குழந்தையிடம் என் மனசைப் பறிகொடுத்து விட்டேன். அதற்கான தண்டனையையும் அனுபவித்தேன். பாசம் பலமாகச் சொடுக்கி விட்டது.

ஆனால் மனசு கண்ணன் பேரில் (அவனுடைய உண்மைப் பெயர் இன்றுவரை எனக்கோ என் குடும்பத்தாருக்கோ தெரியாது) கவிந்து நின்ற நாட்களில் எல்லாம் உடம்புக்குள் ஓர் ஆனந்த மயக்கம் அலை அலையாய் எழுந்தவண்ணம் இருக்கும்.

அதிமதுரத்தைக் கடைவாயில் ஒதுக்கிக் கொண்டது போல் சதா ஒரு தித்திப்பு.

உலகத்தில் எந்தக் காரியமுமே நாம் எண்ணுவது போலத்தான் நிகழ வேண்டும் என்பதில்லை. அதற்கு நேர்மாறாகவும் நிகழலாம் என்பது எத்தனை பட்டாலும் நம் பிரக்ஞையில் ஒளித்துக் கொண்டிருப்பதில்லை. நிகழ நிகழத்தான் பழையபடி நினைவில் வருகிறது. எத்தனை தடவை ஒத்திகை நடந்திருந்தாலும், மேடையில் அப்போது தான் நிகழ்கிறது என்ற பாவனையில் நடிக்கிறானே நடிகன், அது போலத்தான் நாமும் நடித்தாக வேண்டுமோ ?

எருமை மீது ரயிலேறிய விஷயத்தை அந்தரத்தில் விட்டு விட்டேன். அது ஒன்றும் அத்தனை பெரிய விஷயமும் அல்ல. இருந்தாலும் சொல்லி முடித்து விடுகிறேன்.

அந்தச் சம்பவம் நடந்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் ஒரு நாள், வேலி ஸ்டேஷனில் ஒரு கிராமத்தாரிடம் விசாரித்தேன். 'மாதவப் பணிக்கர் என்பவரின் எருமைதான் அது' என்றான் அவன். மடியில் விரல் பட்டதும் 'சொர் சொர்' என்று ஒரு வேளைக்குப் பத்துப் படி வரையிலும் பொழியுமாம். பணிக்கர் துக்கம் தாங்காமல் தண்டவாளத்தின் மீது தலையை முட்டியபடி அழுது புலம்பிவிட்டுக் கடையில் வழித்துப் போட்டுக் கொண்டு சென்றானாம். கொம்பு மட்டும் இரண்டு ரூபாய்க்குப் போச்சு என்றும் அவன் சொன்னான். சற்றுப் பெரிய கொம்பு போலிருக்கிறது. நாற்பது ஐம்பது சீப்பாவது தேறியிருக்கும். அவ்வளவுதான்; பெரிய விஷயமாகச் சொல்லப் போகிறேன் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனீர்களோ என்னவோ ?

சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். கண்ணனைப் பற்றி அல்லவா சொல்ல வந்தேன்? அதைச் சொல்கிறேன்.

நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் ரயில் பேட்டை ஜங்ஷனைத் தாண்டி — நடுவில் ஒரு பெரிய வளைவும் மரம் அறுக்கும் டிப்போவும் வருகின்றனவே, அவற்றையும் தாண்டிப் போகையில் வானவெளியில் நாதசுர இசை கேட்க ஆரம்பித்தது. தொலை தூரத்தில் நிறையக் குடைகள் சேர்ந்து வருவதையும் கவனித்தேன். ஒரு கல்யாண கோஷ்டி.

அந்த இடத்தில் தண்டவாளம் மேட்டுப் பாங்கான இடத்தில் ஓடுகிறது. இரு பக்கமும் பள்ளம். சரிவில் பச்சைப் புற்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும், அநாதைக்குளத்தில் பாசிபடர்ந்தமாதிரி. ஒவ்வொருவராக வலது பக்கத்தோடு ஏறித் தண்டவாளத்தைத் தாண்டி இடது பக்கமாக இறங்கிச் சென்றார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் கண்ணுக்கு லக்ஷணமான ஜோடிதான். பெண் சற்று ஸ்தூலமாக இருந்தாள். அநேகமாக அப்படித்தானே அமைகிறது. கருகருவென்று மையில் தோய்த்த புருவம். நெற்றியில் நேர் கோட்டில் நீளமான சந்தனப் பூச்சு. பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நடுவில் ஒரு கிழவனார் சவரம் செய்த முகத்தோடும் சலவை செய்த வெண்ணிற ஆடைகளோடும் வெகு சுத்தமாகக்காட்சி அளித்தவர்- தனது வேஷ்டியோ உத்தரீயப் பட்டோ பெண்ணின் மேல் பட்டுவிடக் கூடாது என்ற ஜாக்கிரதையில் அதிகப்படி கவனத்துடன் இருவருக்குமாகக் குடை பிடிக்கும் முயற்சியில் இருவரையும் முழுதும் நனைய விடாமல் தனக்கும் பட்ச பாதம் காட்டிக் கொள்ளாமல் வேண்டிய மட்டும் நனைந்து கொண்டு பின்னால் வந்தார். அப்போதே அவருக்கு எண்பது வயசுக்குக் குறைவில்லை. இப்போ இருக்கிறாரோ என்னவோ!

ரயில் அருகே வந்ததும் பெண்ணின் முகம் சிவந்தது. மணப் பெண் கோலத்தில் அவளைக் காண ஒரு ரயில் நிறைய அல்லவா கூட்டம் வந்து விட்டது! வெட்கமாக இராதா அவளுக்கு?

இரண்டு வருடங்களுக்குப் பின் மீண்டும் அவளைக் கண்டேன். அந்த இடமே அதி அற்புதமானது. தங்கச்சேரி ஸ்டேஷனையொட்டி இருந்த ஒரு சிற்றூர் அது. எங்கு பார்த்தாலும் அடர்த்தியான தென்னந் தோப்பு. முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்து சிதறியது போல் சூரிய ஒளி சில்லுச் சில்லாய் மண்ணில் இறைந்து கிடக்கும். இடையிடையே தீப்பெட்டிகள் மாதிரி சிறு குடிசைகள். பள்ளத்தை நோக்கிப் பாதாளம் வரையில் பாயும் பாதை ஓரங்களில் கூட முதுகைக் காட்டியபடி குடிசைகள் ஒட்டிக் கொண்டிருக்கும்; காற்றடித்தால் புரண்டு விடும் என்று எண்ணும்படி. நீள நீளமான கயிற்றில் கட்டப்பட்டிருந்த மாடுகள் பரிபூர்ண சுதந்திரத்துடன் மேய்ந்து திரிவதைக் காணலாம்.

சற்றுத் தொலைவில் ஒரு குளம் தெரியும். காலை வேளையில் பெண்கள் கூட்டமாகக் குளித்துக் கொண்டிருப்பார்கள். கரையில் உடம்பைத் தேய்த்தபடி நிற்கும் இளம் பெண்கள் ரயில் அருகே நெருங்கி வருவது வரையிலும் கழுத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கடைசி நிமிஷத்தில் தொப்பென்று தண்ணீரில் குதிப்பார்கள். ஒன்று குதிக்க இன்னொன்று குதிக்க ஒன்றன்பின் ஒன்றாக எல்லாக் குட்டிகளும் தண்ணீருள் தொப்தொப்பென்று விழும். சில பெண்கள் கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி ரயிலைப் பார்த்து விஷமத்தனமாகச் சிரிப்பதும் உண்டு. என் மனத்தை வெகுவாகக் கவர்ந்த இடம் அது.

அந்த இடத்தில் ரயில் தண்டவாளத்தை ஒட்டியிருந்த ஒரு சிறு வீட்டின் முன் வாசலில் ஒரு நாள் ஒரு பெண் குனிந்து நின்றவாறு கோலமிடும் காட்சி கண்ணில் விழுந்தது. அப்போது மணி ஆறு ஆறரைதான் இருக்கும். புகைப் படம் பிடிக்கும் ஸ்டுடியோ விளக்குகள் போல் அந்த வீட்டுக் கொல்லையிலிருந்து இருளைக் கிழித்து முன்னேறிக் கொண்டிருந்த கிரணங்கள் அவளுக்கு இருபக்கமுமாகவந்து தண்டவாளத்தைத் தொட்ட இடத்தில் எல்லாம் வெள்ளி முலாம் பூசியது. நாற்புறமும் சூழ்ந்திருந்த மங்கிய ஒளியில் ஒளிக்கற்றையின் நடுவே அவள் காட்சி அளித்தது இயற்கையின் ஒரு விசித்திரமான ஏற்பாட்டின் விளைவே என எண்ணினேன். அந் நேரத்திலேயே அவள் குளியை முடித்து விட்டிருந்தாள். ஈரத் தலை ஒரு வெறும் நாடா முடிச்சில் கட்டுண்டு கிடந்தது. அப்போதும் என்ன அகலமான அடர்த்தி! குனிந்து நின்ற கோலத்தில் அவள் கறுப்பு நிறப் பட்டு ஜம்பர் அணிந்து கொண்டிருப்பதாக நான் எண்ணியது தவறு என்பது, எழுந்த வேகத்தில் அவளுடைய கேசபாரம் தோள்பட்டையில் ஒதுங்கியபோதுதான் தெரிய வந்தது.

பின்னால் எத்தனையோ தடவை அவளைப் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் மனசில் ஒரு முடிச்சு உறுத்தும். திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு நிமிஷத்தில் அது அவிழ்ந்தது. மணப்பெண் கோலத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் நான் பார்த்த அதே பெண் தான் அவள் என்பது நினைவில் உதித்து விட்டது.

முன்னைவிட அவள் உடம்பு அப்போது சற்றுக் குறுமையாக இருந்தது. கன்னக் கதுப்புகளில் செம்மை படர்ந்திருந்ததா என்பது என் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவளுடைய முகத்தையும் உடம்பையும் கவனித்த நான் வெகு சுலபமாக ஊகித்து விட்டேன். ஐந்து பெண்களுக்குத் தகப்பனும் ஏழெட்டுக் குழந்தைகளுக்குப் பாட்டனுமாகிய நான் அதை உணர்ந்து கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அதற்கு முன், அந்த வீட்டையொட்டிய தென்னந் தோப்பில் கட்டியிருந்த கயிற்றுக் கொடியில், ஜம்பரும் வேஷ்டியும் பெரிய சட்டையும் பனியனும்தான் தொங்குமே தவிரச் சின்னச் சொக்காய் தொங்குவதைக் கண்டதே இல்லை. என் மனசுக்கு இது குறையாக இருந்தது. இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டதே என்று கூட எண்ணுவேன். எதற்கும் ஒரு வேளை கூடி வர வேண்டாமா?

அந்த வேளையும் வந்து விட்டது. என் மனைவியிடம் இதைச் சொன்ன போது 'கடவுள் அவளுக்கு ஆண் குழந்தையைக் கொடுக்கட்டும்' என்று ஆசீர்வாதம் பண்ணி வைத்தாள்.

ஏழெட்டு மாதங்களுக்குப் பின்னால் அதே கொடியில் உள்ளங் கை அகலத்தில் சின்னச் சொக்காய்கள் இரண்டு மூன்று தொங்குவதைக் கண்டு ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். 'என்ன குழந்தை?' என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். தோப்பில் வீசிக் கொண்டிருந்த காற்று ஒரு பதிலும் சொல்லவில்லை.

அன்று என் மனத்தில் எழுந்த கேள்விக்கு விடை கிடைக்க எத்தனையோ மாதங்கள் காத்திருக்கும்படி ஆகி விட்டது.

இத்தனைக்கும் ஒவ்வொரு நாளும் அந்தக் குழந்தையைப் பார்க்கத் தவறியதும் இல்லை. தாயாரின் மடியில் ஊனக் கண்களுக்குப் புலப்படாத ஏதோ ஓர் அரிய சம்பத்தைப் பிஞ்சு விரல்களிடையே இறுகப் பற்றியபடி திண்ணையில் ஆழ்ந்து கிடக்கும் நாட்களிலிருந்து ரயிலின் ஓசை கேட்ட மாத்திரத்தில் அவசரம் அவசரமாய் உள்ளேயிருந்து முன் வாசல் வரையிலும் தவழ்ந்து வந்து தலையைச் சரித்தபடி வேடிக்கை பார்க்கும் நாட்கள் வரையிலும் எத்தனையோ தடவைகள் அந்தக் குழந்தையைப் பார்த்திருக்கிறேன். சில சமயம் தாயார் முற்றத்தில் பிச்சிப்பூ பறித்துக் கொண்டிருக்கும்போது இடுப்பில் உட்கார்த்து தோளில் சாய்த்

மகிழ்ச்சி ததும்பும் தீபாவளி

இந்தக் குடும்பம் இவ்வளவு மகிழ்வுடன் இருப்பதற்கு என்ன காரணமென்று உங்களால் யூகிக்க முடியுமா? அவர்கள் அணிந்துள்ள நேர்த்தியான, கவர்ச்சி மிகுந்த துணிமணிகள்தான் காரணம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் பின்னி துணிகள் அணிகிறார்கள். குழந்தைகளுக்கான மகிழ்ச்சியூட்டும், வண்ணமிகு துணிகள், பருத்தியால் நெய்த ஷர்ட்டிங், ட்ரில், டஸ்ஸோர் மற்றும் ஸூட்டிங்குகள், தூய பட்டினாலான பளபளக்கும் புடவைகளும், ஷர்ட்டிங்குகளும்.

பின்னி துணிகள் கவர்ச்சிகரமாக இருப்பதுடன் நீடித்த உழைப்புமளிக்கிறது. பல வருடங்களுக்கு அவைகள் உங்களுக்கு திருப்தியளிக்கிறது.



QUALITY FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
பெங்களூர் உல்லன், காட்டன், & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர்கள் : பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்

JWT/BY/1497

றின் இலையைத் தீர்த்துக் கொண்டிருக்கும். ரயிலைக் கண்டால் அதற்கு என்ன சந்தோஷம்! தாயாரின் முகத்தை இரண்டு கைகளாலும் மாறி மாறி அடித்து இடுப்பிலிருந்து திமிறிக் குதிக்கும். வில்லாய் வளைந்து பின்பக்கம் சரிகிறபோது அவள் நிலைகுலைந்து தடுமாறி அப்படியே கீழே உட்கார்ந்து விடுவாள்.

என்ன அற்புதமான குழந்தை! ஒரு குறுநகையில், ஒரு கை வீச்சில் மனத்தை அள்ளிக் கொண்டு போய் விடும். தெய்வத்தின் சிருஷ்டி மகோன்னதத்தை மண்ணில் பறை சாற்ற வந்த குழந்தை போலும்! இந்த மோகன உருவத்தைப் படைத்தவன் எப்படி இதை விட்டுப் பிரிந்தான்? கடவுளைக் கலைஞன் என்றும் துறவி என்றும் கவிஞர்கள் போற்றுகிறார்களே அதன் காரணமே இதுதானோ?

பல நாட்களாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு ஒரு நாள் விடை கிடைத்துவிட்டது.

தென்னந் தோப்பில் வெய்யிலில் சூடேற்றிய நீரில் அவள் குழந்தையைக் குளிப்பாட்டுவதை ஒரு நாள் கண்டேன். என் மனைவியின் ஆசீர்வாதம் பலித்துத்தான் இருந்தது!

இரவு வீட்டுக்குச் சென்றால் ஒரு நாள் கூட அந்தக் குழந்தையைப் பற்றி என்னால் பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியாது என்றாகி விட்டது. நாளடைவில் 'குழந்தை குழந்தை' என்று மொட்டையாக அழைப்பதே எங்களுக்குப் பிடிக்கவில்லை. என் மூத்த பெண் அவனுக்குக் கண்ணன் என்று பெயர் வைத்தாள். அவனுடைய உண்மைப் பெயர் எங்களுக்குத் தெரியாது என்பதையே பின்னால் நாங்கள் மறந்து விட்டோம். எங்களுக்கு அவன் கண்ணன் தான்.

கண்ணனுக்கும் எனக்கும் என்ன உறவோ? ஒருநாள் அவனைப் பார்க்காமல் இருந்து விட்டால் என் மனம் ஏன் வாட வேண்டும்? காலையில் ரயிலில் புறப்படுகிற வேளையிலேயே எனக்கு ஏன் அவன் ஞாபகம் வருகிறது? உலகத்துக் குழந்தைகளையெல்லாம் எதற்காக நான் அவனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்? அவனை ஒவ்வொரு தடவை பார்க்கிறபோதும் என்னுடன் என் மனைவி குழந்தைகள் அருகில் இல்லையே என்ற குறை உணர்ச்சி எனக்குத் தோன்றக் காரணமென்ன? தெய்வமே, எனக்கு எதற்கு இந்த விசாரமெல்லாம் என்று நொந்து கொள்வேன்.

சந்தேக நிவர்த்தி!



கண்ணனுக்கு நன்றாக வால் முளைத்து விட்டது. வாசல் கதவு திறந்திருந்தால் போதும்; நொடிப் பொழுதில் அவன் முற்றத்தில் இறங்கி ஓடி விடுவான். பின்னால் பிடிக்க வரும் அவன் தாயாரை அவன் ஓட ஓட அடிப்பதை எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிறேன். அவள் அவனைக் கையால் எட்டி எடுத்து தன்னுடைய தலைக்கு மேல் தூக்கிக் கீழே விட்டெறிவது போல் பாவனை காட்டி விட்டு அப்படியே அவனை மார்புறத் தழுவிக் கன்னத்தில் முத்தமிடுகிற போதெல்லாம் அந்த பட்டுக் கன்னத்தின் ஸ்பரிச சுகத்தை நானும் அனுபவிப்பது போல் ஆனந்தத்தில் திளைப்பேன்.

அவன் தாயாருக்கு வீட்டு வேலைகள் இல்லையா என்ன? நாள் முழுதும் கண்ணனுடன் மல்லுக்கு நின்று கொண்டிருந்தால் சோறும் கறியும் எங்கிருந்து வரும்? கிணற்றடியில் ராட்டின் 'கிரீச்'சென்ற ஓசை எழும் போதும், துணி துவைக்கும் சத்தம் ஒப்தப்பென்று கேட்கும் போதும் வாசல் கதவு சாத்தி யிருக்கும். அப்போதெல்லாம் கண்ணன் முன்னறையில் சிறைப்பட்டுக்கிடக்கிறான் என்று அர்த்தம். ஆனால் ரயில் வருகிற சத்தத்தைக்கேட்டால் நாற்காலியைப் பற்றி ஏறி ஜன்னல் விளிம்பில் நின்றபடி வலது கையைக் கம்பிகளிடையே நீட்டிக்கொண்டு என்னைப் பார்த்துக் கையை விசிறுவான்; கையை மேலும் கீழும் இழுத்துக் காட்டுவான். ரயில் கத்த வேண்டுமாம். விசையை இழுத்து ரயிலைக் கத்த வைப்பேன். அவனுக்கு உற்சாகம் கரை புரண்டு விடும். அவன் குதிப்பதைப் பார்த்து ஜன்னலிலிருந்து உருண்டுவிடக் கூடாதே என்று நான் கவலைப்பட ஆரம்பித்து விடுவேன்.

ஒருநாள் கண்ணன் தோப்புக்குள் வந்து விட்டான். அவனுக்கு வெகு சமீபத்தில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. 'உள்ளே போ, போ' என்று இரண்டு கைகளாலும் சைகை காட்டினேன். என்னுடைய யோசனையை அவன் கொஞ்சமேனும் மதிக்க வில்லை. 'டெக்கிறான்கள், பயந்தாங்கொள்ளிகள்' என்று எண்ணி அலட்சியம் செய்தானோ என்னவோ? உதட்டைச் செம்பருத்தி மொக்கு மாதிரி குவித்துக் கொண்டு 'கூ கூ' என்று கத்தினான். ரயில் கத்த வேண்டுமாம். சில மாடுகள் அவனுக்கு வெகு சமீபமாக நின்று மேய்ந்து கொண்டிருந்தன. அபாயச் சங்கிலி எல்லாம் பிரயாணிகளுக்குத் தான். மேலும் ஒரு குழந்தையை மாடு முட்டாமல் காப்பாற்றுவதற்காக ரயிலை நிறுத்தினேன் என்று சொன்னால் ரயில்வே இலாகாவுக்கு அந்தப் பாஷை புரியுமா என்ன? ரயில் வெகுதூரம் சென்ற பின்னும் என் பார்வை தோப்புக்குள்ளேயே தங்கி நின்றது. கண்ணன் பார்வையிலிருந்து மறையும் வேளையில் அவனுடைய தாயார் படியிறங்கி வருவதைக் கண்டு ஆசுவாசம் அடைந்தேன். ரயில் அன்று எக்களிப்போடு கூவிக் கொண்டு சென்றது.

தாயார் பக்கத்தில் நின்றுகொண்டிருந்ததில் ஏற்பட்ட துணிச்சலோ என்னவோ, ஒரு நாள் கண்ணன் என்னைப் பார்த்து மீசையை முறுக்குவது போல் பாவனை காட்டிக் கண்ணை உருட்டி விழித்தான். நான் பயந்து நடுங்குவது போல் நடித்தேன். அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. வயிறு குலுங்கக் குலுங்கக் கடகடவென்று சிரித்தான். அவன் தாயார் அவன் முதுகில் இலேசாகத் தட்டி முகத்தால் கண்டித்து விட்டு என்னைப் பார்த்தாள். 'குழந்தைதானே!' என்று முணுமுணுத்தேன். நான் சொன்னது அவளுக்கு எங்கே கேட்டிருக்கும், இந்த ரயிலின் பேய்ச் சிரிப்பில்?

திருவோணப் பண்டிகை அன்று ஏற்பட்ட அனுபவத்தை ஒரு நாளும் நான் மறக்க முடியாது.

அன்று கண்ணன், அவனுடையதாயார், தகப்பனார் மூவருமே புத்தாடைகள் அணிந்து வாசலில் இறங்கி நின்று கொண்

டிருந்தார்கள். ரயிலை வரவேற்க வந்து நிற்பது போலத்தான் இருந்தது. அவர்கள் மூவரும் அங்கு நின்று கொண்டிருந்த கோலத்திலேயே பண்டிகையின் நறுமணம் நன்றாக வீசியது. ஓணம் அங்கிருந்துதான் ஆரம்பமாகிறது என்று எண்ணிக்கொண்டேன்.

அன்று கண்ணனுடைய தகப்பனாரும் என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் அவருடைய குழந்தையின் உயிர்த்தோழன் என்பதை மனைவி சொல்லத் தெரிந்து கொண்டிருக்கிறார் போலிருக்கிறது.

கண்ணன் அன்று டேப் வைத்துத் தைத்த அழகான பட்டு நிஜார் அணிந்து கொண்டு வேடிக்கையாகக் காட்சியளித்தான். நான் எங்கே அவனுடைய ஆடையலங்காரத்தைப் பார்க்காமலே சென்று விடுவேனோ என்ற எண்ணத்தில் அவனுடைய தாயார் அவனை முன் பக்கம் எடுத்து நிறுத்தினாள். கண்ணன் என்னைக் கண்டதும் தன் சின்னஞ்சிறு கைகளை முன்னால் நீட்டினான். இரண்டு கைகளிலும் தங்கக் காப்பு ஒளி வீசியது. அவனுடைய தகப்பனார் அவனுக்கு ஆசையாகச் செய்து போட்டிருக்கிறார்.

ரயில் அவர்கள் எதிரே வந்ததும் கண்ணனின் காதருகே அவன் தாயாரின் முகம் குனிந்தது. மறு நிமிஷம் குழந்தை என்னைப் பார்த்துத் தன் சின்னஞ் சிறு கையை வாய் அருகே கொண்டு சென்று சாப்பிட வரவேண்டும் என்று சைகை காட்டி அழைத்தான். என்னையும் மீறிக் கொண்டு வந்த உற்சாகத்தில் 'வருகிறேன்' என்று வாய் விட்டுக் கத்தினேன். மனசை என்னவோ செய்தது. அப்படியே ரயிலிலிருந்து குதிக்க முடியவில்லையே என்னால்! அன்று ரயில் நன்றியுடன் ஒரு மணி நேரம் கத்தியது.

இத்தனை உறவு கொண்டாடியபின்பும் ஒரு நாள் கூட நான் அவர்கள் வீடு தேடிச் செல்லவில்லை. கை நிறைய வாங்கிக் கொண்டு ஒரு நாள் போக வேண்டுமென்று எத்தனை தடவையோ எண்ணியிருக்கிறேன். நான் போகாமலே நாட்கள் போய்க் கொண்டிருந்தன.

இதற்கு மேல் எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. என் மனத்திலிருப்பதை முழுதும் சொல்ல எனக்குத் தெரியவும் தெரியாது. சொல்லவும் முடியாது. இருந்தாலும் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லி விட்டு முடித்துக் கொள்கிறேன்.

ஓணப் பண்டிகைக்குப் பின் சில மாதங்களும் சென்றன. ஒரு நாள் திடீரென்று கண்ணனைக் காணமுடியவில்லை. அன்றும் அதற்கு அடுத்த நாளும் அவனைப் பார்க்காமலே சென்றேன். காலையில் இஞ்சின் பெட்டிக்குள் நுழைகிறபோதே அவன் நினைவுகள் வரும். இன்றாவது அவனைக் காண முடியுமா என்று கேட்டுக்கொண்டு செல்வேன். அந்த வீட்டுக்கு ஒரு மைல் இருக்கும்போதே ரயிலை முடிந்த மட்டும் உரக்கக் கத்த வைப்பேன். ஆனால் என்றும் ஏமாற்றம்தான் காத்திருந்தது. வீட்டு வாசல் கதவு சாத்தியிருக்கும். முற்றம் வெறிச்சென்றிருக்கும்; சன்னல்களில் சூன்யம் தேங்கிக் கிடக்கும்.

என் மனைவியிடம் சொன்ன போது, 'உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதோ என்னவோ, மழையும் தண்ணீருமாக இருக்கிறதே' என்று சந்தேகப் பட்டாள். அப்படியும் இருக்கலாம் என்றுதான் நானும் எண்ணினேன்.

ஒரு நாள் அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கும் போது கொடியில் உலர்த்தியிருந்த ஒரு பட்டுச் சொக்காய் காற்றில் உயரப் பறந்து இஞ்சின் பெட்டிக்குள் வந்து விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். கண்ணனின் அழகிய பட்டுச் சொக்காய். அதைத்தான் அவன் ஓணப் பண்டிகையன்று அணிந்து கொண்டிருந்தான்.

வீட்டில் என் மனைவியும் குழந்தைகளும் ஒவ்வொருவராகச் சட்டையைப் பிரித்துப் பார்த்ததும் மடித்து வைத்துக் கொண்டதும், மீண்டும் கைவிரல் நுனியில் தூக்கி முகத்துக்கு எதிரே விரித்துப் பிரித்தபடி ரசித்துச் சிரித்ததும் உடம்பிலும் நெஞ்சிலுமாக அணைத்துக் கொண்டதும்....அப்போது அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது.

எனது இரண்டாவது பெண்ணுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. அவள் அந்தச் சட்டையில் அழகிய பூவேலைசெய்யத் தொடங்கினாள். அதைச்சட்டையைத் தீபாவளி அன்று கண்ணனுக்கு எங்கள் உளம் கனிந்த அன்புடன் திரும்ப அளித்து விடுவது என்றும் தீர்மானம் பண்ணிக் கொண்டோம்.

ஒரு மாதம் வேலை செய்து தனது கைவண்ணத்தை முழுதும் காட்டிச் சொக்காயில் இரண்டு பெரிய சிவப்புப் பூக்களைப் பொறித்தாள் என் பெண்.

தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு மாத காலத்துக்கு மேல் இருந்தது. அந்த நாட்களில் கண்ணனை நான் ஒரு நாள் கூடப் பார்க்கவில்லை. நடுவில் சில நாட்கள் அந்த வீடு பூட்டிக் கிடப்பதைப் பார்த்தேன். பின்னால் பூட்டுக் கழன்று விட்டதென்றாலும் வாசல் கதவு அநேகமாகச் சாத்தப்பட்டிருக்கும்.

ஒரே ஒரு நாள் கண்ணனின் தாயாரை மட்டும் பார்த்தேன். கூடைக்காரியிடம் பேரம் பேசிக் கொண்டு வாசலில் நின்றாள். உடம்பு பாதியாய் இளைத்து விட்டது. முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை. அவள் ரயிலை ஏறிட்டுப் பார்த்தாள் என்றாலும் என் பார்வையைத் தவிர்த்து விட்டு முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். என் மனைவி சொன்னது அப்போது என் நினைவில் ஓடியது. படுக்கையோடு படுக்கையாய்க் கிடக்கும் குழந்தை ரயில் கத்துவதைக் கேட்டாவது சந்தோஷப்படட்டும் என்று எண்ணி ரயிலை உரக்கக் கத்தச் சொன்னேன். எவ்வித சஞ்சலமும் இன்றி அன்றும் ரயில் கத்திற்று.

தீபாவளி அன்று கண்ணன் சட்டையை எடுத்துச் செல்ல நான் ரொம்பவும் தயங்கினேன். என் மனைவிதான் வற்புறுத்திக் கையிலெடுத்துக் கொடுத்தாள். அந்தச் சட்டையில்தான் அவனுடைய ஐசுவரியம் அடங்கியிருப்பதாகவும் மீண்டும் அணிந்து கொண்டு விட்டால் அவன் உடம்பை வருத்தும் பீடைகள் பனிபோல் விலகிப் போகும் என்றும் அவள் சொன்னாள்.

வழவழப்பான காகிதத்தில் சிவப்பு ரிப்பனால் கட்டப்பட்டிருந்த பொட்டலத்தை எடுத்துச் சென்றேன். நல்லவேளை கண்ணனின் தாயார் அன்று வாசலில் நின்று கொண்டிருந்தாள். யாரையோ எதிர்பார்த்து நிற்பது போலிருந்தது. முடியாத தலைமயிர் காற்றில் கண்ணிலும் முகத்திலுமாக விழுந்து கொண்டிருந்தது. ரயிலை ஏறிட்டுப் பார்த்த அவள் முகத்தில் பிரேதக் களை தட்டியது. படி இறங்கி வரும்படி சைகை காட்டினேன். நான் வீசியெறிந்த பொட்டலம் அவள் கைக்குள் சென்று விழுந்தது.

பெட்டியின் வாசல் கைப்பிடியைப் பிடித்துத் தொங்கியவாறு நான் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றேன். அவசரம் அவசரமாய்ப் பொட்டலத்தைப் பிரித்த அவளுடைய முகம் பயங்கரமாகக் கோணியது. அப்படியே அந்தச் சட்டையில் முகத்தை மூடியபடி உள்ளே நோக்கி ஓடினாள். எனக்குப் புரிந்து விட்டது.

படைத்து மண்ணில் விட்டபின்புதான் அதன் அருமை தெய்வத்துக்கே புரிந்தது போலும். மனிதன் அதை அள்ளியெடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுவதைப் பார்த்துப் பார்த்து எத்தனை நாட்கள்தான் அவர் பொறுமைத் தீயில் வெந்து கொண்டிருக்க முடியும்?

அதற்கு மேல் எனக்குத் தாளவில்லை. வயசும் அனுபவமும் அவை கற்றுத் தந்த பாடங்களும் என்னை விட்டு அகன்று சென்று விட்டன. பதினாறு வயசில் சந்நியாசம் வாங்கிக்கொள்ள நான் ஆசைப்பட்டது உண்மைதான். ஆனால் இன்று நான் அழுதுவிட்டேன்.

சில நாட்களுக்கெல்லாம் பழையபடி அந்த வீட்டு வாசலில் ஒரு துருப் பிடித்த பூட்டுத் தொங்கியது. கயிற்றுக் கொடி அப்படியேதான் இருந்தது. என்றாலும் அதில் துணிகள் தொங்குவதை நான் காணவில்லை. முற்றத்தில் நின்ற பிச்சி ஆயிரம் பற்களைக் காட்டிச் சிரித்தது. அது சிரித்ததும் மொக்கு அவிழ்ந்ததும் உதிர்ந்ததும் கருகியதும் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ராட்டின் கரகரத்த ஓசையோ, துணி துவைக்கும் சத்தமோ அதற்குப் பின்னால் என்றும் நான் கேட்கவில்லை. இரவில் அந்த வீட்டுக்குள் அந்தகாரம் தேங்கிக் கிடந்தது.

என் மனதில் அந்தப் புண் ஆற நீண்ட நாட்கள் ஆயிற்று. என்னைப் பொறுத்த வரையில் நான் எதற்கும் ஒரு வியாக்கியானம் தேடிப் பிடித்துத் திருப்தி அடைகிறவன். பிறருக்கு அது அசட்டுத்தனமாகக்கூடப் படலாம்.

கண்ணன் எங்கும் போய் விடவில்லை என்றும், அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது என்றும், ரயிலின் ஆரவாரத்தில், கரகரப்பற்ற அந்த ஓசையில் அவன் கலந்து நிற்பதாகவும் சமாதானம் தேடிக்கொண்டேன். அந்த நினைப்பும் ஏதோ ஒரு விதத்தில் மனச் சாந்தியைத் தருகிறது.

அதற்குப் பின்னும் அந்த வீட்டைத் தாண்டிச் செல்லுகிற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தடவையும் ரயிலைக் கூவ வைப்பேன். அந்தக் குரலில் அவன் முகத்தையே பார்க்கிறேன்.

ரயிலுக்கு அவன் வந்ததும் தெரியாது; போனதும் தெரியாது. மாதவப் பணிக்கர் தனது எருமையை இழந்ததும் கண்ணனை அவனுடைய தாய் தந்தையர் இழந்ததும் அதற்கு ஒன்றுதான். அது இன்றும் தன் போக்கில் ஓடியவண்ணமாய் இருக்கிறது. அதுதானே முக்கியம்? அந்த ஞானம் என்றுதான் நமக்கு வரப்போகிறதோ?

பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.


பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்
மற்றும் பேஸ் பவுடர் உபயோகித்து உங்கள்
முகத்தை வசீகரமாக வைத்துக் கொள்ளுங்கள்
முதலில், இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உங்கள் முகத்தில் தடவிக் கொள்ளுங்கள். அது சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச் செய்யும். எண்ணெய் பசையற்ற இந்த க்ரீம் முகத்திலுள்ள சிறு வடுக்களையும், தழும்புகளையும் மறைக்கும் ... பவுடர் முகத்தில் மணிக்கணக்கில் படிந்திருக்க உதவும்!
பிறகு மிருதுவான பாண்ட்ஸ் பேஸ் பவுடரை இலேசாக போட்டுக் கொள்ளுங்கள். அது உங்கள் முகத்தை வசீகரமாகச் சோபிக்கச் செய்யும்!
இந்த சுலபமான முறையை தினமும் பின்பற்றுங்கள் ... நீங்கள் மணிக்கணக்காக வசீகரிக்கும் எழிலுடன் விளங்குவீர்கள்!
உலகமெங்கும்
அழகிகள்
உபயோகிப்பது
POND'S
FOUNDATION
POND'S
Vanishing Cream
JWT. P. 72
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது)

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

எமது மனமார்ந்த

தீபாவளி நல் வாழ்த்துக்கள்



படிப் படியாக....

லக்ஷ்மி மில்ஸ்

பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்டுகள்: G. குப்புஸ்வாமி நாயுடு அண்ட் கம்பெனி.



உணர்வின் விழிப்பு

கை நிறையப் புத்தகங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு மணிக்கட்டைப் பார்த்தான் சுசி.

மணி ஒன்பதரை. பஸ் போயிருக்கும். அடுத்த பஸ்ஸைப் பிடித்துப் போவதற்குள் கல்லூரிக்கு நேரமாகி விடும். கைக்குட்டையை எடுத்து நெற்றியில் துளிர்த்த வியர்வையைப் பக்குவமாக ஒற்றினான்.

ராஜன் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தான். காற்றில் இலேசாக மடிப்புப் பிரிந்த டை. முழுக் கை வெள்ளைச் சட்டை. படிப்படியாக வாரிய கிராப்பு. தோல் பையின் நுனியைப் பிடித்தபடி வாசலில் நின்ற காரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவன் அவள் கூப்பிட்டதும் திரும்பி வந்தான்.

"என்னைக் கொஞ்சம் கல்லூரியில் விட்டுவிட முடியுமா உங்களால்?"

அவன் தயக்கத்தைக் கண்டு அவள் முகம் சுருங்கியது.

"பஜார் பஸ் ஸ்டாப்பில் விட்டுவிட்டாலும் போதும்!"

அவன் முகத்தில் மாறுதலே இல்லை. மணியைப் பார்த்தபடி, "ஸாரி சுசி! நான் அந்தப் பக்கம் போகவில்லை. இப்போதுதான் கோடம்பாக்கத்திலிருந்து போன் வந்தது. ஓர் அர்ஜண்டான கேஸ். இன்னும் பத்து நிமிஷங்களில் போய்ச் சேர வேண்டும்" என்றான்.

அவள் பதிலுக்கு அவன் காத்திருக்கவில்லை. கதவை மூடும் சத்தத்தைத் தொடர்ந்து கார் கிளம்பிக் கொண்டு கிளம்பிய ஓசை படிப்படியாக உயர்ந்து ஓய்ந்தது. அவள் நடக்கத் தொடங்கினாள். கொஞ்ச தூரம் வேகமாக நடந்த பிறகுதான் நேரமாகி விட்டது அவள் ஞாபகத்துக்கு வந்தது. இனி எப்படியும் தாமதம்தான். வேகமாக நடந்து பலன் ஒன்றும் இல்லை. மனம் ஓய்ந்தது போல் நடையின் வேகமும் 'சட்'டென்று தணிந்து விட்டது.

மொட்டவிழா மணமாய் மனத்துள் அந்தக் குறை. அதில் மலர் மணத்தின் இதம் இல்லை. நெஞ்சை நெகிழச் செய்யும் வேதனைதான் இருந்தது. அதை அந்த வீட்டில் யாருடனும் பங்கிட்டுக் கொள்ள முடியாமல், இன்பமாக ஒட்ட இயலாமல் அவள் நின்றாள். அதுவே அவள் மனக் குமுறல்.

அத்தான் சென்னையில் ஸ்ரீ எண்ணிவிட்ட டாக்டர். செல்வமும் வசதிகளும் படைத்தவர். அவருடனிருக்க அத்தைக்கு தவர். அவருடனிருக்க அத்தைக்கு உரிமை இருந்தது. அத்தானுக்கும் இருந்தது. இருவருக்குமிடையே அவள் மூன்றுவதாய், இருவருடனும் சுபாவமாய்ச் சேர முடியாதவளாய் வந்து முளைத்து விட்டாள்.

கம்மென்று ஓர் அபூர்வ மணம் காற்றில் மிதந்து வந்தது. திரும்பினாள். சுவர் ஓரம் மணி வடிவ மலர், காம்பின் நுனியில் ஆடிச் சிரித்தது. காற்றில் குலுங்கும் அந்தப் பூவை யாரும் பறிக்காமலே விட்டு விட்டார்கள். அவளைப் போல் அதுவும் கவனிப்பாருக்காக ஏங்கிக் கொண்டிருந்ததோ என்னவோ!

இரவு மழைக்குப்பின் காலை வெய்யிலில் தெரு துல்லியமாக விளங்கியது. காலடியில் அழுந்தும் காவி நிறக் கப்பி, பாதை ஓரம் நீர்த்துளி மின்னும் புல்லின் நுனி, தலைமேல் சாமரம் போல் அசைந்தாடும் அடர்ந்த மரக்கிளை, தூரத்து ஒலியாய் மங்கிக் காதில் விழும் கெஜலிஜுப்போடு வளைய வரும் தோட்டத்துத் தண்ணீர், சிறகு விரித்து 'ஜில்'லென்று உயரேறும் சிட்டு, கதிரோளியை மூடத் திராணியில்லாமல் ஒதுங்கும் மேகத்திட்டு, யாவுமே தத்தம் இடத்தில் பொலிவுடன் விளங்கின. அவை அங்கே விரித்த மகிழ்ச்சிக் கோலம் இயற்கையாக இருந்தது. அந்தக் காலை நேரம் மனத்தில் கூட்டிய இளர்ச்சிக்கு அவை பொருத்தமாகவும் தோன்றின. அவள்தான் அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாதவள். அந்தக் குடும்பத்தில் ஒன்றாய் இணைய முடியாதவள். எதிலும் ஒட்டமுடியாமல்தான் அப்படிப் பிரிந்து நிற்கும் நிலை, தன் மேலேயே தனக்கு எழும் சகிக்கமுடியாத பரிவு அவள் நெஞ்சைப் பாரமாய் அழுத்தியது.

சுசியின் தகப்பனார் காலமான போது அவள் இன்டர்மீடியட்டில் படித்துக் கொண்டிருந்

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

விஜயா

தான். கல்லூரியில் முதல் வருஷப் படிப்பானதும் மேலே படிக்க வசதி இன்றி நிறுத்தி விடுவதாகத்தான் அவள் தாயார் தீர்மானித்திருந்தாள். உள்ளூறப் படிக்க வேண்டுமென்ற ஆவல் இருந்தாலும் தாயாரின் துக்கத்துக்கு நடுவே மேலும் அவளுக்குச் சங்கடத்தைக் கொடுக்கச் சசி விரும்பவில்லை. அப்படியே வாழ்க்கை வேறு வழியில் திரும்பி இருந்திருக்கும்—அத்தை குறுக்கிடாமல் இருந்திருந்தால்.

அத்தையோடு சென்னைக்கு வந்து இரண்டு வருஷங்கள் ஆகி விட்டன. அங்கு கல்லூரியில் சேர்ந்தபின் படிப்பில் ஒவ்வொரு படியாக வளருவது போல் அவள் மனமும் அங்கேவந்த பிறகுதான் இதழ் பிரிந்து மலரத் தொடங்கியது. அந்த வீட்டில் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தபோது அத்தான் அவளை நிமிர்ந்து பார்த்த பார்வைக்கு அவளுக்குப் பதிலே தெரியவில்லை. குறுகுறு வென்று, களை ததும்ப, இயற்கையான விறுவிறுப்போடு அவன் உள்ளேயும் வெளியேயும் போய் வரும்போது, மறுபடியும் அந்தப் பார்வை ஒரு முறை தன் முகத்தில் தவழ வேண்டுமென்று அவள் ஏங்கியதுண்டு. ஆனால் அவளுக்கு அது கிட்டவில்லை. கூடவே இருந்து, கனிந்த தமிழின் அழகைக் கையில் ஏந்தி அனுபவிக்க முயல்வது போல, அவள் அந்த உணர்வின் நயத்துக்காக ஏங்கியதுதான் மிச்சம்.

ஜன்னல் ஓரம் கம்பிகளுக்கிடையே கால்களைப் பதித்தபடி அவன் புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருப்பான். அவள் பக்கத்திலிருந்த முக்காலியில் காப்பியை வைத்து விட்டுத் தலை நிமிருவாள். தோள் மேல் ஆடும் பின்னலைப் போல் அவள் மனமும் ஒரு கணம் தயங்கும், அவன் ஏதாவது சொல்வானா என்ற தடுமாற்றத்தில். அவன் பார்வை திரும்பாது. திரும்பினாலும் அதில் உணர்ச்சிகளின் அடையாளம் இருக்காது.

அவன் உணர்ச்சிகளை வெளியிடாமல் தேக்கிய விதம் அவள் சங்கோசத்தை அதிகமாக்கிற்று. அதுவே அவள் ஏக்கத்துக்கும் மணம் கூட்டியது. அவளோடு அவன் பேசா விட்டாலும், அவளை நிமிர்ந்து பார்க்கா விட்டாலும், கண்ணாடித் துண்டில் விழும் ஒளிக்கோடு வண்ணக் கதிர்களாகத் தோகை விரிப்பதைப் போல அவன் பேச்சு, மறைமுகமான குறிப்பு, உதட்டோர முறுவல், இவைகளும்கூட அவள் மனத்தில் இனம் தெரியாத, விவரிக்க இயலாத உணர்ச்சிகளை அலையெழுப்பும். அவன் போய் வெகுநேரம் வரையில், கரையில் மோதும் அலைகள் ரகசியக் குரலில் சலசலத்துக் கொள்வது போல், அவள் மனம் அதன் தித்திப்பில் ஆழ்ந்து அந்த நினைவைச் சுவைத்தபடி நிற்கும்.

அவள் சங்கோசம் தெளிய வெகு நாட்களாயிற்று. அப்புறமே அவள் பேசினாள். அது அவன் கேள்விகளுக்குப் பதிலாகவே இருந்தது. அவள் உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாக இல்லை. மகிழ்ச்சித் துடிப்பில் இருப்புக் கொள்ளாமல் அவள் குலுங்கும் நிலை, அதை வெளியிட முடியாமல் படும் அவஸ்தை, அவனால் ஏற்றுத் தாங்கிக் கொள்ளக் கூடியதாயில்லை.

ஒருநாள் அத்தைக்கு எதிரே அவன் அவளுக்கு ஒரு தம்ளர் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்து விட்டு, "போதுமா?" என்று கேட்டான். அத்தைக்கு அவர்கள் பேச ஆரம்பித்து விட்டதைத் தெரியப்படுத்தும் பாவனை அது.

அவள் தலையை ஆட்டினதோடு சரி. அதுவே அவளுக்குப்பிடிபடாத பெருமை.

"இது எத்தனை நாட்களாக? எனக்குத் தெரியாதே!" என்று பரிகாசக் குரலில் கேட்டாள் அத்தை. அவள் பார்த்த அதே சமயம் அவனும் அத்தையைப் பார்த்தான். இருவர் பார்வையும் மறுபடியும் கோத்துக் கொண்டபோது அவள் மேனி முழுதும் மகிழ்ச்சி செறிந்து மலர்ந்தது.

எதற்காக அப்படி ஒரு துடிதுடிப்பு? மனத்துக்கு அடியில் நழுவி ஓடும் புல்லரிப்பு? அவன் கவனத்தைக் கவர்ந்து விட்ட பெருமிதமா? அவன் பார்வையை இழுத்து விட்ட மயக்கமா?

ஆனால் அது ஆரம்பத்தோடு சரி. அவள் அவனோடு பேசுவதே அருமை. எப்போதாவது அவளிடம் அவனாக வந்து பேசும் பேச்சு அவன் கவனித்த கேள்வி ஒன்றைப் பற்றியதாக இருக்கும். தனக்கு அதில் அதிகம் புரியாவிட்டாலும் அவன் பேசும் நயத்தையே அவள் அக்கறையோடு கவனிப்பாள். வேடிக்கையான நடிப்புத்தான் அது. அவன் பேச்சை மனத்தில் வாங்கிக் கொள்ளும் ஆழம் அவள் கவனிப்பில் இல்லை. அவள் உன்னிப்பாய் அவனையே கவனிக்கும் ஆர்வம் அவனுக்குத் தென்படவில்லை; அவன்தான் காட்டிக்கொள்ள வில்லையோ? சிறு குழந்தைகள் ஒளிந்து விளையாடுவதைப் போல் இப்படி ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொண்டு பொழுதை நழுவவிடும் எத்தனையோ சந்தர்ப்பங்கள்.

அவள் அவனிடம் எதையாவது சொல்ல விழையவரும் போது ஆவல் தோன்றும் குரலில் கல்லூரியில் நடந்த விஷயங்களைக் கலகலவென்று பொரிந்து கொட்டுவாள். ஆனால் அவனிடம் அதற்கு எதிரொலியே இருக்காது. அவள் சொல்லி விடாமல் பக்குவமாய் யூகத்துக்கு விட்டு விட்ட இடங்களை அவன் தொடர்ந்து கேட்க மாட்டான். அவள் நகைச்சுவை என்று உத்தேசித்து நளினமாகக் குறிப்பிடும் சம்பவங்கள் அவன் கவனத்தில் படாமலே போய்விடும். அசுவாரசியமான குரலில் மேஜை மேல் நகத்தால் கீறியபடி பொருத்தமில்லாத பதில் எதையாவது சொல்லி வைப்பான். மழுங்கிப் போன அந்தச் சொற்களில் உணர்ச்சித் துடிப்பே இருக்காது.

என்றாவது அவன் சீக்கிரமே திரும்பி விடுவான்.

"நல்ல படமாம். இன்றைக்கு நூறாவது நாளாம். நேற்றிலிருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறாள் சசி!" என்று அத்தை நயமாய்ப் பேச்சைத் தொடங்குவாள். ஆர்வம் கனிய அவள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

"யாருக்கு நூறாவது நாளாம்!" அவன் அசிரத்தையில் அவள் முகம் 'சட்'டென்று வதங்கிப் போகும்.

"நீ பேச்சைக் கவனிக்கிற லட்சணமா இது...?"

"எங்கேயோ ஞாபகம் அம்மா! என்னவோ சொன்னியே நூறு..."

"உனக்கு ஆயுசு நூறு! அதுதான் சொன்னேன் போ!"

சிரித்துக் கொண்டே அவன் "நீ நினைத்துக் கொண்டதும் வந்துவிட்டேனா அம்மா?" என்று கேட்பான்.

"வருகிறாயா என்று தான் கேட்கிறேன் இப்போது!"

"எங்கே?"

"சினிமாவுக்கு. சசி என்னைக் கூப்பிடுகிறாள். நான் உன்னைக் கூப்பிடுகிறேன்."

"அவள் என்னைக் கூப்பிடவில்லையே?"

சாதாரணக் கேள்விதான் அது. அந்தத் தொனியிலும் விசேஷமாக எதுவும் இல்லை. ஆனாலும் அவளுக்கு உள்ளூற அவாத் துடிக்கும். கண் சிமிட்டும் சிமிட்டலில் இமைகள் ரகசியம் பேசுவது போலத் தோன்றும். மனம் கிறுகிறுக்கும்.

"உங்களையுந்தான்!" என்று உதட்டை அழுத்திக் கொண்டு 'வெடுக்'கென்று சொல்வாள். அந்தப் பேச்சில் திடீரென்று ஆவல் தவழும்.

"நான் எதற்கு? அம்மாவை அழைத்துக் கொண்டு போ! எனக்கு அவசர காரியம் இருக்கிறது."

அவன் வரமாட்டான். வரக் கூடாது என்று குறிப்பாக எதுவும் இல்லை. வர வேண்டும் என்கிற ஆர்வமும் இல்லை. அது அவன் இயல்பே. அதுவே அவளுடைய குறையும்கூட.

அன்று மாலை கல்லூரியிலிருந்து வந்ததும் அவள் நேரே போய்ப் படிக்க உட்கார்ந்து விட்டாள். வேலை அதிகமில்லா விட்டாலும் மனத்தில் தெம்பு இல்லை. அம்மாவும் பிள்ளையுமாக ஏதோ பேசிக் கொள்ளட்டும். இடையே அவள் எதற்கு?

மாடிப்படிகளில் அவன் பூட்ஸ் காலடிச் சத்தம் கேட்டது. அவன் வழக்கமாகச் சீட்டி அடித்துப் பாடும் பாட்டும் கேட்டது. அவள் கவனிக்காதவள் போல மேஜை மேல் கையைத் தாங்கிக் கொண்டு படிப்பதில் ஈடுபட்டிருந்தாள். விளக்கின் ஒளி சட்டென்று அறை முழுதும் பரவியது.

"இதைப் பார்த்தாயா சசி?"

அவன் கையிலிருந்த அட்டைப்பெட்டி திறந்தது. உள்ளே ஊதா நிற நார்ஜெட் புடவை ஒன்று விளக்கொளியில் மின்னியது.

"இன்றைக்கு உனக்குப் பிறந்த நாளாம்!"

அளவு கடந்த ஆவலோடு வெட்கத்தை வென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் முக பாவனையை ஆராயும் துடிப்பில் நெஞ்சு நாணத்தை விட்டது.

"அம்மா வாங்கிக் கொண்டு வரச் சொன்னாள்!"

'நான் வாங்கிக் கொண்டு வந்தேன்' என்று அவன் சொல்லியிருக்கக்கூடாதா?

பெட்டியை மேஜை மேல் வைத்து விட்டு அவன் இறங்கிப் போய்விட்டான். பெட்டியை அவன் பிடித்திருந்த இடத்தில் அவள் கை பொத்திற்று. அதில் ஓர் இதம் இருந்தது.


எதை வாயில் போட்டுக் கொண்டாலும் அவனை ஒரு முறை நினைக்கத் தோன்றுகிறது. எந்தநேரத்திலும் அவன் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்றே மனம் எண்ணுகிறது. திரும்பத்திரும்ப அந்த உணர்வுக்கிளர்ச்சியைத் தனக்குத் தானே அனுபவித்துக் கொள்ளும் மௌனம் நெஞ்சை நிறைப்பது

போல, வெளியில் கண்டும், கேட்டும், தொட்டுணர்ந்தும் அனுபவிக்கும் வேறு எதுவுமே பரிமளிக்கவில்லை.

அவனோடேயே நின்றுவிட வேண்டிய உணர்ச்சி தானா அது? அவனுக்கு ஏன் அந்த உதாசீனம்? அவள் மேல் அக்கறை இல்லையா? அல்லது பெண் உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் உணர்வே இல்லையா அவனுக்கு? இதயத் துடிப்பை அளக்கிற டாக்டரா இந்த அத்தான்?

அவள் பாடுகிறாள். அவன் ரஸனையில்லாதவன் போல் இருக்கிறான். அவனுக்குப் பிடித்த பண்டமாய்ச் சமைக்கிறாள். அவன் ருசியே இல்லாமல் சாப்பிட்டு விட்டுப் போகிறான். அவன் கவனத்தைத் திருப்பும் உரிமை அவளுக்கு இல்லை. பாத்தியதை இல்லை. அந்த வீட்டில் அவள் நிழலுக்காக ஒதுங்கியவள். அவ்வளவுதான்; வெய்யில் தணிந்ததும் ஓடிப் போய்விட வேண்டியவள். அவன் அவளிடம் எப்போதாவது காட்டும் பரிவும் அவ்வளவுக்குத்தான். 'ஐயோ பாவம்!' என்கிற அநுதாபந்தான். அந்தப் பரிவை அவள் வரவேற்றாள். ஆனால் அவன் அநுதாபத்துக்கு ஆளாகி விட்ட நிலையைத்தான் அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நாட்கள் சரசரவென்று விரைந்து கொண்டிருந்தன. இறுதிப் பரீட்சைக்கு இரண்டு மாதங்களே இருந்தன. அப்புறம் கிளம்பிப் போக வேண்டியதுதான். இருப்பதற்குக் காரணமில்லை; அர்த்தமும் இல்லை.



அன்று கனியும் அம்மாவும் எங்கேயோ வெளியே போயிருந்தார்கள். வீட்டுக்கு வந்தவன், வாசலில் பையன் தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"அம்மா எங்கே?"

"கடைத் தெருவுக்குப் போயிருக்காங்க. வர நாழி யாகும்னு சொன்னாங்க. ப்ளாஸ்கில் காப்பி இருக்கு. கொண்டு வரவா?" என்று கேட்டான்.

"வேண்டாம்."

ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனாய் மாடிக்குப் போனான். அம்மா ஏன் தன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை? அவன் அவ்விதம் அறிவிப்பில்லாமல் தனியாக விடப்பட்டது அதுவே முதல் தடவை.

எதிரே கனியின் அறை திறந்திருந்தது. மேஜை மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன புத்தகங்கள். விளையாட்டுக்காகக் கூட அவற்றை அவன் பார்த்ததில்லை. அவற்றில் அவள் என்ன குறித்திருப்பாள் என்ற சிந்தனை அவனுக்குத் தோன்றியதும் இல்லை. ஏதோ ஓர் ஆவல் தூண்ட அந்த அறைக்குள் போனான்.

மேலாக இருந்தது ஒரு லைப்ரரி புத்தகம். வழுவழுப்பான அட்டை. மனோதத்துவம் பற்றியது. வேடிக்கையான பெண்தான் இவள். இந்த மாதிரி புத்தகங்களில் இவளுக்கு என்ன சுவாரசியம் இருக்க முடியும்?

அலட்சியமாகப் பக்கங்களைப் புரட்டினான். அவன் பார்வை சட்டென்று நிலைத்தது. கருத்தோட்டம் நின்றுவிட்டது. வைத்த கண் வாங்காமல் அதையே பார்த்தபடி நின்றான்.

அதனுள் ஓர் இளைஞனின் புகைப் படம். துடுக்கான பார்வை. புன்னகை அரும்பும் அந்த முகத்தில் படத்தைப் பார்ப்பவர்களை இழுப்பது போல் ஒரு பாவனை. குறுகுறுத்த கண்.

புத்தகத்தைச் சட்டென்று மூடினான். இருட்டறைக்குள் நுழைந்தது போல் ஒரு தடுமாற்றம். மறுபடியும் அதைப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆவல். புத்தகத்தைத்திறந்து படத்தை வெளியே எடுத்தான். அதில் எழுதி இருந்த குறிப்பு! தம்புராவும் குரலும் இழைவது போல் இரண்டு உள்ளங்கள் கலந்ததற்கு எடுத்துக்காட்டு அந்த வார்த்தைகள்.

இனந் தெரியாத ஓர் ஏக்கம் அவனைப் பாரமாய் அழுத்தியது. படத்தைப் புத்தகம் ஒன்றில் வைத்து விட்டு வெளியே வந்தான். கீழே யாரும் இல்லை. அந்த நேரத்தில் அந்த வீட்டின் நிசப்தம் அவனால் தாங்க முடியாததாக இருந்தது. படி இறங்கினான். கோலக் கோடுகள் போலப் பின்னிப் பின்னி மீண்டும் மீண்டும் அந்த நினைவே வந்தது.

சாப்பிட்டதும் நேரே படுத்துக்கொள்ளப் போய் விட்டான். கண்கள் மூடினாலும் இருள் மெத்தையில் அந்த முகம் பதிந்து சிரிப்பது போல் ஒரு பிரமை. அந்த வயதில் ஏற்படக் கூடிய மன மாறுதல்தான் அது. கனியும் அதற்கு ஆளாகி யிருந்தால் அதில் வியப்பென்ன இருக்கிறது?

ஆனால் அவனுக்கு ஏன் இந்த மனப் புழுக்கம்? யார் மேல் அவனுக்கு இந்தப் பொறாமை? பொறாமையா அது? இல்லவே இல்லை. அவன் பொறாமைப் பட்டதே இல்லை. இருந்தும் ஏன் அவனுக்கு இந்தத் தவிப்பு?

வீட்டில் எல்லோரும் தூங்கி விருக்கக் கூடிய நேரம். ஒவ்வொரு முறையும் கடிகாரம் மணியடித்து ஓய்வதை அவன் எண்ணிக்கொண்டேயிருந்தான், இரண்டு மணி வரையில். விடியற்காலை அவன் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது அவளே ஆள் வந்து எழுப்ப வேண்டியிருந்தது. மணி ஆறரை.

தேய்ந்துவிட்ட கனவு போலக் கடைசியாக நின்ற அந்த நினைவு மனத்தில் மறுபடியும் தலை எடுத்தது. லைப்ரரிப் புத்தகம். வழுவழுப்பான காகிதங்கள். கார்டு அளவுப் புகைப்படம். புன்சிரிப்பு உதிரும் முகம். பின்புறம் முத்து முத்தான எழுத்துக்களில்....

முக்காலியில் மடித்து வைத்திருந்த செய்திப் பத்திரிகையைக் கையில் எடுத்தான். அவன் மனம் படிப்பில் இல்லை.

திடீரென்று வேலையில் சுவாரசியம் வடிந்து விட்டது. சிறு காரியங்களிலும் கூட ஈடுபாடு இல்லை. எளிதாகப் படும் அற்ப சிக்கல்களும்கூட மிகப் பெரிதாக உருவெடுத்து வளர்ந்தன.

பேசிக் கொண்டே இருக்கும்போது கவனம் நழுவிப்போகும். எதையாவது எழுதிக் கொண்டேயிருப்பவன், நடுவே, காகித மூலையில் பெயரைக் கிறுக்க ஆரம்பித்து விடுவான். மற்றவர் பார்க்கு முன் அந்தக் காகிதத்தையே எடுத்துக் கசக்கிக் குப்பைக் கூடையில் எறிந்து விடுவான்.

மாலை வேளையில் சாய்வு நாற்காலிப் பிடியில் கை துழாவ யோசித்தபடி சாய்ந்திருக்கும் போது நினைவுகள் ஒவ்வொன்றும் மனத்தில் பதியும். அந்த வீட்டில் கனி காலடி எடுத்து வைத்தது முதல் நடந்த சிறு நிகழ்ச்சிகளும் மனத்தில் புதுமையோடுமலர்ந்து அவனை அதன் மணத்தில் ஆழ்த்திவிடும்.

அவள் பாடும் வேளைகளில் அவளுக்குத் தெரியாமல் ஆர்வத்தோடு அவன் அதை ஊன்றிக் கேட்பான். அவள் பாராத சமயம் அவளை அளந்து விடுவது போல் அவன் பார்வை அவள் மேல் சரியும். அப்போது தான் புதிதாகக் காண்பது போல அவள் உருவம் நெஞ்சில் நிறையும்.

அவளிடம் மாறுதல் விளைந்ததுபோல் தான் அவனுக்குத் தோன்றியது. முன்னை விட அவள் தன்னை அக்கறையோடு அலங்கரித்துக் கொள்வது போலப்பட்டது.

சிறு காகிதத் துண்டுகளைக் கிழித்துக் குப்பையில் போடுவது, ஒற்றைப்பூவைக் கையில் திருகியபடி யோசனையில் ஆழ்ந்திருப்பது, தனக்குத் தானே அனுபவித்துக் கொள்வது போல் வாய்க்குள் பாட்டை முனகிக் கொள்வது, உன்னிப் பாய் எதையோ பார்ப்பது போல, ஆழமில்லாத பார்வையோடு உட்கார்ந்திருப்பது— இவைகளுக்கெல்லாம் என்ன அர்த்தம்? அவள் மனத்துக்குள், நகைப் பெட்டியின் உள் மெத்தையில் வைரம் ஜ்வலிப்பதைப் போல, மின்னிக்கொண்டு புதைந்திருந்த நினைவு எது? அந்த

உருவம்! அந்தப் புன்னகை! முத்து முத்தான அந்த எழுத்துக்கள்!

ஓடிக் கொண்டே இருக்கும் இயந்திரம் முன்னெச்சரிக்கை இல்லாமல் நின்று விடுவதைப் போல் அம்மா திடீரென்று படுத்துக் கொண்டு விட்டாள். நாலைந்து நாட்களாக எழுந்திருக்கவே இல்லை. இரண்டு வேளையும் அவன்தான் கவனித்து மருந்து கலந்து கொடுப்பான். வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு சசி அவள் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பாள். தனியாய்ப் படுக்கையில் படுத்தபடி யோசித்துக் கொண்டிருக்கும் போது சதுப்பு நிலத்தில் கசியும் நீரைப் போல் அம்மாளின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஏக்கம் பிறர் அறியாமல் தலையணையை நனைக்கும். அதற்குச் சொல் வடிவில் உருவம் காண வேண்டுமென்கிற ஆசை அவளுக்கு இல்லை. ஆனால் மகனுக்கு அதை அவள் எப்படிப் புரிய வைப்பது?

அன்று எங்கெங்கோ சுற்றி விட்டு ஓய்ந்து போய், ராஜன் வீடு திரும்பிய போது மணி ஒன்பது. வந்ததும் தாயின் அருகே போய் மணிக்கட்டைத் தொட்டுப் பார்த்தான். ஜுரம் இறங்கி இருந்தது. ஆனால் கண்களில் இன்னும் தெளிவில்லை.

"எப்படி இருக்கு அம்மா உடம்பு?"

"என்னைக் கவனித்தது போதுமடா! நீ போய்ச் சாப்பிடு. அவள் உனக்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்."

அறைக்கு வெளியே சசியின் உருவம் நிழல் வடிவமாகத் தெரிந்தது. அசந்தர்ப்பமாய் அம்மா ஏதாவது சொல்லி விடுவாளோ என்ற பயம் கவ்வியது.

கோட்டைக் கழற்றி விட்டு, பூட்ஸைக் கதவோரம் உதறி விட்டுக் காலைக் கழுவினதும் நேரே வந்து அப்படியே மேஜையின் முன் உட்கார்ந்து கொண்டான். நேரமாகி விட்ட நாட்களில் அவன் அப்படியே சாப்பிட்டு விட்டு அறைக்குப் போய் நிதானமாக உடைகளை மாற்றிக் கொள்வதுதான் வழக்கம்.

மேஜை மேல் தட்டைச் சுற்றிக் கிண்ணங்கள். சசி ஒவ்வொன்றாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

ஜன்னலுக்கு வெளியே அடக்கமான நிலவு ஊதா ஒளி வண்ணமாகத் திகழ்ந்தது. காற்றில் அசைந்த கிளைகள் சுவரில் உராயும் போது எழும் 'மர்மர' சத்தம். திடீரென்று விழித்துக் கொண்டு இலேசாய்க் கவியபடி கிளைக்குக் கிளை பறந்த பேடைப் புள்.


அவளும் அதைப் போல் பறந்து போய் விடுவாள் கொஞ்ச நாட்களில். வேறு கிளையில் நிம்மதியைத் தேடிக் கொண்டு உட்கார்ந்த பறவையைப் போல், சுவாதீனமாக ஒதுங்க அவளுக்கும் ஓர் இடம் கிடைத்து விடும்.

கிண்ணத்தில் ஸ்பூன் தட்டிய சத்தம் கேட்டுத் திரும்பினான். கலத்தில் நெய் விழுந்து கொண்டிருந்தது.

"நீயும் உட்கார்ந்து கொள்ளேன்."

"இருக்கட்டும்."

பூசாரி மகன்!



"உட்காரக் கூடாதா?"

அவன் கேள்வியில் சட்டென்று ஓர் ஏக்கம் தொனித்தது. அவள் பார்வை இளகியது. மேலே பேசாமல் தட்டைக் கொண்டு வந்து எதிரே வைத்துக்கொண்டாள். அவள் விரல்கள் அசைவதைப் பார்த்துக் கொண்டே, சாப்பிடத்தோன்றாமல் அவன் உட்கார்ந்திருந்தான். அவள் திரும்பும் வேளைகளில் அவள் உருவக் கோட்டில் அவன் பார்வை ஒன்றி மீளும்.

தலைப்பூவைக் களைந்து விட்டாள். கழுத்தில் மினுமினுத்த ஒற்றைச் சங்கிலி. மாற்றுப் புடவையில் சொல்ல முடியாத பெண்மையின் நளினம்.

கொஞ்ச நாட்களில் அவள் தனியே அப்படி உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமென்ற நினைவு அவனைத் திடீரென்று உலுக்கியது. எல்லா நினைவுகளும் மன உணர்வுகளும் மறைந்துவிட வேண்டுமென்று நேர்ந்திருந்தாலும், அந்த வேளையில் அவன் ஒன்றை யாசித்திருப்பான். அது, அவள் அங்கேயே, அவனெதிரேயே, அப்படியே, என்றென்றும் இருந்து விடவேண்டுமென்பதுதான்.

சோறு தொண்டையில் விக்கியது. உலகம் ஏன் இவ்வளவு சோபையற்று விட்டது?

"தண்ணீர் வேண்டுமா?"

நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு அவள் அப்படிக் கேட்டது அவனை எழுப்புவது போல் இருந்தது. நிமிர்ந்து பார்த்த போது அவன் கவனத்தை அவள் அவ்வளவு நேரம் கவர்ந்தது அவளுக்குப் புரியாமல் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். இருவருக்குமிடையே இம்சையான மௌனம் தேங்கியது.

ஏதோ ஒரு வேகத்தில் அக் கேள்வி தெறித்து விழுந்தது. "என்னிடம் எப்போது சொல்லப் போகிறாய் அச் சேதியை.?"

"எதை?"

அவள் நாக்கை மடித்துப் பேச்சை விழுங்கினாள். பேச்சை ஏன் ஆரம்பித்தோமென்றிருந்தது.

"என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதே! ஒரு மாதம் இருக்கும்......ஒரு நாள் உன் மேஜையில் வைத்திருந்த லைப்ரரி புத்தகம் ஒன்றில்...அந்தப்படத்தைப் பார்த்தேன்!"

"ஓ!"

அவள் பார்வை பதுங்கியது. பூவின் கவிழ்ந்த இதழ்களைப் போல் வாயை மடித்து முறுவலித்துக் கொண்டாள்.

அவள் மனத்துக்குள் இசைத்த ஞாபகங்கள் என்னென்னவோ? அவள் தன் பார்வையின் ஏக்கம் தெரியாமல் இருக்கத் தட்டின் மேல் குனிந்து கொண்டாள்.

"எப்போது நடக்கலாம்?"

"கல்யாணமா?"

அவன் நேரே விஷயத்துக்கு வந்து விட்ட தைரியம் அவளைத் தூக்கி வாரிப் போட்டது. அவள் பார்வை குறும்பாக அசைந்ததைப் போல் பின்னல் பிரிந்து தோள் மேல் குழைந்தது. அவளால் அவ்வளவு திடமாகப் பதில் சொல்ல முடியவில்லை. உறுதியற்ற குரலில் "ஆமாம்" என்று சொன்னாள்.

"பரீட்சைக்கப்புறம் தான்!"

"அப்படியானால் இப்போதிருந்தே எல்லாம் தயார் பண்ண வேண்டியது தானே!"

"ஏனாம்?"

"பின்னே?"

"இரண்டு நாட்களுக்கு முன்னால் தயார் செய்துகொண்டால்போதும். மதுரைக்குப் போக வேண்டியதுதானே?"

"மதுரைக்கா?"

"ஆமாம். நீலாவின் அப்பா அங்கேதான் இருக்கிறார். கல்யாணமும் அங்கேதான் நடக்கும்."

"என்னது? என்னது?"

"அந்தப் படம் அவளைக் கைப்பிடிக்கப் போகிறவருடையதுதான். அசட்டுப் பெண் புத்தகத்தோடு மறதியாய் என்னிடம் கொடுத்து விட்டாள்!"

எதிர்பாராதவிதமாய் நெஞ்சில் விழுந்த ஆறுதலின் வேகத்தில் அவள் கைகள் தடுமாற்றம் கொண்டன. தன்னையே நம்ப முடியாத ஒரு நிலை. அவன் குரல் மட்டும் காதில் விழுந்தது.

"நீங்கள் படத்தை எடுத்தது எனக்குத் தெரிந்து போயிற்று. மறு நாள் அது வேறு புத்தகத்தில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். நீங்கள் என்ன நினைத்திருப்பீர்களோ என்று மனத்தில் ஒரு சங்கடம். சொல்லி விடலாமா என்று கூடப் பார்த்தேன். ஆனால் அதுவே உங்கள் கவனத்தைத் திருப்பத் தூண்டுகோலாக அமையும் ஒரு நிகழ்ச்சியாக இருந்து விடக் கூடாதா என்று ஒரு ஆசை. அது பொய்யாகவில்லை. உங்களை ஒரு மாதமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். இந்த வேளை வருமென்று எனக்குத் தெரியும். நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும்—"

"எதற்காக?" அவன் குரலில் மகிழ்ச்சி வெறி குமிழியிட்டது.

"உங்கள் உணர்வின் விழிப்புக்காக!"

"போக்கிரி!" என்று ராஜன் கிண்ணத்திலிருந்து ஒரு ஸ்பூன் சர்க்கரையை எடுத்து அவள் தட்டில் போடப்போனான்.

"அடடா! இது மோர் சாதம்" என்று அவள் அவசரம் அவசரமாக மறைத்துக் கொண்டாள்.

சர்க்கரை வாயில் விழுந்தது. வதனத்தில் அதன் இனிமை இறங்கியது.

அமைதி பிறந்தது!

தெரு அமைதியில் ஆழ்ந்திருந்தது. அவள் உள்ளத்தில் அமைதி யில்லை.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடியே எதிர் வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

தாழிட்டிருந்த கதவைத் திறந்துகொண்டு எதிர் வீட்டிலிருந்து பெண்ணொருத்தி கையில் பூக்குடலையுடன் வெளியே வந்தாள். மல்லிகையும் சம்பங்கியும் சேர்ந்து பின்னிப் படர்ந்திருந்த பந்தலுக்கடியில் நின்றவாறு ஒவ்வொரு மொட்டாகக் கிள்ளி எடுத்துக் குடலைக்குள் போட்டாள்.

ஜாதி மல்லிகை அரும்பின் மென்மைக்கும், அவள் செவ்விரல்களின் மென்மைக்கும் வித்தியாசம் ஏதும் தெரியவில்லை. இடுப்பளவு புரண்ட கூந்தல் நெளி நெளியாய், அலை அலையாய் அவள் முதுகில் பரவிக் கிடந்தது.

'என்னைக் குளியல் போதும்!' ஜானகி முணு முணுத்துக் கொண்டிருந்தாள். குடலைக்குள் அரும்புகளை நிரப்பிக் கொண்டு தெருக் கதவைத் திறந்து தெருவை எட்டிப் பார்த்தாள் அந்தப் பெண். இப்பொழுது ஜானகியால் அவள் முகத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது.

மேனியெங்கும் ஒருவித வெளுப்பு. அதில் மஞ்சள் பூச்சு. நெற்றியில் வட்டமான சாந்துப் பொட்டு. 'ஓஹோ! சமீபத்தில் நாலைந்து மாதங்களுக்கு முன் மகப் பேற்றை அடைந்தவள் போலிருக்கிறது! குளித்து விட்டு மஞ்சளும், அழகும் சேர்ந்து இழைய வாழைக் குருத்தாக நிற்கிறாள்.......'


ஜானகிதான் தனக்குள் மெதுவாகச் சொல்லிக் கொண்டாள். தெருச் சந்தடி அடங்கி வெறிச்சென்று கிடந்தது. காலையில் மனிதக் கூட்டம் மொய்த்து ஊறிய தெரு நடுப் பகலில் ஓய்ந்து அமைதி கண்டிருந்தது. ஜானகி தெருவையும் எதிர்வீட்டையும், பூப் பறிக்கும் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். எதிர் வீட்டில் உள்ளேயிருந்து பச்சைக் குழந்தையின் அழுகுரல் கேட்டது. தெருவில் வேடிக்கை பார்த்தவள் விசுக்கென்று 'கேட்'டை அறைந்து மூடிக் கொண்டு உள்ளே போகத் திரும்பினாள். 'வாணி' என்று அதட்டிக் கூப்பிடும் ஆண் குரலைத் தொடர்ந்து, ''இதோ, வந்தேன். தடியன்! இதற்குள் முழிச்சிண்டாச்சா!'' என்று கேட்டபடி படியேறினாள், பூப் பறித்துக் கொண்டிருந்த வாணி.

வராந்தாக் கதவைத் திறந்தவள், ஆண் மகன் கையில் குழந்தையை ஏந்தியபடி நிற்பதைப் பார்த்து அதை அப்படியே வாங்கி அணைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

மறுபடியும் தெரு அமைதியில் மூழ்கியது. ஜானகி மட்டும் அடித்து வைத்த சிலையாக அங்கே நின்றிருந்தாள். மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அவர்கள் வீட்டில் சாப்பாடு ஆகவில்லை. அவள் கணவன் தியாகு ஆஸ்பத்திரியிலிருந்து வர இன்னும் ஒரு மணி நேரமாவது பிடிக்கும். அது வரை பொழுதை ஓட்டுவது மிக மிகக் கடினமான வேலை.

அப்படித் தியாகு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தால்தான் என்ன? கதர்க்கடையின் வரவு செலவுகள், மதிய உணவுச் சாப்பாட்டின் கணக்கு, சமூக நலச் சங்க ஆண்டு விழா, அந்த நிதி, இந்த நிதி என்று பல அலுவல்கள் அவன் மேசை மீது குவிந்து கிடக்கின்ற போது தன்னோடு பேச அவருக்கு நேரமா இருக்கிறது? ஜானகியைப் பொறுத்தமட்டில் கணவன் வீட்டிலிருந்தாலும் ஒன்றுதான், வெளியில் புறப்பட்டுப் போயிருந்தாலும் ஒன்றுதான். வீட்டில் இருந்தால் பெறப் போவதும் வெளியே போயிருந்தால் இழக்கப் போவதும் இரண்டுமே இல்லை.

எதிர் வீட்டிலோ கணவன் அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு வந்து விட்டால் பிறகு வீட்டிலே சிரிப்பும் களிப்பும்தான்.



அதோ கலகலவென்று மணி குலுங்கி ஓடுகிறாற் போல் சத்தம் கேட்கிறதே! ஜானகி காதைத் நீட்டிக் கொண்டு கேட்கிறாள்.

அவர்கள் குழந்தை தவழ்ந்து கூடத்தைச் சுற்றுகிறது. அதன் கூடவே தாயும், தந்தையும் சுற்றி வந்து சிரிக்கிறார்கள். அவ்வளவுதான் விஷயம். ஆனால் அவ்வளவுதானா?

ஜானகி தன் மகன் முரளியை நினைத்துக் கொண்டாள். இப்பொழுது அவனுக்கு ஏழு வயது ஆகிவிட்டது. பள்ளிக்குப் போகிறான். அந்த நாளில், அவன் தவழும் பருவத்தில் அவனைப் பார்த்து ஒரு நாளாவது அவன் தந்தை மகிழ்ந்திருப்பாரா? இந்தமாதிரிக் குழந்தையைச் சுற்றி வந்து சிரித்து மகிழ்ந்திருப்பாரா?

தியாகு என்ன அவ்வளவு கல்நெஞ்சக்காரனா? இதயமற்றவனா? தன்னையே சமூகப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட பெரிய தியாகி என்றல்லவா அவனைப்பற்றி ஊரில் எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்கள்? எல்லோரும் சொல்லித்தானா அது தெரிய வேண்டும்? உண்மையே அதுதான்.

தியாகு கல்லூரிப் பட்டம் பெற்றவுடனே தேசம் அவனைத் தன் பணிக்கு அழைத்த காலம் அது. இந்திய விடுதலைக்காகத் தங்களைத் தியாகம் செய்த பல தியாகிகளில் அவனும் ஒருவன். தேசம் விடுதலை அடைந்த பிறகு அவன் ஓய்ந்து விடாமல், எந்தப் பட்டம் பதவியிலும் தன்னைப் புகுத்திக் கொள்ளாமல் சமூகத் தொண்டு செய்ய ஆரம்பித்தான். அந்தத் தொண்டின் முன்பாக அவனுடைய வீடு உற்றம், சுற்றம் எல்லாம் மிக மிகச் சிறியதாகி விட்டன.

ஜானகி அவன் கரம் பற்றிய அன்று அளவிலாப் பெருமை கொண்டாள். தன் கணவன் பெரிய தியாகி என்னும் எண்ணமே அவள் நெஞ்சை நிரப்பியது. ஊரெல்லாம் புகழ்கிற உத்தமனைக் கணவனாக அடைந்தவளுக்குப் பெருமை உண்டாகாதா? ஆனால் ஜானகி தியாகியோ, விரக்தி உள்ளம் படைத்தவளோ அல்ல. பெண்ணாகிய அவளுக்கு மனத்தில் ஆயிரம் ஆசைகள் முளைத்துச் செழித்தன. மணமான புதிதில் ஓர் இளம் பெண் கணவனுடன் எவ்வளவு அன்போடு வாழவேண்டும் என்று ஆசைப் படுவாளோ, அவ்வளவு ஆசைகளும் அவளுக்கும் இருந்தன. ஆனால் அவள் கணவனுக்கு இருந்த ஆசைகளோ தொண்டு, சமூக நலம், தியாகம்—இப்படிப்பட்டவை. வீட்டு வாசலில் படர்ந்திருக்கும் மல்லிகை அரும்புகளைப் பறித்துத் தொடுத்துச் சரமாக்கிக் குழலில் சூட்டிக் கொண்டு தியாகு பார்த்து மகிழ வேண்டும் என்று அவன் வரவுக்காக ஜானகி காத்து நின்ற நாட்கள் எல்லாம் வீணாகி விட்டன.



தியாகு வீட்டுக்கு வந்தால் அதையெல்லாம் கவனிக்க மாட்டான். மனைவி அழகாக இருக்கிறாளா, மலர் சூடிக் கொண்டிருக்கிறாளா என்பதைப் பற்றி அவன் நினைத்துப் பார்ப்பதே இல்லை.

தான் பணிபுரிந்து வந்த அந்த ஆஸ்பத்திரியை எப்படி விஸ்தரிக்கலாம்? நோயாளிகளுக்கு எந்தவிதத்தில் சௌகரியங்களை மிகைப்படுத்தலாம் என்பதுதான் அவன் சிந்தனையாக இருக்கும். அந்தச் சிந்தனை வெள்ளத்தில் மூழ்கி அதிலே லயித்தவாறு வேறு அலுவல்களுக்காக வெளியே போய் விடுவான் அவன்.

தியாகுவின் அன்னை, ஜானகியின் மாமியார், பிள்ளையின் இந்நிலை கண்டு தர்மசங்கடத்தை அனுபவித்தாள்.

''ஜானகி! இந்த ஊரில் தெருக்கோடியில் சினிமா வந்திருக்கிறதே. போய்ப் பார்த்து வாயேன்....''

''வேண்டாம், அம்மா....''

ஏக்கத்தின் எதிரொலியாக அவள் பெருமூச்சு விட்டவாறு மாமியாருக்குப் பதிலிறுப்பாள். 'என்ன வேண்டியிருக்கிறது சினிமாவும், இன்னொன்றும்!' என்று அவள் வாய் திறந்து சொல்வதில்லை. எண்ணங்கள் உறுத்த சோகப் பார்வை ஒன்றை வீசிவிட்டு அங்கிருந்து மறைந்து விடுவாள்.

எதிர்வீட்டிலிருந்து இரட்டைக் குரலில் சினிமாப் பாணியில் தாலாட்டுக் கேட்க ஆரம்பித்து விட்டது. ஓர் அடி கணவன் பாட, மறு அடி மனைவி பாட இருவருமாகக் குழந்தையைத் தூங்கப் பண்ணுகிறார்கள். குழந்தை தூங்கி விட்டது போலும்! இருவரும் வாசல் அறையில் வந்து உட்காருகிறார்கள். ஜன்னலின் மெல்லிய திரை வழியாக அவர்கள் சேர்ந்து சோபாவில் அமர்ந்திருப்பது நன்றாகத் தெரிகிறது.

எதிர் வீட்டிலிருந்து காட்சிகள் தெரிகின்றன. பேச்சுக்கள் கேட்கின்றன.

''இன்று என்ன டிபன் பண்ணட்டும்?'' வாணி வீணைக் குரலில் மிழற்றுகிறாள்.

''எங்கே ஒவ்வொரு பலகாரத்தின் பெயராகச் சொல்லிக் கொண்டு வா, பார்ப்போம்.''

''நான் ஹோட்டல் சர்வரா என்ன?'' கலீரென்ற சிரிப்பொலி கேட்கிறது.

அப்புறம் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே உள்ளே போனார்கள். ஜானகி ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

தெரு அமைதியில் உறங்கியது. தெருக் கோடியில் தபால்காரனின் தலை தெரிந்தது.

''ஓ! மணி பன்னிரண்டு ஆகிவிட்டதா?''

தனக்குள் சொல்லிக் கொண்டே அவள் சமையலறைக்குள் சென்று தட்டை எடுத்து வைத்தாள். மணை போட்டுத் தண்ணீரும் எடுத்து வைத்தாயிற்று.

வாசல் கதவு கிரீச்சிடுகிறது. 'சரக் சரக்' என்று செருப்பொலி கேட்கிறது.

தியாகு உள்ளே வந்து கைகால்களைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்காருகிறான். கணவனுடன்

சரோஜா ராமமூர்த்தி

ஏதாவது பேச வேண்டும் என்று அவள் மனம் அலை பாய்கிறது. திடீரென்று நினைவு வந்தாற்போல் பேசுகிறாள்.

''முரளி காலையில் பள்ளிக்கூடம் போகும்போது தெருவில் விழுந்து காலில் சிராய்த்துக் கொண்டான். மருந்து போட்டு அனுப்பினேன்.....''

''காயத்தைக் கழுவித்தானே மருந்து போட்டாய்.''

''ஆமாம்.....''

''சரி பள்ளிக்கூடத்திலிருந்து வரட்டும், பார்க்கிறேன்.....''

அதற்கு மேல் அவனுடைய பேச்சு வளரவில்லை.

'குழந்தை விழுந்தானா? அடி பலமா?' என்று ஒருத்தர் பதறமாட்டேரோ? இதுதான் ஜானகியின் குற்றச்சாட்டு. அவள் மனத்தாங்கல், வேதனை, எல்லாம்.

உள்ளே மேசைமீது அன்று வந்த தபால்களைப் பார்வையிட்டான். ஊரிலிருந்து அவன் அம்மா எழுதிய கடிதம். 'சௌ ஜானகியைக் கவனித்துக் கொள். நீ அவளிடம் இப்படி நடந்து கொள்வது...' வழக்கமான குற்றச்சாட்டுத்தான். அவன் அதைப் படித்துப் புரிந்து கொண்டதாகக் காணோம். இன்னொரு கடிதம் ஏதோ ஒரு பொது நலச் சங்கத்திலிருந்து வந்திருந்தது. 'அன்புடையீர்' என்று அது ஆரம்பித்திருந்தது. ஜானகி அந்தக் கடிதத்தைப் படித்தவுடன் சிரித்தாள். வேதனையின் வெடிப்பாக இருந்தது அந்தச் சிரிப்பு. அன்பை உடையவர் என்று அதற்குப் பொருள் என்று அவள் நினைத்தாள். பிறர் விஷயத்தில் மகா மேருவாக உயர்ந்து நிற்கும் அந்த அன்பு, அவளிடத்தில் தரை மட்டமாகத் தாழ்ந்து நிற்கும் நிலைதான் விந்தை!

அந்தச் சங்கத்தில் பல அனாதைப் பெண்கள் ராட்டை சுழற்றி, நூல் நெய்து வாழ்கிறார்களாம். அவர்களுக்கெல்லாம் இந்த வழியைக் காட்டிய தியாகுவை ஆண்டு விழாவுக்கு வருமாறு அழைத்திருந்தனர்.

தியாகு பீரோ நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்த நூல் சிட்டங்களைக் கட்டுக் கட்டாகக் கட்டி வைத்துக் கொண்டிருந்தான்.

சமையலறையிலிருந்து வாசல் அறை தெளிவாகத் தெரிந்தது. ஜானகி சுவரில் சாய்ந்தபடி கணவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

எதிர்வீட்டுச் சாமான் அறையை இப்போது நன்றாகப் பார்க்க முடிந்தது. மச்சிலிருந்து கணவன் ஒவ்வொரு பாத்திரமாக எடுத்துக் கொடுக்க, மனைவி வியர்வை வழியக் கீழே ஒவ்வொன்றாக வைத்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் வீட்டில் ஏதோ விசேஷம் போலும். "ஓஹோ! விருந்து சமைக்கப் பாத்திரங்களை எடுக்கிறார்கள் போலிருக்கிறது.''

உடனே அவளுக்கு முரளியின் பிறந்த நாள் நினைவுக்கு வந்து விட்டது. அன்று தியாகு ஊரில் இல்லை. எங்கோ என்னவோ என்று போய் விட்டான்.

அவளுக்கு அன்று ஒன்றுமே பிடிக்கவில்லை. ஊரெல்லாம் திரண்டுதான் வந்திருந்தது. பலன்?

குடும்பம், குழந்தை குட்டி என்று அவள் தன்னைச் சுற்றி அமைத்துக் கொண்டிருக்கும் சிறிய வட்டத்துக்குள் அவன் என்றுமே எட்டிப் பார்த்ததில்லை.

சமூகம், தொண்டு என்று அவன் தன்னைச் சுற்றி வரைந்திருக்கும் பெரிய வட்டத்துக்குள் இவள் எட்டிப் பார்க்க நுழைந்ததுமில்லை.

ஜானகி அன்று சாப்பிடவில்லை. கணவன் வந்து சாப்பிட்டாயா என்று கேட்கவில்லையே என்ற ஆதங்கம்தான் காரணம். என்றாவது ஒரு நாள் அவன் அப்படிக் கேட்கமாட்டானா என்று அந்த நாளை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தாள் அவள்.

தெருவில் தந்திச் சேவகன் வந்து நின்றான்.

''சார்...'' கூடத்து வரை வந்து எட்டிப் பார்த்த ஜானகி யாருக்கு என்னவோ என்று பதறினாள். தந்தியை வாங்கிக்கொண்டே தியாகு மனைவியின் முகத்தை உற்றுப் பார்த்தான். அதில் ஓடிய பயமும், பீதியும் அவன் மனத்தைக் கலக்கின.

''என்ன ஜானகி? யாருக்கும் ஒன்றும் இல்லை. தெற்கே வெள்ளம் புரளுகிறதே. வெள்ளக் கஷ்ட நிவாரண வேலைக்கு என்னை வரும்படி கலெக்டர் தந்தி அனுப்பியிருக்கிறார். அவ்வளவுதான்.''

இவ்வாறு சொல்லிக் கொண்டே தோல் பெட்டியில் உடைகளை எடுத்து வைத்தான். காப்பி கூடச் சாப்பிடாமல் புறப்பட்டு விட்டான். ஜானகி மறுபடியும் ஜன்னல் கம்பிகளின் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு நின்றாள். தெருவில் சந்தடி இல்லைதான். மணி மூன்றுகூட இருக்காது..

எதிர் வீட்டில் கணவனும் மனைவியும் பரபர வென்று இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். வேதனையும் துயரமும் அவர்கள் முகத்தில் பொங்கி வடிந்தன. அவர்கள் வீட்டில் யாருக்கென்ன? ஜானகிக்கு ஒன்றும் புரியவில்லை. சற்றுமுன் சிரிப்பும் களிப்புமாக இருந்த வீட்டில் ஏன் இப்படிப் பரபரக்க வேண்டும்? குழந்தை முக்கி முக்கி முனகுகிறதே!

வாணி தெருக் கதவைத் திறந்து கொண்டு எதிர் வீட்டிலிருந்து இவளை நோக்கி வந்தாள்.

''வந்து...வந்து... குழந்தை தூங்கி விழித்ததிலிருந்து வயிறு உப்பிக் கொண்டு மூச்சு முட்டி முட்டி வருகிறது மாமி. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை....''

கண்ணீர் கொப்பளிக்க அவள் தன் இரு நயனங்களையும் தலைப்பால் பொத்திக் கொண்டாள்.

ஜானகி அவளுடன் அந்த வீட்டினுள் சென்றாள். ஏதோ மருந்தின் பெயரைச் சொல்லி அதை வாங்கி வரச் சொன்னாள். மருந்தைக் குழந்தையின் மார்பிலும், முதுகிலும் தடவித் தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுத்தாள்.

குழந்தையின் வேதனை குறைந்தாற்போலிருந்தது. வீறிட்டு அழுது தாயின் மடியில் அது புரள்வதைப் பார்த்தவாறு நின்றிருந்தாள் ஜானகி.

''அப்பா...கொஞ்ச நாழியில் எப்படிப் பயமுறுத்திட்டேடா, ராஜா...'' என்று குழந்தையை உச்சி முகர்ந்தாள் அதன் அன்னை.

''பார்த்தாயா, உனக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. பெரிய தொண்டரின் மனைவி அல்லவா? அவர் எவ்வளவு தொண்டுகள் செய்கிறார் ஆஸ்பத்திரியில்!'' என்று வியப்பும், நன்றியும் கலந்த குரலில் ஜானகியைப் பாராட்டினான் வாணியின் கணவன்.

மற்றவர் துயர் துடைப்பதில் மற்றவர் முகத்தில் சிரிப்பதைக் காண்பதில் இருக்கும் மகிழ்ச்சியை ஜானகியால் நன்கு உணர முடிந்தது. அதோடு தன் கணவனையும் உணர முடிந்தது.

இந்நாள் வரை முரண்பட்ட கருத்துடன் ஒருவரிடமிருந்து ஒருவர் ஒதுங்கியே வாழ்ந்த அவர்கள் இருவரிடையும் இன்று கருத்தொற்றுமை நிலவக் காரணமாக இருந்த அந்த எதிர்வீட்டு மதலைச் செல்வத்தை இமைக்காமல் பார்த்தாள் ஜானகி.

எங்கோ பிறர் இன்னல் களையப் போயிருக்கும் தன் கணவன் தியாகு அப்போதும் அருகில் இருப்பதாகவே அவள் உணர்வு கொண்டாள்.

மறுபடியும் ஜானகி தெருவில் இறங்கிய போது தெரு கலகலப்பாக இருந்தது. முன்பு தெருவில் இருந்த அமைதி இப்போது அவள் உள்ளத்தில் இருந்தது. அவள் தன் வட்டத்திலிருந்து தானாகவே நழுவி வெளியேறிக் கணவனுடைய இலட்சிய வட்டத்தில் புகுந்தாள்!



பூமிமிசை மரங்களைப்போல்
பொத்தல்மரம் ராமில்லை
நீலகிரிச் சாலையிலே
நீண்டுயர்ந்த காலமரம்

போட்டோ :
ஆர். என். நாகராஜ ராவ்

பாய்ந்துவரும் ஒளித்தெய்வம்
பரிதிதனைப் பணிந்திடுமோ
சாய்ந்துநிமிர் தென்னைமரம்
சலசலக்கும் ஓலைநிகழ்
சின்னமரம்

போட்டோ : பி. குருமூர்த்தி



கொங்கு மலை எங்கள் மலை

செங்குட்டுவன் காலத்தில் தமிழ்ப் பெரு வேந்தர்கள் தவிரக் குறுநில மன்னரும் அரசாண்டார்கள். கொங்கிளம்கோசர், நூற்றுவர் கன்னர், என்பவர்கள் அப்படிப்பட்டவர்கள். இவருள் கொங்கிளம் கோசர் விரமிக்க பழைய மரபினர். இவர்கள் அரசாண்ட நாடுகள் மேல் கொங்குநாடும், குடகு, மைசூர் பகுதிகளும் அடங்கிய கங்க தேசமாகும். கங்க தேசத்து அரசர்களைக் கொங்கு தேச ராஜாக்கள் என்பர்.

சேர நாட்டில் அடங்கிய நீலகிரி, சேலம், கோவை ஜில்லாக்கள் சங்க கால நூல்களில் கொங்கு நாடு என்றே வழங்கப் பட்டிருக்கின்றன. எனவே இதன் மன்னர் கோமான் ''கொங்கன், கொங்கர்கோ'' என்று பெயர் பெற்றான். இச் சேர நாட்டு மலைகளுள் கொல்லி அயிரை மலைகள் இவருக்கு அடங்கியவை எனக் கூறுதல் வேண்டும். நீலகிரியில் இருக்கும் இக் கொல்லி மலையை இன்னும் நீலகிரியில் வாழும் பூர்வீகக் குடிகளாகிய கோத்தர்கள் தங்களுடைய பூர்வீக



மலை என்று கூறுகின்றனர். (அகம்: 62) பழநி மலைத் தொடரும் இச் சேரர்க்குரியதே. இவற்றுள் அயிரை என்பது ஆனைமலைத் தொடர்களுள் ஒரு பகுதியாம். எனவே ஆனைமலையில் வாழும் ஆதிவாசிகளும் தமிழர்கள் என்று சரித்திர வாயிலாகக் கொள்ள வேண்டும்.

நீலகிரியின் தலைநகராகிய உதகை கடல் மட்டத்துக்கு மேல் 7758 அடி உயரத்தில் உள்ளது. அதை ஒத்தைக் கல் மந்து என்று தொதுவ மொழியில் சொல்லுகிறார்கள். இவ் வட்டாரத்தில் குடியிருக்கும் பூர்வீகக் குடிகளுள் தொதுவர், கோத்தர், குறும்பர் என்பவர்கள் முக்கியமானவர்கள்.

தொதுவர், கோத்தர்களின் செல்வம் இவர்களுக்குரியதான எருமை மந்தைகளின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றது.

பல்லாண்டுகளுக்கு முன் வார்டு இர்வின் பிரபு உதகைக்கு விஜயம் செய்தபோது அவர் உதகையில் வாழ்ந்த தொதுவத் தலைவருக்கு, இராஜப் பிரதிநிதி என்றும், செல்வமுடையவர் என்றும் அறிமுகப்படுத்தப் பட்டார்.

''பிரபு, செல்வரென்றால் அவருக்கு எருமை மந்தைகள் எத்தனை உண்டு?'' என்று தொதுவத் தலைவர் கேட்டாராம். ''அவரிடம் எருமை மாடுகள் இல்லை. ஆனால் நிறையப் பொன், வெள்ளி நாணயங்கள் இருக்கின்றன'' என்று பதில் கூறினார்கள் உடன் இருந்தவர்கள்.

''அப்படியென்றால் அவருடைய செல்வத்தைக் கொண்டு எத்தனை எருமைகள் வாங்கலாம்?'' என்று தலைவர் கேட்டாராம். ''பிரபுவுக்கு இருக்கும் செல்வத்தைக் கொண்டு நீலகிரி ஆதிவாசிகளிடமிருக்கும் எல்லா எருமைகளையுமே வாங்கலாம்'' என்று கூறிய பிறகுதான் தொதுவத் தலைவன் இர்வின் பிரபுவைச் செல்வச் சீமான் என்றே ஒப்புக் கொண்டானும்!

இதனால் தொதுவர்களின் சொத்தும், கோத்தர்களின் சொத்தும் அவர்கள் வளர்க்கும் ஆயிரக் கணக்கான எருமை மந்தைகள்தான் என்பது விளங்குகிறதல்லவா? இன்றும் இவர்களின் ஊர்களில் ஆயிரக்கணக்கான எருமைகள் உண்டு. எருமை மந்தையைக் காத்து, அதன் மூலம் வாழ்க்கை நடத்தும் இவர்களின் இருப்பிடங்களுக்கு மந்து என்று பெயர் வந்துள்ளது.

ஆங்கிலேயர்கள் முதன் முதலில் நீலகிரிக்கு வந்தசமயம் ஒரு பெரிய பாறைக்கு அருகில் அமைந்திருந்த ஒரு மந்துதான் ஒத்தைக் கல் மந்து என்று வழங்கப்பட்டது. ஒரே கல்லை நாட்டித் தொதுவர்கள் வணங்குவதாலும் ஒத்தைக்கல் மந்து என்று பெயர் உண்டானது. அதன் நினைவுச் சின்னமாக அப்பாறையை உடைத்துக் கட்டப் பட்ட வீட்டுக்குத்தான் கல் மாளிகை என்று இன்றும் பெயர் வழங்கப் படுகிறது. உதகை இன்று பெரிய நகராகிவிட்டாலும் பண்டைக் காலத்தில் அத்தொதுவர் பாறை இருந்த இடமே இன்று பழைய உதகை என்று வழங்கப்படுகிறது.

நீலகிரியில் வாழும் தொதுவர்கள், கோத்தர்கள் தான் இப்படி மாடுகளையும், எருமைகளையும் செல்வமாக மதிக்கின்றனரா அல்லது உலகிலுள்ள மற்ற மக்களும் எருமைகளையும், மாடுகளையும் செல்வமாகக் கருதுகிறார்களா என்று



ஆராயும்போது பண்டைக் காலத்தில் உலகில் மாட்டு மந்தைகளை அதிகமாக வைத்திருப்பவன்தான் பெரிய செல்வந்தனுகக் கருதப்பட்டான் என்றும், நாண யங்கள் உண்டாவதற்குமுன் மக்கள் பண்டமாற்று முறையையே கையாண்டார்கள் என்றும் அறிகிறேம். அதிக மதிப்புள்ள பொருள்களை வாங்குவதற்கு மாடுகளை மாற்றுகக் கொடுத்தனர். நாணயங்களுக்குப் பதிலாகப் பண்டைக் காலத்தில் மாட்டையே உபயோ கப்படுத்தி வந்தார்கள் என்று சரித்திரங்கள் கூறுகின் றன. தமிழகத்திலும் மாட்டைச் செல்வமாகப் பாவித் ததைப் பற்றிச் சங்க கால நூல்கள் கூறுகின்றன.

பண்டைக் காலத்தில் கிரேக்கர்களும் மாட்டைச் செல்வமாகக் கருதினுர்கள். நாணயங்கள் உண்டான பிறகும் அதற்கு 'மாடு' என்றே பெயர் சூட்டி அந்த நாணயத்தின் மேலும் மாட்டின் உருவத்தையே பொறித்தனர் என்று கிரேக்க நாட்டுச் சரித்திரம் கூறுகிறது. இந்தியாவில் இன்றும் பல பாகங்களில் பெண்களுக்கு மாட்டைச் சீதனமாகக் கொடுக்கின் றனர். ஆகையால் தொதுவர்களும் கோத்தர்களும் அங்ஙனமே கருதி வருவதில் வியப்பில்லே.

நீலகிரியில் கோத்தர்கள் என்று மற்றெரு பழங்குடி மக்கள் வாழ்கிறர்கள். இக் கோத்தர்கள் தொதுவரைத் ''தொவ'' என்று அழைக்கின்றனர். ''தொல்+மை=தொன்மை'' என்பது போல ''தொல் காலத்தவர்'' என்று பொருள் படத் ''தொன்வர்'' என்னும் சொல் தமிழிடைப் பிறந்து பிற்காலத்தில் தொதுவராக மாறியது போலும்.

தொதுவர்களின் சம்பிரதாயத்தில் ஒரு பெண் ணுக்குப் பல கணவன்மார்கள் இருப்பதால், இதிகாச காலப் 'பஞ்சபாண்டவர்' என்றும் இவர்கள் தங்களைச் சொல்லிக் கொள்கின்றனர்.

தொதுவர்களின் மொழியிலுள்ள வார்த்தைகள், பெரும்பாலும் பழங்காலத் தமிழ்ச் சொற்களாய் இருப் பதை இன்றும் காணலாம். திருந்தாத தென்னிந்திய மொழிகளில் ஒன்றுக ஒப்பிலக்கணத்தில் இத் தொதுவ மொழி குறிக்கப்படுகிறது. 'வெல்லம்' என்பதற்குத் தொதுவர்கள் ''கப்போட்'' என்கின்றனர். கருப்புக் கட்டி என்ற சொல், கருப்பிட்டி என்று மாறிப் பிறகு ''கப்போட்''டாக மாறியது என்று நினைப்ப தற்கு இடமுண்டு. ''உன்னுடையது'' அல்லது ''உனது'' என்பதற்குத் தொதுவர்கள் ''நின்த்'' என்று உச்சரிக்கின்றனர். ''நினது'' என்னும் தமிழ்ச் சொல்லே மாறுபட்டு ''நின்த்'' என்று பிறந்தது. ''இவன்த், அவன்த், என்த்'' போன்ற சொற்களை உபயோகப்படுத்துகின்றனர். 'இங்கு வா' என்பது, 'இட்வா' என்றும், 'அங்கு போ' என்பது 'அட்போ' அல்லது 'அட்கட்' என்றும் மாறியுள்ளது. உதகை யின் குளிர்க் கடுமையால் உச்சரிப்பு சற்று மாறியிருக் கலாம் அன்றே? மேலும் ஒரு மந்திலிருக்கும் தொதுவ மொழியும் மற்றெரு மந்திலிருக்கும் தொதுவர் மொழி யும் சென்னை, திருநெல்வேலி, தஞ்சை, இலங்கை முதலிய இடங்களில் வாழும் தமிழர்கள் பேசும் தமிழ் மொழி எப்படி ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றதோ அப்படி மாறுபடுகின்றது. உச்சரிப்புக்கள் மாறினும், 'வா, போ, கட' என்னும் தமிழ்ச் சொற்களை இத் தொதுவர்களின் மொழியில் காணலாம். இத்துடன் 'இட், அட்' என்பவை, 'இஃது, அஃது' என்னும் பண்டைக் காலத் தமிழ்ச் சொற்களின் தொடர் புள்ளவை எனக் கொள்ளவும் இடமிருக்கிறது.

''உண்'' அல்லது சாப்பிடு என்பதற்கு ''உண்ட்'' என்றும், குழம்புக்கு ''கோர்ம்'' என்றும், சோற்றுக்கு 'தோர்து' என்றும், எருமைக்கு 'எர்' என்றும் கூறுகின்றனர்.

'கூப்பிடு' என்பதை 'பீளேடு' என்கிறர்கள். வகரம் பகரமாகத் திரிந்து 'விளிபிடு' என்னும் சொல் 'பீளேடு'

எதிர்ப்பக்கம்: 1. இன்றும் குகையில் வாழும் குறும்பர். 2. உதகையின் முதல் கல் வீடு — 1823ம் ஆண்டு.
இங்கே: 3. தொதுவப் பெண்களின் உடை. 4. கால் மேல் புகுத்தி.







பம்புக் குழாயடியில் தங்கை
பட்டுக் கரங்களுந்தித்தருநீரில்
மகிழ்ந்திருக்கும் பிள்ளையாரோ?
—போட்டோ: என். ராமகிருஷ்ணு

என ஆகி யிருத்தல் கூடும். மேலும் தொதுவ ஆண்கள் எல்லோரும் ''குமண்'' (கோவணம்) கட்டாமல் வீட்டு வாசலைத் தாண்ட மாட்டார்கள். தங்கள் கணவன்மார்களைத் தொதுவப் பெண்கள் 'ஆள்' என்று அழைக்கின்றனர். இதற்கு 'ஆண்மை உள்ளவன்' என்பது பொருள் போலும்.

தொதுவர்களுக்குள் மங்கையர்கள் வயதில் பெரிய ஆண்களை வணங்கும் விதமே ஒரு தனிக் கலை. மங்கையர்கள் வயதில் பெரியவர்களின் அருகில் சென்று வணங்க, பெரியவர் தம் காலைத் தூக்கி, வணங்கும் பெண்ணின் நெற்றியில் வைப்பார். இதற்குக் 'கால் மேல் புகுத்தி' என்று பெயர்.

தொதுவர்களின் கிராமப் பஞ்சாயத்துக்கு, 'நேய்ம்' ('நியாயம்') என்று பெயர் கூறுகின்றனர். ஒற்றை அடிப்பாதையைக் 'கால்வல்' (கால்வழி) என்பார்கள். குப்பைக்குக் 'கிப்' என்கிறார்கள்.

நான் தொதுவர்களின் மந்தில் தங்கிப் பழகி, அவர்களின் உடைகளையும், சில பழக்க வழக்கங்களையும் கவனித்ததில் பண்டைக் காலத்தில் அராபியர், கிரேக்கர், உரோமர், சீனர் முதலியவர்கள் இந்தியாவில் வந்து வாணிபம் செய்தபோது, அவர்களிடமிருந்து இவர்கள் இவற்றைக் கற்றுக் கொண்டார்களோ வென்று ஐயப்பட வேண்டியிருந்தது. மேலும் தொதுவ ஆடவர்கள் கிரீஸ், பாலஸ்தீனம், பெர்ஷியா முதலிய தேசத்து மக்களைப் போன்று மேற்போர்வை ஒன்றை போர்த்திக் கொண்டும், தலைமுடியும், தாடியும் வளர்த்துக்கொண்டு மிருக்கிறார்கள்.

தொதுவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறி யிருக்க வேண்டும் என்று நினைப்பவர்களுமுண்டு. ஏனென்றால் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத பழக்க வழக்கங்களை இவர்களிடம் காண்கிறோம்.

நீலகிரியைச் சுற்றிலும் இன்று சற்று நாகரிகமுடையவர்களாகவும், பண்டைக்கால முதல் எல்லாத் தொழில்களையும் திறமையாகச் செய்யக் கூடியவர்களாகவும், தங்கள் ஊர்களை ஏழு ஊர்களில் வைத்துக் கொண்டு வாழும் நீலகிரிப் பழங்குடி மக்கள் ''கோத்தர்கள்'' என்று அழைக்கப்படுகின்றனர்.

கோத்தர்கள் தங்களைத் தங்கள் மொழியில், 'கோவ்' என்றும், 'கோ' என்றும், படக மங்கையர்களை, 'மைத்' (பெண்) என்றும், ஆண்களைக் 'கோ' (அரசர் குலத்தவர்) என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் தமிழர்கள் என்று விளங்குகிறது. இவர்கள் பண்டை நாளில் அரசர்களாகவோ அல்லது அரசர்களின் சபையில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகவோ இருந்திருக்கக் கூடும். (குறும்பர்கள் அரசர்கள் என்பதற்குச் சரித்திரச் சான்றுகளும் இருக்கின்றன.) கல்லையும் மண்ணையும் கொண்டு சுவர்கள் எழுப்பியும், ஓடுகள் வேய்ந்தும், மரங்களை அறுத்து வைத்தும், அழகான சித்திர வேலைப்பாடுகள் அமைத்த கதவுகளை வைத்தும் இவர்கள் வீடு கட்டுகின்றனர். இரும்பைக் கொண்டு எல்லாவித ஆயுதங்களையும், பொருள்களையும் செய்கின்றனர். இதனால் இவர்களுக்குப் பண்டைக் காலத்தில் தமிழ் அரசர்கள் 'கொத்தர்' என்று பெயரிட்டு, அதுவே நாளடைவில் கோத்தர்களாகி யிருக்கலாம்.

இவர்களின் மொழி மற்ற ஆதி குடிகளின் மொழிகளுக்குச் சிறிது மாறுபட்டதாய் இருந்தாலும் அநேகமாய் முற்காலத் தமிழ்ச் சொற்களின் அடிப்படையிலிருந்து மருவி வந்த மொழியாகவே தோன்றுகின்றன. கால்டுவெல்லும் இதையொப்பக் கூறுகிறார்.

இன்றும் கோத்தர்கள் தந்தையை 'அய்னே' என்றும், மகனை 'மீனே' அல்லது 'மேய்ன்' என்றும் மகளை 'மோள்' என்றும் (மகள் என்பது மலையாளத்திலும் மோள் எனப்படும்). மருமகனை 'மோளாளன்' என்றும் சொல்கின்றனர். (மோள் ஆளன்— 'மகளை ஆளக் கூடியவன்'.)

மருமகளை, 'மேய்ன்பெட்' - மகனின் பேடு அல்லது மகனின் பெண்டு என்று சொல்கின்றனர். பாட்டியை 'பெருவெ - 'பேர்ஒள' - அதாவது பெரிய தாய் என்றும் சொல்கின்றனர். எனவே இவர்கள் தமிழர்களே என்று தைரியமாகக் கூறுவேன்.

இப்பகுதிகளில், வாழ ஒவ்வாத மலை உச்சிகளிலும் காடுகளின் உள்ளேயும் அன்னியர்களின் கண்ணில் படாமல் இன்றுவரை மறைந்து வாழும் ஆதிவாசிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் குறும்பர் எனப்படுவர். இவர்களில் தேன் குறும்பர், வெட்டுக் குறும்பர், பால் குறும்பர், உராளிக் குறும்பர் எனப் பல பிரிவுகள் உண்டு. இவர்களில் சிலர் இன்றும் பாறையில் வசிக்கின்றனர். ஆனால் நம்மைக் கண்டால் பாறையைப் போல் உருண்டு ஓடி விடுவார்கள்.

கொங்கு நாட்டைக் குறுநில மன்னர்கள் ஆண்ட காலத்தில் குறும்பர்களும் தங்கள் ஊர்களைத் தாங்களே அரசாண்டார்கள் என்பதையும், அக் காலத்தில் அரசாண்ட தொண்டைமான் சக்கரவர்த்தி இக் குறும்பர், கண்டர், கடம்பர் கூட்டத்தார்களை வென்று அத் தொண்டைமண்டலத்தை இருபத்துநாலு கோட்டங்களாகப் பிரித்து அரசாண்டார் என்பதையும் பல சாசனங்களும் சரித்திரங்களும் கூறுகின்றன.

குறும்பர்கள் நடனப் பாட்டுப் பாடும்போது, சில பாடல்களைக் கவனித்த நான் அவர்களின் பல பாடல்களைத் திருத்தி அமைத்து ஒன்று சேர்த்தபின் அவை ''கலிங்கத்துப் பரணி''யில் 520 - 522ம் பாடல்களை ஒத்தவை என்று தெரிந்து கொண்டேன். மேலும் மலைச் சரிவுகளில் உள்ள நிலங்களின் உரிமைகள் இன்றும் மலைவாழ் மக்களுடையது என்றும், குறும்பர்களுடையது என்றும் தெரிகிறது. இன்றுவரையில் அந்த ஆதிவாசிகள் தங்கள் நிலங்களுக்கு எந்த விதமான வரியும் அரசாங்கத்துக்குச் செலுத்துவதில்லை. மேலும், தொண்டை மண்டலத்தில் 'குறும்பர் நாடு' இருப்பதாலும் ஆரணியில் (வ. ஆ.) குறும்பர்களின் கோட்டைகள் இருந்த இடம் மண் மேடாக இருப்பதாலும் சென்னை – வட திருமுல்லை வாயிலில் தொண்டைமான் குறும்பர்களால் போரில் தோல்வியடைந்தான் என்பன போன்ற பல விவரங்களுக்கு ஆதாரங்கள் இருப்பதாலும் இவர்கள் பல்லவர்களுக்கு முற்பட்ட தமிழகத்தின் தமிழர்களே என்று சொல்லலாம்.

இந்தக் கொங்கு நாட்டு ஆதிவாசிகளில் இருளர் ஒருவர். இவர்கள் தூங்கு என்பதை 'ஒறங்கு' என்றும், உரல், உலக்கை என்பவைகளை 'ரல்' 'லக்கேத் தண்டு' என்றும், கூப்பிடு என்பதை 'லே' என்றும், இறங்கு என்பதை 'ருங்கு' என்றும் ''லேத்துவா'' என்றும் சொல்கின்றனர்.

மேலும் இருண்ட காட்டில் வாழ்வதால் 'இருளர்' என்ற தமிழ்ப் பெயரே இவர்களுக்கு வழங்குகிறது. இவர்களின் மொழியை ஒத்திருக்கும் மற்ற மொழி பேசும் ஆதிவாசிகளும், மலைவாசிகளும் இக் கொங்கு நாட்டின் பழந் தமிழ் மக்களே. இருளரின் ஊர்களில் ஐந்து பேர் பட்டம் பெற்ற ஊர் நிர்வாகஸ்தர்களாக இருப்பார்கள். இவர்களின் மூலம் கிராம நிர்வாகம் செய்யும் பழக்கம் 'ராஜ ராஜ சோழன்' காலத்துச் சாசனங்களில் காணப்படும் 'பஞ்சவாரியா' ஏற்பாடு போன்றதெனத் துணிந்து கூறலாம்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை செய்யுங்கால் நீலகிரி மலையில் தன் சேனையுடன் 'பாடி' தங்கினன் என்றும், செல்வதற்கு முன் பறைசாற்றலே அது ஒற்றர்களின் மூலம் பரவியதென்றும் சிலப்பதிகாரம் காட்சிக் காதையில் உள்ளது. அந்த இடம் இன்றும் இங்கு 'சேரம்பாடி' என்று அழைக்கப்படுகிறது.

கோத்தர்களின் ஊராகிய 'கோகால்'லில் பல நாட்கள் தங்கியபோது பல இடங்களைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்பொழுது 'சேரம்பாடி' என்னும் ஊரையும் பார்க்கும்படி நேர்ந்தது. 'சேரன் பாடி' அல்லது 'சேரன் படை வீடு' என்னும் சொல்லிலிருந்து இது மருவி யிருக்கலாம்.

சேரம்பாடி, வயநாடு, ஆனைமலை, நீலகிரி முதலிய இடங்களில் வாழும் ஆதிவாசிகள் அனைவரும் தாங்கள் வாழுமிடங்களைப் 'பாடி' என்றே அழைக்கின்றனர். மேலும் குறும்பரின் ஓர் ஊருக்குப் பெயர் 'நெடுங்கல் கோம்பை' என்பது. பக்கச் சுவர்கள் இல்லாது நடுக் கொம்பைக் கொண்டு குடிசை கட்டுவதாலோ, முற்காலத்தில் தமிழ் வீரர்களும் வேந்தர்களும் தங்கள் வெற்றிக்கு நினைவுச் சின்னமாக நடும் கல்லை ஒட்டியோ இப்பெயர் உதயமானதோ என்னவோ? அல்லது சேரன் செங்குட்டுவனால் நடப்பட்ட கல்லின் ஊர் எனவும் சொல்லலாம். ஏனென்றால் 'ஓவேலி' என்னும் நீலகிரியின் தென் கோடியில் உள்ள காப்பித் தோட்டத்தின் அருகில் 'வீரக்கல்' என்னும் ஒரு குறும்பர்-இருளர் ஊரும், அதன் அருகில் 'எழுத்துக்கல்' என்ற பழமையான எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு சின்னமும் இன்றும் உள்ளன.



கும்பச் செம்பில் வருகுளிர் புனலைக்
குந்தியிருந்தாடித் தொந்தி நனைத்தாரக்
குளித்திருக்கும் பிள்ளையாரே
—போட்டோ: என். ராமகிருஷ்ணா


'கல்தாறு' என்னும் காப்பித் தோட்டத்தை அடுத்துள்ள ஒரு மலைக்குச் செங்கோட்டை ராயன்மலை என்று பெயர் உள்ளது. 'செங்குட்டுவராயன் மலை' என்பதே இப்படித் திரிந்திருக்கலாம்.

மேலும் சங்க கால நூல்களில் வரும் சில பாக்களின் பெயர்கள் இங்கும் இருக்கின்றன. 'கொல்லி மலை' என்ற கோத்தர்களின் ஊர் ஒன்று இன்றும் இருக்கிறது. இங்குள்ள ஒரு காப்பித் தோட்டத்தைக் கோட்டைக் கல் தோட்டம் என்பர். அந்த இடத்தில் சேரனால் கட்டப்பட்ட ஒரு கற்கோட்டையின் சிதைவுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.


பல ஆதிவாசிகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்ததால் திராவிடமொழிகள் வேறுபட்டுக் காணப்பட்டாலும், தமிழின் திரிபு கலந்த அடிப்படையே மலைவாசிகளின் மொழிகள் என்று துணிந்தேன்.

இது போன்று மலைவாழ் மக்களின் பல ஊர்களைப் பற்றிய விஷயங்களையும், அவர்களின் மொழிகளில் உள்ள சுமார் ஐந்நூறு வார்த்தைகளையும் ஆராய்ந்துள்ளேன். இங்ஙனம் பல சரித்திரச் சிந்தனைகளையும், சங்க கால நூல்களையும், பல மலைவாழ் மக்களின் மொழிகளையும் சில கல்வெட்டுக்களையும் வரலாற்று நூலையும் கொண்டு செய்த ஆராய்ச்சியின் முடிவையே இந்தக் கட்டுரையாக எழுதப் புகுந்தேன்.

தொன்றுதொட்டு இம்மலை தமிழர்களின் தாயகமாய் இருந்திருக்கிறது என்பதற்கு இன்னும் எவ்வளவு சான்றுகள் மறைந்து கொண்டு இருக்கின்றனவோ?



''பாதாமி''
வாதாபிகலை மடல்
மணியம்




வாதாபி கலை மடல்
கல்கி தீபாவளி மலர்
மணியம்


வாதாபி கலைமடல்
மணியம்
கல்கி தீபாவளி மலர் 1961

Photographers! Go Gay, Shoot COLOUR



with
AGFACOLOR
Reversal
Film

JUST ARRIVED—World-famous Agfacolor Reversal Film to give you true-to-life sparkling colour transparencies for straight viewing or fascinating projection. Just load an Agfacolor film into your camera and shoot...Shoot everything from the scenic beauty of Kashmir to the colourful festivities of Kerala, the picturesque harbour of Bombay to the verdant plantations of Assam. With Agfacolor film it is simply superb, superbly simple. Available in B2/8 (120), 35 mm/20 exp. and 35 mm/36 exp. sizes, with full instructions enclosed. For processing, post your films to Agfa India Limited, 31, Chittaranjan Avenue, Calcutta–12.



Agfacolor

SOLE DISTRIBUTORS: **AGFA INDIA LIMITED**

BOMBAY · NEW DELHI · CALCUTTA · MADRAS.

AICB. 3

சந்திப்பு



'அது' வந்ததிலிருந்தே, அந்த மலைக்காட்டுக் காலனியில், பெண்களுக்கெல்லாம் மத்தியானப் பொழுது விறுவிறுப்பாய்ப் போய்க் கொண்டிருந்தது. பகல் இரண்டு மணிக்கு ஐயாமார்களெல்லாம் சாப்பிட்டு விட்டு அலுவலகங்களுக்குச் சென்று விட்டால், வரிசை வீடுகளின் முன் வண்ணச் சேலைகள் கொத்துக் கொத்தாகத் தெரியும். அநேகமாக 'அது' என்று அவர்கள் அஃறிணையில் குறிப்பிடும் சிங்கி அங்கு வந்து நிற்பாள். யார் வீட்டிலேனும் மாவரைக்கவோ, மிளகாய் இடிக்கவோ, துணி துவைக்கவோ வந்திருப்பாள். 'சிங்கி' என்ற சொந்தப் பெயர் தவிர அவளுக்கு எத்தனையோ பட்டப் பெயர்களெல்லாம் இருந்தன.

''ஏண்டி, சிங்காரி? சின்னம்மா சின்னம்மா என்கிறாயே! அவள் உன் அப்பாவுக்கு ரெண்டாந்தாரமா, அம்மாளுக்குத் தங்கச்சியா?''

சிங்கியின் முகத்திலே சிரிப்பே காண முடியாது; ஆனால் சிடுசிடுப்பும் கிடையாது. அவளுக்கு எத்தனை வயசிருக்கும் என்பதையும் ஒருவராலும் கணிக்க முடியாது. கூழை பாய்ந்த தலையை வாரி விடாமல் கட்டிக்கொண்டு, ஒரு கந்தல் புடவையுடன் பிரசன்னமாவாள். வளர்ச்சியில்லாத உடலில்லை. ஆனால் முகம் மட்டும், வளராமல் முற்றிவிட்ட மாதிரி தோன்றும்.

''சின்னம்மாதாம்மா......'' என்று கூறினாள் தலை நிமிர்ந்து பார்க்காமலே.

''உங்கையாவுக்கு ரெண்டாந்தாரமா?''

''ஆமாம்...''

''அம்மாவுக்குத் தங்கச்சியா என்று கேள், நீலா. அதற்கும் ஆமாமென்றுதான் தலையாட்டுவாள்!'' என்றாள் மாலதி.

''ஏண்டி, அப்படியா?'' என்றாள் நீலா.

''ஆமாம்மா, ஆமான்றேனே, அதான்..''

''அடேயப்பாடி, கோபம் பொத்துக் கொண்டு வருது பாருங்களேன்?''

'' கோபம் என்னத்துக்கம்மா வருது? கோபமேயில்லே, ஒண்ணுமில்லே'' என்றாள் சிங்கி.

''உனக்கு எத்தினி வயசடி ஆகிறது?''

இது ருக்குவின் கவலை.

''பதிமூணு வயசு.''

கொல்லென்று சிரிப்பொலி பரவியது.

''நீ நாசமாய்ப் போனே! உனக்குப் பதிமூணு வயசுதான் இருக்குமாடி? ஏண்டி?'' என்று கேட்டாள் குஞ்சம்மா மாமி.

''அப்படித்தான் சொல்லிட்டாங்கம்மா..''

இந்த மாதிரி அசட்டுக் கேள்விகள் கேட்காதீர்கள் என்று சொல்லும் பாவம் குரலில் மேலோங்கி இருந்தது.

''யாரு சொல்லிட்டாங்க, உனக்குப் பதிமூணு வயசுதான்னு?''

''எங்க பாட்டிதான்!''

''யாரு, உங்க சின்னம்மால்ல இங்கே இருக்கிறாங்க? அவ பாட்டியாயிட்டாளா இப்ப....''

''பாட்டி செத்துப் போச்சி....''

''பாட்டி செத்துப் போனப்ப உனக்குப் பதிமூணு வயசா?'' என்று கேட்டாள் நீலா.

''ஆமாங்கம்மா.....''

''சரி, பாட்டி எப்ப செத்துப் போனான்னு கேளு, வயசைக் கணக்குப் பண்ண!'' என்று மாலதி சிரித்தாள்.

''பதிமூணு வயசானப்ப என்பாள்!''

''இந்தச் சின்னம்மா ஒரு சித்திராங்கி. ஏண்டி! சின்னம்மாகிட்ட உழைச்ச காசெல்லாம் கொடுக்கிறேன்னுதியே? சின்னம்மா உனக்கு ஒரு நல்ல சேலை எடுத்துக் கொடுக்கக்கூடாதா?''

''அதாம்மா, சின்னம்மாகிட்ட, ஜாக்கெட் சேலை எல்லாம் எடுத்துத் தான்னேன். தீவாளி வருதே; நீ வேலை செய்யிற வீட்டிலெல்லாம் கேளுன்றாங்க. ஏம்மா? எடுத்துத் தரமாட்டீங்க?''

''அசடு அசடுன்னீங்களே, அசட்டைப் பார்த்தீங்களாடி? நம்ம தலையிலேயன்னு கையை வைக்கிறா!''

''அதானே நானும் கேட்கிறேன்! பாருங்கள் காலம் நல்லதற்கில்லே.''

''யார் அசடு, இவளா? பத்துப் பேரை இவள் அசடாக்குவாள். அன்றைக்கு மாவிடிக்க வந்தாளா? மா இடித்துக் கொடுத்ததும் ஒரு துணி கொடம்மான்னு கேட்டது. கொடுத்தேன். அடுத்த நாள், அரிசியிலே கல் பொறுக்கிக் கொடுத்திட்டு, அண்டாவைத் தேய்த்து வைன்னு கூப்பிட்டால், 'துணி கொடுக்கிறயாம்மா?' என்றாள். எப்படி இருக்கிறது, அசடாவது?''

''இப்ப எல்லாம் கத்துக்கிட்டது. சின்னம்மாதான் காசு வாங்கிட்டு வா, காசு வாங்கிட்டு வான்னு சொல்லிக் கொடுக்கிறாளே?''

'அசடு', தீபாவளிச் சேலையைப் பேச்சுவாக்கில் நழுவ விடவில்லை.



ராஜம் கிருஷ்ணன்

''இந்தம்மாதான் தீபாவளிக்குச் சேலே எடுத்துத் தரும்'' என்றுள், நீலாவைக் காட்டி.

நீலா தூக்கிவாரிப் போட்டாற் போல் நிமிர்ந்தாள். ''ஏண்டி, எங்க வீட்டிலே நீ வேலே புரட்டுவது பாழாய்ப் போகுதா? நான் இப்பத்தானேடி நல்ல சேலே ஒண்ணு உனக்குக் கொடுத்தேன். பத்து நாளாகலே!''

''எல்லாரையும் விட நீலாம்மா தான் நல்லவங்களாம். உனக்கு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறுள் அவள்'' என்றுள் மாலதி.

''நீ அவளுக்கு ரோக்கு ரோக்காக நாலணு எட்டணுன்னு சில்லறையாகவும், சோருகவும் தூக்கிக் கொடுத்து வழக்கம் பண்ணுகிறுய், நீலா!'' என்று குஞ்சம்மா மாமி, புதுக்குடித்தனம் செய்ய வந்திருக்கும் நீலாவைக் குற்றம் சாட்டினுள்.

''இல்லே மாமி. அப்படியெல்லாம் இல்லே!''

''இதுகளுக் கெல்லாம் ஐயோ பாவம்ன்னே இரங்கக் கூடாது. இரங்கினுல் தலேக்கு மேல் ஏறி விடும். சொன்னதையே கேட்காது!''

''போகட்டும், இப்ப ஒரு வேடிக்கை பார், மாதூ....!'' என்று ருக்கு புதிதான பாதையில் அவள் வாயைக் கிளறினுள்.

''ஏண்டி, சின்னம்மாகிட்ட என் இடிபடுறே? வயசோ பதிமூணுதான் ஆகிறது. உங்க நீலாம்மாவுக்கும் மத்தியானம் பொழுது போகலே. ஜம்முனு படிக்கக் கத்துக்கிடேன்?''

''நான் இஸ்கோல் போயிருக்கேம்மா'' என்றுள் சிங்கி. வெண்டை நெற்றின் நீளவு வரும் முகத்தில் கண்கள் ஒளிர்ந்தன.

''நீயா? அடி சக்கை! எந்தக் கான்வெண்டிலடி படிச்சே....?''

''....நெம்மூர்லே...''

''உங்கூர் எது? உனக்கு ஊர் வேறு இருக்குதா?''

''மைசூர் பக்கம். ஆலன் போயி...போகணும்.''

''எத்தனுவது படிச்சிருக்கே?''

''எட்டாவது வரையில் படிச்சிருக்கேன்.''

அவளே ரஸித்துக் கிண்டிய கும்பல் அதைக் கேட்டு மலேத்துப் போய் நின்றது.

''நிசமாகவா? ஏண்டி, எட்டாவது படிச்சப்புறமா இத்தனே புத்திசாலியா நீ திண்டாடுறே?''

''ஆமாம்...''

''இதற்கு ஒரு 'ஆமாம்' வேறே கேடு. இங்கிலீசெல்லாம் தெரியுமாடி?''

ருக்கு அவளுடைய கல்வித்திறமையைக் கையோடு பரீட்சை செய்துதான் தீருவது என்ற எண்ணத்துடன் ஓடோடிச் சென்று வீட்டினுள்ளிருந்து, கையில் அகப்பட்ட தமிழ்ப்பத்திரிகை ஒன்றை எடுத்துவந்தாள்.

''பிச்சு ! இது என்ன என்று படி, பார்க்கலாம்!''

சிங்கி உடலே ஒரு நெளிநெளித்தாள். வாய் ஒருபுறமாகக் கோணியது.

''ஆ...இது... இது இங்கிலீசு. இங்கிலீசெல்லாம் நம்மளுக்குத்தெரியாது.''

''போதுமே! நீ ஒருத்தி !... இவளும் நானும் படிக்கக் கிழிச்சோம்!''

உண்மையில் அசட்டுச் சிங்கி எட்டாவதுபடித்





இருக்கும் சங்கதி அந்தச் சில நிமிஷங்களுக்குள் குஞ்சம்மா மாமியைப் பொறுமைக்கு ஆளாக்கி வதைத்துக் கொண்டிருந்தது. நல்ல வேளையாக இப்போது பெருமூச்சு விட்டாள்.

''ஒரு வேளை கன்னடம் படித்திருப்பாள். இல்லையாடி? கன்னடத்தில்தானே எட்டாவது படிச்சே?''

சிங்கிக்குக் கோபம் வந்து விட்டது.

''ஆமாம் ..... சும்மா ..... சும்மா என்னம்மா? மாவிடிக்கணும்னு சொன்னியே! போட்டிருக்கியா?''

''அப்பப்பா! நட்சத்திரையன் தங்கையடி நீ! வந்து தொலே!'' என்று குஞ்சம்மா மாமி எழுந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் நாலாவது வீட்டில் 'டங் டங்'கென்று உலக்கைச் சத்தம் கேட்கலாயிற்று.

''என்னவானாலும் வேலைக்காரி கிடைக்காத இந்த அத்துவானத்தில், மிஷினும் இல்லாத தொல்லை பிடிச்ச ஊரிலே, என்னமாய் மாவு இடிக்கிறது என்கிறீர்கள்! மிளகாயும் மஞ்சளும்கூட இடிச்சுத் தொலைக்கிறது. நமக்கும் வேண்டியிருக்கிறதே!''

''அதைச் சொல்லுங்க முதலில். தீபாவளிக்குப் போன வருஷம் ஒரே திண்டாட்டம். மிஷினுக்குப் போக அரிசியையும் பருப்பையும் தூக்கிக் கொண்டு பஸ்ஸிலே இருபது மைல் போக முடியுமா? கடையில் மாவு கசந்து வழிகிறது. கொடுத்ததை வாங்கிக் கொண்டு போகிறது... அச்சுப் பிச்சு.''

''நமக்கு அதுதானே வேணும்?''

''ஆனாலும் பார்க்க என்னமோ மாதிரியிருந்தாலும், உடம்பு கல்லோ, காங்கிரீட்டோ! ஒரே நாளிலே உங்க வீட்டிலே, மேல் வீட்டிலே, கீழ் வீட்டிலே எல்லா இடங்களிலும் அரைக்க, இடிக்க ஒப்புக் கொள்கிறது. நம்மால் உலக்கை போட முடிகிறதா?'' என்று ருக்கு வியந்தாள்.

''ஐயோ, நீ கண்ணை வைத்து விடாதே ருக்கு. இந்த இரண்டு மூன்று வருஷமா இப்படி ஒரு ஆள் கிடைக்காமல் அவஸ்தைப் பட்டோமே!....நல்ல வேளையாக எங்கிருந்தோ வந்து சேர்ந்திருக்கிறது......'' என்று கூறினாள் மாலதி.

மூன்று மணிக்கு நீலாவுக்குக் காப்பி போட வேண்டும். எனவே அவள் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு போனாள்.

''அம்மா!''

சமையலறைக் கதவைக் கூடத் திறக்கவில்லை. ''யாரது?''

''யார்?...யார்? என் கண்களையே நம்ப முடியவில்லையே! வித்தனா! வித்தன்தானா?''

''ஆமாம்மா..'' என்று வித்தன் சிரித்தான். ஆறு வருஷங்களுக்கு முன் அவள் பார்த்த அதே வித்தன்....

''ஒரு தலைமயிர் கூட வெள்ளையாக ஆகவில்லையே, வித்தா! அப்பாவுக்குத் தலை முழுதும் வழுக்கையாகி விட்டதே...!''

''ஆமாம்மா. நேத்தே ஊட்டியிலே பார்த்தேன்...''

''எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மைசூரில் தான் இருக்கிறாயா?''

''ஆமாம்மா. மைசூரும் மெட்ராஸும் பிரிய நப்பப் போனேனே, அது தான்....'''

''உன்னைப் பற்றி அம்மா ஒரு நாளாவும் பேசாமலிருந்ததில்லை. வீட்டில் ஒருத்தனைப் பழகிட்டு, கடைசியில் எங்க கன்னட தேசம்னு ஓடிட்டியே!..''

''உங்க கல்யாணத்துக்குன்னாலும் வரணும்னு நினைச்சேங்கம்மா. முடியலே...''

''போகிறது. இப்ப வந்தாயே. இப்ப, மைசூரில் இருக்கிறயே, கிராமத்திலே உன் சம்சாரம், குடும்பம் எல்லாம் இருக்கிறதா? இப்ப மூணு சீட்டு உண்டா?''

'என்னம்மா, இப்படி மானத்தை வாங்குறியே' என்று கேட்பதைப் போல் வித்தன் நாணித் தலை குனிந்தான். இதழ்களில் ஒரு சிரிப்பு. வித்தனுக்கு முன் வரிசைப் பற்கள் இரண்டு கிடையாது. அதே சிரிப்பு, அதே வித்தன்.

''நீ வழக்கம் போல், ஒட்டலில சாப்பிடுகிறாயா, இல்லாட்டி...?''

''ஆமாங்கம்மா. தனியேதாம்மா இருக்கிறேன்.''

''ஏன் சம்சாரம் வரவில்லை? பெண் இப்போ வளர்ந்திருப்பாளே.''

''ஆமாங்கம்மா.''

''இரு வித்தா. அடுப்புப் பற்ற வைத்துக் காப்பிக்குத் தண்ணீர் வைத்து விட்டு வருகிறேன்!''

வித்தன் முன் ஹால் ரூமில் நின்று கொண்டிருந்தான். நெடிய உருவம். அமைதி தவழும் கண்கள். அகன்ற நெற்றி. கன்னங்கள் மட்டும் சற்றே ஒட்டியிருந்தன. அன்று கண்டாற் போலவே ஷர்ட்டுக்குள் பித்தான் போடாத கோட்டு. துவைத்துச் சுத்தமான வேட்டி....

அவளுடைய தந்தையின் அலுவலகத்தில், உதகையில் ஏழு வருஷங்கள், அவளுக்கு விவரம் புரிந்த நாளிலிருந்து பணி புரிந்தவன் அவன். அலுவலகத்தில், தபால் வாங்கி வருவதும், கொண்டு போவதும் தான் தினசரி வேலை. மீதிப் போதில் வீட்டில்தான் வித்தனைக் காணலாம். அவன் அலுவலக ஆளுமல்ல, வேலைக்காரனும் அல்ல. அந்தக் குடும்பத்தில் ஒருவன் அவன். காலை ஏழு மணிக்கே வீட்டுக்கு வந்து விடுவான்.

'வித்த பந்தானம்மா, வித்த பந்தான' என்று வீட்டின் பெரிய பையன் வெங்கட்டுக்கு அவனை வரவேற்காது போனால் நாளைத் தொடங்கியதாகவே ஆகாது. வெந்நீர் கொதித்துக் கொண்டிருக்கிறதா என்று பார்த்துக் கொள்வதிலிருந்து, சின்னப் பையனைப் பள்ளிக்குக் கொண்டு விடுவது வரை உள்ள எல்லாப் பொறுப்புக்களையும் அவன்தான் நிறைவேற்றுவான்.

''வித்தா, கடையில் சர்க்கரை வந்திருக்கிறதா?'' என்று கேட்கு முன் பையில் நான்கு வீசை சர்க்கரை வந்திருக்கும்.

''இந்தப் பாகற்காயையும் வெண்டைக்காயையும் வைத்துக் கொண்டு இரண்டு நாட்கள் ஓட்டுங்கம்மா! எல்லாம் ரொம்ப விலை'' என்று பையிலிருந்து இரண்டு பாகற்காய்களையும் அரை வீசை வெண்டைக்காயையும் கொட்டுவான்.

''என்ன வித்தா, எனக்கு மாமியாரில்லை என்று நீயே சட்டமிட வந்து விட்டாயா? ஐயாவைத் தவிர ஒரு குஞ்சுக்கு இந்தப் பாகற்காய் பிடிக்காது!''

''ஆமாம்மா, ஐயாவுக்கு மட்டும்னுதான் கொஞ்சமாக வாங்கினேன். பிள்ளைங்களுக்கு வெண்டைக்காய் இருக்கிறதே? அப்பளம் வறுத்துப் போடுங்க. வெள்ளிக்கிழமை வரும் காய்..'' என்பான்.

''ஏ வித்தா, பேனாவுக்கு இங்கி போட்டுத் தா. கொட்டுறதுன்னேனே?'' என்று சீனு வருவான். சின்ன பாலுவுக்கு வித்தன் நோட்டுத் தைத்துக் கொடுக்க வேண்டியிருக்கும். இல்லையேல் சிலேட்டை உடைத்திருப்பான். தெரியாமல் வித்தன் வாங்கித் தந்து விட்டு அம்மாளிடம் சமாதானம் சொல்ல வேண்டும். ''அந்தத் தோபியை வரச் சொல்லக் கூடாது வித்தா?'' என்று அழுக்கு நிஜாரை உதைந்து எறிந்த வண்ணம் வெங்கட் கத்துவான்.

''இந்த வித்தன் சுத்த மோசம். நூறு தரம் மார்க்கெட் பக்கம் போகிறானே, டெய்லரிடம் என் பாவாடையைத் தைக்கக் கொடுத்து எத்தனை நாளாச்சு?'' என்பாள் நீலாவும் தன் பங்குக்கு.

இத்தனையும் அவளுக்கு வேண்டும். அது அவன் சொந்த வீடு, சொந்த ஐயா, அம்மா, குழந்தைகள். இந்த நல்ல வித்தனிடம் அவளுக்கே உரித்தான சில குணங்கள் உண்டு. திடீரென்று வரமாட்டான்.

வீட்டின் அமைதியான உயிரோட்டம் திடீரென்று ஸ்தம்பித்து, தாறுமாறாகப் போகும். ''ஒரு லீவு லெட்டர் கூடக் கிடையாது, தடியன்!'' என்று அப்பா இரைவார். அலுவலகத் தபாலுக்கு வேறு எவரேனும் போவார்கள். ஆனால், வீட்டில்....

வெந்நீர் சுடாது. அம்மாவுக்குக் கோபம் கோபமாக வரும். வெங்கட் கடைக்குப் போக மாட்டேன் என்று முணுமுணுப்பான். அப்பா காரணமில்லாமலே எல்லோர் மீதும் எரிந்து விழுவார்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பின் வித்தன் வாயிலில் ஓர் ஓரமாக வந்து நிற்பான். தவறு செய்துவிட்டு வந்த நாய் குழைந்து உட்காருவதைப் போல, தலை தொங்கி நிற்பான். அப்பா அவனுடன் பேசமாட்டார்.

''ஏண்டா! இந்த இழவுச் சீட்டை என்றைக்கு விட்டுத் தொலைக்கப் போறே? சம்பளக் காசெல்லாம் கரைச்சாச்சோ, இல்லையோ?'' என்பாள் அம்மா.

ஒரு புன்னகை, குற்றத்தை மறைக்கும் கீற்றுப் போல் நிழலாட, தலை நிமிராமலே நிற்பான். ''எவ்வளவு ரூபாய் போச்சு, எவ்வளவு வந்தது வித்தா?'' என்று வெங்கட் அவன் வாயைக் கிண்டுவான்.

''வருகிறது. அவனுக்கும் எனக்கும்! போ, போ, காப்பியும் இட்டிலியும் வச்சிருக்கேன். கண்ணும் மூஞ்சியும் பார்க்கச் சகிக்கலே. நீ ஒரு போன ஜன்மப் பழி எனக்கு!'' என்று அம்மா அவனை உள்ளே வரவேற்பாள்.

இதற்குப் பிறகு வித்தனிடம் கால் காசு மிச்சமிருக்காது. ஒவ்வொரு மாசத்திலும் நாலைந்து நாட்களைத் தவிர, மற்ற நாட்களிலெல்லாம் வீட்டில்தான் வித்தனுக்குச் சாப்பாடு, காப்பி, எல்லாம். காசு இருக்கும் நாலைந்து நாட்களிலும் உயர்தர ஹோட்டலில் ஒன்றே கால் ரூபாய்ச் சாப்பாடு. சீட்டாட்டம் தவிர, வித்தனுக்குச் சினிமா மோகமும் உண்டு. அம்மாவுக்கும் சினிமாப் பைத்தியம் உண்டாகையால், அதைப்பற்றிக் கவலை இல்லை. சின்னபானு, சீனு இவர்களையெல்லாம் இழுத்துக்கொண்டு வேறு போக வேண்டுமே!



''ஏண்டா, வித்தா! பெண்சாதி என்று ஒருத்தியைக் கட்டிக் கொண்டிருக்கிறாயே, அவளுக்கு ஏதேனும் பத்து இருபது அனுப்ப வேண்டாமா? பெண்ணென்று இருக்கிறதென்கிறாய். நாளைக்கு அதற்கு ஒரு கல்யாணம் கார்த்திகை செய்ய வேண்டாமா?'' என்று அம்மா அவனிடம் கேட்பதுண்டு.

''செய்யணும்மா.''

''என்னத்தைச் செய்யணும்? நீயும் சம்பாதிக்கிறதை எல்லாம் தொலைச்சுட்டு, பத்தாததுக்குக் கடன் வேறு வாங்கறே.''

''ஊரிலே பூமியிருக்குது. பெண்டாட்டி இங்கே வந்து மொதல்லெ இருந்திச்சு. கையிலே காசு கொடுக்கலேன்னு சண்டை போட்டுட்டுப் போயிட்டா. அங்கே பூமியிலே வேலை செய்துக்கிட்டிருக்கும்.''

''சொந்த பூமியா? எவ்வளவு இருக்கும், வித்தா?''

''நாலு ஏக்கர் இருக்கம்மா..''

''ஏ...யப்பாடி! வித்தன் பெரிய மிராசுதார் அப்புறம், வீடிருக்கிறதா, வித்தா?''

''இருக்குதம்மா..''

''மாடு?''

''இருக்குதுங்க...''

''ஆடு?..'' என்றான் சீனு குறும்பாக.

''இருக்குது;வருசத்திலேரெண்டுகம்பளிக்காகும்.''

''ஏண்டா பைத்தியம்! இவ்வளவையும் வச்சுக்கிட்டு ஊரிலே மகாராஜன் போல் சொந்த பூமியில் பாடுபட்டுச் சாப்பிடுவதை விட்டு இங்கே ஏன் வந்து திண்டாடுகிறாய்?''

வித்தன் சிரித்துக் கொண்டே தலையைக் குனிந்து கொள்வான். பேசவே மாட்டான். ஒரு முறை, அவர்கள் வீட்டு விலாசத்துக்கு வித்தனின் அம்மா இறந்து போனதாகத் தந்தி கிடைத்தது. வித்தன் ஊருக்குப் போய் விட்டு வந்தான்.

''சம்சாரத்தை அழைத்து வரதுதானே? குடும்பம், குழந்தை என்று இருந்தால் நீ சீட்டு கீட்டு ஆடுவதை விட்டு ஒழுங்காகவாவது ஆவாயே...''

''மகளைக் கூட்டிக்கிட்டு வரதாத்தானம்மா நினைச்சேன். பாவம், பாட்டி கிட்டவே அது இருந்தது. ரொம்ப அழுவுது...''

''எத்தனை வயசிருக்கும்?''

''பதிமூணு பதினாலு வயசாவுது..''

''பின்னே வந்தால் சோறுக்கிப் போடுமே? வேண்டான்னு வந்திட்டியா?''

வித்தன் எப்போதும் போல, புன்னகை கீற்றிடத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றான்.


''ஏன் அழைச்சிண்டு வரல்லே வித்தா.?''

''வரலேம்மா...''

''சீட்டாடிச் சீட்டாடி உருப்படாமல் போகணுமோ? கவலை என்பதே உனக்குக் கிடையாதா வித்தா? என்ன ஜன்மம்!''

அவனுக்குக் கவலை கிடையாது. கைநிறையக் காசு இருந்தாலும், நாளைச் சாப்பாட்டுக்கு ஒரு பைசா இல்லாத போனாலும் அவன் முகத்தில் அந்தக் கீற்றுப் புன்னகை மாறியதில்லை. ஐயா வீடு, அலுவலகம், மாசச் சம்பளம், சீட்டாட்டம், கடன் வாங்குவது என்று ஓடிய வாழ்க்கை, மூன்று ஸ்தாயியிலும் அலைந்து முழுமையாகும் ஓர் இராகம் போல்தானிருந்தது. கடன் வாங்கும் கலை, அவனுக்கே உரித்தானது.

''சம்பளத்திலே பிடிக்கச் சொல்லுங்கம்மா. ஊரிலே பொண்ணுக்குச் சீக்காம். தம்பி காயிதம் எழுதியிருக்கிறான்...'' என்று எதையோ சொல்லி வருவான்.


Coffee
ours for quality
RAW
ROAST
OR
GROUND
GANESH & Co
(MADRAS) PRIVATE LTD.
Retail Branches
285, China Bazar Road, MADRAS-1
71, Pondy Bazar, T. NAGAR, MADRAS-17

''நீ ஒரு பழி. இந்தத் தடவை மட்டும் நீ சீட்டாடி விட்டு வந்தே, இந்தப் படி ஏறி அம்மான்னு நிற்க வேண்டாம்'' என்று திட்டிக் கொண்டே ரூபாயைக் கொண்டு வந்து கொடுப்பாள். சீட்டாடப் போய் இருக்க மாட்டான். எங்கேனும் க்ஷேத்திராடனம் போய் விடுவான்.

மொட்டைத் தலையும், பழனி விபூதியும், பஞ்சாமிருத டப்பாவுமாக அவன் வாசலில் ஓர் ஓரம் வந்து நிற்கும் காட்சி நீலாவுக்குக் கண்முன் நின்றது.

''வித்த பந்தானம்ம. வித்த பந்தான....'' என்று வெங்கட் பாட ஆரம்பித்தான்.

''இங்கே எதற்கு வந்தான் இவன்? ஒரு லீவு லெட்டர், ஒரு எழவு கிடையாது. ஆபீஸான்னு நினைச்சானு, என்னன்னு நினைச்சான்? சீட்டுக் கொடுத்தாச்சுன்னு சொல்லு'' என்று அப்பா கத்தினார்.

''இந்தப் பஞ்சாமிருதம் லஞ்சமில்லே. போகச் சொல்லடி நீலா!'' என்று அம்மா விரட்டினாள்.

அவன் போக மாட்டான். ''இந்தாம்மா, நீலா வாங்கிட்டுப் போ. திருநீறு இந்தா '' என்று கொடுத்து விட்டு ஜரூராக ஆபீஸுக்குப் போனான். பழையபடி பழியாய் வாசலில் வந்து நின்றான். அம்மாவின் வைராக்கியமும் அதற்கு மேல் நீடிக்குமா என்ன?

கடன் வாங்கினாலும், சீட்டாடினாலும் அவன் நாணயத்துக்கு அப்பழுக்குச் சொல்ல முடியாது. பாங்கியில் பணம் கட்டுவது, இன்ஷ்யூரன்ஸ் அனுப்புவது, பள்ளிக்கூடச் சம்பளம் கொடுப்பது, கடைக் கணக்குத் தீர்ப்பது, எல்லாமே அவன் பொறுப்புத்தான். ஆயிரம் ரூபாயானாலும் அவன் சொல்லாமல் கொள்ளாமல் அரைக் காசும் பொறுப்பில்லாமல் தன்னுடையதாக எடுத்துவிட மாட்டான்.

அப்படி அவர்கள் குடும்பத்தில் உயிராய், உறவாய் ஒட்டிய வித்தன், எதிர்பாராதவிதமாகப் போக நிச்சயித்தான். அப்படி ஒரு காலம் வருமென்று எவரும் நினைக்கவில்லை. நீலாவின் தந்தை அலுவலகத்திலிருந்து ஓய்வுபெற்று விட்டார். புதிதாக வந்த அதிகாரி கெடுபிடிக்காரர். வித்தனால் இரட்டை வாழ்வு வாழ முடியவில்லை. ராஜ்யப் பிரிவினையைச் சாக்காக வைத்துக் கொண்டு மைசூருக்கு மாறி விட்டான்.

''வீட்டிலே ஒருவனைப் பழிவிட்டுப் போகிறாயே, வித்தா? இன்னும் அஞ்சாறு வருஷ வேலைதானே? இங்கேயே இருந்து விடேன்'' என்று அம்மா கெஞ்சாமல் கெஞ்சினாள்.

வித்தனுக்குக் கண்கள் பளபளத்தன. ''இந்த வீடு எனக்குப் போச்சு. அம்மாபோல இருந்தீங்க. எனக்குப் போச்சம்மா...'' என்று கும்பிட்டு விட்டுத் திரும்பியே பாராமல் அந்த வீட்டை விட்டுப் போனான்.

அடுப்பு விசிற விசிற, விசிறிதான் சத்தமிட்டதே ஒழிய, கரி பிடிக்கவில்லை! சட்...!

நீலா காப்பிக் கெட்டிலைப் போட்டு விட்டு மறுபடியும் வெளியே வந்தாள்.

''வித்தா! பின்சின் வாங்கியாச்சா? அதுதான் வந்து விட்டாயா?''

''இல்லேம்மா, ஒரு வருசம் இருக்குது அம்மா...''

''இப்ப பின்னே எங்கே வந்தே? மகளுக்குக் கல்யாணமாச்சா?''

''ஒத்தையிலே தங்கச்சி இருக்குதுங்கம்மா. அங்கதான் மகளும் ரெண்டு வருசமா இருக்குது...அதைப் பார்க்கத்தான் இப்ப வந்தேன். அதுக்கு ஒரு கலியாணம் கட்டினால் கவலையில்லாம விருக்கும்....''

வித்தனுக்கும் கவலை யுண்டா?

வாசலில், ''அம்மா!'' என்ற குரல் கேட்டது.

''ஓ, வந்து விட்டாயா? நேரமாகிவிட்டதே தெரியவில்லை. பின்புறம் போ. முற்றத்தில் பாத்திரம் போடுகிறேன்!''

நீலா உள்ளே சென்று பாத்திரங்களைப் பின் முற்றத்தில் எடுத்துப் போட்டாள்.

''மா இடிச்சாச்சாடி?''

சிங்கிக்கு முகத்தில் ஒரே சிரிப்பு. ''இதோ பாரு!'' என்று ஓரணாக் காசைக் காண்பித்தாள்.

''எத்தனை மா இடிச்சே?''

''மூணு படி போட்டாங்க. பலகாரம் சுட்டுத் தரேன்னாங்க.''

''ஏண்டி, மக்கு! மூணு படிக்கா ஓரணா?''

''இதுதான் குடுத்தாங்க. புளி சீயக்காய் போடு அம்மா.''

''ஏண்டி! நான் நல்ல சேலை ஒண்ணு கொடுத்தேனே, அதைக் கட்டிக்கக் கூடாது? சல்லடைக்கண்ணாய் இந்தக் கந்தலையே திரும்பத் திரும்பக் கட்டிக்கிட்டு நிற்கிறாய், சகிக்கலியே.''

''அதைச் சின்னம்மா கட்டிக்கிச்சு..''

''என்ன சின்னம்மாவோ, கண்ணறாவியோ! உன் கந்தலும், பேச்சும், உன் உழைப்பும் கண்டால் சகிக்கலே. ஏண்டி சிங்கி இப்படி இருக்கிறே? உன்னைப் பெத்தவங்க, உன்னோடு பிறந்தவங்கன்னு யாரும் இல்லையா?''

"நெம்மப்பா மைசூரிலே டபேதாரா இருக்குது. ஆனா அது காசு கொடுக்காது. ஊருக்கே வராது...''

''அம்மா?''

''அம்மா ஓடிப் போச்சு.''

''எங்கே?''

''அது எங்கேயோ? வேறொரு ஆம்பிளைகூட ஓடிச்சாம். பாட்டி சொல்லிச்சு.''

''பின்னே இந்தச் சின்னம்மா?''

''இவங்க சின்னம்மாதான். அதான் அப்பாவன்னு சொல்லிச்சு.''

''அப்பாவன்னு சொன்னானா? உனக்கு உறவில்லையா? ஆனால்...''

''கம்மலு செயினெல்லாம் வாங்கிட்டு, புருசன் என்னை விட்டு ஓடிப் போயிட்டுதா; அப்ப இவங்கதான் சின்னம்மான்னு சொல்லிட்டுக் கூட்டிட்டு வந்தாங்க. இந்தச் சின்னம்மாவை நான் அது முட்டும் பார்த்ததில்லே....''

''என்னடி சிங்கி, புதிசு புதிசாகச் சமாசாரம் உளறுப்புறே? புருசனா? உனக்குக் கலியாணம் ஆயிட்டுதா?''

''ஊம்...! தாலி கீலி இல்லே. கங்கணம் இல்லே. ஊட்டிலேந்து ஓடி வந்துட்டேன். அதெல்லாம் கொண்டு போய்க் கொடுத்துக்கிட்டுக் காசு வாங்கி வர்றேன்; கடை வைக்கலாம்னு சொல்லிச்சு, ஓடிட்டது. அம்மா, சின்னப் பிள்ளையிலே ஓடிப் போச்சு. அது போல இவனும் ஓடிட்டான். ஊருக்குப் போகக் காசு இல்லே. ரோட் வேலை செஞ்சேன். அப்புறம் சின்னம்மா பார்த்திச்சு.''

''ஓடாய் உழைக்கும், அசடு என்று பார்த்ததுமே கண்டிருப்பான். கஷ்டம்! உன்னை ஒருத்தி பெற்றுத் தொலைத்திருக்க வேண்டாம். காப்பி பில்டரைக் கழுவிக் கொடு. தண்ணீர் கொதிக்கிறது..''

''யாரம்மா அது? நிம்ஹூர்க்காரரா?''

''ஆமாம். சட்டுப் புட்டென்று தேய்...''

சற்றைக்கெல்லாம் நீலா காப்பி டம்ளர் சகிதம் முன்பக்கம் வந்தாள்.

''காப்பியெல்லாம் வேண்டாம்மா, உங்களைப் பார்க்கணும்னு வந்தேன். வரேன்.''

''ஏன் வேண்டாம்? அம்மா வீடு போல்தான் இதுவும். உன்னைப் பார்த்ததே எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது வித்தா...!''

''மாப்பிள்ளை ஐயா இப்ப வருவாங்களா?''

''இப்ப காப்பிக்கு ஆள்தான் வருவான். இரேன், அவரைப் பார்க்காமலே போகப் போகிறாயா, என்ன?''

வித்தன் பதில் பேசவில்லை. தலையைக் குனிந்து கொண்டு ஓர் அரைச் சிரிப்புச் சிரித்தான். காப்பியை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

"டம்ளரை நீ கழுவ வேண்டாம் வித்தா, இங்கேயே வைத்து விடு."

வித்தன் டம்ளரை மூலையில் வைத்தான். "நான் போயிட்டு மாப்பிள்ளை ஐயாவைப் பார்க்க அப்புறமா வரேம்மா..." என்றான்.

அவன் மூக்குச் சிவந்து கண்கள் கசிந்திருந்ததை அப்போதுதான் நீலா கவனித்தாள்.

மகள் கல்யாண மென்றால், நல்லதாக ஒரு சேலை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று நீலா நினைத்துக் கொண்டாள்.

அவன் பின்பு வருவதாகச் சொன்னபடி திரும்பி வரவில்லை.

காலை ஒன்பதுக்கே குஞ்சம்மா மாமி வந்தாள்.

"நீலா! அது வந்ததா?"

"இன்றைக்குக் காணோம். நேற்று அரிசி இடித்திருக்கிறது. உடம்பு சரியில்லையோ, என்னவோ?"

"உடம்புமில்லை மண்ணாங்கட்டியுமில்லை. மேலே காய்க்கடை போடும் சின்னம்மா, இதுக்கு அம்மா தானாம்! அவள் எப்படியோ புருசனை விட்டு ஓடி வந்து விட்டாளாம். இது ஊரிலிருந்து, எப்படியோ சேர்ந்து இங்கே வந்திருக்கிறது போலிருக்கிறது. இதன் அப்பன் காரன் வந்து , சண்டையோ சண்டை, நேத்து ராத்திரி கூட்டம். சினிமாக் கும்பலெல்லாம் அதை வேடிக்கை பார்த்ததாமே! "

"இதுக்கு அப்பனா?"

"ஆமாம். இன்னிக்கு மிளகாய் இடிக்க வரேன், வறுத்து வைன்னு சொல்லிட்டுப் போச்சே! இப்பத்தான் அப்பனும் அம்மையும் வரவேணுமா? இது எவனையோ நம்பி, ஊரிலேருந்து ஓடி வந்து நகையைக் கொடுத்திட்டு நடுத்தெருவிலே நின்னிருக்கு போலிருக்கிறது. என்னதான் வேண்டான்னு ஓடி வந்தாலும், பெத்தவ யில்லையா? மனசு கேக்கலே. சின்னம்மான்னு சொல்லித் தொலைக்கச் சோறு போட்டிருக்காள்..."

வரிசை வீடுகளில் பெண்கள் கூடி நின்று பேசும் பேச்சில் கலகலப்புக் குறைந்து விட்டது. 'டங்டங்' கென்று மாவிடிக்கும் சத்தம் வரவில்லை.

ஏழெட்டு நாட்களுக்குப் பின் நீலா கணவனுடன் தலைதீபாவளியை முன்னிட்டு, உதகைக்குச் சென்றாள்.

"வித்தன் வந்திருந்தானே, அப்படியே இருக்கிறான், பார்த்தாயாம்மா?" என்று கேட்டாள்.

"அந்த மகராஜனுக்கு வந்த ராங்கியைப் பார்! காசாய், சோறும், வீட்டுப் பிள்ளை என்று நினைத்துக் கொடுத்திருக்கிறேன். எனக்கு ஆறவேயில்லை.


"எங்கோ வழியில் அப்பாவைப் பார்த்தானும். உன்னை அங்கே வந்து பார்த்தானா? இங்கே வீட்டுக்கு வராமல் போயிருக்கிறானடி! என் கை அத்தனைக்குக் கூட ராசி இல்லாமல் போய்விட்டது, பாரேன்! சீனு கூடப் பார்த்தேன் என்றான். ஊருக்கு வந்துவிட்டு... இந்த வித்தன் இப்படிப் போய் விடுவானா என்று நம்பவே முடியவில்லை..."

அம்மாவின் ஆற்றாமைக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்று நீலாவுக்குப் புரியவில்லை.

சிவந்த மூக்கும் கசிந்த விழிகளுமாக, "அப்புறம் வரேம்மா" என்று வித்தன் படியிறங்கிச் சென்று, புள்ளியாய்த் தொலைவில் மறைந்த காட்சி கண்முன் தெரிந்தது. 'நெம்மப்பா. காசு கை கொடுக்காது. மைசூரிலே டபேதாரா இருக்குது...' என்ற குரல் செவிகளில் ஒலித்தது. எத்தனை ஆண்டுகளாகவோ, அவன் வாழ்ந்து வரும் வாழ்வில் புரையோடியுள்ள புண், பச்சை ரணமாக, தலைதாழ்ந்த அந்த அரைச் சிரிப்பினூடே புலனான உண்மையில், நீலாவின் மனிதயம் வேதனை சுமந்த நெடுமூச்சைக் காற்றிலே இறைத்தது.

'அனாஸின்'

நரம்புத் துடிப்பால் ஏற்படும் தீராத தலைவலியைப் போக்குகிறது




தலைவலி ஏற்படுவதற்கு நூற்றுக்கு தொண்ணூறு காரணங்களை உங்களால் யாதென்று சந்தேகிக்கக்கூட முடியாது—உதாரணமாக, முதுகு, கழுத்து, தலை உச்சியிலுள்ள தசைகளில் ஏற்படும் விறைப்புநிலை காரணமாகவும் தலைவலியுண்டாகும். இந்த விறைப்புநிலை, சிறிய இரத்தக் குழாய்களிலும், நரம்புகளிலும் அழுத்தத்தை விளைவித்து வலியை உண்டாக்குகிறது. இந்த வலியின் காரணமாக விறைப்பு நிலையும் நரம்புத் துடிப்பும் அதிகமாகி தலைவலியைக் கடுமையாக்குகிறது.

'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி நான்கு மருந்துகள் சேர்ந்த ஒரு கலவையாகும். ஆகையால் அது ஒரு டாக்டரின் குறிப்புபோல பாதுகாப்பு அளிக்கிறது. 'அனாஸினி'ல் உள்ள விசேஷ மருந்துச் சேர்க்கை நரம்புத் துடிப்பைத் தளர்த்துகிறது, விறைப்பு நிலையிலிருந்து விடுவிக்கிறது. உடனேயே தலைவலியிலிருந்து நிவாரணமளிக்கிறது. 'அனாஸின்' துரிதமாக தீராத தலைவலியை நிறுத்துகிறது. எப்பொழுதும் வீட்டில் 'அனாஸின்' வைத்திருங்கள்.

2 வில்லைகளாக சுகாதார முறையில் ஸெல்லோபேன் தாள்களில் பாக் செய்யப்பட்டும். குடும்ப உபயோகத்திற்காக 32 வில்லைகள் கொண்ட பாட்டில்களில் மோசடிக்கு இடங் கொடாதவாறு ஸீல் செய்யப்பட்டும் கிடைக்கும்.



Registered User: GEOFFREY MANNERS & CO. LTD.



‘என் பிள்ளை’

காட்டுத் தனிமையிலே காட்டும் பரிவினிலே
நாட்டு மனிதரினும் நாட்டம் குறைந்ததிலே
வீட்டும் மதமிருந்தும் (அதை) வீட்டுக் குழந்தையிடம்
காட்டி மிரட்டறியோம் காட்டில் வசித்திடினும்
நீட்டும் துதிக்கையிலே ஊட்டும் உணவினிலே
கூட்டும் பிரியமுடன் காட்டு மரங்களசை
காற்று முழங்கிவர நீட்டிப் பிளிறுகுரல்
காட்டுத் திசையதிர ஆட்டி வளர்த்தனை
தூட்டுப் பிள்ளையிது காட்டுக் குள்ளிருந்துள'(கு)
ஆட்டும் பரமனிடம் (நான்) கேட்டுப் பெற்றதவம்!

—(பெரிய யானை கூறுவதாக)




மகிழ்வூட்டுவதில்
இணையற்றது!
பழங்கால பெருமைகளுக்கு சிறப்புற்றுத் திகழும் இடத்தின் மத்தியிலே நிறுவப் பட்ட, சகல நவீன வசதிகளையும் உடைய இந்த ஹோட்டல் உள்நாட்டு அயல்நாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு மனோ ரம்மியமான வாசஸ்தலம். சேர்த்தியான அறைகள், ருசிமிக்க உணவு, அன்பான உபசரணை முதலியவைகளுக்கு இணை யற்றது. ஒருவர் தங்கும் அறைக்கு ரூ. 25: இருவர் தங்கும் அறைக்கு ரூ. 48. உலகப் புகழ்பெற்ற அஜந்தா, எல்லோரா குகை களைச் சென்று பார்க்க அவுரங்காபாத் ரயில்வேஸ்டேஷனில் இறங்கவேண்டும்.
Aurangabad
Hotel
ரிசர்வேஷன் மற்றும் இதர விவரங்களுக்கும் எழுதவும்
சூப்பர்வைஸர், அவுரங்காபாத்
ஹோட்டல், அவுரங்காபாத்
தந்தி: "Rail Hotel", அவுரங்காபாத்
போன் நெ. 29, அவுரங்காபாத்
அல்லது
டிவிஷனல் சூப்பரின்டெண்ட்
சென்ட்ரல் ரயில்வே, செகந்திராபாத்
(டெக்கான்)
அல்லது
சீப் கமர்ஷியல் சூப்பரின்டெண்ட்
சென்ட்ரல் ரயில்வே, பம்பாய் V. T.



காகித பங்களா

ஏ.எஸ். சுந்தரராஜன்



காட்சி 1

[ஹேர் ஆயில் தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் நுழைகிறான் வேதகிரி. ஷோ ரூமிலிருந்த விற்பனையாளர் அவனை வரவேற்கிறார்.]

விற்பனையாளர்: வாங்க சார்! உங்களுக்கு எந்த 'சைஸ்' பாட்டில் ஹேர் ஆயில் வேணும்?

வேதகிரி: எத்தனை சைஸ் இருக்கு உங்ககிட்டே?

விற்பனை: பதினாறு அவுன்ஸ் கொண்ட பாட்டில், முப்பத்திரண்டு அவுன்ஸ் கொண்ட டின், நாலு காலன் கொண்ட பீப்பாய்........

வேதகிரி: அடேயப்பா! ஹேர் ஆயிலை பீப்பாய்க் கணக்கிலே வாங்கினால் என்ன ஆகிறது குடும்பம்?

விற்பனை: ஒன்னும் கெட்டுப் போயிடாது சார். இது வெறும் ஹேர் ஆயில் மட்டுமல்ல; ஒரு நல்ல டானிக். தலைக்குத் தடவிக் கொண்டது போக மீதித் தைலத்தைச் சமையலுக்கு உபயோகப்படுத்தலாம். இருமல், ஜுரதோஷம், தலைவலி, உடம்பு வலி, எந்த வியாதியாக இருந்தாலும் குணப்படுத்தி விடும் அபூர்வ சக்தி இதற்கு உண்டு.

வேதகிரி: ஆச்சரியமா யிருக்கே!

விற்பனை: இன்னும் கேளுங்கள். பாலைவனத்திலே பசுஞ்சோலையை உண்டாக்குவது எவ்வளவு கஷ்டம் என்பது உங்களுக்குத் தெரியும். அதைவிடக் கஷ்டமான காரியம் என்னவென்றால் வழுக்கைத் தலையில் மீண்டும் கேசம் முளைக்க வைப்பது. ஆனால் எங்கள் கூந்தல் தைலம் ஆறே நாட்களில் ஒருவருடைய வழுக்கைத் தலையில் ஆறடி நீளக் கூந்தலை வளர்த்திருக்கிறது என்றால் இதன் பெருமைக்கு ஈரேழு பதினான்கு லோகத்திலும் ஈடு உண்டோ? அடடே! உங்களுக்குக் கூடத் தலையிலே நரைமயிர் இருக்கு சார்.

வேதகிரி: இருக்கும், இருக்கும். நான் சின்ன வயசிலிருந்தே தலைக்கு எந்த 'பிராண்டு' ஹேர் ஆயில் தடவலாம்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்கேன். அந்தக் கவலையினால்தான் நரை உண்டாகியிருக்கும்.

விற்பனை: இன்னும் எதுக்கு சார், கவலை? அதி அற்புத சஞ்சீவியாக எங்கள் ஹேர் ஆயில் இருக்கும் போது? சின்ன பாட்டில் ஒண்ணு தரட்டுமா?

வேதகிரி: சின்ன பாட்டிலாவது? "பீப்பாய்க் கணக்

வாங்க. உங்க ஹேர்ஆயில் விற்காமல் போய்விடுமோ, என்ன?

விற்பனை: நீங்க சொல்றதும் நல்ல யோசனையாத்தான் படுது!

வேதகிரி: அருமையான யோசனை, சார். யோசிக்காதீங்க. ஒரு ஐம்பதாயிரம் காலண்டர்களுக்கு ஆர்டர் எழுதிக் கொள்ளட்டுமா?

[பூங்கோதை வருகிறாள்]

பூங்கோதை: வணக்கம்! என் பெயர் பூங்கோதை. பிருந்தா காலண்டர் கம்பெனியின் ஏஜண்ட். இந்தவருஷம் நாங்க புதுசா கம்பெனி ஆரம்பிச்சதை முன்னிட்டுக் காலண்டர்களெல்லாம் ரொம்ப மலிவான 'ரேட்டு'களிலே அச்சடிச்சுக் கொடுக்கிறோம். இதோ பாருங்க மாதிரி. ஆயிரம் எழுபத்தைந்து ரூபாய்தான் ஆகுது. ஒரு ஐம்பதாயிரத்துக்காவது நீங்க ஆர்டர் கொடுத்தீங்கன்னு....



விற்பனை: அடடா .... போட்டி போட்டுக் கொண்டு ஒரே சமயத்திலே ரெண்டு பேரும் வந்திருக்கிங்களே.

பூங்கோதை: ரெண்டு பேரா?

விற்பனை: ஆமாம். இதோ உட்கார்ந்திருக்கிறாரே, இவரும் ஒரு ஏஜண்டுதான். நாராயணன் கம்பெனியாம்.

பூங்கோதை: இருக்கலாம். ஆனால் எந்தக் கம்பெனிக்காரர்களாலும் எங்களைப் போல் மலிவான விலையில் காலண்டர்கள் அச்சடித்துத் தரமுடியாது.

வேதகிரி (சிரித்துக் கொண்டு எழுந்து): ஏன் முடியாது? சார்! நாங்க ஆயிரம்,ஐம்பது ரூபாய்க்கு அச்சடித்துத் தருகிறோம் சார்.

பூங்கோதை: அப்போ நாங்க முப்பது ரூபாய்க்குத் தர்ரோம்.

வேதகிரி: விடுவோமா, நாங்க மட்டும் இளைச்சவங்களா என்ன? சார் ஆயிரம் இருபது ரூபா.

பூங்கோதை: நாங்க மட்டும் இளைச்சவங்களா என்ன? சார்! ஆயிரம் பத்து ரூபாய்!

விற்பனை: அடாடாடா...இதென்ன பெரிய தொல்லையாகப் போச்சு?

வேதகிரி: சார்! நான்தானே முதலில் வந்தேன்? அதனாலே எனக்குத்தான் நீங்க ஆர்டர் கொடுக்கணும்.

பூங்கோதை: நான் பின்னாலேதான் வந்தேன்னாலும் நான்தான் முதல்லே உங்களுடைய ஹேர் ஆயிலே வாங்கி உபயோகித்தவள். அதனாலே நீங்க எனக்குத்தான் ஆர்டர் கொடுக்கணும்.

வேதகிரி: எங்கள் கம்பெனி பழைய சார். பேர் போனது.

பூங்கோதை: ஆமாம். அவர்கள் கம்பெனிக்குப் பெயர் போயிட்டுது. ஆனால் எங்கள் கம்பெனி இனிமேல்தான் பேர் வாங்கணும். அதனாலே பயபக்தியோடு கவனமா வேலை செய்து கொடுப்போம்.

வேதகிரி: எங்களைவிட உங்களுக்கு இவரிடம் பக்தி அதிகமோ? நான் இவருக்கு ஒரு சிலையே எழுப்புவேன்.

பூங்கோதை: நான் மணி மண்டபமே கட்டுவேனே.....

விற்பனை: ஏதேது, இன்னும் கொஞ்ச நேரம் போனால் ஆளையே பிடித்துச் சமாதி வைத்து விடுவீர்கள் போலிருக்கே....மிஸ்டர்! இந்த வருஷம் காலண்டர் போடும் எண்ணமே எங்களுக்கு இல்லை. நீங்கள் இடத்தைக் காலி பண்ணலாம்.

பூங்கோதை: ஹஹ் ஹா! சரியான பதில். ஊம்! நகருங்க.

விற்பனை: அம்மா! உங்களுக்கும் அந்தப் பதில்தான். நீங்களும் நகருங்க.

வேதகிரி: ஹே ஹே! பாவம்... மூக்கு உடைஞ்சு போச்சு. கொஞ்சம் டிஞ்சரும் பஞ்சும் தரட்டுமா?

பூங்கோதை: முதலில் உங்க மூக்குக்குக் கட்டுப் போட்டுக் கொண்டு வாங்க.

விற்பனை: ஐயையோ! இங்கே யாரும் கட்டுப் போட்டுக்காதீங்க. எங்களுடைய ஹேர்ஆயில் நாற்றத்தைச் சகிக்க முடியாமல்தான் மூக்கை மூடிக் கொண்டு வர்றீங்கன்னு பார்க்கிறவங்க எல்லாரும் நினைச்சுக்கப் போறாங்க.

[வேதகிரியும் பூங்கோதையும் வெளியேறுகிறார்கள்.]

காட்சி 2

[மாலை நேரம். வேதகிரி பார்க்கில் அமர்ந்திருக்கிறான். அந்தப் பக்கமாகப் பூங்கோதை வருகிறாள்.]

வேதகிரி: ஆஹா, என்ன அழகு! என்ன அழகு! அவள் நடந்தால் வெல்வெட்டுத் துணியின் மீது நடக்க வேண்டிய செந்தாமரைப் பாதங்கள், வெறுந் தரையில் நடக்கின்றனவே என்று அனுதாபப்படத் தோன்றுகிறது. பேசினால்.. அடடா... மலரிதழ் போன்ற அந்த மென்மையான உதடுகள் பிரிந்து பிரிந்து கூடும்போது வலிக்குமே என்று நெஞ்சம் பதறுகிறது. விழிகளைச் சுழற்றினால்...

பூங்கோதை (குறுக்கிட்டு): போலீஸ்காரரைக் கூப்பிட்டு விடுவாளோ என்று பயமாக இருக்கிறது. இல்லையா?

வேதகிரி: ஐயையோ! நான் உங்களைப் பற்றி ஒன்றும் பேசிக் கொண்டிருக்க வில்லை. எனக்குப் பிடித்த ஒரு சினிமா வசனம் அது....

பூங்கோதை (உற்றுப் பார்த்துவிட்டு): நீங்க நாராயணன் கம்பெனி ஏஜண்டு தானே?

வேதகிரி: அம்மா பிருந்தா கம்பெனி! நான் இந்தப் பார்க்குக்கு ஆர்டர் எதுவும் வாங்க வரலே. கொஞ்சம் காற்றுத்தான் வாங்க வந்திருக்கேன். தயவுபண்ணி...

பூங்கோதை: அடப் பாவமே! இந்தப் பூங்காவிலே வீசும் காற்றுக்குக்கூட உங்களோடு போட்டி போடுவேன்னு நினைச்சுட்டீங்களா? தப்பு என்மேலேதான். காலையிலே நியாயமா உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆர்டரை நான்தான் போட்டி போட்டுக் கெடுத்து விட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. மிஸ்டர் நாராயணன் கம்பெனி.......

வேதகிரி: ஒரு திருத்தம். நான் வேலை செய்வதுதான் நாராயணன்கம்பெனியில். அடியேனுடைய திருநாமம் வேதகிரி என்பதாம்.

பூங்கோதை: மிஸ்டர் வேதகிரி! என்னுடைய குற்றத்தை....



வேதகிரி: அதை ஒரு குற்றம் என்றே நான் நினைக்க வில்லை மிஸ் பிருந்தா கம்பெனி.....

பூங்கோதை: ஒரு சிறு திருத்தம். நான் வேலை செய்வதுதான் பிருந்தா கம்பெனியில். அடியாளுடைய சிறு நாமம் பூங்கோதை என்பதாம்.

வேதகிரி: ஓ...மிஸ் பூங்கோதை! காலையில் நாம் போட்டுக் கொண்ட சண்டையை நினைத்தால் வேடிக்கையாக இல்லை....?

பூங்கோதை: உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் அப்படித் துடுக்காகப் பேசியதற்காக நான் மிகவும் வெட்கப்படுகிறேன்!

வேதகிரி: வெட்கமா? உத்தியோகம் பார்க்கும் உனக்கா?

பூங்கோதை: கேலி செய்யாதீர்கள், வேதகிரி. படித்து விட்டு வேலைக்கு வந்தால் இயற்கையாகப் பெண்களுக்குள்ள பண்பு மறைந்தா போய் விடும்? உண்மையாகச் சொல்கிறேன். எனக்கு இந்த உத்தியோகமே பிடிக்கவில்லை. எல்லோரையும் போலக் கல்யாணம் செய்து கொண்டு........

வேதகிரி: பிள்ளையும் குட்டியும் பேச்சுக்கு அடங்கி நடக்கும் கணவனுமாய்க் குடித்தனம் நடத்தத்தான் ஆசை. அப்படித்தானே?

பூங்கோதை: சரிதான், கல்யாணம் செய்து கொண்டால் கணவனை ஆட்டிப் படைப்பேன் என்று யார் சொன்னது?

வேதகிரி: ஏ, அப்பா! இந்த அதட்டல் ஒன்றே போதாதா சாட்சிக்கு? இன்னொருவர் சொல்ல வேண்டுமா என்ன?

பூங்கோதை (சிரித்து): மிஸ்டர் வேதகிரி! எங்கள் குடும்பமே சங்கீதக் குடும்பம். சரீரம் கனமாக இல்லாவிட்டாலும் எல்லாருக்கும் சாரீரம் மட்டும் கொஞ்சம் கனமாக இருக்கும். அதிலும் நான் பேசினால் 'ஏழு ஸ்வரமும் சேர்ந்து ஒலிப்பது போலிருக்கு' என்று என் அம்மா அடிக்கடி சொல்வாள். நீங்கள் அதை அதட்டல் என்கிறீர்களா.... என் அப்பா தான் எழுத்தாளராக இருக்கிறார்.

வேதகிரி: என்ன உங்க அப்பா ஒரு எழுத்தாளரா?

பூங்கோதை: ஆமாம். ஆனால் அவர் எழுத்தாளராய் இருப்பதை அடியோடு வெறுப்பவள் நான்.

வேதகிரி: ஏன்?

பூங்கோதை: அவருக்கு வரும் மாப்பிள்ளை அவருடைய கற்பனைகளைப் படித்துப் பாராட்டும் ரசிகனாக இருக்க வேண்டுமாம். மூன்று வருஷங்களாகத் தேடுகிறார். அப்படி யாரும் கிடைக்க வில்லே.

வேதகிரி (மெதுவாக): சரிதான். அப்பா வறட்டு எழுத்தாளர்; பெண் முரட்டுப்பேச்சுக்காரி, எவனுக்குப் பெண் கேட்கத் துணிவு வரும்?

பூங்கோதை: அப்பாவின் கற்பனையை ரசித்து ஜீரணிப்பது கஷ்டம்தான். என்றாலும் பாராட்டி ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும். உயிரையே கேட்டாலும் கொடுத்து விடுவார். அதுமட்டுமல்ல. அவருக்குச் சொந்தமான எட்டு வேலி நிலம், கொண்டித் தோப்பு பங்களா ரெண்டையும் அவருடைய ரசிகனுக்குத்தான் எழுதி வைக்கப் போவதாகவும் ரகசியமாக என்னிடம் சொன்னார்.



வேதகிரி: என்ன, என்ன...எட்டு வேலி நிலம், பங்களா...ஆகா, இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? பூங்கோதை! இந்தக் கணத்திலிருந்து நான் உன்னுடைய ரசிகன்.

பூங்கோதை: என்ன!

வேதகி: ஸாரி! உன் அப்பாவுடைய ரசிகன். நிலமும் பங்களாவும் கிடைக்குமென்றால் ஆயுள் ரசிகனாக இருக்கக் கூட நான் தயார். புறப்படு. உன் தந்தையைப் பேட்டி காண்போம்.

பூங்கோதை: அவர் சோதனே பல வைப்பாரே?...

வேதகிரி: சோர்ந்து விடமாட்டேன். வா...வா.

[வேதகிரி பின்தொடரப் பூங்கோதை போகிறாள், மனத்துக்குள் சிரித்துக் கொண்டு]

காட்சி 3

[எழுத்தாளர் ஏகாம்பரம் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். பூங்கோதையும் வேதகிரியும் வருகிறார்கள்.]

வேதகிரி: வாழ்க, இலக்கியம்! வளர்க எழுத்துலகத்தின் வேந்தர் ஏகாம்பரத்தின் புகழ்!

ஏகாம்பரம்: பூங்கோதை! யாரம்மா இவர்?

பூங்கோதை: உங்களுடைய கதைகளைப் படித்துப் பாராட்டும் லட்சக்கணக்கானவர்களில் ஒருவர் அப்பா.

வேதகிரி: ஆமாம். அதிலும் உருளைக்கிழங்குக் குவியலில் கிடக்கும் தக்காளிப் பழம் மாதிரி தனியாக விளங்கும் நட்சத்திர ரசிகன். சார்! உங்களைப் பார்க்கணும்னு எவ்வளவு நாட்களாக ஆசைப்பட்டேன் தெரியுமா?

ஏகாம்: அப்படியா? உட்காருங்க. உங்க பேரு?

வேதகிரி: வேதகிரி. உங்களுக்கு ஞாபகம் இருக்கணுமே. 'இளநீர்' என்ற பத்திரிகையில் தாங்கள் எழுதிய 'கண்ணீர்' என்ற கதையைப் பாராட்டிக் கடிதம் எழுதினேன் சார். (மெதுவாக) அந்த வகையில் நீங்க எனக்கு அஞ்சு நயே பைசே பாக்கி தரணும்.

ஏகாம்: அப்படியா? 'இளநீர்'னு ஒரு பத்திரிகை இருக்குதா என்ன?

வேதகிரி: உங்க கதை வந்த மூணாவது நாளே அந்த 'இளநீர்' கீழே விழுந்து போச்சு.

பூங்கோதை: அப்பாவுக்குக் கொஞ்சம் ஞாபக மறதி உண்டு. இன்னும் கொஞ்ச நேரம் போனால் 'கண்ணீர்' என்ற தலைப்பில் நான் கதை எழுதியிருக்கிறேனா என்றுகூடக் கேட்பார்.

ஏகாம் (சிரித்து): பூங்கோதை சொல்றது உண்மைதான். இது வரை நூற்றுக் கணக்கான கதைகளை எழுதித் தள்ளியிருக்கேன். அதனாலே எந்தக் கதையையும் சரியாக நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லே. நீங்க படிச்சது பராந்தக சோழனின் கண்ணீரோ அல்லது அல்லது பட்டணத்துச் சுப்பம்மாளின் கண்ணீரோ அல்லது ....

வேதகிரி (குறுக்கிட்டு): ஏதோ ஒரு தலைப்பு. ஆனால் கதை நல்லாயிருந்தது.

[ஏகாம்பரத்தின் மனைவி லட்சுமி ஒரு பேப்பர் பார்சலைத் தூக்கிக் கொண்டு வருகிறாள்.]

லட்சுமி: என்னங்க! முன்னாலே போன கார் திரும்பி வந்திருக்கு.

ஏகாம் : வாசல்லேயே நிறுத்தச் சொல்லு. இதோ வரேன்.

லட்சுமி: கார் இல்லீங்க. கதை.

[பேப்பர்க் கட்டைப் போடுகிறாள்!]

ஏகாம்: ஓ...இந்தக் காரா? இதை நம்பி நான் கடன் வாங்கிட்டேனே தாறுமாறு?....

பூங்கோதை: அப்பா, வந்திருப்பவரைக் கவனிங்க முதலில்.

ஏகாம்: ஆமாமாம். லட்சுமி, சீக்கிரம் காப்பி கொண்டா....

லட்சுமி: இதோ ஒரு நொடியிலே கொண்டு வரேன். பூங்கோதை, எதிர் வீட்டு ராதிகாவிடம் போய் ஒரு ஆழாக்குப் பால் வாங்கி வா.

[பூங்கோதை போகிறாள்]

அப்படியே கொஞ்சம் காப்பிப் பொடியும் வாங்கி வா.

[பூங்கோதை சற்றுத் தயங்கி விட்டுப் போகிறாள்.]

இந்தா, பூங்கோதை! நாளைக்குத் தரேன் என்று சொல்லி அப்படியே நாலு ஸ்பூன் சர்க்கரையும் வாங்கி வா.

ஏகாம்: பூங்கோதை! நில்லு. பாலு, காப்பிப் பொடி, சர்க்கரை எல்லாத்தையும் இங்கே வாங்கி வர்றதைவிட அங்கேயே நல்லா சத்தமா ரெண்டு கப் காப்பி போட்டு வாங்கி வந்துடேன்.

லட்சுமி: போதும், உங்க ஹாஸ்யம். நீ போடி.

ஏகாம்: ஹூம். என்னுடைய ஹாஸ்யத்தின் பெருமை உனக்கென்ன தெரியும்? மிஸ்டர் வேதகிரிக்கல்லவா தெரியும்?

வேதகிரி: ஆமாம் சார். தங்கத்தால் தகடு அடித்து அதிலே பொறித்து வைக்க வேண்டிய அற்புதக் கற்பனைகள் சார் உங்களுடையது.

ஏகாம்: வேதகிரி, தங்கம் பித்தளைக்கு எல்லாம் நான் ஆசைப்பட்டது கிடையாது. 'பத்து'த் தெருக்கும் கிழவியிலே இருந்து, பத்து மாடி பங்களாவிலே வாழும் பணக்காரர் வரை ஒவ்வொருத்தரும் என் கதைகளைப் படிக்கணும் என்பதுதான் என் ஆசை. உங்களை என் ரசிகராக மட்டுமல்லாமல் என் குடும்ப நண்பராக நினைச்சு ஒன்னு கேட்கிறேன். செய்வீங்களா?

வேதகிரி: என்ன சார்! சொல்லுங்க.

ஏகாம்: இதோ இந்த முன்னால் போன காரைத் தமிழ் நாட்டின் மூலை முடுக்கு



களிலெல்லாம் ஒட்டிக் காண்பிக்கணும். அதாவது இந்த நாவலைப் புத்தகமாக வெளியிடணும்.

வேதகிரி: பூ! இவ்வளவுதானா? இது என்ன பிரமாதம். எனக்கு ஒரு புத்தகப் பதிப்பாளரைத் தெரியும். அவரிடம் சொல்லி உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன், சார்.

ஏகாம்: போதும். அது போதும். லட்சுமி, கேட்டியா என்னுடைய கற்பனைகளைப் புத்தகமாக வெளியிட ஒரு நிரன் கிளம்பி விட்டான். வேதகிரி இனிமேல்

நீங்கள் எங்கள் குடும்பத்தில் ஒருவர். அதாவது பிள்ளை மாதிரி.

வேதகிரி: மாப்பிள்ளை மாதிரின்னு சொல்லுங்க.

ஏகாம்: ஓ...ரொம்ப நெருங்கி வந்துட்டீங்க. வேதகிரி, நீங்க மட்டும் நாவலே எப்படியாவது புஸ்தகமா வெளி விட்டுக் காட்டுங்க. உடனே என்னுடைய எட்டு வேலி நிலம், கொண்டித் தோப்பு பங்களா, என் மகள் எல்லாத்தையும் உங்ககிட்டே ஒப்படைக்கறேன்.

வேதகிரி: கவலைப்படாதீங்க. அந்த முன்னால் போன காரை இப்படித் தள்ளுங்க. இதை அழகா ஐந்நூறு பக்கத்திலே அச்சடிக்க, காலிகோ பைண்டு பண்ணி, அந்த வர்ண அட்டைப் படம் மாட்டி, பரிசுப் பதிப்பா வெளியிட்டுக் காண்பிக்கிறேன்.

பூங்கோதை: மிஸ்டர் வேதகிரி. ஒண்ணு ஒண்ணாச் சொல்லுங்க. அப்பாவுக்கு மூச்சு நின்னுடப் போவுது.

வேதகிரி (சிரித்து): நான் வரேன் சார். வரேன் பூங்கோதை. [போகிறான்]

காட்சி 4

[மாலை நேரம். ஓட்டல் ஒன்றில் நுழைந்த வேதகிரி, டிபனுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு, அவனுடன் காத்திருக்கும் ஒருவர் அருகில் போய் அமருகிறான்.]

வேதகிரி: ஹா! சித்தப்பா! கும்பிடப் போன தெய்வம் காப்பி ஹோட்டலிலேயே அகப்பட்டு விட்டது.

பசுபதி: அது யாருடா, காப்பி சாப்பிடற தெய்வம்?

வேதகிரி: சாட்சாத் நீங்களேதான், சித்தப்பா! நேற்றிலிருந்து உங்களைக் காடு மேடு, மலை, வனம், வனந்தரம் எங்கும் தேடிக் கொண்டிருக்கிறேன்.

பசுபதி: நான் எப்போடா காஷாயம் வாங்கிகிட்டு வனம், வனந்தரம் பக்கம் சந்நியாசியாப் போகப் போறேன்னு உனக்குக் கடுதாசி போட்டேன்?

வேதகிரி: அதில்லே சித்தப்பா. உங்களை ஊர் முழுதும் தேடினதை அப்படிச் சொன்னேன்.

பசுபதி: ஓஹோ! என்னைத் தேடி நாடி, ஓடி வரக் காரணம்?

வேதகிரி: நீங்களே என் நாடியைப் பிடிச்சுப் பாருங்க. எப்படி ரோட்டரி மெஷின் மாதிரி ஓடுதுன்னு தெரியும். அவ்வளவு ஆனந்தம், களிப்பு, சித்தப்பா! திடீர்னு உங்களுக்கு ஒரு அழகான பெண், எட்டு வேலி நிலம், ஒரு பங்களா எல்லாம் கிடைச்சா என்ன செய்வீங்க?

பசுபதி: பளார்னு உன் கன்னத்திலே விடுவேன் ஒரு அறை. அப்புறம் எட்டு வேலி நிலத்துக்கும், பங்களாவுக்கும் சொந்தக்காரனான என் முன்னால் இப்படி மரியாதை இல்லாமல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார உனக்கு எவ்வளவு தைரியம்னுகேட்பேன்!

வேதகிரி: ஓ....சாரி சித்தப்பா.

[கால்களைச் சரியாக வைத்துக் கொள்கிறான்.]

பசுபதி: பரவாயில்லே. மேலே சொல். எந்தப் பைத்தியக்காரன் உனக்குப் பெண்ணையும் கொடுத்து, நிலம் பங்களா எல்லாத்தையும் கொடுத்தான்?

வேதகிரி: கொடுக்கும் எண்ணம் ஒருவர் மனத்தில் பூத்து விட்டது சித்தப்பா. அதை வெடுக்கென்று பறிக்க வேண்டியதுதான் பாக்கி. அதுக்காகத்தான் உங்களைத் தேடி வந்திருக்கேன்.

பசுபதி: நான் என்ன செய்யணும்னு சொல்றே?

வேதகிரி: ஒரு நிமிஷம் இருங்க, சர்வர்! 'சோன் பப்டி' ஒண்ணு கொண்டு வந்து வையுங்க இவருக்கு.

பசுபதி: ஏன் உனக்கு வேண்டாமா?

வேதகிரி: இனிப்பை நீங்க சாப்பிடுங்க. இனிக்கும் சேதி ஒண்ணை மட்டும் எனக்குக் கொடுங்க. அது போதும். சித்தப்பா, ஏகாம்பரம்னு ஓர் அசட்டு எழுத்தாளர். அவருக்குத் தோகை மயில் மாதிரி ஒரு அழகான பெண். நான்....

பசுபதி: உம். தைரியமாச் சொல்லு.

வேதகிரி: நான் அந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன். ஒரு நாள் அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருக்கும் போது அவளுடைய அப்பா, அதுதான் அந்த அசட்டு ஏகாம்பரம், ஒரு கதையைத் தூக்கி என் கையில் போட்டார். அதைப் புத்தகமாக வெளி விட்டுக் காண்பித்தால் பெண்ணை மட்டுமல்ல, எட்டு வேலி நிலத்தையும் பங்களாவையும் சேர்த்துத் தருவதாக ஒரு போடு போட்டார்.

பசுபதி: பலே. பலே. சுவாரஸ்யமாயிருக்கே. உம் அப்புறம்?

வேதகிரி: அப்புறம் என்ன? உங்களை நம்பிக் கதையை வாங்கி வந்துட்டேன். நீங்கள்தான் தயவுபண்ணி எப்படியாவது இதைப் புஸ்தகமாக அச்சடித்துக் கொடுத்து என் கல்யாணத்தை முடிச்சு வைக்கணும். இந்த உதவியை நீங்க செய்திங்கன்னு எனக்குப் பெண் கிடைக்கும். உங்களுக்கு மண் கிடைக்கும்.

பசுபதி: மண்ணு?

வேதகிரி: அதாவது நிலம், எட்டு வேலி சித்தப்பா, எட்டு வேலி. எனக்குக் கிடைக்கும் சொத்தை அப்படியே தூக்கி உங்ககிட்டே கொடுத்துடறேன்.

பசுபதி: திட்டம் நல்லாத்தானிருக்கு. ஆனால் அந்த ஏகாம்பரம் நம்மை ஏமாற்றி விட்டால்?

வேதகிரி: எப்படி ஏமாற்ற முடியும்? அவருக்கிருப்பதோ ஒரே பெண். அந்தப் பெண்ணே எனக்குச் சொந்தமாகி விடும் போது அவருடைய மற்ற சொத்துக்களுக்கும் நான்தானே வாரிசு?

பசுபதி: சரி. எதுக்கும் நீ ஒரு ஐந்நூறு ரூபாய் கொண்டு வா. மீதியை நான் போட்டுச் செலவு பண்ணிப் புஸ்தகத்தை அச்சிலே ஏத்திப்புடறேன்.

வேதகிரி: ஐயயோ! ஐந்நூறுக்கு இப்போ எங்கே போவேன்? 'எட்டு வேலி நிலமும் பங்களாவும் கிடைக்கப்போகுது' என்கிற தெம்பில் காலண்டர்களுக்கு ஆர்டர் வாங்கும் வேலையைக் கூட விட்டு விட்டேனே...

பசுபதி: அதென்னமோ எனக்குத் தெரியாது. நீயும் ஏதாவது பணம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும்.

வேதகிரி: சரி, சித்தப்பா. எப்படியாவது இருநூறு ரூபாய் தரேன். அதுக்கு மேலே என்கிட்ட எதிர்பார்க்காதீங்க.

பசுபதி: சரி. கொண்டா.



காட்சி 5

[கடற்கரை. உடைந்து போன கட்டு மரம் ஒன்றின் மேல் வேதகிரி நிற்கிறான். அவன் கையில் ஒரு பழைய கோட்டு காட்சியளிக்கிறது. சுற்றிலும் திரளாகக் கூட்டம் நிற்கிறது.]

வேதகிரி: பெரியோர்களே! பொங்கு மாங்கடலின் அலை யோசையோடு போட்டி போட்டுக் கொண்டு, உரத்த குரலில் உங்களிடையே பேசவேண்டிய நெருக்கடியான கட்டத்தில் நான் நிற்கிறேன். சற்றே காது கொடுத்துக் கேளுங்கள். இந்தியத் தாய் ஏராளமான தியாக மூர்த்திகளை ஈன்றெடுத்துப் புகழ் பெற்றிருக்கிறாள். ஆனால் ஏனோ தெரியவில்லை. நமக்காக, நமது நாட்டின் விடுதலைக்காக, நல் வாழ்வுக்காகப் பாடுபட்டு, அந்த அறப் போரிலே உயிர் நீத்த உத்தமர்களுக்குத் தகுந்த மரியாதை செய்யத் தவறி விடுகிறோம். உதாரணமாக, 'வெள்ளையனின் உடலை, துப்பாக்கிக் குண்டுகளால் துளை போட்டுத் தோரணங் கட்டி நமது நாட்டை விடுவிப்பேன்' என்று வீர கர்ஜனை புரிந்த நேத்தாஜியை மறந்தேபோனோம். இதுசரியா, முறையா? இதோ பாருங்கள். நேத்தாஜி விமான விபத்தில் சிக்கிய போது அணிந்திருந்த கோட்டு இது. ஜப்பானிலிருந்து ரகசியமாகக் கடத்தப்பட்டது. இந்தக் கோட்டை வைத்து நேத்தாஜியின் நினைவில் ஒருமணிமண்டபம் கட்டினால் என்ன? பிரிய மனமில்லா விட்டாலும் அவசரத் தேவையை முன்னிட்டு இந்தக் கோட்டை ஏலம் போடுகிறேன். நேத்தாஜி மேல் அன்பு கொண்டவர்கள், பாசம் கொண்டவர்கள் எவரேனும் இருப்பின் கேளுங்கள். ஒரு ரூபாய்!

கூட்டத்தில் ஒருவர்: நூறு ரூபாய்!

மற்றொருவர்: இருநூறு ரூபாய்..!

வேதகிரி: போதும். அவ்வளவுதான் எனக்குத் தேவை. இருநூறு ரூபாய் ஏலம் கேட்டவருக்கே கோட்டு விடப்பட்டது.

[ஏலம் எடுத்தவர் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கோட்டை வாங்கிக் கொண்டு போகிறார். கூட்டம் கலைகிறது. வேதகிரியின் தோள் மீது ஒரு கரம் அழுத்துகிறது.]

வேதகிரி [திடுக்கிட்டு] : யார், பூங்கோதை ! நீயா ?

பூங்கோதை: ஆமாம். நானேதான். எனக்கு ஒரு சந்தேகம். நீங்கள் எப்பொழுது ஜப்பானுக்குப் போய் இந்தக் கோட்டைக் கடத்தி வந்தீர்கள்?

வேதகிரி: உஸ்...அதெல்லாம் ரகசியம்.

பூங்கோதை: ரகசியமா?..போலீசைக் கூப்பிட்டா ரகசியமெல்லாம் வெட்ட வெளிச்சமாயிடுது.

வேதகிரி: ஐயயோ. பூங்கோதை! உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளத்தான் இவ்வளவு பாடு படறேன் என்பதை மறந்துடாதே. எனக்கு அவசரமா இருநூறு ரூபாய் தேவைப்பட்டது. என் கிட்டேயிருக்கும் ஒரே ஒரு ஆஸ்தி இந்தக்கோட்டு தான். இதை மூர்மார்க்கெட்டிலே கொண்டு போனால் முழுசா பத்து ரூபாய் கூடக் கொடுக்க மாட்டான். அதனால் தான் இப்படி நானே ஒரு மார்க்கெட்டை உண்டாக்கிக்கிட்டேன்.

பூங்கோதை: என்ன இருந்தாலும் ஒரு நல்லவர் பெயரைச் சொல்லி ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பது ரொம்பத் தப்பு.

வேதகிரி: நான் ஒரு கல்யாணத்தை நடத்தறத்துக்குத்தானே அந்த மகான் பெயரைப் பயன்படுத்திக்கிட்டேன்? ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை....

பூங்கோ (குறுக்கிட்டு): தெரியும், தெரியும். அந்தப் பழமொழியைக் கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சு.

வேதகிரி: அப்போ புதுமொழியா ஏதாவது சொல்லட்டுமா? பூங்கோதை, இப்படி மணலிலே வந்து உட்காரேன். கல்யாணத்துக்கு முந்தி உன்னிடம் ஒரு தடவையாவது காதல் வசனம் பேசணும்னு ஆசையாயிருக்கு.

பூங்கோ: ஏன், கல்யாணத்துக்கு அப்புறம் பேசக் கூடாதா?

வேதகிரி: அது அவ்வளவு சுவையாக இருக்காது கண்ணே. கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள கடமைகளில் ஒன்று போல் தோன்றும்.

பூங்கோதை: ஓஹோ....

வேதகிரி: பூங்கோதை! தண்ணீர் திறந்து விடப் படாத மேட்டூர் அணை மாதிரி காதல் வசனங்களை என் மனத்தில் தேக்கி வைத்திருக்கிறேன். இப்பொழுது மனம் திறந்து பேசித் தீர்க்காவிட்டால் என் இதயமே உடைந்து விடும்.

பூங்கோதை: சரி, பேசுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை. நிமிஷத்துக்கு ஐம்பது வார்த்தைகள் வரையில்தான் திறந்து விடலாம்.

வேதகிரி: கோதை! உன்னை அடைய வேண்டும் என்பதுதான் என்னுள் இருக்கும் வாதை. கொத்தாக மலர் பறித்து உன் குழல்தனில் சூடிக் கொண்டு, சந்தான பார்வை யொன்றைத் தள்ளிவிட்டு நீ நடந்தால் எவரும் பித்தாவார் பித்தாவார், சத்தியம் இது என்பேன் சகி.

பூங்கோதை: சரிதான். கடைசியில் சனியனுக்கி விட்டீர்களா என்னை.

வேதகிரி: ஐயயோ. சகி என்றால் குளிர்ச்சி பொருந்திய என்று அர்த்தம். நீ குளிர் நிலவல்லவா?

[சற்றுத் தொலைவில் ஒருவன் வந்து வேதகிரியை அழைக்கிறான்.]

பூங்கோதை: யாருங்க அது?

வேதகிரி: ஒரு நிமிஷம் இரு. என்னுடைய கோட்டை ஏலம் கேட்டு முதல் குரல் எழுப்பியவன் அவன்தான். பத்து ரூபாய் கமிஷன்கொடுப்பதாக ஒப்பந்தம். கொடுத்து விட்டு வந்துடறேன்.

[போகிறான்.]

காட்சி 6

[ஏகாம்பரத்தின் வீடு. ஒரு சிறிய புத்தகக் கட்டுடன் உள்ளே நுழைகிறான் வேதகிரி. ஏகாம்பரம் எதிரில் வருகிறார்.]

ஏகாம்: வாங்க வேதகிரி! எங்கே ஒரு மாசமா உங்களை இந்தப் பக்கமே காணோம்?

வேதகிரி: எடுத்த காரியத்தை முடிக்காமல் உங்க முகத்திலேயே விழிக்கக் கூடாது என்றிருந்தேன். இதோ பார்த்தீங்களா. உங்களுடைய முன்னால் போன கார் 'ஜிலுஜிலு'ன்னு வார்னிஷ் ஜாக்கெட் போட்டுக் கொண்டு ஜொலிக்குது.

ஏகாம்: ஆ...கண்டேன். கண்டேன், கதையைக் கண் கவரும் புத்தகமாக. லட்சுமி! லட்சுமி! வா இங்கே சீக்கிரம். என் உள்ளத்தில் ஊறிய கற்பனை ஊற்று புத்தக வெள்ளமாகப் பெருக்கெடுத்து விட்டது பார். அந்த வெள்ளத்திலே நிச்சயம் தமிழ் மக்கள் சிக்கித் திணறப் போகிறார்கள்.

லட்சுமி (வந்து கொண்டே): நல்லாயிருக்கு. காவிரி பாய்கிற இடமெல்லாம் இப்போ தான் வெள்ளத்திலே தெப்பலாடி மீண்டிருக்கு. அந்தக் கஷ்டம் தீர்றதுக்குள்ளே உங்க வெள்ளத்தை வேற பாய விட்டீங்கன்னு பாவம் ஜனங்க என்ன ஆகிறது?..

பூங்கோதை: பரவாயில்லியே. அம்மாவுக்கு கூட கிண்டல் பண்ணத் தெரியுதே?

ஏகாம்: நாவல் எழுத்தாளருடைய மனைவியில்லே. அப்படித்தான் பேசுவா. வேதகிரி, இதிலே எவ்வளவு பிரதிகள் அச்சடிச்சீங்க? எனக்கு எவ்வளவு ராயல்டி வரும்?....

வேதகிரி: முதல்லே புத்தகம் விற்கட்டும். அப்புறம் 'ராயல்டி'யைப் பற்றிப் பேசிக்கலாம். உம்...தை மாசத்திலே விருந்து கல்யாண சீசன் ஆரம்பிக்குது...

ஏகாம்: ஆ....ஆமாம். நல்ல சமயத்துக்கு நினைவுபடுத்தினீங்க. ''மணமக்களுக்குப் பரிசு'' ன்னு ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டா நல்லா விற்பனையாகும் இல்லே...?

வேதகிரி: அதில்லீங்க. என் கல்யாணத்துக்கு நாள் குறிப்பிடலாமான்னு கேட்டேன்.

ஏகாம்: ஓ...தாராளமா குறிச்சிடுவோம்...

வேதகிரி: அதுக்கு முன்னாலே அந்த எட்டு வேலி நிலம்.....

ஏகாம்: மறப்பேனா அதை. எட்டு வேலி நிலத்தை இப்பொழுதே கொடுத்திடறேன். ஆனால் கொண்டித்தோப்பு பங்களா கொஞ்சம் கனம். வண்டி வைச்சுத் தான் எடுத்துக்கிட்டுப் போகணும்.

வேதகிரி: (திகைப்புடன்) என்ன சொல்றீங்க நீங்க?

ஏகாம்: ஏன், நான் சொல்றது புரியலியா? நான் எழுதிய எட்டுவேலி நிலம் என்ற நாவல் சுமார் ஐந்நூறு பக்கம். கையிலேயே எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால் கொண்டித்தோப்பு பங்களா என்ற நாவல் மொத்தம் ஆயிரம் பக்கம். தூக்கிக்கொண்டு போவது கஷ்டம்னு சொன்னேன். வேதகிரி! உங்களைப்போல் ஒரு சிறந்த இலக்கியப் பித்தரை நான் கண்டதேயில்லே. முன்னால் போன காரைப் புத்தகமாகப் போட்ட மாதிரி தயவுசெய்து மற்ற நாவல்களையும் வெளியிட வேணும். லட்சுமி! அந்தக் கையெழுத்துப் பிரதியைச் சீக்கிரம் உருட்டிக்கிட்டு வா.

வேதகிரி: ஆ....! கடைசியில் நிலம், பங்களா, என் மகள் என்பதெல்லாம் வெறும் காகிதக் குவியல்கள்தானா?

[மயங்கி விழுகிறான்]

ஏகாம்: (சிரித்து) வேதகிரி! நிலம், பங்களா என்பதெல்லாம் கற்பனைதான். ஆனால் 'என் மகள்' என்பதும் 'நீ என் மாப்பிள்ளை' என்பதும் பூங்கோதை சாட்சியா நிஜம் - எழுந்திரு!

[பூங்கோதை ஒரு செம்புத் தண்ணீரைக் கொண்டு வந்து அவன் தலையில் கொட்டுகிறாள்!]





தங்கக் குட்டிப் பாப்பா!

'பொன்மாரி'

காலைக் கையை ஆட்டும்
  கன்னங் குழியச் சிரிக்கும்,
வாலை ஆட்டும் நாயின்
  வரவைக் கண்டால் துள்ளும்!
பொக்கை வாயைத் திறந்து
  பொழியும் மழலைத் தேனும்,
அக்கம் பக்கம் பார்த்தே
  அன்னைக் கொட்டத் தாவும்!
முத்தம் ஒன்று தந்தால்
  மூன்று திரும்பக் கொடுக்கும்,
நித்தம் நித்தம் கண்ணால்
  நிறையக் கதைகள் சொல்லும்!
அண்ணா வந்தால் குதிரை
  அப்பா வந்தால் யானை,
முன்னால் மண்டி போட்டால்
  முதுகில் ஏறிக் கொள்ளும்!
காக்காய் குருவி கண்டால்
  கையை ஆட்டி அழைக்கும்
நாக்கை நீட்டிக் காட்டும்
  நம்மைச் சிரிக்க வைக்கும்!
நிலவைக் காட்டி அம்மா
  நெய்யும் சோறும் தந்தால்
குலவிக் கொண்டே சாப்பிடும்
  கொஞ்சிக் கொஞ்சிக் குதித்திடும்!
இன்பம் பொங்க வீட்டிலே
  எங்கும் தவழ்ந்து திரிந்திடும்
துன்பம் போக்கும் எங்கள்
  தங்கக் குட்டிப் பாப்பா!



முயலே! முயலே!

திருச்சி பாரதன்

முயலே முயலே வருவாயோ!
முத்தம் நானும் தருவேனே!

பட்டு உடலைப் பெற்றாயே!
பால்போல் நிறமும் கொண்டாயே!
முத்துப் போன்ற விழியாலே
மிகவும் மனத்தைக் கவர்ந்தாயே!


உன்போல் சிறிய பாப்பாநான்!
உன்போல் தீமை அறியேனே!
அன்பாய்த் தினமும் வாழ்வோமே!
அழகாய் நடந்து வருவாயோ!

அம்மா தருவாள் பாற்சோறு!
அதனைப் பகிர்ந்தே உண்போமே!
சும்மா சோம்பல் கொள்ளாமல்
சுற்றி நாமும் வருவோமே!

முயலே முயலே வருவாயோ!
முத்தம் நானும் தருவேனே!

உங்களுடைய தேய்ந்த டயர்களை
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸில்
ரீட்ரெட் செய்யுங்கள்

டிவிஎஸ்ஸில் தேய்ந்த டயர்களைப் புதுப்பித்தால் அவை புது டயர்களைப் போலவே நீடித்து உழைக்கும். ஏனெனில்





மிக உயர்ந்த கூடுதலான கனமுள்ள காமெல்-பாக் டிரெட் ரப்பரையே டிவிஎஸ் உபயோகிக்கிறார்கள்



டிவிஎஸ் குளிர் சாதன அறைகளில் காமெல்-பாக் உலராமலிருக்கின்றன. ஆகையால் உழைப்பு நீடிக்கிறது

ரீட்ரெடிங் செய்வது எளிதன்று. அது நிபுணர்களின் வேலை. டிவிஎஸ் தொழிற்சாலையில் தேய்ந்து போன டயர்களை ரீட்ரெடிங் செய்வதற்கு நவீன நுண்ணிய இயந்திரங்களை அமைத்துள்ளார்கள். தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அவற்றை இயக்குகின்றனர். விசேஷ "பாண்டிங்" முறையினால் டிவிஎஸ்ஸில் புதுப்பிக்கப்பெறும் டயர்கள் புத்துயிர் பெறுகின்றன. ஒவ்வொரு புரக் டயரையும் — உரிய காலத்தில் செய்தால் — மூன்று முறை ரீட்ரெட் செய்யலாம்.





ரீட்ரெட் பணியில் சிறந்தவர்கள்


TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
(டி.வி.எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை - மதுரை - கோயமுத்தூர் - பெங்களூர்


JWT/SI-RD-1441a

டிவிஎஸ் பஸ்பாடி பளு குறைவு
ஆனால் உழைப்பு அதிகம்

அடிப்படையில், உறுதிக்கும் நீண்டகால உழைப்புக்கும் ஏற்ற உயர்ந்தரக எஃகு



பஸ் பாடிகளைக் கட்டுவதில் சிறந்த சாமான்களை டிவிஎஸ் உபயோகிக்கின்றனர்.



முப்பது ஆண்டுகளின் அனுபவத்தால் உறுதியான ஆனால் பளுவில்லாத பஸ் பாடிகளை டிவிஎஸ் தயாரிக்கிறார்கள். டிவிஎஸ் பஸ் பாடிகள் நீண்ட வருடம் உழைக்கின்றன. பராமரிப்புச் செலவும் குறைவு.

பார்கோ, அசோக் லேலண்ட் காமெட், பெட்போர்டு, டாடா மெர்ஸிடஸ் பென்ஸ் முதலிய எந்த சேஸில் மீதும் உங்கள் தேவைகளுக்கு உகந்த பாடிகளை டிவிஎஸ் கட்டித் தரும்.



உறுதியாகவும், லேசாகவும் இருக்க பக்கங்களில் அலுமினியத் தகடுகள் — பிரேம்களுக்கு சிறந்த மரப் பலகைகள்.



இந்தியாவில் பஸ் பாடிகள் கட்டும் மிகப் பெரிய ஸ்தாபனம் டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் ஸ்தாபனம்) புதுக்கோட்டை - மதுரை

TVS

JWT-SI-BB/1446 a



நாயும் நரியும்


ஒரு காட்டில் கம்பீரத் தோற்றமுள்ள ஓர் உயரமான நாய் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயராக இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்திலே எல்லாப் பிராணிகளின் குட்டிகளும் குஞ்சுகளும் படித்துக் கொண்டிருந்தன. நேர்மையைக் கடைப்பிடிக்கும் தலைமை உபாத்தியாயர் நாயிடம் எல்லாப் பிராணிகளும் அன்பு செலுத்தி வந்தன. எத்தனையோ பிராணிகளை நல்வழிப்படுத்தியது தலைமை உபாத்தியாயர் நாய். ஆனால் தீய வழியில் செல்லும் தனது சகோதரன் நாயினிடம் மட்டும் அதன் திறமை பயனளிக்கவில்லை.

அந்தக் காட்டிலே கெட்ட குணம் படைத்த மூன்று நரிகள் இருந்தன. அந்த நரிகளை அந்தக் காட்டிலுள்ள எல்லாப் பிராணிகளும் மிருகங்களும் வெறுத்தன. ஆனால் தம்பி நாய் மாத்திரம் அவைகளுடன் மிகுந்த நட்புக் கொண்டிருந்தது. "தம்பி! உன்னை அடிக்கடி அந்தக் கெட்ட நரிகளுடன் பார்க்கிறேன். அவற்றின் சிநேகிதம் உனக்கு ஆபத்தாகவே முடியும். ஜாக்கிரதை" என்று அடிக்கடி தலைமை உபாத்தியாயர் நாய் எச்சரித்தது. ஆனால் தம்பி நாய் "உனக்குத் தெரியாது. அந்த மூன்று நரிகளும் மிகவும் நல்ல நரிகள். எனக்கு எல்லாவிதமான உதவிகளும் செய்கின்றன" என்று சொல்லி விட்டு அந்த நரிகளுடனேயே பழகி வந்தது.

தீபாவளி சமயம். ஒரு நாள் மாலை மூன்று நரிகளும் தம்பி நாயைப் பார்த்து, "உனக்கு நிரம்ப வெடிகளும் வாணங்களும் வேண்டுமென்று சொன்னாய் அல்லவா? நீ உடனே வீட்டுக்குப் போய் உன் அண்ணாவுக்குத் தெரியாமல் ஒரு கூடையை எடுத்துக் கொண்டு வா. உனக்கு நிரம்ப வெடிகளும் வாணங்களும் வாங்கித் தருகிறோம்" என்று சொல்லவே, தம்பி நாய் வீட்டுக்குப் போய் ஒரு கூடையை வாயில் கௌவிக் கொண்டு வேகமாக வந்தது.

மூன்று நரிகளும் தம்பி நாயும் காட்டின் வழியே போய்க் கொண்டிருந்தபோது ஒரு கரடிக்குட்டி அதன் வீட்டு வாசற் பக்கத்தில் நின்று கட்டுக் கட்டாகச் சீன வெடிகளைக் கொளுத்திக் கொண்டிருந்தது. அந்தக் காட்டில் கரடிக் குட்டி பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தது. கரடிக் குட்டி வெடிகளைச் சுட்டுக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு மூன்று நரிகளும் நாயும் நின்று கொண்டிருந்தன. கரடிக் குட்டிக்கு அருகிலிருந்த ஏராளமான வெங்காய வெடிகளையும் விதம்விதமான வாணங்களையும் வெடிகளையும் பார்த்து அவை திகைத்து நின்றன. அந்தச் சமயத்தில் ஒரு நரி சட்டென்று போய்க் கரடிக் குட்டிக்கு அருகிலிருந்த [illegible] அணைத்தது. உடனே மற்ற இரண்டு நரிகளும் பயங்கரமாக [illegible] நாயும் தன் முழு பலத்துடன் குரைத்தது. அதைக் கேட்ட கரடிக் குட்டி பயந்து உள்ளே





நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. இது தான் சமயமென்று அவசரம் அவசரமாக மூன்று நரிகளும் நாயும், கொண்டு வந்திருந்த கூடை நிறைய எல்லா வெடிகளையும் வாணங்களையும் எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடின. ''நாயே! இந்தக் கூடையை நீயே ஜாக்கிரதையாக உன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் வைத்துக் கொள். நாளைக் காலையில் நாம் பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த விஷயத்தை மாத்திரம் உன் அண்ணனிடம் சொல்லாதே'' என்று கூறி விட்டு மூன்று நரிகளும் ஓடி விட்டன. நாய் மெதுவாகத் தன் அண்ணு தலைமை உபாத்தியாயர் நாய்க்குத் தெரியாமல் தன் அறைக்குச் சென்று வெடிகள் நிரம்பிய கூடையை ஒரு மூலையில் வைத்து விட்டு அறையின் கதவைப் பூட்டியது.

மறு நாட் காலையில் தலைமை உபாத்தியாயர் நாய் தோட்டப் பக்கம் வந்தபொழுது, தம்பி நாய் என்ன பண்ணுகிறது என்று பார்ப்பதற்காக அதன் அறையைத் தோட்டப் பக்க ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தது. அப்பொழுது அந்த அறையில் தம்பி நாயைக் காணவில்லை. அறையும் பூட்டப்பட்டிருந்தது. ஆனால் ஒரு மூலையில் கூடை நிறைய வெடிகளும் வாணங்களும் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தவுடன் அதற்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இவை யார் கொடுத்தார்கள்?

அந்தச் சமயத்தில் காட்டில் உள்ள பணக்காரக் கரடி வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. கரடி, தலைமை உபாத்தியாயர் நாயைப் பார்த்தவுடன் சற்று நின்று, ''இதென்ன அநியாயம்? இந்தக் காட்டில் மூன்று நரிகள் செய்யும் திருட்டுத்தனத்தைக் கண்டிக்க ஒரு மிருகமும் இல்லையா? அந்த மூன்று நரிகளுடன் சேர்ந்து உன் தம்பியும் என் கரடிக் குட்டியைப் பயமுறுத்தி வெடிகளையும் வாணங்களையும் நேற்றிரவு தூக்கிக் கொண்டு வந்து விட்டன. இந்தத் திருட்டைப் பற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் காண்டா மிருகத்திடம் தெரிவிக்கப் போகிறேன்'' என்று சொல்லி விட்டு வேகமாக நடந்து சென்றது.

'ஓஹோ! இப்பொழுதுதான் கூடை நிறைய வாணங்களும் வெடிகளும் எப்படி என் தம்பி அறைக்கு வந்தன என்று தெரிகிறது. சீக்கிரத்தில் அவமானம் ஏற்படப் போகிறது. எங்கே என் தம்பி?' என்று கோபத்துடன் வெளியேசென்றது தலைமை உபாத்தியாயர் நாய்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தலைமை உபாத்தியாயர் நாய் வீடு திரும்பியபோது அதன் வீட்டு வாசலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் காண்டாமிருகம், பணக்காரக் கரடி, அதன் குட்டி அவைகளின் மத்தியில் தனது தம்பி நாய் யாவும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தது. ''வாருங்கள். உமது தம்பி மூன்று துஷ்ட நரிகளுடன் சேர்ந்து கரடியின் வீட்டில் நேற்று இரவு வெடிகளையும், வாணங்களையும் திருடியதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. திருடிய வெடிகளும் வாணங்களும் உங்கள் வீட்டில் உங்கள் தம்பியின் அறையில் வைத்து பூட்டியிருப்பதாகத் தெரிகிறது. உங்கள் தம்பியின் அறையைத் திறந்து சோதனை செய்ய வேண்டும்'' என்றது. ''டேய்! உன் அறையைத் திறந்து காண்பியேன்டா'' என்று உபாத்தியாயர் நாய் சொன்னவுடன் 'கையும் களவுமாகப் பிடிபட்டு விடுவோமே. இனிமேல் போவது நிச்சயம்' என்று உடல் நடுங்கப் பயந்தபடியே தன் அறையைத் திறந்தது தம்பி நாய்.

உள்ளே நுழைந்த இன்ஸ்பெக்டர் காண்டா மிருகம் ''இதென்ன இது, கூடையில் ஒன்றுமே இல்லையே? கரடி அநியாயமாகக் குற்றம் சாட்டியிருக்கிறது'' என்று கோபத்துடன் கரடியைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே வெளியே சென்றது.

தலைமை உபாத்தியாயர் நாய் தன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் இரண்டு நெருப்புக்கோழிக் குஞ்சுகளைத் தோட்டப் பக்கத்து ஜன்னல் கம்பிகள் வழியாகத் தம்பி நாயின் அறைக்குள் அனுப்பிக் கூடையில் இருந்த வாணங்களையும் வெடிகளையும் விழுங்கிச் சென்றிரா விடில் தம்பி நாய் சிறைக்குச் சென்றிருக்க வேண்டும் அல்லவா? தன் அண்ணன் நாயின் சமயோசித புத்தி தம்பி நாய்க்குத் தெரியவில்லையே? என்ன செய்ய?

மறு நாட் காலையில் தம்பி நாய் மூன்று நரிகளையும் தேடிக்கொண்டு ஓடியது. நாய் போலீஸ் இலாகாவினால் சிறைப்பட்டிருக்கும் என்ற எண்ணத்தில் வழக்கமாகச் சந்திக்கும் மாந்தோப்புக்கு மூன்று நரிகளும் வரவில்லை. கடைசியில் நாய் சுற்றி அலைந்து மூன்று நரிகளையும் சந்தித்தது. நாயைப் பார்த்ததும் நரிகள் ஆச்சரியம் அடைந்தன. ஆனால் அதை வெளிக்காட்டாமல், ''நேற்று போலீஸ் இன்ஸ்பெக்டர் காண்டாமிருகம் உன் வீட்டுக்கு வந்து சோதனை செய்ய வந்திருந்தாராமே! நாங்கள் இன்ஸ்பெக்டருக்குத் தெரியாமல் தலைமறைவாக இருந்தோம்'' என்று கூறின.

''ஆமாம். இன்ஸ்பெக்டர் காண்டா மிருகம் வந்து என் அறையைத் திறந்து சோதனை போட்டது. என்ன ஆச்சரியம்! என் அறை பூட்டப்பட்டிருந்தும் கூடையில் இருந்த வெடிகளையும் வாணங்களையும் காணவில்லை. நான் எதிர்பாராமல் தப்பினேன்'' என்றது.

இதைக் கேட்டதும் மூன்று நரிகளும் பரிகாசமாகச் சிரித்தன.



''கூடையில் எப்படி வெடிகளும் வாணங்களும் இருக்கும்? இன்ஸ்பெக்டர் காண்டாமிருகம் உன் வீட்டை நோக்கிச் செல்கிறார் என்று தெரிந்தவுடன் எங்களுக்குத் தெரிந்த ஒரு பெரிய மந்திரவாதியிடம் சொல்லி உடனே கூடையில் இருந்த வாணங்களை யெல்லாம் காணாமல் போகும்படி செய்தோம்'' என்றன. இதைக்கேட்ட தம்பி நாய், ''உங்களுக்கு மிகவும் நன்றி. நீங்கள் அப்படிச் செய்திராவிடில் நான் இந்நேரம் சிறைப்பட்டிருப்பேன்'' என்றது.

''ஒன்றுக்கும் கவலைப்படாதே. என்னுடன் வா'' என்று மூன்று நரிகளும் நாயை அழைத்துச் சென்றன.

வழியில் ஒரு சிறிய கூட்டமாகப் பெரிய முயல்கள் சிறிய முயல்கள், சிறிய முயல்குட்டிகள் யாவும் வந்து கொண்டிருந்தன. மூன்று நரிகளையும் பார்த்த ஒரு பெரிய முயல் நரிகளை முறைத்துப் பார்த்துவிட்டு அருகிலிருந்த பொந்துக்குள் ஓடியது. அந்தப் பெரிய முயலைப் பின்பற்றி மற்ற முயல்கள் யாவும் அரை நொடியில் ஓடி மறைந்தன. உடனே அதைப் பார்த்த மூன்று நரிகளில் ஒரு நரி ''இப்பொழுது பொந்துக்குள் போயிற்றே ஒரு பெரிய முயல், அந்த முயலையும் அதனுடன் சென்ற முயல் குட்டிகளையும் நாம் பிடித்தால் என்ன?'' என்று கேட்டது.

''அது எப்படி முடியும்?'' என்றன மற்ற இரண்டு நரிகளும்.

''கிழக்குப் பக்கத்தில் உள்ள பொந்துக்குள் நாயை நுழையச் செய்ய வேண்டும். நாய் தன் சாமர்த்தியத்தினால் தான் நுழைவதற்குச் சாத்தியமாகப் பொந்தைப் பெரிதாக்கிக் கொண்டே செல்லட்டும். பாதிப் பொந்து நுழைந்தவுடன் பலத்த சத்தத்துடன் குரைத்தால் முயல்கள் யாவும் பயந்து மேற்குப் பக்கத்தில் ஓடிவரும். மேற்குப் பொந்தின் அருகில் நாம் கோணிப் பையைப் பிடித்துக் கொண்டால் கோணிப் பையில் எல்லாம் அகப்பட்டுக் கொள்ளும். நாம் அவைகளை மூட்டையாகக் கட்டிச் சந்தையில் விற்றுவிடலாம். எப்படி என் யோசனை?'' என்றது நரி. உடனே மற்ற இரண்டு நரிகளும் நாயும் ''சபாஷ்! சபாஷ்!! சரியான யோசனை'' என்று கூறிக் குதித்தன.

''இப்பொழுது உடனே தேவையானது ஒரு கோணிப்பை'' என்று ஒரு நரி சொல்லவே, நாய் ஓடிப் போய்ச் சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு பெரிய கோணிப் பையுடன் திரும்பி வந்தது.

''பலே, பலே, புதிய கோணிப் பையாகவே கொண்டு வந்து விட்டாயே. உடனே போய்க் கிழக்குப் பக்கத்தில் உள்ள பொந்துக்குள் நுழை. கொஞ்ச தூரம் சென்றவுடன் உன் முழு பலத்தினால் நன்றாகக் குரை. பிறகு நடக்க வேண்டியதை நாங்கள் மூவரும் பார்த்துக் கொள்கிறோம்'' என்றன. நாய் நரிகளின் வேண்டுகோளின்படி கிழக்குப் பக்கத்திலுள்ள பொந்தில் நுழைந்தது. நரிகள் கோணியுடன் மேற்குப் பக்கப் பொந்துக்கு வந்து சேர்ந்தன. பொந்தின் அருகில் மூன்று நரிகளும் கோணிப் பையின் வாயை அகலமாகப் பற்களால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவைகளின் கால்களால் கோணிப் பையின் பின்புறத்தைப் பலமாக மிதித்துக் கொண்டிருந்தன. முதலில் ஒரு சிறிய முயல் குட்டி ஓடி வந்து கோணிப் பையில் மாட்டிக் கொண்டது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாக முயல்கள் வந்து கொண்டிருந்தன. முயல்கள் வந்து சேரச் சேரக் கோணிப் பை பருக்க ஆரம்பிக்கவே நரிகள் கோணிப்பையின் பின் பக்கம் வைத்திருந்த கால்களை வரும் முயல்களுக்கு இடம் கொடுக்கப் பின் பக்கமாக மெதுவாக நகர்த்திக்கொண்டே வந்தன.

''இன்று நமக்கு நல்ல வேட்டைதான். நாம் எதிர்பார்த்தபடி வெகு சீக்கிரம் முயல்கள் வந்து விழுகின்றன. நாம் முயல்களை விற்ற பணத்தை நாய்க்கும் பங்கு கொடுக்க வேண்டுமா?'' என்று ஒரு நரி கேட்க, ''எதற்காக அதற்குக் கொடுக்க வேண்டும்? இந்தப் பளுவைத் தாங்கிக் கஷ்டப்படுவது நாம்தானே'' என்றது ஒரு நரி. ''ஆமாம், ஆமாம்'' என்று மற்ற இரண்டு நரிகளும் தலையை ஆட்டின. ''பெரிய முயலும் மூட்டைக்குள் வந்து விழுந்து விட்டது'' என்று ஒரு நரி கத்திற்று. மூன்று நரிகளும் மூட்டையின் வாய்ப்புறத்தைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டு மூட்டையைத் தூக்கி நிறுத்தின.


அடுத்த நிமிஷம் அந்தக் கோணிப் பையின் அடி வழியாக எல்லா முயல்களும் வெளியே வந்து 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று சந்தோஷமாக ஓடின. அதுவுமல்லாமல் கோணிப் பைக்குள் வெள்ளை நிறமாக வந்த முயல்கள் யாவும் தப்பி ஓடும்போது நீல வர்ண முயல்களாக மாறியிருந்தன. அவசரம் அவசரமாகக் கோணியின் அடிப் பக்கத்தைப் பார்க்கவே அதுவும் கோணியின் வாய்ப் பக்கம் போலத் திறந்திருந்தது.


அந்தச் சமயத்தில் நாய் மேற்குப் பக்கத்தில் உள்ள பொந்தின் வழியாக வெளியே வர எட்டிப் பார்த்தது. ''நீ வெளியே வருவதற்கா பார்க்கிறாய்? எங்களிடம் இருபுறமும் திறந்திருக்கும் கோணியைக் கொடுத்து எங்களை அவமானப் படுத்தினாய். நீ இனி மேல் இந்தப் பொந்துக்குள்ளேயே இருந்து மூச்சுத் திணறி இறக்க வேண்டியதுதான்'' என்று கூறி மூன்று நரிகளும் நாய் வெளியே வர முடியாதபடி இரண்டு பொந்துகளையும் அடைத்துவிட்டு ஓடிவிட்டன.

சற்று நேரத்துக்கெல்லாம் தம்பி நாயைத் தேடிக் கொண்டு தலைமை உபாத்தியாயர் நாய் அங்கு வந்தது. 'வீட்டில் இருந்த கோணிப் பையை யார் எடுத்து வந்தது?' என்று சற்று யோசனை செய்தது. 'இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது' என்று இப்படியும் அப்படியுமாகப் பார்த்தது. தன் தம்பி நாய் குரைக்கும் சத்தம் இலேசாகக் கேட்டது. உடனே பொந்து மூடப்பட்டிருக்கும் கல்லை அப்புறப்படுத்தியது. தம்பி நாய் மூச்சுத் திணறிக் கொண்டு வெளியே வந்ததும் அதை மெதுவாக வீட்டுக்கு அழைத்துச் சென்றது.

எல்லா விவரங்களையும் தம்பி நாயிடமிருந்து கேட்டு விட்டு, ''தம்பி! நீ அந்தக் கோணிப் பையைக் கொண்டு போனதினால்தான் நீயும் பிழைத்தாய், அந்த முயல்களும் பிழைத்தன. பள்ளிக்கூடத்தில் வரப்போகும் வருஷாந்திரக் கொண்டாட்டத்துக்காக நடக்கவிருக்கும் பந்தயங்களில் இந்த வருஷம் ஒரு தடை ஓட்டப் பந்தயத்தையும் வைக்கலாம் என்று எண்ணிப் புதிய கோணிப் பைகள் வாங்கினேன். கோணிப் பையின் அடிப் பாகத்தையும் கத்திரித்து எடுத்து விட்டு ஒவ்வொரு கோணிப் பையிலும் ஒவ்வொரு விதமான வர்ணத்தைத் தடவச் செய்தேன். தடை ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் பிராணிகளின் குட்டிகளும் குஞ்சுகளும் அவைகளுக்கு வைத்திருக்கும் தடைகளை எல்லாம் சமாளித்து முதலில் வரவேண்டும். வரும்பொழுது வெவ்வேறு வர்ணத்துடன் வெளியே வரவேண்டும். பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும்'' என்று தலைமை உபாத்தியாயர் நாய் சொன்னவுடன் தம்பி நாய், ''அண்ணா! உன்னால்தான் நான் பிழைத்தேன். எனக்குப் புத்தி வந்தது'' என்று கூறியது.

'மூன்று நரிகளும் போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றன' என்று ஒரு செய்தி காட்டில் பரவியது. தீபாவளிக்குக் குட்டிகளும் குஞ்சுகளும், நிரம்ப வெடிகளையும் வாணங்களையும் புது வஸ்திரங்களுடன் தலைமை உபாத்தியாயர் நாய்க்குக் கொண்டு வந்து கொடுத்தன. புத்திவந்த தம்பி நாய் தீபாவளியைப் பிரமாதமாகத் தன் அண்ணனுடன் கொண்டாடியது.


உங்கள் குழந்தைக்கு இங்கிலை ஏற்பட்டால்
மானேர்ஸ்
கிரைப் மிக்சர் கொடுத்து.
MANNERS
GRIPE MIXTURE
அது சிரித்து
மகிழ்வதைக் கண்டு
அனுபவியுங்கள்.
உன்னத தரத்தின் இந்த
சின்னத்தைக் கவனியுங்கள்.
இது ஒரு மானேர்ஸ்
தயாரிப்பு
GEOFFREY MANNERS & CO. LTD. BOMBAY • CALCUTTA • MADRAS



பழுதான மோட்டார் உருப்பு போக்குவரத்தையே நிறுத்தி விடும்

மோட்டார் உருப்பு ஒன்று பழுதுபட்டால் பஸ், லாரி, கார் ஓடாது. அதனால் போக்குவரத்தில் தடை ஏற்படும். பழுது பார்ப்பதில் காலம் வீணாகும். ஓடாத பஸ், லாரியால் வருமானம் குறையும். அதை விட அதிக நஷ்டம், பொதுமக்கள் அபிமானத்தை இழக்க நேரிடும்.

ஆகையால் மோட்டார் உருப்புகளை விநியோகிப்பது ஒரு பொறுப்புமிக்க பணி. மதருஸ் ஆட்டோ சர்வீஸ், நம்பிக்கையானது, சிறந்தது என்று நிரூபிக்கப்பட்ட மோட்டார் உருப்புகளையே விநியோகித்து வருகிறது.

ஆண்டு முழுவதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான மோட்டார் உருப்புகள் நியாயமான விலையில் வியாபாரிகளுக்குத் தொடர்ந்தும் சீராகவும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள் :

ஜீ.எம். பாகங்களும் அக்ஸெஸரிகளும் • பெண்டிக்ஸ் மற்றும் கிளேடன் தேவண்ட்ரே ஹைட்ரோலிக் பாகங்கள் • கார்டர் கார்புரேடரும், பாகங்களும் • ஸ்டூவர்ட் வார்னர் ஸ்பீடோமீட்டர்களும், பாகங்களும்.

ஸ்டாண்டர்ட் பாட்டரிகள் • மைகோ உருப்புகள் • வெல்வொர்த்தி உருப்புகள் • கனாா ஸ்பிரிங்குகளும் லீவுகளும் • ட்ரான்கோ வால்வுகள் • பிலிப்ஸ் பேட்டரி சார்ஜர்கள் • பெரோடோ உருப்புகள் • ஹெல்லா ஹாரன்கள் • காப் உருப்புகள்.

விற்பனையாளர்கள் :

ஹப்ஸ் & டிரம்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய் தயாரித்த ஹப்புகளும், டிரம்களும் • டன்லப் சேஸிஸ் பாகங்கள்.

மதருஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

(டி. வி. எஸ். ஸ்தாபனம்) மதருஸ் - பெங்களூர்.

JWT/MAS/SE/1446a

உனக்குப் புரியாது!

பாரீவேணு கோபாலன்

காலை ஒளி கரை இடுக்குகள் வழியே புகுந்து தரையில் பொட்டுக்களாக உதிர்ந்திருந்தது. சாத்திய மரக் கதவின் நீள விளிம்புகளை ஒளி உராய்ந்து நீண்ட சதுரக் கோடாய்த் தெறித்துக்கொண்டிருந்தது.

''மாது!''

கதவு திறந்தது. சுமித்ரா குளித்து விட்டு உள்ளே நுழைந்தாள்.

''டேய் மாது! எழுந்திருடா!''

ரேழி அறையுள் ஒளி புகுந்து நிறைந்து விட்டது. மாது ஒரு தரம் தரையில் புரண்டான். பிறகு கைகளைப் பின்புறமாகக் கோத்துச் சோம்பலைக் கழற்றினான். பாயை மூலையில் சாத்தி விட்டு வெளியே வந்தான்.

கண் கலங்கியிருந்தது. மனமுந்தான்! முந்திய நாள் கண்டதெல்லாம் கனவோ, நனவோ வெனத் தெரியவில்லை. அல்லது நனவும் கனவும் கலந்த பெயர் தெரியாத ஓர் அநுபவமோ?

அதன் அழுத்தம் நினைவில் இன்னும் கனத்துக் கொண்டிருந்தது. சினிமாவில் அவள் பாடியது செவியில் இன்னும் அலையலையாய் வந்து மோதுகிறது. இசையில் இழைந்த மதுரச் சுவையும், அதன் பொருளில் பொதிந்த கருத்துச் சுவையும் உட்புகுந்து உயிரின் அந்தரங்கத்தையே உலுக்கி ஆட்டுகின்றன.

திரையில் தோன்றியது வெறும் படம்தானா? நிஜமான வாழ்க்கையில்லையா? வாழ்க்கை என்பதுதான் என்ன?

வீட்டில், வெளியில், சுற்றுப்புறத்தில், மெல்ல மெல்லக் காலம் போகிற போக்கில் கனிந்து நடப்பதெல்லாம் திரையில் கணத்துக்குக் கணம் கோவையாய் விரைவாய் நடக்கிறது. மற்றப்படி திரையும், நிஜ வாழ்வும் ஒன்றுதானே.

''ஹரி ஹரி!'' என்று சொல்லி நீருள் மூழ்கினான். அலைகள் வளையம் வளையமாய் அவிழ்ந்து துறையின் கற்படிகளில் இழையிழையாய்ச் சிதறிக்கொண்டிருந்தன.

''ஏண்டா மாது! தீக்ஷிதருக்கு உடம்பு சரியாய்ப் போச்சோ?''

''சரியாய்ப்போச்சு, மாமா!''

''திருவனந்தபுரம் பக்கம் போனால் நான் விசாரிச்சேன்னு சொல்லு!''

''ம்...ம்'' என்று தலையாட்டினான்.

குளித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். கொடியிலிருந்து வேஷ்டியை எடுத்து உதறினான். பிறையிலுள்ள குடுக்கையிலிருந்து நீறு எடுத்து நெற்றியில் வளைத்து வழித்தான்.

''சுமி, தர்ப்பை எங்கே?''

சுமி வந்தாள்.

''எங்கேடா புறப்பட்டே? சாப்பிடல்லியாடா?''

''[illegible]; [illegible] போகணும். குளிக்கும்போதுதான் ஞாபகம் வந்தது. மாஸ்டர் ராமநாதன் வீட்டிலே புண்ணியாகவாசனம்!''

''தீக்ஷிதர் இல்லையோடா?''

''இல்லே; என்னைப் போகச் சொன்னார்.''



தர்ப்பையோடு புறப்பட்டு விட்டான். வயல் வரப்பினிடையே துரிதமாக நடைவிட லானான். வரப்போரங்களில் ஏவுகணைபோல் ஆகாயத்தை நோக்கியிருந்த தவளைகள் ஓடை நீருள்ளும், வயல் நீருள்ளும் குதித்து 'டப்' 'லப்' பெனும் ஒலியை ஜலதரங்க வரிசையாய் ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவைகளில் பெரும்பாலானவை குதித்தபிறகுதான் அவை இருந்தன என்பது தெரிய வந்தது.

காலையின் துல்லிய ஒளி அவன் மேல்லுடலைத் தழுவியிருந்தது. தாழை போல் மேனி. வாழை மொட்டுப்போல் முகவாயில் குவிந்து மேலே பரந்தகன்ற வதனம். சங்காய்ச் சுழிந்த செவி. கருநீலம் வடித்த கண்கள். பின்புறத்தில் மாட்டுத் திமில் போன்று கைக்கடங்காக் குடுமி. சற்றுக் கூர்ந்து நோக்கினும் மெல்லிய பெண்ணின் நிறுக்கல் போல் அரும்பி வரும் குறுமீசை.

வார்ட்டர் வீட்டில் அரை மணி ஓடிவிட்டது. வேலை முடிந்து கையில் வாழையிலையும் அரிசியுமாக வெளியே வந்தான். மீண்டும் வயற்காட்டுப் பாதையைப் பிடித்துவிட்டான்.

வயல்கள் நடுவில் ஓர் அகத்திக் கீரைத் தோட்டம். அதனருகிலுள்ள கிணற்றின் கைப்பிடிச் சுவர் மீது அமர்ந்து கொண்டான். நத்தத்திலிருந்து பாளையங் கோட்டைக்குச் செல்லும் சாலையை வெகு உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

பையன்கள் புறப்பட்டு விட்டார்கள். தூரத்தில் பொம்மைகள் நகர்வதுபோல் நகர்ந்து சென்றார்கள். எல்லாரும் பாளையங்கோட்டைப் பள்ளிக்குச் செல்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே ஒரு தனி இன்பம்!

ராமு, கிச்சா, சீனு யாவரும் போவார்கள். ஆற்றில் குதித்து நீச்சல் அடித்ததும், தோப்பில் புகுந்து சூறையாடியதும் அவர்கள் பேச்சில் அடிபடும்! எல்லாரும் சுதந்திரப் பறவைகள்! தானும் அவர்களைப் போல் இருக்க வேண்டியவன்தானே!

சிறிது நேரத்தில் வண்டிகளும் புறப்பட்டு விட்டன. அவைகளின் 'கலுங் கலுங்' எனும் ஓசை அப் பிரதேசத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் மௌனத்தை உளி வைத்துப் பெயர்க்கின்றாற் போல் கேட்டது.

இதில் ஒன்றில்தான் வசந்தி போவாள். அவர்கள் வீட்டு வண்டியின் அலாரம் 'டங் டங்'கென்று கணீரெனக் கேட்கும். அந்தப் பிரதேசம் முழுதும் அதன் நாதத்தில் மூழ்கி விடும். போகட்டும்! எல்லாரும் போகட்டும்!

மீன் வளைவாய்க் கோணிய கண்களில், கண்ணாடிச் சில் உடைந்து விடப்பதுபோல் நீர் பனித்து விட்டது.

வீட்டுக்கு வந்து விட்டான். கமி அரிசியை வாங்கிப் போய் விட்டாள். திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

''சாப்பிட வரயாடா?''

''வரல்லே, கமி!''

''ஏண்டா, எங்கேயாவது சாப்பிட்டு விட்டாயா?''

''ஊஹூம்; நேத்திக்கு ஒரு சினிமா பார்த்தேன், பாரு! அதிலேர்ந்து ஒண்ணும் சரியா யில்லே....!''

கமி எதிர்த் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். ''அப்படி என்னடா சினிமாவிலே வந்தது?'' என்று கேட்டாள்.

மாது அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''உனக்குப் புரியாது, கமி!''

நண்பகலில் உள்ளே நுழைந்தான். கமி ராட்டையைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

''சாப்பிடறயா?''

''ம்....''

அதுங்கிய அலுமினியத் தட்டில் தும்பைப் பூக்குவியல்போல் சோறு விழுந்தது.

''சாப்பிடும் போது என்னடா, யோசனே?''

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

''நம்ப தரித்திரம் எப்போப்போகும், கமி?''

கமி பதில் மொழியவில்லை. சுற்று முற்றும் நோக்கினாள். கொடியில், பழுப்பேறிய அவள் புடவை கண்ணீர்விடுவதுபோல் ஈரம் சொட்டித் தொங்கியது. நீர்க் கரையேறிய அவன் வேஷ்டி இரும்புத் தகட்டைத் தொங்கவிட்டாற்போல் விறைத்து நின்றது. இருள் பூசி நிற்கும் அடுக்களையில் மோட்டுத் துவாரத்தின் வழியே ஓர் ஒளிக்கற்றை தரையில் விழுந்து, இருக்கும் சாமான்களை எண்ணி விடும் தோரணையில் பார்த்தது.

''தரித்திரம் தவழறதுடா!'' என்றாள் கமி. அவள் முகத்தில் எல்லாம் நிர்மலம்.

சாப்பிட்டு விட்டு வெளித் திண்ணையில் உட்கார்ந்தான். ஸ்தோத்ரப் புத்தகத்தை விரித்தான்.

''பத்மானனு தேவி பத்மஹஸ்தா..''

''தாமரை போல் விரிந்த அபய முத்திரைக் கை!'' அவன் மனம் திமிறி ஓடியது. ''தாமரை போல் முகம்! வெண்தாமரையின் வெண்மையில் துகில்! தாமரை அவிழ்ந்த தென்ன நகை!'' புத்தகத்தை மூடி வைத்து விட்டான்.

மாலையில் திருவண்ணாதபுரம் நோக்கி நடந்தான். தாமிரவருணியின் இரு கரைகளிலும் பக்கத்துக்குப் பக்கமாய் ஊர்கள் குழுமிக் கிடந்தன. ஒவ்வொன்றின் தூரமும் நான்கு பர்லாங்குக்கு மேல் இராது.

தீக்ஷிதர் வீட்டில் அத்யயனம் ஆரம்பமாகி விட்டது.

''ததேதம் தர்ஹி அவ்யாக்ருதம்ஆஸீத்!''

''இதற்கு அர்த்தம் என்ன மாமா?''

''ஆதியில் 'அது' பரிணமிக்காமல் இருந்தது.''

''அது எப்படிப் பரிணமித்தது?''

தீக்ஷிதர் அவனை உற்று நோக்கினார். ''ஏலே, அர்த்தம் கேட்க ஆரம்பிச்சுட்டியா? இந்தச் சின்ன வயசிலே அதிலே ருசி விழப்படாதே!''

''பரவாயில்லே, சொல்லுங்கள்!''

'''ஸோகாமயத' 'அவன் காமுற்றான்', அல்லது அது ஆசைப்பட்டது. அசைவு கொண்டது. வடிவங்களாகவும் பெயர்களாகவும் பரிணமித்தது!''

திடீரென்று அவன் காதுகளில் 'டிங் டாங்' ஓசை விழுந்தது. வசந்தி வீட்டு வண்டியா? பிரமையா? அல்லது நிஜமா?

உண்மைதான்! வண்டி தீக்ஷிதர் வீட்டு வாசலில் நின்றது. அனந்தநாராயணன் இறங்கினார்.

''வர வியாழக்கிழமை கடைசிப் பையனுக்கு ஆண்டு நிறைவு. வந்து நடத்தித் தரணும்!''

''ஆஹா! அதுக்கென்ன?''

வண்டி திரும்பியது. அது திரும்பிய அந்தக் கணத்துள் அவன் பார்வை வண்டியுள் விழுந்தது. அந்தக்கணத்தில் நினைவு அழிந்து எங்கோ பறப்பது போல் இருந்தது. வசந்தி எப்படி வளர்ந்திருக்கிறாள்! சந்தனத்தைக் கடைந்தது போல் மேனி நிறம். பிரளய கால இருளைக் காட்டும் சிறு சாளரங்கள் போல் கண்கள். மனத்துள் நேற்று முதல் குழம்பிக் கொண்டிருந்தது சட்டெனத் தெளிவது போல் இருந்தது. சினிமாத் திரையில் வந்த பெண்ணுக்கும் இவளது உருவந்தான்! அதனால்தான் மனம் கலங்கியிருக்கிறது.

வண்டி போய் விட்டது. அதன் 'ஜல் ஜல்' இசை எங்கோ ஏதோ நர்த்தனமாடிக் கொண்டிருப்பது போல் பிரமை உண்டாக்கியது.



மனம் 'லோகாமயத! லோகாமயத!' என்று இசை யோடு உச்சரிக்கத் தொடங்கியது.

வியாழக்கிழமை ஆண்டு நிறைவு நடந்து கொண்டிருந்தது. மேளம் கொட்டியது. புகை வளர்ந்தது. வான வில் பிறங்கித் தனித்தனி வண்ணமாய்ப் பிரிந்து நிற்பது போல் வெவ்வேறு நிறங்களில் புடவைகள் மின்னின. சந்தனமும் பன்னீரும் மணந்து வழிந்தன.

அவன் மனத்தில் ஏதோ ஓர் ஒட்டாத உணர்ச்சி! ஹோமம் முடிந்து விட்டது. தீக்ஷிதர் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார்.

''ஏண்டா, மாதூ? மந்திரத்தை மறந்துட்டியா என்ன? திக்கறியே!''

'' தலைவலி ரொம்ப அதிகமாயிடுத்து. மாமா .... வீட்டுக்குப் போயிடலாம்னு பார்க்கிறேன்.....!''

''சரி, செய்!''

வாசற்படியில் காலை வைப்பதற்குள் ஒரு குரல் அவன் காதில் விழுந்தது.

''கமலி! இங்கே தட்டைக் கொண்டா!''

அது அவளாகத்தான் இருக்க வேண்டும். குரல் பழகியது போல் பட்டது.

இரும்பினான். மீண்டும் நீரை விழுந்து உயிர் எங்கோ பறப்பது போல் இருந்தது. விறு விறென வெளியே வந்தான். மேனி எங்கும் சிலிர்த்து விட்டது. ரேழியில் குமைந்த இருளில் அவள் முகம், நுரை விழுந்த பால் போல் வெண்மை மிதப்பட்டுத் தெரிந்தது. கடைந்த கருந் தேக்குக் குமிழ்கள் போல் பளபளத்த கண்கள்தாம் அவன் உள்ளத்தில் அடிக்கடி மின்னி மறைந்தன.

வீட்டுக்கு வந்தான்.

''கமி, எனக்குச் சாதம் வடிக்கணும்!''

''ஏண்டா, நீ நந்தத்தில் அவர்கள் வீட்டில் சாப்பிட வில்லையா?''

''ஊஹூம்!''

கமி அவனைப் பார்த்தாள். பேசாது அடுக்களையுள் புகுந்தாள். ஓலைகள் எடுபடும் சொர சொர வென்னும் சத்தம் கேட்டது.

''என் மேலே கோபமா, கமி?''

''எனக்குக் கோபம் வந்து என்னசெய்றது? இஷ்டப் பட்டாலும் விருந்துச் சாப்பாடு நம்ப வீட்டிலே பண்ண



முடியாது. கிடைச்ச இடத்திலே நன்றுக் சாப்பிடணும். நீ எங்கே நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்கே? நெஞ்செல்லாம் எலும்பு தெரியறது!''

''நான் அங்கேயே சாப்பிட்டிருப்பேன், சுமி! ஆனால் சாப்பிடறது அவமானமாயிருந்தது.''

''அப்படி அவமானப் படும்படியாக அங்கே என்ன வந்து விட்டது?''

''உனக்குப் புரியாது, சுமி!''

இரவில் சுமி விளக்கேற்றிய பொழுது, மாது சுலோகம் சொல்ல ஆரம்பித்தான். ''ஸர்வ மங்கள மாங்கல்யே...'' அவன் குரல் இன்னும் உடைய வில்லை. கனியில் ஊடுருவி நிற்கும் இனிமை போல் கண்டத்தில் மதுரம் நிறைந்திருந்தது.

சுலோகம் முடிந்ததும் மாது திரும்பிப் பார்த்தான்.

சுமி நிலவை ஆழ்ந்து பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

''நீ இங்கேதான் நின்று கொண்டிருந்தாயா, சுமி?''

''உன் குரல் நன்றாக இருக்கு. அதிலே ஏதோ ஒரு சோகம் நூலிழையாய் ஓடறதுடா!''

''சோகமா? நம்ப வாழ்க்கையே அப்படித்தானே இருக்கு, சுமி! எனக்கே ஆச்சரியமாயிருக்கு! எப்படி இந்த மாதிரி நாதியில்லாமல் போனோம்?''

''நீ பிறந்த போது உங்க அம்மா விதவை! தமக்கையோடு—அதாவது எங்கம்மாவோடு—வாழ அவள் இங்கு வந்தாள். பிறகு அவள் இறந்தாள். பிறகு நீ தனிமையானாய்!''

''ம்.''

''என் அம்மாவும் அப்பாவும் பிறகு ஒருவர்பின் ஒருவராய் மறைந்தார்கள். நான் தனிமையானேன்!''

சுமி மர அழிகளில் நெற்றியை அழுத்தி நிலவை நோக்கினாள். ''அவர்கள் தரித்திரத்தை நமக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு எல்லாரும் போய் விட்டார்கள்.''

நவராத்திரி ஆரம்பமாகி விட்டது. ஏழாவது தினம். மாலை மூட்டமாகக் கிடந்தது. நிசியைப் பெயர்த்தெடுத்து உதிர்த்து விட்டாற்போல் அதற்குரிய நிசப்தம் அப்போதே இறங்கி விட்டது.

''மாது!''

உள்ளே மாது அரிக்கேன் விளக்கடியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இதோ, வந்தேன்!''

வாசலில் தீக்ஷிதர் வந்து நின்று கொண்டிருந்தார்.

''நத்தத்துக் கோவிலிலே இன்னிக்கு அனந்தநாராயணன் வீட்டுக் கட்டளை. நீயும் வரணும்!''

''நானு?''

''ஆமாம், நீ அம்பாள் ஸ்தோத்திரம் நன்றாகப் பாடுவேன்னு நான் சொல்லி விட்டேன். உன்னே அவசியம் அழைத்து வரும்படி அனந்து சொல்லிவிட்டார்.''

மாது தயங்கினான்.

''என்னடா, தயக்கம்?''

''ஒண்ணுமில்லே. வரேன்!''

கோவிலில் பெட்ரோமாக்ஸ் இரைந்து கொண்டிருந்தது. அதன் ஒளி வெள்ளை யடித்த தூண்களில் பாலாய் வழிகிறது; ஜிகினாப் பட்டைகளில் அனலாய் ஜொலிக்கிறது;] பெண்களின் வதனங்களில் பட்டாய்ப் படிகிறது.

மாதுவின் மனம் சிலிர்த்தது. ''ஒளி ஒன்றுதான். பலவாகப் பரிணமித்துள்ளது'' என்று எண்ணினான்.

''ஸர்வ மங்கள மாங்கல்யே..'' மாது இசை எழுப்பினான். மண்டபம் முழுதும் ரீங்கரித்துப் பாடல் நிரம்பியது. மங்களமே உள்ளே புகுந்து நிறைவது போல் தோன்றியது. பாடல் முடிந்த பின் பல கணங்கள் அங்கு நிசப்தம் நிலவியது.

அனந்தநாராயணன் மனைவி அவனுக்குப் பெரிய தட்டில் வெற்றிலை பாக்குக் கொடுத்தாள். அதை வாங்கும்போது அவன் பார்வை அருகில் நின்ற வசந்தியின் மீது சென்றது. ஒளியின்முன் தங்கத் துகள்களைத் தூவி விட்டாற்போல் அவள் மேனி முழுதும் ஜொலித்துக் கொண்டிருந்தது. செவி வரை நகக் கீறலாயில் தோன்றிய கண் சிறிது திறந்த மைச் சிமிழ் போலிருந்தது. அவளுடைய கண்கள் அவன்மீது படிந்தன.

வழியில் நடையே கொள்ள வில்லை. 'அவள் நம்மைத்தானே பார்த்தாள்? நிச்சயமாகப் பார்த்தாளா? அல்லது அவள் விழியின் கருமை ஏமாற்றி விட்டதா?'

வீட்டுக்கு வந்தான்.

''சுமீ....சுமீ...''

சுமி முற்றத்தில் அமர்ந்திருந்தாள். அவன் மெதுவாக அவளருகில் நின்றான். அவள் திரும்பவில்லை. வான்வெளியை நோக்கிக் கொண்டிருந்தாள். அடிக்கடி இப்படித்தான் பார்க்கிறாள். மேகம் அவளிடம் ஏதாவது பேசுமோ?

''சுமி...'' அவன் குரல் அவனுள்ளேயே அமுந்தியது. அவள் அவனைப் பார்த்து விட்டு மீண்டும் திரும்பி விட்டாள்.

இதுவும் அவள் வழக்கமான செயல். ராட்டை சுற்றும் போதும், புத்தகம் படிக்கும் போதும், வான வெளியை நோக்கும் போதும் அவள் யாரையும் சட்டை செய்வதில்லை.

''நட்சத்திரம் ஏதாவது பேசுகிறதா, சுமி?''

''பேசுகிறது: எப்போதும் மேகம் மறைத்து நான் ஒளியிழந்து நிற்கிறேனே என்று புலம்புகிறது!'' என்றாள். சொல்லியவள் மெல்லச் சிரித்தாள். அவள் கண்களில் இரு தீபங்கள் ஆடின.

அன்று இரவு வீதியில் ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது. சியாமளய்யரின் பெண்ணுக்குக் கல்யாணம்! மாப்பிள்ளை பவனி வந்துகொண்டிருந்தார்.

மாது வெளியே நின்றான். சுமி ஒருக் களித்த கதவில் தலைசாய்த்து நின்றாள்.

''இப்படி வந்து நில்லேன், சுமி!''

''ஊஹூம்; வேண்டாம்!''

''சும்மா, வா, சுமி!''

சுமி ஒற்றைப் படி தாண்டி வந்து ஒதுங்கி நின்றாள்.

''இங்கே வெல்லாம் நான் வந்து நிற்கப்படாதுடா! 'குதிர் மாதிரி வெளியே நிக்கறது'ன்னு சொல்லப் போறா?''

''நீ அப்படியாயிருக்கிறாய், சுமி?''

''பின்னே வளர்த்தியாயில்லையா? பெண்களுக்கு வளர்த்தியும் ஒரு விரோதி, வசதியில்லாத பெண்களுக்கு வயதே ஏறக் கூடாதுடா!''

அவன் அவளைப் பார்த்தான். சோழியின் வாயில் தோன்றும் வரைகளைப்போல் இமை. அதனடியில் இருட்பாழாய்க் கிடந்த கண்கள். அதனுள் ஆடிக் கொண்டிருக்கும் இரு தீபங்கள்! முகத்தைத் தோள் வளை மீது சிறிதே சாய்த்திருந்தாள். அந்த முகச் சரிவில் ஏற்பட்ட இருகளில் செவியருகே அவள் குழல் கருநாகம் படம் விரித்திருப்பது போல் விரிந்திருந்தது.

''சுமி, எனக்கு ஒரே ஒரு பெருமை!''

''என்னது, மாது?''

''நிலமில்லே; பொருளில்லே; நான் உன் நிழலில் நிற்கிறேன். அதுவே எனக்குப் பெருமை! உன் தேஜஸுக்கு யார் ஈடாவார்கள், சுமி?''

சுமியின் முகத்தில் முறுவல் கூடி அதரம் வரையில் பரவி அங்கு முதிராது நின்று விட்டது.

ஊர்வலம் நகர்ந்த பிறகு ''மாது!'' என்று அழைக்கும் குரல் கேட்டது. அவன் திரும்பினான். பெண்கள் பகுதியிலிருந்து அனந்தநாராயணனின் மனைவி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

''ஏண்டா, அப்புறம் வரவேயில்லே? வர வெள்ளிக்கிழமை வந்து வீட்டிலே சுலோகம் சொல்லுடா! இன்னும் ஒரு தரம் கேட்டால் போதும்! எனக்கு நெட்டுருவாயிடும்!''

''வரேன்; வ...ரேன்'' என மாதுவின் நாக்குக் குழறியது. பின்னாலிருந்து வந்த வசந்தியும் தன் தாயுடன் கலந்து கொண்டாள். ஆகாய நீலம் அவள் மீது கொடி போல் படர்ந்து விட்டதோ எனும்படி நீலத் துகில் உடுத்திருந்தாள். கழுத்தைச் சுற்றித் தீ நாக்குகள் போல் அவள் தரித்த நகைகள் மின்னின.

இருவரும் சுமியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

''என் அக்காள்!'' என்று பெருமை வழியக் கூறினான் அவன்.

அவர்கள் நகர்ந்தனர்.

அவர்களை அவன் பார்த்துக்கொண்டேயிருந்தான். திரும்பிய போது சுமி போய் விட்டிருந்தாள். அவன் முற்றத்தை அடைந்தான்.

''என்ன யோசிக்கிறே, சுமி!''

''நண்டுக்கும் சிண்டுக்கும் கல்யாணம் ஆகிறது பார்த்தியாடா?''

''யாருக்கு?''

''சியாமளய்யர் பெண்ணுக்குத் தான். என்னைவிட எட்டு வயதுக்குச் சின்னவடா அவள்!'' சுமி மீண்டும் வான வெளியை நோக்க ஆரம்பித்துவிட்டாள்.

மாது அவளையே உற்று நோக்கினான். ''என் பெருமையிலே பங்கெடுத்துக்கவே மாட்டேங்கறே!'' என்றான் அவன்.

அன்று மாது நத்தம் புறப்பட்டான். மழை மூட்டம் கரும் பச்சையாய்ப் பரவிக் கிடந்தது. பூமியின் மீது மெல்லிய சல்லாத் துணி போல் ஒரு மெல்லிய ஒளி தோய்ந்து கிடந்தது. அந்த ஒளியில் கனவுக் காட்சிகள் போல் வயல்களும் வீடுகளும் தெரிந்தன.

அவன் நடந்தான். தூறல் விழ ஆரம்பித்து விட்டது. நடையைத் துரிதமாக்கினான். மதகடி மாமரத்தை அடையு முன் மழையாய்ப் பலத்து விட்டது. மரவடியில் ஒதுங்கிக் கொண்டு வடிகாலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மழை பூமியுடன் கூடிப் பிணைந்து விட்டது. மின்னல்கள் முகில்களைக் கோதி விட்டுக் கொண்டிருந்தன.

''சாமீ!'' எங்கிருந்தோ கூப்பிடுவது போலிருந்தது. திரும்பினான். சாலையில் அனந்தநாராயணன் வீட்டு வண்டி நின்று கொண்டிருந்தது.

''ஏறிக்குங்க, சாமி!'' என்று வண்டிக்காரன் இரைந்தான்.

ஒருகணம் தயக்கம். மறுகணம் ஓடி ஏறிக் கொண்டான். படுதாவை நீக்கி உட்புகுந்து உட்கார்ந்ததும் வசந்தி அமர்ந்திருப்பது தெரிந்தது. வண்டி புறப்பட்டு விட்டது.

அவள் குனிந்த தலையுடன் புத்தகத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். பின்னல் முன்புறம் விழுந்து, குருத்துக் கழுத்தின் பிடரிச் சுழிகளைக் காட்டிக் கொண்டிருந்தது.

அவன் தலை குனிந்து கொண்டான். மனத்தின் ஆழத்தில் துக்கத்தின் சிறு பிறை துளிர்த்து விட்டது. அதன் காரணமும் புரியவில்லை.

அவர்கள் வீட்டை அடையுமுன் மழை நின்று விட்டது. ரேழிக்கு அடுத்த அறையில் அம்பாளின் பெரிய படமொன்றை வைத்திருந்தார்கள்.

''ஸர்வ மங்கள மாங்கல்யே......'' அவள் இசையில் ஏக்க இழைகள் கழித்துக் கொண்டிருந்தன.

விடைபெற்று வெளியே வந்தபோது திண்ணைத் தூணைப் பிடித்துக் கொண்டு வசந்தி நின்று கொண்டிருந்தாள். அவளிடம் ராமு பள்ளிக்கூடப் பாடங்களைத் தர்க்கித்துக் கொண்டிருந்தான். ஒரு கணம் வாயிலில் நின்றவன் பிறகு விரைந்து நடக்கலானான்.

ஊருக்கு வந்து விட்டான். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். கண்களில் நீர் புரண்டு வந்தது. தானும் பள்ளியில் படிக்கும் போது அவள் எவ்வளவு தடவைகள் பேசியிருக்கிறாள்! இப்போது அவனுக்கு என்ன வந்தது?

இருட்டி விட்டது. கமி வெளியே வந்தாள்.

''எப்போதடா வந்தே?''

''இத்தே முன்னாலேதான்.''

''என்ன யோசனையோ?''

''இனிமேல் இந்தத் தர்ப்பையைத் தூர எறியப் போறேன், கமி!''

கமி எதிர்த் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். ''அப்புறம்?''

''குடுமியை எடுத்துவிடப் போறேன். படிக்கப் போறேன்.''

''பணம்?''

''நீதான் உன் தம்பிக்குச் சம்பாதித்துப் போடக் கூடாதா?''

''இஷ்டந்தான். ஆனால் வழி? நான் முழுதும் ராட்டையைச் சுற்றினாலும் முக்கால் ரூபாய்தான் கிடைக்கிறது. இதுக்கு மேலே என்ன செய்வேன்? சமையலுக்கு மாதிரி ஊரெல்லாம் என்னைக் காரியம் செய்யச் சொல்றியா? அவ மாதிரி அவப் பெயரும் கேட்டுக்கச் சொல்றயா?''

''அப்படிச் சொல்வேனா, கமி?''

''பின்னே என்ன செய்ய? அப்படி அதிகம் சம்பாதிக்க முடியுமானால் பாளையங்கோட்டைத் 'தையல்' வகுப்பில் சேர்ந்து எனக்கு வழி ஏற்படுத்திக்க மாட்டேனா?''

மாது மௌனமானான்.

அன்றிலிருந்து அவன் வெளியே போவதில்லை; கல்யாணத்துக்குப் போவதுமில்லை. ரெத்தப் புத்தகங்களைத் தூக்கிப் பரணில் எறிந்து விட்டான்.

தாமிரவருணியில் நீர் புரண்டு ஓட ஆரம்பித்தது. கண்ணுக்கெட்டிய வரை ஜலப் பிரளயம்! பூமியை இரண்டாக



பிளந்து செல்வது போல் பெருமிதத்துடன் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

மாது வெள்ளத்தையே பார்த்து நின்று கொண்டிருந்தான். மனத்தில் பேரிரைச்சலுடன் ஏதோ ஒரு வெள்ளம்! நத்தம் போக வேண்டுமென்று எண்ணம் எழலாயிற்று.

ஊர் இருந்த திசையை நோக்கினான். தென்னஞ் சோலைகளுக்கிடையே கிராமத்து வீடுகள் அடுக்கிக் கிடந்தன. நத்தத்துச் சாலையின் ஒரு பகுதியை வெள்ள நீர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. நடக்கலானான். ஒரு பர்லாங்கு தூரம் நீருள் மூழ்கிய சாலையில் நடக்க வேண்டும். இடுப்பளவு ஆழந்தான் இருந்தது. கடந்து போய் விட்டான்.

நத்தத்தின் கோவிலருகே நின்றான். ஏன் இங்கு வந்தோம் என்று மனம் எண்ணலாயிற்று. திரும்பி விடலாமா?

சிறு அரவம் கேட்டுத் திரும்பினான். எதிரே தீக்ஷிதர் வந்து கொண்டிருந்தார்.

''புண்ணியாகவாசனங்களுக்குக் கூட நான் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போச்சுடா மாது! ம்... சௌக்கியமா யிருக்கியாடா பயலே! ஜூன் பிறந்துதானே பள்ளிக்கூடம்!''

''ஆமாம், மாமா!''

''படிக்கப் போறியாமேடா! படிச்சுப் பெரிய பதவியெல்லாம் கிடைக்கணும்டா!''

குத்தலாகப் பேசிவிட்டுத் தீக்ஷிதர் தன் வழியைப் போனார். அவன் நடக்கலானான். அனந்தநாராயணன் வீட்டருகில் முகத்தைத் திருப்பினான். அங்கே வாசல் திண்ணையில் வசந்தியும் பாருவும் தாயக் கட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். அவன் மனம் திக்கென்றது.

''டேய், மாது!'' பாருதான் கூப்பிட்டாள். அவள் அவனுடன் படித்தவள். அவளுக்கு வாய் அதிகம்.

''எங்கேடா, வந்தே?''

மாது சார்புக் கூரையின் மூங்கில் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

''இதென்னடா, தலையெல்லாம் காடு மாதிரி வளர்த்திருக்கே?''

''நான் கிராப்பு வச்சுக்கப் போறேன்; அப்புறம் ஸ்கூல்லே சேர்ந்து படிக்கப் போறேன்!''

''ஐயையே! இத்தனை வயசுக்கு மேலேயா?'' இருவரும் மணிகள் புடைத்துச் சிதறுவது போல் சிரித்தார்கள்.

''இப்போப் படிக்க ஆரம்பிச்சு, எப்போப் பாஸ் பண்ணி, எப்போ உத்தியோகம் பார்த்து....'' பாரு இழுத்தாள். இருவரும் மீண்டும் சேர்ந்து சிரித்தார்கள்.

மாது திரும்பலானான். மனத்தில் அவர்கள் சிரிப்பு உருண்டது. அந்த ஒலியில் குரூரமையுடைக் கூர் முட்கள் நிறைய இருந்தன. மனத்தை அறுக்கத் தொடங்கி விட்டது.

மீண்டும் வெள்ள நீர் நிரம்பிய சாலை! அதில் வரும்போது ஒரு காட்சி அவனைக் கவர்ந்தது. நீர் மறைத்து மூடிய ராஜா ஓடை அருகில் யாரோ ஒருத்தி தத்தளித்துக் கொண்டிருந்தாள். மாது தலைப்பாகை கட்டிக் கொண்டு நீரில் மூழ்கித் தாவி ஓடினான்.

அருகில் சென்றதும் அவன் திடுக்கிட்டான். அவள் கமிதான்!

நீரின் பல்வேறு சுழிப்புகள் அவளை மத்தாகக் கடைந்து கொண்டிருந்தன. கையில் பையுடன் அவள் திணறிக்கொண்டிருந்தாள்.

மாது அவளுக்குக் கை கொடுத்து இழுத்தான். இருவரும் கரை சேர்ந்தார்கள்.

''இதென்ன, கமி? எங்கே புறப்பட்டாய்? இதென்ன பை?'' பையுள் அவன் கண் சென்றது. உள்ளே அப்பளக் கட்டுக்கள் அடுக்கியிருந்தன.

கமி மௌனமாய் நின்றாள்.

''சொல்லு, கமி!''

''இரண்டு வாரங்களாய்க் கட்டுகளைப் பாளையங்கோட்டைக் கடைகளில் விலைக்குக் கொடுத்துச் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன். நம் ஊரில் விற்றால்தானே கேவலம் என்பார்கள். நான் கண் காணாத இடத்தில் விற்கிறேன்.''

மாது திடுக்கிட்டு அவளை நோக்கினான்.

''இதில் வருத்தமோ, ஆச்சரியமோ பட ஒன்றுமில்லை, மாது! நீ பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிக்கணும். நாமப வாழணும்!'' அவள் காதுகளில் சிரிப்பொலி விழுவது போல் பிரமை ஏற்பட்டது. அதன் பொருள்? புரியவில்லை!

அன்று இரவு ஒரே கனவுத் தூக்கம்.

மாது கண்ணை விழித்தான். போது விடிந்து நாழிகையாகி விட்டது. கமி எங்கே? அவள்தான் அவனுக்குச் சரண்! அவனைக் காக்கும் தெய்வம்! அவளை அப்பளம் விற்க விட்டுத் தான் படிக்க வேண்டுமென்ற ஆசையே அவனுக்கு இப்போது இல்லை.

அவன் புறக்கடை நோக்கி ஓடினான்.

''கமி, கமி!'' அவன் குரல் வாயுள்ளேயே அடங்கிவிட்டது.

அவன் திடுக்கிட்டு நின்றான். புறக்கடை மண் சுவருக்கருகில் கமி சுந்தரத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். அவளது கம்மிய குரல் அவன் காதில் விழுந்தது.

''நான் யாரோ ஒருத்தி பட்டிக்காட்டில் இருப்பவள். என்னைப் பற்றி யார் நினைக்கப் போகிறீர்கள்?''

''நான் அப்படியில்லை; கமித்ரா! எங்கே போனாலும் உன் நினைவு என்னிடம் தங்கியிருக்கும்!''

''நிஜமாகவா?''

''நிஜந்தான், கமி! என்னை நம்பு, கமி! நான் வரட்டுமா?''

மாது பிரமித்து நின்றான். அவன் மனத்துக்குள் முன்பு இருண்டிருந்த பகுதியில் ஏதோ சட்டெனப் புரண்டு படுத்தாற்போல் தோன்றியது. புரண்ட இடங்களிலெல்லாம் பளிச்சென்று வெளிச்சம் புகுந்து நிறைந்து விட்டது.

'கமியும் இந்த அவஸ்தைக்குள்ளானளா?' என்று மனம் எண்ணியது. வெளி வாயிலுக்குச் சென்றவன், குளித்து விட்டு உள்ளே நுழைந்தான். கமி கவிழ்ந்த தலையுடன் கையால் முகத்தை மூடியவாறு அமர்ந்திருந்தாள்.

''கமி! என்னைப் பாரு!''

கமி ஏறிட்டாள். ''ஏன்டா; தலையை எப்போதடா வெட்டிண்டே? குடுமி அழகா யிருக்கே!''

''தர்ப்பையைத் திரும்பப் பிடிச்சுட்டேன், கமி! நாளையிலிருந்து நீ ராட்டை சுத்தறதை நிறுத்தணும். அதை நான் சுத்திப்பேன். நீ தையல் வகுப்புக்குப் போகணும்! நான் சம்பாதிப்பேன்! உன் 'விருப்ப'மெல்லாம் நிறைவேறணும்!''

நாட்கள்தான் என்ன ஆனந்த மயமாகி விட்டன! வானம் நீலம் கொட்டியிருக்கிறது. வையம் பச்சை இழைத்திருக்கிறது. ஓடைகள் விம்மிப் புடைத்து விரிசல் காண்கின்றன. மரங்கள் பூத்துக் குலுங்கிப் பூச்சரம் உதிர்க்கின்றன.

கை ராட்டை என்னமாய்ச் சுழல்கிறது? நூல் அநாயாசமாய் உற்பவித்து வருகிறது. பஞ்சுக் குவியல் மாயமாய் மறைந்து விடுகிறது.

தீக்ஷிதர் அத்யயன வகுப்பில் சிரிக்கிறார். ''உயிர்ப் பிடியைப் போல் மனசு பிடிச்சுட்டுதுடா! அதனாலே உன் மெலிவும் வெளிறிய உடம்பும் ஆகிப் போச்சுடா உனக்கு!'' என்கிறார்.

அவன் நினைவில் ஒன்றே ஒன்றுதான்! கமியின் வாடிய முகம் சுடர்த்துக் கொழிக்க வேண்டும்.

இடையிடையே கண்களில் நீர் வெட்டிய நூல் போல் பளபளக்கிறது. வசந்தியின் நினைவு வந்து செல்கிறது. அவளை இப்போது காண முடிகிறதேயில்லை. படிப்பை நிறுத்தி விட்டாளாம்.

அவனுக்கும் தனக்கும் என்னதான் உறவு? அந்தச் சினிமாக் கதைதான் மனத்தைக் குழப்பியது! அதில் அந்த ராஜகுமாரிக்கும் ஏழைக் கவிக்கும் ஒருவர் மீது ஒருவர் பற்று! ஆனால் இங்கே... அவன்தான் பற்றுக் கொண்டவன்! வசந்தி...? அவனது பற்றுக்குப் பொருள் என்ன? முடிவு என்ன? ஒன்றும் புரியவில்லை......

கமித்ரா! இப்போதெல்லாம் அவள் உட்கவிந்து விட்டாள். கண்ணீரும் பெருமூச்சுமே அவள் வாழ்வாகி விட்டன. அவள் முகத்தில் புன்னகை என்று முற்றி வழியுமோ, தெரியவில்லை!

ஒரு வாரம் தீக்ஷிதருடன் வெளியூருக்குப் போயிருந்தான். அன்று அவன் தன் ஊருக்குத் திரும்பும் வழியில் நத்தத்துக் கோவில் மணிகள் பிளிறிக் கொண்டிருந்தன. ஏதாவது அபிஷேகமோ, என்னவோ! உள்ளே அம்மனைத் தரிசிக்க எண்ணம் ஓடியது.

கருவறையில் விளக்குகளின் எழிற் சொட்டுகளுக்குப் பின்னே அம்மனின் உரு அருள் சொட்டி நின்றிருந்தது. படிகளைத் தாண்டியவன் ஒருகணம் மெய்ம் மறந்தான். பார்வை அங்கிருந்தோர் மீது படிந்தது. அனந்தநாராயணனது குடும்பந்தான்!

யார் இவள்? வசந்தி முதன் முதலாகப் பெரிய பெண்ணைப் போல் புடவையுடுத்தி நின்று கொண்டிருந்தாள்.

''நல்ல சமயத்துக்கு வந்தேடா மாது! ஸ்தோத்திரம் பாடு'' என்று அனந்துவின் மனைவி கூறினாள்.

மாது ஆரம்பித்தான். குரலில் இப்போது பிசிறுகளே இல்லை! உருக்கத்தில் சலசலக்கும் ஓடையாக இசை இருந்தது.

பாடல் நின்றது!

''அடுத்த மாசம் வசந்திக்குக் கல்யாணம்டா! கட்டாயம் வந்துடு.''

அவன் கையில் பிரசாதம் விழுந்தது. அதற்குள் அவன் மனம் எங்கேயோ விழுந்து விட்டது.

வெளியில் வந்தான். கண்களில் மளமளவென நீர்! அதற்கு அர்த்தமேயில்லை. அவள் பூமியில் எங்கோ வாழ்கிறாள் என்ற நினைவே அவனை ஜீவிக்க வைக்கும் உணர்வாகி விட்டது.

அவள் தேவதை! அவன் அதைத் தூர இருந்து வழிபடும் பக்தன்! சரீர விழைவுகள் அகன்ற தூய அன்புதானே பக்தி! அவள் மீதும் அவனுக்குப் பக்திதான்!

இந்த எண்ணத்தின் எழுச்சி, அவன் மனத்துள் இத்தனை நாட்களும் இனம் விளங்காது நின்ற கேள்விக்கு விடையாகி விட்டதுபோல் தோன்றியது. அன்புக்கும் பக்திக்கும் எவ்வளவு சிறிய இடைவெளி! இதைக் கமி அறிவாளா?....

கமி அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவள் அன்பு பரஸ்பரத் தன்மையானது. தன்னுடையதைப் போல் ஒருமுகமானதல்ல! அவள் வாழ்வு கூடிவிட எப்படியும் தான் வழி செய்ய வேண்டும்!.......

ஊரை நோக்கி விரைந்து நடந்தான். 'கமி! கமி!' என அவன் மனம் இரைந்து கொண்டிருந்தது.

வீட்டுக்குள் நுழைந்தான்.

''கமி!''

கதவுகள் திறந்துகிடந்தன. கொல்லை வரை வெட்டவெளியாய்க் கிடந்தது.

''கமீ......''

கமி புழக்கடை மண் சுவருகில் நின்றிருந்தாள். அவள் எதிரே சுந்தரம்! கமி ஏன் விக்கி விக்கி அழுகிறாள்? அவன் மனம் துடிக்க ஆரம்பித்தது. அவன் செவியில் சுந்தரத்தோடு அவள் பேசுவது கேட்டது.

''நீங்கள் பழகியது அதே ரீதியிலா?''

''வேறு எப்படி கமி? பட்டணத்திலே கூட இப்படித்தான்! எல்லோரிட்டேயும் ஜாலியாய்ப் பேசுவோம்; பழகுவோம்! இதற்கு வேறு பொருள் எதுவும் கிடையாது!''

அவள் உடல் விம்மலில் குலுங்கியது.

''என் மனசு அதை வேறுவிதமாக எடுத்துக் கொண்டு விட்டது சுந்தரம்!''

''அப்படி எடுத்துக் கொண்டிருந்தால் அது பிசகு...''

''பிசகல்ல! நிச்சயம் பிசகல்ல!'' அவள் ஆக்ரோசத்துடன் சீறினாள். சுந்தரம் பதில் பேசாது நின்றான். பிறகு நடக்க ஆரம்பித்தான். கமி நடந்து செல்கிற அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கமீ..!'' மாது விரைந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். அவள் முகத்தில் வெள்ளமாய் நீர்!

''அவர் என்ன சொன்னார், கமி?''

அவள் முகத்தை மூடிக் கொண்டாள். இருவரும் உள்ளே சென்றனர். அவள் படுக்கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

''கமி, சொல்லு, கமி!''

அவளது விக்கல்கள் சுவர்களில் ஒலித்து முட்டி மேலே செல்ல முடியாமல் நின்றன. அந்த விக்கலும் அடங்குவதற்குச் சிறிது நேரமாகியது.

''என்ன சொன்னார், சொல்லு, கமி!''

அவள் தலை நிமிர்ந்தாள். அவள் குரல் கம்மியது.

''கமி! நீ அவருக்கு உன் சம்மதத்தைத் தெரிவிச்சயா?''

''எதற்கு?''

''தெரிவிச்சாத்தானே அவர் புரிஞ்சிப்பார்! அவர் உன் மீது....''

''அன்பா? சீ...சீ... நானும் நினைச்சேன்! எல்லாம் பொய்! பெண்களோடு பழக வேண்டுமென்ற அற்பச் சபலந்தான் அது! ஆண்களுக்கு ஏற்படும் இந்த விவஸ்தைக்கு முடிவே கிடையாது!''

''நீ என்ன சொல்லறே கமி?''

''உனக்குப் புரியாதுடா!''

மாது திருப்தி கொள்ளவில்லை.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்று தான்! இருவர் மனங்கள் சம்மதித்தால் அவர்கள் ஒன்றுபட வேறுதடையே கிடையாது. அந்த சினிமாக்கூட அப்படித்தான் நடந்தது. கமி இயற்கையிலேயே வெட்கமுடையவள். வெட்கத்தின் தன்மை அவனுக்குச் சரியாகத் தெரிந்துகொள்ள வில்லை. பேச்சை எங்கோ திரித்து விட்டாள்.

பரபரவென்று கொடித் துண்டை இழுத்தான். மேலே போர்த்திக்கொண்டு வெளியே வந்தான். மேற்கே சுந்தரத்தை ஏற்றிக் கொண்டு வண்டி போய்க் கொண்டிருந்தது. மாது வண்டியை நோக்கி ஓடலானான்.

''சுந்தர மாமா! சுந்தர மாமா!''

அவன் ஓடி வருவதைக் கண்டு வண்டி நிற்பது தெரிந்தது. இரைக்க இரைக்க ஓடி வண்டியை எட்டிவிட்டான்.

''என்னடா மாது!'' என்றார் சுந்தரம்.

''கமிக்குச் சம்மதம் மாமா! கமிக்குச் சம்மதம்!'' மூச்சு இழைய நடந்து வந்த இரைப்போடு கூவினான் மாது.

சுந்தரம் இலேசாகச் சிரித்தார். சிரித்துக் கொண்டே வண்டிக்காரனுக்குச் சைகை செய்தார். வண்டி புறப்பட்டது.

மாது திகைத்து அங்கேயே நின்றான். அவன் காதுகளில் கமியின் குரல் கேட்பது போலிருந்தது.

''உனக்குப் புரியாதுடா மாது!''

முன்பு ஒரு தடவை அவனுக்குப் புரியாது என அவன் எதைப் பற்றிச் சொன்னானோ, அதுவே இப்போது அவனுக்குப் புரியாதென்று அவள் சொல்கிறாள்.


புனித ஸ்நானம் செய்து
புத்தாடை உடுத்தி இருக்கும்
இந்நன்னாளில் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்!
காமதேனு வனஸ்பதி * மேட்டூர் சந்தன சோப்
காவேரி பார் சோப் * காவேரி சூபர் சோப்
தயாரிப்பாளர்கள்:-
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

மஹன மங்கலம்

"மணக்கிள்ளி வளவனுடைய ஆட்சியிலும் இப்படி ஒரு சொல்லா?" என்று திகைத்தனர் அமைச்சர்கள்!

"மன்னவனைக் கடவுளாகவே எண்ணி வணங்குகிற சோழ வள நாட்டிலே இப்படியும் ஒரு செய்தியா?" என்று துணுக்குற்றனர் ஆயத்தார்கள்!

"அரசனுடைய கட்டளைக்கு அடிபணிய மறுப்பது ஒரு பெண்! ஒரு கிழவி!" என்பதைக் கேட்டதும் தானைத் தலைவர்கள் எல்லாரும் வெகுண்டனர்.

"அவளுடைய பெயர் என்ன?" என்று கேட்டார் தண்டல் நாயகம்.

"சூலபாணி என்பவனுடைய மனைவி கொற்றவை!" என்று சொல்லும்போதே ஊர் காவல் அம்பலத்தாரின் உடம்பு பதறியது.

"சூலபாணியா? மாதூர்ப் போரிலே, பாண்டியரை எதிர்த்து நாம் வெற்றி வாகை சூடிய அந்தப் போரிலே, நமது சோழ நாட்டுக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்த அந்த வீரன் சூலபாணியின் மனைவியா? அவளா இப்படி ஒரு தேசத் துரோகமான வார்த்தையைச் சொல்லுகிறாள்!" என்று மிகுந்த வியப்போடு கேட்டார் தானை நாயகர்.

சிற்றூரும், பேரூரும், மாவட்டமும், மண்டலமும் எல்லாம் ஒன்று கூடிச் சோழ அரசின் கட்டளையைத் தெய்வ ஆணையாக மதித்து நடந்த மாட்சி மிக்க காலத்திலே இப்படி ஒரு பெண் மகள், ஒரு மூதாட்டி, அரச ஆணையை எதிர்த்தாள் என்பதை எண்ண எண்ண மந்திரச் சுற்றத்தார் அனைவரும் சினந்து எழுந்தார்கள்.

"மன்னனிடம் இந்தச் செய்தியை அறிவிக்கும் முன்பு, நானே சென்று அவளைக் காணுகிறேன்!" என்று சொல்லிப் புறப்பட்டார் தண்டல்நாயகம்.

"இல்லை. உங்களுடைய சந்திப்பினால் பயன் விளையாது. நானேதான் செல்ல வேண்டும்!" என்று எழுந்தார் தானைத் தலைவர்.

உறையூர்ச் சோழனுடைய ஆட்சியிலே வரலாறு காணாத புதுமை அது! காவிரி நதியிலிருந்து ஒரு பெருங் கால்வாய் வெட்டி, அந்தக் கிளை நதியின் துணை கொண்டு, உறையூரைச் சுற்றியிருந்த புஞ்சை நிலங்களையும் பொட்டல்களையும் வளம் கொழிக்கும் நஞ்சை நிலமாக்க, ஒரு பெருந் திட்டம் வகுத்திருந்தான், மணக்கிள்ளி வளவன் என்ற சோழப் பேரரசன்! சம்பை நதி என்ற பெயரோடு அந்தக் கிளை நதி எங்கெங்கு பாய்ந்தோடி மண்ணைப் பொன்னாக்க வேண்டும் என்பதை வரையறை செய்து, அந்தக் கால்வாய்ப் பாதையிலே உள்ள மனைகளையெல்லாம் உரியவர்களிடமிருந்து தக்க விலை கொடுத்து வாங்கும்படி அரச மன்றத்தாருக்குக் கட்டளை விடுத்திருந்தான் சோழப் பேரரசன்! உறையூருக்கு அருகிலுள்ள மங்கலம் என்ற சிற்றூரில் கொற்றவை என்ற மூதாட்டியின் குடிசையும் அதைச் சுற்றி நின்ற புஞ்சையும் இந்தக் கால்வாயின் போக்கு வழியிலே நின்றதால் அவற்றை விலை பேசச் சொன்னார்கள், மன்னனின் மன்றத்தார்கள். ஆனால், கொற்றவையோ அந்த நிலத்தை விற்க முடியாது என்று மறுத்தாள்!

2

கொற்றவை என்ற அந்தக் கிழவியின் குடிலுக்குள்ளே படைத் தலைவர் சென்ற போது, அந்த அம்மை அவருக்குச் செய்த வரவேற்பு அதிசயமாக இருந்தது! இவ்வளவு பண்பும் பணிவும் நிரம்பிய ஒரு மூதாட்டியா அரச ஆணையை மீறுகிறாள் என்று அவருக்கு ஒரே வியப்பாக இருந்தது!

"அம்மையே! நாடு முழுவதும் மன்னரின் திட்டத்துக்கு வரவேற்பும் ஒத்துழைப்பும் தருகிறது. சம்பை நதியின் வரவினால் இந்த மங்கலம் என்ற சிறிய ஊர் மட்டுமல்லாமல், இதைச் சுற்றியுள்ள பேரூர்களும், மாவட்டங்களும், மண்டலமுமே செழிப்படையப் போகின்றன. நமது மக்களின் எதிர்கால வாழ்விலே நல்வளம் கொழிக்கப் போகிறது சம்பை! இந்த ஜீவ நதியை நீ ஒருத்தி மட்டும் ஏனம்மா தடுத்து நிறுத்த முயல்கிறாய்? இது பேதைமையான செயல் மட்டுமில்லை; தேசத் துரோகமும் ஆகும் அம்மா!"

இவ்வாறு சோழ மன்னனின் படைத் தலைவர் சொல்லி முடித்தாரோ இல்லையோ, பண்பும் பணிவும் ஒளி வீசிய மூதாட்டியின் முகத்தில் பெருஞ் சீற்றம் அனல் வீசியது!

"தேசத்துரோகமா! எது தேசத் துரோகம்? என்ன வார்த்தைசொல்லுகிறீர்கள்? தாய்த் திருநாட்டுக்காகத் தனது உயிரையே கொடுத்த ஒரு வீரனின் மனைவி நாட்டு நலத்துக்கு எதிரான ஒரு செயலைச் செய்வாள் என்று நீங்கள் எப்படித்தான் எண்ணத் துணிந்தீர்களோ! அரசப் பெருந்தகையாளர்







களே! சோழ நாட்டு மண்ணிலே தோன்றிய ஒரு வீரத் திருமகனுக்கு வாழ்க்கைப்பட்டவள் நான். ஒரு மனைவியின் கடமையை நான் தொடர்ந்து செய்ய விரும்புகிறேன். அதற்கு இடம் இல்லையா உங்களுடைய ஆட்சியில் என்றுதான் கேட்கிறேன். இதற்கு மேல் எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியாது. என் கடமையைச் செய்ய முடியாதபடி என்னைத் தடுக்க முனைவது மானிடமாயினும் சரி, தெய்வமாயினும் சரி, அதை எதிர்ப்பேன்! இது உறுதி! ஆனால், இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நின்று அந்தச் சம்பை நதியை வர வேற்கும் போது, நான் ஒருத்தி மட்டும் தன்னந் தனியாக நின்று அந்த ஆற்றைத் தடுத்து நிறுத்தி விடமுடியுமா? முடியாது. அது எனக்குத் தெரியும். என்றாலும் பொங்கி வருகிற சம்பையின் புனல் என் நிலத்தோடு, என் உடைமைகளோடு சேர்த்து என்னையும் சூழ் கடிக்கட்டும்! அப்படிப்பட்ட ஒரு வீர மரணம் எனக்குக் கிடைக்கட்டும். இதற்கு மேல் என்னிடம் பேசாதீர்கள். சென்று வாருங்கள். வணக்கம்!''

இவ்வாறு கூறியவளாகப் படைத் தலைவருக்குத் தலை தாழ்த்தி வணங்கினாள் கொற்றவை!

3

பின் யாமப் பொழுது. மங்கலம் என்ற சிற்றூரின் வட கோடியிலே புள்ள புஞ்சைத் திடலில், தன்னந் தனியே நின்ற ஒரு சிறிய குடிலைச் சுற்றி, நிலவு மங்கிக் கொண்டு வந்தது. உதயத்திற்கு முன்பாகக் கவிகிற அல்லிருள் சுற்றிச் சூழ்ந்து நின்றது. ஓசையற்ற அந்த யாமத்தின் அமைதியினூடு ஒரு விம்மல் கேட்டது!

அந்த ஏகாந்தமான குடிசைக்குப் பின்புறம் ஐந்தாறு கொன்றை மரங்கள். அருகில் நின்ற செடி கொடிகள், யாமப் பூக்களின் மணத்தை இருளிலே கமழ விட்டு நின்றன! அவற்றின் மருங்கிலே ஒரு ''நடுகல்'' அதற்கு முன்னால் கொற்றவை நின்று யாம வழிபாடு செய்து கொண்டிருந்தாள்!

போரிலே மடிந்த வீரனை வணங்கி, அவனுடைய நினைவாக ஒரு கல்லை நட்டு, அந்தக் கல்லில் வீரனின் பெயரையும் அவன் ஆற்றிய பெருஞ் செயல்களையும் பொறித்து, அந்தக் கல்லிலே அவனைத் தெய்வமாக நிலை நிறுத்தி அவனுக்குப் பூசனைகள் புரிந்த காலம் அது!

நடு கல்லுக்கு நீராட்டி, எண்ணெய் பூசி, மலர்கள் இட்டு, மனம் மொழி மெய்களால் வழிபட்டு நின்ற கொற்றவை, தன்னையும் மீறிய ஏக்கத்திலே விம்மினாள். கண்ணீர் விட்டாள். இருளினூடு மணம் வீசுகிற அந்த யாம மலர்களைப் போல அவளுடைய இதயத்திலிருந்து வந்த பெருமூச்சிலே அறத்தின் வாசனை கமழ்ந்தது.

''நாட்டுக்காக நான் செய்ய வேண்டிய கடமை எது? கணவனுக்காக நான் செய்ய வேண்டிய கடமை எது? வீரத்தை வணங்காத நாட்டிலே மீண்டும் வீரம் எப்படிப் பிறக்கும்? கணவனை வழிபடாத மனித குலம் எப்படித் தழைக்கும்? என் தாய் நாட்டுக்காக நான் என் கணவனைக் கொடுத்தேன். இன்று வரை என் தாய் நாட்டுக்காகவே என் வீரனை நான் வணங்குகிறேன். இனி, இனி, இனி என் தாய் நாட்டுக்காக இந்த நினைவையும் இந்தக் கடமையையும் நான் விட்டுக் கொடுத்துவிட வேண்டுமா? இந்த நினைவையும் நான் இனி இழந்து விட வேண்டுமா?''

அடக்க முடியாமற் பொங்கிய மூதாட்டியின் துயரத்தை, அந்த நடு கல்லும் அதைச் சுற்றி நின்ற மரம் செடி கொடிகளும் கேட்டுப் பெருமூச்சு விட்டன! அவளுடைய கண்ணீர்த் துளிகள் பட்டு அந்தப் புஞ்சை நிலத்தின் மண் சிலிர்த்தது! அப்பொழுது சற்றுத் தொலைவிலே ஒரு புதருக்கு அருகிலே சலசலப்பு கேட்டது. மாற்று உடையிலே ஊர்க் காவல் புரியும் மணக்கிள்ளி, மூதாட்டியின் அந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே புதரிலிருந்து நகர்ந்தான்!

4

''**ம**ன்றத் தலைவரே! சம்பை யாறு செல்ல வேண்டிய வழியிலேயுள்ள மனைகளை யெல்லாம் கைக்கொண்டு விட்டீரா?'' என்று கேட்டான் சோழப் பேரரசன்.

''ஆமாம் மன்னா! உரியவர்களுக்கு உரிய முறையிலே விலை கொடுத்து வாங்கியுள்ளோம். ஆனால் மங்கலம் என்ற சிற்றூரில் மட்டும் கொற்றவை என்று ஒரு கிழவி பேதைமை பேசுகிறாள். அறிவுக்குப் பொருந்தாத வாதமாக இருக்கிறது அவளுடைய பேச்சு! நாட்டின் பொது நலத்துக்கு மாறாக நிற்கும் அவளுடைய நிலத்தை மட்டும், பறிமுதல் செய்ய வேண்டும் என்பது மன்றத்தின் கருத்து!''

இந்தச் சொற்களைக் கேட்டதும் மணக் கிள்ளியின் முகத்தில் மின்னற் கீற்றுப் போல் ஒரு சீற்றப் புன்னகை நெளிந்தது.

''தலைவரே! நேற்று மாலை இப்படி நீர் சொல்லியிருந்தால் ஒரு வேளை நான் என்னுடைய இசைவைத் தந்திருப்பேன்!



நல்ல வேளை. அப்படி ஒரு தவறு நிகழாத வண்ணம் நேற்றிரவு தெய்வம் எனக்கு அருள் செய்தது!''

இவ்வாறு கூறினன் மன்னவன். மன்றத் தலைவர் ஏதும் புரியாமல் குழம்பி நின்றார். மன்னன் சொல்லுவான் :—

''இந்தச் சோழ மண்டலத்தை வளப் படுத்து வதற்காகத் தோன்றப்போகும் சம்பை நதி, ஒரு பெண்ணின் இதயத்தை மதித்து அதற்காகத் தனது பாதையை மாற்றிக் கொள்ளும்! சம்பை நதி மங்கலம் என்ற சிற்றூரை வலம் வரும்! அந்தச் சிற்றூரின் இதயத்தைத் தோண்டிக் கொண்டு செல்லாது! அந்த ஊருக்கு வணக்கம் செலுத்தியவாறு அந்த ஊரைச் சுற்றிக் கொண்டே ஓடும்! அந்த முறையில் அதன் பாதையை வகுப்பதற்காக உடனே திட்டம் செய்யும். காவிரி நதியில் தண்ணீர் வருவதும், அதன் கால் வாயிலே புனல் ஓடுவதும், நீரும் நானும் செய்கிற தவத்தினால் என்று நினைக்கிறீர்? இல்லை. அது தவறு! இந்தச் சோழப் பெருமண்டலத்தின் ஒரு கோடியிலே, ஒரு சின்னஞ்சிறு சிற்றூரிலே, மூதாட்டி ஒருத்தி தனது அறக் கடமையைத் தவறாது செய்து வருகிறாள்! அதனால் தான் வானம் பொழிகிறது. நிலம் செழிக்கிறது. மக்கள் வாழ்கிறார்கள். இந்த மங்கல மாட்சியைக் கெடுத்து விட வேண்டாம்!''

இந்த வார்த்தைகள் சோழ மன்னனுடைய இத யத்தின் ஆழத்திலிருந்து வந்தன! மன்றத் தலைவர் தயக்கத்தோடு சொன்னார்:



''அரசர் பெருமானே! இட்ட பாதையை மாற்றிப் புதிய வழி வகுக்க முனைந்தோமானால், இன்னும் பெருந் தொகை செலவாகுமே என்றுதான் சற்றுத் தயங்கினேன். கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்!''

இதைக் கேட்டதும், காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து வருவது போல் பாய்ந்து வந்தது சோழ னுடைய பேச்சு:—

''காவலனுக்கு அடிபணியாதவனும், தலைவனுக்கு வழிபாடு செய்கிறவளு மான ஓர் உத்தமிக்காக நீல வானமும் நெடுங்கடலும் பணி செய்யும். அவ ளுடைய சிற்றூரே ஒருநாள் முழுவதை யுமே மூழ்கடிக்க வல்லது! மன்றத் தலை வரே! ஓர் ஆடவனுக்குத் தனது தாய் நாடு முக்கியமாகப் படலாம். ஆனால் ஒரு பெண்ணுக்கு முக்கியம், எல்லா வற்றையும் எல்லாரையும்விட முக்கி யம், அவளைக் கைப்பிடித்த கணவன்! இந்த அறத்தைப் பாதுகாக்கிற நாடு நம்முடைய புண்ணியத் தமிழ்நாடு. இந்த ஒப்பற்ற அறத்துக்குத் தமிழனுடைய செங்கோல் தலைதாழ்த்தி வணங்கும்! இது உறுதி!''

5

உறையூர்ச் சோழன் கட்டளைப்படி வெட்டப் பட்ட சம்பை நதியானது, தமிழ்நாட்டின் பண்பாட் டிற்கும் அறத்துக்கும் அரண் செய்தவாறு ஓடியது! 'கன்னி' எனவும், 'சோழர் குலக்கொடி' எனவும், 'தமிழ்ப்பாவை' எனவும் பல புனிதப் பெயர்கள் தாங்கிய அந்த மங்கலத் திருநதியின் கரையிலே வந்து, சோழநாட்டின் பெண்கள் ''பாவை நோன்பு'' நோற்றார்கள்! மங்கலம் என்ற சிற்றூருக்கு அருகிலே வந்ததும் சம்பை நதி, பயபக்தியோடு நடந்து வந்து அந்த ஊரை வலம் சுற்றிக் கொண்டே சென்றது! அதனு டைய புனலிசையைக்கேட்கும்கவி ஞர்கள் எல்லாரும், ''மனை மங்கலம் மனை மங்கலம்!'' என்று பாடிக் கொண்டே இரு கரையும் தொட்டுக் கண்ணிலே ஒற்றிக் கொண்டு அந்த நதி ஓடுவ தாகச்சொல்வார்கள்!



புதுமுது மொழிகள்

டாக்டர் வே.ராகவன்

"டாக்டர் ஸார்!"

"என்ன?"

"ஊரிலேதானா?"

"இதென்ன கேள்வி? இங்கேதான் இருக்கேன்!"

"இல்லே, எங்கேயாவது யூரோப்பு, கூரோப்புன்னு கிளம்பி விடுவீர்களே என்று கேட்டேன். சமீபத்தில் வெளிநாட்டுப் பிரயாணம் இருக்கிறதா?"

"சரிதான்; இப்படி ஒரு பிரசாரம் செய்கிறீர்கள் போலிருக்கிறது!"

"அது போகட்டும்; சுவடி சுவடின்னு ரொம்ப ரொம்ப அலைகிறீர்களே. நீங்கள் அது சம்பந்தமாக மேனாட்டைச் சுற்றிப் பார்த்ததிலே, புதிதாக, அபூர்வமாக, ஏதாவது சுவடி கிடைத்ததோ உங்களுக்கு?"

"இந்தப் பழமொழிகள் இருக்கின்றனவே, அவை சம்பந்தமாக ஆச்சரியமான ஒரு சுவடி கிடைத்தது!"

"அப்படியா? ரொம்ப உபயோகமான புஸ்தகமாக இருக்குமே அது!"

"'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்தப் பழமொழி என்னும் கிழ மொழிகளிலே மட்டும் நாம் காலத்துக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்ளாமல் பழைய மொழிகளையே சொல்லிக் கொண்டிருக்கிறோம்."

"பழமொழின்னாலே 'பழைமையானது' என்று தானே அர்த்தம்? எப்படிப் 'புதுமை'ப்படுத்துவது..?"

"அதுதான் அதிலே அழகு. நான் சொல்லப் போகும் இந்தச் சுவடியின் அழகு; நாமாக ஒன்றும் மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அகஸ்தியர் போன்ற பண்டைக் கால மகரிஷிகளே வரும் விசித்திரங்களை ஞானதிருஷ்டியால் பார்த்து எழுதிவைத்து விட்டுப் போய் விட்டார்கள். அதன் ஓலைகளெல்லாம் நம் நாட்டிலே இன்னும் அகப்பட வில்லை."

"தொலைந்து போனாலும் போயிருக்கும். இல்லையென்றால் வெள்ளைக்காரர்கள் அந்த ஓலைகளிலே பல இரகசியங்கள் இருக்கின்றன என்று அறிந்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்களோ என்னவோ? இல்லாவிட்டால் இவர்கள் விமானம், அணுகுண்டு முதலியவற்றை எப்படிக் கண்டுபிடித்தார்கள்?"

"ஆமாம், நீங்கள் பழமொழிகளைப் பற்றிச் சுவடி அகப்பட்டது என்று சொன்னீர்களே, எந்தத் தேசத்திலே? ஜெர்மனியிலேயா?"

"இல்லே! இல்லே! இது ரஷ்யாவிலே. அங்கே தான் பல ஆச்சரியமான சம்பவங்கள் நடக்கின்றன. வாழ்க்கையே தந்திரமாக ஆகியிருக்கிறதே!"

"சரி, அந்தச் சுவடியிலேகூடப் புது தினுசான பழமொழிகள் இருக்கின்றனவோ?"

"ஆமாம்! இருக்கின்றன. புதுமையிலே மூன்று வழிகள் காணப்படுகின்றன. ஒன்று பழைய பழமொழி போலவே இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு அக்ஷரமோ இரண்டு அக்ஷரங்களோ மாறுபட்டு இருக்கின்றன. இரண்டாவது ரகம், பழைய பழமொழியை அப்படியே வைத்திருக்கிறது. ஆனால் கீழே குறிப்புரையிலே மாறான அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறது. மூன்றாவதிலே பாட பேதங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இப்போது 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் பழமொழியிலே அவன் என்றால் யார்?"

"கடவுள்."

"அதுதான் இல்லே. அவன் என்றால் 'ஏகாதிபதி' என்று குறிப்புப் போட்டிருக்கிறது."

"அதாவது 'டிக்டேட்டர்' என்று அர்த்தமோ!"

"இதே பழமொழியின் பாடபேதத்தைப் பார்ப்போம். 'அவள் அன்றி ஓரணுவும் அசையாது'"

"'அவள்' அப்படின்னு?"

"'அவள்' என்றால் 'மனைவி' என்று பொருள் அங்கேயே குறிக்கப்பட்டிருக்கிறது."

"'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' — இதற்கு இரண்டு பாடபேதங்கள் இருக்கின்றன. ஒன்று. 'தார் இல்லா ஊருக்கு அழகு பாழ்'. இங்கே தந்திருக்கிற குறிப்பு—'தார்' - தார் போட்ட ரோடுகள். இன்னொரு பாடபேதம் 'கார் இல்லா ஊருக்கு அழகு பாழ்.' குறிப்பு— 'கார்-மோட்டார் கார்'."

"ரொம்ப ரஸமாயிருக்கு ஸார்! எங்கே, இது போல் இன்னும் கொஞ்சம் சொல்லுங்கோ!"

"'சாதி இரண்டொழிய வேறில்லே'ன்னு கேள்விப்பட்டிருப்பீர்களே? அந்த இரண்டு சாதி என்ன?"

"நீங்கள் சொல்லுங்கள்! எனக்குத் தெரியவில்லையே! அந்தச் சுவடி என்ன சொல்லுகிறது?"

"'இருப்பார் பெரியோர்; இல்லாதார் இழிகுலத்தோர்.' குறிப்பு: இருப்பார் — பணம், வீடுவாசல், கார், சொத்துக்கள்; இல்லாதார்-இவை இல்லாதவர்."

"'ஊக்கமது கைவிடேல்'-இதற்கு இரண்டு அர்த்தங்கள். முதலாவது 'ஊக்கத்தை அளிக்கும் மதுவை மதுபானத்தைக் கைவிடேல்' என்பது உரை. மாற்றுக் காணப்படும் பழமொழி: 'தூக்கமது கைவிடேல்'; அதாவது நன்றாய்த் தூங்கு."

"சபாஷ்!"

"தூக்கத்தைப் பற்றி இன்னொரு பழமொழி..."

"அதென்ன?"

"'காற்றுள்ளபோதே தூங்கிக் கொள்'."

"ஆகா, இது நம் பட்டணத்துக்கு என்றே எழுதி வைத்த மாதிரி இருக்கிறதே!"

"நம்ம ஊருக்குப் பல மொழிகள் இதிலே இருக்கு ஐயா! இதோ, பாரும்: 'இளமையிற் கல்' என்பதை அப்படியே தந்து 'இளமையில் கல்—பரத நாட்டியம்' என்று போட்டிருப்பதைப் பார்த்தால் இப்போதிருக்கும் 'பேபி' அரங்கேற்றங்களை முன் கூட்டித் தெரிந்தே எழுதி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படியேதான்: 'சித்திரமும் கைப் பழக்கம்' என்பதும். 'சித்திரம் ஒளிச் சித்திரம்' என்று போட்டிருக்கிறதைப் பார்த்தால் இப்போது எவரும் டைரக்டராக ஆகிப் 'படங்'களை எடுப்பது என்று ஏற்பட்டிருப்பதை அப்போதே தெரிந்து வைத்திருக்கிறார்களே, என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? இதற்கு இன்னோர் உதாரணம்: 'பேராசை பெரு நஷ்டம்' தேர்தலில் ஜயித்து சட்டசபை அங்கத்தினராகிப் பேர் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் பெரும் பணச் செலவு ஏற்படும் என்ற விளக்கத்தோடு காணப்படுகிறது மற்றொரு பழமொழி. 'கைக்கு எட்டியது, பைக்கு எட்டவில்லை' என்று பழமொழி..."

"சரி, மேலே?"

"'பணம் போல மாங்கல்யம்' — இது இக்காலத்திய கல்யாணங்கள் நிச்சயமாகிற முறை, நடக்கிற முறை எல்லாவற்றுக்கும் பொருந்தும். இப்படிக் கல்யாணமானதும் என்ன ஆகிறது? அப்பா, அம்மா இவர்களைக் கண்டாலே பிடிக்கிறதில்லே; அவர்கள் வீட்டிலிருப்பதே இடைஞ்சலாகப் போய்விடுகிறது."

"என்ன அதுக்குக்கூட ஒருபழமொழியிருக்கா?"

"ஆம்! 'தந்தை தாய் **பேன்**'. தந்தை, தாய் இருவரும் தலையிலுள்ள பேன்போல் எடுத்து விலக்கப்பட வேண்டியவர்கள்."

"இது பெண்கள் பக்கம் பேசுகிற சுவடியோ?"

"இல்லவே இல்லே; இதோ, பாருங்கள் ஒரு பழமொழி: 'அடியாத மாது, படியாது'."


"இதோ, மற்றொன்று. பழைய மொழியிலே சிறிது சேர்த்து எழுதப்பட்டது: 'அழுத பிள்ளை புட்டிப் பால் குடிக்கும்'."

"சபாஷ்! இப்படிப் பல துறைகள் இருக்கின்றனவோ? மொத்தம் எவ்வளவு இப்படிப்பட்ட புதுமொழிகள் இந்தச் சுவடியிலே இருக்கு?"

"சுவடிகள் சிதைந்து அரைகுறையாகத்தான் அகப்படுகின்றன. இந்தப் புது மொழிச் சுவடி முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றைச் சொன்னேன்."


அவள் எப்பொழுதும் நன்றாக
ஆடையணிந்திருக்கிறாள்.
அவள் ஒரு கோடீஸ்வரியாக
இருக்கவேண்டும்!
இரகசியம் என்னவென்றால்-நன்கு
ஆடையுடுத்திய ஒவ்வொரு பெண்
மணியும் கூறுவாள்-மிகவும் விலை
உயர்ந்த துணிமணியில் அல்ல,
நன்கு தேர்ந்தெடுப்பதைப்
பொருத்திருக்கிறது.
இந்த இரகசியத்தில் ஜாஸ்மின்,
வழக்கமாக ஜாஸ்மின் துணிமணி
உபயோகிப்பவர்களுடன் பங்கு
கொள்கிறது. ஏனென்றால்,
ஜாஸ்மின் தயாரிப்புகளில் கலர்,
டிசைன், நெசவு மற்றும் நிலவும்
பாஷன் எல்லாவற்றையும் நன்கு
கவனித்து மிகவும் விரும்பத்
தக்கதையே தயாரிக்கிறார்கள்.
ஜாஸ்மின் உயர் ரக துணிமணிகள்
வியக்கத்தக்க முறையில் விலை
குறைந்தவையாகும்!
ஜாஸ்மின் உயர் ரக துணிமணியில்
நீங்கள்கூட கவர்ச்சிகரமாக ஆடை
அணியலாம். இன்றே ஜாஸ்மின்
தயாரிப்பில் ஏதாவது ஒரு
கவர்ச்சியான ரகத்தை வாங்கி
அனுபவியுங்கள்.
ஜாஸ்மின்
மில்ஸ் பிரைவேட் லிட்.
500, கல்பாதேவி ரோடு, பம்பாய்-2.


ஸ் M.V. M (FIRM) வா ச னை
லா வி கு ங் அ
ப் பு கை யி லை
எமது தீபாவளி வாழ்த்துக்கள்
இப்புனித திருவிளக்குச்
சுடரின் ஒளி நமக்கு
நல் வாழ்வு தந்து
இன்றுபோல் என்றும்
பிரகாசிக்கட்டும்.
திண்டுக்கல்
அங்குவிலாஸ்
M.V. முத்தையா பிள்ளை [FIRM]
வாசனைப்புகையிலை
REGD. NOS: 12700, 149348.
TEL: "ANGUVILAS" DINDIGUL PHONE: 71.
'ANGU VILAS' M.V. MUTHIAH PILLAI [FIRM]
SCENTED TOBACCO
IS VERY TASTEFUL FOR CHEWING
M.S.MANI


ஹாஸ்யப் பொறிகள்
மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு பரதேசக் கோலம் போக மாட்டேங்கறார் ....!
"ஏன் குழந்தையை இப்படி அடிக்கிறேள் ?"
"என்ன சொல்லிக் கொடுத்தாலும் பத்துக்கு மேலே அவனுக்கு எண்ணத் தெரியல்லே. பெரியவனாகப் போனால் என்ன செய்யப் போகிறான் ?"
"குஸ்திச் சண்டையில் 'ரெபரி'யாக இருந்து விட்டுப் போகிறான். அதற்காக..."
சாமா
யானைக் குட்டி: "ஈயே! ஈயே! நீ தினமும் என் மேலே உட்காருகிறாயே. நான் ஒரே ஒரு தடவை உன் மேலே உட்காருகிறேனே !"
சாதாரண நாளில்
பூ! பூ!
தீபாவளியன்று
மத்தாப்பு, மத்தாப்பு!
கங்கா ஸ்நானம் ஆச்சா?
ஆச்சு!

கவியரங்கம்-2



இதயக் கோயில்

என். எஸ். சிதம்பரம்

கோயில் சென்று காண்பேன்—இதயக்
கோயில் குடிகொண் டோனை ?
கோயில் சென்றும் காணேன்—இதயக்
கோயில் குடிகொள் ளானை !

இமயம் சென்று காண்பேன்—உள்ள
இமயம் அமர்ந்திட் டோனை ?
இமயம் சென்றும் காணேன் உள்ள
இமயம் அமரா தானை !

* மன்றும் சென்று காண்பேன்—நெஞ்ச
மன்றில் ஆடி வோனை ?
மன்றும் சென்றும் காணேன்—நெஞ்ச
மன்றில் ஆடா தானை !

* அரங்கம் சென்று காண்பேன்—மனத்தின்
அரங்கத் துயில்கொண் டோனை ?
அரங்கம் சென்றும் காணேன்—மனத்தின்
அரங்கத் துயில்கொள் ளானை !

காடு சென்று காண்பேன்—சிந்தைக்
காட்டில் தவம்செய் வோனை ?
காடு சென்றும் காணேன்—சிந்தைக்
காட்டில் தவம்செய் யானை !


காசி சென்று காண்பேன்—அகத்தின்
காசித் தலங்கண் டோனை ?
காசி சென்றும் காணேன்—அகத்தின்
காசித் தலங்கா ணானை !

இதயப் பதும பீடம்—அதனில்
இறையாம் கடரைக் கானில்
உதய மாகும் ஞானம் !—அதனில்
ஒலிக்கும் தேவ கானம் !

---

* மன்றம் என்பது தில்லைப் பொன்னம்பலத்தைக் குறிக்கும்.

* அரங்கம் என்பது திருவரங்கத்தைக் குறிக்கும்.





மூலப் பிரதி

திருலோக சீதாராம்

முன்பொரு பாடல் எழுதினேன் அந்த
மூலப் பிரதி கைவசம் இல்லை
முழுதும் நினைவு வருவதும் இல்லை.

எழுதிய பாடல் ஒன்றினை வீட்டின்
எரவா ணத்தில் செருகி இருந்தேன்
பழுது வந்தது: பார்த்தி ருந்தவர்
பாடலை எடுத்துப் பதுக்கிக் கொண்டார்

இன்பம் என்றொரு தலைப்பிட்டு அந்த
இனிய பாடலை எழுதிய நினைவு
துன்பம் வந்து சூழும்போது
துணைசெயக் கூடும் தொலைந்து போயிற்று

வாய்மை என்றொரு வாசகம் வைத்து
வண்ணப் பாடலை எழுதிய துண்மை
பொய்ம்மை இருளில் பொன்விளக் காகும்
போக்கென மறைந்து போயிற் றென்செய?

வெற்றி யென்ற விளக்கம் தந்தொரு
வீரியச் சொல்லை விளம்பிய துண்டு
முற்றும் தோற்று விட்டபோ தெனக்கு
மூளும் நற்றுணை முழுதுங் காணேம்

இருந்த இடத்தில் இருந்த படியவ்
இன்னிசை கேட்டே இருந்தேன்—இங்கு
வரும்போ தெனக்கு வழித்துணை யாக
வந்தது இடையில் வழிப்பறி போக

ஏட்டுப் பிரதியை எடுத்தவர் தந்தால்
இனிய பாடலைக் கற்றவர் சொன்னால்
காட்டில் இருளைக் கடந்திட லாகும்
கருணை செய்தவர் ஆவீர் ஐயா.



திருவே! வருக

சக்திசரணன்

கங்கைநல் நீரினில் ஆடி மகிழ்ந்தோம்
கண்ணனின் பேர்மொழிந் துள்ளம் குளிர்ந்தோம்.
மங்கலப் புத்துடை தம்மை புதித்தோம்
வாயிலில் குத்துவிளக்குகள் வைத்தோம்
கொங்கலர் தாமரை கொண்டு பணிந்துன்
கோமளப் பொன்னடி போற்றிடு கின்றோம்.
செங்கம லத்திரு மங்கையே வந்து
சேர்ந்தெங்கள் இல்லில் நலந்தரு வாயே!

தாமசப் பேய்தலை சாய்ந்துவீழ் விழ
சத்துவம் வெற்றியின் சங்கு முழக்கும்.
தீமைகள் முற்றிலும் தீய்ந்தன நீறாய்
செம்மையும் தர்மமும் சேர்ந்தன ஒன்றாய்
யாமினி மெய்வழி பற்றின மம்மா!
யாவரும் வாழ்வுற நற்பணி செய்வோம்,
தாமரை மீதுறும் தர்மக் கொழுந்தே!
சார்ந்தெங்கள் நெஞ்சில் வலம் தருவாயே!





காவிரியோடு கங்கை

வித்துவான் வி. துரைசாமி

கங்கை: உருவத்தி லன்றியே
பருவத்தி லும்நடை
ஒயிலினும் நன்னையே
பயிலுங்கா வேரியே!
சரியற்ற நிலையிலே
தென்னகப் பகுதியை
சண்டமா ருதமெனக்
கொண்டழித் திட்டனே!


காவேரி: கயிலாய மீதில்வெண்
கட்டியாய் நின்றநீ
கங்கையாய் பாயுடா
அங்கையாய் தொழுதிட
ஒளிராய் உணர்வுளாய்!
உன்னுள் அழிந்திடும்
உயிர்களும் உடைமையும்
ஒருகோடி யல்லவோ?

கங்கை: என்வேகம் இந்நிலத்
தேவரும் தடுப்பதற்
கில்லையோர் மறையினும்
வல்லநீ அறிகிலாய்!
பொன்மேனி மான்சடை
பொலிவிலே தங்கிடும்
பொற்பினு மல்லவோ
புனலும் நிறைந்தது!

காவேரி: சங்கரன் சடையினு
பங்கமுற் றதையிங்கு
சாகரர் சொல்லினுந்
நீரைவிட்டு ஓடுவை!
கங்கையே! நின்னையும்
செங்கையால் தடைசெயக்
கருநிறத் ஞானமாம்
பரித்தோன் நினைவடி!

கங்கை: இணையற்ற என்னையும்
அணையாய்த் தடுப்பதற்
கேவன்உளன் அவனியில்?
கனவாய்ப் போடி!
அணையும் திரண்டிடத்(து)
ஆகம் ஒடுங்கிடும்
அழியா தகந்தையால்
பரிகதி நின்றனே!

காவேரி: வம்புக் கிழுத்திடும்
தெம்புள்ள சோதரி!
வந்தேனைத் தழுவிட
வித்துரி வைத்தனன்!
தும்பியும் முதலையால்
தோற்றிடக் காண்கிலாய்!
துணையாகி இருவரும்
பணிசெய்கு வோமடி!





குடம்!

(பக்திசாரன்)

வண்ணமலர்க் கைபடுக
மண்ணழகாம் ஆனதடீ!
எண்ணமெனுஞ் சக்கரத்தே
ஏற்றமுடன் நின்றதடீ!

செம்மையெனுந் தீக்குளித்தும்
செழுமையுடன் வந்ததடீ!
வெம்மையெலாம் போனபின்னே
மெய்வண்ணம் பெற்றதடீ!

பாசமெனுங் கயிறணைக்கப்
பாவைகரம் பற்றிவிட
நேசமெனுங் கேணியிலே
நீரெடுக்க வந்ததடீ!

பண்பென்னும் பாத்தியிலே
பசுமையினைத் தந்ததடீ!
அன்பென்னுஞ் சோலையிலே
அழகுமலர் செய்ததடீ!

ஞானமெனும் நீர்க்குடமாய்
ஞாலமெலாங் காத்ததடீ!
பேணிவரும் பரம்பரையாய்ப்
பிறவிப்பயன் பெற்றதடீ!





எவனோ ஒருவன்

துறைவன்

எவனோ ஒருவன்
  எனவாழ் கின்றேன்
    இதுநீ அறியா போயினையே

புதுநாள் ஒன்றும் புதிதில்லை
  புலரும் வைகறை ஒளியில்லை
எதுநாள் ஆயினும் இருள்நாளாய்
  இரவில் அழியும் சித்திரமாய்

நவமா கவிதைத் திறங்காட்டி
  நவைநீ உலகின் ஒளிகாட்டி
அவள்என் பதைபோல் எனைப்போக்கி
  ஆள்வோர் என்பதை விளக்கி

கைவைத்தவள் ஏகினை நீ
  கனவுக் கதையாய் ஆயினைநீ
வையம் இருண்டது நிழலாக
  வாழ்வு கருண்டது விழலாக

என்னா றென்னே உணர்ந்திடுவேன்
  இதயம் எவ்வனம் சொல்லிடுவேன்
செவ்வானத்தே நிலை தவறித்
  நீரும் அறியாக் குருவியென

ஒடிந்த உணர்வே குச்சிகளாய்
  உலர்ந்த நாட்கள் சருகுகளாய்
இடிந்த உள்ளச் சிறுகூட்டில்
  இரவும் பகலும் எப்பொழுதும்

பாயும் வெள்ளக் கரியினிலே
  பதறிக் குலையும் துகளாக,
ஓயும் காற்றின் பெருமூச்சாய்
  ஓயா மழையின் முனகலென

இருளில் படரும் முட்செடியாய்
  எங்கோ மலரும் சிறுகொடியாய்
உருளும் நாட்களின் காலடியில்
  ஒண்டி முயன்று புகலறியா

உன்னைச் சொல்லப் பிழையில்லை
  உவமையறியா இளமையிலே
என்னைத்தானும் பிழை சொல்ல
  எதும் தோன்றுதில் லேயடி

செம்பொருள் நாடகம்

தமிழ்மகன்

சின்னக் குறுநகைச் சேர்த்தழில்—மணிச்
  செம்பவ ளப்பாறல் வாயிதழில்
மின்னற் கொடிப்பூ மிளிர்வதுண்டே!—தெய்வ
  மிடுக்குச் சிரிப்பதில் கண்டுகொண்டேன்!

சிந்தூரக் குங்குமச் செஞ்சிமிழில்—கன்னி
  சிலிர்த்திடும் கன்னநற் பொற்சிமிழில்
இந்திர வானவில் இழைவதுண்டே—தெய்வ
  இளமைக் கொலுவதில் கண்டுகொண்டேன்!

சித்திரச் சிட்டின் சிறகிமையில்—விழி
  சிவந்து துடிக்கும் இறகிமையில்
உய்த்திடச் சொர்க்கம் உயர்வதுண்டே!—தெய்வ
  உலகின் கனவதில் கண்டுகொண்டேன்.

கலைநயம் துள்ளுமோர்கை மாலையில்—புதுக்
  கற்பனை பாய்ந்துமோர் மெய்யாசையில்
மலைவரு மாலே மயங்குவதுண்டே!—தெய்வ
  மையலின் கோபுரம் கண்டுகொண்டேன்!

காதல் இளமையில் கன்னியரின்,—அன்பால்
  கைத்தலம் பற்றிடும் புண்ணியரின்
சீதத் திருமுகச் செவ்விதழே—தெய்வச்
  செம்பொருள் நாடகம் பாவுறக்கண்டேன்!






காவியமும் ஓவியமும்
கல்கி தீபாவளி மலர் 1961


காவியமும் ஓவியமும் . 2
கல்கி தீபாவளி மலர் 1961



காவியமும் ஓவியமும் - 3

கல்கி தீபாவளி மலர்-1961


காவியமும் ஓவியமும்-4
கல்கி தீபாவளி மலர்-1967


IMPUTANTUR
NISI NON NUMERO
காவியமும் ஓவியமும்-
கல்கி தீபாவளி மலர் 1961


காவியமும் ஓவியமும்_6
கல்கி தீபாவளி மலர் 1961


காவியமும் ஓவியமும்-7
கல்கி தீபாவளி மலர்-1961




காவியமும் ஓவியமும் - 8

கல்கி தீபாவளிமலர் 1961



காமு

ஏ. எஸ். ராகவன்



'உங்களை எனக்குப் பிடிக்கவில்லே.'

சுந்தரம் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவன் கையிலிருந்த காகிதத்தில் எழுத்துக்கள் குண்டு குண்டாக அடுக்குமல்லிகை போல் தெளிந்தன. பின்புறம் திருப்பினன். அங்கே சோகக் கொல்லேப் பொம்மை போல் ஓர் உருவம் வரையப்பட்டிருந்தது. அதன்கீழ் 'சுந்தரம்' என்றும் எழுதப்பட்டிருந்தது. அதே அடுக்குமல்லிகையில்! வேடிக்கை! காதல் கடிதங்களேத்தான் பத்திரப்படுத்தி வைத்திருந்து படித்துப் படித்து இன்புறுவதென்பது இயல்பு. சுந்தரமோ இந்தக் காதல் மறுப்புக் கடிதத்தையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான்! இப்படியும் உண்டா?

ரயில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. இதற்கு முந்திய ஸ்டேஷனில் நெடுநேரம் நின்று விட்டதைச் சரிக்கட்டத்தான் அப்படி ஓடுகிறதோ! சுந்தரம் காகிதத்தை மடித்தான். மடிக்கக் கூட வேண்டியதில்லே. ஏற்கனவே பல முறைகள் மடிக்கப் பட்டு அதன் மடிப்புகள் வாய்க்கால்கள் போலத்தான் இருந்தன; தள்ளி விட்டு நகர்ந்தால், தானுக மூடிக் கொள்ளும் 'ஸ்பிரிங்' கதவைப் போலத்தான்.

காகிதத்தில் மட்டுமா, அவன் உள்ளத்திலும்தான் அத்தனே மடிப்புகள்! அத்தனே பள்ளங்கள்!

சாதாரணமாக நினேவுகள் பின்னேக்கித்தான் ஓடும். சுந்தரத்துக்கோ முன்நோக்கி ஓடின.

காமு அவன் முன் நிற்பது போலவும், காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பது போலவும் காட்சிகள். 'தயவுசெய்து அந்தக் காகிதத்தைக் கொடுத்து விடுங்களேன்... தெரியாத்தனமாக எழுதி விட்டேன்' என்று கெஞ்சுகிறள். அவன் அலட்சியமாகச் சிரித்து, 'இல்லே, காமு! இது என் னிடமே இருக்கட்டும்...என்னிடம் இது இருக்க வேண்டும்...நம் காதலின் லட்சணம் இது' என்கிறன்.

ரயில் நின்றது.

சுந்தரம் வெளியே எட்டிப் பார்த்தான். கைகாட்டி இறங்கவில்லே. எதிரே வண்டி வருகிறதாம். அதற்காக இது நின்றுவிட்டது.

காகிதத்தைப் பையில் வைத்து விட்டுப் பெருமூச்சு விட்டான் சுந்தரம்.

ரயில் ஒரு முறை குலுங்கி விட்டுச் சற்றுப் பின்னேக்கி நகர்ந்து மீண்டும் பயணத்தைத் தொடங்கியது. பின்னே நகராமல் முன்னே செல்லமுடியாதோ?

சுந்தரம் சிரித்துக் கொண்டான்.

நினேவுகளும் ஒரு முறை குலுங்கிப் பின்நோக்கி நகர்ந்தன.

விளேயாட்டுப் போல் இரண்டு ஆண்டுகள் அல்லவா ஓடி விட்டன!

அப்போது அவன் படிப்பை முடித்து விட்டு வெறுமனே ஊரை வளேய வந்து கொண்டிருந்த நேரம். அப்படி வளேய வரும்போதுதான் காமு அவன் கண்ணில் பட்டாள். காமு அவனுக்குத் தூரத்து உறவினள். ஆனல் அந்த உறவு இதுவரை அடையாளம் தெரியாத தூரத்தில்தான் இருந்தது. பம்பாயிலோ வடக்கே வேறு எங்கேயோ இருந்து விட்டு இப்போதுதான் இந்தக் கிராமத்துக்கு நிரந்தரமாக வந்து சேர்ந்திருந்தது காமுவின் குடும்பம்.

வாசல் திண்ணேத் தூணேப் பற்றிக்கொண்டு தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் காமு. பார்க்கும்படி அந்தத் தெருவில் ஏதும் இல்லே. ஆனல் ஓர் அழகான பெண்ணின் பார்வை எங்கு படிந்தாலும் அந்த இடத்

துக்கு மகத்துவம் வந்து விடும். சுந்தரமும் அந்தப் புழுதியைப் புதுமையாகப் பார்த்தான். அதில் ஏதோ இருக்கத்தான் வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

சுந்தரத்துக்கு உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் பனிக்கட்டியை வைத்தது போல் குளிர்ந்தது. "உம்... ஒன்றுமில்லே" என்றான்.

"நீங்கள் சுந்தரம்தானே?"

"ஆமாம்...நீ?"

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் காமு." அவள் கலகலவென்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு காதில் விழுந்ததும்தான் சுந்தரத்தைத் தாக்கிய குளிர் நீங்கியது. 'அட, காமுவா இவள்? பல்லாங்குழியில் பல்லாயிரம் தடவை அவனிடம் 'தோபாவே' வாங்கியிருக்கிறாளே அவள்! அவளை அடையாளம் தெரியாமல் போய்விட்டது எப்படி?'

"வாருங்களேன்..." என்று அழைத்தாள் அவள்.

சுந்தரம் வீட்டுக்குள் போனான். வாயை, வாயை மென்று கொண்டு ஒரு பாட்டி கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் வெறும் வாயை மட்டும் மெல்லவில்லை. ஊர்ச் செய்திகளையும் மெல்லுகிறாள் என்பது பின்னர்தான் அவனுக்கு விளங்கியது. அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். "கேட்டீர்களா, பாட்டி! நம்ம சுந்தரச்ச மாமா பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகி யிருக்காமே!" என்று சிரமப்பட்டு ஏதாவது ஒரு தகவலைச் சேகரித்துக் கொண்டு அங்கே போய் நிற்பான் சுந்தரம். பாட்டிக்கு இவ்வளவு போதும். பிறகு அவளாகவே சுந்தரச்ச யார், அவன் வாழ்ந்த வாழ்வு என்ன, அவனுக்கு வந்த அதிர்ஷ்டத்துக்கு எத்தனை கண் குருடு. அந்தக் குருட்டுக் கண்ணில் சுந்தரச்ச எப்படி மண்ணைத் தூவினான் என்பனவற்றை ருசிகரமாக அடுக்க ஆரம்பித்துவிடுவாள்.

அவன் பாட்டிக்குக் காதைக்கொடுத்து விட்டு, கண்ணை உட்புறம் ஓட விடுவான். முன்பு பரட்டைத் தலையும் உருட்டு விழியுமாக அவனிடம் குட்டு வாங்கிய காமு இப்போது இரட்டைப் பின்னலும், மருளும் விழிகளுமாகக் காட்சி தருவாள். சில சமயம் உட்புறம் அவள் பாடிக் கொண்டும் இருப்பது உண்டு. ஆனால் பாட்டியிடம் கொடுத்த காதை மீட்கத் தோன்றியதில்லை அவனுக்கு. ஏனென்றால் அழகான பெண்களெல்லாம் அழகாகவும் பாடியாக வேண்டும் என்பதில்லையே! அழகோடு பாட்டும் சேர்ந்து விட்டால் இந்தப் பெண்களின் கர்வம் நிலைகொள்ளாது போகாதா?

காமு பாட வேண்டும் என்று சுந்தரம் எதிர்பார்க்கவுமில்லை. அவனுக்குச் சங்கீதம் என்றால் கட்டோடு பிடிக்காது.

ஆனால் எதிர்பார்ப்பது, எதிர்பாராமல் இருப்பது என்பதொன்றும் காதலைப் பொறுத்த வரை கிடையாது. ஏனெனில் காதல் வந்து தாக்குவதே எதிர்பாராமல் தான்; வராமலிருப்பதும் அப்படியே.

காமு ஒரு நாள் கூடத்தில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தாள். குரல் உச்சஸ் தாயியில் முழங்கிக் கொண்டிருந்தது. சுந்தரம் அங்கே போய்ச் சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் காமு சிரித்தபடியே, "பாட்டு எப்படி?" என்றாள்.

சுந்தரத்தின் போதாத வேளை. அந்தக் கேள்வி வேறுவிதமாக அவன் காதில் விழுந்தது. "பாட்டி எப்படி?" என்று அவள் வினவுவதாக அவன் எண்ணிக் கொண்டு விட்டான். இப்படி அவன் எண்ணியதற்குக் காரணம் இருந்தது. முதல் நாள்தான் அவனுக்கும் பாட்டிக்கும் பெருத்த விவாதம் நிகழ்ந்து அதில் பாட்டி தன் கட்சியை நிலைநாட்ட ஆயிரம் (மேற்) கோள்களைச் சொல்ல ஆரம்பித்தாள். சுந்தரத்துக்குப் பாட்டியின் போக்கு பிடிக்கவில்லை. காமு அப்போது உடன் இருந்தாள். அவளுக்கும் அந்த விதண்டாவாதம் பிடிக்கவில்லை என்பதை அவன் புரிந்துகொண்டான்.

"சே! சே!...ஆனாலும் இப்படியா... சகிக்கவில்லே" என்றான் கோபமாக.

காமுவின் முகம் கறுத்தது. கறுப்பு என்றால் சாதாரணக் கறுப்பு இல்லே, ஆயிரம் அமாவாசைக் கறுப்பு. அதைப் பார்த்த பிறகாவது, பாட பேதப் பிழையைச் சுந்தரம் உணர்ந்திருக்கலாம்.


ஆனால் அவனுக்கோ பாட்டியின் நாவன்மையைப் பற்றியே பிரமை. காலமெல்லாம் பம்பாயில் இருந்த இந்தப் பாட்டி இவ்வளவு நிஷ்டூரங்களை எங்குதான் கற்றாளோ என்கிற வியப்பு. "இதெல்லாம் பம்பாயில் சொல்லித் தருகிறார்களா, காமு?" என்று கேட்டான் கேலியாக.

"இல்லே.. சொந்த ஞானம்தான்" என்றாள் அவள்.

"அதுதானே பார்த்தேன்.. இல்லாவிட்டால் இத்தனை அபஸ்வரம் விழாதே!" என்றான் அவன்.

அவ்வளவுதான். காமு விருட்டென்று உள்ளே போய் விட்டாள்.

அவனுடைய கோபத்தை அவன் உணர்ந்துகொள்வதற்கு அவகாசம் வைக்காமல் பாட்டி வந்து சேர்ந்தாள்.



"வெள்ளைக்காரன் ஆண்டபோது எவ்வளவோ தேவலே...நம்ப ராஜாங்கம் வந்தாலும் வந்தது. எல்லாமே நலிஞ்சுப் போச்சு" என்றான் அவன்.

"பாட்டி, அந்நியன் ஆட்சியே தேவலே என்று சொல்வது தேசத் துரோகம். சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை" என்றான்.

பாட்டி சிரித்தாள். "எதுடாப்பா பிறப்புரிமை? பிறக்கிற உரிமை யாருக்குடாப்பா இருக்கு? ஆணைப்பட்ட மும்மூர்த்திகளே குழந்தைகளாகப் பிறந்து அநுசூயாவின் தொட்டிலிலே முழி முழின்னு முழிச்ச கதை உனக்குத் தெரியாதோ?" என்று கேட்டாள்.

சுந்தரம் பல்லைக் கடித்தான். இந்தப் பாட்டியிடம் எதைச் சொல்லி எப்படிச் சமாளிப்பது?

அடுத்த நாள், அதற்கு அடுத்த நாள் அவன் அங்கு போன போதெல்லாம் காமு அவன் கண்ணில் படவே யில்லை. பாட்டிதான் வரவேற்பிதழ் படித்து, அவனை மட்டம் தட்டி, நன்றி கூறி, பிரிவுபசாரப் பத்திரமும் படித்து அனுப்பினாள்.

மறுநாள் அவனுக்கு அங்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. பட்டணத்திலிருந்து அவர்கள் உறவினன் ஒருவன் வந்திருந்தான். அவன் பேர் ஜம்பு. எது சொன்னாலும் அதை அப்படியே ஆமோதித்தான் அந்த ஜம்பு. காமு பாடினால் தாளம் போட்டான். தாளம் போட்டால் ஆடினான். சுந்தரத்துக்கு அப்போதுதான் தன் பிழை புரிந்தது. இவ்வளவு சுலபமாகக் காரியங்கள் முடிகிறபோது அர்த்தமின்றி விவாதங்களில் ஈடுபடுவானேன்!

"காமு, உன் பாட்டுப் பிரமாதம்" என்றான் சுந்தரம் அவளிடம்.

அவள் கட்டு விடுவதைப் போல் பார்த்தாள் அவனை.

"இது போல் நான் கேட்டதே இல்லே" என்றான் அவன் தொடர்ந்து.

"அப்படியா?...அத்தனையும் அபஸ்வரங்களாக இருக்குமே!" என்றாள் அவள் கேலியாக.

சுந்தரம் விழித்தான். ஒரு வேளை அபஸ்வரங்கள்தானோ! சுந்தரத்துக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பாட்டியைப் பார்த்தான். அவளோ வெறும் வாயைத்தான் மென்றாள்.

"இந்தப் பக்கத்துச் சங்கீதமே வேறே" என்றாள் காமு.

"ஆமாம்....ஆமாம்."

"பம்பாயிலே இதையெல்லாம் யார் சொல்லித் தருகிறார்கள்....?"

"ஆமாம்... ஆமாம்..." என்றான் சுந்தரம். எதைச் சொன்னாலும் ஆமோதிப்பது என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.

காமு எழுந்தாள். "சுந்தரம்! உங்கள் சங்கீத ஞானம் உங்களோடேயே இருக்கட்டும். அது எனக்குத் தேவையில்லே" என்றாள் கோபமாக.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் தீப்பற்றியது போல் சுந்தரம் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் என்ன சொல்கிறாள்!

"எனக்குப் பாடத் தெரியாது. நான் பாடுவதெல்லாம் அபஸ்வரம்தான்....அப்படியே இருக்கட்டும். நீங்கள் கேலி செய்வதை என்னால் பொறுக்க முடியாது" என்றாள் அவள்.



"நான் இப்போழுதுதான் மலரும் இளம் எழுத்தாளன்; தாங்கள்?"

"மலர் எழுத்தாளர்! தீபாவளிக்குத் தீபாவளிதான் எழுதுறது!"

"காமு...காமு..." என்று குழறினான் அவன். அதற்குள் அவள் உள்ளே வேகமாகப் போய்விட்டாள்.

பாட்டி அவனை அனுதாபத்துடன் பார்த்தாள். ஜம்பு நிமிர்ந்து உட்கார்ந்து சிரித்தான்.

சுந்தரம் குனிந்த தலையுடன் திரும்பினான். கால் போன பக்கம் நடந்தான். வாய்க்கால் படித்துறையை ஒட்டிய மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு ஒரு குரல் அழ வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. காமுவைச் சந்தித்த நாளிலிருந்து அன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளைக் கண் முன் நிறுத்தி எடை போட்டான். பாட்டியின் தராசுதான் கனத்து நின்றது. அதாவது, பாட்டியோடு தான் விவாதங்களையெல்லாம் நிகழ்த்தியிருக்கிறான் அவன்.

காமு அவனை வெறுத்து விட்டாள்.

சுந்தரத்துக்கு வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது.

வாய்க்கால் இரண்டு கரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடியது. ஓர் ஆள் ஆழத்துக்கு மேலே தண்ணீர் சுழித்துச் சுழித்து நகர்ந்தது. இக்கரைக்கு அக்கரை நீச்சலடித்துக் குளித்தால் ஆனந்தமாக இருக்கும். சுந்தரம் நீந்துவதிலே 'முதலே' என்று பேர் வாங்கியவன். இங்கே முழுகினால் அங்கே போய்த்தான் தலை காட்டுவான். அந்தப் பெருமையையெல்லாம் காமு தெரிந்து கொள்ளவில்லை.

படித்துறையில் கலகலவென்று சிரிப்புக் கேட்டது. சுந்தரம் திடுக்கிட்டுப் போனான். யார்? காமுவா? ஆமாம். அவளேதான்.

மண்டபத்திலிருந்து துறைக்கு வந்தான் அவன். காமு நீரில் இறங்கினாள்.

சுந்தரமும் குதித்தான். தனக்குத் தெரிந்த வித்தைகளைக் காட்ட ஆரம்பித்தான்.

காமு அவற்றை ரசித்தாளா இல்லையா என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவளும் மெள்ள மெள்ள வாய்க்காலின் உள்ளே புகுந்து முழுகுகிற எல்லைக்கு வந்து விட்டாள்.

சுந்தரம் அப்போதுதான் ஆபத்தை உணர்ந்தான். அசட்டுப் பெண்! அவனுக்குப் போட்டியாக நீரில் இறங்கி அமிழ்ந்து போகப் பார்க்கிறாளே!

கையையும் காலையும் உதறிக் கொண்டு அவள் தவிப்பதைக் கண்டதும், தாவிச் சென்று அவளைப் பற்றி இழுத்துக் கரை சேர்த்தான் அவன்.

"நீந்தத்தெரியாமல் தண்ணீரில் இறங்கலாமா, காமு?" என்றான் கோபமாக. "நான் இல்லாதிருந்தால் இந்நேரம் என்ன ஆயிருக்கும்?"

அவள் சிரித்தாள். எழுந்தாள். பிறகு அநாயாசமாகத் தண்ணீருக்குள் குதித்தாள். கைகளை லாகவமாக வீசிக் கொண்டு நீச்சலடிக்கலானாள். அதைக் கண்டதும் சுந்தரத்தின் விழிகள் வியப்பால் விரிந்தன. எவ்வளவு அழகாக நீந்துகிறாள் காமு!

சுந்தரம் உடைகளைத் தரித்துக் கொண்டு அங்கிருந்து போய் விட்டான். காமு அவனை ஏமாற்றி விட்டாள். நீரில் அமிழ்ந்து போவது போல் பாவனை செய்து அவனைக் கவிழ்த்து விட்டாள்!

அன்று மாலை அவன் அங்கு போன போதுதான், அந்தக் காகிதம் அவனை எதிர்நோக்கியிருந்தது. "உங்களை எனக்குப் பிடிக்கவில்லே" என்று பதில் அறிவித்திருந்தாள் காமு. பின்புறம் அவனுடைய உருவத்தையும் வரைந்திருந்தாள். காமுவுக்குச் சங்கீதம் மட்டுமல்ல, ஓவியமும் வராதென்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

அந்தக் காகிதத்தைக் கிழித்து எடுத்துப் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

"உன்னையே எனக்குப் பிடிக்கவில்லே" என்று நோட்டுப் புத்தகத்தின் மற்றொரு காகிதத்தில் எழுதி வைத்து விட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

அன்று இரவே புறப்பட்டவன்தான், இப்போது திரும்பி வருகிறான் கிராமத்துக்கு.

• • •

சுந்தரம் வெளியேஎட்டிப்பார்த்தான். பனை மரங்களின் வரிசையும், தொலைவில் அமராவதிப் படுகையும் எல்லை மாரியம்மன் கோவிலும் தெரிந்தன. ஊர்நெருங்கி விட்டதே! பெட்டி படுக்கையை எடுத்து வைத்துக் கொண்டு இறங்கத் தயாரானான். காமு இருக்கிறாளோ, பம்பாய் போய் விட்டாளோ! அவள் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன?

வண்டி நின்றது. சுந்தரம் இறங்கினான்

"யார்டாது, சுந்துவா?... அடையாளமே தெரியல்லியே!" என்று விசாரித்து விட்டு வண்டியேறினார் கிட்டா மாமா. "கரூர் வரையிலே போயிட்டு வரேன். பத்து நாட்கள் இருப்பாயோ, இல்லேயோ?"

"இருப்பேன், மாமா.. ஒரு மாதம் லீவு வாங்கிக் கொண்டு வந்திருக்கேன்."

மாட்டு வண்டியில் கிராமத்தை நோக்கிச் செல்லும்போது அவனுக்கு என்னவோ நினைவுகள். இந்த இரண்டு ஆண்டுகளில் அவன் எதிர்பாராத விதமாக முன்னேறி விட்டான். கிட்டா மாமாவுக்கே அவனை அடையாளம் தெரியவில்லையாமே! அது என்னவோ


எமது அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள் !
கேச பராமரிப்பு - ஒரு கலை
கலைக்காகவே பாடுபடுவது கஷ்டந்தான். ஆனால் முயற்சி வீண் போவதில்லை. சரியான பலன் நிச்சயம் கிடைக்கிறது.
கேசப் பராமரிப்பும் ஒரு கலைதான். மற்ற கலைகளைப்போல் அதுவும் கடினமானது. ஆனால் பிரமாதமான பலன் தரக்கூடியது.
ஒரு பெண்ணின் அழகைப் பொலிவுறச் செய்வது வசீகரமான கூந்தலே.
கேசவர்த்தினி
ஹேர் ஆயில், ஷாம்பூ, கண் மை
உங்கள் பின்னல் பழைய சம்பிரதாயப்படி இருந்தாலும் சரி, அல்லது புது மோஸ்தரில் அமைந்திருந்தாலும் சரி, கேசவர்த்தினியே உங்களுக்குச் சிறந்த அழகுச் சாதனமாகும். கேசவர்த்தினி, கூந்தல் வளர்ச்சிக்கும் அலங்கரிப்புக்கும் சிறந்தது. தலையில் ஏற்படும் சங்கடமான பொடுகைப் போக்குகிறது. அடர்ந்த நீண்ட, கருமையான கூந்தலை வளர்க்கிறது.
கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்

உண்மைதான். ஒரு சுற்றுப் பருத்து, ஒரு செவப்புச் சிவந்து அவள் அழகாக மாறியிருக்கிறாள். குரலில் கூட ஒரு கரகரப்பு வந்து விட்டது. உலகம் இன்னதென்பதும் கொஞ்சம் விளங்கியிருக்கிறது. காமு பார்த்தால் ஆச்சரியப்படுவாள். அவள் ஆச்சரியப்பட்டாலென்ன, படாது போனால் என்ன?

வண்டியை விட்டு இறங்கி உள்ளே போனதும் அம்மா திருஷ்டி சுற்றிப் போட்டாள். அப்பா அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "லீவு எத்தனை நாட்களடா?" என்று கேட்டார். அந்தக் கேள்வி சம்பிரதாயமாகக் கேட்டது தான். அவர் கேட்க விரும்பியது வேறே. அதை அம்மாவிடம் அவர் தனிப்படச் சொல்லியிருப்பார் என்பதில் சுந்தரத்துக்குச் சந்தேகமில்லை. "ஏண்டி நம்ப சுந்தரத்தைப் பார்த்தியா?... ராஜா மாதிரி இருக்கான்" என்று அவர் சொல்லியிருப்பார். "போதுமே, உங்கள் கண்ணே பட்டுவிடப் போகிறது" என்று அம்மா மறுத்து ஆமோதித்திருப்பாள்.

சுந்தரம் மறு நாள் தெருவில் நடந்த போது, காமு வாசல் திண்ணைத் தூணைப் பற்றிக் கொண்டு நின்றாள். இப்போது அவள் புழுதித் தெருவைப் பார்க்கவில்லை, சுந்தரத்தைத்தான் பார்த்தாள்.

"சௌக்கியமா?" என்று மெதுவாகக் கேட்டான் அவன்.

"உம்... நீங்களா?"

"ஏன், என்னைத் தெரிய வில்லையா?" என்று சிரித்தான் அவன்.

"பாட்டி, இங்கே பாரேன், யார் வந்திருக்கிறார்கள் என்று."—கூவினாள் காமு.

சுந்தரம் உள்ளே சென்றான். பாட்டியின் வாய் மெல்லுவதை நிறுத்திவிட்டது. அவள் விழிகள் விரிந்தன. "யாரு, சுந்தரமா?" என்றாள்.

"ஆமாம், பாட்டி!"

"சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டாயே, சுந்தரம்?"

"யாரிடமும் சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்ததாக நான் நினைக்க வில்லை" என்றான் அவன்.

பாட்டி இந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தவித்தாள். காமுவின் நெஞ்சில் பளீரென்று அடி விழுந்தது. அவன் எதைக் குறிப்பிட்டு இப்படிச் சொன்னான் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது.

"அவசியம் என்று ஒன்றுமில்லை..... ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போகக் கூடாதா?... உன்னைக் காணுமே என்று தவித்துப் போய் விட்டேன் நான்" என்றாள் பாட்டி, ஆதுரத்துடன்.

சுந்தரத்தின் மனம் சற்று நெகிழ்ந்து விட்டது. "எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை...வெறுமனே இங்கேயே வளைய வளைய வந்து கொண்டிருந்தால் என்ன பிரயோசனம்?...அதனால்தான் கிளம்பி விட்டேன்" என்றான்.

"சௌக்கியமாக இருக்கிறாயா?"

"உம்..."

"எத்தனை நாட்கள் தங்குவாய்?"

"ஒரு வாரம் இருப்பேன்... அப்புறம் மதுரை, கன்னியாகுமரி, இங்கெல்லாம் போய்விட்டு வரலாமென்று எண்ணம்."

"காமுவும்தான் அங்கெல்லாம் போகணும்னு சொல்லிக் கொண்டிருக்கிறாள்.. எப்போது போவதற்குப் பிராப்தம் வருமோ, தெரியவில்லை."

சுந்தரம் எழுந்தான். "நான் வரட்டுமா? நேரம் ஆகிறது" என்றான்.

காமுவின் பார்வையையும், பாட்டியின் ஆதங்கத்தையும் அவன் இலட்சியம் செய்யவில்லை.

மறு நாளும் அவன் அந்தப் பக்கம் போகும்போது காமு வாசலிலேயேதான் நின்று கொண்டிருந்தாள். ஆனால் அவன் நின்று அவளோடு பேசவில்லை. நேரே போய்விட்டான்.

அடுத்த நாள் அவளைக் காணோம். சுந்தரம் சிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். கூடத்தில் அவள் பாடிக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் பாட்டு நின்று விட்டது.

"ஏன் நிறுத்தி விட்டாய், காமு?.... பாடேன்" என்றான் அவன்.

"என் குரல் நன்றாக இருக்காது" என்றாள் அவள்.

"அதை நீ உணர்ந்து கொண்டாய் என்பதில் எனக்குச் சந்தோஷம்தான்" என்று சிரித்தான் அவன்.

இந்த இரண்டாவது அடி காமுவைத் திணற அடித்து விட்டது. அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"காமு! நீ என்ன எண்ணிக் கொண்டாலும் சரி... எனக்குச் சங்கீதம் என்றுமே பிடிக்காது. அது தேவகானமாக இருந்தாலும் எனக்குப் பிடிக்காது..... ஸ்வரம் போடுவதாகச் சொல்லிக் கொண்டு ஒரு வார்த்தையையே திரும்பத் திரும்பப் பாடிக் கொலை செய்வதை என்னால் சகிக்க முடிவதில்லை" என்றான்.

அவள் சிரித்தாள்.

"முன்பெல்லாம் நீ பாடினால் நன்றாக இருந்தது என்று நான் சொல்வேன்.... ஏன் அப்படிச் சொன்னேன்? அது உனக்குத் தெரியும்... இப்போது அப்படிச் சொல்ல நான் விரும்பவில்லை."

"அதனால் என்ன?"

"உண்மையைத் தைரியமாக எதிர் நோக்கத் துணிச்சல் வேண்டும்...அந்தத் துணிச்சல்தான் என்னை ஊரை விட்டே வெளியே கொண்டு போயிற்று."

அவள் தலை தாழ்ந்தது. சுந்தரம் ஏன் இல்லாததெல்லாம் பேசித் தன் மனத்தைப் புண்படுத்துகிறான் என்பது அவளுக்கு விளங்கவில்லை.

அவன் விடைபெற்றுக் கொண்டு போனதும் காமு முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். நெடுநேரம் அழுதாள். அவன் தன்னை உள்ளூற வெறுக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. ஒவ்வொரு சொல்லிலும் அந்த வெறுப்பை அவன் உமிழ்கிறான். அவனை அவள் உணர்ந்து கொள்ளவே இல்லை. தன்னை எப்படி அவனுக்கு வெளிப்படுத்துவது என்பது அவளுக்கு விளங்கவில்லை.

மறு நாள் சுந்தரம் அந்தப் பக்கம் வந்தபோது காமு வாசல் திண்ணையிலும் இல்லை, கூடத்திலும் இல்லை. சுந்தரம் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவளைக் காணாதது அவனுக்கு ஏமாற்றமாக இருந்த போதிலும் அதுவும் ஒரு வகையில் நன்மைக்கே என்று அவனுக்குத் தோன்றியது.

நடந்தபடியே அவன் வாய்க்கால் படித்துறைக்கு வந்தான். மண்டபத்தில் உட்கார்ந்தான். முன் போலவே இரு கரையும் தொட்டுக் கொண்டு வாய்க்கால் பிரவகித்து ஓடியது. முன்போலவே காமு படித்துறையில் இருந்தாள்.

சுந்தரம் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவன் வரப் போகிறான் என்று தெரிந்தும் வேண்டுமென்றே வீட்டிலிருந்து அவள் வெளியேறிவிட்டாள் என்பது அவனுக்கு அப்போது தான் விளங்கியது.

காமு நீரில் இறங்கினாள். மெள்ள மெள்ள ஆழமான பகுதிக்கு அவள் போய்ச் சேர்ந்தாள்.

'களக், களக்'

தண்ணீருக்குள் முழுகி முழுகி அவள் எழுந்தாள். திணறினாள்.

சுந்தரத்தின் காதுகளில் அந்தச் சத்தம் விழுந்தது. ஆனால் அவன் திரும்பவில்லை.

காமுவுக்குத் தான் நீந்தத் தெரியுமே! அவன் ஒத்தாசை அவளுக்கு எதற்கு? முன்பொரு சமயம் அவள் வாய்க்காலில் இறங்கி முழுகுகிற கட்டத்துக்கு வந்த பொழுது, 'அசட்டுப் பெண் நீரில்இறங்கி அமிழ்ந்து போகப் பார்க்கிறாளே!' என்று எண்ணி, அவன் நீரில் குதித்தான். இழுத்துக் கரை சேர்த்து, 'நீந்தத் தெரியாமல் தண்ணீரில் இறங்கலாமா?' என்றும்



கடிந்து கொண்டாள். தனக்கு நீந்தத் தெரிந்த பெருமையில் பேசினாள்.

அப்போது அவன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறுபடியும் நீரில் குதித்து லாகவமாக நீந்தினாள்—அவனே வியப்புறும் வண்ணம் நீந்தினாள் அவள். அந்தக் காட்சி அவன் மனக்கண் முன்னே வந்து நின்றது: அவள் தன்னையே ஏமாற்றி விட்ட நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. எனவே, அவன் அசிரத்தையாக இருந்து விட்டான். அவள் நீந்திப்பிழைத்துக் கொள்வாள் என்று நம்பி விட்டான். அப்படி இருக்கும் பொழுதுதான் மீண்டும் அந்தச் சப்தம் கேட்டது.

"க்ளக், க்ளக்..."

இன்னொரு தரம் இவள் நம்மை ஏமாற்றப் பார்க்கிறாளா, என்ன? நாம் திரும்பிப் பார்க்கவே கூடாது என்று நிர்மானித்த அவன் மனத்தை மீண்டும் உறுதி செய்து கொண்டான். ஆனால் என்ன செய்கிறாள் என்பதைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வம் அவனை ஒரு புறம் உந்தித் தள்ளியது. இப்படி மனம் இருமுனைப் போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது மீண்டும் அதே ஒலி கேட்டது:

"க்ளக், க்ளக்...."

சுந்தரம் இப்போது திரும்பிப் பார்த்தான். அவள் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தாள். இதோ வாய்க்கால் அவளை அடித்துக் கொண்டு போகிறது. அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

சுந்தரத்துக்கு மின்னல் போல ஞானோதயம் உண்டாயிற்று. விருட்டென்று எழுந்தான். ஒரே தாவில் தண்ணீருக்குள் பாய்ந்தான். அவளைப் பற்றி இழுத்துக் கரை சேர்த்தான்.

"காமு, என்ன இது?" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. எழுந்தாள். அவசரமாகப் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். பத்து அடி நடந்ததும் நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு வேகமாக வீட்டை நோக்கி நடந்தாள்.

பெண்களின் பார்வைக்கு ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. அவற்றைப் பத்தாயிரமாகக் கற்பனை செய்து கொள்வதே ஆண்களின் வேலை. காமுவின் அந்த ஒரு பார்வைக்குள்ளே எத்தனையோ அர்த்தங்களைக் கண்டான் சுந்தரம்.

அடுத்து அவன் காமுவின் வீட்டுக் கூடத்தில் நின்றான்.

புதுப் புடவை தரித்துக் கொண்டு, தலையைப் பின்னலிடாமல் நுனி முடிச்சிட்டு அவனுக்கு எதிரே அவள் வந்து நின்றாள்.

"காமு, ஒரு விநாடியில் என்னைப் பயப்படுத்திவிட்டாயே!..உனக்குத்தான் நீந்தத் தெரியுமே!" என்றான் அவன்.

"அதென்னவோ அந்தச் சமயத்தில் எனக்கு நீச்சல் மறந்து விட்டது" என்றாள் காமு.

"மறந்து விட்டதா அல்லது...?"

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்களேன்... எனக்கு இதற்கு மேல் சொல்லத் தெரியாது."

அவன் அவளையே பார்த்தான். காமு சொல்லத் தெரியாமல் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி முடித்துவிட்டாள். அவனால் காப்பாற்றப்படவே அவள் விரும்புகிறாள் என்பதை உணர்த்தி விட்டாள்.

"காமு!"

அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு முகத்தைத் தாழ்த்தினாள்.

சுந்தரம் சட்டைப் பையிலிருந்த அந்தக் காகிதத்தை எடுத்துப் பிரித்தான். "இது நீ எழுதியதுதானே?" என்று கேட்டான்.

அவள் அதைப் பார்த்து விட்டு, "ஆமாம்!" என்றாள்.

"என்னை உனக்குப் பிடிக்கவில்லை... அப்படித்தானே?"

அவள் ஒன்றும் சொல்ல வில்லை.

"இந்தச் சித்திரமும் நீ வரைந்தது தானே?" என்று கேட்டான் அவன், காகிதத்தின் பின்புறத்தைக் காட்டி.

காமு இதற்கும் பதில் சொல்லாமல் உள்ளே போனாள். அப்படி எழுதியதற்கும் சித்திரம் வரைந்ததற்கும் மன்னிப்புக் கேட்பாள் என்று அவன் எதிர்பார்த்தது போல் நடக்கவில்லை. சிறிது நேரத்தில் திரும்பி வந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை அவனிடம் நீட்டினாள் காமு. சுந்தரம் பிரித்துப் பார்த்தான். முதல் பக்கத்திலேயே பரட்டைத் தலையும் சோழிப் பல்லும் உருட்டு விழிகளுமாக ஒரு படம் அவனுக்குத் தரிசனம் தந்தது. அதன் கீழ் 'காமு' என்று எழுதியிருந்தது. அதற்கு அடுத்த பக்கத்தில் பாட்டியின் படம். இப்படியே நோட்டு முழுதும் சித்திரங்கள். கடைசிப் பக்கத்தில்தான் சுந்தரம், "என்னையே எனக்குப் பிடிக்க வில்லை" என்று எழுதி விட்டுப் போயிருந்தான். அதன் கீழ் காமுவின் கையெழுத்துத் தெரிந்தது. சுந்தரம் படித்துப் பார்த்தான். "உங்களை உங்களுக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும்... என்னைத்தான் உங்களுக்குத் தெரிய வில்லை!" என்று எழுதியிருந்தது.

அதைப் படித்ததும் சுந்தரத்துக்கு எல்லாமே உண்மைகள் பளிச்சென்று புரிவது போலிருந்தன. தண்ணீரில் நீந்தத் தெரியாமல் தத்தளித்து அவனால் காப்பாற்றப் படுவதற்கென்றே அவள் தவித்த நேரத்தில் தோன்றாத உண்மைகள்கூட இப்போது தோன்றலாயின.

"காமு!" என்றான் அவன் மிகுந்த ஆதுரத்துடன்.

"என்ன?" என்று கேட்டுச் சிரித்தாள் அவள்.

"முன்பெல்லாம் உன் பாட்டை நான் புகழ்வேன்.... உனக்கு எல்லா வகையிலும் ஏற்றவனாக என்னை மாற்றிக் கொள்ள முயன்றேன். அப்போதெல்லாம் என்னை உனக்குப் பிடிக்க வில்லை...ஆனால் இப்போது பிடித்திருக்கிறது.... அது எப்படி?" என்று கேட்டான்.

"எனக்கு ஏற்றவராக நீங்கள் மாறுவதை நான் விரும்ப வில்லை" என்று கூறினாள் அவள்.

சுந்தரம் விழித்தான்.

அவள் நிதானமாக அவனைப் பார்த்தாள். "உங்களுக்கு ஏற்றவளாக நான் மாறவே விரும்பினேன். இந்த இரண்டு ஆண்டுகளிலும் அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்" என்றாள்.

திடீரென்று வெள்ள நீரில் சிக்கியவனைப் போலானான் சுந்தரம். "கா...மு! கா....மு....!" என்று குமுறினான்.

அவள் சிரித்தபடியே உள்ளே ஓடி விட்டாள்.

சுந்தரம் திகைத்து நின்றான்.

"காப்பி சாப்பிடுங்கள்..." என்ற குரல் கேட்டபின்பே அவன் பிரமை கலைந்தது.

"காமு, நீயா அப்படி எழுதினாய்?"

"ஆமாம்."

"ஏன்?"

"......"


"இப்போது என்ன எழுதுவாய் காமு?" என்று கேட்டான் சுந்தரம்.

அவள் சிரித்தபடியே நோட்டுப் புத்தகத்தைப் பிரித்தாள். அவனை ஓரக் கண்ணால் பார்த்தபடியே எழுதினாள். "இவ்வளவு கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே... உங்களை எனக்குப் பிடிக்க வில்லை."

சுந்தரம் உரக்கச் சிரித்தான்.

இந்தக் காதல் இருக்கிறதே, இதன் பரிபாஷையே விசித்திரம்தான்!

நிறுத்து, நிறுத்து!




MADRAS CEMENTS LIMITED
RAMCO BRAND
PORTLAND CEMENT
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், ராஜபாளையம்
('ராம்கோ பிராண்ட்' போர்ட்லண்ட் சிமெண்ட் தயாரிப்பாளர்கள்)
மானேஜிங் ஏஜெண்டுகள் :
மெஸர்ஸ். P. A. C. ராமசாமி ராஜா & கோ.
ராஜபாளையம்.

மனம் திறந்தால்...?

வை. சுப்ரமண்யன்



அவளை முன்பு நான் அழைத்ததைச் சில சமயம் நினைத்துப் பார்ப்பேன். அவள் முன்னால் போய்க் கொண்டிருந்தால், அவளறியாமல் பின்புறமாய் வந்து, ''ஸ்......ஸ்ஸ்...ஸ.....'' என்று ஆரம்பித்து நிறுத்திக் கொள்வேன். நான் நினைத்தபடி அவள் திரும்பிப் பார்ப்பாள். ''ரோஜா!'' என்று அவள் முகத்தருகில் சொல்வேன். தாழைக் குருத்து காற்றில் சிலிர்ப்பது போல் அவள் கோபத்துடன் முகத்தை ஆட்டுவாள்.

அவளுக்கு நான் வைத்த பெயர் அது; நினைத்து விட்டது. அவளுக்குப் பெயர் வைத்ததை நினைத்துக் கொண்டால் தொடர்ந்து எல்லாம்தான் நினைவு வரும். அவர்கள் குடும்பத்தைக் 'குஞ்சுக் குடும்பம்' என்று நான் வேடிக்கையாகச் சொல்வேன். இதற்கும் அவள்தான் என் வாயைக் கிளறுவாள்.

''என்பெயர்தான் ஸரோஜா 'ரோஜா'வாயிடுத்து; எங்கள் குடும்பத்துக்கும் பேர் வைக்க நீங்க யார் மாமா? உங்க வீட்டிலே குடி வந்துட்டதனாலே நீங்க எங்க பேரிலே ஸர்வ மான்யம் கொண்டாடுகிறீர்கள் போலிருக்கே!''

''பின்னே தெருவிலே போறவர்களை இப்படிச் சொல்ல முடியுமா?''

''சொல்ல முடியாது. குஞ்சுக் குடும்பம்னு என் சொல்கிறீர்கள் மாமா?''

''இதோ எங்கள் வாசல் உள்ளில் ஒரு குருவி கூடு கட்டி யிருக்கிறது. பார்த்திருக்கிறேளா?....''

''ஆ; காரத்தின் மேலே கட்டி யிருக்கே....''

''அது எங்கே வேண்டுமானாலும் கட்டும்; இடம் கொடுத்தால் என் கிராப்புத் தலையிலே கூடக் கூடு கட்டிக் குஞ்சு பொரித்து விடும்...வாசல் உள்ளே போய் ஏதாவது 'முணுக்'கென்று ஒரு சத்தம் போட்டால் கூடக் 'கஸகஸ' வென்று கூண்டிலே இருக்கிற குஞ்சுகள் சலசலக்கும். உங்கள் குடும்பத்தைப் பார்த்தால் எனக்கு அதுதான் ஞாபகத்துக்கு வருகிறது.''

''உங்களுக்கு அன்னு என்ன பெயர் வைச்சிருக்கான் தெரியுமோ?'' என்றாள் சரோஜா.

''என்ன, சொல்லேன்?''

''பூனைன்னு பேர்!''

''ஓஹோ!....''

புதிதாக ஆச்சரியப்படுவது போல் காட்டிக் கொண்டேனே தவிர, அந்த நாமகரணத்தை அவன் அன்னை வாய் வழியே முன்பொரு நாள் கேட்டிருக்கிறேன் நான்.

மாடிப் படி வழி இறங்கி வரும்போது ஒரு நாள் அவன், "ஏ பூனே, என்ன எட்டிப் பார்க்கிறே?" என்றான்.

"உன்னே கலகலக்கிறதே, என்னவென்று பார்த்தேன்...."

"காப்பிக்கடை; எல்லாரும் குடித்த பிறகு மிச்சமிருக்கிற கால் தம்ளர் காப்பியை யார் விட்டுக் கட்டுகிறது என்கிறதற்கு மகா நாடு...."

"பெயர் வைக்க அத்தனே ஆத்மா உன்னே விருக்கும்போது என்னே ஏன்டா நீ பூனே என்றாய்?"

சண்டைக்கு ஆள்பத மாக இதைக் கேட்க வில்லே நான்; எல்லாபத்தின் எல்லேயிலேதான். இரண்டு பேரும் அநேகமாகச் சரி வயதில் இருப்போம்; இருபதைத் தொட்டுக் கொண்டோ, தாண்டியோதான். ஆனால் பழக்கமே இரண்டு வருஷங்களாகத்தான்; அவர்கள் எங்கள் வீட்டில் குடிவந்த பிறகுதான்.

"கழுகு என்று சொல்ல முடியாததால் தான்..." என்றான் தொடர்ந்து.

"ஏன் அப்படியுந்தான் சொல்லேன்."

"இல்லே; கீழே நடமாடுவதால் பூனே தான் பொருந்தும்!"

"ஏன்டா அப்படிப் பெயர் வைக்கத் தோன்றியது உனக்கு?"

"சதா எப்போது பார்த்தாலும் மாடியில் வாசம்; மாடிப்படியில் இறங்கி நீ வருகிற மெத்தனத்தையும் நோகாத வேகத்தையும் பார்த்தால் அப்படிக்கூப்பிடணும்போல் தோன்றியது. கோபமா?"

"பூனேக்குக் கோபம் வருவதே தெரியாது. வந்தால் காண்பிக்கிறேன்...."

சாலேயில் நடக்கும்போது சில சமயம் விளக்குக் கம்பங்களே எண்ணிக் கொண்டு வருகிற தினிரம் வந்து விடும் சிலருக்கு. அன்று நிலேயின் வரிசையில் ஒரு ரசாயன விளக்கையே எட்டிப் பிடித்தாற் போல் ஒரு பழைய சம்பவம்; ரோஜாவின் அண்ணு என்னிடம் வந்தான்.

"எனக்கு ஜம்ஷெட்பூரில் ஒரு வேலேக்கு ஆர்டர் வந்திருக்கிறது. நான் இன்றிரவு போகிறேன்...."

"இந்த நிலேயில் கடவுள் கண்ணேத் திறந்திருக்கிறார், பஞ்சு!...."

"எங்கள் குடும்பத்தைக் குஞ்சுக் குடும்பம் என்று எப்படித்தான் நீக்க தரிசி மாதிரி சொன்னுயோ! எல்லாம் பஞ்சைகள் அப்பா! ஸரோஜா ஒரு வெகுளி. ஆனல், பணங்காவைத் தலேயில் தாங்கிக் கொள்கிற வலிய நிலே அவளுக்குத்தான் வந்திருக்கிறது ... எங்கள் தகப்பனுர் இப்படி ஒரு பொறுப்பைச் சுமத்தி விட்டுப் போய் விடுவார் என்று நான் நினேக்கவே யில்லே...."

"எனக்கு இன்னெரு விதத்தில் கஷ்டம், பஞ்சு. பாவம், எங்கள் வீட்டுக்கு நீங்கள் வந்த வேளே...."

"சேச்சே! அதெல்லாம் பேசக்கூடாது. நாலு வருஷங்களுக்கு முன்னல் தோப்புத் தெருவில் இருந்தோம். அங்கே அம்மா போய் விட்ட வேளேயை அந்த வீட்டுக்காரர் மேல் எழுதி வைத்துவிடுகிறதா?"

"பாவம், உங்களுக்குக் கஷ்டத்தின் மேல் கஷ்டம். நீ மனசை விட்டு விடாமல் தைரியமாக இருக்க வேண்டும்" என்றேன். கண்ணுடி மேல் நின்ற தண்ணீராய் அவன் கண்களில் கண்ணீர் பளபளத்தது.

ஃ

அடுத்தடுத்தாற்போல் பஞ்சு ஒரு வருஷம் கழித்துப் படிப்பெடுத்து நான் வீட்டில் வரும் வரை அதே தோற்றம்தான் என் மனத்தில் நிலேத்திருந்தது. அவன் முதன் முதல் ஜம்ஷெட்பூருக்குப் புறப்பட்டுச் சென்ற மறுநாள் காலேயில் ரோஜா என்னிடம் வந்தாள்: "இன்று முதல் நீங்கள்தான் மாமா எங்கள் குடும்பத்துக்கு 'ஹெட்!' அண்ணு சொல்லிவிட்டுப் போயிருக்கான். எல்லாம் உங்களேக் கேட்டுக் கொண்டு தான் செய்ய வேண்டுமாம்! இன்றைக்கு என்ன சமையல் பண்ண, மாமா?"

அசைந்த வேகத்தில் பாத்திரத்தின் விளிம்பு 'விர்' ரென்பது போல, எப்போதும் அவளது குரலில் ஒரு படபடப்பும், நாதத்தின் உராய்வும் இருந்து கொண்டிருக்கும்.



"உனக்குப் பிடித்த சமையலா, எனக்குப் பிடித்த சமையலா?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"உங்களுக்குப்பிடித்ததையே சொல்லுங்கள். நீங்களும் எங்கள் வீட்டிலேயே சாப்பிடுங்கள்."

"அண்ணு வாங்கி அனுப்பப் போகிற சம்பளத்தைக் கரைக்க நானும் உங்கள் வீட்டில் சாப்பிட வேண்டுமோ?"

"அப்படியானுல் நாங்கள் எல்லாம் அண்ணு சம்பளத்தைச் சாப்பிட்டுக் கரைக்கத்தான் இருக்கிறதாக அர்த்தம் இல்லேயா?..."

"சேச்சே! அப்படி ஆகுமா?"

"ஏ" என்று என்னே மடக்கிவிட்ட ஒரு சிறு வெற்றியின் வரம்பில் நின்றுசிரித்தாள். "ஏன் ஆகாது மாமா? நீங்கள் சொன்னது சொல்லி விட்டீர்கள். அர்த்தத்தை நமது சௌகரியத்துக்கு வைத்துக் கொள்வதா?"

"உலகத்தில் எல்லாருமே அர்த்தத்தை, தங்கள் சௌகரியத்துக்குத்தான் ஆக்கிக் கொள்ளப் பார்ப்பார்கள். ஆனல், அர்த்தம் தன் நியதியில்தான் நிற்கும்..." என்றேன். ஏதோ சொல்ல வேண்டுமென்று தோன்றியது; சொன்னேன். பேசுகிற எல்லாமே அவளுக்குப் புரியுமா? பேசுவதையும் நல்ல பொருளில் எடுத்துக் கொள்ளத் தெரியுமா என்ற நினைவு பின்னுல் எழுந்தது.

பேச்சிலும் செயலிலும் தன்னைப்போல் இரண்டத்தனே மாமியாக, முப்பது வயதைத் தாவிப் பிடிக்க முயல்வாள் அவள்!

"உன் தம்பி தங்கைகளெல்லாம் எங்கே? அண்ணு ஊசென்ன் இனிமேல் தேவையில்லே யென்று குளம் குட்டைகளேயெல்லாம் குத்தகை எடுத்துவிடப் போகிறுர்கள்!" என்றேன்.

"இல்லே; உங்களிடம் எல்லாருக்கும் பயமுண்டு. செல்லத்தோடு கூடின பயம். பெரியவன் ஸ்காலர்ஷிப் பரீட்சை எழுதப் போயிருக்கிறுன்." அடுத்தவர்களின் அறுவல்களே நிலேயில் கொண்டு வரக் கண்ணே மூடிஞள் அவள். பெரியவன் என்றுல் அவளுக்குச் சிறியவன்தான். அவளேவிட இரண்டு வயது சிறியவன்; பதின்மூன்று பதினுறு வயதிருக்கும். அவனுக்குப் பிறகு எட்டிலும் ஆறிலுமாக இரண்டு பெண்கள் இருந்தனர்.

"ஜயந்தி மாவுமில்லுக்குப் போயிருக்கிறுள். லேலி அவளுக்குத் துணே போயிருக்கிறுள். தான் வாயில் விரலேப் போட்டிருக்கிறதைக் கண்டால்தான் மீன்காரன் அரைத்துக் கொடுப்பான் என்ற நினேப்பு போயிருக்கிறது அவளுக்கு!"

"அண்ணு மாதிரி அவள், பாவம் சாது!" என்றேன்.

'போதுக்' கென்று ரோஜாவின் கண்களில் பனி முத்துக்கள் போல் நீர் கட்டி விட்டது. விமல் வெளிப்படக் கூறினான்:

''அண்ணு சாதுதான் மாமா. ஆள் மாறி அவனை யாராவது அடித்து விட்டால் கூட அவன் ஏன் என்று கேட்க மாட்டான். அவன் ஏன் மாமா அத்தனை தூரம் வேலைக்காகப் போக வேண்டும்? இங்கேயே அவனுக்கு வேலை கிடைக்காதா? ஒருகால் எங்கள் தொந்தரவு பொறுக்காமல்தான் எங்களை விட்டு விட்டுப் போய் விட்டானு? உங்களிடம் ஏதாவது ரகசியமாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறுனு?''

''சீ! சீ! நீ இப்படி யெல்லாம் நினைக்கிறதே தப்பு, ரோஜா! உங்களுடைய நன்மைக்காகத்தான் அவன் போயிருக்கிறுன். அங்கே சம்பளம் நிறையத் தருவார்கள், போகப் போக....''

''எங்களைத் தனியே விட்டுவிட்டு, அவனும் தனித்துக் கொண்டு நிறையச் சம்பாதிக்கிறதில் என்ன மாமா லாபம்?''

இவ்வளவு பேசுகிறவளுக்கு அண்ணவின் கடமையைப் பற்றித் தெரியாமலா இருக்கும் என்று நினைத்தேன். அதனுல் வேறு விதமாகச் சொன்னேன்: ''அப்பா கடன் ஒன்றிருக்கிறது, அம்மா! அதை அவன் தீர்க்க வேண்டும்.''

''அது வேணுமானுல் வாஸ்தவம்தான். ஒரு கடன் என்ன, ஒன்பது கடன்கள் கூட இருக்கும். நீட்டின இடத்திலெல்லாம் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கி யிருக்கிருர். 'உங்களால் நிறைய ரெவின்யூ ஸ்டாம்ப் அச்சாகி, சர்க்காருக்கு லாபம்தான் போங்கள்' என்று அம்மா கூடச் சொல்லுவாள். ஆனல், அவர் கடன் பட்டதெல்லாம் குடும்பத்துக்காகத்தானே.''

அவள் ரூபாய் அணு பைசாக் கடனேயே விவரிக்கத் தொடங்கி விட்டாள், லீவில் வந்திருந்த பஞ்சுவிடம் இதைச் சொன்ன போது அவன் சிரித்தான்.

''குடும்ப நிர்வாகம் எப்படிப் பண்ணுகிறுள்? அதுதான் முக்கியம்.''

''நந்நாட்டினை ரோஜாவை வைத்துக் கொண்டு அவள் முன்னுலேயே வழக்குச் சொல்கிறுயா?'' என்றேன்.

''நான் தீர்மானமாய்ப் போகிறேன், மாமா. பாராட்டுவதானுலும் திட்டுவதானுலும் கூசாமல் செய்யுங்கள்'' என்று வண்டெனப் பறந்தாள் அவள். மின்னுவது போல் அவள் இயங்குவதே துரிதமாகத்தானிருக்கும். பாராமல் பக்கவில் போனோரின் கழுத்தில் விழுந்து கண்டுவது போல் அவள் சடை நடை வேகத்தில் வீசிறும். அவள் போன பின் பஞ்சுவிடம் கூறினேன்.

''இந்த உலகத்தையே நிர்வாகம் பண்ணுகிற தனித்தன்மை கூடியவள் அப்பா உன் தங்கை. என் அம்மாவுக்கு எதிலும் அவள்தான் 'கன்ஸல்டண்ட்'! எப்போதோ பண்ணுகிற ஜோத்தூதிக்கும் அம்மாவுக்கும் தான் அவளிடம் சர்க்கரையை அளவு காண்பிக்கிறுளென்றுல் தினம் போடுகிற குழம்பு - ரஸப் புளியையும் அவள் கண்ணில் காட்டிவிட்டுத்தான் போடுகிறுள் அம்மா!'' என்றேன்.

கையில் இரண்டு தட்டுக்களுடன் வந்தாள் ரோஜா.

''அண்ணு, கல்கத்தா ரஸகுல்லாவை மாதிரி பார்க்காமல் நுனி மாமா தப்பித்துக் கொண்டே போகிறுரே என்று அவருக்காக இரண்டு எடுத்து வைத்திருந்தேன். இது நான் இன்றைக்குப் பண்ணின சாதாரண ரஸகுல்லா!'' என்று எங்கள் நடுவே இரண்டு தட்டுக்களையும் வைத்தாள்.

''அட ஏதப்பா இது! நீ வரும்போது கொண்டு வந்தாயா?''

''நான் புறப்படுவதற்கு முதல் நாள் கல்கத்தாக்காரர் ஒருவர் இரண்டு டின்கள் வாங்கிக் கொண்டு வந்தார். ஒரு டின்னைத் தட்டிக் கொண்டு வந்தேன்.''

பஞ்சு கொண்டு வந்த ரஸகுல்லாவை ருசி பார்த்தேன்.

''எப்படி மாமா இருக்கு?'' என்று முதல் துண்டம் கண்டத்துக்குக் கீழ் இறங்குமுன்பாகவே கேட்டாள் ரோஜா.

''கல்கத்தா ரஸகுல்லா என்றால் கேட்க வேண்டுமா?''

''உக்கும்! கண்ணை மூடிக் கொண்டு சாப்பிட வேண்டுமாக்கும்! தெட்டுவைத் துருவிப் பாகில் ஊறப் போட்டாற் போல் ஒரு பண்டம். அதைப் போய்...''

''என்ன ரோஜா இப்படிப் பேசுகிறுய்! உன் அண்ணு ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறுன்...''

''வாங்கிக் கொண்டு வந்த வரையில் அண்ணுவுக்குரிய நன்றி உண்டு. பண்டத்தின் மதிப்பு பண்டத்தோடுதானே.''

''என்னவோ அம்மா, கல்கத்தா ரஸகுல்லாவை உலக மெல்லாம் புகழும். நீ ஓர் அலாதியான பிறவி.''



"அவாதிப் பிறவி பண்ணின இந்த ரஸகுல்லாவைச் சாப்பிட்டுப் பாருங்கள்!"

"உன் கைச் சரக்கைச் சாப்பிடாமலேயே 'சபாஷ்' போட்டுச் சொல்லி விடலாம் ரோஜா!"

அவள் முகத்தில் பெருமிதத்தின் ரேகைகள் படர்ந்தன. அவளைப் புகழ்வது எப்போதும் அவனுக்குப் பிடிக்கும். புகழ்ச்சிக்கு உரிய ரீதியில் தவிர அவளது செயல்கள் வேறு வகையில் இரா. புகழ்ந்து சொல்லும்போது அவள் முகத்தில் ஒரு நிகர் அமைதி வந்து சூழும். கண்கள் ஒருமித்த பார்வையில் பேசுபவரின் பேச்சுக்குப் பிறப்பிடமான உள்ளத்தினுள்ளே துழாவிச் சென்று மீளும். கன்னங்கள் குழியும். நாணம் கொழித்து, செம்மையை வழித்து, பக்கலில் பரப்பியதால் ஏற்பட்ட குழிவுகளோ அவை என்று சில சமயம் நான் எண்ணுவேன்.

பஞ்சு லீவில் வந்து திரும்பியது ஒரு பதினைந்து நாள் மழையடித்து ஓய்ந்தாற்போல் தோன்றியது. இந்த நாட்களில் தம்பியும் தங்கைகளும் அவனைச் சூழ்ந்துகொண்டு, 'அண்ணா அண்ணா' என்று இன்னும் ஒரு நீண்ட கால இடைவெளிக்குச் சேர்த்தே வட்டி போட்டுக் கொண்டு உறவாடினர்; உரையாடினர்; பாசத்தைப் பிடுங்கிக் கொண்டு, பாசத்தைக் கொடுத்து நிரப்பினர்.

அவன் ஊருக்குப் புறப்படுகிற அன்று வாசலில் சின்னவர்களெல்லாம் கையைத் தூக்கி 'டா டா' சொல்லி வழியனுப்பினர். ரோஜா கண்ணீரை உள் தேக்கும் போராட்டத்துடன், இமைகள் சடசடக்க, தூண் ஓரமாக நின்று கொண்டிருந்தாள். குஞ்சுகள் தூக்கிய இறக்கைகளால் பறக்க இருப்பது போல் 'டாடா' காண்பித்த கரங்களையும் துணை ஒளியாய் வர நின்றது போல் இலங்கிய ரோஜாவின் விழிகளையும் பார்த்துக் கொண்டே பஞ்சு விடைபெற்றான்.

உண்மையாகவே மழைக் காலம் வந்தது. மூன்று மாதங்கள் மழை வரிசை பலமாகத்தான் இருந்தது. தொணதொணக்கிற குழந்தைகள் மாதிரி சில நாட்கள் 'அழுகுணி' மழை; வீறு கொண்டு பொருதும் பயில்வான்களின் வெறி மூச்சுப்போல் பல நாட்கள் அடைமழை. மழையின் விளைவு எங்கும் எதிரொலி காட்டியது. காங்கை வீசிக் காய்ந்து கொண்டிருந்த வெறுந் தரைகளெல்லாம் பசுமை காட்டத் தொடங்கின. இடைவெளிகளில் சூரியன் புகநின்ற மரக் கிளைகள் பசுங்கொழுந்துகள் மண்டக் கண்டு, கரங்கள் நீட்டிச் சிரித்தன. பழைமையை யெல்லாம் கழுவி விட்ட பெருமிதத்துடன் மழை ஓய, உலகம் ஒரு தூய உருவுடன் தோன்றியது.

எங்கள் வீட்டிலும் ஒரு புதுமை பூத்தது. வெகுநாட்கள் விருந்தாளி இல்லாத வீட்டுக்கு ஒரு விருந்தாளி!

"அடேடே! சேதுவா? உனக்கு இந்த திசைக்கு வழி தெரிஞ்சதாடா?.." என்று கேட்டுக் கொண்டே அம்மா என் புறம் திரும்பி, "யார், தெரிகிறதாடா, ஹரி?" என்றாள். நான் உதட்டைப் பிதுக்கத்தான் முடிந்தது.

அவன், அம்மா வழியில் உறவினன். சின்ன வயசுக்குப் பிறகு அம்மாவே அவனை இப்போதுதான் பார்க்கிறாள். அவன் வந்த அன்று சாயங்காலம் அவன் எதிரில் இல்லாத போது அம்மா என்னிடம் வியந்தாள்!

"சேது எப்படியிருக்கிறான் பார்த்தாயாடா, ஹரி! உன்னையொத்தவனாகத்தான் இருப்பான். மூக்கும் முழியுமா-"

"ராஜ குமாரன்போல இருக்கிறான்."

"அதேதாண்டா! ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணியிருக்கிறானாம். வடக்கே எங்கேயோ அஸிஸ்டெண்டா..என்ன அது.. அந்தக் கலெக்டராயிருக்கானாம்..."

பத்து நாட்கள் எங்களுடன் தங்கிப் போக என்றே நீண்ட விடுமுறையின் ஒரு பகுதியை ஒதுக்கியிருந்தான் சேது.

"உங்கள் வீட்டுக்கு யாரோ வந்திருக்கிறார்களே, யாரது?" என்று கேட்டாள் ரோஜா, ஒரு நாள் காலையில்.

"அது இன்னொரு பூனை!" என்றேன்.

அவள் சிரித்தாள். "கேட்டால்... உங்கள் அம்மாவையே கேட்டுக் கொள்கிறேன், மாமா!"

"நீங்கள் எல்லாம் ஆண்களுக்கு அப்படித்தானே பெயர் வைக்கிறீர்கள்?"

"நீங்கள் மட்டும்? ரோஜா ரோஜா என்று என் பெயரைக் குறுக்கி விட்டீர்களே...பரவாயில்லை. நீங்கள் மட்டும் அப்படிக் கூப்பிடுகிறீர்கள்; அது நன்றாக இருக்கிறது. நாளைக்கு உங்கள் நண்பரும் அப்படி ஆரம்பித்து விடப் போகிறார்."

நான் ரோஜா என்று அவளைக் கூப்பிடுவதையும் அவளுடன் பழகுவதையும் சேது அதிசயங்களை வரிசையாய்க் கண்டாற்போல் கண்டிருக்க வேண்டும். அவள் பெயர் அப்படி அமைந்ததற்கு நான் பாஷ்யம் கூறினேன். அவன் தங்கியிருந்த பத்து நாட்களும் எங்கள் வீட்டிலும் கலகலப்பாயிருந்தது. அவனுக்கான விருந்துகள், உபசாரங்கள் எல்லாவற்றுக்கும் அம்மா சாட்சியாய் நின்று கொண்டு காரியங்களுக்கு ரோஜாவையே விட்டு விடுவாள். அவள் சுபாவப்படி ஓட்ட நடையுடன் நடமாடி எல்லாம் செய்து விட்டு என்னிடம் வந்து விசாரிப்பாள்.

"என்ன மாமா, இன்றைக்கு அவியல் எப்படி?"

"பலே, ஜோர்!"

"உங்கள் நண்பர் இன்னும் இரண்டு வருஷங்களுக்குச் சேர்த்து அவியல் சாப்பிட்டிருக்கிறார்!"

"சீசீ! இதெல்லாம்கூடப் பரிகாசமா? பேசாமல் இரு!" என்பேன் நான்.

சேது ஊருக்குப் புறப்பட்டான். 'போய் வருகிறேன்' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு வாசலில் நின்ற இடத்திலேயே வட்டமடித்தான். பிரிய மனமில்லாமல் குழந்தை குழம்புகிறான் என்று, இருபது வருஷங்களுக்குப் பிறகு வந்து தலைகாட்டி விட்டுப் போகும் 'குழந்தை'யைப் பற்றி அம்மா அஞ்ஞானத்துடன் நினைத்திருக்க வேண்டும்; அவள் கண்களில் நீர் பெருகியது. ஆனால் சேதுவின் கண்கள் தெளிவாக இருந்தன. அவன் பார்வையின் வட்டத்திலிருந்தவர்களைக் கவனித்தேன். ரோஜா சற்று எட்டி நின்றிருந்தாள்.

"போய் வருகிறேன், சரோஜா!" அவன் தவிப்புக் கடைசியில் புரிந்தது.

"போய்ட்டு வாங்க, சார்!" என்று 'டக்'கென்று சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்து நாக்கைக் கடித்துக் கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தாள் ரோஜா. அவள் கன்னங்கள் குழிந்தன

ரோஜாவின் போக்கில் ஒரு மாறுதல் - உணர்கிற நிலையில் மெள்ள மெள்ள ஏற்பட்டு வந்தது. அம்மாதான் இதை உடனே தெரிந்துகொண்டு என்னிடம் தூபம் போட்டு விட்டாள்.

"முன்பெல்லாம் அந்தப் பொண்ணு கலகலன்னு சிட்டு மாதிரி ஓடி ஆடிக் கொண்டிருந்தது. இப்போ அடிக்கடி எதையோ நினைச்சுண்டு ஸ்தம்பிச்சு நிற்கிறது. கண்ணாடி முன் நின்றால் நின்றது; தலைப் பின்னலை அவிழ்த்துப் பிடித்துக் கொண்டால் பின்னிக்கவே மறந்துபோய் விடுகிறது......."

நான் அம்மாவிடம் பதில் சொல்ல என்ன இருக்கிறது? 'ம், ...?' என்ற அசைவுடன் நிறுத்திக் கொண்டேன்.

ரோஜாவின் மனசை விண்டு பார்க்கிற வம்புத் தன்மை என்னிடம் இல்லை; ஆனால் அவளுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்தி மூலம் அவள் மனத்தை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் போலிருந்தது.

எங்கோ கூடத்தின் குறுக்கே போய்க் கொண்டிருந்த அவளைக் கூப்பிட்டு, "ரோஜா, சேதுவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. உன்னை ஒரேயடியாய் வானத்தில் தூக்கியிருக்கிறான்" என்றேன்.

"நான் பூமியிலிருப்பது பிடிக்கவில்லையாக்கும் அவருக்கு.. என்ன சொல்கிறார்?" என்று கேட்டாள் சரோஜா.

அவள் முகம் ஒளி தெறித்து, ஆர்வத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தது.

"அவன் இங்கே வந்திருந்த போது நாங்கள் திருவான்மியூர்ப் பயணம் சென்றோமே. அதற்கு நீ தயார்ப்படுத்திக் கொடுத்த சர்க்கரைப் பொங்கலைப் பற்றி வர்ணித்திருக்கிறான். 'நெய் பெய்து முழங்கை வார' என்ற பாட்டுக்கு அநுபவரீதியான அர்த்தம் கண்டு கொண்டேன் என்று எழுதியிருக்கிறான்..."

புகழ்ச்சி அவள் மெய்யைத் தீண்டி, உணர்வைத் தூண்டி மரக்கச் செய்து விட்டது போலும்! கன்னங்கள் கதாவாகக் குழிய, பார்வையைக் காதக் கணக்குக்குத் துரத்தி நின்ற தோரணையுடன் எங்கோ கண்களைச் செலுத்தி நின்றாள் சரோஜா.

"என்ன யோசிக்கிறே ரோஜா?"

"ஒன்றுமில்லை, மாமா! அவர் இருபது வருஷங்கள் கழித்துத்தானே உங்களையெல்லாம் பார்க்க வந்தாராம்... மறுபடியும் இன்னும் இருபது வருஷங்கள் கழித்து வருவாராமா?"

நான் சிரித்தேன். "அவன் ஆள் அழுத்தம். ஒரு வேளை இனிமேல் சீடையராகி வந்தாலும் வருவான்!" என்றேன்.

ரோஜாவின் முகம் திடீரெனச் சுருங்கியது. அதை மறைக்க ஒரு சிரிப்பைச் சிருஷ்டிக்க முயன்றாள். வறண்ட சிரிப்புத்தான் அது!

காலமும் அதன் பின் வறண்டு ஓடிக் கொண்டிருந்தது.

"அண்ணா ஏன் மாமா இந்த வருஷம் லீவில் வரவில்லை?" என்று ரோஜா முதல் சோனி வரை நூறுதரம் கேட்டு விட்டார்கள். அவனுக்கு விடுமுறை கிடைக்கவில்லை. மாதா மாதம் என் பெயருக்குப் பணம் அனுப்பி, செலவு விவரம் எழுதுவான். கடைசிப் பைசா வரையில் செலவு சரியாயிருக்கும். "ஸரோஜாவுக்காகப் பாங்கியில் பணம் கட்டி வரவேண்டும் என்று நானும்




அன்பர்களுக்கும்
அபிமானிகளுக்கும்
எமது மனமார்ந்த
தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
பெங்கால்
எலக்டிரிகல்ஸ் கோ.
BENGAL

இரண்டு வருஷங்களாக முயல்கிறேன். பழைய கடன்கள் இன்னும் திறந்த வாயை மூடவில்லையே!' என்று ஆதங்கப் பட்டுக்கொண்டு கடைசியாக எனக்கு எழுதி யிருந்தான் பஞ்சு.

அதற்கு அடுத்த வருஷமும் அவன் வரவில்லை.

சேது ஏதோ குறுகிய நாள் விடுமுறையில் வடக்கிலிருந்து தெற்கே போவதாகவும், இறங்கித் தங்கிப் போகக் கூட இயலாததால் என்னை லென்ட்ரல் ஸ்டேஷனில் சந்திக்கும்படியும் எழுதியிருந்தான். இதைப் பற்றி வீட்டில் பேசிக் கொண்டிருந்த போது, சேது என்ற வார்த்தை கேட்டதும் குழந்தை மாதிரி ஓடி வந்தாள் ரோஜா. அவன் இங்கே வராமல் நேராகப் போகிறான் என்றதும் அவள் முகம் 'சுள்'ளென்று வெயில் அடித்தாற்போல் சிணுங்கியது.

நான் லென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்படுகிற சமயம் ரோஜா கையில் ஒருடிபன்பாக்ஸுடன் வந்தாள்.

''என்ன இது?''

''சர்க்கரைப் பொங்கல். நீங்களும் உங்கள் நண்பருமாக ஸ்டேஷனில் சாப்பிடுங்கள். திருவான்மியூரை மறக்கடித்து லென்ட்ரலேயே நினைவுபடுத்தும் இது!'' என்றாள் சரோஜா.

அவள் முகம் இன்று புதிய சோபை காட்டித் துலங்கிற்று. தலை கனக்கப் பூவும், உடல் மினிரப் பட்டாடையும், அதரம் சிவக்கச் சிரிப்பும் கூடி ஒரு வைபவப் பெண்ணாய் நின்றாள்.

இரவு வெகு நேரம் கழித்துத் திரும்பினேன். அம்மாவிடம் சேதுவின் சந்திப்பைச் சொல்லிக் கொண்டிருந்தேன். கேட்டதையே திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தாள். காலையில் ரோஜா என்னிடம் வந்தாள்.

''உங்கள் நண்பரைப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன்...'' அதற்கு மேல் சொல்ல ஒன்றும் இல்லை. அவசரத்தில் சேது அவளைப் பற்றிச் சரியாகக்கூட விசாரிக்கவில்லை.

ரோஜா ஏமாற்றத்துடன்திரும்பினாள்.

அன்று வெகு நேரம் வரை தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தேன். மனத்தில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத நினைவுக் கோவைகள். 'குஞ்சுக் குடும்பம்' என்று நான் அழைத்த அவர்களது குடும்பம் எங்கள் வீட்டுக்கு வந்த பிறகு நான்கு வருஷங்களாக வாழ்க்கை நடத்தியதையும், என்னுடைய சுடுபாட்டையும் எண்ணிப் பார்த்தேன். ரோஜாவின் சிறுசிறு அசைவு முதல் அவளது தோற்றம், அழகு, பேச்சு, துரிதமான இயக்கம், கோபம், தாபம் வரை எல்லாம் என் மனப் பெட்டகத்தில் இதழ் மேல் இதழாய்ப் படிந்திருந்தது. அவற்றின் ஒருமித்த உருவைக் காண வேண்டி என் மனப் பெட்டகத்தைத் திறந்து பார்க்க விழைந்தேன். அவையெல்லாம் அதனதன் அடையாளங்களால் காய்ந்து, பட்டின் மிருதுவை அடைந்து விட்ட சருகுகளாய்த் தங்கியிருந்தன. ரோஜாவின் முழு உருவைக் காணவில்லை! ஏமாற்றத்தின் அடித்தளத்திலேயே ஒரு நிம்மதி பிறந்தது. என்னைவிட ரோஜா மனத்தைக் கட்டி ஆள்வதில் ஒரு நிர்ணயத்தைக் கடைப்பிடிக்கத் தெரிந்தவளாயிருக்கிறாள்.

திடீரென்று யாரோ பெரிய குரலில் கத்துகிற சத்தம் கேட்டு மாடியிலிருந்து ஓடி வந்தேன். அதற்குள் விளக்கைப் போட்டு விட்டு, ''என்ன, என்னடி பெண்ணே?'' என்று கேட்டுக் கொண்டு ரோஜாவும் குழந்தைகளும் படுத்திருந்த அறைக்குள் போனாள் அம்மா. அறைவாசலில் ஒரு நிமிஷம் நின்றேன். என் உருவத்தைக் கண்டுவிட்டு அம்மா, ''ஒன்றுமில்லேடா, நீ போ! ஏதோ சொப்பனம் கண்டு ஸரோஜா உளறி யிருக்கிறாள். நான் பார்த்துக் கொள்கிறேன். அவளுக்குத் துணையாகப் பக்கத்தில் படுத்துக் கொள்கிறேன்!'' என்றாள்.

மறுநாள் நான் எதிர்பாராத விதமாக எனக்குக் காப்பி எடுத்துக் கொண்டு மாடியேறி வந்தாள் ரோஜா. அவள் தோற்றம் தூய்மையைத் துணைக் கொண்டு தெரிந்தது. ''என்ன இது? நான் காப்பி சாப்பிட்டு விட்டேனே.''

''இது நான் கொடுக்கும் காப்பி.''

''எதற்கு?''

''டீ பார்ட்டி என்று வைத்துக் கொள்ளுங்களேன்...''

''டீ பார்ட்டியா? என்ன விசேஷம்?''

''குடியுங்களேன்... சொல்கிறேன்.''

காப்பியைக் குடித்தேன். மணம் நிறைந்த மது ரஸமாயிருந்தது.

''என்ன ரோஜா?''

அவள் தயங்கினாள். இமைகள் படபடத்தன. ''தைரியமாய்ச் சொல்லத் தான் கலகலப்போடு மாடி ஏறி வந்தேன். நாக்கே புரள மாட்டேன் என்கிறது!''

''சும்மா சொல்லு!''

''நீங்கள் என் மனசிலிருந்து வெளியேறி விட்டீர்கள்....''

''ரோஜா...! நீயும் அந்த ஆராய்ச்சியையே நடத்தினாயா....?''

''ஆமாம்; நீண்ட நாட்கள் திறக்காத பெட்டியைத் திறந்ததும் அதில் ஒன்றுமில்லாததைப் போல்...''

அவள் கன்னங்களில் இரு நீண்ட முத்துக் கோவைகள். அவளைத் தேற்றத் தெரியவில்லை எனக்கு.

''ஏதோ கனவு கண்டு உளறினாயாமே, ரோஜா?''

''வழக்கமில்லாத வழக்கம். அதுவும் உங்களால்தான்...''

''என்னுலா, என் அம்மாவையும் சேர்த்துச் சொல்கிறாயா?''

''இரண்டு பேரும்தான்.''

''நாங்கள் என்ன பண்ணினோம்?''

''உங்களுக்குக் கல்யாண முயற்சி நடக்கிறது. ஏதோ ஜாதகம் வந்ததாம்...''

''அப்படியா? அம்மா என்னிடம் சொல்லவே யில்லையே!''

''என்னிடம் சொன்னார்கள். அது தான் நான் கனவு கண்டதற்கு அடிப்படைக் காரணம்...நேற்று மகா பயங்கரமாக இருந்தது. இன்று சிரிக்கக்கூட அற்ப விஷயமாகத் தெரிகிறது...''

''என்ன கனவு அது?''

''அம்மாவிடம் சொல்லாதீர்கள்..... அவர்களிடம் ஏதோ இட்டுக் கட்டிச் சொல்லியிருக்கிறேன். நானும் நீங்களும் சேதுவும் எங்கோ பிக்னிக் போயிருக்கிறோம். ஒரு மலை மேல் ஏறி வேடிக்கை பார்க்கும் போது, நான் கால் தவறி ஓர் ஓட்டில் நின்று கொண்டு உங்களை உதவிக்கு அழைத்துக் கூச்சல் போடுகிறேன். நீங்கள் இரண்டுபேரும் கையைக் கட்டிக் கொண்டு நகராமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு சிரிக்கிறீர்கள்.... அந்தப் பயத்தில் உளறியிருக்கிறேன்.''

நான் இப்போதும் சிரித்தேன்.

''உங்கள் அண்ணாவுக்குக் கடிதம் எழுத வேண்டியதுதான்... அப்படியே சேதுவுக்கும் எழுத வேண்டும்...' ஒரு பெண்ணை அப்படிப் பழமுறுத்தலாமாடா என்று கேட்டு அவனை வரவழைத்து விடுகிறேன்' என்றேன்.


''அவன் ஐ. ஏ. எஸ்.காரனுச்சேடா'' என்று சொல்லிக் கொண்டே அம்மா படியேறி வந்தாள். எங்கள் பேச்சத்தையும் அவள் கேட்டு விட்டாள்!

''அவன் கிடக்கிறான், பெரிய கொம்பன்! இது மாதிரிக் கடிதாசைத் தவம் இருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்'' என்றேன்.


''மறக்காமல் மஞ்சள் தடவிக் கடிதாக எழுது'' என்றாள் அம்மா.

அந்த மஞ்சள், குங்குமத்துடன் கூடி ரோஜாவின் இதழ்களில் குழம்புவதைக் கண்ணாரக் கண்டேன்.









விண்ணாசை

இது விண் வெளியுகம். எல்லையற்ற பிரம்மாண்டப் பெருவெளியில் ஒரு சிறிய அணுவுக்குச் சமமாகச் சுழன்று கொண்டிருக்கும் இந்தப் பூமியில் கல்பகோடி காலமாக வாழ்ந்து மண்ணாசையிலேயே ஊறிப்போயிருந்த மனிதன் இப்போது தன் அகந்தைகளுக்கும் பேராசைகளுக்கும் நிலைக்களனாக விண் வெளியைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். விண்ணாசை ஒரு வெறியாக மாறி அவன் மனத்தைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது. மண்ணாசை அற்றுப் போன விண்ணாசை யல்ல. மண்ணாசையின் அடிப்படையில் எழுந்த விண்ணாசை. மண்ணாசையை மனிதன் உதறியெறிய முடிந்திருந்தால் விண்ணுலகம் என்றோ அவனுக்குச் சொந்தமாகியிருக்குமே!

ஏரிக் கரையிலிருந்த பதினாறு கால் மண்டபத்தின் ஒரு பக்கமாகத் தமது வழக்கமான இடத்தில் உட்கார்ந்திருந்த ஆக்காமுவின் மனத்தில் இவ்வித எண்ணங்கள் தான் ஓடிக் கொண்டிருந்தன. விண் வெளியில் பறந்தவாறு ஒன்றரை மணி நேரத்துக்குள் பூமியைச் சுற்றி வந்த ருஷ்ய வீரன் மீண்டும் தன் நாட்டிலேயே குறிப்பிட்ட இடத்தில் போய் இறங்கிய அதிசயம் அன்றையப் பத்திரிகையில்தான் வெளியாகியிருந்தது. மண்டபத்தின் வேறொரு பக்கத்தில் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த வைதிகர்கள் உபாத்தியாயர்கள் இருவர் அந்த அதிசய சாதனையைப் பற்றியே வானளாவப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய புகழுரைகள் தான் ஆக்காமுவின் மனத்தில் மனிதனுடைய அர்த்தமற்ற விண்ணாசையைப் பற்றிய சிந்தனைகளைக் கிளறி விட்டன. வெகு நேரம் வாய் திறவாது கேட்டுக் கொண்டே தமது எண்ணங்களில் மூழ்கியிருந்தவர் சற்றும் எதிர்பாராதவிதமாக மௌனத்தைக் கலைத்தார்.


''என்ன ஐயா பிரமாதப்படுத்துகிறீர்கள்? விண்ணுலகு, வெளியாவது? உயர உயரப் பறந்தாலும் கடைசியில் காலை ஊன்றுவதற்கு இந்த மண்ணுலகுக்குத்தான் ஐயா வந்தாகணும்! மண்ணை உதறிவிட்டு மனிதன் போவது ஒரே ஒரு தடவைதானய்யா!''

ஆக்காமுவின் இந்தக் குறுக்கீட்டைச் சற்றும் எதிர்பாராத அந்த வைதிகர்கள் உபாத்தியாயர்கள் எரிச்சலுடன் அவர் பக்கம் திரும்பினர். சீனி வெடி வெடிப்பதுபோல் படபடவென்று வார்த்தைகளை உதிர்த்து விட்ட அடையாளமே இல்லாமல் தமது வழக்கமான மோனப் புன்னகை முகத்தில் தவழ அமர்ந்திருந்தார் ஆக்காமு.

''பைத்தியக்கார மனுஷன்!'' என்று கூற நினைத்ததைப் பார்வையிலேயே உணர்த்தி விட்டு அந்த உபாத்தியாயர்கள் இருவரும் அங்கிருந்து சட்டென்று எழுந்து அவருடைய காது கேட்காத தூரத்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டு மீண்டும் தங்கள் பேச்சைத் தொடர்ந்தனர்.

ஆக்காமு சாதாரணமாக வாயிலிருந்து வார்த்தைகளை விடுவது ரொம்ப அபூர்வம். ஒரு வார்த்தை அரை வார்த்தையோடு சரி. பெரும்பாலான சமயங்களில் வெறும் ஹூங்காரத்தோடு நிறுத்திக் கொள்வார். மௌனமாயிருப்பதன் இன்பத்தை ஆழ்ந்து ரசிப்பவர். புகையிலைச் சாற்றை வாயில் தேக்கிக்கொண்டு அனுபவிக்கும் மௌனமல்ல. விரதமாகவும் மௌனத்தைக் கைக்கொள்ளவில்லை. இயல்பாக அவரிடம் ஒன்றியிருந்த குணங்களில் அதுவும் ஒன்று. பேச்சில் விருப்பம் கிடையாது. செயலில் விருப்பம் உண்டா என்றால் அதுவும் கிடையாது. எதில்தான் அவருக்கு விருப்பம் இருந்தது? ஓரளவு அவரைப் புரிந்துகொண்டவர்கள் எதிலுமே அவருக்கு விருப்பம் கிடையாது என்றுதான் சொல்வார்கள். அறியாதவர்களோ, அசமஞ்சம், பொறுப்பற்றவன் என்றெல்லாம் தூற்றுவார்கள். ஒன்றையுமே காதில் போட்டுக் கொள்ளாமல் கவலையற்றிருப்பார் ஆக்காமு.

உண்மையில் இந்தப் பரந்த உலகில் கவலையே அறியாத ஜீவன் யாராவது உண்டா என்று கேட்டால் தயக்கமில்லாமல் ஆக்காமுவைச் சுட்டிக்காட்டி விடலாம். அவருடைய பெற்றோர் அவருக்கு



உமாசந்திரன்

ஆசையுடன் வைத்த ராமஸ்வாமி என்ற அழகான பெயர் எப்படி வெப்படியோ திரிந்து ஆக்காமு என்று உருமாறி அந்த உருவிலேயே நிலைபெற்றிருக்கிறதே. அதைப் பற்றியாவது அவர் கவலைப் பட்டிருப்பாரா? கிடையாது! அந்தப் பெயருடன் அசட்டுப் பட்டத்தையும் சேர்த்து 'அசட்டு ஆக்காமு' என்று ஆசையுடன் அழைப்பவர்களைப் பற்றியும் அவர் அலட்டிக்கொள்வது கிடையாது.

ஏரிக்கரையில் விசாலமாக நிழல் பரப்பிக் கொண்டிருந்த அந்த ஆலமரத்துக் கருகில் நாற்புறமும் திறந்திருந்த அந்தப் பதினாறு கால் மண்டபம் எந்தக்காலத்தில் யாருடைய இன்பத்துக்காக ஏற்பட்டதோ சொல்ல முடியாது. ஆனால் அதன் முழுப் பயனையும் இப்போது அநுபவித்து வருபவர் ஆக்காமுதான். காலையிலும் மாலையிலும் ஏரிக்கரைக்குக் காற்று வாங்க வருபவர்கள் யாராவது காலாற அந்த மண்டபத்தில் சில நிமிஷங்கள் உட்கார்ந்து விட்டுப் போவது உண்டு. ஆனால் அந்த மண்டபத்தின் சாசுவத உரிமை ஆக்காமு ஒருவருக்குத் தான் உண்டு.

வீட்டில் இல்லையென்றால் அவர் அந்த மண்டபத்தில் தான் இருப்பார். உண்மையில் அவர் அந்த மண்டபத்தை விட்டு எப்போதாவது வீட்டுக்குப் போவது உண்டா என்று சந்தேகிக்கும்படியாகத் தான் இருக்கும். அந்த ஆறாவது தூணின் அடிக்கல் அவரது முதுகு பட்டுப் பட்டே அவ்விதம் தேய்ந்து மழமழப்பாகி விருக்கிறதோ என்றுதான் நினைக்கத் தோன்றும். அங்கே மோதி நிற்கும் ஏரியைப் பார்த்தவாறு மணிக்கணக்காக அந்த இடத்திலேயே அசையாமல் உட்கார்ந்திருப்பார். என்னதான் யோசித்துக் கொண்டிருப்பாரோ. ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

இத்தனைக்கும் ஆக்காமு சந்நியாசி அல்ல; மனைவி மக்கள், வீடு வாசல் ஒன்றிலும் குறைவில்லை. பிதுரார்ஜிதமான பூஸ்திதியும் போதுமான அளவுக்கு இருந்தது. ஆடம்பர வாழ்க்கை நடத்த முடியாவிட்டாலும் குடும்பத்தின் சாதாரணத் தேவைகளைச் சமாளிக்க அது போதும். ஆனால் ஆக்காமு எப்போதாவது அந்த நிலத்தைக் கண்ணால் பார்த்திருப்பாரா என்பது சந்தேகம்தான். பரம்பரை உரிமையுடன் அந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துச் சாகுபடி செய்து வந்த சாமிக் குடும்பன் யோக்கியமானவன். ஆக்காமுவுக்குச் சேர வேண்டிய நெல்லை மோசம் செய்யாமல் வீட்டுக்குக் கொண்டு வந்து அளந்து விட்டுப் போய் விடுவான். அண்டை வீட்டுக்காரர்களுக்கு இதைப் பற்றி வயிற்றெரிச்சல். ஆக்காமு அசடாயிருந்தாலும் அதிர்ஷ்டத்துக்குச் சிறிதும் குறைவு இல்லையென்று பேசிக் கொள்வார்கள்.

சிறிய வீடு. அதைப் போன்ற குடும்பமும் சிறியது. ஆசைக்கு ஒரே பெண். மனைவி விஷயத்திலும் ஆக்காமு கொடுத்து வைத்தவர். அகிலாண்டம் பரம சாது. ஆக்காமுவுக்கு ஏற்ற அப்பாவி. ஆக்காமுவுக்கு ஏரிக்கரை மண்டபம் சொர்க்கமென்றால் அகிலாண்டத்துக்கு வீடுதான் சொர்க்கம். காலையிலும் மாலையிலும் வீட்டு வாயிலில் கோலம் போடும் நேரம் தவிர மற்ற எந்த நேரத்திலும் யாரும் அவளை வீட்டுக்கு வெளியே பார்த்திருக்க முடியாது. வீட்டுக்குள்ளேயே பம்பரம்போல் சுழன்று கொண்டிருப்பாள். அப்படி யென்னதான் மாற்றி மாற்றிவேலை இருந்துகொண்டிருக்குமோ!

ஆக்காமு வீட்டிலிருப்பது எப்போது, வெளியில் இருப்பது எப்போது என்பதைப் பற்றியெல்லாம் அகிலாண்டத்துக்கு எதுவுமே நிச்சயமாகத் தெரியாது. சாப்பாட்டு வேளைக்கு ஆக்காமு வீட்டுக்கு வந்து சாப்பிட்டால் அவளும் சாப்பிடுவாள். சாப்பாட்டு நினைவே எழாமல் அவர் எப்போதாவது வராமலிருந்து விட்டால் அகிலாண்டத்துக்கும் உபவாசம்தான். மறுபடியும் வீட்டு நினைவு வந்து அவர் வரும்போது, "ஏன் சாப்பிட வரவில்லை?" என்று ஒரு வார்த்தை கூடக் கேட்க மாட்டாள். பரிந்து பரிந்து பரிமாறி அவர் வயிறாரச் சாப்பிடுவதைப் பார்த்து மனம் குளிர்ந்த பிறகுதான் தன்னைப் பற்றிய சிந்தனையே அவள் மனத்தில் தோன்றும்.

ஆனால் மீனுவால் அப்படி இருக்க முடிவதில்லை. வயது வந்து விவரம் தெரிந்த பெண்ணல்லவா? சாப்பாட்டு வேளைக்கு அப்பா வீட்டுக்கு வராததால் அம்மா பட்டினி கிடக்க வேண்டியிருக்கிறதே என்ற தவிப்பு அவள் மனத்தில் நிறைந்திருக்கும். அப்பாவின் தலையைக் கண்டதுமே அந்தத் தவிப்புக் கேள்வியாக வெடித்து வரும்.

"அப்பா! வேளையோடு நீ சாப்பிட வரலேன்னு எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டமாயிருக்கு, தெரியுமா?"

"ஏன்?"

"ஆமாம்! நீ சாப்பிடாமே அம்மா எப்படிச் சாப்பிடுவா? இத்தனை நேரம் உனக்காகப் பட்டினியாயிருக்கா, பாவம்!" என்பாள் மீனு.

"பாவம்!" என்று பெருமூச்செறிந்து கொண்டே ஆக்காமு கைகால்களைக் கழுவக் கிணற்றடிக்குச் செல்வார்.

சாப்பிட்டு முடிந்ததும் சிறிது நேரம் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்வார் ஆக்காமு. அப்போது மீனுவும் அங்கு வந்து எதிர்த் திண்ணையில் உட்கார்ந்து கொள்வாள்.

"அப்பா! வீட்டிலேயே உன் மனசு ஒட்டறதில்லேன்னு எல்லாரும் சொல்றுளே ஏன் அப்படி?"

"என்னைக் கேட்டா...?"

"வீட்டிலே ஒட்டுதல் இல்லேன்னு என்ன அர்த்தம் தெரியுமா?"

"என்ன அர்த்தம்?"

"எங்கிட்டே உனக்கு ஒட்டுதல் இல்லேன்னு அர்த்தம்."

"வீட்டிலேயே இருந்தால்தான் ஒட்டுதல் இருக்குன்னு அர்த்தமா?" என்று கூறி மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்து விடுவார் ஆக்காமு.

உள்ளே தாயார் சாப்பிட உட்கார்ந்திருப்பாள் என்ற நினைவு வரும் மீனுவுக்கு. இரண்டாம் கலத்துக்கு ஏதாவது தேவையாயிருக்குமா என்று பார்த்து வருவதற்காக உள்ளே செல்வாள். அதைக் கவனித்து விட்டுத் திண்ணைக்குத் திரும்பி



வந்து பார்த்தால் ஆக்காமு அங்கே இருக்க மாட்டார். இதயமே சூனியமாகி விட்டது போன்ற ஏமாற்றத்துடன் மீனு தூணைப் பிடித்துக் கொண்டு தெருப் பக்கம் உடலைச் சாய்த்துத் தெருக் கோடி வரை பார்வையை ஓட்டுவாள். தூரத்தில் செல்லும் ஆக்காமுவின் உருவம் ஒரு சுமையாகி அவள் நெஞ்சை அழுத்தும். கனக்கும் இதயத்துடன் பெருமூச்செறிந்தவாறு தாயாருக்கு வேண்டியதைக் கவனிக்கச் செல்வாள்.

அக்கம்பக்கத்தார் மீனுவுக்கு வாயாடிப் பட்டம் சூட்டியிருந்தார்கள். யாருக்கும் அஞ்சாத துணிச்சலும் துடுக்குத் தனமும் அவளிடம் நிறைந்திருந்தன. தன் தகப்பனாரைப் பற்றியோ, வீட்டைப் பற்றியோ யாரேனும் கேலியாகவோ, மரியாதைக் குறைவாகவோ பேசுவதைக் கேட்டால் அவளால் பொறுக்கமுடியாது. மறுகணமே அவர்கள் வாய்மேல் போட்டு அவர்களைத் தலைகுனிய வைத்துவிடுவாள். அசட்டு அப்பாவிகளான ஆக்காமு தம்பதிகளுக்கு இப்படி ஒரு வாயாடிப்பெண்



எங்கிருந்து வந்து பிறந்தது என்று அதிசயித்தனர் அக்கம் பக்கத்தார். ஆனால் ஆத்திரம் மேலோங்கி நிற்கும். அந்த ஆத்திரத்தை அஸ்திரமாகத் தொடுப்பாள்.

''ஏண்டி மீனு, உன் அப்பா அம்மா இன்னும் உன்னைக் குழந்தைன்னே நினைச்சிண்டிருக்காளா?''

''ஏன்? வேறு எப்படி நினைக்கணும்?''

''வயசுவந்த பொண்ணு. காலா காலத்திலே கலியாணமாகணுமேங்கிற கவலை வேண்டாமோ?''

''உங்களுக்குத்தான் அந்தக் கவலை மிஞ்சிப் போச்சாக்கும்!''

''சந்தேகமென்ன? உங்கப்பா அம்மா உன்னை இப்படித் திரிய விட்டிருக்கிறது எங்களுக்குத் தானே மானக்கேடா யிருக்கு!''

''அப்படீன்னு ஒரு காரியம் செய்யுங்களேன்!''

''என்ன?''

''ஒரு நல்ல வரனாப் பார்த்து நீங்களே எனக்குக் கலியாணம் செஞ்சு வச்சிடுங்களேன்!''

''பேசற பேச்சைப் பாரு! உன் கலியாணத்துக்கு யாரார் தான் பொறுப்பா?''

''அப்போ வாயை மூடிண்டிருக்கணும், தெரிஞ்சுதா?'' என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பாள் மீனு.

அன்றும் ஆக்காமு வீட்டுக்குப் போக மறந்து விட்டார். மண்ணாசையுடன் பிணைக்கப்பட்ட விண்ணாசையைப் பற்றிய சிந்தனையில் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணமே அவர் மனத்தில் எழவில்லை. மண்டபத்துத் தூணில் சாய்ந்து ஏரியின் நீர்ப்பரப்பில் விழிகளைப் பதித்தவாறு அசைவற்று உட்கார்ந்திருந்தார். வான வெளியைப் பிரதிபலித்துக் கொண்டு அமைதியாக நின்ற ஏரித் தண்ணீரின் காட்சி பசி தாகம் முதலிய எல்லா உணர்ச்சிகளையும் அவர் மனத்திலிருந்து அகற்றி விட்டது. அவர் விழிகள்தான் ஏரித் தண்ணீரில் லயித்திருந்தன. ஆனால் அவரது உள்ளமும் உணர்ச்சிகளும் ஏரிப் பரப்பில் பிரதிபலித்த வானவெளிக்குள் ஊடுருவியிருந்தன. விண்வெளியில் பறக்கும்போது எடையற்றுப் போவார்களாமே! மண்ணோடு பதிந்திருந்த நிலையிலும் கூட எடையற்ற உணர்ச்சிதான் ஆக்காமுவின் உள்ளத்தில் வியாபித்திருந்தது.

இங்கொன்றும் அங்கொன்றுமாக நீர்க் காகங்கள் ஏரித் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. நீர்ப் பரப்பிலேயே மிதந்த நீர்க்காகம் திடீரென்று முக்குளித்து நீருக்குள் மறைந்து விடும். சற்றுப் பொறுத்து வெகு தூரத்துக்கப் பால் தலையைத் தூக்கி மீண்டும் மிதக்க ஆரம்பிக்கும். ஆக்காமுவின் மனமும் அப்படித்தான். திடீரென்று வெளி நினைவுகளின் தொடர்பை அறுத்துக் கொண்டு உள்ளே அடங்குவதும், மீண்டும் உணர்வின் மேல்தளத்துக்கு வந்து மிதப்பதுமாக இயங்கிக் கொண்டிருந்தது.

அம்மாதிரி ஒரு தடவை அவரது மனம் உணர்வின் மேல் தளத்துக்குத் திரும்பிய போது, ''அப்பா, அப்பா!'' என்ற அழைப்பு அவர் காதில் ஒலித்தது. ஏரிக் கரை வழியே நடந்து வந்து கொண்டிருந்த மீனு அவரருகே வந்து உட்கார்ந்தாள். ஒரு தூக்குப் பாத்திரத்தில் சாப்பாடும் கூஜாத் தண்ணீரும் இலையுமாக அவள் வந்திருப்பதைப் பார்த்து ஒன்றும் புரியாமல் விழித்தார் ஆக்காமு.

''எதற்கு இதெல்லாம்?''

''இன்னும் எத்தனை நேரம் பட்டினி இருப்பாய் அப்பா?''

''நேரமாகி விட்டதா?''

''நாலு மணி!''

ஆக்காமு ஒன்றும் சொல்லவில்லை. கல் மண்டபத்திலேயே ஒரு பக்கமாக மீனு இலையைப் போட்டுப் பரிமாறியதும் இலை யெதிரே வந்து உட்கார்ந்து கொண்டார். பாதித் தூக்கத்தில் எழுப்பப்பட்ட குழந்தை, தாயார் வாயில் ஊட்டிய சாதத்தைத் தூக்கக் கலக்கத்துடனேயே விழுங்கி விடுவது போல் ஆக்காமுவும் ஒட்டியும் ஒட்டாத நிலையில் இருந்த வாறே மீனு இலையில் பரிமாறியவற்றை யந்திரம் போல் சாப்பிட்டு முடித்தார்.

''அம்மா இன்னும் சாப்பிடவில்லையா?'' என்று கேட்டார்.

''எப்படிச் சாப்பிடுவாள்? ராத்திரி வரை பட்டினி கிடக்கப் போகிறீரே என்றுதான் நான் சாப்பாட்டைக் கையோடு எடுத்து வந்தேன்!''

''பாவம்! நீ சீக்கிரம் போ. அம்மா காத்திருக்கப் போகிறாள்.''

''நீ இப்போதைக்கு வீட்டுக்கு வரப் போவதில்லையா?''

''இப்போதே என்ன அவசரம்! சாப்பாடுதான் முடிந்து விட்டதே!''

''சாப்பாடு ஒன்றுக்காகத்தான் வீட்டுக்கு வருகிறேனா?''

''ம்!''—வெறுமை நிறைந்த புன்சிரிப்புத்தான் ஆக்காமுவிட மிருந்து வெளிப்பட்டது. 'சாப்பாட்டைத் தவிர வீட்டில் நான் வேறென்ன செய்கிறேன்!' என்று கூற நினைத்தாரோ என்னவோ!

''ஏன்தான் நீ இப்படி இருக்கிறாயோ!''

''எப்படி?''

''ஒன்றிலும் பற்றுதல் இல்லாமல்!''

ஆக்காமு மெல்லச் சிரித்தார்.

''பற்றுதல் இல்லாதவனிடந்தான் எல்லாப் பாக்கியமும் தன்னைப் போல் வந்து சேருமாம். உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. என் விஷயத்தில் அது எவ்வளவு பலித்திருக்கிறது!''

மீனு ஒன்றும் பேசாமல் இலையை எடுத்துச் சுத்தி செய்து விட்டுத் தூக்குப் பாத்திரத்தையும் கூஜாவையும் மூடி யெடுத்துக் கொண்டாள். பொங்கித் ததும்பிய விழி நீரை உள்ளே அடக்கிக் கொள்ள அவள் பட்டபாடு!

ஏரிக்கரை இறக்கத்தில் ஒற்றையடிப் பாதை வழியே மீனு சென்று கொண்டிருந்தபோது எதிரே ஜம்பு வந்து கொண்டிருந்தான். மீனுவைக் கண்டதும் சற்று ஒதுங்கி நின்றுகொண்டாள்.

''மாமா மண்டபத்தில்தான் இருக்கிறாரா?''


''ஆமாம். நீ ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்?''

''கொஞ்ச நேரம்தான் ஆயிற்று. வந்ததும் வராததுமாக மாமாவின் நினைவு வந்து விட்டது. வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை'' என்றான் ஜம்பு.

''நீ எப்போதுமே அப்படித்தானே!''

''முதலில் மாமாவைப் பார்க்க வேண்டும். அப்புறம் வீட்டுக்கு வருகிறேன். கடைக்குப் போக வேண்டிய வேலை இருந்தால் மாமியிடம் கேட்டு வை'' என்று கூறிவிட்டு மேலே நடந்தான் ஜம்பு.

அவனுடைய கபடமில்லாத சுபாவத்தை நினைத்து நெஞ்சம் தழுதழுக்க வாறு மீனு வீட்டை நோக்கி நடந்தாள்.



''ஒன்றும் பயப்படாதீர்கள்! எவரோ தீபாவளிப் பட்டாசை வெடிச்சிருக்கான்!''

ஆக்காமுவிடம் அந்தரங்க பக்தியுடையவர் யாராவது உண்டென்றால் அது ஜம்புதான். 'மாமா' என்பது மரியாதை அழைப்பே தவிர, உறவுமுறை எதுவும் இடையாது. பயன் கருதாத பக்தி யென்றால் ஜம்புவின் பக்தியைத் தான் சொல்ல வேண்டும். ஆக்காமு தன்னிடம் பேச வேண்டுமென்று கூட அவன் எதிர்பார்ப்பதில்லை. அவரைப் பார்த்துக் கொண்டிருக்க முடிந்தால் அதுவே அவனுக்குத் திருப்தி. சர்வே இலாகாவில் உத்தியோகம். அடிக்கடி வெளியூர் போகும்படி இருக்கும். ஊருக்குத் திரும்பி வந்ததும் தேவைக்கு மேல் ஒரு நிமிஷம் கூட வீட்டில் தங்க மாட்டான். நேரே ஆக்காமுவைத் தேடிக் கொண்டு ஏரிக்கரை மண்டபத்துக்கு வந்து விடுவான். ஸாஷ்டாங்கமாக அவருக்கு நமஸ்காரம் செய்து விட்டு ஒரு பக்கமாக உட்கார்ந்து கொள்வான்.

''சௌக்கியமா?'' என்று ஒரு வார்த்தைதான் ஆக்காமு கேட்பார். பதிலுக்கு குழைவாகச் சிரிப்பான் ஜம்பு. அவ்வளவுதான், அவர்கள் சம்பாஷணை அதோடு தீர்ந்து விடும். அப்புறம் மௌனம், ஒரே மௌனம்தான். இருவர்களின் உறவாடலுக்கு இடையே பேச்சு ஒரு தடை போலும்!

ஜம்பு அனாதைப் பிறவிதான். இல்லாவிட்டால் ஊரெல்லாம் உதாசீனக் கண்களுடன் பார்க்கும்போது அவனுக்கு மட்டும் ஆக்காமுவிடம் அவ்வளவு பற்றுதல் ஏற்படுவானேன்? ஆக்காமு கவனிக்கத் தவறிய லௌகிக விஷயங்களைக் கூட ஜம்பு பொறுப்பாகக் கவனித்து வந்தான். சாமிக் குடும்பனுடைய வேலைகளையும் கணக்கு வழக்குகளையும் மேல் பார்ப்பதிலிருந்து, உப்போடு கற்பூரம் வரை ஒவ்வொரு சாமானும் தட்டில்லாமல் வீட்டுக்குக் கொண்டு சேர்ப்பது வரை எல்லாவிதப் பொறுப்புக்களையும் ஜம்புவே ஏற்றுக் கொண்டிருந்தான். ஆக்காமுவின் குடும்பத்துக்காக அவன் இப்படி ஒவ்வொன்றும் பரிந்துபரிந்து செய்து கொண்டிருப்பதைப் பார்த்து ஊரார் வித்தையும் வினோதமும் கலந்து பேசிக் கொள்வார்கள்.

''சோழியன் சென்டு சும்மா ஆடுமாய்யா? இதிலே ஏதோ அர்த்தம் இருக்கு...!''

''அர்த்தமொன்றுமில்லே. அனர்த்தம்தான்! அந்தக் குட்டி குதிரைமாதிரி வளர்ந்திருக்கில்லேயோ? அதைச் சுத்திச் சுத்தி வரதுக்கு அவனுக்கு ஏதாவது சாக்கு வேணும் பாரும்!''

இப்படியெல்லாம் பேச்சு நடக்கிற தென்று ஜம்புவுக்கும் தெரியும். அவனுடைய தாயாரே அவனிடம் அதைப் பற்றி இடித்துக் கூறி ஆற்றாமைப்பட்டிருக்கிறாள். ''அங்கேயெல்லாம் உனக்கென்ன போக்கு வேண்டியிருக்கிறது! ஒவ்வொருவர் பேசும் பேச்சைக் காதால் கேட்க முடியவில்லையே!'' என்பாள்.

''கேட்க முடியாத பேச்சை எதற்காகக் கேட்க நினைக்க வேண்டும்! காதைப் பொத்திக் கொண்டு வந்து விடவேண்டியதுதானே!'' என்பான் ஜம்பு.

''பிராரப்தம்! பிராரப்தம்!'' என்று தலையில் போட்டுக் கொள்வாள் தாயார்.

இப்போது கூட ஜம்பு வீட்டை விட்டுப் புறப்பட்டபோது தாயார் குறுக்கிட்டாள். ''வந்ததும் வராததுமா எங்கே கிளம்பிட்டே? அந்தப் பித்துக்குளிக்குப் பாத சேவை செய்யறதுக்கா?'' என்றாள் எரிச்சலும் புகைச்சலுமாக.

''அம்மா! அப்படியெல்லாம் பேசாதே. அவருக்குப் பாத சேவை செய்யக் கொடுத்து வச்சிருக்கணும், தெரியுமா?'' என்றான் ஜம்பு.

''ஆமாம். மகானும், மண்ணாங்கட்டியாம்! அப்படி மகானாயிருக்கிறவர் வீடு வாசலோட ஏன் இருக்கணும்னு கேக்கறேன்! ஊன நடமாட்டமில்லாத காட்டைப் பார்த்துப் போறதுதானே!''

''சரி சரி! உன்னோடு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? சொன்னாலும் உனக்குப் புரியாது!'' என்று வெறுத்தாற் போல் கூறிவிட்டு ஜம்பு வெளியேறினான்.

அன்று சந்தர்ப்பம் கிடைத்தால் ஜம்பு ஆக்காமுவிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர் பேசக்கூடிய நிலையில் இல்லை. அசைவற்று உட்கார்ந்திருந்தார். கண்கள் திறந்துதான் இருந்தன. ஆனால் ஜம்பு வந்ததைக் கூட அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. பார்த்தும் பாராதது போல் இருந்தாரா? என்றுமே அவனிடம் அவர் அப்படி இருக்க மாட்டாரே! சட்டென்று ஜம்புவுக்கு விஷயம் புரிந்தது. புலன்களெல்லாம் உள்ளடங்கிய நிலையில் வெளியுணர்வே அவரைத் தீண்டவில்லை யென்ற உண்மை சற்று நேரம் பொறுத்துத்தான் அவனுக்கு விளங்கியது. அவனும் ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டான். அவராக உணர்வு பெற்றுத் தன்னைக் கவனிக்கும்வரை அப்படியே உட்கார்ந்திருக்கத் தீர்மானித்து விட்டான்.

ஆக்காமுவின் பரவச நிலையையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஜம்பு. மண்ணின் தொடர்பை அறுத்துக் கொண்டு விண் வெளியில் சுழன்று கொண்டிருந்த அவர் மனம் மீண்டும் மண்ணின் உணர்வைப் பெறும் நேரத்தை அவன் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாமலே அது நிகழ்ந்தது. கட்டையாய் விறைத்திருந்த கைகால்களில் கண்ணிமைக்கும் நேரத்தில் மின்சாரம் பாய்ந்ததுபோன்ற அந்த உணர்வு எப்படித்தான் வந்ததோ! எதுவுமே நிகழாதது போல் ஆக்காமு

சட்டென்று எழுந்து நின்றார். சூரியனை ஒருமுறை பார்த்து விட்டு ஏரிக்கரை வழியே நடக்க ஆரம்பித்தார். ஜம்புவும் பரபரப்புடன் எழுந்து அவர் பின்னாலேயே நடந்தான்.

தன்னுடைய நிழலுடன் இன்னொரு நிழலும் தொடர்ந்து வருவதைச் சற்றுத் தூரம் சென்ற பிறகு தான் உணர்ந்தார் ஆக்காமு. சட்டென்று திரும்பினார். கையெடுத்துக் கும்பிட்டான் ஜம்பு.

"சௌக்கியமா?" — வழக்கமான குழைவுடன் சிரித்தான். அதற்கப்புறம் பேச்சுத் தொடரவில்லை. ஆக்காமு முன்னே நடக்க ஜம்பு பின்னே நடந்தான். வீடு வந்து சேரும் வரையில் இருவரும் மௌனமாகவே நடந்தனர்.

ஆக்காமு திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். ஜம்பு ஒரு பக்கமாகத் தூணோடு ஒண்டினாற்போல் நின்றான்.

"உட்காரேன்!"

ஜம்பு திண்ணையின் விளிம்பில் பட்டும் படாமலும் உட்கார்ந்து கொண்டான். பேச நினைத்ததை இப்போது பேசினால் தான் உண்டு. அப்புறம் சந்தர்ப்பம் வாய்க்குமோ? ஆனால் பேச்சை எப்படி ஆரம்பிப்பது? 'இந்த விஷயத்தில் எனக்கு இல்லாத சிரத்தை உனக்கு எதற்கு?' என்று அவர் கேட்டு விட்டால்? ஆனால் அதற்குப் பயந்தால் காரியம் நடக்காது. மீனுவுக்கு அந்த மாதிரி வரன் இனி எப்போது அமையப் போகிறது? காலம் கடத்தினால் வரன் கையை விட்டுப் போய் விடும். நல்ல பையன். ஸர்வே இலாகாவிலேயே வேலையிலிருக்கிறான். சென்ற மாதம் ஜம்புவின் வீட்டுக்கு வந்து அவன் தங்கியிருந்த போது ஓரிரு தடவை மீனுவைப் பார்த்திருக்கிறான். அவளைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயம் விழுந்து விட்டதென்று அப்போதே தெரிந்து கொண்டான் ஜம்பு. இந்தத் தடவை வெளியூரில் அவனைச் சந்தித்தபோது கலியாண விஷயமாக அவனிடம் பேச்சுக் கொடுத்திருக்கிறான். பையன் படிந்து வருவான் போலத் தோன்றியது. ஆக்காமு சரியென்று சொல்லி விட்டால் பேச்சை மேலும் தொடர்ந்து முடிவு செய்யலாம். ஆனால் இவ்வளவையும் ஆக்காமுவிடம் எடுத்துச் சொல்லியாக வேண்டுமே! பொறுமையுடன் அவர் கேட்டுக் கொண்டிருப்பாரா?

எங்கோ பார்த்தவாறு திண்ணையில் உட்கார்ந்திருந்த ஆக்காமு திடீரென்று மௌனத்தைக் கலைத்தார்.

"வேண்டாம் ஜம்பு. அதெல்லாம் சரிப்பட்டு வராது. ஊரார் பேச்சுக்குப் பயந்து உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே" என்றார் ஆக்காமு அவன் பக்கம் திரும்பாமலே.


ஜம்பு திடுக்கிட்டான். அவனது மனத்தின் நிகழ்ச்சிகளையெல்லாம் அவர் எப்படி அறிந்து கொண்டார்?

"மீனுவைப் பற்றி நான் முடிவு செய்தாயிற்று. அவளுக்கென்று பிறந்திருப்பவன் நீதான் அப்பா!" என்றார் ஆக்காமு.

ஜம்பு வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். அவனது இதயத்தின் அடித்தளத்தில் அமுங்கிக் கிடந்த ஆசையை எவ்வளவு கணக்காக அளந்து சொல்லி விட்டார்! தீர்க்கதரிசனமான அந்தப் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச அவனுக்கு வாய் ஏது?

அடுத்த மாதமே ஆடம்பரமில்லாமல் கலியாணம் நடந்தேறியது. ஜம்புவின் உறுதி அவனுடைய தாயாரின் ஆட்சேபணையையும் வென்று விட்டது. கலியாணத்துக்கான ஏற்பாடுகளைக் கூட அவனே அங்குமிங்கும் ஓடியாடிச் செய்து முடித்தான். அக்கம்பக்கத்தார் வம்பளப்புக்கு இடமில்லையே என்ற ஆத்திரத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள். "அசமஞ்சம் மாதிரி இருந்துண்டே இந்த ஆக்காமு ஒண்ணொண்ணையும் சாதிக்கக்கிற அழகைத்தான் பாரேன்!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் தாணிப் பாட்டி.

மீனு மாமியார் வீட்டுக்குப் போய் விட்டாள். ஜம்பு அவளைத் தெய்வமாகப் போற்றி வந்தான். மாமியாரும் மருமகளின் அருமை தெரிந்து அன்புடன் நடந்து கொண்டாள். இருந்தாலும் தாய் தந்தையரிடமுள்ள பாசத்தை மீனுவால் எளிதில் மறக்க முடியவில்லை. அடிக்கடி வீட்டுக்குப் போய் அம்மாவைப் பார்த்து வருவாள். தன் கையினால் ஏதாவது நல்ல சமையலோ, பலகாரமோ செய்தால் ஏரிக்கரைக்குப் போய்த் தகப்பனுக்குக் கொடுத்து விட்டு வருவாள்.



மாப்பிள்ளை: அம்மாவைத் தப்பாக நினைத்துக் கொள்ளாதே! உன்னைப் பார்த்ததால் இல்லே. புடவை பிழியறபோது அவள் முகம் அப்படித்தான் இருக்கும்!

ஜம்புவின் தாயார் ஆரம்பத்தில் இதற்குச் சற்று ஆட்சேபணையெழுப்பிப் பார்த்தாள். ஆனால் ஜம்புவே மாமனார் தாசனாயிருக்கும்போது ஆட்சேபணைக்கு அர்த்தமேது? சொல்லிச் சொல்லி அலுத்துப் போய் வாயை மூடிக்கொண்டு விட்டாள்.

அகிலாண்டம்தான் பாவம், பித்துப் பிடித்தாற்போல் வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தாள். மகள் வீட்டில் இருந்தவரையில் புருஷன் அதிக நேரம் வீட்டில் தங்காதது ஒரு குறையாக அவளுக்குத் தோன்றவில்லை. இப்போது தனிமை ஒரு சுமையாக அவள் நெஞ்சை அழுத்த ஆரம்பித்திருந்தது. எப்போதாவது மீனு வந்து விட்டால் போதும், அவளைக் கண்டதுமே வேதனை விம்மலாக வெடித்து விடத் துடிக்கும். ஆனால் மகளெதிரில் கண்ணீர் விட அவள் மனம் ஒப்பாது. தன்னுடைய மனநிலையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் குதூகலமே உருவாகியிருப்பதுபோன்ற மலர்ச்சியை முகத்தில் தேக்கிக் கொண்டு அவளுடன் பேசுவதும் அவளுக்குப் பிடித்தமான ஒவ்வொன்றையும் பரிந்து பரிந்து செய்வதுமாயிருப்பாள்.

ஜம்பு ஒரு தடவை வழக்கம் போல் வேலை நிமித்தமாக வெளியூருக்குப்போயிருந்தான். வீட்டு வேலையெல்லாம் முடிந்த பிறகு மீனு தாயாரைப் பார்ப்பதற்காக வந்த போது திண்ணையில் தகப்பனார் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து வியப்பு மிகுதியில் நின்று விட்டாள்.

"என்ன மீனு?"

"இந்த நேரத்தில் நீ வீட்டில் இருப்பது..."

"அதிசயமாயிருக்கிறதல்லவா?"

"அதிசயமாயிருக்காதா?"

ஆக்காமு வேறு திசையில் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார்.

"அப்பா..."

"என்ன மீனு?"

"நீ தினமும் இப்படியே இருந்து விடேன்!"

"எப்படி?"

"அம்மாவுக்குப் பக்கத்திலேயே."

"பக்கமும் தூரமும் மனத்தளவு தானே?"

"அம்மாவுக்குச் சந்தோஷமாயிருக்கும்."

"இருக்கலாம்!" என்றார் ஆக்காமு.

"இதோ வந்து விட்டேன்!" என்று உள்ளே ஓடிய மீனு கையோடு கொண்டு வந்திருந்த மாம்பழங்களில் ஒன்றை அரிந்து தட்டில் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே விரைந்து வந்தாள். மறுகணம் அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டாள். திண்ணை வெறிச்சென்றிருந்தது!

இளவேனிலின் இதமான மென்மை மறைந்து கோடையின் உக்கிரம் தொடங்கியது. பொன்னையுருக்கும் வெயில் விண்

லையும் உருக்கிவிட்டது போல் நடுநடுவே பலத்த மழையும் பெய்து கொண்டிருந்தது. வெப்ப மிகுதியால் வற்றத் தொடங்கியிருந்த ஏரி எங்கெங்கிருந்தோ வந்த மழைத் தண்ணீரைச் சேர்த்துக் கொண்டு மீண்டும் அலைமோதி நின்றது.

காலையில் ஸ்நான பானாதிகளை முடித்துக் கொண்டு வெளியே புறப்படத் தயாராகத் திண்ணை வரை வந்த ஆக்காமு திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல் மீண்டும் உள்ளே சென்றார். அகிலாண்டம் அப்போதுதான் பூஜை அறையிலிருந்து பிரசாதத் தட்டுடன் வெளியே வந்து கொண்டிருந்தாள்.

''அகிலாண்டம்!''

''என்ன?''

''நீயும் என்னோடு வாயேன்!''

''உங்களுடனா?''

''என்ன யோசனை?''

அகிலாண்டத்தின் மனத்தில் யோசனை செய்யச் சக்தி ஏது அப்போது? வியப்பு மிகுதியால் யோசனையெல்லாம் அற்றுப் போய் விட்டதே!

''இதோ வந்து விட்டேன்'' என்று கூறிப் பிரசாதத் தட்டைக் கூடத்து அலமாரியில் வைத்து விட்டு அந்த நிமிஷமே புறப்பட்டு விட்டாள். கைகால்களில் இனம் புரியாத பரபரப்பு. உள்ளத்தில் உவகைப் பெருக்கு. ஆக்காமுவின் மனைவியாக அந்த வீட்டுக்கு வந்த அன்றிலிருந்து இன்று வரை தெருவில் நடந்தே அறியாதவள் அன்று கணவரைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தாள். தெருவில் உள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தலைகள் அதிசயக் கண்களுடன் அந்தக் காட்சியை எட்டிப் பார்த்தன.

ஊரெல்லையில் ஏரிக்கரைக்குச் செல்லும் திருப்பத்திலிருந்து சற்று விலகியிருந்த சாலையில் இரு கம்பங்களை நிறுத்தித் தோரணங்களால் அலங்கரித்திருந்தார்கள். ஊர்ப் பிரமுகர்கள் பூர்ண கும்பத்துடனும் மலர்த் தட்டுக்கள், பழத் தட்டுக்களுடனும் முகத்தில் ஆவல் ததும்ப அங்கே காத்திருந்தார்கள். திருக்கயிலை வரை தீர்த்த யாத்திரை சென்று திரும்பிக் கொண்டிருந்த பரமகுரு ஸ்வாமிகள் அன்று அந்த ஊருக்கு விஜயம் செய்வதாயிருந்தார். சாலையில் அவருடைய பல்லக்கு வருவது தெரிந்ததுமே, வாசிக்கத் தயாராக நாகஸ்வரக் காரர்கள் காத்திருந்தார்கள்.

ஆக்காமு தம்பதிகள் அந்த வழியே சென்றபோது அங்கு கூடியிருந்தவர்கள் கேலிக் கண்களுடன் அவர்களையே பார்த்தனர். சிலர் சிரிப்பையடக்க முடியாமல் வாயைப் பொத்திக் கொண்டனர்.

''அவன்தான் கிறுக்கு என்றால் அவன் சம்சாரம் அதற்கு மேல் இருக்கிறாளே!'' என்று அருகிலிருந்தவரது காதைக் கடித்தார், ஆஸ்திக சங்கத்தின் தலைவர்.

ஏரிக்குச் செல்லும் பாதை வழியே திரும்பி அவ்விருவரும் கண்ணுக்கு மறைந்த பின்பும் பேச்சு அதே ரீதியில் தொடர்ந்திருக்கும். ஆனால் திடீரென்று நாகஸ்வரமும் தவிலும் சேர்ந்து ஒலிக்க ஆரம்பித்ததுமே எல்லோர் கவனமும் சாலைப் பக்கம் திரும்பியது. அனைவரின் பக்திக்கும் பாத்திரமாயிருந்த பரம குரு ஸ்வாமிகளின் பல்லக்குத்தான் சாலை வழியே கம்பீரமாக அசைந்தாடி வந்து கொண்டிருந்தது.

பூர்ண கும்ப வரவேற்பும் மற்ற சம்பிரதாய மரியாதைகளும் நிறைவேறிய பின்பு ஸ்வாமிகளின் பல்லக்கு ஊர்வலமாகச் செல்ல ஆரம்பித்தது. தெருக்களெல்லாம் ஜனத் திரள்.

இதென்ன ஸ்வாமிகள் பல்லக்கை நிறுத்தச் சொல்லுகிறாரே! பல்லக்கிலிருந்து இறங்கியும் விட்டாரே! ஆஸ்திக சங்கப் பிரமுகர் பரபரப்புடன் ஸ்வாமிகளருகே விரைந்து சென்று வாய் புதைத்தவாறு கேட்கிறார்—''ஏன்! என்ன அபசாரம் நேர்ந்தது ஸ்வாமி!''

''நேரவில்லை. நேராமல் தடுப்பதற்குத்தான். ஜீவன்முக்தர் வாழும் தெருவல்லவா இது!'' என்று கூறி வெறும் காலுடன் நடக்கிறார் பரமகுருஸ்வாமிகள்.

''ஜீவன் முக்தரா? யாரவர்? நமக்குத் தெரியாமல் இந்தத் தெருவில் வாழ்கிறாரா?'' என்று வியந்தவாறே ஸ்வாமிகளைத் தொடர்ந்தனர் ஆஸ்திக மக்கள்.

ஸ்வாமிகள் ஆக்காமுவின் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்.

''ஸ்வாமி...இங்கு...''

''ஆம். இங்குதான் அந்த ஜீவன் முக்தர் வாழ்கிறார். தாமரை இலைத் தண்ணீர் போல் இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் அவரை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையோ? அவரைத் தரிசிப்பதற்காகத் தானே இந்த ஊருக்கே வந்தேன்!''

ஆக்காமு அப்படிப்பட்டவரா? பரம குரு ஸ்வாமிகளே பக்தி பாராட்டும் அளவுக்கு உயர்ந்தவரா? இத்தனை நாட்களும் இது தெரியாது போயிற்றே!

''ஆக்காமு! ஆக்காமு!'' என்று பரவசத்துடன் அழைத்தவாறே வீட்டுக்குள் சென்றார் ஆஸ்திகப் பிரமுகர்.

வீடு நெடுகத் திறந்திருந்தது. சில நிமிஷங்களுக்கு முன்புதான் அங்கு வந்திருந்த மீனுவும் ஜம்புவும் வீட்டில் யாருமே இல்லாததைக் கண்டு திகைப்புடன் வெளி வந்து கொண்டிருந்தனர்.

''அப்பா இல்லையோ! ஸ்வாமிகள் அப்பாவைப் பார்க்க வேண்டுமாம்!''

''அப்பா அம்மா இரண்டு பேரையுமே வீட்டில் காணோமே!'' என்று திகைப்புடன் கூறினாள் மீனு.

''இருவரும் ஏரிப்பக்கமாகப் போனார்களே. இன்னும் திரும்பி வரவில்லையோ?'' என்றார் பிரமுகர்.

''அம்மாவும் அங்கே போயிருக்கிறாளா? அப்படியானால் இருவருமே அங்கே தான் இருக்க வேண்டும்!'' என்று கூறியவாறே மீனு ஜம்புவுடன் ஸ்வாமிகள் அருகே வந்தாள். வணங்கிய இளம் தம்பதிகளை ஆசீர்வதித்த ஸ்வாமிகள், ''வாருங்கள், ஏரிக்கரைக்கே போகலாம்!'' என்று கூறி வேகமாக முன்னே நடந்தார். இதற்குள் இந்தச் செய்தி ஊர் முழுதும் பரவி ஊரே திரண்டு வந்து ஸ்வாமிகளின் பின்னே சென்றது. எல்லோரும் ஏரிக்கரையை நெருங்கியபோது நிர்மலமாயிருந்த வானில் திடீரென்று இடி முழக்கம் கேட்டது. பளிச்சென்று மின்னல் மின்னியது போன்ற பேரொளி எல்லோர் கண்களையும் கூசச் செய்தது.

இனம் புரியாத பயத்துடன் ''அப்பா! அம்மா!'' என்று கத்தியவாறே ஏரிக்கரை வழியே ஓடினாள் மீனு. ஜம்புவும் அவளைத் தொடர்ந்து ஓடினான்.

அந்தப் பதினாறு கால் மண்டபத்தில் அவர்கள் கண்ட காட்சி! இடியால் தாக்குண்ட ஆலமரத்தின் கிளையொன்று முறிந்து மண்டபத்தின் மீது சாய்ந்திருந்தது. அதற்கு நேர் கீழே ஆறாவது தூணின் அருகே அசைவற்று அமர்ந்திருந்தனர் ஆக்காமு தம்பதிகள். இருவரது வலக் கரங்களும் ஒன்றோடொன்று பொருந்தி யிருந்தன. அந்நிலையிலேயே இருவரது ஆவியும் ஒரே கணத்தில் உடலை விட்டுப் பிரிந்திருந்தது.

''அம்மா! அப்பா!'' என்று அலறிய வண்ணம் அவர்கள்மீது விழுந்தாள் மீனு.


''மாமி!'' என்று அலறினான் ஜம்பு.

ஆதரவுடன் மீனுவின் தலையில் கையை வைத்தார் ஸ்வாமிகள்.

''நீ ஏன் வருத்தப்படுகிறாய்? குழந்தாய், உன் தகப்பனார் தாயார் இருவரும் என்றுமே வாழ்வின் எல்லையில் நின்றவர்கள். விண்ணாசையைத் தவிர வேறு எந்த ஆசையும் அவர்களைத் தீண்டியது கிடையாது. அதனால்தான் மண்ணுலகம் மதிப்பதற்கு முன்பே விண்ணின் ஜோதி வந்து அழைத்துப் போய் விட்டது!'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறினார்.


அவர் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர் மலர்கள் அந்த ஆதர்சத் தம்பதிகளின் உடல்மீது விழுந்து உருண்டன.





புது உருப்புகள் வாங்கும் செலவைக் குறையுங்கள். தேய்ந்துபோன உருப்புகளை டிவிஎஸ் புதுப்பிக்கட்டும்






புதுப்பிக்கும் செலவு புதிய விலையில் மூன்றில் ஒரு பாகத்திலும் குறைவு

ஓயாமல் வேலை செய்வதால், உருப்புகள் தேய்ந்து போகும். தேய்ந்து போன உருப்புகளை டிவிஎஸ் புதுப்பிக்கட்டும். அவை புதிய உருப்புகளைப் போலவே உழைக்கும்.

டிவிஎஸ்ஸில் கீழ்க்காணும் தேய்ந்து போன உருப்புகளை புதுப்பித்துப் புத்துயிர் அளிக்கின்றனர்.

மெயின் ஆக்ஸில் • ஹாங்கர்ஸ்
ஸ்டப் ஆக்ஸில் • ஷாக்கிள்ஸ்
ஹப் • கிளட்ச் பிரஷர் பிளேட்
புரொபெல்லர் ஷாப்ட் - யோக்

டிவிஎஸ்ஸில் புதுப்பித்தால் புதிய உருப்பு வாங்கும் செலவு குறைகிறது. பஸ், லாரி, கார் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும்—வருமானம் பாதிக்கப்படாது



டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை — திருச்சி — திருநெல்வேலி — புதுக்கோட்டை — சேலம் — கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ் — பெங்களூர் — செகந்திராபாத் (தக்கணம்)

TVS

TVS/RC/1443

போன் நெ. 2862 தந்தி : JAI MILL

ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிமிடெட்



ரிஜிஸ்டர்டு ஆபீஸ் & பாக்டரி : சௌரிபாளையம், கோயமுத்தூர் - 4

மானேஜிங் ஏஜண்டுகள் :

K. வெங்கடஸ்வாமி நாயுடு & கம்பெனி

○●○

ரிங் ஸ்பிண்டில்ஸ் 22, 372; டபிளிங் ஸ்பிண்டில்ஸ் 704, கோன் 180

தயாரிப்பு

உயர் ரக நூல் — ஒற்றை, மடிப்பு நூல்களும், கோன்கள் 36^{s}லிருந்து 80^s வரை எல்லா வகையிலும் சப்ளை செய்யப்படுகிறது

கைத்தறிகளுக்கும், விசைத்தறிகளுக்கும் மிகச் சிறந்தவை

தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் எங்கள் நல் வாழ்த்துக்கள்

கிருஷ்ணவேணி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

உப்பிலிபாளையம் - சிங்காநல்லூர் P. O. - கோயமுத்தூர்

○●○


மானேஜிங் ஏஜண்டுகள் :

K. கிருஷ்ணசாமி நாயுடு & சன்ஸ்

இரவீந்திரா மில்ஸ் லிமிடெட்

போன் : 3974

சிங்காநல்லூர் - தபால் பெட்டி எண் 859 - கோயமுத்தூர் - 5



தரமான நூல் தயாரிப்பாளர்கள் :

ஒற்றை இழை நூல் நெ. 40^s, 60^s & 80^s


இரட்டை இழை நூல் நெ. 2/40^s & 2/606^s

மொத்தக் கதிர்கள் :

ஒற்றை இழை	—	12,148
இரட்டை இழை	—	648

மானேஜிங் ஏஜண்டுகள் :

K. இராமச்சந்திரன் & சன்ஸ்


அய்யனார் சோப்
சிறந்த சலவை சோப்
IYANAR SOAP
சிக்கனம்
சௌகர்யம்
அய்யனார் சோப் ஒர்க்ஸ்
தூத்துக்குடி

பிரிவு உபசாரம்!



[பூவராகன் வீட்டுத் திண்ணை. பூவராகன் புகையிலையைக் குதப்பிக் கொண்டு திண்ணையில் சாவகாசமாக உட்கார்ந்திருக்கிறார். பூவராகன் மனைவி கோகிலம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள்.]

கோகிலம்: பொழுது விடிஞ்சு புகையிலையை அடக்கிக் கொண்டு வாசலில் வந்து உட்கார்ந்தாயிற்றே இல்லியோ? வேறு குறைச்சலே இல்லே! கூட நாலு தடியன்களும் வந்து அரட்டை அடிக்க உட்கார்ந்து விடுவார்கள்! லீவு நாளும் அதுவுமா வீட்டுக்கு உபயோகமாக ஒரு காரியம் பார்ப்போம் என்ற புத்தி உங்களுக்கு ஒருநாளும் தோன்றியதில்லே.

பூவராகன்: (புகையிலையைத் துப்பி விட்டு) உனக்குப் போய்க் கோகிலம்னு பேரு வச்சான் பாரு! அவனைச் சொல்லணும்! காக்காய் மாதிரி ஏன் கத்துகிறாய்? என்னவோ கல்யாணத்துக்கு நிற்கும் பெண்ணை 'அங்கே நிற்காதே!' 'இங்கே நிற்காதே' என்று அடக்கி ஆளறமாதிரி என்னை வந்து அதட்டுறியே! .... நீ வேணுமானால் இப்படி வந்து திண்ணையில் உட்காரு. நான் உள்ளே போய்ச் சோற்றை வடிக்கிறேன்.

கோகிலம்: ஹூம்! உங்கள் பிள்ளை கடையிலே வழக்கமாக வாங்கிவரும் புகையிலையை வாங்கி வரவில்லை போல் இருக்கு! அந்தக் கோபத்தை என்னிடம் ஏன் காட்டுகிறீர்கள்?

பூவராகன்: நீ பெரிய ஆபீஸர்! உன் கிட்டே வந்து நான் என் கோபத்தைக் காண்பிக்கிறேன்!...கண்டைக்காய் நீ! என்னவோ பெரிய தர்பாரிலே மகாராஜா மந்திரி பிரதானிகளை விரட்டறமாதிரி விரட்ட வந்துட்டியே! அதோ தெருவிலே என் சிநேகிதன் பார்த்தசாரதி வந்து கொண்டிருக்கான். நீ என்னை அதட்டி உருட்டுவது அவன் காதில் விழுந்தால் ஆபீஸ் காண்டீனில் உட்கார்ந்து கதா காலட்சேபம் பண்ண ஆரம்பித்து விடுவான்.

கோகிலம்: வீட்டுக்கு வீடு வாசற்படிதான்! அவர் வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் தெரியும்!...

பூவராகன்: பார்க்காமலே தெரியும். எல்லார் வீட்டிலேயும் பெண்டாட்டி கொடிதான் கட்டிப் பறக்கிறது! அந்த ஆசை இப்போ உன் மனசிலேயும் துளிர் விடறாப் போலே இருக்கு! முளையிலேயே கிள்ளிவிடு!

[பூவராகனின் நண்பன் பார்த்தசாரதி படி ஏறுகிறார். கோகிலம் ஜன்னலிலிருந்து நகருகிறாள்.]

பூவராகன்: வா ஐயா, பார்த்தசாரதி! உட்கார்! (உள்ளே பார்த்து) இந்தா!... நம்ப சிநேகிதன் பார்த்தசாரதி வந்திருக்கான்! காப்பி கீப்பி கொடுக்காதே! வேண்டாம்.

பார்த்தசாரதி: இது என்ன ஸ்வாமி, புது மாதிரி உபசாரமாக இருக்கு?'

பூவராகன்: அவள் இப்பத்தான் எதற்கோ சடபுடாக்][குச்சி மாதிரி வெடித்து விட்டுப் போயிருக்கிறாள். 'காப்பியைக் கொண்டா' என்றால் அவள் கொண்டுவரும் உஷ்ண திரவத்தில் காப்பி 'கீன' மருந்துக்குக்கூட இருக்காது. அதைக் குடித்து விட்டு நீ இன்னும் மூன்று வருட காலம் என் மண்டையை உருட்டுவாய்! வம்பை உபசாரம் செய்து வாங்க வேண்டாம் என்ற நோக்கம்தான்!

பார்த்தசாரதி: நீர் பலே எமன் காணும்! சம்சாரம் சண்டைக்கு வரமாட்டாள் என்கிற தைரியத்திலே பழியை அவள் தலையிலே போட்டுச் சுலபமாகத் தப்பிவிடுகிறீர். என்னால் முடியவில்லையே?

பூவராகன்: சுவத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை! அவள் இப்பத் தான் ஐயா ஒரு பாட்டம் எதற்கோ பிடிபிடி என்று பிடித்து விட்டுப் போயிருக்கிறாள்....அது போகட்டும்! நீர் எதிலே தப்பி ஓடப் பார்த்து வழுக்கி விழுந்தீர்?

பார்த்தசாரதி: நான் வீட்டைச் சொல்லவில்லே! காரியாலயப் பிரிவுபசார விருந்தைப் பற்றிச் சொல்றேன்! வழியனுப்புக் கமிட்டி பொக்கிஷதார் என்கிற 'பெத்த' பெயரைச் சூட்டி நம்ப தலையிலே எல்லா இழவையும் கட்டிவிட்டு நீர் சாமர்த்தியமாகக் கழன்று கொண்டு விட்டீர். அணு பைசா நீட்டாத பயல்களெல்லாம் அரை மைல் நீளம் நாக்கை மாத்திரம் நீட்டிக் கொண்டு யோசனை சொல்ல வந்துடறான்கள்!

பூவராகன்: நீர், வற்றல் குழம்பும் பருப்புத் துவையலும் தான் கட்டுபடியாகும் என்று ஒப்பாரி வைத்திருப்பீர். உம்ம குடும்ப பட்ஜெட்டைக் கொண்டு வந்து காரியாலய விசேஷத்தில் சுமத்த முயன்றால் மற்றவர்கள் ஒப்புக் கொள்வார்களா?

பார்த்தசாரதி: சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்?

பூவராகன்: வைக்கிற வத்தல் குழம்பைக் கொஞ்சம் கூட வைக்க வேண்டும்!

பார்த்தசாரதி: கிண்டல் பண்ண இப்போது தானா உமக்குச் சந்தர்ப்பம்? அயிட்டம் நிறைய இருக்கணும்னு தலைக்கு நாலு ரூபாய் வேணும்னேன்! நீர்தான் 'நாலு நாள் கல்யாணமா?' என்று கலாட்டா பண்ணினீர். அந்த ஹரன் 'குடும்பத்தினர் அனைவருக்குமா'ன்னு குறுக்குச் சால் ஓட்டினான். அப்புறம் தலைக்கு இரண்டு ரூபாய்னு நீர்தானே முத்தாய்ப்பு வைத்தீர்.

கோமதிஸ்வாமிநாதன்

பூவராகன்: இரண்டு ரூபாய்க்கு அசுவ மேதயாகம் பண்ணலாம் ஐயா!

பார்த்தசாரதி: முதலில் அதைச் செய்யும். அப்புறம் மாறிப் போகும் நம் மானேஜருக்குப் பிரிவுபசாரத்தை வைத்துக்கொள்ளலாம்! இல்லே, அந்த மானேஜரை உம்ம அசுவமேத யாகக் குதிரையிலே உட்காரவைத்து அனுப்பிடுவோம்.

பூவராகன்: கோபித்துக்கொள்ளாதே. பார்த்தசாரதி! ... என்னென்ன அயிட்டம் போடலாம்னு யோசனே!

பார்த்தசாரதி: அந்த வயிற்றெரிச்சலே ஏன் கிளப்புகிறீர்? நீர் என்னவோ புகையிலே போட்டுக் கொள்வது போல அலட்சியமாக 'அக்கார வடிசல்' போடலாமென்று சொல்லி விட்டீர்.

பூவராகன்: ஆமா! யோசனேதான் சொன்னேன்!

பார்த்தசாரதி: அதை நம்ப அஜீஸ் பாய் விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டுவிட்டான். 'அக்கிரகார உடைசல்' போடுவதாக இருந்தால் தான் இரண்டு ரூபாய் கொடுப்பேன் என்கிறான்....

பூவராகன்: ஓஹோஹோ! ... கஜினி முகம்மது சோமநாதபுரக் கோவிலே உடைத்தது அவனுக்கு நினைவு வந்து விட்டதோ என்னவோ? ..... அதைப் போட்டுத் தொலைப்பது தானே?

பார்த்தசாரதி: அக்கார வடிசலே அவ்வளவு சுலபமாகப் போட்டுவிட முடியுமா? அதற்கு வைகுண்டம் கம்பெனி வெண்ணெய் ஏகமாக வேண்டும். நம்ப பாலாஜி அக்கார வடிசல் பண்ண ஆரம்பித்தால் அவன் அதைச் செய்துமுடிக்கும் போது வேறு பெயர் கொடுக்க வேண்டியதாக இருக்கும். ஒன்று அது பாறையாக இறுகி வெங்கலப் பானைக்குள்ளேயே உட்கார்ந்து வெளியே வரமாட்டேன் என்று சத்தியாக்கிரகம் செய்யும். இல்லாவிட்டால் காவிரியாற்று வெள்ளம் போல் பொங்கி எழுந்து வெளியே வந்து அடுப்பை அணைத்து விடும். நம்ப பாலாஜிக்கு அந்தப் பக்குவம் தெரியாதே.



பூவராகன்: இந்தத் தெருவில், மைனர் சங்கிலி மன்னுரையா என்ற ஏ ஒன் சமையற்காரன் இருக்கிறான். அக்கார வடிசல் தயார் பண்ண மாத்திரம் அவனே ஏற்பாடு செய்து கொள்ளேன்.

பார்த்தசாரதி: ஆமையா! நீர் சொல்ல மாட்டீர்? கடுகு உளுத்தம் பருப்புத் தாளித்துக் கொட்ட ஒரு ஸ்பெஷல் 'குக்' பூந்தமல்லியிலே இருக்கிறானும்! புதினா சட்னி யரைப்பதில் 'டிப்ளமோ' வாங்கியவன் திருவல்லிக்கேணியிலே இருக்கிறானும். எல்லாரையும் கூப்பிடுவோமா? போதாக்குறைக்கு அந்தக் கிங்காங் ராஜன் அவல் பாயசம் வைத்தால்தான் இரண்டு ரூபாய் கொடுப்பேன் என்கிறான்.

பூவராகன்: (காதில் சரியாகப் போட்டுக்கொள்ளாமல்) அவனேயே கூப்பிட்டுப் பாயசம் வைக்கச் சொன்னால் போச்சு! என்ன பாயசமோ? பொம்மனுட்டிகளிலும் சில 'எக்ஸ்பர்ட்' சமையல்காரர்கள் இருக்கிறார்கள்.

பார்த்தசாரதி: நாசமாய்ப் போச்சு! அவல் பாயசம் ஐயா!...

பூவராகன்: ஓ! குசேலர் கிருஷ்ணனுக்குக் கொண்டு போன அவலா?

பார்த்தசாரதி: ஆமாம்! அந்த அவல் தான்! நீர் போய் அந்தக் கிருஷ்ணன் கிட்டே அவலேப் பிடுங்கிக் கொண்டு வாரும். பாயசம் வைத்து அந்த ராஜன் தலையில் கொட்டுவோம்.

பூவராகன்: உஷ்! பொறுமையை இழக்காதீர்! ஒரு பொது விஷயம்னு நாலு பேர் நாலு யோசனே சொல்லத்



தான் சொல்லுவார்கள். இது ஜனநாயக யுகம் பாரும்! சமாளிக்கலாம்! நாங்களெல்லாம் எங்கே போறோம்!

பார்த்தசாரதி: நீர் புகையிலையைப் போட்டுக் கொண்டு ஜோராக வேடிக்கை பார்ப்பீர்! ஜனநாயக யுகமாமே? சாம்பார் நாயக யுகம்!... அந்த ரகுபதிப் பயல் சாம்பார் ரசம் வைத்துச் சம்பிரமமாகச் சாப்பாடு போடணும் என்கிறான்.

பூவராகன்: ஐயோ பாவம்! அவன் வீட்டிலே ஒரு நாளும் சாம்பார் வைத்து ஊற்றி யிருக்க மாட்டார்கள்! விருந்திலாவது சாப்பிடலாம்னு ஆசைப் பட்டிருப்பான்! எல்லாம் நாளைக்கு ஒரு மகாநாடு நடத்தி முடிவான தீர்மானம் எடுக்கலாம்! நீர் கிளம்பும்!

பார்த்தசாரதி: நாளைக்கு முடிச்சுடும். அப்புறம்தான் மேற்கொண்டு காரியம் பார்க்கணும்.

[பார்த்தசாரதி கிளம்பிப் போனவுடன் கோகிலம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள்.]

கோகிலம்: மகாநாடு, மண்ணாங்கட்டி என்று ஏதாவது கொடி பிடிக்கண்டு படபடக்கிற வெய்யிலிலே ஊர்வலம் கிளம்பப் போகிறீர்களா?

பூவராகன்: ஆமாம்! உன் தலைமையில்தான்! 'கட்டினவள் சொல் கேட்போம். பெட்டிப் பாம்பாய் கிடப்போம்' என்ற போர்டைத் தூக்கிக் கொண்டு ஊர்வலம். சரிதானு?

கோகிலம்: அத்தனை புத்தி உங்களுக்கு இருந்திருந்தால் இப்படி ஊர் வம்பை



யெல்லாம் தலையில் போட்டுக் கொண்டு அலைவீர்களா?

பூவராகன்: அட, சீ!? இது ஆபீஸ் விஷயம்! நீ போ, உன் வேலையைப் பார்த்துக் கொண்டு.

கோகிலம்: ஓஹோ! உங்க ஆபீஸிலே அக்கார வடிசலும் பகளாபாத்தும் தயார் பண்றதுதான் வேலே போலிருக்கு! நல்ல சாப்பாட்டுராமன் ஆபீஸ்!

[உள்ளே போகிறாள்]

காட்சி 2

[காரியாலயத்தில் காண்டீன் பகுதி. இடைவேளையில் ரகுபதி, பூவராகன், பார்த்தசாரதி, ஹரன் முதலியோர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

ரகு: ஓய்!... பூ...பூவராகன்! காய்வராகன்! நான் இந்தக் கட்டுச் சாதக் கடை பிஸினஸுக்கு ஒப்புக் கொள்ள மாட்டேன்!

பூவராகன்: உனக்குக் கல்யாணம் நடந்தால் உன் மாமனுர் வீட்டில் கட்டுச் சாதக் கடை வைப்பார்கள். இரண்டு விஷயங்களும் இந்த நூற்றாண்டில் நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லே. உனக்குப் பெண் பெற்றுக் கொடுக்க இங்கு யாரும் தயாரில்லே. கட்டுச் சாதமாவது கொடுக்கலாமே என்றுதான் நம்ப பாச்சா முயற்சி செய்கிறான்.

ரகுபதி: ஏனையா! எனக்குப் பெண் பார்த்துக் கொடும் என்று உம்மிடம் கேட்டேனு? மேளக்காரனையும் பந்தல்காரனையும் பார்க்கச் சொன்னேனு? ஆபீஸ் விஷயத்தையும் சொந்த விஷயத்தையும் போட்டுக் குழப்பி என் மூளையையும் குழப்பாதீர்! எனக்கு நல்ல வெங்காய சாம்பார், தக்காளி ரசம் எல்லாம் வேண்டும்.

ஹரன்: அடுத்த பத்து நாள் இட்டலிலே பையன் சாத அன்னே கட்டிச் சாம்பார்த் தேக்கம் ஏற்படுத்த ஆசைப்படுகிறான்! கொஞ்சம் பெரிதாகவே கட்டி அதில் இறங்கி ஸ்நானம் பண்ணு!

ரகுபதி: நான் இறங்கி ஸ்நானம் பண்ணினால் முங்கி எழுந்து வெளியே வந்து விடுவேன். நீ ஞாபகத்திலே ஹோர, சுவாமி! நாலடி ஆசாமி நாக்கையும் நாலடி நீட்டக் கூடாது.

பார்த்தசாரதி: சரி, நமக்கு விஷயம் வெற்றிகரமாக நடக்கணும்.



சாம்பாரையும் வைக்கச் சொன்னால் போச்சு!

ஹரன்: பாச்சா! அப்படியே நல்ல வேப்பம்பூ ரசம் வைக்கச் சொல்லு. எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

பார்த்தசாரதி: எனக்குக் கூட உன் மௌனியைப் பிடிக்க ரொம்பப் பிடிக்கும். சுலபமாகச் செய்துவிட முடியுமா? அது மாதிரித்தான் வேப்பம்பூ ரசமும்.

பூவராகன்: நீ ஏனப்பா, அவன் மேல் பாய்கிறாய்? ஹரன் விஷயம் புதிதா? டீ பார்ட்டி என்றால் ஹோட்டலில் மலிவாக டிகாக்ஷன் மாத்திரம் வாங்கிக் கொண்டு வந்து தெருவில் போகும் எருமை மாட்டின் மேல் நீட்டலாம் என்று யோசனை சொல்வான். டின்னர் என்றால் வேப்பம் பூ ரசம் நல்லது என்பான். இந்த மட்டும் நம்ப ஆபீஸ் குரோட்டன்ஸில் நாலைந்து ரகத்தைப் பிடுங்கித் துவையல் அரைக்கலாம்னு சொல்லாமல் இருந்தானே!

ரகுபதி (எழுந்து): பாச்சா! நன்றாகப் பிசைந்து சாப்பிடச் சாதம், சாம்பார், ரசம், பொடிமாஸ் ஏற்பாடு பண்ணுவதாக இருந்தால் நான் இந்தப் பிரிவுபசார விருந்துக்கு இரண்டு ரூபாய் தருகிறேன். என் கட்சியில் ஏழெட்டுப்பேர் இருக்கிறார்கள். நான் கொடுக்க வில்லை என்றால் அவர்களும் கொடுக்கமாட்டார்கள்.

[ரகுபதி போகிறான். சாஸ்திரி வருகிறார்]

சாஸ்திரி: பிரிவுபசார ஏற்பாடுகள் எவ்வளவு தூரத்திலே இருக்கு?

பூவராகன்: நூத்தாறு கஜ தூரம். அவ்வளவுதான்! அதோ, ரகுபதி போகிறானே! அவன் சாம்பார் வளர்ச்சிக்கழகக் காரியதரிசி. நம்ப பார்த்தசாரதிபிசைந்த சாதப் பராமரிப்புக் கழகத் தலைவர். முதலில் இவர்களிடையே கூட்டு ஏற்பட்டால் வெற்றி கண்ட மாதிரித்தான்!

ராஜன் (வந்து கொண்டே): கூட்டு எதற்கு சார்? பஸ்டு கிளாஸ் அவியல் போடச் சொல்லும்!

பூவராகன் (உட்பக்கம் திரும்பி): யாரப்பா அங்கே! இந்த டேபிளைக் கொஞ்சம் கவனி! சாருக்கு இரண்டு பிளேட் வெறும் அவியல் மாத்திரம் கொண்டா! (கேலியாகச் சிரித்து விட்டு) ஓய், அவல் பாயஸம்! உமக்கு அவியல் வேண்டுமோ? அதிரசமும்கூடக் கேளுமே! இங்கே பார்த்தசாரதி இந்தப் பொறுப்பைத் தலையில் போட்டுக் கொண்டு அவிஞ்சிண்டு இருக்கான்.

ராஜன்: அவல் பாயசமாவது உண்டோ, இல்லையோ?

பூவராகன்: நீர் கவலைப்படாதேயும்! உம்ம இலையிலே மாத்திரமாவது இரண்டு அவலைப் போட்டு அதன் தலையிலே கொஞ்சம் வெந்நீரை ஊற்றச் சொல்லுகிறேன்.

சாஸ்திரி: ஏன், சுவாமி! இந்த விருந்தைத் திங்கட்கிழமை இரவு வைத்துக் கொள்ளக் கூடாதோ?

பார்த்தசாரதி: ஏன்? ஞாயிற்றுக் கிழமை நல்ல நாள் இல்லையென்று பஞ்சாங்கத்திலே போட்டிருக்கிறதோ?

ஹரன்: எனக்குத் தெரியும். ஞாயிற்றுக் கிழமை ராத்திரி அவருக்கு ஒரு பிறந்த நாள் விசேஷச் சாப்பாடு திருவல்லிக்கேணியிலே இருக்கு! அதையும் விட மனசில்லே! மனுஷனுக்கு மீசைக்கும்



ஆசை! கூழுக்கும் ஆசை! சனிக்கிழமை பலகாரம்.

பூவராகன்: சும்மா, இருப்பா ஹரன்! நம்ம சாஸ்திரிக்கு மீசை வைத்துக் கொள்ளணும் என்கிற ஆசையுமில்லே. நாம் டின்னரில் கூழ் வார்க்கப் போறதுமில்லே! சாஸ்திரி! நீர் சும்மா இரண்டு இடத்திலும் சாப்பிடும்! இரண்டு நாட்களுக்கு வயிறு கொஞ்சம் தொந்தரவு பண்ணும்! சமாளிக்கலாம்!

[திருமாலிருஞ்சோலை வருகிறான்]

ஹரன்: சோலை! ஞாயிற்றுக்கிழமை உனக்கு ஏகாதசி இல்லையே?

பார்த்தசாரதி: முதலில் சோலை சாம்பார் கட்சியா? வெண் பொங்கல் கட்சியா என்று கேட்டுக்கொள். மாற்றுக் கட்சி ஆசாமியாக இருந்தால் நம் தொண்டைத் தண்ணியை வற்ற வைத்துக் கொள்ள வேண்டாம்.

சோலை: நீங்கள் இப்போது எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

ஹரன்: வந்துட்டாண்டா! இவனுக்குப் பிள்ளையார் சுழி போட்டுட்டு எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து அளந்தாக வேண்டும்.

பூவராகன்: வேண்டாம்! எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி! அன்று ஏகாதசியாக இருந்தாலும் சரி! சோலை இரவு பன்னிரண்டு மணி அடிக்கு மட்டும் காத்திருந்து அப்புறம் துவாதசி பாரணை பண்ணிட்டுப் போறான்!... பார்த்தசாரதி! நீ போய் வசூல் பண்ண ஆரம்பி! டின்னரை எந்த வகையிலே வைக்கலாம் என்ற விஷயத்தைப் பெரும்பான்மையினர் அபிப்பிராயத்தை அனுசரித்து முடிவு கட்டலாம்.

சோலை: பிரிவுபசார டின்னர் விஷயமா? அதுதான் ரகுபதி ஆள் சேர்த்துக் கொண்டிருக்கானு? டின்னருக்குப் பதிலாக.....

பார்த்தசாரதி: நல்ல பழையதாகப் பிசைந்து புளிச்ச தயிரை ஊற்றி எந்தப் பாட்டியம்மாளையாவது கூட்டி வந்து ஆளுக்கு ஒரு பிடி கையிலே போட்டு அனுப்பலாம் என்கிறீரா?

சோலை: ஏன், பண்ணக்கூடாது? இப்படித்தான் பூவராகன்! என் அக்கா பையன் வேலை பார்க்கும்....

பூவராகன்: ஐயோ! சோலை கதை சொல்ல ஆரம்பிச்சுட்டான். இலேசில் நிறுத்த மாட்டான்! நீங்கள் எல்லாரும் போங்கள். நான் சமாளித்துக் கொண்டு வருகிறேன்.

[சோலை கோபித்துக் கொண்டு போகிறான்]


பார்த்தசாரதி: ஏனையா, பூவராகன்! நீர் ஒண்ணு! நிலைமை தெரியாமல் சோலையைக் கோபித்துக் கொள்ள வைத்து விட்டீரே! அவன் வேறு பத்துப் பேரைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு பழையதுக் கொடி பிடிக்கப் போகிறான்!

பூவராகன் (எழுந்து): நம்ம சோலை அப்படி யெல்லாம் செய்ய மாட்டான். நான் பார்த்துக் கொள்கிறேன்.

பார்த்தசாரதி: அக்கார வடிசலுக்கு என்ன பண்றதாம்?

பூவராகன்: அந்த அஜீஸ்பாய்கிட்டே பணம் வசூல் பண்ணாதே! மறந்துபோய் விட்டமாதிரி ஆளை விட்டுவிடு.




பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும்
பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட். மதராஸ்-17

பார்த்தசாரதி: கடைசியிலே எல்லாரும் அதிஸ்டாய் ஆகிவிடுவார்களோ என்னவோ? (போகிறார்கள்)

காட்சி 3

[மூன்று நாட்கள் கழித்து ஒரு நாள் மாலை. காரியாலயத்தின் வராந்தா. சாஸ்திரி, ரகுபதி, பார்த்தசாரதி மூவரும் சர்ச்சையில் ஈடுபட்டிருக்கிறார்கள்]

பார்த்தசாரதி: நீ பண்ணுவது கொஞ்சங்கூட நன்றாக இல்லே! நம்ப மானேஜர் மதுசூதனன் ரொம்ப நல்ல மனுஷன். அவர் மாற்றிப் போகும் போது நம்முடைய ஒற்றுமையையும் உற்சாகத்தையும் காண்பிப்பதா? கோஷ்டி, பிளவு, பூசல் மனப்பான்மையைக் காண்பிப்பதா? உனக்குச் சாம்பார் வேண்டுமானால் என் வீட்டில் உனக்கு விருந்து வைக்கிறேன் வா! அதற்காக நம்ப மதுசூதனன் தலையிலும் சாம்பாரையும் ரசத்தையும் கொட்ட வேண்டும் என்று ஆரம்பிக்காதே!

ரகுபதி: இந்தப் பாடத்தையே நான் உனக்குத் திருப்பிப் படிக்க எவ்வளவு நேரமாகும்? உனக்குப் புளியோதரை பிடிக்கும் என்பதற்காக மானேஜருக்கும் புளியோதரையை ஊட்ட வேண்டுமா? நம்ப வீட்டுக்கு ஒரு நாள் வா! நான் முதல்தரமான புளியோதரை பண்ணிப் போடுகிறேன்.

சாஸ்திரி: இந்த வம்பெல்லாம் வேண்டாம்னுதான் நான் சின்ன டீ பார்ட்டியாக வைத்துக் கொள்ளலாம்னு பார்க்கிறேன். ஒரு பாதாம் ஹல்வா, மிக்சர், பழம், காப்பி! சிக்கனமாக முடிந்து போய் விடும்.

பார்த்தசாரதி: பாதம் ஹல்வா எதற்கு ஐயா! பருத்திக் கொட்டை ஹல்வா பண்ணும். 'செலவு சுருக்கமாகும்.

சாஸ்திரி: ஓய்! என்னை எருமை மாடுன்னு சொல்றீரா? அப்படீன்னு, நீர் என்னை மாத்திரம் சொல்லலே! மானேஜரையும் சேர்த்துச் சொல்கிறீர்! நான் உள்பட இந்தக் காரியாலயத்தில் பன்னிரண்டு பேர்கள் டீ பார்ட்டி கோஷ்டி. மானேஜரைப் பார்த்து ஞாயிறு மாலை ஐந்து மணிக்கு டீ பார்ட்டின்னு சொல்லி விட்டோம்.

ரகுபதி: பாச்சா கேட்டியா? என் கட்சியிலும் பன்னிரண்டு பேர். ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு சாம்பார் டின்னர்னு மதுசூதனன்கிட்டே சொல்லி விட்டேன். நீ ஒண்ணு பண்ணு! உன்னுடைய கட்டுச் சாத அயிட்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அவர் திங்கட்கிழமை பங்களூர் எக்ஸ்பிரசுக்குப் புறப்படும் போது ரயிலில் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வா.

[பூவராகன் வருகிறார். சாஸ்திரியும் ரகுபதியும் நழுவுகிறார்கள்]

பூவராகன்: என்னையா மகாநாடு, வாக் அவுட் எல்லாம் ஒரேயடியாக நடக்கிறதா? அக்காரவடிசல் எக்ஸ்பேர்ட்டும், பகாளா பாத் எக்ஸ்பேர்ட்டும் வந்து 'அட்வான்ஸ்' வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள். என் கையிலிருந்த பணத்திலே தலைக்கு ஐந்து ரூபாய் கொடுத்து விட்டேன். ஞாபகமாக அப்புறம் எனக்குப் பணம் கொடுத்து விடும்!

பார்த்த: கோவிந்தா! கோவிந்தா!

பூவராகன்: ஓய்! என் பணம் கோவிந்தா என்றால் நான் சும்மா இருக்க மாட்டேன்!...அப்புறம்.....

பார்த்தசாரதி: உம்ம பணத்தைப் பற்றிப் பேசலே, ஐயா! நான் வேங்கடாசலபதியை நினைத்துக் கொண்டு விட்டேன்! பன்னிரண்டு பேர் டின்னருக்கு இரண்டு எக்ஸ்பேர்ட் போதுமா? ஹல்வா டர் தயார் பண்ண ஒருத்தன் வேண்டாமோ?

பூவராகன்: என்னையா, சொல்கிறீர்? உம்முடைய கட்டுச் சாதக் கொடிக்குப் பின்னாலே பன்னிரண்டு பேர்தானா? இருபத்தி நாலு ரூபாய்தானா வரும்?

பார்த்தசாரதி: இந்த லட்சணத்திலே நான் மதுசூதனன்கிட்டே எட்டரை மணிக்கு டின்னர் என்று சொல்லி அவர் தலையையும் ஆட்டி விட்டார். ஏழு மணிக்கு ரகுபதியின் சாம்பார் சாதத்துக்கும் தலையாட்டி விட்டிருக்கிறார். ஐந்து மணிக்கு சாஸ்திரியின் பாதம் ஹல்வா பார்ட்டி வேறு. ஒவ்வொரு கோஷ்டியிலும் பன்னிரண்டு பேர். நீர் ஒருத்தர்தான் முப்பத்தி ஏழாவது சாமியாக உட்கார்ந்திருக்கிறீர்.? நீர் எந்த கோஷ்டியில் சேரப் போகிறீர்?

பூவராகன்: நான் தனியாக இருக்கிறதும் நல்லதுதான். பாவம்! மூனு கோஷ்டிகிட்டேயும் மூச்சுத் திணறச் சிக்கி விழிக்கும் மதுசூதனனுக்கு, நான் ஒரு சின்ன சுக்குக் கஷாயப் பார்ட்டி வைத்து நல்ல பெயர் வாங்கி விடலாம்!

பார்த்தசாரதி: ஆமாம், ஐயா! தாடி பற்றி எரிகிற போது பீடிக்கு நெருப்பு தேடும், உம்மை நம்பி மோசம் போயிட்டேன்.

பூவராகன்: அதற்குள் அவசரப்படுகிறீரே! இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கு. இது பிரிவு உபசார விருந்தாகத் தெரியலேயே! பிரிஞ்ச உபசார விருந்துகளாகவல்லவா இருக்கிறது! நம்ப மதுசூதனன் உங்க ஏற்பாடுகளுக்குப் பயந்து ஆஸ்பத்திரியிலே முதல் நாளே போய் அட்மிட் பண்ணிக் கொண்டாலும் ஆச்சரியமில்லே!

பார்த்தசாரதி: அட, பாவி! நீரே இதைச் சொல்லிக் கொடுத்து விடுவீர் போலிருக்கே! நான் மதுசூதனனிடம் இதை மெதுவாகப் பிரஸ்தாபித்து வைக்கிறேன். (போகிறார்கள்)

காட்சி 4

[பிரிவுபசார விருந்து நடக்கும் தினத்தன்று பிற்பகல் இரண்டு மணி சுமார். சாஸ்திரி முகத்தில் விசனம் ததும்பக் குறுக்கும் நெடுக்குமாய் நடக்கிறார்]

சாஸ்திரி (தமக்குள்): இந்தப் பாலாஜியை இன்னும் காணுமே! இப்போதாவது வந்தால்தானே நாலரை மணிக்கெல்லாம் டிபன் தயாரித்து முடிக்கலாம். சாமான் எல்லாம் நானே வாங்கிக் கொண்டு வருகிறேன் என்று பணத்தை வேறே கொண்டு போயிட்டான்.

கிருஷ்ணமூர்த்தி (வந்து கொண்டே): பாலாஜி வீட்டை விட்டுக் காலையிலேயே போயிட்டானாம்!.... இப்போது என்ன பண்ணப் போகிறாய்?

பூவராகன் (வந்து கொண்டே): சாஸ்திரி, விழிக்காமல் காரியத்தைப் பாரும்! பாலாஜி எங்கேயாவது ஞாபக மறதி



யாக மாட்டினி 'ஷோ'வுக்குப் போயிருப்பான். போகாமல் இப்பவே ரகுபதியைப் பார்த்து, அவன் சாம்பார் தயாரிப்பில் கூடப் பன்னிரண்டு பேருக்கு அட்ஜஸ்ட் பண்ணும்! மானம் கப்பலேறுது! மதுசூதனன் கொஞ்சம் லேட்டாக வந்தால் கூடத் தேவலே!.....

கிருஷ்ணமூர்த்தி: சாஸ்திரி! பூவராகன் சொல்றதும் நல்லதுதான்! ரகுபதியைப் போய்க் குளிப்பாட்டு! சீக்கிரம்.

சாஸ்திரி (போய்க் கொண்டே): பாதம் ஹல்வா பகற் கனவாகப் போச்சு.

(போகிறார்)

காட்சி 5

[சிறிது நேரம் கழித்து. வராந்தாவில் சாஸ்திரியும் ரகுபதியும் பேசிக் கொண்டு வருகிறார்கள்.]

ரகுபதி: அட, நீ ஏன் ஐயா, தொணதொணக்கிறாய்? மனுஷன் இங்கே தவித்துக் கொண்டிருக்கிறேன். சமையல்காரனே இன்னும் காணோம். மைனர் சங்கிலி மன்னாரையா, எங்கே போய்த் தொலைந்தான்? மானம் போயிடும் போல் இருக்கே!

சாஸ்திரி: பேஷ்! உன் ஆளையும் காணோமா? நீ அட்வான்ஸ் கொடுத்திருக்க மாட்டாய்! சரி சரி! நான் பார்த்தசாரதியைப் போய்ப் பார்க்கிறேன். அவன் கோஷ்டியிலே போய்ச் சேர்ந்து கொள்ளலாம்.

ரகுபதி: நானுமே அப்படித்தான் பண்ணணும் போலிருக்கு! கடைசியிலே இந்தக் கட்டுச் சாதக் கொடியல்லவா பறக்கும் போலிருக்கு! அதோ, பார்சா வர்றான்!

சாஸ்திரி: ஓய், பார்த்தசாரதி! உம்ம சமையல்காரனைக் கூப்பிடும். ஓர் அவசர ஏற்பாடு பண்ணணும்!

பார்த்தசாரதி: நான் அவனைக் காணுமல்தான் தவித்துக்கொண்டிருக்கிறேன். பிறகு வண்டி வந்துடுத்து! தடியன் சமையல்காரனைக் காணோம்.

ரகுபதி: சமையல் ஆசாமிகளெல்லாம் இன்னைக்கு ஸ்டிரைக் நடத்துகிறார்களா? ஒண்ணும் தெரியலையே! நம்ப சாஸ்திரி காண்டமன் பாலாஜியைக் காணுமல் தவிக்கிறார். நம்ப மன்னாரையாவையும் காணோம்.

பார்த்தசாரதி: டாக்ஸி ஓட்டிகள் ஸ்டிரைக் பண்ணினால் கூடவே ஆட்டோரிக்ஷாவும் ஸ்டிரைக் பண்ணுகிறதே! அது மாதிரி...!

சாஸ்திரி: இப்போ என்ன பண்றது?

பார்த்தசாரதி: உண்ணுவிரதம் இருக்கிறது! மானேஜர் மதுசூதனனை வாய் நிறைய வாழ்த்தி விட்டு ஜில் என்று ஒரு டம்ளர் ஐஸ் வாட்டர் கொடுக்கிறது. மனுஷனைப் பட்டினியாகவே அனுப்புவது. வெளியூர்போனாலும் நம்மை மறந்து விடக் கூடாது, பாருங்கோ! ஏன் ஐயா, வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய்? உழக்கிலே கிழக்கு மேற்குப் பார்த்து மூணு கோஷ்டி! மூணு சமையல்; கடைசியிலே மூணும் கோவிந்தா!....சே! சே! மனுஷனுக்கு இந்த நாக்கு ரொம்பப் பொல்லாதது!

பூவராகன் (வந்து கொண்டே): என்னப்பா, எல்லாரும் இங்கே உட்கார்ந்தாட்டேங்க! மீட்டிங் ஆரம்பமாக வேண்டாமா? மதுசூதனன் வர நேரமாச்சு! மாலை எங்கே?



சாஸ்திரி: இன்னிக்கு ஏகாதசி மீட்டிங்கா? டிபனுக்கு என்ன பண்றது?

பூவராகன்: நீர் பாதாம் ஹல்வா தேடிக் கொண்டு வரும் வரை மதுசூதனன் காத்துக் கொண்டிருப்பாரா? சாஸ்திரி, ரகுபதி, பார்சா! மூவரும் கொஞ்சம் ஜல்தியா ரூபாயைப் புரட்டுங்கள்! மீட்டிங்கைத் தொடங்கி நம்ப கோலையைப் பேசவிடுங்கள். அணு ஆராய்ச்சியிலிருந்து ஆட்டுக் குட்டி வளர்ப்பு வரை பேசுவான். பொறுமையாகக் கேளுங்கள். நான் அதற்குள்ளே ஓட்டல் எதையாவது பிடித்துக் கிடைத்ததை அத்தனை பேருக்கும் கொண்டு வருகிறேன். வந்தனோபசாரம் சொல்றதுக்குள்ளே வந்துடுவேன்.

ரகுபதி: சாஸ்திரி: எதையாவது பண்ணி மானத்தைக் காப்பாத்து, ஐயா!

பார்த்தசாரதி: வெண் பொங்கல் கிடைச்சாலும் பாரும்.

பூவராகன்: வெங்காயப் பொங்கல் கூட வரும்! ஆளைப் பாரும்! இதோ, பாருங்கள்! நான் கொண்டு வரும் அயிட்டங்களை மூன்று கோஷ்டிகளும் ஏக மனதாக ஒப்புக் கொள்ள வேண்டும்!..... அப்புறம்.....

ரகுபதி, சாஸ்திரி, பார்த்தசாரதி: மூச்சு விடலே ஐயா! சீக்கிரம் தொலையும்! இந்தாரும், ரூபாய்! என்ன எழவாவது பண்ணும்!

பூவராகன்: புளியோதரை உண்டு.

ரகுபதி: ஆட்சேபணை இல்லே.

பூவராகன்: சாம்பார் உண்டு.

பார்த்தசாரதி: ஆட்சேபணை இல்லே.

பூவராகன்: பாதாம் ஹல்வா உண்டு.

சாஸ்திரி: தங்கமாப் போச்சு! சீக்கிரம் போம்!

பூவராகன்: அப்பாடான்னு, உங்களுக்குள்ளே இந்தப் பிரிவுபசார விஷயத்திலே ஒற்றுமை ஏற்பட்டு விட்டது.

பார்த்தசாரதி: ஆமா, ஐயா! இன்னும் ஏன் நிக்கறே?

பூவராகன்: பிளவு உபசாரம் வேண்டாம்! அப்படித்தானே?

ரகுபதி: வேண்டாம்! வேண்டாம்! இப்போது எங்களுக்கு மானம் தங்க வேண்டும்!

பூவராகன்: அப்பாடான்னு, நான் ஓட்டலுக்குப் போக வேண்டிய அவசியமில்லே. மதுசூதனன் வரமாட்டார்.

ரகுபதி: என்ன?

பார்த்தசாரதி: வாட்?

பூவராகன்: மதுசூதனனை இன்னும் ஒரு வாரம் கழித்து சார்ஜ் கொடுத்து விட்டுப் போகும்படி தந்தி காலையிலே வந்தது. அப்போ நான் அவர் வீட்டிலே இருந்தேன்! உடனே சமையல்காரர்களுக்குத் தகவல் கொடுத்து விட்டேன்! விருந்து அடுத்த ஞாயிற்றுக் கிழமை! என் ஏற்பாடு! நீங்க ஒருத்தரும் கலவரம் பண்ண முடியாது. மளிகைச் சாமான், பணம் எல்லாம் என்கிட்டே இருக்கு!...

பார்த்தசாரதி: ஓய்! புகையிலே புதிசாகப் போட்டுக் கொண்டவன் மாதிரி என்னைக் கிறுகிறுக்க வைத்துவிட்டீரே!


பூவராகன்: இதென்ன பிரமாதம்! உங்களுக்குத்தான் கிறுக்கே பிடித்திருந்ததே!........

ரகுபதி: நல்ல வேளை! நம்ப ஆபீஸ் மானம் பிழைத்தது.

பூவராகன் (போய்க் கொண்டே): மதுசூதனன் வயிறும் பிழைத்தது!

(போகிறார்கள்)


டன்லபில்லோ
D
மெத்தைகள் தலையணைகள் குஷன்கள்
எல்லா
சந்தர்ப்பத்திற்கும்
மகிழ்ச்சி அளிக்கும்
உகந்த
பரிசு
DPC-127 TM


Perkins P-6 PARTS
ALSO GENUINE AND
REPLACEMENT PARTS FOR
BEDFORD, CHEVROLET, FARGO
AND OTHER POPULAR VEHICLES...
THE CORRECT PLACE
TO APPROACH..
MODERN DISTRIBUTING CO.
65, SINGANNA CHETTY STREET, CHINTADRIPET, MADRAS-2
GRAMS: "JEEPSPARE" • POST-BOX No. 2241 • PHONE: 85550


I.M.M.C
MADRAS-3
தீபாவளி பரிசுகள்
ஸ்டெயின்லஸ் ஸ்டீல்
பாத்திரங்கள் ஏற்றவை
உர்பத்தியாளர்
இந்தியன் மெட்டல் & மெட்டலர்ஜிகல்
கார்ப்பொரேஷன்
498, தங்கசாலைத் தெரு
மதராஸ் - 3

சொர்க்கம் எங்கே?

அகிலன்



“இந்த மண்ணுலகத்திலே சொர்க்கம்என்று ஒன்று இருக்குமானால், அது இங்கேதான்! அது இங்கேதான்! அது இங்கேதான்!'' தன் கரத்திலிருந்த ஒரு புத்தகத்திலிருந்து இந்த வரிகளைக் குதூகலத்துடன் வாய்விட்டுப் படித்துக் கொண்டிருந்தாள் மல்லிகா.

''ஆம், அது இங்கேதான்! அது இங்கேதான்! அது இங்கேதான்!''

பின்னாலிருந்து ஆனந்தனுடைய குரல் எதிரொலிக்கவே, மல்லிகா நாணத்துடன் எழுந்து நின்று அந்தப் புத்தகத்தால் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

ஓவியன் ஆனந்தனுடைய நீண்ட மெல்லிய விரல்கள், மல்லிகாவின் முகத்தை மூடியிருந்த புத்தகத்தை மெல்லப் பற்றின. சிரித்துக் கொண்டே அதைத் தானும் படித்தான்.

முகலாயர்களுடைய கட்டடக் கலைச் சிறப்புக்களைப் பற்றிய படங்கள் நிறைந்த புத்தகம் அது. டில்லி செங்கோட்டை என்று இன்று அழைக்கப்படும் அந்தப் பழைய அரண்மனையின் மண்டபம் ஒன்றில், சக்கரவர்த்தி ஒருவர் அந்த வரிகளைப் பதித்து வைத்திருப்பதாக அந்த நூலில் எழுதியிருந்தது.

''மல்லிகா! அந்தச் சக்கரவர்த்திக்கு அந்த மாளிகை சொர்க்கமென்றால், இந்த ஏழைக் கலைஞனுக்கு இந்தக் குடிசைதான் சொர்க்கம்! இதுதான் நம் சொர்க்கம்!''

''கலைச் சக்கரவர்த்தி என்று சொல்லுங்கள். ஏன் ஏழையென்று உங்களையே தாழ்த்திக் கொள்ள வேண்டும்?'' என்று சற்றுக் கோபத்துடன் கூறினாள் மல்லிகா.

ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது. ''என்னைப் பற்றி நான் உயர்வாக நினைக்கவில்லை. ஆனால், என்னைச் சக்கரவர்த்தியாக்குவதன் மூலம் நீ மகாராணியாக விரும்புகிறாய் என்றால் தாராளமாகச் சொல்லிக் கொள். மற்ற ஓவியர்கள் கேட்டால் பொறாமைப் படுவார்கள்'' என்று கூறிய ஆனந்தனுடைய கற்பனை நெஞ்சிலே விதம்விதமான வண்ண ஓவியங்கள் மலர்ந்து மணம் வீசத் தொடங்கின.

''சரி, மகாராணியாரே! நம்முடைய சாம்ராஜ்யத்தில் மாதம் மும்மாரி பொழிகிறதா? குடிபடைகள் பத்திரமாக இருக்கிறார்களா? வரி வசூல் ஒழுங்காக நடைபெறுகிறதா?'' என்று கேட்டான்.

''அடிக்கடி சொல்மாரிதான் பொழிகிறது!'' என்று சிரித்துக்கொண்டே கூறி விட்டு, அவன் எழுதி வைத்திருந்த சித்திரங்களைக் காட்டி, ''அதோ உங்களுடைய குடிபடைகளையெல்லாம் பத்திரமாக எடுத்துத் துடைத்து வைத்திருக்கிறேன்!'' என்றாள் மல்லிகா. அதோடு கணக்கு நோட்டையும் எடுத்து வந்து பிரித்துக் காட்டி, ''வரி வசூல்தான் ஒழுங்காக நடைபெறுவதில்லை; படங்களை வாங்கிக்கொண்டு போவதற்குக் காதுக்கு விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு நடப்பவர்கள், வாங்கிக் கொண்டு போன பிறகு 'காணிக்கை செலுத்த மறந்து போகிறார்கள்!'' என்றாள்.

''கொடுத்து விடுவார்கள். விட்டுத் தள்ளு!'' என்று அலட்சியமாய்க் கூறி விட்டு, ''உண்பது நாழி அரிசி, உடுப்பது நான்கு முழத் துண்டு; இதற்குத்தானா பஞ்சம் வந்து விடும்?'' என்று குழந்தை போல் கேட்டான் ஆனந்தன்.

வயது வந்த குழந்தைகளான இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். தங்களுடைய வறுமையை மறந்து, கவலைகளை மறந்து அவர்கள் சிரித்தார்கள்.

வீட்டின் மற்றொரு பகுதியில் இட்லி வார்த்துக் கொண்டிருந்த ஆனந்தனின் தாயாருடைய செவிகளிலும் அந்தச் சிரிப்பொலி விழுந்தது. ''கல்யாணம் பண்ணிக் கொண்ட புதுசு! காணாததைக் கண்டது போல் அவனும் தலை மேலே நிற்கிறான். போய்த் தொலையட்டும்!'' என்று தனக்குள் பேசிக் கொண்டாள் அவள்.

ஆனந்தனின் தாயாருக்கு அவன் ஒரே செல்லப்பிள்ளை. தகப்பனார் சிறு வயதில் அவனை விட்டு விட்டுப் போன பிறகு, எத்தனையோ சிரமங்கள் பட்டு அவனை வளர்த்து ஆளாக்கி விட்டவள் அவள். 'குழந்தை' என்கிற ஆனந்தனைத்தான் அவளுக்குத் தெரியுமே தவிர, வலிமை மிக்க ஓவியனாக வளர்ந்து, பலருடைய பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியவனாக அவன் உலவிக் கொண்டிருப்பது அவளுக்குப் புலப்படவில்லை.

* * *

சென்னை நகரத்தின் ஒதுக்குப்புறத்திலிருந்த ஒரு சிறிய கூரை வீடுதான்

ஆனந்தனுடையது. என்றாலும் அதைச் சுற்றிலும் ஓர் அழகிய பூந்தோட்டம் அவன் போட்டிருந்தான். மூங்கில் பட்டைகளால் வேலி அடைத்துக் கொண்டு நகரத்தை ஒட்டினாற் போல் கிராம வாசத்தின் அமைதியைத் தேடிக் கொண்டிருந்தான் அவன்.

'செங்கோலை எடு' என்றான் ஆனந்தன். அதற்குப் பிறகு அவன் முற்றிலும் மாறுபட்ட வேறு மனிதன் என்பதை மல்லிகா தன்னுடைய சிறிது காலப் பழக்கத்திலேயே கண்டு விட்டாள். மௌனமாகச் சித்திரம் வரையும் தூரிகையை எடுத்து அவனிடம் நீட்டினாள். முன்னதாகவே வர்ணக் கிண்ணங்கள் பல்வேறு நிறங்களில் அவனருகில் தயாராக இருந்தன.

இனி மேல் அவனுடன் நாடக வசனங்கள் இல்லை; பேச்சில்லை; சிரிப்பில்லை. குதூகலமோ கொண்டாட்டமோ அங்கு இனி கிடையாது.

அந்த நேரத்தில் அவனுக்கு இடி இடித்தால் தெரியாது; மழை பொழிந்தால் தெரியாது; பிரளயமே ஏற்பட்டாலும் தெரியாது. மல்லிகா அந்த நேரங்களில் அவனுடைய காதலியல்ல; மனைவியல்ல; கலைத் தேவிக்குத் தொண்டு செய்யும் ஆனந்தன் என்ற அடிமைக்கு அவள் ஓர் அடிமை!

தன்னையே அவனுடைய கண்கள் ஊடுருவிக் கொண்டிருந்தாலும், தனக்குப் பின்னே உள்ள எதையோ அவன் தேடுகிறான் என்பதை அவள் கண்டுகொள்வாள். அவனுடைய தோற்றம் விசுவரூபம் எடுத்து நிற்பதை அவனுடைய கண்கள் மட்டிலுமே கண்டிருக்கின்றன.

மகாராணியாக இருக்க மல்லிகா, அடிமையிலும் அடிமையாகத் தன்னை மாற்றிக் கொண்டு, மௌனமாக அவனுக்கு வேண்டிய சிறு உதவிகளைச் செய்வாள். அல்லது, அவன் எங்கே எப்படியெல்லாம் இருக்கச் சொல்கிறானோ, அங்கே அப்படிக் கட்டுண்டு இருந்து விடுவாள்.

ஆனந்தனின் கண்கள் மதுவை உண்ட மயக்கத்தில் கிறங்கிப் போயிருந்தன. கரத்தில் தூரிகை நர்த்தனமாடியது. அடிக்கடி மல்லிகாவின் பக்கம் திரும்பிப் பார்ப்பதும், பிறகு தோட்டத்துச் செடி கொடிகளை உற்று நோக்குவதும் பிறகு திரைச் சீலையில் கவனம் செலுத்துவதுமாக இருந்தான் ஆனந்தன்.

நேரம் சென்றதே இருவருக்கும் தெரியவில்லை.

சமையலறைக்குள்ளிருந்து சத்தம் கேட்டது: ''மல்லிகா! மல்லிகா!''

''இதோ வந்து விட்டேன், அத்தை!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே கிளம்பினாள் மல்லிகா.

''கொஞ்சம் பொறு! இப்போது போகாதே!'' என்று தடுத்தான் ஆனந்தன். மல்லிகா நடுங்கினாள். கலைக் கட்டளைக்குக் கட்டுப்படுவதா? அத்தையின் அழைப்பை மீறுவதா?

சில விநாடிகள் தயங்கிய பிறகு, 'போகலாம்' என்று அவன் கையசைத்த பிறகு தான் அங்கிருந்து கிளம்பினாள் அவள். அடுப்படியில் அவர்களுக்குள் ஏதோ வார்த்தை நடந்தது. அது ஆனந்தனின் செவியில் விழவில்லை.

அன்றைக்கு மாலையில், அவன் காலையில் எழுதத் தொடங்கிய படம் முழுமை பெற்றது. இடையில் ஏதோ அவன் தாயாரின் கட்டாயத்துக்காகச் சாப்பிட்டு வைத்தான். மல்லிகா எடுத்துக் கொடுத்த தண்ணீரைச் சுவை நினைவின்றிக் குடித்து வைத்தான். படம் முழுமை பெற்ற பிறகுதான் அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே வந்தது.


வேதனைகளையும் பொறுக்க முடியாத வலியையும் பொறுத்துக் கொண்டு, தான் பெற்றிருந்த குழந்தையை முதன் முதலாகப் பார்க்கும் தாயைப் போல, அந்தப் படத்தை ஒரு நிமிடம் தன் ஆவல் தீரப் பார்த்தான் ஆனந்தன். மல்லிகாவும் தன் கண்கள் மலர அதையே உற்று நோக்கினாள்.

இதுதான் அவன் எழுதிய ஓவியம்: ஒரு பூங்காவின் மத்தியிலிருந்த பளிங்கு மேடையருகில் மாலைத் தென்றலில் அசைந்தாடும் முகத்திரையைப் பற்றியவாறே நாணத்துடன் எழுந்து நிற்கிறாள் மகாராணி மும்தாஜ். அப்போதுதான் அங்கு சக்கரவர்த்தி ஷாஜஹான் தமது பேகத்தைத் தனிமையில் சந்திப்பதற்கு ஆவலோடு வந்து கொண்டிருக்கிறார். அவருடைய வரவைக் கண்டு விட்டு, மகிழ்ச்சி பொங்கிய நாணத்துடன் மும்தாஜ் பரபரப்போடு பளிங்கு மேடையிலிருந்து எழுந்து நிற்பது போல் ஒரு தோற்றம்.

''மல்லிகா! இதற்கு என்ன தலைப்புக் கொடுக்கலாம்?''

'' 'சொர்க்கம் இங்கே' என்று கொடுங்கள்!''

''மல்லிகா! எதை நான் நினைத்துக் கொண்டிருந்தேனோ, அதையே நீயும் சொல்லிவிட்டாய். இதற்கு எத்தனையோ பேர்கள் விலை மதிப்புச் சொல்வார்கள். ஆயிரம் ஆயிரமாக அவர்கள் அள்ளிக் கொடுத்தால் கூட, அவர்களால் இதன் ஆத்மாவை உன்னைப் போல் உணரமுடியுமா, மல்லிகா?.. இந்தப் படத்தின் உட



வழகும் நீ, உயிரழகும் நீ, எல்லாவற்றை யும்விட இதன் ஆத்மத் துடிப்பு இருக் கிறதே, அது நீயேதான் மல்லிகா! நீயே தான்...!''

மெய்யான பக்தனைக் கண்டு பரவசம் அடையும் கடவுளைப் போல், ஆத்மாவைக் கண்டு ஆனந்தமுறும் யோகியைப் போல் தனக்கொரு ரசிகையைக் கண்டு விட்ட கலைஞன் மகிழ்ச்சிப் பூரிப்பால் ஏதேதோ அவளிடம் உளறினான்.

ஃ ஃ ஃ

மறு நாள் அவனுடைய வீட்டுக்கு வந் திருந்த நண்பன் நாவுக்கரசு, அந்தப் படத்தைப் பார்த்து விட்டு வாயடைத் துப் போய் நின்றான். அதை ஆனந்தன் ஒரே நாளைக்குள் எழுதி முடித்தான் என் பதை மட்டும் அவன் நம்பவே இல்லை. ஒரு வாரமாவது ஆகியிருக்குமென்று வாதாடினான்.

''மல்லிகா சாட்சியிருக்கிறாள், கேட் டுப் பார்!''

''ஆம், அண்ணா! நேற்றுக் காலையில் தொடங்கி மாலையில் முடித்து விட்டார்'' என்று நாவுக்கரசிடம் பெருமையோடு கூறினாள் மல்லிகா.

''அடேயப்பா! அசுர சாதனையென்று சொல்வார்களே, அதைத்தான் நீ சாதித் திருக்கிறாய். எப்படி ஆனந்தா உன்னால் இவ்வளவு அழகான படத்தை, இவ் வளவு சீக்கிரம் உருவாக்க முடிகிறது?— உண்மையாய்க் கேட்கிறேன்: உன் னுடைய கலை இரகசியத்தைத்தான் என் னிடம் கொஞ்சம் சொல்லி வையேன்.''

''இதோ, பார்! இந்த ரோஜாப் பூவிடம் போய் 'நீ எப்படி மலர்கிறாய்?' என்று கேள்வி கேட்டால், அது என்ன பதிலைச் சொல்லும்?'' என்று தோட்டத் தில் மலர்ந்திருந்த ஒரு ரோஜாவைத் தன் நண்பனிடம் காட்டினான் ஆனந்தன்.

நாவுக்கரசு அவனை விடவில்லை. ''ரோஜாவிடம் அழகும் மணமும் இருக் கிறதே தவிர, அதற்கு வாயில்லை. உன் னிடம் கலையும் இருக்கிறது; அதைப் பற் றிச் சொல்ல வாயும் இருக்கிறது'' என்று கூறினான்.

''நாவுக்கரசு! இந்தப் படத்தையே எடுத்துக் கொள். இதை எழுதப் போகி றேனென்று நான் நேற்று காலை வரையில் நினைக்க வில்லை. அறைக்குள் நுழைந்த போது இவள் ஏதோ சில வரிகளைப் படித் துக் கொண்டிருந்தாள். அதன் பொருள் எனக்கு உற்சாகம் தந்தது. என்னைக் கண்டவுடன் இவள் நாணத்துடன் எழுந்து நின்ற சாயல் என் கற்பனையைத் தூண்டி விட்டது. இவளையே மும்தா ஜாக மாற்றி, நான் ஷாஜஹானாகி விட் டேன்!....இதை யெல்லாம் நீ விளக்கக் கேட்பது எவ்வளவு சங்கடமாக இருக் கிறது தெரியுமா?''

''போங்கள்! உங்களுக்குக் கொஞ்சங் கூட வெட்கமில்லை!'' என்று கோபத் தோடு சொல்லி விட்டு, உள்ளே ஓடி மறைந்தாள் மல்லிகா.

நாவுக்கரசு ஆழ்ந்த சிந்தனையில் மூழ் கினான். அதிசயப் பிறவியான தன் னுடைய நண்பனுக்கு மற்றோர் அதிசயப் பிறவி வந்து மனைவியாக வாய்த்திருப் பது அவனுக்குப் பெருமை தந்தது.

''நீ ஒரு கலை வெறியன்!'' என்றான் நாவுக்கரசு சிரித்துக் கொண்டே.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. சில சமயங்களில் கலைக்கே வெறி வந்து அது என்னை ஆட்டி வைக்கிறது என்று வேண்டுமானால் வைத்துக் கொள். வண் ணங்களில் வண்ணங்களைக் குழைத்தவு டன் அதில் கற்பனை ஊற்றும் கலந்து விட்டால் சித்திரம் நயமாக அமைந்து விடுகிறது. எதிர்பாராத சில சமயங் களில் ஆத்ம தரிசனம் கிடைத்ததுபோல், கலை ஊற்றுப் பீறிட்டுப் பொங்கிப் பூரிக் கிறது. சில வேளைகளில் பல நாட்கள் சிரமப்பட்டு ஒரு சித்திரத்தைக்கூட முடிக்க முடிவதில்லை.''

''ஆனந்தா! உண்மையிலேயே நீ மிக வும் கொடுத்து வைத்தவன்'' என்று பூரிப்போடு கூறினான் நாவுக்கரசு. ''சீக் கிரம் நீ மிகப் பெரிய ஓவியக் கலை மேதை யாகிவிடப் போகிறாய், பார். பாசமே உருவாக வந்த தாயாரும், உன் கலை மனத்துக்கு உற்சாகமூட்டும் மனைவியும் உனக்குக் கிடைத்திருக்கிறார்கள். இதை விட வேறு என்ன பாக்கியம் வேண்டும்?''

''நேசமே உருவான நண்பனும் எனக்குக் கிடைத்திருக்கிறான் என்பதை மறந்து விடாதே!'' என்று கூறிச் சிரித் தான் ஆனந்தன்.

ஃ ஃ ஃ

நண்பன் நாவுக்கரசு கூறியது ஒரு வகையில் உண்மையாகி விட்டது. நாளுக்கு நாள் ஆனந்தனின் சித்திரங்கள் ரசிகர்களிடம் பேராதரவைப் பெற்றுக் கொண்டே வந்தன. வறுமைத் துன்பமும் மறைந்து கொண்டு வந்தது. மல்லிகா வுக்கும் எந்த நேரத்திலும் அவனுடைய வேலைகளுக்கே பொழுது சரியாக இருந் தது. ஆனால் தன் கணவனுக்கு அருகி லேயே எந்த நேரமும் இருந்தும் கூட, அவன் தன்னை விட்டு வெகு தூரத் துக்கு வெகு தூரம் விலகிக் கொண் டிருப்பதை அவள் கண்டாள். மல்லிகா விடம் அவன் பேசுகிற பேச்செல்லாம் சித்திரங்களைப் பற்றிய பேச்சுத்தான். 'அவருக்கு நான் மனைவி என்பதையே முற்றிலும் மறந்து விட்டார் போலிருக் கிறது' என்று எண்ணி ஏங்கத் தொடங் கினாள் மல்லிகா.

அவனுடைய தாயார் பார்வதி யம்மாளுக்கோ, மல்லிகா வீட் டுக்கு வந்ததிலிருந்தே தன்னு டைய மகன் மாறி விட்டான் என்ற எண்ணம் விதையூன்றி விட்டது. தன் பாசத்துக்குப் பஞ்சம் வந்து விட்டது போல் ஓர் அச்சம் அவளுக்கு. எந்த நேரமும் ஆனந்தனின் கூடவே மல்லிகா இருந்ததால், அவனைத் தன்னிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டாள் என்று பார் வதியம்மாளால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பாசத்தைப் பயம் பற்றிக் கொண்டது; காதலோ கடமையின் பிடியில் அகப் பட்டு ஏங்கித் தவித்தது.

இடையில் மல்லிகாவுக்கு ஒரு மகனும் பிறந்து விட்டான்.

இந்த நிலையில் வீட்டுப் பெண்கள் ஆனந்தனின்! கலை வளர்ச்சியையோ, அவனுடைய 'புகழையோ, முன்னேற்றத் தையோ சிறிது சிறிதாகக் கவனிப் பதை மறந்தார்கள். மாமியார் தன் கவனத்தை மருமகள் மீது திருப்பி, அவ ளுடைய செயல்களிலெல்லாம் குறை காணத் தொடங்கினாள். மருமகளோ, தன்னிடம் கணவன் பராமுகமாக இருப்பதாகவும், மாமியார் தன்னைக் கொடுமைப் படுத்துவதாகவும் நினைக்கத் தொடங்கி விட்டாள்.

''நீ வந்ததிலிருந்து என் குடும்பமே போய் விட்டது!'' என்று குற்றம் சாட்டி னாள் மாமியார்.



''நான் இருதலைக் கொள்ளி எறும்பு! அங்கே அவருக்கு நான் அடிமையாகக் கிடந்து உழைத்து விட்டு, இங்கே உங்க ளிடமும் ஏச்சு வாங்கிக்கொள்ள வேண்டி யிருக்கிறது!'' என்றாள் மருமகள்.

மாமியாருக்கும் பொறுமையில்லை; மருமகளுக்கும் பொறுமையில்லை. மாமி யார் மருமகளைத் தூற்றினாள், மருமகள் குழந்தையைத் தூற்றுவாள். கோபம் தாங்கவில்லையென்றால் குழந்தை குமர னின் அழுகுரலே அங்கே கேட்கலாம்!

மனத்தில் வண்ணம் குழைத்துத் தூரி கையை எடுக்கும் ஆனந்தனின் நிலையோ?

'குடும்பமென்று இருந்தால், அதிலும் குழந்தையும் பிறந்து விட்டால், இப்படித்தான் இருக்கும். எல்லாம் நாளடைவில் சரியாகி விடும்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு வந்தான் ஆனந்தன்.

நாளடைவில் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்ததே தவிரச் சரியாகவில்லை. பிறகு ஒரு நாள் மல்லிகாவிடம், ''நீதான் பொறுத்துக் கொள்ள வேண்டும், மல்லிகா! அம்மா என்னைப் பெற்று வளர்த்தவள். கலைஞனுடைய வாழ்விலுள்ள சிரமங்களையும் தொல்லைகளையும் அறியாதவள். என்னோடு வாழ்வதென்றால் உனக்கு அளவுக்கு மீறிய பொறுமை வேண்டும், மல்லிகா!'' என்று வேதனையோடு கூறினான்.

தாயாரிடமும், ''அம்மா! எனக்குப் பெயரை ஆனந்தன் என்று வைத்தாய். என்னுடைய ஆனந்தத்தினால்தான் என்னுடைய கலையே வளர முடியும். உனக்கும் பொறுமை வேண்டும்மம்மா...... நீ அவளைக் குறை கூறிக் கொண்டே இருந்தால், அவளுடைய துன்பம் நேரடியாக என்னுடைய மன அமைதியைக் குலைக்கிறதம்மா!'' என்றான்.

''அவள் வந்ததிலிருந்து வீட்டில் அமைதியே குலைந்து போய் விட்டது!'' என்றாள் தாயார்.

''புரிந்து கொள், அம்மா புரிந்து கொள்!'' என்று கத்தினான் ஆனந்தன். ''நீங்கள் இருவரும் என்னிடம் அன்பு செலுத்துவது உண்மையானால், முதலில் உங்களுக்குள் அன்பும், ஒற்றுமையும் வேண்டும். அப்படியில்லா விட்டால் அது என்னைத்தான் பாதிக்கும்.''

இவ்வளவுக்கும் இடையில் ஆனந்தன் தன்னுடைய குழந்தை குமரனின் களங்கமற்ற சிரிப்பிலும், மழலையிலும், கட்டித் தனத்திலும் ஆனந்தம் கண்டான். உயிர்களுடைய மலர்ச்சியிலே கற்பனைக் கனவுகளைக் காண்பவன் அவன். மல்லிகாவின் இடத்தை நிரப்புவதற்கு அவனுக்குக் குமரன் கிடைத்தது ஓர் ஆறுதலாக இருந்தது.

ஒரு நாள் அவனுடைய சித்திரக்கூடத்துக்குள், பூந்தோட்டத்தை வெறித்துப் பார்த்தவாறு குழந்தையும் கையுமாக நின்று கொண்டிருந்தாள் மல்லிகா. அறைக்குள் நுழைந்த ஆனந்தனுக்குக் குழந்தையும் கையுமாக அவள் தோன்றிய காட்சி அற்புதமானதொரு கற்பனையைக் கொடுத்தது. தோட்டத்துக் குருவிகளைக் கண்டு குமரன் குதூகலமாக மழலைகளை வாரி இறைத்துக்கொண்டிருந்தான். அவனுடைய பிஞ்சுக் கரங்களும் கால்களும் துள்ளித் துடித்தன. சிரிப்பின் சிற்றலைகள் அந்த அறையெங்கும் நறுமணம் வீசியது. குழந்தையும் கடவுளும் ஒன்றேயல்லவா!

ஆனந்தனின் இதயமான வண்ணக் கிண்ணத்தில் கற்பனைத் தேன் பொங்கத் தொடங்கவே, மல்லிகாவுக்குத் தெரியாமல் தூரிகையை எடுத்துக் கொண்டு திரைச் சீலையின் அருகில் சென்றான். பெற்றெடுத்த தாயின் இதயமும் அப்போது தன் இதயத்தைப் போலவே குழந்தையின் ஆனந்தத்தில் திளைத்திருக்கும் என்பது அவனுடைய கற்பனை. ஓவியர்கள் அனைவருக்குமே தெவிட்டாத காட்சிதான் இது.

''மல்லிகா! எங்கே இப்படிக் கொஞ்சம் திரும்பு!'' என்று மெல்லக் கூறினான் ஆனந்தன். ''குமரனின் முகத்தைக் கொஞ்சம் சிரித்தபடியே உற்றுப் பார்!''

மல்லிகா பயந்து நடுங்கிக் கொண்டே திரும்பினாள். அவள் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது. சிரிப்பை எதிர்பார்த்த முகத்தில் துயரம்; ஆனந்தத்தை எதிர்பார்த்த முகத்தில் சோகம்; கற்பனைத் துளிகளை எதிர்பார்த்த முகத்தில் கண்ணீர்த் துளிகள்.

அவ்வளவுதான்! தான் என்ன செய்கிறோம் என்பதை மறந்து, அருகிலிருந்த ஒரு வர்ணக் கிண்ணத்தை எடுத்து அவள் முகத்தில் வீசினான் ஆனந்தன். குழந்தை குமரன் வீறிட்டு அழுதான்.

''நீங்கள் மனிதர்தானா?'' என்று கதறினாள் மல்லிகா. ''சிரிக்கச் சொல்கிறீர்களே, என்னை நீங்கள் நடிக்கச் சொல்கிறீர்களா? எப்படிச் சிரிப்பு வரும் எனக்கு இந்த வீட்டில்? தொட்டதெல்லாம் குறை, செய்வதெல்லாம் தப்பு என்று ஒருவர் சொல்லிக் கொண்டே இருந்தால், உங்களால்தான் உற்சாகமாகச் சித்திரம் வரைய முடியுமா?— இதோ பாருங்கள். என்னிடம் உங்களுக்கு அன்பில்லை; உங்களுடைய தாயாருக்கும் அன்பில்லை! உங்களுடைய கலைக்கு அன்பு வேண்டும், ஆத்மா வேண்டும், உற்சாகம் வேண்டும் என்கிறீர்களே, அதை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டே வந்தால் உங்களிடம் நான் எதைக் கொடுப்பது?''

குழந்தையுடன் அவள் வேகமாகச் சென்று மறைந்தாள். ஆனந்தன் துக்கத்தில் ஆழ்ந்தவனாகத் தூரிகையை வீசி எறிந்தான். அன்றிலிருந்து அவனுக்குத் தூரிகையைத் தொடுவதற்குக்கூட உற்சாகமில்லை. தொல்லைகளுக்காக எதையாவது எழுதித் தரவேண்டும் என்ற எண்ணம் அவனுக்குக் கிடையாது. மாதத்துக்கு ஒரு படத்தைக்கூட அவனால் முழுமையாக்கிக் கொடுக்க முடியவில்லை.

ஒரே நாளில் ஓர் உயிர்ச் சித்திரத்தை முடித்தவனால், ஒரு மாதத்தில் ஒன்றையாவது திருப்தியோடு வரைய முடியவில்லை. பலவற்றை எழுதிப் பார்த்து விட்டுத் தனக்குப் பிடிக்காததால் கிழித்துப் போட்டு விட்டான். அவனுடைய போக்கைப் பற்றி அவன் தாயாரோ, மல்லிகாவோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் கவலை அவரவர்களுக்கு. பார்வதியம்மாளுக்கு மல்லிகாவின் மீது குறை; மல்லிகாவுக்குப் பார்வதியம்மாளின் மீது குறை.

ஆனந்தன் மல்லிகாவிடம் தன்னுடைய நிலையைச் சொல்லி அவளை முன் போல் இருக்கும்படி வேண்டினான். அவளும் முன் போலவே அவனிடம் மனம் விட்டுப் பேசிப் பொழுது போக்கினாள். கணவனிடம் அவளுடைய அனுதாபம் திரும்பியது. ஆனால், பார்வதியம்மாளுக்கோ அதன் காரணம் புரியவில்லை. இருவரும் தன்னைப் பற்றித் தான் குறை கூறிக் கொள்ளுகிறார்களோ என்ற சந்தேகம் அவளுக்கு.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் மனைவியை அழைத்துக் கொண்டு ஆனந்தனைப் பார்க்க வந்த நாவுக்கரசுக்கு, ஆனந்தனுடைய தோற்றத்தைக் கண்டவுடன் திகைப்பாகப் போய் விட்டது. அதைப் போலவே அவன் மனைவியும் வீட்டுப் பெண்கள் இருவரும் மாறியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

நாவுக்கரசு கேட்டான்: ''உனக்கு என்ன வந்துவிட்டது ஆனந்தா? ஏன் இப்படி மெலிந்து போய் விட்டாய்? அடையாளமே தெரியாதபடி உருக்குலைந்து போயிருக்கிறாயே?''

''அதிக வேலை; வேறொன்றும் காரணமில்லை'' என்று மழுப்பினான் ஆனந்தன்.

''பொய் சொல்லாதே! நீ உன் வேலைகள் எதையுமே ஒழுங்காகச் செய்வதில்லை என்று எனக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறித்த காலத்தில் எந்தப் படத்தையும் முடித்துக் கொடுப்பதில்லையாம். அருமையான வாய்ப்புக்கள் வந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் நீ இப்படித்தானா நடந்து கொள்வது?''

ஆனந்தன் மௌனமாகத் தலை குனிந்து கொண்டான்.

நாவுக்கரசோ தன் பேச்சை நிறுத்தவில்லை. ''வாழ்க்கையில் சிலருக்குத்தான் பிறவியிலேயே கடவுள் கலைத் திறன் என்கிற அருளைக் கொடுக்கிறார். அவர்களிலும் ஒரு சிலரைத்தான் வெளி உலகம் தெரிந்து கொண்டு வரவேற்கிறது. இவ்வளவிருந்தும், உன்னுடைய நிலையை நீயே தெரிந்து கொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிட்டால், பிறகு நீ வருந்த வேண்டியிருக்கும், ஆனந்தா!''

ஆனந்தனுக்கு அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை. ''இவ்வளவும் எனக்குத் தெரிகிறது நாவுக்கரசு. ஆனால் வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியவில்லை. என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கலையையே வாழ்வாகக் கொண்ட பல மேதைகளின் குடும்ப வாழ்வு எவ்வளவு துன்பம் நிறைந்ததாக இருந்ததென்பது உனக்குத் தெரியுமே!''

''முட்டாள்!'' என்று அன்பின் உரிமையோடு கண்டித்தான் நாவுக்கரசு. ''உன்னை நான் அப்படி விட்டு விடுவேனென்று நினைக்காதே'' என்றான்.

வீட்டுக்குள் புகுந்த நாவுக்கரசின் மனைவியிடம் மல்லிகாவும் பார்வதியம்மாளும் தங்கள் குறைகளைக் கூறி அழுதனர். நாவுக்கரசு தன் மனைவியிடமிருந்து வீட்டுப் பெண்கள் இருவரைப் பற்றியும் அறிந்து கொண்டான்.

''பாவம்! உலகத்தில் பலருக்கு இயற்கையாகவே துன்பத்துக்கு மேல் துன்பம் வந்து கொண்டிருக்கிறது. வேறுசிலரோ இயற்கையாகவே தங்களுக்கு இன்பத்துக்கு மேல் இன்பம் வந்து குவியும் போதே, அதை ஒதுக்கி விட்டு, துன்பத்தைத் தேடிக் கொண்டு அவதிப்படுகிறார்கள். எது இன்பம், எது துன்பம் என்று அவர்களுக்கே தெரிவதில்லை'' என்றான் நாவுக்கரசு தன் மனைவியிடம்.



நாடகத்தின் போது திரைக்குப் பின்னால் :—ஐயா! துஷ்யந்தன் வேஷக்காரரே! நீர் சகுந்தலையை மட்டும் மறந்தால் போதும்! வசனங்களையும் மறந்துவிடுகிறீரே?

"பார்வதி யம்மாளும் நல்லவர்கள்தான்; மல்லிகாவும் நல்லவள்தான். ஏன் இந்தக் கஷ்டம் அவர்களுக்கு?" என்று கேட்டாள் அவள்.

"இரண்டு பேருமே நல்லவர்களாக இருந்தும், மற்றவர்களை நல்லவர்கள் என்று நினைக்காததனால் வரும் தொல்லை தான் இது. தனியே தன் மகன் மீது உயிரையே வைத்திருக்கும் அவன் தாயாருக்கு யார் மீதெல்லாம் அவன் அன்பு செலுத்துகிறானோ, அவர்கள் மீதெல்லாம் தானும் அன்பு செலுத்த வேண்டும் என்று தெரியவில்லை. அதே போல் அவன் மனைவிக்கும் அவன் தாயார் மீது வைக்கும் பாசம் அவன்மீது செலுத்தும் அன்பு என்பதும் புரியவில்லை..."

"ஏன், இதை நீங்களும் நானுமே போய்ச் சொல்லலாமே!" என்றாள் அவள்.

"போதும்! நாம் போய்ச் சொன்னால் அவர்கள் நம்மையே பொல்லாதவர்கள் என்று நினைப்பார்கள். நம்மையே அவர்கள் வெறுக்கத் தொடங்கினாலும் தொடங்குவார்கள்."

"அப்படியானால் உங்களுடைய நண்பரின் பாடு என்ன ஆவது? அவர் நன்றாக இருந்தால்தானே அந்தக் குடும்பத்துப் பெண்களுக்குச் சண்டை போட்டுக் கொள்வதற்காகவாவது வசதி கிடைக்கும்? அவர் மனம் நொந்து போய்ப் படுக்கையில் விழுந்து விட்டால்? தூரிகையைத் தூக்கி எறிந்து விட்டால்? இந்த நாட்டுக்கே பெருமை தரும் கலைஞர் என்று அவரைப் பற்றிச் சொல்லிக் கூத்தாடுவீர்களே, அவரிடம் நீங்கள் வைத்திருக்கும் அன்பு இவ்வளவுதானா?"

சிரித்தான் நாவுக்கரசு. அவன் சிரிப்பைக் கண்டு அவன் மனைவிக்கு எரிச்சலாக இருந்தது.

* * *

நாவுக்கரசின் தூண்டுதலால், உலகச் சித்திரப் போட்டிக்கென்று ஒரு படம் வரைவதற்காக, சென்னையை விட்டுக் கிளம்பி மைசூருக்குச் சென்று ஓர் ஓட்டலில் தங்கிக் கொண்டு படம் வரைந்து கொண்டிருந்தான் ஆனந்தன். அவன் வீட்டை விட்டுச் செல்லும்போது கூறி விட்டுப் போன வார்த்தைகளை அவன் தாயாரும் மறக்கவில்லை; மனைவியும் மறக்கவில்லை. "உங்களை விட்டு வெகு தூரம் போனால்தான் அமைதி கிடைக்கும் போலிருக்கிறது. அமைதியில்லாமல் என்னால் சித்திரம் வரைய முடியாது!"

இதை நினைத்து நினைத்து இருவரும் ஏங்கிக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு நாள் இரண்டு கடிதங்கள் ஆனந்தனின் விலாசத்துக்கு வீட்டுக்கு வந்தன. வந்த கடிதங்களில் ஒன்றை மனைவி மல்லிகா படித்தாள்; மற்றொன்றை அவன் தாயார் படித்தாள்.

மல்லிகா படித்த கடிதம் யாரோ ரசிகை எழுதியது:

அன்புள்ள ஆனந்தன் அவர்களுக்கு,

எங்களுக்கெல்லாம் ஆனந்த பரவசத்தை இடைவிடாமல் உங்கள் சித்திரங்களால் கொடுத்துக் கொண்டிருந்த நீங்கள் ஏன் இப்போது சித்திரங்களை வரைவதில்லை? கடவுளுக்கு அடுத்தபடியாகக் கலைஞர்களைப் போற்றும் நாடு இது. இதில் தாங்கள் தலை சிறந்தவர். தங்கள் கலைத் திறனால் நம் நாட்டின் மதிப்பே உலகத்துக்கு மத்தியில் உயரப் போகிறது.

ஒரு விஷயம் நான் கேள்விப்பட்டேன். என் தோழி ஒருத்தி தங்களைக் காண வந்திருந்த போது, தங்களது வீட்டில் சரியான வரவேற்பில்லையாம். தங்கள் தாயாரும் மனைவியும் ஒருவருக் கொருவர் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார்களாம். இது நீடித்துக் கொண்டே போகிறதென்றும் அறிந்தேன்.

நான் எழுதுவது தவறாக இருக்கலாம். ஆனால் எனக்கு உங்களுடைய கலைதான் பெரிது. உங்களுடைய ஆனந்தத்துக்காக என் வாழ்வையும், என்னுடைய உடைமைகளையும் நான் காணிக்கையாக வைக்கக் காத்திருக்கிறேன். மேலை நாடுகளில் கலைஞர்களை வளர்க்கும் ரசிகைகளைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

தங்கள் அடிமை,

....

கண்களில் கண்ணீர் பொங்க, மல்லிகா அந்தக் கடிதத்தைத் தன் மாமியாரிடம் கொடுத்து விட்டு, அவளிடமிருந்த கடிதத்தை வாங்கினாள். அதை ஆனந்தனின் சித்திரக்கார நண்பன் ஒருவன் எழுதியிருந்தான்.

அதில் இருந்த சில வரிகள் பார்வதியம்மாளையே பதறச் செய்து விட்டன.

"ஆனந்தா! உடனே புறப்பட்டு ஓடி வந்து விடு. நாம் பாரிசுக்குப் போவோம்; அல்லது லண்டன் போவோம். கையில் பணமிருக்கிறது. கவலைகளை மறப்பதற்காக எவ்வளவோ வழிகள் அங்கே இருக்கின்றன. மிகச் சிறந்த கலைஞர்கள் சிலர் என்ன செய்கிறார்கள், தெரியுமா? குடும்பத் தொல்லைகளில் அவர்கள் அகப்படுவதே இல்லை. நினைத்த போது குடிக்கிறார்கள்; கூத்தாடுகிறார்கள்; பிறகு ஆவேசத்தோடு சித்திரங்கள் வரைகிறார்கள். நாம் ஒவ்வொரு படத்தை எழுதும் போதும் எத்தனை எத்தனை வேதனைகளை அனுபவிக்கிறோம்? அந்தக் கலையின் வெற்றிக்காகவே நம்முடைய வாழ்வைச் சீரழித்துக் கொண்டால் தான் என்ன?—வாழ்க்கை மண்ணுக்கு; கலை விண்ணுக்கு.—பறந்து போகலாம், வா!"

....

கடிதங்களைப் படித்து விட்டுச் சிலையாகிப் போனார்கள் இருவரும். பிறகு வெகு நேரம் தங்களுக்குள் கண்ணீர் வடித்தார்கள். ஒருவர் கண்ணீரை மற்றவர் துடைத்தார்கள்.

* * *

மைசூரிலிருந்து திரும்பி வந்த ஆனந்தனுக்கு வீட்டுக்குள் ஏற்பட்டிருந்த மாறுதல்களை நம்புவதற்கே சிலவாரங்கள் சென்றன. அவனுக்குக் காரணமே தெரியவில்லை. எப்போதும் ஒரே குதூகலம், சிரிப்பு, பரிகாசப் பேச்சுக்கள். பார்வதியம்மாளின் மடியில் படுத்துக் கொண்டு மல்லிகா கதை கேட்டாள். மாமியாரைப் பற்றி வாய்க்கு வாய் பெருமை பேசினாள். குழந்தை குமாருக்கோ எந்த நேரமும் கொண்டாட்டம்.


நண்பன் நாவுக்கரசு உலகத்துச் சித்திரப் போட்டியில் ஆனந்தனுக்கே முதல் பரிசு என்ற செய்தியை ஆரவாரத்தோடு வீட்டில் வந்து கூறினான். தமிழ் நாட்டின் புகழை உலகத்துக்கு மத்தியில் நிலை நாட்டி விட்டதாக அவன் பெருமைப் பட்டுக் கொண்டான்.

பரவசத்தோடு மல்லிகா அவனை மெய்ம்மறந்து பாராட்டினாள். ஆனந்தனோ நிதானமாக அவளிடம் கூறினான். "மல்லிகா! உலகப் பரிசு எனக்குப் பெரிதாகவே தோன்றவில்லை. என் உள்ளம் ஒரு பெரிய பரிசை அதற்கு முன்பே பெற்று விட்டது. அம்மாவும் நீயும் எப்படி இவ்வளவு தூரம் மாறி விட்டீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்த மாற்றம் என்ற பரிசு இருக்கிறதே அது அப்படியே இருக்க வேண்டும்."

அந்தக் கடிதங்களைப் பற்றி மல்லிகாவோ பார்வதியோ ஆனந்தனிடம் எதுவும் கூறவில்லை. அவர்களுக்குக்கூட, அந்தக் கடிதங்களை எழுதியவன் நாவுக்கரசுதான் என்பது தெரியாது.


பட்டுப்பூச்சி.
தேன் சேகரிக்க
நறுமணமுள்ள புஷ்பங்களையே
தேடிச் செல்லுகிறது...
VOTE
தேர்தல்.
மக்கள்
அனைவரும்
சிறந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பர்...
நெசவாளிகள்
நேர்த்தியான ஆடைகளை நெய்ய
சிறந்த "விஜயேஸ்வரி" நூலையே
தேர்ந்தெடுப்பர்..
டிரேட் மார்க்
கோன் நூல்
20s, 60s, 80s, 2/20s
கதிர்கள் 12,180
டெக்ஸ். ரெ. 2951
விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் லிட்.,
புளியம்பட்டி. பொள்ளாச்சி.
தந்தி - கோன்ஸ்.
போன் - 164.
மானேஜிங் ஏஜண்ட்ஸ் - N. வேலாயுதசாமி நாயுடு & ஸன்ஸ்
SEKHAR


உயர்ந்த ரக
பிஸ்கோத்துகள்
சரசமான விலைகளில்
லில்லி
தரத்திற்கும் சுவைக்கும் ஏற்றது
லில்லி பிஸ்கட் கோ., பிரைவேட் லிட்.
கல்கத்தா-4
சென்னை, மைசூர், கேரளாவிற்குப் பூரண விநியோகஸ்தர்கள்
மெஸர்ஸ் ஜீ. அதர்டன் & கோ., பிரைவேட் லிட்., 11 & 12,
கேரளா, மைசூர் ராஜ்யத்திற்கு சப் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மெஸர்ஸ் மார்ஸ் கார்ப்பொரேஷன், 2/284, புது ரோடு,


அதிக சக்திவாய்ந்த இந்த பம்புகள் மிக ஆழமான ஊற்றுகளிலிருந்து தண்ணீரை வெகு சுலபமாக இழுக்கிறது
ஓவர்ஹெட் டாங்கி அவசியமில்லை
ஆழமான குழாய்க் கிணறு அல்லது சாதாரண கிணற்றிலிருந்து அதிக உயரக் கட்டிடத்திற்குத் தாராளமாகத் தண்ணீர் சப்ளை செய்ய தானே இயங்கும் சக்திவாய்ந்த ஒரு மையர்ஸ் அல்லது வாஸ்ப் பம்பு இருக்கிறது. பம்புகள் தயாரிப்பதில் 80 ஆண்டுகளுக்குமேல் சிறந்த அனுபவமுள்ளவர்களால் இந்த தானே இயங்கும் பம்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயம், கைத்தொழில் ரயில்—பாதைகள் கிராம தண்ணீர் சப்ளை திட்டங்கள், முனிசிபாலிட்டிகளின் உபயோகத்துக்கு அல்லது தீ அணைப்பு மற்றும் சாதாரண வீட்டு உபயோகத்துக்கு இவைகள் நிச்சயமாக நம்பக் கூடியது.
Myers
or
Wasp
மையர்ஸ் அல்லது வாஸ்ப் பம்புகள்
விற்பனை, ஸ்பேர்கள், திறமையான சேவை
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
330, தம்பு செட்டித் தெரு, சென்னை-1
பம்புகள் அமைப்பதில் 80 ஆண்டுகளுக்கு மேல் சிறந்த அனுபவமுள்ளவர்கள்

குஜராத்திற்கு விஜயம் செய்யுங்கள்

எமது ராஜ்ஜியத்திற்கு
விஜயம் செய்வது - விடுமுறையிலோ
உல்லாசப் பிரயாணத்திலோ,
அல்லது சிங்கங்களை காண்பதற்கோ
அல்லது வியாபார நிமித்தமோ
எக்காரணமாயினும், -
மகிழ்ச்சியை அளிக்கும்.



ஷெட்ருன்ஜய ஜைன கோவில்கள்
பலிடானவில் அனேகம் உள்ளன.
அங்கே இளமையிலும்
பேரறிவுபெற்ற
ஜைன சாதுக்கள் தங்கி ஜைன சமய
சொற்பொழிவுகள் ஆற்றுகிறார்கள்.
சுமார் 863 ஆலயங்கள் உள்ள
பலிடானு நகரத்தில்,
பதினோராவது நூற்றாண்டைச் சார்ந்த
கோவில்களைப் பார்ப்பது
யாத்ரிகர்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும்,
மதிப்பிட முடியாத விலையுயர்ந்த
கோவில் ஆபரணங்களை,
விசேஷ அனுமதி பெற்று பார்க்கலாம்.

இதர விவரங்களுக்கு :

டைரக்டர் ஆப் இன்பர்மேஷன்
குஜராத் கவர்ன்மெண்ட்
சசிவாலயா
ஆமதாபாத் – 15

MAX FACTOR

creates the face powder for that flawless finish!

in dazzling sunlight

Max Factor Face Powder keeps you looking lovely, fresh, cool all day...even in warm weather. Never looks "heavy" or over made-up!

in glowing candlelight

you look radiant, when you puff on Max Factor Face Powder. Perfectly blended complexion tones never look harsh or "tired", even in shadowy candlelight.




ORIENT COSMETICS PRIVATE LTD. MADRAS • BOMBAY


DISTRIBUTOR:

T. T. KRISHNAMACHARI & CO.,

MADRAS · BOMBAY · CALCUTTA · DELHI



THE INDIAN BANK LTD.
ESTD 1907
இந்தியன் பாங்க்
லிமிடெட்
ரிஜிஸ்டர்டு ஆபீஸ், இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்
சென்னை -1
கிளைகள் :
சென்னை நகரம் : [21 கிளை அலுவலகங்கள் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.]
மற்றும் சென்னை, மைசூர், ஆந்திரா கேரளா, பம்பாய், புது டில்லி, கல்கத்தா ஜெம்ஷெட்பூர் முதலிய பிரதேசங்களில் நற்பணியாற்றிவரும் 116 கிளைகள்
சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர் பினாங்கு, கொழும்பு முதலிய இடங்களில் அந்நிய நாட்டுப் பிராஞ்சுகள் உள்ளன
லண்டன், நியூ யார்க் ஆகிய இடங்களில் கரஸ்பாண்டண்டுகள் உள்ளனர்
● ரெக்கரிங் டிபாசிட்டுகள்
● 3% வட்டி அளிக்கும் சேவிங்ஸ் பாங்க்
● 4% வட்டி ஈட்டும் குறுகிய கால டிபாசிட்டுகள்
● 5% வட்டி அளிக்கும் 5 வருட டிபாசிட்டுகள்
மற்றும் இதர பாங்கிங் அலுவல்கள்— அந்நிய நாட்டுப் பரிவர்த்தனை உள்பட.
விவரங்களுக்கு அருகாமையில் உள்ள இந்தியன் பாங்க் கிளை ஒன்றை அணுகவும்
G. S. சுந்தரம், காரியதரிசி


மைல்கள்
பல
மைல்கள்
செல்ல
பாத அணி
Malu
மாலு
அரசினர் பாத அணி நிலையம்
பெரம்பூர், சென்னை.


நீடித்த நறுமணம்
மனத்தை மயக்கும் "பிரியாவின்"
கனவு உலக நறுமணம்,
காலம் விளைக்கும் கொடிய முதிர்ச்சியை
எதிர்த்து, இளமையின்
இன்ப நினைவுகளை திரும்ப அளிக்கிறது.
பிரியா
பெங்கால் கெமிகல்
கல்கத்தா - பம்பாய் - கான்பூர்
தென்னிந்தியாவுக்குப் பூரண விநியோகஸ்தர்கள்
ஆர். எல். கௌடர் அண்டு கம்பெனி, 59, பந்தர் தெரு, சென்னை-1


பாரதி ஸ்பெஷல் பார் சோப்
BHARATHI
BHARATHI BAR SOAP
சிக்கனமாக உபயோகிக்கலாம் பருத்தி, சில்க்,
ரேயான், மற்றும் எல்லாவித ஆடைகளையும்
சலவை செய்ய மிகவும் சிறந்தது.......
பாரதி சோப் ஒர்க்ஸ், சேலம்-2.
மதராஸ் ஸ்டேட் டிஸ்டிரிபியூடர்ஸ்: பாரதி டிரேடிங் கம்பெனி, சேலம்-2.


சொல்லியா தெரியவேண்டும்?
மீன்குஞ்சுக்கு நீந்தவும்
குதிரைக்குட்டிக்கு ஓடவும்
வானம்பாடிக்குப் பாடவும்
பெண்ணுக்கு நாணவும்
வாலிபருக்கு ரத்தினம் பொடி போடவும்
சொல்லியா தெரியவேண்டும்!
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, மதராஸ் - 21
S.R.ஞானம் பட்டணம்பொடியும் எமது தயாரிப்பே



'KF' MONO BLOCK SET

அனைவருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

கார்த்திகேயா

மோனோபிளாக் செட்டுகள்

உறுதிக்கும் உழைப்புக்கும்
மிகச் சிறந்து விளங்குவது

3 HP முதல் 10 HP வரை

எல்லா சைஸ்களிலும்
தயார்செய்து வருகிறோம்

கார்த்திகேயா பவுண்டரி

புலியகுளம் ரோடு - பாப்பநாயக்கன்பாளையம் - கோயமுத்தூர்


தந்தி: REASONABLE — தபால் பெட்டி எண் 207 — போன்: 2545

விற்பனை கிளைகள்: 34, தம்பு செட்டித் தெரு, சென்னை-1 - 172-A, பாண்டி ரோடு, விழுப்புரம்

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஆதரவாளர்கள், அன்பர்கள், பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

பாரதத்தின் தலைசிறந்த பிரம்புத் தொழிற்சாலையான ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனிக்கு ஒருமுறை விஜயம்செய்து தங்கள் தொடர்ந்த ஆதரவை அளிக்கக் கோருகிறோம்.



ஸ்ரீ ஜெயபாரதம் & கோ., (Regd.) 182, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14


டெலிபோன் நெ. 85206 — (ரிஜிஸ்டர்ட் நெ. 174558) — தந்தி: "அகிலம்"

காட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பப்படும். தங்கள் விலாசத்தை தெளிவாக எழுதவும்


தீபாவளி
இந்த மகிழ்ச்சி நிறைந்த
நன்னாளில் பிரகாசமான
புதிய கைத்தறி
ஆடைகள் உங்கள்
இல்லங்களில்
குதூகலத்தை அளிக்கட்டும்.
அகில இந்தியக் கைத்தறி போர்டு
கைத்தறித் துணிகள்

தீப ஒளி வீசும் தீபாவளி நன்னாளில் எங்கள் நல் வாழ்த்து

அன்புடன் மக்கள் பாய்ச்சும் ஆதரவென்றும் நீரால் என்றுமே செழித்து நிற்க உங்கள் ஆசி விரும்புகிறோம். உங்கள் சேவையே எங்கள் செல்வமெனக் கருதி, வியாபாரமும்



ஸ்தாபகர்: திரு S. G. ஜெயராஜ் நாடார்

நேர்மையும், அடிப்படையாகக் கொண்டு எங்கள் ஸ்தாபகர் வகுத்த வழியே பின்பற்றி நிற்கக்கண்ட எங்கள் ஸ்தாபனங்கள் மூலம் சிறந்த தொண்டாற்றப் பாடுபடுவோம்.

தென்னகத்தில் மிகச் சீருடன் விளங்கும் நல்லோர் நல்முறை வகுத்து நாளும் நடத்தப்படும் ஸ்தாபனங்கள்:

கொடைக்கானல் மோட்டார் யூனியன் பிரைவேட் லிட்.

கொடைக்கானல் - கொடை ரோடு - மதுரை - திண்டுக்கல் - பெரியகுளம் - பழனி
புதுக்கோட்டை - திருச்சி - காரைக்குடி - திருமங்கலம் - சாத்தூர் - திருநெல்வேலி

S. G. ஜெயராஜ் நாடார் & சன்ஸ்

ஆட்டோமொபைல் & ஸ்போர்ட்ஸ் டீலர்கள்

தந்தி: "YESCEEJAY" 14, ஓர்க்ஷாப் ரோடு, மதுரை போன்: 513

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட். கம்பெனியின் - பெட்போர்டு, செவர்லே டிரக், சேஸிஸ்
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவுக்கு விநியோகஸ்தர்கள்

அம்பாஸடர் கார் திருநெல்வேலி ஜில்லாவுக்கு டீலர்கள்

ஆட்டோமொபைல் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
லாம்ப்ரெட்டா ஸ்கூட்டர் மற்றும் ஆட்டோ சைக்கிள்

அடிஸன் பெயிண்ட்ஸ் & கெமிக்கல்ஸ் கம்பெனியின் – ஸ்பார்ட்டன் பெயிண்டுகள்
மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்

பர்மாஷெல் ஏஜண்டுகள்: விருதுநகர், சாத்தூர், சிவகாசி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன்கோவில்

S. G. ஜெயராஜ் நாடார் & சன்ஸ் பிரைவேட் லிட்.

ஆட்டோமொபைல் இன்ஜினியர்ஸ் & பாடி பில்டர்ஸ்

உரிமையாளர்கள்:


ஜெயா டயர் ரீடிரெடிங் ★ **ஜெயா டாக்கீஸ் : ஜெயா பிரஸ்**

FULL CIRCLE MOULD TYRE RETREADERS — பெரியகுளம் - மதுரை ஜில்லா - போன்: 11

ஹாலிடே ஹோம் - கொடைக்கானல் ★ சந்திரா ரைஸ் மில் - அம்மையநாயக்கனூர்

இப் புதிய மாடலைப் பார்த்தீர்களா?

ராயல் என்பீல்ட் பிரின்ஸ் 150



சிறப்புமிக்க அம்சங்கள்:

- புதிய நேர்த்தியான அமைப்பு. கம்பீரமான தோற்றம்; இரட்டை வர்ணப் பூச்சு.
- புதிய உறுதியான பிரேம். நமது சாலைகளின் நிலைமைக்கு ஏற்ற அமைப்பு.
- பாதுகாப்பிற்கு முழுவதும் மறைந்துள்ள புதிய செயின் மூடி.
- புதிய, பெரிய இரட்டை ஆசனம். அதோடு உடைமைகளை வைக்கும் பெட்டி.
- புதிய உருவில் அமைந்த பெரிய பெட்ரோல் டாங்க். 12 லிட்டர் பெட்ரோல் கொள்ளும்.
- புதுவகை ஆழமான மட்கார்டுகள், மழை நீரை அதிகம் அள்ளித் தெளிக்காதவை.

இந்தியா முழுவதும் 150 டீலர்கள் மூலம் விற்பனையும் சர்வீஸும் செய்யப்படுகின்றன

தயாரிப்போர்:
என்பீல்ட் இந்தியா லிமிடெட்
மதராஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
மதராஸ் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்—பெங்களூர்—டில்லி

JWT/RE-P-1401a

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publication Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10 Managing Editor, T. Sadasivam.

மதுரை மாநகர்(ச்) சிற்பம்

உலகம் முழுவதையும் எடை போட்டு நிறுக்க ஏதாவது தராசு உண்டா? தாராளமாக உண்டு என்கிறது மதுரையைப் பற்றிக் கூறும் பரிபாடல் என்னும் பழைய நூல்.

'உலகம் முழுவதிலும் உள்ள ஊர்களைத் தராசின் ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் மதுரையையும் வைத்துப் பாருங்கள். மதுரை மாநகரத்தின் எடைதான் அதிகமாக இருக்கும்'—என்று புகழ்கிறது பரிபாடல்.

உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகெலாம்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்

இப்படிப் பழைய புகழும், பழைய புகழால் வந்த புதிய புகழுமாகப் பெருமை பெற்றிருக்கிற மதுரைச் சிற்பங்களை ஓவியர் மணியம் வண்ண ஓவியங்களாக வரைந்தளித்திருக்கிறார்.

1. பிள்ளையார்

இந்தக் காலத்தில் எழுத்தாளர்களைப் பார்த்து அவர்கள் மேல் பொறாமை கொண்ட வேறு சில எழுத்தாளர்கள், 'நீர் என்ன பெரிய கொம்போ?' என்று கேட்கிறார்கள் அல்லவா? இந்தக் கேள்வியை எழுத்தாளர்களுக்கு எல்லாம் பிள்ளையார் சுழியாயிருக்கும் ஆதி எழுத்தாளரான திருவாளர் விநாயகப் பெருமானைப் பார்த்து, 'நீர் என்ன பெரிய கொம்போ?' என்று எவராலும் கேட்டுவிட முடியாது. ஏனென்றால் திருவாளர் விநாயகப் பெருமான் தம் கொம்பாலேதான் எல்லா விஷயங்களையும் எழுதியருளியதாக ஐதிகம். சந்தேகமிருந்தால் இதோ இந்த ஓவியத்தில் அவர் கைக் கொண்டிருக்கும் ஒடிந்த கொம்பைப் பார்த்துச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள். பத்துக் கைகளோடு கொம்பால் எடுமுறிந்த அவசரத்தில் காட்சி தரும் இந்தக் கல்யாண விநாயகரை மதுரைக்குப் போய்ப் பார்க்க இயலாதவர்கள் இந்த மலரிலேயே பார்த்துத் தீபாவளிப் புண்ணிய தினத்தில் தாராள மனத்தோடு நாலு தோப்புக்கரணமும் போட்டு வைக்கலாம்.

2, 3. தெய்விகக் காட்சிகள்

தேவ தேவர்கள் பூங்கரம் ஆரி நல்கச்
செழுமணித் தாளதாமரைப் பாதகோமளம் பதியப்
பூத மாகண முழங்கப் பொன்விரல் மத்தளமாடப்
புரிகுழல் இசையொலி பூதல மீதெழப் பண்களின்
நாத நாடிகள் நடந்திட நடம்புரி தேவநாயக!
நளின நாயகி நின்னைக் காணும் ஆவலால்
மீறிட நடந்தவோ பதிந்தவோ தொடர்ந்தவோ எனவே
நலுங்கிடை நுணங்கிட எதிர்ப்பவர் வணங்கிட நடந்தனள்.

4. மயில்வாகனன்

''இந்தக் காலத்திலும் மயில்களைப் பார்க்கிறீரே, சுவாமி! இவ்வளவு அழகாக இவ்வளவு நிறைவாகத் தோகைகளோடு கூடிய மயிலைப் பார்த்திருக்கிறீரா?''

''இல்லை, ஐயா! இந்தக் காலத்து மயில்களுக்கு அழகாயிருப்பதற்குக்கூடச் சோம்பல். அதனால்தான்.........''

''தப்பு சுவாமி! காரணம் அதில்லை! இங்கே நமது கண்களுக்குத் தெரிகிற மயில் அழகின் உருவகமான முருகக் கடவுள் ஏறியிருப்பதனாலேயே அழகு மிகப் பெற்றிருக்கிறது. மதுரையில் உள்ள சில முருகனில் நீர் இவ்வளவு வர்ணங்களைக் காண முடியாது. ஓவியரின் சாதுரியத்தில் முருகன் வண்ணக் களஞ்சியமாக எப்படிப் பொலிகிறான், பாரும். முருகனை எப்படி வரைந்தாலும் அழகுதான் சுவாமி!''

''அது சரி! எனக்கொரு சந்தேகம். இந்தச் சிற்பங்களுக்கெல்லாம் 'மதுரை மாநகர் சிற்பங்கள்' என்று பெயரிட்டிருக்கிறீர்களே? சிற்பங்கள் உயிர் பெற்று நகர்ந்து வருவன போல அமைந்திருப்பதனால்தான் அந்தப் பெயரை வைத்தீரா?''

''சரியாகக் கண்டு பிடித்து விட்டீரே! மதுரை மாநகர்(ச்) சிற்பம் என்ற தலைப்பில் 'ச்' இல்லாததே சௌகரியமாய்ப் போயிற்று! 'சிற்பங்கள் நகர்ந்து வருவன போல் அழகாயிருக்கின்றன' — என்றும் ஓர் அர்த்தம் புரியட்டுமே!''

இப்போதாவது சந்தேகம் தீர்ந்ததோ, இல்லையோ? இவ்வளவு அழகான சிற்பங்கள் உள்ள மதுரை நகர் உலகத்தை எல்லாம் விடப் பெருமை மிகுந்தது என்று பரிபாடலில் கற்பனை செய்தது பொருத்தமானதுதானே?

கல்கி தீபாவளி மலர் ௵ 1961

பாதையோரத்திலே

பனி நிறைந்த மலைப்பகுதிகளில் வழிப் பயணம் செய்வோருக்கு நடுவழியில் தென்படும் இந்தச் சிறு குடில்கள் கோவில்களைப் போலப் பயன் தருபவை.

வழிப் பயணத்துக்கு உறுதியான மனம் வேண்டுமென்று குறிப்பாகச் சொல்வது போலப் பாதை மேல் ஊன்றுகோலுடன் காட்சி தரும் பெரியவர், ஏதோ ஒரு வழியில் செல்வதென்று புறப்பட்ட பின் அந்த வழியின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாதென மறுப்பது ஆண்மையில்லை என்பது போலப் பொதி சுமந்து நிற்கும் விலங்கு, கூடை நிறைய எதையோ, விற்பதற்காக வைத்திருக்கும் நங்கை, குழந்தையைக் கொஞ்சும் இன்பம், எதையோ தாங்க எதிர் பார்த்திருக்கும் சுமைதாங்கிப் பலகை, இவையெல்லாம்-முடிவற்ற வாழ்க்கை வழியின் சின்னஞ்சிறு அடையாளங்களைப் போலத்தோன்றவில்லையா? தோன்றவில்லையானால் மறுபடியும் தத்துவக் கண் கொண்டு பாருங்கள். சிந்தியுங்கள். தோன்ற வேண்டியது தோன்றும்.

கல்கி தீபாவளி மலர் 1961





பிள்ளைத் தமிழ் அமுதம்

தமிழ் மொழிக்கு வளந் தரும் இலக்கியச் செல்வங்களாக இலங்குவனவற்றில் சிறு பிரபந்தங்கள் சிறப்பு வாய்ந்தன. சிறப்புவாய்ந்த இச்சிறு பிரபந்தங்களின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அழகுடைய பொருளுக்குக் கணக்கும் எல்லையும் இல்லை யென்று நிரூபிப்பது போலப் பிரபந்தங்களின் வகை மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு—தீபாவளி மலரில், 'பிள்ளைத் தமிழ் அமுதம்' என்னும் இப்பகுதியைப் படித்துப் பார்ப்பதனாலோ அல்லது முதலில் படங்களைப் பார்த்து விட்டு அப்புறம் படிப்பதனாலோ, —எப்படியானாலும் சரி, நம்முடைய நேயர்களுக்கு இரட்டை மடங்கு இலாபம் உண்டு. தமிழ் மொழியில் நிரம்பி யிருக்கும் ஏராளமான பிள்ளைத் தமிழ் நூல்களை ஒரு முறை மேல் நோக்காகப் படித்த பயனோடு அவற்றின் காட்சிகளைக் கண்குளிரப் பார்த்து அநுபவித்த பயனும் அல்லவா கிடைக்கிறது? குழந்தை இலக்கியத்துக்கு மரபு வழி வந்த முதல் நூல் என்று பிள்ளைத் தமிழைக் கூறலாமா என்ற சந்தேகத்தை மூட்டை கட்டி ஒரு புறமாக வைத்து விட்டு இனி மேல் குழந்தை இலக்கியத்தையே ஏன் 'பிள்ளைத் தமிழ்' என்று அழைக்கலாகாது என்ற புதிய மூட்டையை அவிழ்க்கும் சிந்தனைக்கு நாம் வந்து சேரலாமே! பிள்ளை என்பது ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவாக ஒரு பருவத்தை உணர்த்தி நிற்கும் வார்த்தை. 'பிள்ளைத் தமிழ்' என்பதைக். குழந்தை இலக்கியத்துக்குப் பெயராக்கும் போது 'பிள்ளைகள் படித்து உணர ஏற்ற தமிழ்'—'பிள்ளைகளுக்கு உரிய தமிழ்' என்று விருப்பம் போல் அழகுறப் பிரித்துப் பொருள் சொல்லலாமே. தீபாவளித் திருநாளன்று குழந்தை இலக்கியத்துக்கு நல்ல தமிழ்ப் பெயர் ஒன்று கிடைத்த மகிழ்ச்சியும் இப்போது ஏற்படுகிறதே!

தமிழ்மொழியில் உள்ள இப்பிரபந்தங்களில் கவி யின்பமும், காட்சி யின்பமும், ஒருங்கே இணைந்தது பிள்ளைத் தமிழ் என்பது. இந்தக்காலத்தில் குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்று வழங்கும் தொடர்களைக் குழந்தைகளுக்கான இலக்கியம், சிறுவருக்கான இலக்கியம் என்றே விரித்துப் பொருள் செய்து கொள்ளலாம். அல்லது குழந்தைகளையும், சிறுவர்களையும் நாயகர்களாகக் கொண்ட இலக்கியம் என்றும் பிரிக்கலாம். ஆனால் பிள்ளைத்தமிழ் என்பதையோ பிள்ளையை நாயகனாக உடைய தமிழ் என்று அழகுற விவரிக்க முடியும். பிள்ளைமை என்பது மனித வாழ்வில் ஓர் அழகிய பருவம். ஆண், பெண் இருவர்க்கும் பொதுவான பருவம் இது. பிள்ளைத்தமிழ் இளமைத் தமிழ், இன்பத் தமிழ், வளமைத் தமிழ், வலிமைத் தமிழ். குழந்தைப் பருவத்தைப் பொருளாகக் கொண்ட இலக்கியம் எதுவானாலும் அதில் கவர்ச்சியும் கற்பனைகளும் வனப்புடையனவாக வாய்க்கும். பிள்ளைத்தமிழ், தன் பாட்டுக்கு நாயகனாகவோ, நாயகியாகவோ எடுத்துக் கொண்ட பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியைக் குழந்தைமை மாறாப் பருவத்துப் பிள்ளையாகப் பாவித்துக் கொண்டு பாடப்படும் பிரபந்தமாதலால் தனக்கெனத் தனி அமைப்பும், அழகும் உடையதாயிருக்கிறது. அரசர்களையும், அரசிகளையும் பிற பெருமக்களையும் குழந்தைகளாகப் பாவித்துப் பாடிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களைக் காட்டிலும், தெய்வங்களையே குழந்தைகளாகப் பாவித்துப் பாடிய பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் நாம் தமிழில் மிகுதியாயுள்ளன. கவிதைகளைக் கூடத் தெய்வத்துக்கே முதலில் படைக்கும் உயரிய தமிழ்ப் பண்பை இது விளக்குகிறது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற பழமொழி பிறந்த தமிழ்த் திருநாடு அல்லவா இது? குழந்தைகளையே தெய்வங்களாகப் போற்றும் சமுதாய வாழ்வும் தெய்வங்களையே குழந்தைகளாகப் பாவித்து நூல் இயற்றிய இலக்கிய வாழ்வும் நினைக்க நினைக்க நமக்குப் பெருமையளிக்கும் பழமைகளாக இருக்கின்றன. தெய்வத்தைப் போற்றுவது போலக் குழந்தையையும் குழந்தையைப் போற்றுவது போலத் தெய்வத்தையும் போற்றக் கருதிய நாடு இது. குழந்தை இலக்கியத்தின் ஆதி முதல் நூல் பிள்ளைத்தமிழ் என்று கொண்டால் தவறு இல்லை. பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்துக்கு விளக்கம் மேலே கூறிய பொருள் செறிந்த பழமொழிதான். அதைவிட அழகிய விளக்கம் வேறு அமையாது. எதைக் கண்டாலும், எதை எண்ணினாலும், எதைப் பேசினாலும், எதை உணர்ந்தாலும் தெய்வத்தோடு இணைத்தே கண்டு நினைந்து பேசி உணரும் நமது மரபுப் பெருமையை இது விளக்குகிறது.

பிள்ளைத் தமிழ்களில் ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என்று இரண்டு வகை உண்டு. பாட்டுக்குத் தலைமை பூணுவோர் ஆணாயின் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்ணாயின் பெண்பால் பிள்ளைத் தமிழ்.

பிள்ளைத் தமிழில் பத்துப் பருவங்கள் அமைந்திருக்கும். காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி காட்டுதல், சிற்றில், சிறு பறை, சிறு தேர் என்று குழந்தைமை நிலையிலிருந்து படிப்படியாக வளரும் பருவங்களையும், பருவச் செயல்களையும் வகுத்துக் கொண்டு ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாட்டு அமைய மொத்தம் நூறு பாட்டுக்களால் பிள்ளைத்தமிழ் நிறைவுறும். பெண்பால் பிள்ளைத் தமிழ் ஆனால் சிற்றில், சிறு பறை, சிறு தேர் என்னும் கடைசி மூன்று பருவங்களுக்குப் பதிலாக அம்மானையாடல், நீராடல், ஊசலாடல் (ஊஞ்சல் ஆடல்) ஆகிய வேறு வகை நிலைகளை அமைத்துப் பாடுவார்கள்.

தமிழில் தனியான பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களைத் தவிர ஆழ்வார்களின் செய்யுட்களில் பிள்ளைத் தமிழ்ச் சாயல்கள் அமைந்த பாடல்களும் உண்டு. பாரதியாரின் கண்ணன் பாட்டைக் கூட அதில் ஒரு சில பகுதிகளுக்காகவாவது 'மறுமலர்ச்சிப் பிள்ளைத் தமிழ்' என்று கூறலாம். தமிழ் மொழியிலுள்ள பல் வேறு தெய்விகப் பிள்ளைத் தமிழ்களிலிருந்தும் ஒவ்வொரு காட்சியாகத் தொகுத்துப் 'பிள்ளைத் தமிழ் அமுதம்' என்ற இந்தச் சித்திரக் கோவையைக் காட்சிக் காவியமாக வழங்கியுள்ளார் ஓவியர் வினு. பேரழகு மிக்க இந்தப் படங்களைப் பார்த்தபின் இவற்றைப் பிள்ளைத் தமிழ் என்பதா, ஓவியத் தமிழ் என்பதா என்றெண்ணி வியக்கிறோம். பார்க்கின்றவர்களுடைய கண்களில் எல்லாம் தம் தொழில் நயம் நிற்கச் செய்வதன் காரணமாகச் சித்திரக்காரர்களுக்குத் தமிழில் 'கண் உள் வினைஞர்' என்று ஒரு பழைய பெயர் உண்டு. பிள்ளைத் தமிழ்க் காட்சிகளை வரைந்திருக்கும் வினு அவர்களுடைய ஓவியத் தமிழின் நயத்தை இங்கே இந்த எட்டுப் பக்கங்களிலும் பார்க்கும்போது அந்தப் பழைய பெயர்தான் நம் நினைவுக்கு வருகிறது.

1. முதல் படம் காப்பு என்னும் பிள்ளைத் தமிழ்ப் பருவத்தைச் சித்திரிக்கிறது. குழந்தை பிறந்த ஏழாவது நாளிலோ, ஒன்பதாவது நாளிலோ 'காப்பு அணிதல்' என்ற வழக்கம் தமிழ் நாட்டில் உண்டு. குழந்தைக்கு ஒரு தீங்கும் நேராமல் எல்லாத் தெய்வங்களும் துணையிருந்து காக்க வேண்டும் என்று இறைஞ்சிக் குழந்தையின் கைகளிலும், கால்களிலும் காப்புக்களை அணிவார்கள். இதற்குக் காப்பணி என்று





பெயர் ஏற்பட்ட காரணமே இதுதான். காத்தருள வேண்டுமென்று தெய்வங்களை வேண்டிக் கொண்டு' இடப்படுதலால் காப்பணி விழா என்ற பொருளமைந்த பெயரை இது பெற்றது. காப்பணியும் பருவத்துக் காட்சியைப் பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தத்தில் இருந்து வரைந்தளித்திருக்கிறார் ஓவியர். பக்தர்கள் பலருக்கு அல்லும்பகலும் அனவரதமும் காப்பாக இருக்கும் முருகப் பெருமானுக்கு உமை காப்பணியும் காட்சியை முதல் ஓவியத்தில் காண்கிறோம். காப்பணிதல் இரண்டாந் திங்களில் நடைபெறும் சடங்கு என்றும் சிலர் கூறுவர்.

2. பிள்ளைத் தமிழின் இரண்டாவது நிலையாகிய செங்கீரை (ப் பருவம்) என்பது பொருள் தெரியாத குதலை ஒலிகளைக் குழந்தை மிழற்றும் பருவத்தைக் குறிப்பது. இளங் குழந்தை 'க்' 'இங்கா' என்பன போல மிழற்றிக் கூறும் ஒலிகளைக் கேட்டுப் பெற்றோர் மகிழும் பருவம் இது. 'செங்கீர்' என்பது சொல்லிற்குரிய ஒலி அமைப்பில்லாததைக் குறிக்கும். இவ்வொலியின்மை பிறக்கும் பருவத்துக்குச் செங்கீரைப் பருவம் என்று பெயர். குழந்தை ஒரு காலை மட்டும் உதைத்துக் கொண்டு ஆடும் ஆட்டுக்கும் செங்கீரை என்று ஒரு பெயர் உண்டு. 'ஒரு தாள் உந்தி ஆடுக செங்கீரை' என்றும் பாடியிருக்கிறார்கள். 'செங்கீரை என்பது ஒரு நிருத்த விசேடம்' என்று பெரியவாச்சான் பிள்ளை உரை விளக்கம் கூறியுள்ளார். இங்கு இக்காட்சி மங்களாம்பிகை பிள்ளைத் தமிழிலிருந்து வரைந்தளிக்கப்பட்டுள்ளது.

3. பிள்ளைத் தமிழின் மூன்றாவது பருவம் தாலாட்டு. இப்பருவத்துக்குத் தாலப் பருவம், தால் என்று வேறு பெயர்களும் இருக்கின்றன. குழந்தைகளைத் துயிலச் செய்யும் தாய்மார்கள் பாடியும், நாவசைத்துக் குரல் எழுப்பியும் தொட்டிலேயோ, தூளியையோ ஆட்டுதல் இப்பருவ நிகழ்ச்சி. இப்பருவத்துக்கு உரிய பாடல்கள் 'தாலோ, தாலேலோ' என்னும் அநுகரண ஓசையுடன் முடிவடையும். இங்கு இப்பருவக் காட்சி தென்திருப்பேரை மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழிலிருந்து அளிக்கப்படுகிறது.

4. குழந்தை எழுந்து உட்கார்ந்து செந்தாமரை மொட்டுப் போன்ற தன் இரு கைகளையும் சேர்த்துக் கொட்டுவதற்குச் 'சப்பாணி கொட்டுதல்' என்று பெயர். சிறிய பவழ உதடுகளில் குமிண் சிரிப்பு மலர இரு கையும் இணைத்துக் குழந்தை சப்பாணி கொட்டும்போது சுற்றி நின்றுகாணும் பெற்றோரும் மகிழ்ச்சி மிகுதியால் தாமே குழந்தைகள் போலாகி விடுகின்றனர். இக்காட்சி வைத்தீசுவரன் கோவில் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழிலிருந்து வரைந்து அளிக்கப்படுகிறது.

5. பிள்ளைத் தமிழின் ஐந்தாவது நிலை முத்தப் பருவம். தாய் முதலியவர்கள் பிள்ளையை முத்தமிடும்படி வேண்டிக் கூறுவது இப்பருவ நிகழ்ச்சி. முத்தமிடுதலாவது குழந்தையின் வாயிதழ் சுவைத்தல். இக்காட்சி மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழிலிருந்து வரைந்தளிக்கப்படுகிறது. பின்னணியிலே திருவேங்கடமுடையானின் இராமாவதார அவசரமும் வரையப் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

6. குழந்தை எழுந்து நடக்கத் தொடங்கும் பருவத்தில் தாய், தந்தை, தாதிப் பெண்கள் முதலியோர் எட்ட நின்று தம்மிடம் வருமாறு குழந்தையைக் கைநீட்டி அழைத்து வேண்டுவார்கள். பிள்ளைத் தமிழில் இப்பருவத்துக்கு வருகைப் பருவம் என்று பெயர். இங்கு நமக்கு இக்காட்சி செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழிலிருந்து கிடைக்கிறது. பிள்ளைத் தமிழின் ஆறாவது பருவம் இது.

7. பிள்ளைத் தமிழின் ஏழாவது பருவம் அம்புலிப் பருவம். 'புலவர்க்கு அம்புலி புலி' என்ற பழமொழி இதைப் பாடுவதில் உள்ள அருமைப்பாட்டை விளக்கும். தாய், செவிலித் தாய், தாதியர்கள் போன்றோர் குழந்தையை எடுத்துக் கொண்டு வானத்திலுள்ள நிலவைக் குழந்தைக்குக் காட்டிக் குழந்தையுடன் விளையாட வருமாறு அதனை அழைப்பது அம்புலிப் பருவம். அம்புலி என்ற சொல்லுக்கு அழகிய நிலவு என்று பொருள். இங்கு வரையப்பட்டுள்ள அம்புலிப் பருவக் காட்சி மயிலம் முருகன் பிள்ளைத் தமிழைச் சேர்ந்தது.

8. பிள்ளைத் தமிழுக்கு உரிய தலைவியாகிய குழந்தையை அருகில் வைத்துக் கொண்டு கன்னிப் பருவம் அடைந்த இளம் பெண்கள் சூழ அமர்ந்து முத்துக்களாலும், பவழங்களாலும் செய்த அம்மானைக் காய்களைத் தூக்கி எறிந்து பிடித்து விளையாடுதல் இப்பருவ நிகழ்ச்சி. இது பெண்பால் பிள்ளைத் தமிழுக்கே உரியது. இக்காட்சி இங்கு மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலிருந்து வரையப்பட்டிருக்கிறது.

9. பிள்ளைத் தமிழுக்கு உரிய பெண் குழந்தையைத் தோழிப் பெண்கள் நீராட வருமாறு அழைப்பார்கள். இந் நிகழ்ச்சிக்கு நீராடற் பருவம் என்று பெயர். இதுவும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு மட்டுமே உரியது. இங்கு இக்காட்சி குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழிலிருந்து வரையப்பட்டுள்ளது. படத்தில் பின்னணியில் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரிய ஊசற் பருவ நிகழ்ச்சியும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

10. பிள்ளைத் தமிழுக்கு உரிய பிள்ளைக்கு நான்காம் வயது நடைபெறும் போது அச்சிறுவன் மரத்திற் புனைந்து செய்யப் பட்ட அலங்காரச் சிறு தேரை வீதியில் இழுத்து விளையாடுவான். அதைத் தாய் தந்தையர் கண்டு மகிழ்வர். சிறுதேர் இழுத்தல், சிறு பறை கொட்டுதல், வீதியில் சிறு பெண்கள் இயற்றும் மணல் வீட்டைக் காலால் உதைத்து அழித்தல் ஆகிய இந்நிகழ்ச்சிகள் யாவும் ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கே உரியவை. இக்காட்சிகள் யாவும் திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதர் பிள்ளைத் தமிழிலிருந்து இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

பொது வாழ்விலும் சரி, இலக்கிய வாழ்விலும் சரி முன்பு உள்ளது மாறுவதைப் புரட்சி என்கிறோம். முன்பு உள்ளது வளர்ச்சி பெறுவதைச் சிறப்பு என்கிறோம். நம்முடைய பழம் பெரும் இலக்கியங்கள் காலகதியில் இந்த இரண்டு நிலைகளையுமே அடைந்திருக்கின்றன. பழைய பிரபந்தங்கள் சில புதிய உலகத்துக்கு ஏற்ற உருவும் அமைப்பும் பெற்று மாறியிருக்கின்றன. இன்னும் சில புதிய அழகுகளைப் பெற்று வளர்ந்திருக்கின்றன. இடைக் காலத்தில் தமிழ் மொழிக்குக் கிடைத்த இந்தப் பிரபந்தங்கள் யாவும் தெய்வ பக்தியையும் தலங்களையும் நிலைக்களனாகக் கொண்டே தோன்றியவை என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். குற்றாலத்தின் பெருமையைத் திருக்குற்றாலக் குறவஞ்சியும், தஞ்சையின் பெருமையைச் சரபேந்திரபூபாலக் குறவஞ்சியும் எவ்வளவு அழகாகக் கூறியிருக்கின்றன. பொருநை நதியும் மற்ற இரண்டு நதிகளும் கூடும் ஆற்றுக் கூடலிலுள்ள வேளாண்மை வாழ்க்கையை முக்கூடற் பள்ளு என்ற பிரபந்தத்தில் புனைந்து கூறியிருப்பதைவிட அழகாக இனிமேல் எந்தக் கவியாவது கூற முடியுமா?

மானிடத்துக்கும் தெய்விகத்துக்கும் பாலமிடுவது போல இந்தச் சிறு பிரபந்தங்கள் தமிழ் மொழிக்கு வாய்த்த வற்றாத இலக்கியக் களஞ்சியங்களாகும்.

ஆண், பெண், இரண்டு வகைப் பிள்ளைத் தமிழுக்கும் உரிய எல்லாக் காட்சிகளும் இந்தப் பகுதியில் குறைவின்றி வருமாறு வரையப்பட்டுள்ளன. பத்துப் பிள்ளைத் தமிழ்களிலும் சேர்த்து மொத்தம் ஆயிரம் கவிதைக் கனிகள். ஆயிரம் கவிதைக் கனிகளைச் சுவைப்பதற்குச் சமமான மகிழ்ச்சி இந்த அற்புத ஓவியங்களைக் கண்டு களிக்கும்போது உண்டாகிறது. 'பிள்ளைத் தமிழ் அமுதம்' என்ற பெயர் இதற்கு வாய்த்தது மிகவும் பொருத்தமானது. 'உண்ண உண்ணத் தெவிட்டாமை' என்னும் குணம் அமுதத்துக்கு மட்டுமே உரியதென்று இதுவரையில் நினைத்துக் கொண்டிருந்தோம்.

இதோ, இந்தப் படங்களுக்கும் அமுதத் தன்மையாகிய அந்தக் குணம் அமைந்திருக்கிறதைப் பாருங்கள். இந்தப் பிள்ளைத் தமிழ் ஓவியங்களை அடுத்த தீபாவளி வரை—ஏன் அதற் கப்பாலும் அலுக்காமல் சலிக்காமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல் இருக்கிறதே! பிள்ளைத் தமிழ்க் காட்சிகளை இப்படிக் கொள்ளை அழகுடன் வரைந்தளித்திருக்கும் ஓவியத் தமிழரை வாழ்த்திக் கொண்டே படங்களைக் கண்டு மகிழ்வோமாக!

பிள்ளைத் தமிழின் பருவங்களை நூல்களில் அவற்றுக்கு அமைந்த முறைப்படியே வரையாமல் ஓவியங்களில் மாற்றியும் இணைத்தும் வண்ண அமைப்புக்கு ஏற்றபடியே வரைந்திருக்கிறோம். இந்த மாறுதலிலும் ஓர் அழகு இருக்கிறது. எல்லாவற்றையும் பொறுத்துக் காத்தருள வேண்டும் என்பது போலக் காப்புப் பருவத்தைத்தான் முதலில் வரைந்தாயிற்றே. அதற்கு அப்புறமும் கவலைப்படலாமா?


'தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த துறைத்தீந்
தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே'

என்ற குமர குருபரருடைய பிள்ளைத் தமிழ்த் தொடர்களையே பழைய பிரபந்தங்களை நோக்கிச் சூட்டும் புகழ்மாலையாகக் கருதி இந்தக் காவிய ஓவியங்களைப் போற்றியும் மகிழ்வோம்.

கல்லூரிப் பழக்கம் கல்யாணம் மட்டில்.....!



"என். ஸி. ஸி. பயிற்சி பெற்ற பெண்ணோ, இல்லையோ! அதுதான் பாண்டு வாசித்தவுடன் இப்படி ராணுவ நடை போட ஆரம்பிச்சுட்டா!"



Car Festival: Mylapore

Photo: D. I. Chunthamian

பாதாமி சித்திர மடல்

வண்டி ஓடத்தில் ஏறினால், ஓடம் வண்டியில் ஏறும் காலமும் வரும் என்று சொல்வார்கள். பேராசிரியர் கல்கி அவர்கள் தமது 'சிவகாமியின் சபத'த்தின் மூலம் கல்கி ஏடுகளில் வாதாபியை வெற்றி கண்டிருக்கிறார். அதற்கு மாறாக இந்தக் கல்கி மலரை வாதாபி வெற்றிகொண்டிருக்கிறது என்பதற்கு அட்டையில் காணும் வாதாபி வைகுண்டநாதனே சாட்சி.

இச் சித்திர மடலின் முதல் ஓவியமும் அந்த வைகுண்டநாதன் குஹாலயத்திலுள்ளதுதான். ஆனால் அதில் காணாத விஷ்ணுமூர்த்தியை இங்கு தாமே பிரதிஷ்டை செய்திருக்கிறார் ஓவியர் மணியம். சிற்பத்தில் காணும் திருமாலைப் போல் இவர் ஏகாங்கி யல்ல. நிலமடந்தையை அளித்து அவரைச் 'சீமான்' ஆக்கிய ஓவியர், இங்கு நாச்சியார் இருவரும் சூழ்ந்த நாயகனைச் சித்திரித்திருக்கிறார். இதைக் கற்பனை என்று எப்படிச் சொல்ல முடியும்? அதோ அந்தக் குகையின் மேற்புறத்தில் காணும் வித்தியாதரர்களின் கானமும், மதனவேள் இரதி இவர்களின் பார்வையும், ஈசன்உமை இவர்களது நோக்கும் வியர்த்தமாகப் போகக் கூடுமா? இதேபோல் உத்ஸவமூர்த்தங்களை அர்ச்சகர் ஆராதிக்க, சாளுக்கிய மன்னர் அவற்றைக் காண வரும் மண்டபமாகவே இந்தக் குகை இருந்திருக்கலாம். அந்த ஆராதனையின்போது இசைப்பதற்காகவும், அதற்கு விருந்தினராகவுமே இந்தப் பிம்பங்கள் செதுக்கப்பட்டிருக்கலாம் அல்லவா?

அடுத்த ஓவியத்தில் நாம் காண்பது சௌம்ய நரசிம்மரை. துஷ்ட நிக்கிரகம் செய்தாயிற்று; இனி சிஷ்டபரிபாலனம்தானே? எனவே உக்ரநரசிம்மரே தணிந்து பரம சாந்தமாகி விட்டார். கதை மீது அவர் சாய்ந்து நிற்கும் காட்சியைக் கண்டால் இனி ஒருகாலும் போர் புரியப் புறப்பட மாட்டார் என்றே தோன்றுகிறது. அவர் மட்டுமா? அவரைத் தரிசித்துப் போக வந்த சளுக்கச் சக்கரவர்த்தி புலிகேசி கூடப் போர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டுச் சிற்ப சித்திரங்களுக்கே தன் வாழ்வை ஈடுபடுத்திக் கொண்டு விட்டான்! சிற்பிகள் பலர் புதிதாக எழுப்பவிருக்கும் ஆலயங்களின் 'மாதிரி'களை அரசனுக்குக் காட்டுகின்றனர். ஆகா, அது நம் தமிழகத்தின் பாணியிலமைந்த 'மாதிரி'யாக அல்லவா தெரிகிறது? இதுகூட நமது ஓவியரின் கற்பனையா? 'இல்லை' என்பதைஅதோ அரசன் சுட்டிக்காட்டும் வெறுமையான மலை முகட்டில் இன்று நாம் காணும் ஆலயம் எடுத்தியம்புகிறது. இங்கே சிற்பி காட்டும் 'மாதிரி'யிலேதான் அங்குள்ள ஆலயம் உருப்பெற்றிருக்கிறது. எனவே முந்தைய சித்திரத்தில் தமிழக பாணியில் காணும் விக்கிரகங்களை ஏன் கற்பனை என்று தள்ள வேண்டும்?

தனது உடலில் ஒரு பகுதியைச் சிம்மத்துக்கு அளித்த மாயவன் ஒரு பாதியைச் சிவபிரானுக்கு ஈந்த கோலத்திலும் ஒரு சிற்பம் உண்டு இந்தக் குகையிலே. 'மாகத்திளமதிசேர் சடையானைப்பாகத்து வைத்தான்' என்று ஆழ்வார் பாடிய ஹரிஹரன் அவனே.

> தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
> சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால்

என்று ஆழ்வார் சொல்லில் வடித்த பாவமே, கல்லில் வடிவு கண்டு, இங்கு ஓவியத்திலும் பொலிவு பெறுகிறது. சந்த்ரசேகரனும், சந்த்ரராஜனும் இணைந்த இந்த அழகு உருவுக்கு வண்ணமும் ஊட்டியிருக்கிறார் சைத்திரிகர். இந்தச் சிற்பத்துக்கு முன் காணும் விக்கினேசுவரப் பெருமான், பரஞ்சோதி தமிழகத்துக்குக் கொண்டு வந்த கணநாதனை நினைவுபடுத்துகிறார். இவர் 'மாகத்திளமதிசேர் சடையானைப் பாகத்து வைத்தான்' என்பதாகத் திருமாலை உயர்வாகக் கூறி விருப்பதற்குச் சண்டை பிடிக்கக்கூடும். 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்ற பதிகத்தைப் பாடி, சிவபிரான்தான் திருமாலை மனைவி ஸ்தானத்தில் வைத்து உடலில் இடமளித்திருக்கிறார் என அவர் வாதிக்கலாம்!

அதுவும் உண்மையே என்பதை முதல் குகையிலிருந்து எழுதிய அடுத்த சித்திரம் தெளிவாக்கும். ஆம், இதில் நாம் காண்பது மாலிருக்கும் அதே பாதியை தேவிக்களித்த மாதிருக்கும்பாதியனைத்தான். அருளும், எழிலும் போட்டியிட்டுக் கொண்டு பெருகும் பிம்பம் இது. திரிபங்கம் என்ற உல்லாச எழுச்சியில் அர்த்தநாரீசுவரன் தரிசனம் அளிக்கிறான். வலது புறத்தில் முற்றா வெண் திங்களும், நாக குண்டலமும், பரசுவும், புலியதளும், ஈசுவரனுக்கு அணி செய்கின்றன. அன்னையின் திருப்பாதியில் மகுடமும், பத்ர குண்டலமும், குவளை மலரும், சேலையும், கங்கணங்களும், நூபுரமும் அழகு செய்கின்றன. இரண்டு பேருமாகத் தாங்கியிருக்கிறார்கள் ஒரு வீணையை. இசையானது இறைவனையும், இறைவியையுமே ஒன்றாக இணைக்கும் ஆற்றல் பெற்றதோ என்று எண்ணமிடச் செய்யும் பாவம். வீணாதர தட்சிணாமூர்த்தியும் 'வீணாகான தச கமகக் கிரியை'யான தேவியும் ஒன்றிய திரு உருவம் இது. இவ்வுருவில் பெண்ணுக்குப் பாதி பாகமாதலால் திருப்திப்படுத்தி வரம் பெறப் புது உபாயம் கண்டு விட்டாள், ஆபரணப் பேழையுடன் வந்திருக்கும் அந்தப் பெண். இங்கு பிருங்கி மகரிஷியும் காணப்படுகிறார். ஈசனுக்கும், தேவிக்கும் பேதம் கற்பித்த அவருக்கு அறிவுறுத்த எண்ணி அம்பிகை அவரை எலும்புக் கூடாக ஆக்கினாளோ, உடற்கூறு இயலைப் பற்றிய நமது புராதன ஞானத்தை இத்தகைய ஓர் அற்புதச் சிற்பமாக நாம் காண முடிகிறதோ ! பின்னர் அதே பிருங்கி அர்த்தநாரீசுவரரை வழிபடத் தொடங்கிவிட்டார். அவரோடு சேர்ந்து நாமும் வழிபடுவோம்:

> உமையும் உமையொரு பாகனும்
> ஏக உருவில் வந்து இங்கு
> எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்

என்ற பெருமிதத்தோடு வெளிவருவோம்.

குகையிலிருந்து வெளிவந்த போதிலும் நம் நினைவுக் குகையிலிருந்து பல வாசகங்கள் எதிரொலிக்கின்றன. 'எவ்விதம் துர்க்கையோ அவ்விதமே விஷ்ணு: எவ்விதம் விஷ்ணுவோ அவ்விதமே சிவன்' என்றபுராண வசனங்களும், 'நீ குமாரனா, அல்லது குமாரியா?' என்று பரம்பொருளை வினவும் உபநிஷத வாக்கியங்களும் நினைவில் கிளைக்கின்றன. அவற்றில் பொதிந்து கிடக்கும் தத்துவப் பொருள்களும் மங்கலாகப் புலனாகின்றன. இவற்றுக்குக் காருவூலமான நமது சமய உணர்வும், கலை உணர்வும் ஒன்றிலொன்று கலந்தது நம் சமயம் செய்த பாக்கியமா, கலை செய்த பாக்கியமா என்று யோசிக்கிறோம். அது எப்படியானாலும் இவ்விரண்டையும் ஒன்றாகக் காணும் நாம் இரட்டிப்புப் பாக்கியம் செய்தவர்கள் என்பதை மட்டும் யோசிக்காமல் கூறிவிடலாம் அல்லவா?

இயற்கைப் பந்தல்

இலை தழைகளால் தாம் வேய்ந்துகொண்ட பசும் பந்தலுக்குத் தாமே தம் போக்கில் வாய்த்த தூண்களைப் போல் இந்த மரங்கள் காட்சியளிக்கின்றன. மரங்களுக்கு நடுவே துண்டு துண்டாக நீலவானம் தெரிகிறது. மேலே அடர்ந்த பசுமையால் குளிர்ச்சி என்றால் கீழே நீர்ப்பரப்பினால் குளிர்ச்சி.

'வெயில் நுழைவறியாக் குயில் நுழை பொதும்பர்' என்று அடர்ந்த மரக் கூட்டங்களைப் புகழ்ந்து பழைய பாடல்கள் கூறுவது இந்தக் காட்சியால் பொருள் பெற்றுப் பொருந்துகிறது. 'மரஞ்செடி கொடிகள் இந்த மண்ணின் பசுமையை விண்ணுக்குக் காட்ட எழுந்தவை போல் ஓங்கி வளர்வதன் மூலம் தம்மைத் தாங்குமிடத்துக்கு நன்றியும் வான் நோக்கித் தாம் ஓங்குமிடத்துக்கு அஞ்சலியும் செய்கின்றனவோ?' என்று அழகாகக் கற்பனை செய்வதற்கும் இடமிருக்கிறது அல்லவா ?

கல்கி தீபாவளி மலர் 1961



காவியமும் ஓவியமும்

ஒவ்வொரு காவியமும் தனக்குள் ஒரு பெரிய கதையை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதைத் தவிரத் தான் தோன்றுவதற்குக் காரணமான கதை ஒன்றையும் தன்புறத்தே துணை வரலாகப் பெற்றிருக்கிறது. பெரிய காவியங்கள் பிறப்பதற்குக் காரணமான சிறிய சம்பவங்களும் சுவையுடையனவாகவே அமைந்துள்ளன. அத்தகைய சம்பவங்களை அடுத்து வரும் பக்கங்களில் சித்திரங்களாக வரையச் செய்து தொகுத்தளித்திருக்கிறோம்.

1. காளிதாசன் – சாகுந்தலம்



எல்லாம் அறிந்த அந்த இளவரசி ஒன்று மட்டும் அறியவில்லை: அதாவது தன் கணவன் ஒன்றும் அறியாதவன் என்பதை. அவளுடன் வாதிட்டுத் தோற்ற பண்டிதர்கள் அப்பாவி ஆயன் ஒருவனை மகா வித்வான் என்று கூறி அவளுக்கு மணமுடித்து விட்டனர். மணவறையில் ஆழ்ந்து உறங்கும் நாயகனை எழுப்புவதற்காக யாழ் இசைக்கிறாள் அரசிளங்குமரி. கனவு கலைந்த கணவனோ பழைய நினைவு மட்டும் மறக்காமல் ஆட்டை விரட்டுவது போன்ற ஒலியை எழுப்புகிறான். அவளுக்கு உண்மை விளங்குகிறது. கணவனைப் புவனேசுவரியின் ஆலயத்துக்கு அனுப்பி வைக்கிறாள். தேவி வெளியே சஞ்சரித்து விட்டு ஆலயம் திரும்பும் போது கருவறைக் கதவு தாழிட்டிருப்பதைக் காண்கிறாள். உள்ளேயிருந்து ஒரு குரல் 'எனக்குக் கவித்துவம் அளித்தால் தான் உனக்குக் கதவைத் திறந்து விடுவேன்' என்று கூறுகிறது. அந்தக் குழந்தைத்தனத்தைக் கண்ட அன்னை கருணை பொங்க, அந்தக் குரலுக்குரியவனின் நாவைச் சாவித் துவாரம் வழியே நீட்டச் சொல்லி அதில் பரம பாவனமான தனது பீஜாட்சரத்தைப் பொறிக்கிறாள். உடனே உன்னத காவியங்களை ஆக்கித் தரும் ஆற்றல் பெற்ற காளிதாஸனாக ஆகிறான் ஆயன்.

முதல் சந்திப்பு நிகழ்ந்து விட்டது சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்குமிடையே. வனத்திலிருந்து ஆசிரமம் திரும்புகிறாள் சகுந்தலை. அவளைப் பிரிந்து செல்ல மனமில்லாமல் பின்தொடர்ந்து வரும் துஷ்யந்தனின் மனத்தைப் புரிந்து கொண்டு விட்டாள் சகுந்தலையின் தோழி பிரியம்வதை; அவளை உள்ளே செல்லவிடாமல் தன் பங்குக்காக இன்னும் இரண்டு குடம் நீர் ஊற்றும்படி பலவந்தப்படுத்துகிறாள். நீர் ஊற்றிக் களைத்த சகுந்தலையின் தோற்றம் துஷ்யந்தனுக்கே அவளிடம் பரிவை உண்டாக்குகிறது. காளிதாசன் தரும் சொற் சித்திரத்தை வண்ண ஓவியமாக வழங்கியிருக்கிறார் சைத்திரிகர் **'சாமி'** அவர்கள்.

2. சேக்கிழார்-பெரிய புராணம்



தமிழில் எல்லா நயமும் நிரம்பப் பெற்றுச் சிறந்த பெருங் காப்பியங்களுக்கே உரிய முழுமையான அழகோடு விளங்குவது சீவக சிந்தாமணி. சமண சமய நூலாகிய அக்காப்பியத்தில் பெரு விருப்பத்தோடு ஈடுபட்டிருந்த சைவனான அநபாய சோழனின் கவனத்தைத் திருப்புவதற்காகத் தொண்டர்களின் கதையாகிய பெரிய புராணத்தைச் சேக்கிழார் எழுதினார் என்பார்கள். அரச போக ஆடம்பரங்களின் வருணனைகள் மிகுந்த சிந்தாமணியில் திளைத்த மனத்தைச் சைவ சமயத் தொண்டர்களைப் பற்றிய காப்பியத்துக்கு மீட்டுக் கொண்டுவந்த வெற்றி சேக்கிழாருக்கும், பெரிய புராணத்துக்கும் சேர்த்தே கிடைத்த வெற்றி. ஆற்றலுள்ள பொருளை வெற்றிகொள்ள முடியாத சூழ்நிலையிலும் வெல்கிற வெற்றிதானே மெய்யான வெற்றி?


குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புமாக ஆடும் தெய்வத்துக்கு முன்னால் சேக்கிழார் பெரிய புராணம் பாடும் காட்சியையும், மாறு வேடத்தில் வந்த சிவபெருமானாகிய விருந்தினருக்கு இளையான்குடிமாற நாயனார் விருந்துபசாரம் செய்யும் காட்சியையும் இங்கே காணுகிறோம். சேக்கிழார் காவியத்தில் வழங்கியதை ஓவியர் **'சித்திரலேகா'** இங்கே ஓவியத்தில் வழங்கியுள்ளார்.

3. ஜெயங்கொண்டார் – கலிங்கத்துப்பரணி



ஆயிரம் யானைகளை வெல்லும் அரசனைப் பாடும் பரணி என்னும் நூலைத் தமிழில் உள்ள பிரபந்த வகைகளில் ஒன்றாக வகுத்திருந்தாலும் தகுதி மிக்க பாட்டுடைத் தலைவனைக் கொண்டு உருவாகிற காரணத்தால் சிறு காப்பியம் என்றும் கொள்ளலாம். கலிங்கத்துப் பரணி என்னும் காப்பியம் குலோத்துங்க சோழனுக்காகக் கருணாகரத் தொண்டைமான் கலிங்கநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று வென்ற போரைப் பொருளாகக் கொண்டது. தீபங்குடியைச் சேர்ந்த கவிச்சக்கரவர்த்தியாகிய ஜெயங்கொண்டார் இயற்றிய நூல் அது. பரண் மேல் அமர்ந்து பாடுவதனால் 'பரணி' என்று பேர் வாய்த்தது என்பதும் இப் பிரபந்தத்தின் பெயர்க் காரணங்களில் ஒன்று. பரணி பாடுவதற்கான நிகழ்ச்சியையும், பரணியில் கடை திறப்புப் பகுதியில் வருகிற காட்சியையும் சேர்த்தே இந்த ஓவியத்தில் காண்கிறோம். தமிழிலுள்ள பரணி நூல்களில் சிறந்ததாகிய கலிங்கத்துப் பரணியிலிருந்து ஒரு காட்சியை ஓவியர் **'சாகர்'** இங்கே வரைந்து அளித்திருக்கிறார். பரணி நூல் பிறக்கும் சூழ்நிலையோடு அந்நூலின் முதற் பகுதியான கடை திறப்பில் வருகிற ஒரு காட்சியையும் ஓவியத்தில் காண்கிறோம்.

4. பூஷண் – சிவராஜ பூஷண்



காசிய குப்தரத்து அந்தணர் ரத்நாகரின் குடும்பமே கவிஞர் குடும்பம் தான். மூன்றாம் மகனான பூஷண் கவியாக விரும்பவில்லை. சோம்பலே அவன் பொழுது போக்கு. ஒரு நாள் சாப்பாட்டில் உப்புப் போதவில்லை. வீட்டுத் தலைவியான அண்ணியிடம், 'கொஞ்சம் உப்புப் போடுங்கள். போதவில்லை' என்று கேட்டான். அவளுக்குக் கோபம் வந்து விட்டது. தன் கணவரான சிந்தாமணியின் சம்பாத்தியத்தில்தான் குடும்பமே வாழ்கிறது என்ற இறுமாப்பு அவளுக்கு. அதனால், 'நீ சம்பாதிக்கிற அழகுக்கு உப்பு இல்லாமல் சாப்பிடக் கூடாதா?' என்று கேட்டு விட்டாள். உடனே கையை உதறிவிட்டு எழுந்து வெளியேறியவன் தான்; பிறகு வீட்டுப் பக்கமே பூஷண் போகவில்லை. அண்ணியின் ஏச்சு அவனைக் கவியாக்கியது.

'நான் கவி பாடப் பாடத் தங்கள் கை தங்களை அறியாமல் மீசையை முறுக்கத் தொடங்கும்' என்று சவால் விட்டான் பூஷண். 'அப்படி நடவாமல் போனால் உன் தலை தரையில் உருளும்' என்றார் ஔரங்கஜேப், தமக்கே சவால் விடும் இந்த அகம்பாவக் கவியை ஒழிக்க வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டு. ஆனால் வெற்றியோ பூஷணுக்குத்தான். கவியின் ஆவேசமான வீர வர்ணனையிலே தம்மை மறந்து மீசையை முறுக்கிக் கொண்டிருந்தார் ஷாயன்ஷா.

தர்பாரின் பிழைப்பில் சலிப்படைந்து தென்திசை நோக்கி விரைந்தான் பூஷண். ராய்கட் போய்ச் சேர்ந்தான். சிவாஜியின் ஆஸ்தான கவியாகிக் கௌரவிக்கப் பட்டான். வீரம் வளர்த்த வர கவியான பூஷண், வீர சுதந்திரத்துக்காகப் போராடிய வீரமன்னர்களின் புகழைக் காஷ்மீரம்வரை சென்று பரப்பினான். சிவாஜி, சத்ரஸால், ஸாஹூஜி இவர்களின் வீர தீர பராக்கிரமம், சப்த கம்பீரமும் பொருளணிகளும் சிறக்கச் 'சிவராஜபூஷண்' என்ற பிரபந்தத்தில் அடங்கி யிருக்கின்றன. இந்த வீரம் வளர்த்த கவியின் வாழ்க்கையை ஓவியமாக வடித்துத் தந்திருக்கிறார் நமது சைத்ரிகர் **'விஜயா'**.

5. உமர்கய்யாம் - ருபாயத்



பாரசீகப் பெருங்கவி உமர் கய்யாமை அறியாதவர்கள் இவ்வுலகில் இருக்க முடியாது. உமர்கய்யாம் பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொராஸான் மாகாணத்தில் நைஷாபூரில் பிறந்தார். இவரது முழுப் பெயர் கியாதுதீன் அபுல்பாத் உமர். தம் பெயரோடு 'கய்யாம்' என்பதைச் சேர்த்துக் கொண்டார். கய்யாம் என்பதற்குக் கூடாரம் செய்பவன் என்று பொருள். இவரோடு பள்ளியில் படித்த நண்பன், இளமையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தான் ஒரு மாகாணத்தை ஆளும் உன்னத பதவிக்கு வந்ததும் உமர் கவலையின்றி வாழ ஆண்டுதோறும் பெருந் தொகையைக் கொடுத்து வந்தான். உமர் கவியாக வாழவில்லை. பீஜ கணிதத்திலும் ஜோதிடத்திலும் சிறந்த மேதாவியாக விளங்கினார். அது சம்பந்தமாகப் பல நூல்களை எழுதியுள்ளார். ஆனால் அவைகளினாலெல்லாம் இவர் உலகப் புகழ் பெறவில்லை. கணித ஜோதிட ஆராய்ச்சியினூடே நேரம் கிடைக்கும்போது இம்மை மறுமை பற்றி ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான செய்யுட்கள் பல இயற்றினார். இந்தச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். 'ருபாயத்' என்றால் நான்கடிச் செய்யுள் என்பது பொருள். இவரது பாடல்களில் ஒரு சோக உணர்ச்சி இழையோடுவதைக் காணலாம். மது, மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றைத் தவிர வேறு ஏதும் இவ்வுலகில் கிடையாது என்பது பற்றிய நயமும் இவர் பாடல்களில் காணமுடிகிறது. இவரது அரிய பாடல் ஒன்றுக்குத் தேசிக விநாயகம் பிள்ளையின் மொழிபெயர்ப்பைப் பாருங்கள்: "வெய்யிற்கேற்ற நிழலுண்டு; வீசும் தென்றல் காற்றுண்டு; கையில் கம்பன் கவியுண்டு; கலசம் நிறைய மதுவுண்டு; தெய்வ கீதம் பலவுண்டு; தெரிந்து பாட நீயுமுண்டு; வையந்தருமிவ் வனமன்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"

உமரையும் அவரது பாடல் சிலவற்றையும் ஓவியமாக்கித் தந்திருக்கிறார் நமது சைத்திரிகர் '**கல்பனா**'.

---

6. சண்டிதாசர் - பதங்கள்



"என்னம்மா! எனக்கு ஒரு விலை, அவருக்கு ஒரு விலை சொல்கிறாயே; இது வியாபாரத்துக்கு அழகாகுமா? அவருக்கு மட்டும் ஏன் அவ்வளவு குறைத்துக் கொடுத்தாய்? அவர் என்ன உயர்த்தி?" என்றார் சண்டிதாசர். "அதுவா?" நாணிக் கோணிக்கொண்டு பதில் சொன்னாள் மீன் விற்கும் பெண். "நான் அவருடன் செய்தது வியாபாரம் அல்ல! அன்புப் பரிவர்த்தனை. அன்பு என்று ஒன்று ஏற்பட்டு விட்டால், அப்புறம் பேரத்துக்கே இடம் கிடையாது, தெரிந்து கொள்ளுங்கள்!"

சண்டிதாசரின் மனத்திலே மீன்காரியின் அந்தச் சொற்கள் ஆழப் பதிந்தன. அந்தக் கணமே அன்பின் பெருமையும் வேரூன்றியது. 'அன்பு என்றால் அதற்கு இத்தனை பெரிய தியாக புத்தியா?' என்று வியந்தார். அன்பே சிவம், அன்பே தெய்வம் என்னும் உரம் வாய்ந்த சொற்களின் பொருளும் அவருக்குத் தெற்றென விளங்கியது.

அன்றே அவர் வாழ்க்கையில் ராமி என்னும் வண்ணாரப் பெண் குறுக்கிடுகிறாள். அவளிடம் மனத்தைப் பறி கொடுத்த சண்டிதாசர், தமது குலம் கோத்திரம் அனைத்தையும் மறந்து பெரும் தியாக புத்தியைப் பெற்று அவளைக் காதலிக்கிறார்.

அவர் கொண்ட அந்தக் காதல் வெறும் மானிடக் காதல் அல்ல; தெய்வீகக் காதல். ராமியை ராதையாக எண்ணி வழிபடுகிறார்; ராமியும் அவரைக் கண்ணனாகக் கருதி அன்பு செலுத்துகிறாள்.

அன்புப் பூங்காவிலே நறுமண மலர்களென வங்காளி இலக்கியப் பொழிலிலே அவர் இயற்றிய 996 பதங்கள் பூத்துக் குலுங்கின. பதினைந்தாம் நூற்றாண்டிலே தோன்றிய கவி சண்டிதாசரின் பக்திப் பாடல்களை இன்றும் மக்கள் மெய்மறந்து பாடுகிறார்கள். சண்டிதாசரின் வாழ்க்கைச் சித்திரத்தை அழகுபட ஆக்கித் தந்திருக்கிறார் ஓவியர் '**ரமணி**'.

---

7. ஹோமர் - இலியத்




கிரேக்க மகாகவி ஹோமரை மேற்கத்தியர்கள் தங்கள் இலக்கியத்தின் ஆதி பிதா என்று போற்றிப் புகழுகின்றனர். இவர் இயற்றியதாகக் கருதப்படும் இலியத், ஒடெஸ்ஸி என்னும் இரு பெரும் காவியங்களையும் உலகில் அறியாதவர் இருக்க முடியாது. ஆனால் இதன் ஆசிரியரைப் பற்றியோ இன்னும் சர்ச்சைக்கிடமாகவே இருக்கிறது. ஹோமர் ஒருவரா அல்லது ஒரு கூட்டத்தினருக்கு இடப்பட்ட பெயரா என்பதே தெரியவில்லை. எப்படியிருந்தாலும் தொன்றுதொட்டு வழி வழியாக ஹோமரைப் பற்றி வழங்கும் செய்திகள் அவர் முதியவர், ஏழை, பிறவிக் குருடர் என்பனவாகும். ஊர் ஊராகச் சுற்றித் திரிந்த இவர் பாடிய பாடல்களே இவ்விரு காவியங்களுமாகும். ஹோமரின் பாடல்கள் கிரேக்கக் கல்வி, கலாசாரம், இலக்கியம் இவைகளுக்குப் பிறப்பிடமாக அமைந்துள்ளன. பண்பாட்டின் இருப்பிடம், அறிவின் பெட்டகம், வாசாலகத்தின் உறைவிடம், இலக்கிய விமர்சனத்தின் எடுத்துக்காட்டு என்றெல்லாம் இவரது பாடல்களைப் போற்றிப் புகழ்கிறார்கள் மேலை நாட்டினர்.

ஹோமர் இயற்றியுள்ள இரு பெரும் காவியங்களும் அந்தக் கால கிரேக்க மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவனவாக அமைந்த சாகசச் செயல்களைக் கொண்ட கதைகள். இலியத் என்ற காவியத்தில் கிரேக்க அழகி ஹெலனை ட்ரோஜ வீரன் பாரிஸ் கவர்ந்து வர அதனால் ஏற்பட்ட பெரும் போரில் டிராய் நகரம் எப்படி அழிந்தது என்பதை அற்புதமாகப் பாடியிருக்கிறார் ஹோமர். அவரையும் அவரது காவியப் படைப்பிலிருந்து சில காட்சிகளையும் நமது சித்திரக்காரர் '**விஜயா**' ஓவியமாக்கி இங்கே உங்களுக்குத் தந்திருக்கிறார்.

---

8. துளசிதாஸர் - ராமாயணம்



தன் பிரிவைத் தாங்காது, இடி மழையையும் பொருட்படுத்தாமல் மலைப் பாம்பை விழுதென மதித்துச் சுவரேறிக் குதித்துத் தன்னைக் காண வந்த கணவரைக் கண்டு துளசிதாசரின் மனைவி மனம் பொறுக்காது, "எலும்பு தோல் போர்த்த என் உடம்பின் மீது வைத்திருக்கும் ஆசையை ஆண்டவன் மீது வைத்திருந்தால், என்றைக்கோ கடைத்தேறியிருக்கலாமே!" என்று ஏசி விடுகிறாள்.

மனைவியின் இவ்வார்த்தைகள் அவரது உள்ளத்தைத் தைக்கின்றன. வீட்டை விட்டு, வாசலை விட்டு, மனைவியைத் துறந்து அன்று புறப்பட்டவர், ராமாயணம் எழுதிய மகா கவியாகத்தான் பின்னர் உலகத்துக்கு அறிமுகமாகிறார்.

அவரது ராமாயணத்திலே வேடுவ அரசன் குகனின் ஆள் படகு ஓட்ட வருகிறான். சம்சார சாகரத்தைக் கடக்கச் செய்யும் ஆண்டவனைக் கங்கைக்கு அக்கரை சேர்க்கும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டுகிறது.

அக்கரை சேர்ந்த ஸ்ரீ ராமன் ப[illegible]கோட்டிக்கு ஏதாவது ஊதியம் கொடுக்க விரும்புகிறார். ஆ[illegible] அவரிடம் படகோட்டிக்குக் கொடுக்க ஏதும் இல்லை. சீதை இதைக் குறிப்பால் அறிகிறாள். உடனே தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி ராமனிடம் கொடுக்கிறாள். ராமன் அதைப் பெற்றுப் படகோட்டிக்குக் கொடுக்கப் போகிறார். ஊதியம் பெற அவன் மறுக்கிறான். ஸ்ரீராமனைச் சரணடைந்தவன் வேறு எதையும் ஏற்கச் சம்மதிப்பானா? எனவே அந்த மோதிரம் ராமனிடமே தங்கி விடுகிறது.

'அங்குலீயப்பிரதானம்' ராமாயணத்திலேயே முக்கிய கட்டம். அதற்கு ராமனிடம் மோதிரம் எப்படி வந்தது என்பதற்கு அழகான கதையை உருவாக்கியவர், படகோட்டி பக்தனைத் தனியாகச் சிருஷ்டித்துப் பக்திக்கு அருமையான விளக்கம் தந்தவர் உலகம் போற்றும் மகா கவி துளசிதாசர் ஆவார். அழகுக்கு அழகு கூட்டும் வண்ணம் இதை வண்ணச் சித்திரமாக வழங்கியுள்ளார் நமது ஓவியர் '**கல்பனா**'.



FOUNDER LATE SRI T. S. RAJAGOPALA IYENGAR

T. S. R. & CO.,

KUMBAKONAM · MADRAS

வேஷப் பொருத்தம்!



நட்டுவனார்: உனக்குக் குறத்தி வேஷம் பலிச்சிருக்கா இல்லையா என்று இன்னமுமா சந்தேகம்?... ஊம்... கிளம்பு சீக்கிரம்!

கந்தர்வக் காதலர்

கந்தர்வர், காந்தர்வம் என்னும் பழைய சொற்கள், அழியா அழகு உடையவர்களையும் அந்த அழகு வாழும் இடத்தையும் குறிப்பனவாக வழங்குகின்றன.

அழகை எவ்வளவு அற்புதமாகவும், உயர்ந்த தாகவும் கற்பனை செய்ய முடியுமோ, அவ்வளவு அற்புத மாகவும் உயர்ந்ததாகவும் செய்கிற கற்பனையின் அல்லது கனவின் சிகரத்தைத்தான் காந்தர்வம் என்று குறிப்பதாகப் புதிய விளக்கமும் சொல்லலாம். அழியா தனவும், உயர்வுடையனவும் ஆகிய பரிபூரணமான சுகம்தான் கந்தர்வ வாழ்க்கை என்றால் இங்கே இந்தப் படத்தில் காணப்படுகிற தம்பதிகள் அல்லது காத லர்கள் அத்தகைய வாழ்வை வாழ்கிறவர்கள்தாம்.

எல்லையற்ற அழகு உடையன எல்லாம் அந்த அழகு பிறப்பதற்கு முன்னும் கனவுகள். பிறந்து அழிந்து போனபின்பும் கனவுகள்தாம். முன்னது பிறப்பதற்கு முன்பு தொடங்கிய கனவு; பின்னது பிறந்து அழிந்த பின்பு முடிந்த கனவு.

ஆனால் இங்கே இந்த ஓவியத்தில் காட்சியளிக்கும் அழகனும், அழகியும், தொடக்கமும், அழிவும் இல்லாமல் நிற்கும் கனவுகள், நீடித்த கனவுகள், நிலைத்த கனவுகள், அழியாக் காதலின் முடியாக் கனவுகளாகக் குறையாக் கவர்ச்சியின் நித்திய சௌந் தரியத்தோடு விளங்கும் இந்தக் கந்தர்வக் காதலர்களை நமக்கு அறிமுகம் செய்து வைப்பவர் ஓவியர் வினு.

இந்த ஓவியத்தைப் பார்த்தவுடன்,

மங்கியதோர் நிலவினிலே
 மண்ணுலகத் தெண்ணங்கள்
 ஒன்றுமிலாக் கனவினிலே

செங்கமல மலர்போலச்
 சிரித்தமுகக் கனிவினிலே
 தரித்திருக்கும் குறிப்பிருக்க

இங்கிதங்கள் தங்கியங்கே
 காணும்விழி பேசிவரப்
 பேசும்வாய் நகைத்துவர

நங்கையிவள் நிற்பதுபோல்
 நடந்துவர நம்பியவன்
 நடப்பதுபோல் நிற்கின்றான்.

என்று பாரதியார் போலத் தொடங்கி வேறு ஒரு புதுக் கவிதை பாடலாம் போல இருக்கிறதல்லவா?

கல்கி தீபாவளி மலர் 1961



வினு
கல்கி தீபாவளி மலர் ௧௯௬௧



சங்கர் பிராண்ட் ஸிமெண்ட்
தயாரிப்பாளர்களிடமிருந்து
தீபாவளி
வாழ்த்துக்கள் !
இந்தியா ஸிமெண்ட்ஸ்
லிமிடெட்
மதராஸ்-2

REGISTERED No. M. 4392
Supplement to the Kalki issue Dated 5-11-1961

Registered as a Newspaper in Ceylon


முதல் ஸ்தானம்!

பிரயாணிகளுக்கான பஸ்கள், சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரிகள், விவசாயத்திற்கான டிராக்டர்கள், ரோடு ரோலர்கள் மற்றும் இவை போன்ற அதிக சக்தியைக் கொண்டு இயக்க வேண்டிய எல்லா அவசியங்களுக்கும் உலகப் புகழ் பெற்ற பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்களைத்தான் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள்.

நம்பகம் மிக்க பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்கள் எவ்வளவு கடினமான வேலைகளையும் மிகவும் சுலபமாகச் செய்து முடிக்கின்றன. மேலும் இவற்றின் பராமரிப்புச் செலவும் மிகவும் குறைவு. எண்ணெய்ச் செலவையும் பாதிக்குமேல் குறைத்துவிடுகின்றன.

மற்ற எல்லா என்ஜின்களையும் விட, பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்கள் எந்த வேலையையும் மிகவும் துரிதமாகவும், சிக்கனமாகவும், திறம்படவும் செய்து முடிக்கின்றன.

பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்களையே வாங்குங்கள்!





Perkins
HIGH QUALITY DIESELS

S-302

இந்தியாவில் தயாரிப்பவர்கள் பெர்க்கின்ஸ்

ஸிம்ஸன் & கோ. லிட்.

மதராஸ்-2

கிளைகள்

பெங்களூர் - உதகமண்டலம் - திருச்சிராப்பள்ளி
செகந்திராபாத்

பெர்க்கின்ஸ் உயர்தர டீஸல் என்ஜின்கள்

போக்குவரத்து சாதனங்களுக்கும், விவசாய யந்திரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இணையற்றவை

முக்கிய அம்சங்கள்

★ கண நேரத்தில் இயங்கும்
★ மிகவும் நம்பகமான உழைப்பு
★ வேகம் குன்றாமல் இயங்கும் தன்மை
★ சுலபமாகப் பராமரிப்பதற்கு ஏற்றவை எந்த பாகத்தையும் எளிதில் பிரித்து பார்க்கலாம்
★ நீண்ட நாள் சேவை புரிகின்றன
★ உதிரி பாகங்களும், உற்பத்தியாளர்களின் சேவையும் தாராளமாகக் கிடைக்கும்